


# விடுதலைப்பேரொளி
# VIDUTHALAIPPEROLI

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விடுதலைப்பேரொளி

# Viduthalaipperoli

வெளியீடு
ஈழமுரசு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நூல்: விடுதலைப் பேரொளி (சிறப்பு மலர் - அகவை ஐம்பது). Viduthalaipperoli (The Brilliance Of Liberation). முதல்ப்பதிப்பு: 2004 கார்த்திகை. பதிப்புரிமை: அனைத்துலக தொடர்பகம். தமிழீழம். கணினி எழுத்துப்பதிவு: திருமதி. வதனா சர்வேஸ்வரன். நூல் வடிவமைப்பு: திரு. தி.அ. றொபேட். உதவி: திரு. இ. முரளீதரன், திரு. சுதன். அட்டை வடிவமைப்பு: ஓவியர் தயா. ஒளிப்படங்கள்: ஆவணங்கள்: வெளியீட்டுப்பிரிவு, அனைத்துலக தொடர்பகம். நூல் உருவாக்கம்: திரு. மாணி.நாகேஸ், திரு. கி.பி அரவிந்தன், திரு. கந்தையா நவரேந்திரன், திரு. பரணி மற்றும் ஈழமுரசு (ஐரோப்பா). மொழிபெயர்ப்பு: திரு. கந்தையா நவரேந்திரன். அச்சகம்: SAGITTAIRE. Paris, FRANCE. நூலின் அளவு: 18 cm x 24.5 cm. பக்கங்கள்: 295. வெளியீடு: ஈழமுரசு ஐரோப்பா. தொடர்புகளுக்கு: ஐரோப்பா; Poobalam 22, Rue Perdonnet, 75010 Paris France. ஈழமுரசு, கனடா; 2390 Eglinton ave east #230, Toronto, ONT M1K 2P5. ஈழமுரசு, அவுஸ்திரேலியா; P.O. Box 1327, Glen Waverley, Victoria 3150.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஓவியர் மருது - தமிழகம்.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முகப்பு

உள்ளடக்கம்

பதிப்புரை

வாழ்த்துரை - ஈழமுரசு

முன்னுரை - அனைத்துலக தொடர்பகம்

| | | | |
|---|---|---|---|
| 01. | நாம் அணிவகுத்துள்ளோம். | வே.பிரபாகரன் | 012 |
| 02. | உலகம் உள்ளவரை உனக்கு வயது. | புதுவை இரத்தினதுரை | 014 |
| 03. | தலைவன் நீ பாய்ச்சல்கள் தொடரட்டும்... | பொ.சத்தியசீலன் | 015 |
| 04. | சங்கே முழங்கு. | காசிஆனந்தன் | 018 |
| 05. | பொற்காலம் படைக்கும் தம்பி. | பழ.நெடுமாறன் | 019 |
| 06. | முகம் பேசுகிறது. | | 022 |
| 07. | தமிழீழத் தலைவரும் மூன்று பெருமக்களும். | யூலியா | 023 |
| 08. | The Tamil Resistance Movement... | Peter shulk | 026 |
| 09. | ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்கும் தமிழ்... | பீட்டர் சால்க் | 027 |
| 10. | காவிய நட்பு. | பழ.நெடுமாறன் | 029 |
| 11. | பிரபாகரன் 20ம் நூற்றாண்டின் சாதனையாளன். | பெ.சந்திரசேகரன் | 034 |
| 12. | எங்கள் கனவையும்... | ஜெகத் கஸ்பார் | 035 |
| 13. | போராளி என்ற தளத்தில் இருந்து எழுச்சி... | ஆ.சிவநேசச்செல்வன் | 038 |
| 14. | பிரபாகரன்... | இரா.திருமாவளவன் | 041 |
| 15. | Tamil Eelam and Theology of Liberation. | Albert Koolin | 045 |
| 16. | தமிழீழமும் விடுதலை பற்றிய இறையியலும். | அல்பேட் கூலன் | 049 |
| 17. | பிரபாகரன் பிறந்தநாள் வாழ்த்து. | பெருஞ்சித்திரனார் | 053 |
| 18. | சவால்களும் சாதனையும். | கா.சிவத்தம்பி | 055 |
| 19. | நிமிர்ந்தெழுந்த வரலாறு. | தமிழர் ஒருங்கிணைப்பு குழு. (அமெரிக்கா) | 058 |
| 20. | கிழக்கு வெளுக்கின்றது. | மணவை முஸ்தபா | 059 |
| 21. | வரலாற்று நாயகனுக்கு ஒரு வாழ்த்து. | இரவி அருணாசலம் | 061 |


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

| | | |
|---|---|---|
| 22. வயதுடன் வளர்ந்த இலட்சிய உறுதி... | விக்டர் இராஜகுலேந்திரன் | 065 |
| 23. எல்லோருக்கும் விழிகள் உண்டு... | மு.பொ. | 071 |
| 24. Prabakaran In My View. | Adel Balasingam | 073 |
| 25. எனது பார்வையில் பிரபாகரன். | அடேல் பாலசிங்கம் | 077 |
| 26. கரிக்கோடுகளில் ஒரு தாலாட்டு. | இன்குலாப் | 083 |
| 27. ஓங்கி எரியட்டும் அந்த விடுதலைச் சுடர். | வாசுதேவன் | 085 |
| 28. ஒப்பற்ற தேசியத் தலைவனுக்கு... | முருகர் குணசிங்கம் | 089 |
| 29. பிரபாகரனின் தொலைதூரப்பார்வை... | அனிதா பிரதாப் | 092 |
| 30. வரலாற்று பார்வையில் பிரபாகரன். | விக்டர் ஐவன் | 095 |
| 31. Prabakaran From A Historical Point of View. | Victor Ivon | 097 |
| 32. தாய்க்கு நிகர் தலைவன். | விசாலகன் | 098 |
| 33. தமிழர் போராட்ட வரலாற்றில் தலைவர்... | ஜி. நடேசன் | 099 |
| 34. வேங்கைகளின் வேந்தன். | வானதி | 104 |
| 35. தமிழீழ தேசியத் தலைவர்... | கேணல் விதுசா | 107 |
| 36. இருபதாம் நூற்றாண்டின் செயல் வீரன். | எஸ்.எம்.கோபாலரத்தினம் | 116 |
| 37. The Bright Noon. | Kandiah Navarendran | 118 |
| 38. ஒளிரும் நண்பகல். | கந்தையா நவரேந்திரன் | 119 |
| 39. தேசியத் தலைவரின் பிறந்தநாள்... | பற்றிமாகரன் | 120 |
| 40. வரலாற்றின் கண்ணாடி. | செயப்பிரகாசம் | 125 |
| 41. Birthday greeting for Mr.Prabakaran. | Karen Paker | 128 |
| 42. பிரபாகரனுக்கு பிறந்தநாள் வாழ்த்து... | கரன் பாக்கர் | 129 |
| 43. மாவீரர்களை மனதில் சுமந்த தலைவர். | அக்னி | 130 |
| 44. பொன்விழா நாயகனை வாழ்த்தி. | பரிதி | 132 |
| 45. காலத்தை வென்ற காவியத் தலைவர். | யோசப் பரராசசிங்கம் | 133 |
| 46. வையகம் வாழ்ந்திட வாழ்க. | வைகோ | 135 |
| 47. நீ மனிதமுள்ள மனிதன். | அம்புலி | 137 |
| 48. தமிழீழம் ஓர் உலகளாவிய பார்வை. | பண்ருட்டி இராமச்சந்திரன் | 140 |
| 49. எப்பொழுதும் தலைவனாவது... | கே. ஐவர்கலால் நேரு | 143 |


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

| | | | |
|---|---|---|---|
| 50. | பரந்து விரிந்த தேசிய உணர்வு. | வே.இளங்குமரன் | 149 |
| 51. | A Vision of the Liberation of Tamil People. | Brian Senewiratne | 150 |
| 52. | தமிழ் மக்களின் விடுதலைக்கான... | பிறையன் செனவிரத்ன | 153 |
| 53. | அமைதியின் ஒளியில்... | | 159 |
| 54. | இமாலய வியப்பு. | க.வே. பாலகுமாரன் | 169 |
| 55. | போரிலும் முதல்வனாய்... | உருத்திரகுமாரன் | 174 |
| 56. | தலைவா நீ என்றும் வாழி. | ந.தமிழன்பன் | 175 |
| 57. | ஊர்வலத்தில் வராத உற்சவ மூர்த்தி. | புதுவை இரத்தினதுரை | 181 |
| 58. | தேசியத் தலைவர் கடந்து வந்த பாதையில்... | க.பிருந்தன் | 183 |
| 59. | அனைவருக்கும் ஒரே நீதி. | தினேஷ் மாஸ்ரர் | 186 |
| 60. | எங்கள் அதிமனிதன் காணட்டும்... | இ.பரராஜசிங்கம் | 189 |
| 61. | போராட்டம் சந்தித்த நெருக்கடிகளும்... | எல்லாளன் | 193 |
| 62. | அவன் பெயரின் உச்சரிப்பே போதும்... | ஜெயா | 198 |
| 63. | Prabakaran The Man who sets the Agenda. | S.Sivanayagam | 199 |
| 64. | நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் பிரபாகரன். | எஸ்.சிவநாயகம் | 201 |
| 65. | பெயர் சூட்டும் போர். | தணிகைச்செல்வன் | 203 |
| 66. | தேசியத் தலைவருடனான சந்திப்பு. | புலிச்சந்திரன் | 204 |
| 67. | குடத்தில் இட்ட தீபங்கள். | அப்துல் ஜபார் | 206 |
| 68. | தமிழீழ விடுதலைப் போராட்டம். | ச.அ.டேவிட் | 210 |
| 69. | தலைமை என்பது ஒரு கொள்கலன். | பெ.மணியரசன் | 212 |
| 70. | Thalaivar Prabakaran A Tribute. | Ethiveerasingam | 215 |
| 71. | வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு புகழுரை. | எதிர்வீரசிங்கம் | 219 |
| 72. | பெருக்கத்து பணிவு | நாவண்ணன் | 225 |
| 73. | வரலாற்று காலத்தில் வாழ்வதில் பெருமை. | கி.ஜெய்சந்தர் | 227 |
| 74. | இன்றைக்கு சந்தித்தால். | தொல். திருமாவளவன் | 229 |
| 75. | Saluting the leader and arhitect... | S.J.Emmanuel | 233 |


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

| | | | |
|---|---|---|---|
| 76. | தமிழினம் பெருமையுடன் வாழ்த்துகின்றது. | எஸ்.ஜே.இமானுவல் | 238 |
| 77. | இயற்கையின் நண்பன். | சிறீஸ்கந்தராசா | 245 |
| 78. | விடுதலைப் பேராறு. | தா.பாலகணேசன் | 248 |
| 79. | சிறு தெய்வங்கள் கதையில் வாழ்கின்றன... | சீமான் | 249 |
| 80. | தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு கிடைத்த... | ச.வி.கிருபாகரன் | 250 |
| 81. | புதுயுகத் தமிழர். | யோ.ஜஸ்ரின் | 251 |
| 82. | இனத்திற்கு வந்த சோதனையை... | | 252 |
| 83. | சரித்திரம் படைத்தவா. | ஜே.மகேஸ்வரன் | 255 |
| 84. | A Skilful Statesman. | Ramsey Clark | 256 |
| 85. | வல்லமைமிக்க இராஜதந்திரி. | ரம்ஷி கிளார்க் | 257 |
| 86. | Prabakaran Living Legend. | Ramasamy | 258 |
| 87. | பிரபாகரன் வாழ்ந்து கொண்டிருக்கும்... | இராமசாமி | 261 |
| 88. | நெசவாளி. | கி.பி. அரவிந்தன் | 266 |
| 89. | பிரபாகரன் ஒன்றிணைந்த தமிழர் வலிமையின்... | கலையரசன் | 267 |
| 90. | தீரன் திண்ணியன்... | தியாகு | 273 |
| 91. | உலக இராணுவ மேதைகளின் புரியாத.... | பரணி | 278 |
| 92. | விடுதலைக்கான உணர்வு செயல்வடிவில். | டியற்றி மக்கொனல் | 283 |
| 93. | ASense of Freedom in Action. | Deirdre McConnell | 285 |
| 94. | விதி மாற்றி எழுவான் நாளை. | வேலணையூர் சுரேஷ் | 286 |
| 95. | விடுதலையின் வழிகாட்டி. | ச.பொட்டு | 287 |


## நினைவுகள் வழியே...


01. தலைவரின் செவ்விகள்

02. தலைவரின் தந்தை வேலுப்பிள்ளை கருத்து

03. தலைவரின் ஆசிரியர் வேணுகோபால் கருத்து

04. தலைவரின் சக மாணவர் கி.செ.துரை கருத்து

05. தலைவரின் சகோதரன் மனோகரன் கருத்து


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## பதிப்புரைக்குறிப்பு

தமிழ் கூறும் நல்லுலகத்தின் எழுச்சிக் குறியீடாய் செயற்படுபவர் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். அகவை ஐம்பதை எட்டும் அவரின் பன்முகப் பரிமாணத்தைக் காண்பிக்க சிறிதளவேனும் முயலும் இம்மலரைத் தயாரித்ததில் மலர்க்குழு பெருமிதம் கொள்கின்றது.

அத்துடன், இம்மலர் "முடியாது என்ற சொல் அகராதியிலேயே இருக்கக் கூடாது" என்ற மாவீரன் நெப்போலியன் சாதனைகள் புரிந்த பிரான்ஸ் மண்ணில் இருந்து வெளிவருவதென்பதும் பொருத்தப் பாடுடையதே. ஏனெனில் முடியாது என்ற சொல்லை தமிழில் திருத்தி எழுதியவர் தேசியத் தலைவர் பிரபாகரன். அத்துடன், அவரைக் கவர்ந்த வரலாற்று நாயகர்களில் நெப்போலியனும் ஒருவர்.

எமது சிறப்பு வெளியீடான இம்மலர், ஒரு வாழ்த்து மலராக இல்லாமல் ஓர் ஆவணமாக வெளிவர வேண்டும் என்பதையே நாம் நோக்கமாகக் கொண்டிருந்தோம். குறுகிய காலத் தயாரிப்பாக இப்பணியினை ஆரம்பித்தபோதுதான் எங்கள் சக்திக்கும் அப்பால் இச்சிறப்பு நூலின் வீச்சு விரிந்திருப்பதைக் கண்டோம். 'குருவி தலையில் பனங்காயை சுமத்தியதைப்போன்று' பாரிய சுமை எம்மை அழுத்தியது. சில குறுகிய பக்கங்களுக்குள் இந்நூலின் வீச்சை அடக்குவதென்பது சாத்தியமற்ற ஒன்று என்பதையும் நாம் உணர்ந்துகொண்டோம். அப்புரிதலின் அடிப்படையில் மிகக்குறைந்த ஆதார வளங்களுடன்தான் எமது நோக்கத்தை எட்ட முயற்சித்திருக்கின்றோம். இம்மலரில் பலரது எண்ணங்கள், அனுபவங்கள் வழியே ஒரு அரைநூற்றாண்டு வரலாறு எழுத்துக்களாயும், ஒளிப்படங்களாயும் தாள்களில் உறைந்து கிடக்கின்றன. தற்போது இம்மலரை உங்கள் கைகளில் ஒப்படைத்துள்ளோம்.

நாம் ஆக்கங்கள் கேட்டு அணுகியவர்கள் பெரும்பாலானோர் எமது கோரிக்கையை ஏற்று உடனடியாகப் பதில் எழுதியிருந்தனர். பொறுப்புணர்வு மிக்க அவர்களுக்கு எமது நன்றிகள்.

தமிழ் சூழலுக்கு அப்பாலானவர்களும் எமக்கு ஆக்கங்கள் அனுப்பியிருந்தனர். அவர்களுக்கு கௌரவம் அளிக்கும் வகையில் அவ்வாக்கங்கள் மாத்திரம் இரு மொழிகளில் இம்மலரில் இடம்பெற்றுள்ளன. இம்மலர் தயாரிப்பில் பலரும் பல நாடுகளில் இருந்தும் தம் ஒத்துழைப்புகளையும், ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர். அதுவே இம்மலரின் சிறப்புக்கு அடித்தளம் இட்டது. அனைவருக்கும் எமது நன்றிகள்.

மலர்க்குழு
நவம்பர் 2004.

## A PUBLISHERS' NOTE

The Souvenir Committee prides itself on publishing this Souvenir marking the fiftieth anniversary of the national leader of Tamil Eelam, Mr Veluppillai Prabakaran, who is the undisputed champion of the freedom struggle of the Tamil people.

Although his multifaceted personality cannot to verbabized precisely, we are contented that we are able to provide at least comprehensive glimpses of his individuality.

The publishing of this Souvenir in France has a singular significance. This book comes from the land of the great leader Napoleon who once declared that the word 'impossible' must be deleted from the lexicon. It would be appropriate here to mention that Mr Prabakaran has also given a new rendering of that word in Tamil. It is a concidence that Nepoleon is one of the historic heroes whom Mr Prabakaran admire.

Our intention was not to bring out a Souvenir to felicitate him, but to record his multifarious personality. It was only after the commencement of the work that we discovered that its scope and swing are wide and extensive.

The zeal of our endeavour encumbered us with heavy responsibilities, and very soon we realized that containing all the aspects of this book in a few pages was an arduous task. However with the limited availability of resources, we have attempted to aaccomplish our venture. We have succeeded to a certain extent recording a half - century history in writings and photographs.

Now the Souvenir is in your hands. Thanks are most deservedly due, and are here most gratefully tendered to those who willingly contributed to our Souvenir.

Souvenir Committee. November 2004.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## எம்முன் விரியும் கடமை

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் ஈழத் தமிழர் வரலாற்றின் அரை நூற்றாண்டை அசைத்து நிமிர்கின்ற இவ்வேளையில், அவரை வாழ்த்துவதில் நாம் பெரும் மகிழ்வடைகின்றோம். வெறும் வார்த்தைகளிலும், வரிகளிலும் உள்ளடக்க முடியாத உன்னதமான பெரும் தலைவனை ஈழத் தமிழினம் பெற்றிருக்கின்றது. அத்தகைய பெரும் தலைவனுக்கு சிறப்பு மலர் ஒன்றினை வெளியிடுவதும் வாழ்த்துரைப்பதும் எம்மை மட்டற்ற மகிழ்ச்சிக்கும் பெருமித நிலைக்கும் இட்டுச்செல்கின்றது. ஆழப்பெரும் கடலை சிறு சுள்ளிகொண்டு அளக்கமுயன்று தோற்றுப்போன நிலையிலும் சிறிய தலை நிமிர்வை இம்மலர் எமக்கு ஏற்படுத்தியுள்ளது.

பிரபாகரன் என்கின்ற அதியுயர் மனிதனின் தோற்றுவாய்க்குப் பின்னாலான ஈழத் தமிழ் மக்களின் வரலாறு, அந்த மனிதனுடன் பின்னிப்பிணைந்து இசைந்தே நடைபோடுகின்றது. அவ்வகையில் அந்த மாமனிதனின் மிகப்பெரிய வரலாற்றை ஆவணப்பதிவாக்கி பத்திரப்படுத்தவேண்டிய கடப்பாடு ஈழத் தமிழ் மக்களின் முன்னே, குறிப்பாக தமிழ் அறிவுஜீவிகளின் முன்னே பெரும் கடனாய் விரிந்து கிடக்கின்றது. இக்கடப்பாட்டின் ஒரு துளியாயும் அவ்வரலாற்று பெரும்பணி நோக்கிய சிறு தொடக்கமாகவும் விடுதலைப் பேரொளி உங்கள் முன் கதிர் பரப்பியிருக்கின்றது.

பொய்மை வரலாறுகளைத் தகர்த்தெறிந்து தமிழீழ தேசியத் தலைவனின் வழிகாட்டலில், பல்லாயிரம் மாவீரர்களின் இலட்சிய ஆகுதியோடு முன்நகர்ந்து விரிந்து செல்லும் ஈழப்போராட்டத்தின் சத்திய சாட்சியங்களாக அனைத்துத் தமிழ் உறவுகளும் கைகோர்த்து முன் செல்வோம். உண்மைப் பெருவரலாற்றை உலகிற்குப் படைத்தளிப்போம்.

நன்றி

ஈழமுரசு ஐரோப்பா.
(நிர்வாகம் - ஆசிரியர்குழு)
பாரிஸ் - பிரான்ஸ்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழத் தேசியப் பூ
கார்த்திகைப் பூ



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# மலையாகித் தலை நிமிர்ந்தாய்

மனித வரலாற்றை நகர்த்துவது வரலாற்று நியதியா அல்லது வரலாற்று நாயகனா என்ற வினாவுக்குத் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் வாழ்க்கை விடை பகர்கின்றது. அவருடைய சொல்லும் செயலும் தமிழினத்தின் வாழ்வும் வரலாறுமாக அமைகிறது. வரலாறு பலரை உருவாக்குகிறது. ஒருசிலர் மாத்திரம் வரலாற்றை உருவாக்குகிறார்கள். எமது தேசியத் தலைவர் அவர்கள் வரலாற்றை உருவாக்குவதோடு அதை வழிநடத்திக்கொண்டு செல்கிறார்.

மீகாமன் இல்லாத கடற்கலம் போல் தத்தளித்த உலகத் தமிழினத்திற்கு அவர் ஒப்பற்ற தலைவனாக வும் இணைப்புப் பாலமாகவும் திகழ்கிறார். சென்ற இடமெல்லாம் கரைந்துபோகும் இயல்புடைய உலகத் தமிழினம் தனது இன, மொழி, பண்பாட்டு அடையாளங்களில் மீண்டும் பெருமிதம் அடைய அவரே காரணமாவார். கூனிக் குறுகிய நாம் இன்று நிமிர்ந்து நிற்கிறோம். எங்கே அழிந்துவிடுமோ என்று அஞ்சிய எமது தாய்மொழி மீண்டும் புதுப்பொலிவுடன் மறுமலர்ச்சி காண்கிறது. ஆங்கிலத்திற்கு நிகரான கணினி மொழியாகத் தமிழ் திகழ்வதற்கு எமது விடுதலைப்போரும் புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளின் தமிழுணர்வும் காரணங்களாக அமைகின்றன.

உலக அரங்கில் பிரபாகரன் சகாப்தம் வித்தியாசமானது. அதில் மேடைப் பேச்சிற்கும் பகுதிநேர அரசி யலுக்கும் இடமில்லை. முழுநேர ஈடுபாடு, ஈகம், அர்ப்பணிப்பு என்ற உயர் பண்புகள் முதலிடம் பெறுகின்றன. 'சொல்லுக்கு முன்னே எப்போதும் செயல் இருத்தல் வேண்டும். செயலால்தான் நாங்கள் செல்வாக் குப் பெற்றோம். செயல்தான் எமது நடவடிக்கைகளுக்கு அரசியல் வடிவம் தருகிறது' இது அவருடைய கோட்பாடு. அரசியல் என்றால் என்னவென்பதற்கு அவர் கூறும் விளக்கம் 'அரசியல் என்பது மக்கள்மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல. அரசியல் என்பது மக்க ளுக்குச் சேவை புரியும் பணி, மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு' அவர் குறிப்பிடும் செயல் என்ற சொல் பல்வேறு அர்த்தபரிமாணங்களைக் கொண்டது. மனவுறுதியும், வீரமும், விடுதலைப்பற்றும், தன்னம்பிக்கையும் அவர் கூறும் செயலின் பிறவடிவங்களாகும்.

வீரத்தின் விளைநிலமாக ஈழத்தை மாற்றியவர் பிரபாகரன் அவர்களே. உலக வரலாற்றில் எங்கும் எப் பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புக்களும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன. ஐம்பது அகவை காணும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களை வாழ்க பல்லாண்டு என வாழ்த்துவதில் பெருமிதமடைகிறோம். அவர்மீது பாடப் பட்ட கவிதை வரிகளை இங்கு சமர்ப்பிக்கிறோம். இத்தொகுப்பு நூலையும் அவருக்கே உரித்தாக்குகிறோம்.

### தங்கத் தலைவனுக்கு!

*ஒளிகொண்டு எம்மண்ணில் இன்றுதித்தாய், தலைவா!!*
*ஓயாத அலைகொண்டு பகை மிதித்தாய்,*
*அழியாத புகழ்வென்று நிலையுயர்ந்தாய்– எதற்கும்*
*அசையாத மலையாகித் தலை நிமிர்ந்தாய்.*

*வாழ்க பல்லாண்டு.*

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

அனைத்துலகத் தொடர்பகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.
நவம்பர் 2004.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# நாம் அணிவகுத்துள்ளோம்!

நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த எமது நாட்டை மீட்க

எதிரி எமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்துவிட்டான்!
அதைக்கண்டு நாம் அஞ்சவில்லை!

புயலெனச் சீறி
இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்!
ஆனால்....
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவசம் எம்மிடம் உண்டு!

எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது!
எமது
ஆத்ம பலமோ அதைவிட வலிமைவாய்ந்தது!
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்...
ஆனால்
எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்!

நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
எமது அணிவகுப்பு
எமது தமிழ்ஈழ மக்களிடையே
அணிவகுத்துச் செல்கிறது!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



நாம் செல்லும் இடமெல்லாம்...
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்!
மக்களிடம் உள்ள
பிரதேசம் சாதி
மதமென்னும் பேய்களும்
அலறி ஓடுகின்றன...

எமது படையணி விரைகிறது...
எமது தேசத்தை மீட்க!

நாம் செல்லும் இடமெல்லாம்
காடுகள் கழனிகள் ஆகின்றன!
வெட்டிப் பேச்சு வீரர்கள்
மிரண்டோடுகின்றனர்...!

உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது.
ஏழைகள் முகங்களில்
புன்னகை உதயமாகிறது.

(தமிழீழ தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களால் 1981 ஆம் ஆண்டில் எழுதப்பட்ட கவிதை)

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஐய நின் மேனியின் அழகதும்,
நெஞ்சினில்
அடர்ந்துள்ள வீரத்தின் அழகும்,
அன்னைமண் தன்னையுன் ஆயிரம் கரங்களால்
அரவணைக் கின்ற பேரழகும்,
வெய்யவர் கண்டுநீ வெகுண்டெழும் போதினில்
விரிகின்ற கோபத்தின் அழகும்,
விடுதலைக் கானநேர் வீதியை என்றுமே
விட்டறி யாதநின் அழகும்,
பொய்யறி வின்றியே போரறிவோடெமைப்
புலியென நிமிர்த்திய அழகும்,
புவியினில் இன்றுள தமிழரின் வாயெல்லாம்
பேசிடும் உன்பெயர் அழகும்
வையகம் உள்ளள வாகுக, அதுவரை
வயதுனக் காகுக அழகா.
வாயெடுத் தாயிரம் வாழ்த்துரைத்தோம், தமிழ்
வாசலில் வாழுக தலைவா.

# உலகமுள்ளவரை உனக்கு வயது

புதுவை இரத்தினதுரை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தலைவன் நீ

## பாய்ச்சல்கள் தொடரட்டும், அலைகள் ஆர்ப்பரிக்கட்டும்

1970ம் ஆண்டு நவம்பர் மாதம் 23ம் திகதி யாழ்ப்பாணத்தில் 'தமிழ் மாணவர் பேரவை' தனது ஆர்ப்பாட்ட பேரணியை நடத்தியது. திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா அரசு தமிழ் மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதை தரப்படுத்தியதே அப்பேரணி நடத்துவதற்குக் காரணமாகும். அதனை அடுத்து பாடசாலைகளுக்குச் சென்று விளக்கவுரை அளித்து வந்தேன். வல்வை/சிதம்பராக் கல்லூரியில் முதல் முதலாக தம்பியைப் பார்க்கிறேன்.

அடுத்து, வல்வெட்டித்துறை ரேவடிக் கடற்கரையில் அவர் சார்ந்த இளைஞர்களுக்கு தமிழர் எதற்காக ஆயுதப்போராட்டத்தைத் தொடங்க வேண்டும் என்பதையும், சிங்களவர்களுக்கு முன்பே தமிழர்கள் இந்நாட்டின் பூர்வீக குடிகள் என்பதனையும், அவர்கள் தமது சுயநிர்ணய உரிமையை தாமாகவே நிலைநாட்டிக் கொள்ளவேண்டும் என்பதனையும் விளக்கினேன். இன்றைய தமிழ்த் தலைவர்கள் மாவட்டசபை என்றும் மாகாண சபை என்றும் பேசுகிறார்கள். அதுவல்ல எமக்குத்தேவையானது. நாம் எமது சுயநிர்ணய உரிமையை ஈழத்தில் நிலைநாட்ட வேண்டும். அதற்குரிய ஒரே வழி சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக நாம் ஆயுதம் தூக்க வேண்டும் என்று விளக்கம் கொடுத்தேன். அதற்காக நாம் எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும் என்றும் வேண்டிக்கொண்டேன்.

1971 ஏப்பிரல் இரண்டாம் வாரம், 'சேகுவேரா கிளர்ச்சி' என்று எம்மவரால் அழைக்கப்பட்ட ஜேவிபி கிளர்ச்சியின் உச்சக்கட்டம். யாழ்-கல்வியங்காட்டுக்கு என்னைத் தேடிவந்த

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அகவை 50

# நினைவுகள் வழியே...



தந்தை வேலுப்பிள்ளை

பிரபாகரன் பிறந்தபோது, அவனது அண்ணன் மனோகரன் பெயரோடு ஒத்துப்போக வேண்டும் என்பதற்காக அரிகரன் என்று பெயர் வைப்பதாக இருந்தது. அப்புறம் வீட்டில் உள்ளவர்களின் விருப்பத்தின் பேரில் 'பிரபாகரன்' என்று பெயரிட்டோம்.

பிரபாகரனின் தாய் வழிப்பாட்டியின் கணவருக்கு 'வள்ளிபுரம்' என்று பெயர். அவர் தன் கணவரை 'துரை' என்றே அழைத்துப் பழக்கப்பட்டவர். அதனால் பிரபாகரனையும் 'துரை' என்றழைக்க அது செல்லப் பெயராகிவிட்டது.

குழந்தைப் பருவத்திலேயே பிரபாகரன் துடிப்பாக இருந்தான். அவனுக்கு தாய் செல்லம் அதிகம். நான் கொஞ்சம் கண்டிப்பாக இருந்தேன்.

நான் பல ஊர்களில் வேலைக்கு மாற்றலாகிப் போனாலும் ஞாயிறன்று வீட்டுக்கு வந்துவிடுவேன். அப்போது பிரபாகரன் என்னோடு தான் இருப்பான். என்னுடன் தூங்குவதுதான் அவன் வழக்கம்.

1956-ல் பண்டாரநாயக்க பிரதம மந்திரியாக இருந்த போது தனிச்சிங்கள மொழியை அரசு மொழியாகக் கொண்டு வந்து சட்டம் இயற்றினார். அதற்கு முன் ஆங்கிலம் பொது மொழியாக இருந்தது.

தம்பி, மிகவும் துடிதுடிப்புடன் அதேவேளை நாம் உடனே ஏதாவது செய்ய வேண்டும் என்றார். அத்துடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களைத் தாக்கி ஆயுதங்களை எடுக்க வேண்டும் என்று தனது யோசனையையும் முன்வைத்தார்.

ஏப்பிரல் 4ம் திகதிமாலை இலங்கை முழுவதுக்குமான அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுவிட்டது. அன்று கண்டியில் இருந்த நான் குருநாகல் வழியூடாக கொழும்பு சென்று 10ம் திகதி இரவு விமானமூலம் யாழ்ப்பாணம் வந்தடைந்தேன். அதற்கடுத்தநாள்தான் தம்பி என்னைச் சந்தித்த நாள்.

குருநாகல் பொலீஸ் நிலையத்தாக்குதலில் சிங்கள இளைஞர்களின் உடல்கள் அங்கும் இங்கும் சிதறிக் கிடப்பதைக் கண்டதையும், கொழும்பில்-பம்பலப்பிட்டியவில் உபதீச றோட்டில் கடைசியாக உள்ள மாடி வீட்டில் தங்கி இருக்கையில், இரவு வந்த இராணுவத்தினரும் பொலிசாரும் அங்கிருந்த சிங்கள இளைஞர்களைப் பம்பலப்பிட்டிய பொலிஸ் நிலையத்துக்குக் கூட்டிச்சென்று தம்மைத் தாக்க வந்த 'கிளர்ச்சிக்காரர்' எனக்கூறி வரிசையாக நிற்கவைத்து சுட்டுக்கொன்றதையும் தம்பிக்கு எடுத்துக் கூறினேன்.

சிங்களவர்களைச் சிங்களவர்களே கொலை செய்வது எமக்கு பெரிதல்ல. பொலீஸ் நிலையங்களைத் தாக்கி ஆயுதங்களை எங்கே கொண்டு போய் வைப்பது?. அதைவிட நாம் எங்கே மறைந்திருப்பது?. அவ்வளவு தூரம் நாங்கள் வளர்ந்திருக்கவில்லை என்பதை விளக்கினேன்.

அவ்வேளையில், 'ஜே.வி.பி.யினர்' தென்பகுதியைக் கைப்பற்றி விட்டார்கள், அதனால் தமிழர்களுக்கு ஆபத்து என்று யாழ்ப்பாணத்தில் ஒரு கதை பரவி இருந்தது. அதனை மறுத்த நான், நிலைமைகளை நேரில் பார்த்து வந்துள்ளேன், நாம் அமைதியைக் கடைப்பிடித்தாலே போதுமென்று விளக்கினேன். எனது பதில்கள் அவரைச் சமாதானப் படுத்தியது என்றே இன்றும் நம்புகின்றேன். ஏனெனில், விடுதலைப் புலிகள் கடந்துவந்த கரடுமுரடான பாதையையும், கடக்க இருக்கும் பாதையையும் நன்கு திட்டமிட்டு, தூரப் பார்வையுடன் செயல்படுவதொன்றே அதனை நிரூபிக்கின்றது. தமிழை மீட்டுவதுபோல் தம்பியையும் மீண்டும் மீண்டும் மீட்டலாம். இப்போது இது போதும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஈழத் தமிழர் வரலாற்றில் சங்கிலிய மன்னனும், பின்பு பண்டார வன்னியனும் வாளெடுத்த கதைகள் எமக்குத் தெரியும். ஆனால் பிரபாவின் பரிணாமத்தின் பின்புதான் நவீன ஆயுதங்களையும், புதிய யுத்த முறைகளையும் தமிழினம் முதல் முதல் காண்கிறது. ஆயுதம் எடுத்தவன் எல்லாம் தமிழ் ஈழ விடுதலைக்காகத்தான் என்று இளைஞர்களையும், மக்களையும் ஏமாற்றி மண்ணோடு மண்ணாய்ப்போன வரலாறு எங்களுக்குத் தெரியும். ஆனால் பிரபாகரன் எடுத்த ஆயுதம் தமிழ் ஈழத்தை அடைவதற்குத்தான் என்று தமிழ் மக்களும், தமிழ் இளைஞர்களும் அணிவகுத்து நிற்கின்றனர்.

உலக வரலாற்றில் விடுதலை இயக்கங்கள் பல தோன்றி இனவிடுதலைப் போராட்டங்களை நடத்தி வந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் காலம் பதிந்து வைத்திருக்கிறது. தமிழ் ஈழ விடுதலைப்புலிகளும் அதற்கு விதிவிலக்கல்ல. சமகால அரசியல் கோட்பாடுகளுக்கு ஏற்ப, தமிழர் மத்தியிலும் பல இயக்கங்கள் தோன்றி மறைந்தன. சனநாயக நீரோட்டத்தில் கலந்தவை - கலைந்தவை இரண்டையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். ஆனால் தமிழினம் வாழும் மட்டும் துரோகிகள் வாழத்தான் வேண்டுமா? தமிழீழம் என்ற புனிதப் பயணத்தில் தளம்பாத தம்பிகளுடனும், தோள்கொடுக்கும் தளபதிகளுடனும் பயணித்துக் கொண்டிருக்கும் தலைவன் நீ, பாய்ச்சல்கள் தொடரட்டும், அலைகள் ஆர்ப்பரிக்கட்டும்.


தமிழீழம் இப்படித்தான் அமையவேண்டும் என்ற திட்டமிட்ட கட்டமைப்பு, நிர்வாகப் புதுமை, நீதித்துறையின் நேர்மை, கல்வியில் பல்துறை வளர்ச்சி, தொழில் பயிற்சிப் பட்டறைகள் என்பன ஒரு புதிய ஆட்சிமுறைக்கு வழி வகுக்கின்றது என்பதை அறியுமா இவ்வுலகம். முடியாட்சி தொடக்கம் சனநாயகம் வரையிலான நெறிமுறைகளைப் பார்த்திருக்கிறோம். ஆனால் தமிழன் வழி தனி வழிதான் என்பதை உலகம் உனது காலத்தில் கண்டு களிக்கத்தான் போகிறது.

தம்பி! தலைவா!! தமிழினம் உன்னை நம்பி இருக்கின்றது. நீ காட்டும் வழியில் வெற்றி நடைபோடுகிறது. ஐம்பதிலும் நேர்நின்று நடக்க ஆயிரமாயிரம் மாவீரர்கள் வழி சமைப்பார்கள். வாழ்க வளமுடன் என வாழ்த்தி முடிக்கிறேன்.



**பொ.சத்தியசீலன்**

தமிழ் மாணவர் பேரவையின் நிறுவகத் தலைவர், ஈழப்போராட்ட முன்னோடிகளில் ஒருவர், பிரித்தானியா.



பிரபாகரன் என்ற சொல் இன்று ஒரு தனி மனிதனின் பெயரல்ல, அப் பெயருக்கு பல பொருள் உண்டு. பல அர்த்தங்கள் உண்டு. நாம் அதே மனிதரோடு சமகாலத்தில் வாழ்வதால் இவற்றைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல் விடலாம். பிரபாகரன் என்றால் 'Symbol of Freedom' என்றும் சிலர் கூறுகிறார்கள். இன்னும் எளிமை, மனித நேயம், அன்பு, ஆளுமை, தலைமை - முக்கியமாக மக்களை நேசித்தல் - எப்போதும் ஏழைகளையும் எளியவர்களையும் நேசிப்பது, அவர்களுக்காகச் சிந்திப்பது, இவைதான் 'பிரபாகரன்' என்றால் அர்த்தமாகிறது. இவை ஒரு தத்துவம், எமக்கு வழிகாட்டும் சத்திய போதனை. இவற்றைத்தான் எமது இயக்கமும் விடுதலைப் போராட்டமும் இலட்சியமாகக் கொண்டுள்ளன.

● தளபதி கேணல் கிட்டு.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



நேர்மையினான்... ஆதலினால்
வலிய பகை நேர்வரினும்
எதிர்த்து மோதும்
ஓர்மையினான்! காலத்தை
ஊடறுத்துத் தொலைநோக்கும்
கண் ஓட்டத்தில்
கூர்மையினான்! தமிழீழம்
எழ எழுந்து கூண்டுடைத்த
மான வாழ்வின்
சீர்மையினான்! எந்தலைவன்
பிரபாகரன் கீர்த்தி
முழங்கு சங்கே!

# சங்கே முழங்கு!

அலைநிகர்த்தான் தொடர்தொடராய்
படைவரிசை திரட்டி எழும்
ஆற்றல் தன்னில்!
உலைநிகர்த்தான் படைக்கருவி
வகைவகையாய் உருவாக்கும்
தொழில் நுட்பத்தில்!
வலைநிகர்த்தான் சூழ்ச்சியினால்
எதிரிகளை வளைத்தழிக்கும்
போர்த் திறத்தில்!
மலைநிகர்த்தான்! எந்தலைவன்
பிரபாகரன் மாண்பை
ஊது சங்கே!

மொழிமறவான்! இனம்மறவான்!
பகைமொத்த நீர்பொழியும்
தமிழீழத் தாய்
விழிமறவான்! தமிழ்மாந்தர்
உயிர்பறித்து வெறியாடும்
கொடிய மாற்றார்
பழிமறவான்! களமாடி
எதிர்த்தபகை அழித்தொழிக்கும்
தமிழ் மறத்தின்
வழிமறவான்! எந்தலைவன்
பிரபாகரன் வலிமை
உறுமு சங்கே!

அடிதருவான்... எனினும் உயிர்
பிழைத்திடுக என அயலார்
படைக்கும் காலம்
நொடிதருவான்! களத்துமிசை
உறவிழந்து நொந்த தமிழ்
மழலைக்குத் தன்
மடிதருவான்! போர் மறவன்
ஆயினும் மண் மீதிலிவன்
அன்பொன்றுக்கே
பிடிதருவான்! எந்தலைவன்
பிரபாகரன் பெருமை
கூவு சங்கே!

வீறுடையான்! தமிழ் வேங்கை!
கொடிய பகை வீழ்த்தி எழும்
போரின் ஆற்றல்
நூறுடையான்! மாற்றார்தம்
பாசறையை நொடிப்பொழுதில்
எரித்த சாம்பல்
நீறுடையான்! தமிழீழம்
நிறுவியவன் எனவரலாற்
றேட்டில் நிற்கும்
பேறுடையான்! எந்தலைவன்
பிரபாகரன் வீரம்
பிளிறு சங்கே!




காசி ஆனந்தன்

உணர்ச்சிக் கவிஞர்,
தமிழின
விடுதலைக்
கருத்தாளர்.
தமிழீழம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



“ஏறத்தாழ 300 ஆண்டு காலம் தமிழர் வாழ்வு துயரமும் தோல்வியும் நிறைந்ததாக விளங்கியது.”

# பொற்காலம் படைக்கும் தம்பி

தமிழர் வரலாற்றில் விந்தையான செய்தியொன்று உண்டு. ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை பொற்காலத் தமிழர்கள் தோன்றி செயற்கரிய சாதனைகளைப் படைத்திருக்கிறார்கள்.

முதலாம் நூற்றாண்டில், அதாவது சங்க காலத்தில் பொற்கொட்டு இமயத்து புலி பொறித்து ஆண்டான் சோழன் கரிகால் பெருவளத்தான். ஆரியப்படை கடந்தான் பாண்டியன் நெடுஞ்செழியன். இமயம் வரை சென்று பகைவரை வென்று இமயத்தில் கல்லெடுத்து கங்கையில் நீராட்டிக் கனக விசயர் தலையில் ஏற்றிக்கொண்டு வந்து கற்பின் செல்வி கண்ணகிக்குக் கோயில் எடுத்தான் சேரன் செங்குட்டுவன்.

சிறப்பு மிக்க இந்த சங்க காலத்திற்குப் பிறகு ஆயிரம் ஆண்டுகள் கடந்தன. மீண்டும் ஒரு பொற்காலம் படைக்கச் சோழப் பெருவேந்தர்கள் இராசராசனும் இராசேந்திரனும் தோன்றினர். கங்கை வரை மட்டுமல்ல - கடல் கடந்து சிங்களம், புட்பகம், சாவகம், கடாரம் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் வெற்றிக் கொடியைப் பறக்க விட்டனர். இந்திய வரலாற்றில் இத்தகைய சாதனை படைத்த பெருவேந்தர்கள் வேறு யாரும் இல்லை.





பழ.நெடுமாறன்

தலைவர்,
தமிழர்
தேசிய இயக்கம்,
தமிழீழப் பற்றாளர்,
தமிழகம்.

அதன்பின் மற்றும் ஓராயிரம் ஆண்டுகள் உருண்டோடின. இடைக்காலத்தில் தமிழகமும் ஈழமும் அடிமைப்பட்டன. தெலுங்கர், மராட்டியர், முகமதியர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர், இந்திக்காரர் என அந்நியர் பலரிடம் தமிழகம் அடிமைப்பட நேர்ந்தது.

அதே காலக்கட்டத்தில் போர்த்துகீசியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களர் என அந்நியரிடம் அடிமைப்பட்டது ஈழத் தமிழகம்.

வாள்முனையில் தமிழரை வென்றடக்க முடியாத ஆரியர் வஞ்சகம் நிறைந்த வர்ணாசிரம பண்பாட்டுப் படையெ

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

பண்டாரநாயக்கா கொண்டு வந்த சட்டம் அமுலில் வந்த மூன்று வருடத் திற்குள் சிங்களத்தை பாடமொழியா கக்கற்றுத் தேர்ந்து எஸ்.எஸ்.எல்.சி அளவில் வர வேண்டும். இல்லாவிட் டால் வேலையை விட்டு நீக்கப்படு வார்கள் என்று சட்டம் கடுமையாக இருந்தது.

அப்போது நான் வீட்டிற்கு வந்து அரசின் சட்டங்களைப் பற்றி கடுமை யாகப் பேசி விமர்சிப்பதை பிரபாகரன் கேட்டிருக்கக் கூடும். அது பள்ளிப் பரு வத்தில் அவன் மனதில் தீயாகச் சுடர் விட்டிருக்கிறது.



**அண்ணன் மனோகரன்:**

தமிழ் மக்கள் இனி ஆயுதமேந்திப் போராடத்தான் வேண்டும் என்ற நிலை ஏற்பட்டபோது, இவரோடு இணைந்த நண்பர்களிடையே இவரே மிகவும் வய தில் குறைந்தவர் என்பதால் அவர்கள் எல்லோரும் இவரை தம்பி என்றழைத் தனர். பெரிய சோதி, சின்ன சோதி, சந்திரன், குட்டிமணி, தங்கத்துரை, நடேசதாசன் இப்படி இன்னும் பலர். எமது ஊரில் தீவிரமாக ஈடுபட்டவர் களில் பெரிய சோதியும் ஒருவர். இவர் வல்வை நகரசபை முதல்வராக இருந்த ச.ஞானமூர்த்தி பெரியப்பாவின் மகன். இவர் யாழ்ப்பாணத்தில் படித்துக் கொண்டிருந்தபோது தமிழ் மாணவர் பேரவை சத்தியசீலனுடன் தொடர்பு டையவராக இருந்தார். இப்படியொரு காரியத்தை முனைப்பாக ஆரம்பிக்க வேண்டுமானால் வல்வையில் இருந்து டுப்பின் மூலம் தமிழ் இனத்தைச் சாதிகளாகப் பிரித்துக் கூறு போட்டனர். தமிழ் மொழியின் சீரிளமைத் திறனைச் சிதைக்க முயன்றனர். தமிழர்களின் வாழ்வு சரிந்தது. வட மொழியின் மரணப் பிடியில் சிக்கித் தவித்த அன்னைத் தமிழை மீட்கப் போராடினார் மறைமலையடிகள்.

வருணாசிரமப் பழமைவாதப் பிடியில் சிக்கித் தவித்த தமிழரை மீட்டெடுக்கப் போராடினார் பெரியார்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்த இருவரும் மேற்கொண்ட அயராத முயற்சிகளைப் பல அறி ஞர்களும் தலைவர்களும் தொடர்ந்து மேற்கொண்டு தமி ழர்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட அரும்பாடுபட்டனர்.

ஆனாலும் இந்திய தேசியம் என்னும் மாயையில் மூழ் கிக் கிடந்த தமிழர்களை மீட்பது எளிதாக இல்லை. அதைப் போலத் திராவிட தேசியம் என இல்லாத தேசிய மாயை யிலும் தமிழினம் சிக்கித் தவித்தது. சிங்களப் பேரினவாதப் பிடியில் சிக்கி ஈழத் தமிழரும் நலிந்தனர்.

இதற்கெல்லாம் தீர்வு காண தமிழ்த் தேசியம் என்ற மாமருந்தால் தான் முடியும் என்பதை உணரத் தமிழினம் தவறியது.

மொழி அடிமைத்தனத்திலிருந்தும், இன அடிமைத்தனத் திலிருந்தும். விடுதலை பெற வேண்டுமானால் முதற்கண் நாம் யார் என்பதைத் தமிழர்கள் உணரவேண்டும். நாம் தமிழர் என்ற உணர்வு பெறுவோமானால் அரசியல் விடு தலை எளிதில் கிடைக்கும். அந்த அரசியல் விடுதலையைப் பெறுவதற்கான வழி என்ன? இந்தக் கேள்விக்கு விடை காணத் தமிழகத்திலும், தமிழீழத்திலும் எண்ணற்ற தலை வர்கள் முயன்றார்கள். இடைவிடாத அறப் போராட்டங்களை நடத்தினார்கள். ஆனாலும் ஆதிக்கவாதிகளின் இராணுவ வலிமைக்கு முன்னால் அவைகள் வெற்றி பெற முடியவில்லை.

'தமிழன் தனது உயிரைத் தியாகம் செய்வதற்கு எப் போது தயாராகிறானோ அப்போது அவன் விடிவுகாலம் நோக்கி அடி எடுத்து வைக்கிறான். விடிவுக்கான ஒரே வழி இதுவே' என்பதைத் தமிழினம் உணரத் தவறிற்று. ஆண்டாண்டு கால மாக ஊமையாய், ஆமையாய், அந்நியர்களின் அடிமையாய் அடங்கிக் கிடந்த தமிழர் வாழ்வில் மீண்டும் ஒரு பொற்காலம் பிறக்கும் நேரம் நெருங்கிற்று.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அந்த அற்புதம் நிகழ்ந்தது.

ஏறத்தாழ 300 ஆண்டு காலம் தமிழர் வாழ்வில் துயர மும் தோல்வியும் நிறைந்ததாக விளங்கியது. தமிழ்நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடத் துணிந்த புலித்தேவன். வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், திப்புசுல் தான் போன்றவர்கள் வீரமுடன் போராடியும் வென்றாரில்லை. தூக்குக் கயிற்றிலும் துப்பாக்கிக் குண்டிலும் சாவை எதிர் கொண்டார்கள்.

தமிழ் ஈழத்திலும் போர்த்துகீசியரை எதிர்த்துப் போரா டிய டண்டார வன்னியனும் வஞ்சகமாக வீழ்த்தப்பட்டான். அதற்குப் பின் அந்நியரை எதிர்க்கும் துணிவைத் தமிழி னம் அடியோடு இழந்தது என்றே கூறலாம். அதன்பின் தமி ழினம் அடிமைத்தனத்திற்கு ஏற்ற இனமாக அந்நியரால்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கருதப்பட்டது. இலங்கை, பர்மா, மலேசியா, இந்தோனேசியா போன்ற தென்கிழக்காசிய நாடுகளுக்குப் படை எடுத்துச் சென்று அவற்றையெல்லாம் வென்றடக்கிய இராசேந்திரசோழனின் பரம்பரையிலே வந்த தமிழர்கள் அதே நாடுகளுக்குக் கப்பல் கப்பலாக அடிமைகளாக ஆட்டு மந்தைகள் போல் ஓட்டிச் செலப்பட்டனர். இவ்வாறு தமிழினம் கூலி என்ற இழிவான சொல்லுக்கு உரிய இனமாக ஆக்கப்பட்டது. இந்த இழிவையும் பழியையும் துடைக்க யாராலும் முடியவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழீழக் கடற்கரைச் சிற்றூரில் ஆர்ப்பரிக்கும் அலையோசை நடுவே பிறந்த ஒரு தமிழன் வளரும் போதே இன உணர்வோடு வளர்ந்தான். மாசுபடிந்து கிடக்கும் மறத்தமிழினத்தின் பழியைத் துடைக்க உறுதி பூண்டான்.



ஆயுதம் தூக்குவதன் மூலமே சிங்கள வல்லரக்கரை நம்முடைய மண்ணிலிருந்து வெளியேற்ற முடியும் என முழங்கினான். இளைஞர்கள் பலர் அவருடன் கரம்கோர்த்தனர், புலிகள் உருவானார்கள்.

'சிறுபிள்ளைகளின் வெள்ளாமை வீடு வந்து சேருமா?' எனக் கிண்டல் செய்தவர்கள் பலர்.

'நீங்கள் துப்பாக்கியைத் தூக்கினால் அவர்கள் பீரங்கி கொண்டு வருவார்கள். என்ன செய்வீர்கள்?' எனக் கெட்டிக்காரத்தனமாகக் கேட்டதாகக் கருதி, கெட்டிக்காரத்தனமாகப் பேசிவிட்டதாக நினைத்து சில தலைவர்கள் சிரித்து மகிழ்ந்தார்கள். ஆனாலும் அந்த இளம் புலி கொஞ்சமும் கலங்கவில்லை. உறுதியோடு தனது இலக்கை நோக்கி முன்னேறியது. 25 ஆண்டு காலத்தில் உலகம் வியக்கும் சாதனைகளை, அந்த வீர இளைஞன் தலைமையில் புலிகள் படைத்தார்கள்.

அமெரிக்கா, பிரிட்டன், இஸ்ரேல், பாகிஸ்தான், சீனா போன்ற வல்லரசுகள் அள்ளிக்கொடுத்த ஆயுதங்களுடன் போராடிய சிங்கள இராணுவத்தை ஓட ஓட விரட்டினார்கள். அவர்களுக்கு உதவி புரிய வந்த ஐந்தாவது பெரிய வல்லரசான இந்தியாவின் படையையும் தங்கள் மண்ணை விட்டு வெளியேற வைத்தார்கள். தமிழீழத்தில் பெரும் பகுதி இன்று சுதந்திர பூமியாக விளங்குகிறது என்றால் அதற்கு அந்த இளைஞன் தலைமையில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் செய்த அளப்பரிய தியாகங்களும் அர்ப்பணிப்புகளுமே காரணமாகும்.

விவசாயக் கருவிகளைத் தூக்குவதைத் தவிர வேறு போர்க் கருவிகளைத் தூக்கி அறியாத சீன விவசாய இளைஞர்களை ஒன்று திரட்டி, சீனாவில் மாபெரும் புரட்சியை வெற்றிகரமாக நடத்தி, செஞ்சீனம் படைத்தார் மாவோ சே துங்.

வியட்னாம் விவசாயிகளை வலிமை மிக்கவர்களாக மாற்றி பிரெஞ்சு, அமெரிக்க வல்லரசுகளின் கொட்டத்தை அடக்கினார் ஹோசிமின்.

வல்லரசுகளை வீழ்த்துவதற்கு மாவோ சே துங், ஹோசிமின் ஆகியோருக்கு அன்று சோவியத் நாடு எல்லாவகையிலும் உறுதுணையாக நின்றது. ஆயுதங்களைஅள்ளிக்கொடுத்தது. பிற உதவிகளையும் செய்தது. ஆனால் சின்னஞ்சிறிய தமிழீழத்தில் தனது இனத்தைச் சேர்ந்த இளைஞர்களின் உதவியை மட்டுமே நம்பி, உலகத்தமிழர்களின் சிறுசிறு உதவிகளைப் பெற்று சாதனை வரலாறு படைத்திருக்கிறார் அருமைத்தம்பி பிரபாகரன். அவர் தலைமையில் விடுதலைப் புலிகள் புரிந்த தியாகங்களின் விளைவாக ஈழத் தமிழினம் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழினமே இன்று பெருமிதத்தில் உயர்ந்து நிற்கிறது.

கூலியாக உழைக்க மட்டுமே தகுதி வாய்ந்தவன் தமிழன் என்ற இழிவைப் புலிகள் சிந்திய இரத்தம் துடைத்தது. தமிழர்கள் வீரமற்ற கோழைகள் என இகழ்ந்தவர் நடுநடுங்கப் புலிகளாகப்பாய்ந்து உயர்ந்து வீரத்தின் விளைநிலம் தமிழினமே என்பதை நிலைநாட்டியுள்ளனர்.

பிரபாகரனின் தலைமையில் புலிகள் பெற்றுள்ள இந்த இராணுவ வலிமை ஈழத் தமிழர்களுக்கு அரசியல் விடுதலையை மட்டுமல்ல - சமூக விடுதலையையும் பொருளாதார விடுதலையையும் பெற்றுக்கொடுத்திருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக என்றும் இல்லாத வகையில் நமது தமிழ் மொழிக்கும், இனத்திற்கும் உலகளாவிய உயர்வும் மதிப்பும் கிடைத்திருக்கிறது.

தொடக்கத்தில் நான் குறிப்பிட்டதைப் போல ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை தமிழர் வாழ்வில் பொற்காலம் படைக்கும் தலைவன் தோன்றியுள்ளான். அத்தகைய தலைவனே நமது தம்பி பிரபாகரன் ஆவார்.

அருமைத் தம்பியின் பொன்விழா கொண்டாடப்படும் இந்தவேளை தமிழினத்தின் வரலாற்றில் மீண்டும் ஒரு பொற்காலம் படைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையாகும். அவர் தலைமையில் தமிழினம் உலகில் சிறந்த இனமாக மீண்டும் மிளிரும் அறிகுறியும் நம்பிக்கையும் நெஞ்சங்களில் நிறைந்திருக்கிறது. நிறைவான நெஞ்சத்தோடு அவருக்குப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்த்துக்கூறுவோமாக.

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

# PHYSIOGNOMY SPEAKS
## முகம் பேசுகின்றது



The face is the index of the mind. Here we see a chiselled face which has no truck with dishonesty, duplicity or double - dealing of any sort, whatever. The eyes are the windows of the soul. Wisdom is looking out of these eyes. These eyes discover a fearless soul which does its duty at all costs. These eyes can see through a brick wall.These disciplined eyes which note every detail and give its owner the wizardry in military warfare and that uncanniness in action which borders on the the miraculous. These eyes are the eyes of valour, the will of which can be neither broken nor bent. The stiff upper lip reveals a character monumentally indifferent to the wicked deceits of politicians and traitors.

**The nett impression is one of maturity - ripeness in all.**

அகத்தின் அழகு முகத்தில் தெரியும். நாணயமின்மையுடனோ, வஞ்சகத்துடனோ, வேறு எவ்வகை இரண்டகக் குணத்துடனோ தொடர்பு வைத்துக்கொள்ளாத, உளியால் செதுக்கியெடுக்கப்பட்டது போன்ற முகத்தை நாம் இங்கு காண்கின்றோம். ஆன்மாவின் சாளரங்களே கண்கள். மெய்யறிவு இக்கண்களின் வழியாக வெளியே பார்க்கிறது. எது எப்படியானாலும், தனது கடமையைச் செம்மையாக ஆற்றும் அஞ்சாத ஆன்மாவை வெளிப்படுத்திக் காட்டுகின்றன இக்கண்கள். செங்கல்லால் கட்டப்பட்ட தடிப்பான சுவரையும் ஊடுருவிப்பார்க்கும் கண்விழிகள் இவை. இயற்கை கடந்த அற்புதத்தின் எல்லையில், இராணுவப்போர் முறையிலும் மாயத்திறத்திலும் விந்தைகள் புரிவதற்கென ஒவ்வொரு வகை நுணுக்கத்தையும் கவனிக்கும் கட்டுப்பாடுடையவை இவ்விழிகள். உடைக்கவோ வளைக்கவோ முடியாத தன்னடக்க ஆற்றல் மிக்க தீரத்தின் கண்கள் இவை.

அரசியல் வாதிகளினதும் இனப்பகைவர்களினதும் போக்கிரித்தனமான ஏய்ப்புத் தாக்குதல்களுக்கு எதிர்வுகாட்டாத ஒழுக்க உரத்தை நினைவுச் சின்னமாகக் கொண்டது இந்த மேல் உதடு.

அனைத்திலும் பக்குவம் -

இதுவே இம்முகத்தைப் பார்க்கும் எமக்கு ஏற்படும் மெய்நிலை எண்ணப்பதிவு.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தமிழீழத் தலைவரும் மூன்று பெருமக்களும்

தமிழீழத் தலைவர் திருமிகு வேலுப்பிள்ளை பிரபாகரனை நினைக்கும் போதெல்லாம் எனது கருத்தில் மூன்று பெரியார்கள் தோன்றுவதுண்டு. அவர்கள் மூவரும் தனியே தோன்றுவதில்லை. அந்த மூவரும் ஒரே நேரத்தில் பிரபாவில் ஒருவராகத் தெரிகிறார்கள். இக்கட்டுரையில் அவர்களது வயதை அடிப்படையாக வைத்து அவர்களை வரிசைப்படுத்துகிறேன்.

1.மோசஸ்:

இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு, யூத மக்கள் அடிமைகளாக எகிப்து நாட்டில் வாழ்ந்தகாலம். அன்றைய எகிப்து பலமான, வளமான நாடு.

தாழ்த்தப்பட்டது, கடினமானது, ஆபத்தானது என்று கருதப்பட்ட அத்தனை வேலைகளையும் அன்று அந்த நாட்டில் யூத மக்களே செய்து வந்தனர். அவர்களுக்கு ஒரு உரிமையும் இல்லை. மிருகங்ளைப் போல் நடாத்தப்பட்டனர். வறுமையிலும், வேதனையிலும் மிதந்தனர்.




'செவாலியர்' யூலியா

முன்னாள் கல்லூரி ஆசிரியர்,
எழுத்தாளர்,
பிரான்ஸ்.


இறைவன் அவர்கள் மீது இரக்கம் கொண்டு, தூய மோசஸ் கனவில் தோன்றி, 'உன் மக்களை நீதான் காப்பாற்ற வேண்டும்', என்று கேட்டாராம்.

எவ்வளவோ இன்னல்களுக்கிடையே, எவ்வளவோ சஞ்சலத்துக்கிடையே, எவ்வளவோ ஏமாற்றங்களுக்கிடையே, எகிப்து மன்னனிடமிருந்து, எகிப்து இராணுவத்திடமிருந்து, எகிப்திய ஆதிபத்திய வாதிகளிடமிருந்து மோசஸ் யூத மக்களை விடுவித்தார் என்று விவிலிய நூல் விபரிக்கின்றது.

நமக்கு ஈழத்தமிழரின் சரித்திரம் தெரியும். பல நூற்றாண்டு காலம், இலங்கைத் தீவின் வடக்கிலும், கிழக்கிலும் அரசு அமைத்து, எல்லைகளைக் காப்பாற்ற இராணுவம் உருவாக்கி, 'தேச வழமை' என்ற சட்டத் தொகுப்புக்கு வடிவம் கொடுத்து, வரி விதித்து, மக்களைப் பாதுகாத்து, மக்கள் ஒரு குறையுமின்றி வாழ வழி செய்து, பரம்பரை பரம்பரையாக தமிழ் மன்னர்கள் ஆண்ட நாடு தமிழ் ஈழம்.

போத்துக்கீசர் ஆகட்டும், ஆங்கிலேயர் ஆகட்டும் தமிழ் அரசர்களின், தமிழ் வீரர்களின், வீரத்தையும் - விவேகத்தையும் - தியாகத்தையும் நேரில் பார்த்தார்கள். முன்னவர்கள் யாழ்ப்பாணத்தின் கடைசித் தமிழ் மன்னனை, இந்தியாவின் கோவாவில் தூக்கில் இட்டதையும், பின்னவர்கள் கண்டியின் கடைசித் தமிழ் மன்னனை இந்தியாவின் வேலூரில் தூக்கிலிட்டதையும் வரலாறு எமக்கு கூறுகின்றது.

1800 முதல் 1946 வரை ஆங்கிலேயன் புத்திசாலித் தனமாக தமிழரின் திறமையைப் பயன்படுத்திக் கொண்டான். அன்று தமிழர் நிம்மதியாக உரிமைகளுடன் வாழ்ந்ததாக அறிகிறோம்.

பெப்ரவரி 48இல் ஆங்கில எஜமான் கப்பலேறியதும், அவன் இடத்தை சிங்கள எஜமான் கைப்பற்றிக் கொண்டான்.

ஈழத் தமிழர் இரண்டாந்தர குடிமக்களாக, அந்நியராக, அடிமைகளாக நடத்தப்பட்டனர்.

தமிழரின் வரிப்பணத்தில் சிங்களத் தெற்கு வளர்ந்தது. தமிழர் பகுதிகள் முன்னேற்றத்தைக் காணவில்லை. எங்


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தான் தொடங்க வேண்டும் என்று அவர் எண்ணி சில கூட்டங்களுக்காக சத்திய சீலனை அழைத்து வந்தார். இவரின் கூட்டங்களில் எங்கள் ஊர் மாணவர் கள் அதிகமாக இணைந்தனர். இப்படி இணைந்தவர்கள் இடையே பிரபாக ரனே வயது குறைந்தவராக இருந்த தால் எல்லோரும் பொதுவில் தம்பி என்று அவரை அழைத்தனர். அவர் எனக்கு ஆறு வயதிற்கு இளையவர்.





இப்போது ஐம்பதாவது வயதை அடைந்துவிட்டாலும் என் மனதில் அவர் எங்களுடன் வாழ்ந்த இடங்களில் செய்த சிறுபிள்ளைக் குறும்புகள் எல்லாம் பசு மையான நினைவுகளாகவே உள்ளன.

எனது தம்பி கருவுற்ற காலத்திலே நாங்கள் அனுராதபுரத்தில் இருந்தோம். நாங்கள் தினசரி எங்கே போய்வருவ தானாலும் அருகே இருந்த எல்லாளன் சமாதியை கடந்துதான் சென்று வரு வோம். அந்த சமாதியில் தினசரி விளக் கேற்றப்பட்டு மிகவும் உணர்வு பூர்வ மாக இருக்கும். அந்தச் சமாதிக்கு அரு கில் உள்ள வீட்டில் வாழும்காலத்தில் தான் இவர் உருவானார் என்று எனது ஐயா கூறினார்.

தம்பி பிறந்தது யாழ்ப்பாணம் இனு வில் வைத்தியசாலையில், சிறிது காலம் கழிந்து எனது தந்தை மட்டக்களப்பிற்கு வேலை நிமித்தம் செல்லுகிறார். அப் போதுதான் இவருடைய பாடசாலைக் கால வாழ்வு ஆரம்பிக்கிறது. மட்டக்க ளப்பு தாமரைக்கேணியில் நாங்கள் இருந்தோம். அங்கிருந்த அரசடி மகா வித்தியாலயத்தில் பாலர் வகுப்பு முதல் கும் எதிலும் தமிழனுக்கு ஒரு நீதி, சிங்களவனுக்கு ஒரு நீதி என்று ஆனது. தமிழனின் கூக்குரல், தமிழனின் அமைதிப்போராட்டங்கள் சிங்களவரின் கவனத்தை மட்டு மல்ல உலகின் கவனத்தையும் கவரவில்லை.

ஈழத்தமிழ் சகோதரிகளின் துன்பம், துயரம், வேதனை, கண்ணீர் உலகத் தமிழர்களை மிகவும் பாதித்தது. இந்த வேதனைகளுக்கெல்லாம் ஒரு முடிவேயில்லையா?

தமிழரின் நேர்மையான கோரிக்கைகள் உரிமைகளைப் பெற்றுத்தர யாரும் இல்லையா? தமிழர்கள் இப்படியே அழியவேண்டியது தானா? அறிஞர் அண்ணா 1961 இல் எழுதியது போல "நாமெல்லாம் ஒன்றும் செய்ய முடியா மல் கையைப் பிசைந்து கொண்டு இருக்க வேண்டியது தானா" என்று தவித்தோம், தடுமாறினோம், தள்ளாடினோம்.

அன்று எகிப்து நாட்டில் வாடிய யூத மக்களுக்கு ஒரு மோசஸ் கிடைத்தது போல திக்குத் திசை தெரியாமல் திண்டாடிய தமிழருக்கு நம்பிக்கை நட்சத்திரமாக வந்து உதித்தவர்தான் திருமிகு வேலுப்பிள்ளை பிரபாகரன்.

## 2. அண்ணல் காந்தி:

சரி பிரபாவை மோஸஸோடு ஒப்பிடலாம். ஆனால் காந்தியுடன் எப்படி ஒப்பிடுவது. அடிகள் அகிம்சை வீரர். பிரபா வன்முறையாளர் ஆயிற்றே என்று அங்கலாய்ப்பவர் கள் உண்டு. அவர்கள் காந்தியாரின் கருத்துக்களை நன்கு புரிந்து கொள்ளவேண்டும்.

'எவனோ ஒரு காமுகன் என் மனைவியின் கற்புக்கோ, எனது மகளின் கற்புக்கோ குந்தகம் விளைவிப்பான் என் றால், அவன் மீது வன்முறையைப் பயன்படுத்த நான் தயங்கமாட்டேன். அப்படி வன்முறையைப் பயன்படுத்தி, எனது குடும்பத்தினரை என்னால் பாதுகாக்க முடியவில்லை என்றால் நானொரு கோழை என்று பொருள்' என்று அண்ணல் காந்தி எழுதியுள்ளார்.

இப்பொழுது கூறுங்கள் பிரபாவை, காந்தியடிகளுடன் ஒப்பிடுவது தவறா?, திருமிகு பிரபாகரன் வன்முறையை, வன்முறைக்காகத் தேர்ந்தெடுத்தவர் அல்ல. வன்முறையை அவர் மீது திணித்தவர்களே சிங்களவர்கள் தான்.

அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழரை சிங்களக் காடையர்கள் தாக்கினார்கள். அறவழிப் போராட்டத்தில் பங்குபற்றிய தமிழரை சிங்களப் போலிசாரும் இராணுவத் தினரும் தாக்கினர்.

சிங்களவருக்கு தெரிந்தது வன்முறைதான்.

அதே முறையை அவனுக்கே பதிலாகத் தந்தார் பிரபா. அவ்வளவு தான்.

அண்ணல் காந்தி 1948 ஜனவரி 30இல் சுட்டுக் கொல லப்பட்ட பின் அன்றைய தமிழ் நாட்டின் மிகச்சிறந்த பாடகர் தியாகராஜ பாகவதர் ஒரு பாடல் பாடினார்.

"சேய்க்கு வரும் நோய்க்கு
தாய் மருந்து உண்பார் போல்
தாய் நாட்டுக்கு தொல்லை கேட்டு
தான் உண்ணாது இருப்போருக்கு கைமாறு செய்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வதுண்டோ" என்று ஒரு பாடல் பாடினார்.

அண்ணலைப் போலவே பிரபாவும் அவரது மனைவி மக்களும், தமிழ் ஈழத்துக்காகவும், தமிழ் மக்களுக்காகவும் செய்துள்ள தியாகங்கள் எத்தனை எத்தனையோ!

### 3. ஜெனரல் சார்ல்ஸ் டிகோல் (CHARLES DE GAULLE 1890-1970)

பிரான்ஸ் நாட்டின் நம்பிக்கை நாயகன் ஆன இவரை நிறையப் பேருக்கு தெரியாது.

1940 யூன் மாதத்தில் பிரான்ஸ் நாடு, நாஜி ஜெர்மனுடன் போரில் வெற்றி பெற இயலாத நிலைமை. வயதான புகழ்மிக்க மார்ஷல் (Marchal) ஜெர்மனியிடம் சரணாகதி அடைவதைத் தவிர வேறு வழியில்லை என்று தெரிவித்து அவ்விதமே சரணாகதி அடைந்தார்.

அன்று ஏறத்தாழ 95 விழுக்காடு பிரெஞ்சு மக்கள் அம்முடிவை ஏற்றனர். ஆனால் ஐம்பது வயதே ஆன, ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்த ஜெனரல் டிகோல், "பிரான்சு ஒரு பெரிய வல்லரசு. ஒரு வல்லரசு, பிரான்சு போன்ற வல்லரசு, ஒரு போரில் தோற்பதில்லை. நமக்கு உலகம் முழுவதும் குடியேற்ற நாடுகள் (Colonies) உள்ளன. அவற்றின் ஒத்துழைப்புடன் அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் உதவியுடன் இப்போரின் முடிவில் பிரான்சு வெற்றி பெற்ற நாடுகளில் ஒன்றாக விளங்க முடியும்" என்று சூளுரைத்து தன்னந் தனியனாய் இங்கிலாந்து சென்று தேசபக்த பிரெஞ்சுக்காரர்களை ஒன்று திரட்டி சிறிது சிறிதாக 'சுதந்திர பிரான்சை' உருவாக்க ஒரு புதிய இராணுவத்தை உருவாக்கி, பல குடியேற்ற நாடுகளை தன் அணியில் சேர்த்து, பிரெஞ்சு மக்களிடம் ஜெர்மன் எதிர்ப்பு இயக்கத்தை ஆரம்பித்து, வளர்த்து 1944 ஆகஸ்ட் 25இல் அவரது பிரெஞ்சு இராணுவத்தின் துணையுடன் பாரிஸ்நகரை விடுவித்து 44 இறுதியில் பிரான்சு முழுவதையும் விடுவித்தார். அதன் பின் அவரது படையினர் முன்பு ஆக்கிரமித்த ஜேர்மனியின் ஒரு பகுதியை வென்று 1945 மே 8இல் பிரான்சு நாட்டை வெற்றிபெற்ற நாடுகளில் ஒன்றாக உலகத்துக்கு காட்டினார் டி கோல்.

டி கோலுக்கும் - பிரபாவுக்கும் இடையே நிறைய ஒற்றுமைகளைக் காண்பதுண்டு. இதோ ஒரு உதாரணம். சமீபத்தில் ஜெனரல் டிகோலின் மகன் ஒரு நூலை எழுதி வெளியிட்டார். "1940 முதல் 45 வரை சுதந்திரப் பிரான்சின் இராணுவம் கலந்து கொண்ட எல்லாப் போர்களையும் எனது தந்தை தான் திட்டமிட்டு வழிநடத்தினார்" என்று அதில் எழுதியுள்ளார்.

அதே போன்று 1983முதல் தமிழீழ விடுதலைப் போரை, ஒவ்வொரு கட்டத்திலும் பிரபா தான் திட்டமிட்டு வழிநடத்துகிறார் என்பது நாம் எல்லாம் அறிந்த உண்மை.

அன்று தன்னந் தனியராய், தேசபக்தியால், பிரான்சை மீட்டெடுப்பேன் என்று சூளுரைத்த டிகோல் பிரான்சை மீட்டுக் காட்டினார்.



இன்று தன்னந் தனியராய், தேசபக்தியால், சுதந்திர தமிழீழத்தைப் பெற்றெடுப்பேன் என்று உறுதியேற்ற பிரபா தமிழீழத்தைப் பெற்றுத் தருவார் என்று நம்புகின்றோம்.

50 வயது காணும் பிரபா, இன்றைய தமிழரின் நம்பிக்கை நட்சத்திரம். பேராசிரியர் சுப.வீ கூறுவது போல, "அவர் நமக்கெல்லாம் வாராது வந்த மாமணி". தமிழினம் வெகு காலமாய் எதிர்பார்த்து, காத்திருந்த தலைவர். வழிகாட்டி. அவர் வாழுங்காலத்தில் வாழ்வதே ஒரு பெருமை என்று நம்புவர்களில் நானும் ஒருவன்.

அவர் நீண்டகாலம் வாழட்டும்.
வாழ்க வேலுப்பிள்ளை பிரபாகரன்!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



**Pro.Peter Schalk**

Social Analyst, Professor History of religions, Uppsala University. Sweden.

When travelling in Ilankai, I am sooner or later asked by Ilavar and Lankans whether I have met Tiru Veluppillai Prabakaran. Evidently, my status is made dependent on having met him. I tell the truth, I have not met him, but I am not desperate. I have got something else, namely a deep friendship with some members of the Tamil resistance movement. I have through two decades had the privilege of sharing with these members their happiness and sorrow in their Tamil homeland and in exile. Annually, at Maveerarnaal, many members of the resistance movement come together to commemorate the young men and women who have decided to die in battle for attaining Tamil Eelam. I knew some of the fighters who died and I know some of those who may die in the battles to come. I realize that the economic destruction of the Tamil homelands is incalculable. The most important of all Tamil social institutions, the educational system, lies in ruins. The more than 17 000 resistance fighters who died on the battle field gave, however, their lives for establishing peace, not for making war a permanent institution. This is honoured by Tiru Veluppillai Prabakaran. I wish to highlight some passages of his speech at Great Heroes Day on 27th November 1996. He said that the LTTE is not opposed to peace, nor is it opposed to a resolution to the conflict by peaceful means. The peace talks should be held in a congenial environment free from the pressure of military aggression, he said. He mentioned that the LTTE in 1995 called for international mediation. The LTTE's position is that political negotiations should be preceded by creating conditions for de-escalation, withdrawal of troops and normalcy, he added. If we look back from 2004, the LTTE has acted accordingly. In areas controlled by the LTTE like the Vanni, the armed forces of the LTTE have withdrawn and a civil society is coming forth. Law and order prevails. The surplus of production is redistributed among the poor. The international intervention has become true through the facilitation by Norway. The exile Ilattu Tamil community offers its professional competence to develop the Vanni. The LTTE has forwarded a document known as ISGA as a basis for negotiations. In this document, the LTTE does not put the achievement of a separate state on the agenda for negotiations in which case all negotiations are made impossible.

Let me end by referring to a vision by Tiru Veluppillai Prabakaran verbalised on November 27th 1996 about a future Tamil homeland in peace. He says that he wants a condition in which the Tamil people can live with freedom and dignity in their own land and without external coercion determining their own political life. He is implicitly demanding the recognition of the right of self-determination of the Ilavar, a recognition that certainly will open many doors to peace. The international community has already understood the content of this vision and is backing it against extremist forces in the South. May the peace efforts by Tiru Veluppillai Prabakaran and the Tamil resistance movement be successful!

# The Tamil Resistance Movement on the Road to Peace

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்கும் தமிழ் இயக்கம்

# சமாதானப்பாதையில்



**பீற்றர் சால்க்**

சமூகஆய்வாளர்,
பேராசிரியர்,
உப்சலா பல்கலைக்கழகம்,
சுவீடன்.

இலங்கையில் நான் பயணித்துக்கொண்டிருந்தபோது ஈழவர்களாலும் சிறீலங்காவினராலும் பல சமயங்களில் என்னிடம் கேட்கப்பட்ட கேள்வி, நான் திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துள்ளேனா என்பதேயாகும். ஐயத்திற்கிடமில்லாமல் எனது அந்தஸ்து அவரைச் சந்திப்பதிலேயே தங்கியிருந்தது. நான் அவரைச் சந்திக்கவில்லை என்ற உண்மையைக் கூறினேன். ஆனால் அவரைச் சந்திப்பதையிட்டு நம்பிக்கையற்ற நிலையில் நான் இருக்கவில்லை. ஏனெனில் இதனைவிட நான் வேறு ஒரு பேற்றைப் பெற்றிருந்தேன் என்று சொல்லலாம். ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்கும் தமிழ் இயக்கத்தின் உறுப்பினர் சிலரது ஆழமான நட்பைக் கொண்டிருந்தேன்.

இருபது ஆண்டுகளாக அந்த இயக்கத்தின் உறுப்பினர்களை, அவர்களது தாயகத்திலும், இடம் பெயர்ந்து அவர்கள் வாழும் புலத்திலும் சந்தித்து வருகின்றேன். அவர்களுடைய மகிழ்ச்சிகளிலும் துயரங்களிலும் பங்குகொள்வதில் ஒருவித தனியுரிமை பெற்றிருக்கின்றேன் என்று கூடச் சொல்லலாம். தமிழீழத்தை அடைவதற்கான சமர்களில் தங்களது உயிர்களைத் துறந்த இளம் ஆண்களினதும் பெண்களினதும் நினைவுகளைப் பேணிக் காப்பாற்றி நினைவு விழாவாகக் கொண்டாடப்படும் மாவீரர் நாளன்று தமிழ் இயக்க உறுப்பினர்கள் ஆண்டு தோறும் ஒன்று கூடுகின்றனர். இதுவரை நடந்த சமர்களில் உயிர் துறந்த போராளிகள் சிலரை அறிந்திருந்ததோடு, இனி வரும் சமர்களில் மரணிக்கப் போகும் போராளிகள் சிலரையும் நான் அறிந்து இருக்கின்றேன். தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள பொருளாதார அழிவும் சிதைவும் கணிக்க முடியாதது என்பதை நான் உணர்கின்றேன். அப்படிச் சிதைக்கப்பட்ட தமிழர்களது அமைப்புக்களில் மோசமாகப் பாழ்படுத்தப்பட்டிருப்பது அவர்களது கல்வி முறைமையேயாகும். அது படுமோசமாக வீழ்ச்சியுற்று அழிவு நிலையில் கிடக்கின்றது. போர்க்களங்களில் மரணித்த 17,000க்கும் மேற்பட்ட போராளிகள் தமது தாயகத்தில் அமைதியை நிலை நிறுத்தத்தான் தமது இன்னுயிர்களை அர்ப்பணித்தார்களே தவிர நிரந்தரமாகப் போரை நிறுவனப்படுத்துவதற்காக வல்ல என்கின்ற உண்மையை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த நிலைப்பாடு திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனால் கௌரவிக்கப்பட்டு வருகிறது என்றே நான் சொல்வேன்.

1996ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ம் திகதி மாவீரர் தினத்தன்று அவரால் நிகழ்த்தப்பட்ட உரையிலிருந்து சில பகுதிகளை முனைப்புப் படுத்திக் காட்ட விரும்புகின்றேன்.

சமாதானத்துக்கோ, பிணக்கிற்குச் சமாதானமான முறையில் தீர்வொன்றை எட்டுவதற்கோ, தமிழீழ விடுதலைப்புலிகள் எதிரானவர்கள் அல்ல. சமாதானப் பேச்சுக்கள், இராணுவ ஆக்கிரமிப்பின் அழுத்தத்திலிருந்து விடுபட்ட ஓர் இசைவான ஒத்துணர்வுள்ள சூழ்நிலையிலேயே நடைபெறவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். 1995ம் ஆண்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் சர்வதேச சமூகத்தின் மத்தியஸ்தத்திற்கு அறைகூவல் விடுத்திருந்தார்கள் என்பதையும் அவர் தனது உரையில் சுட்டிக்காட்டியிருந்தார். சமாதான பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதற்கு முதல் சுமூகமான சூழ்நிலையை உருவாக்குவதற்கு அவசியமானதாக வன்முறைத் தணிப்பு, படையினரை மீளப் பெறுதல், சகஜ நிலையை உருவாக்கு

Tamileelam Archive

# அகவை 50

மூன்றாம் வகுப்புவரை பிரபாகரன் படித்தார். அதன் பின்னர் நாலாம் வகுப்பில் இருந்து வல்வை சிதம்பராக்கல்லூரியில் படிக்க ஆரம்பித்தார். மட்டக்களப்பு அரசடி மகாவித்தியாலயத்தில் இருந்துதான் அவருடைய வாழ்வை இன்றுவரை கோர்வையாக நினைவுபடுத்திப் பார்க்கிறேன்.

அவர் எங்கள் குடும்பத்தில் கடைசிப் பிள்ளை அதனால் மிகவும் செல்லப் பிள்ளையாக இருந்தார். அக்காலத்தே சிலுவார் என்ற பெயரில் ஒரு உடை உடுப்பார்கள். முஸ்லீம் மக்களிடையே இது பழக்கமாக இருந்தது. அவர் சிறு வயதில் அந்த உடையின் பெயரை சிறுவால் என்று உச்சரித்து எனக்கு ஒரு சிறுவால் வேண்டுமென அடம் பிடித்தார். அக்காலத்திலே எம்மோடு பழகிவந்த பண்டிதரின் மகளார், இவர் தற்போது கனடாவில் வசிக்கிறார். இவர் குரங்குவால் போல ஒன்றை தைத்துக் கொடுத்தார். இதனை இடுப்பில் கட்டிக் கொண்டு அங்கும் இங்கும் ஓடுவதைப் பார்த்து நாங்கள் அனைவரும் சிரிப்போம்.

எமது அப்பா (அம்மாவின் தந்தை) மலேயாவில் 'றெயில்வே காட்டாக' இருந்தவர். அவர் இறந்துவிட்டார். அவருடைய காட் உடை எங்கள் வீட்டில் இருந்தது. அந்த உடைகள் ஆங்கிலேயரின் உடை போலவே இருக்கும். அதைப் போட்டுக் கொண்டு என்னை வெள்ளைக்கார துரையாக நடிக்கும்படி கூறுவார். தான் இட்டலித்தட்டை கேடயமாகவும், மத்தை வாளாகவும் எடுத்துக் கொண்டு வீரபாண்டிய கட்டபொம்மன் வசனங்களைப் பேசுவார்.

வவுனியாவரை நிம்தியாகப் போகும் தமிழ் மக்கள் அதற்கு அப்பால் கூனிக்குறுகி, தமிழர் என்ற அடையாளங்களை மறைத்து போக வேண்டிய நிலை இருந்தது. அந்த நேரத்தில் சிறுவயதாக இருந்த எங்கள் மருமக்களிடம், "நம் மக்கள் யாழ்ப்பாணத்தில் ரெயினில் ஏறினால் கொழும்புவரை தல் போன்றவற்றையே தமிழீழ விடுதலைப்புலிகள் வலியுறுத்துகின்றனர்.

நாங்கள் 2004ம் ஆண்டிலிருந்து பின்னோக்கிப்பார்ப்போமேயானால், வன்னி போன்ற தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆயுதம் தாங்கிய தமது படைகள் மீளப்பெறப்பட்டு, இராணுவ சம்பந்தமில்லாத நாகரீகமான ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருவதை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. அப்பகுதிகளில் சட்டமும் ஒழுங்கும் மேலோங்கிச் செல்வாக்குப் பெற்று வருகின்றன. தேவைக்கு அதிகமான உற்பத்திப் பொருட்கள் ஏழை மக்களுக்கு மீள விநியோகிக்கப்படுகின்றன.

நோர்வேயின் உதவியுடன் சர்வதேச சமூகத்தின் தலையீடு இன்று உண்மையாகிக்கொண்டிருக்கிறது. வன்னியை அபிவிருத்தி செய்வதற்குப் புலத்திலுள்ள தமிழ் சமூகம் தனது தொழில் ரீதியான ஆற்றலையும் திறனையும் அளிப்பதற்கு முன்வந்துள்ளது. பேச்சுவார்த்தைகள் மூலம் பிணக்கிற்குத் தீர்வு காண்பதற்கான அடிப்படையாக ISGA எனச் சுருக்கமாக அழைக்கப்படும் இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைவுகளைக்கொண்ட ஆவணத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ளனர். சமாதான பேச்சுவார்த்தைகளைச் சாத்தியமற்றதாக ஆக்கக் கூடிய தனி நாட்டுக் கோரிக்கை, பேச்சு வார்த்தைகளுக்கான அவர்களது நிகழ்ச்சி நிரலில் தமிழீழ விடுதலைப் புலிகளால் சேர்க்கப்படவில்லை. எதிர்காலத்தில் அமைதியான ஒரு தமிழர் தாயகத்தைப் பற்றிய கூற்றை குறிப்பிட்டுவிட்டு எனது இந்தக் கட்டுரையை முடிக்க விரும்புகின்றேன்.

வெளியாரின் வல்லந்தப்படுத்தலும் நெருக்குதலும் இல்லாமல் தமிழ் மக்கள் தமது சொந்த அரசியல் வாழ்க்கையைத் தாமே நிர்ணயித்து சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழுவதற்கான நிலையை வேண்டி நிற்பதாகவே அவர் கூறுகிறார். ஈழவரது சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கும் படியான வேண்டுகோளையே அவரது கோரிக்கை உள்ளடக்கியுள்ளது. இவ்வங்கீகாரம் நிச்சயமாகச் சமாதானத்திற்கான பல கதவுகளைத் திறந்துவிடும்.

சர்வதேச சமூகம் இந்தத் தரிசனத்தின் உள்ளடக்கத்தை ஏற்கெனவே சரிவரப் புரிந்துகொண்டிருப்பதுடன், தெற்கிலுள்ள தீவிரவாத சக்திகளுக்கும் எதிரான நிலைப்பாட்டை எடுத்து இதனை ஆதரிக்கின்றது. திரு.பிரபாகரனால் மேற்கொள்ளப்படும் சமாதான முயற்சிகளும் தமிழருக்கு எதிரான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்தும் அவரது இயக்கமும் வெற்றிபெற வாழ்த்துகின்றேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# காவிய நட்பு



மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களுக்கும் விடுதலைப்புலிகளின் இயக்கத் தலைவர் பிரபாகரன் அவர்களுக்குமிடையே நிலவிய உறவு ஈடு இணையில்லாத காவிய நட்புறவாகும்.

தொடக்க காலத்தில் தமிழீழ போராளிக் குழுக்கள் அனைத்தையும் எம்.ஜி.ஆர் ஒரே மாதிரியாகப் பார்த்தார். அனைவருக்குமே உதவி செய்தார். ஆனால் போகப்போக காலம் செல்லச் செல்ல அவர் உண்மையை உணர்ந்தார். தமிழீழத்தை போராடி வென்றெடுக்கக் கூடிய ஆற்றல் படைத்த பெரும் படை விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே. இப்போராட்டத்தை தலைமை தாங்கும் தகுதியும், திறமையும், வீரவல்லமையும், தியாக உணர்வும் நிறைந்தவர் பிரபாகரன் மட்டுமே என்பதை அவர் தெளிவாக உணர்ந்தார். அதன் பின்பு பிரபாகரனுக்கு மறைமுகமாகவும், வெளிப்படையாகவும் எவ்வளவோ உதவிகள் புரிந்தார்.

எம்.ஜி.ஆருடன் இணைந்து நின்றும், கருத்து வேறுபாடு கொண்டு விலகி நின்றும் அரசியல் நடத்தியிருக்கின்றேன். அவரால் பகிரங்கமாக பாராட்டப்பட்டும் இருக்கின்றேன். அவர் ஆட்சியில் அடக்குமுறைக்கும் ஆளாகி சிறைப்பட்டுமிருக்கின்றேன். ஆனால், பிரபாகரனுக்கு தமிழீழ விடுதலைப் போரை முன்னெடுத்துச் செல்வதற்கு எம்.ஜி,ஆர் புரிந்த அளப்பரிய உதவிகளை நினைத்தால் என் நெஞ்சம் அம்மாமனிதருக்காக கசிந்திருக்கின்றது.

காலவெள்ளத்தில் கரையாத அந்த நிகழ்ச்சிகள் இன்னமும் பசுமையாக என்னுள்ளத்தில் படிந்துள்ளன.

1982ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் நாள் சென்னை பாண்டி பஜாரில் பிரபாகரனும், முகுந்தனும் மோதிக்கொள்ள நேர்ந்தது. (ஒழுங்கீனமான நடவடிக்கைகளுக்காக முகுந்தன் என்கின்ற உமா மகேஸ்வரன் விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.) இம் மோதலின் விளைவாக காவல்துறை இருவரையும் மற்றும் சில தோழர்களையும் கைது செய்தது. பிரபாகரனும் அவரது

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# அகவை 50

தமிழர் என்ற தன்மானத்தோடு தலை நிமிர்ந்து போய் வருவதற்கான நிலையை மாமா ஏற்படுத்துவேன்," என்று அழுத்தம் திருத்தமாக சொன்னார். அதை அடிக்கடிச் சொல்லித்திரிந்தார். ஆனால், அதை எப்படிச் செய்யப் போகிறார் என்பதை அப்போது என்னால் உணர முடியவில்லை. தமிழரின் தன்மானம் வெல்ல வேண்டும் என்பதே அவரின் முதல் விருப்பமாக இருந்தது.

எமது நெருங்கிய உறவினரான சிலர் இவருடைய எண்ணங்களுக்கு பெரிதும் உதவியாக இருந்தார்கள். ஆனால் அதேபோன்ற ஆதரவு எமது வீட்டில் இருக்கவில்லை, ஏனெனில் இப்படியான காரியங்களில் ஈடுபட்டால் அவர் போலீசில் பிடிபட நேரும், அப்படி ஒரு நிகழ்வு ஏற்பட்டால் நடக்கக்கூடிய விளைவுகள் எமக்கு அச்சத்தைத் தந்தன. ஏனென்றால் அன்றிருந்த நிலையில் நாம் அவருடைய பாதுகாப்புப் பற்றியே மிகவும் கலைப்பட்டோம். இதற்கு காரணம் நாங்கள் அனைவரும் அவர் மேல் வைத்திருந்த பாசமே.

நாங்கள் தமிழ்த் திரைப்படங்களைப் பார்த்துத் திரிந்தபோது அவர் ஆங்கிலப் படங்களிலேயே நாட்டமுள்ளவராக இருந்தார். சாகசங்கள் நிரம்பிய கதைப் புத்தகங்களை விருப்பத்தோடு படிப்பார். மாயாவி எழுதிய வேதாளன் கதைகளை மாதாமாதம் வேண்டி வந்து அதை அழகாகப் 'பைண்ட்' செய்து கட்டுக்கட்டாக வைத்துப் படிப்பார். புத்தகங்கள் வாசிப்பதில் மெய்மறந்து ஈடுபடுவது அவருடைய இன்னொரு இயல்பாக இருந்தது.

அதைவிட முக்கியமானது அவருடைய இரசனை, எதிலும் நேர்த்தியை எதிர்பார்ப்பார். சாப்பாடு செய்தால் தனக்கு பிரியமானதை விரைவாகச் சாப்பிட்டுவிடுவார். அக்காலத்தில் அவருக்குப் பிடித்தமான உணவு இறால். சொதியில் இருக்கும் இறாலை மட்டும் எடுத்து சாப்பிட்டுவிட்டுப் போய் விடுவார். நாங்கள் சாப்பிடும் போது தோழர்களும் தங்குவதற்காக இடங்கொடுத்ததற்காகச் சென்னை மைலாப்பூரில் நான் குடியிருந்த வீட்டைக் காவல் துறை சோதனையிட்டது.

செய்தியறிந்த நான் மதுரையிலிருந்து சென்னை விரைந்து வந்தேன். வந்தவுடன் நான் கேள்விப்பட்ட செய்தி என்னை அதிர்ச்சி அடையவைத்தது. பிரபாகரன், மற்றும் கைதுசெய்யப் பட்ட போராளிகளை தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கேட்டு சிங்களக் காவல்துறை அதிகாரிகள் பறந்து வந்திருக்கும் செய்தியே அதுவாகும்.

உடனடியாக செயற்பட்டேன். யூன் மாதம் முதல் நாள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டமொன்றைக் கூட்டினேன். 20கட்சித்தலைவர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அ.தி.மு.கவின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ப.உ சண்முகம் அக் கூட்டத்தில் கலந்து கொண்டார். முதலமைச்சர் எம்.ஜி.ஆரின் அனுமதியோடு அவர் அக்கூட்டத்திற்கு வந்தார்.

பிரபாகரன் உட்பட கைதான போராளிகளை விடுவிக்க வேண்டும் என்றும், எக்காரணம் கொண்டும் அவர்களைச் சிங்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கக் கூடாது என்றும் வற்புறுத்தும் தீர்மானம் அக்கூட்டத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. தமிழகத்தில் உள்ள 20 கட்சிகள் ஒன்றுபட்டு நிறைவேற்றிய இத்தீர்மானம் பெரும் பரபரப்பை ஏற்படுத்திற்று.

அதைக் காரணம் காட்டி எம்.ஜி.ஆர் இந்திய அரசுக்கு எழுதிய கடிதம் அன்று பிரபாகரன் உட்பட பல போராளிகளைக் காப்பாற்றியது.

இது தொடர்பாக எம்.ஜி.ஆர் அவர்களை நான் சந்தித்த போது "எக்காரணம் கொண்டும் போராளிகள் எவரையும் நாடு கடத்த நான் சம்மதிக்க மாட்டேன்" என அவர் உறுதிகூறினார். அதன்படி இறுதிவரை நடந்தார்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தள நாயகனாக இன்று விளங்கும் பிரபாகரன், அன்று நாடு கடத்தப்பட்டிருந்தால் ஒரு வீரனின் வரலாறு சிங்களச் சிறையில் முடிந்திருக்கும். தன்னிகரற்ற வீரர்களான தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்றோரின் உயிர்கள் சிங்களச் சிறையில் பறிக்கப்பட்டதைப் போல பிரபாகரனின் உயிரும் பறிக்கப்பட்டிருக்கும். தமிழீழ விடுதலைப்போர் இன்று அடைந்திருக்கும் மகத்தான வெற்றிகளைப் பெற்றிருக்க முடியாது.

அன்று எம்.ஜி.ஆர் அவர்கள் உறுதியோடு எடுத்த நடவடிக்கை பிரபாகரனின், உயிரை மட்டுமல்லாமல் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தளநாயகனையும் அளித்தது. சென்னை வழக்கில் பிணையில் விடுதலையான பிரபாகரன் மதுரையில் எனது இல்லத்தில் பல மாதங்கள் தங்கியிருந்தார். அவருக்கு காவலுக்காக சில அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். வழக்குத் தவணைக்காக அவர் அடிக்கடி சென்னை வரவேண்டியிருந்தது. அப்பொழுது காவல்துறை அதிகாரிகள் உடன் வருவார்கள்.

தாயகத்திற்கு திரும்பிச்சென்று போராட்ட நடவடிக்கைகளைத் தொடரப் பிரபாகரன் முடிவு செய்தார். அதை என்னிடம் கூறினார். பிறகு ஒரு நாள் காவல்துறையின்

தமிழ் ஆவணக் காப்பகம் Tamil Archive



கட்டுக் காவலை மீறி மாயமாக மறைந்தார். பத்திரிகைகள் பரபரப்பாகச் செய்திகள் வெளியிட்டன.

காவல்துறை உயர் அதிகாரிகள் என்னை விசாரித்த போது நான் "பிரபாகரன் யாழ்ப்பாணம் போய்விட்டார்" என்றேன். ஆனால் அவர்கள் அதை நம்பத் தயாராக இல்லை. பெங்களூரிலோ, பாண்டிச்சேரியிலோ மறைந்திருப்பதாக கருதினார்கள். தேடுதல் வேட்டையை முடுக்கி விட்டார்கள். பலன் எதுவுமில்லை. அவர்களது கோபம் என் மீதுதிரும்பியது. என் நடவடிக்கைகளைத் தீவிரமாகக் கண்காணித்தனர்.

**அன்று எம்.ஜி.ஆர் அவர்கள் உறுதியோடு எடுத்த நடவடிக்கை, பிரபாகரனின் உயிரை மட்டுமல்லாமல் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குத் தளநாயகனையும் அளித்தது.**

இதற்கிடையில் சட்டமன்ற வளாகத்தில் ஒரு நாள் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களை சந்திக்க நேர்ந்தது. புன்முறுவலுடன் என்னை அழைத்துக் கொண்டு அவர் அறைக்குச் சென்றார்.

"என்ன? உங்கள் நண்பரை பத்திரமாக அனுப்பி விட்டீர்கள் போல இருக்கிறது" என்று கூறிவிட்டு அவருக்கே உரித்தான மோகனப் சிரிப்பை சிந்தினார்.

நானும் சிரித்துக்கொண்டே தலையசைத்தேன்.

அவருடைய சிரிப்பின் அர்த்தங்களைப் புரிந்து கொண்டேன்.

பிரபாகரன் தப்பிச் செல்ல உதவியதாக என்மீதோ, தமிழகத்தில் எஞ்சியிருந்த விடுதலைப் புலிகள் மீதோ காவல்துறை எத்தகைய நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த மர்மத்தை அவருடைய சிரிப்பு அம்பலப்படுத்திற்று.

1984ஆம் ஆண்டு பிரபாகரன் மீண்டும் தமிழகம் திரும்பினார். பல ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் தமிழகம் கொண்டுவரப் பட்டு அவர்களுக்கு தீவிரமான பயிற்சிகள் அளிக்கப்பட்டன. இதற்கான பயிற்சி முகாம்கள் தமிழகத்தின் காடுகளில் அமைக்கப்பட்டிருந்தன. தமிழகமெங்கும் விடுதலைப்புலிகளின் கண்காட்சிகள் தங்கு தடையின்றி நடாத்தப்பட்டன. பகிரங்கமாக நிதி திரட்டப்பட்டது. அவ்வளவையும் முதல்வர் எம்.ஜி.ஆர்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

இறால் சொதியில் இறாலே இருக்காது. (தற்போது நன்றாக சமைப்பதிலும், சாப்பாட்டின் சுவைபற்றி பேசுவதிலும், நாலுபேருக்குக் கொடுத்துச் சாப்பிடுவதிலும் அவர் நாட்டம் கொண்டவர் என்பதனை பலர் சொல்லி அறிகிறோம்).

செல்லப்பிராணிகள் வளர்ப்பதில் அன்று முதல் இன்று வரை ஆர்வமாகவே உள்ளார். முந்திரிப்பருப்பு சாப்பிடுவது இவருக்கு விருப்பம், இன்று வரை அவர் நொட்டு நொறுக்கு சாப்பாடுகளை கொறிப்பதை விட்டுவிடவில்லை என்றே அறிகிறேன்.

அதேவேளை தேகப்பயிற்சிக்காக நெற்கொழுவில் இருந்த கோழிப்பண்ணைக்குப் போவார். சோதிசிவம் என்பவரிடம் சிலம்பாட்டத்தை முறைப்படி பயின்று கொண்டார். முட்டையை பச்சைத் தண்ணீரில் போட்டுக் குடிப்பார். கடலையை ஊறவைத்து பச்சையாக சாப்பிடுவார். இப்படியெல்லாம் செய்து போர்க்கலைக்காக அவர் தன்னைப் படிப்படியாகத் தயார் படுத்திக் கொண்டிருந்தார்.

முதலில் நன்றாகப் படித்தவர் பின்னர் படிப்பில் மெல்ல மெல்ல நாட்டத்தை குறைக்க ஆரம்பித்தார். இதற்கிடையில் இன்னுமொன்றைச் சொல்ல வேண்டும். அக்காலத்தில் தமிழரசுக் கட்சியின் மூளை என்று வர்ணிக்கப்பட்டு அதிலிருந்து பின்னர் வெளியேற்றப்பட்டவர் காவலூர் நவம். இவருடைய சுயாட்சிக்கழகம் என்னும் கட்சியை சேர்ந்தவர் வேணுகோபால் என்பவர். இவரிடம் மாலை நேரங்களில் பாடம் படிக்க அவரை அனுப்பினோம். அவர் தமிழீழம் பற்றிய கருத்துக்களையும் தனது கற்பித்தலோடு சேர்த்தே ஊட்டினார். சிங்கள மேலாதிக்கத்தின் அடிக்குப் பதில், அதே பாணியிலான அடிதான்! என்ற கொள்கையில் தமிழர் தன்மானத்தை காப்பதற்காக அவர் களமிறங்கக் காரணமானவரில் இவர் முக்கியமானவர்.

அனுமதித்தார்.

மற்ற போராளிக் குழுக்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் உள்ள வேறுபாடுகளை அவர் உணரத் தொடங்கினார். பிரபாகரனின் ஆளுமையும், நெஞ்சத்துணிவும் அவரை மிகவும் கவர்ந்தன. தமிழீழத்தின் இளம் தேசியத்தலைவராக பிரபாகரனை அவர் இனம் கண்டுகொண்டார். எனவே அதுவரை மற்ற போராளிக் குழுக்களுக்கு விழலுக்கு இறைத்த நீராக அளித்து வந்த உதவிகளை நிறுத்தி விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு மட்டுமே உதவி புரிவதென முடிவுசெய்தார். அனால் இதற்கு குறுக்கே 'ரா' உளவு அமைப்பு நின்று முட்டுக்கட்டை போட்டது. பல வகையான நிர்ப்பந்தங்களை அது ஏற்படுத்தியது.

இதற்கிடையில் 1986ஆம் ஆண்டு நவம்பர் 16ம் நாள் பெங்களூரில் சார்க் மாநாடு நடைபெறவிருந்தது. இந் மாநாட்டில் கலந்து கொள்ள வரும் இலங்கை குடியரசுத் தலைவர் ஜெயவர்த்தனாவுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும் எனக் காரணம் காட்டித் தமிழகத்திலிருந்த போராளிகள் அனைவரையும் கைது செய்யும்படியும், அவர்கள் வசமிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றும்படியும் மத்திய அரசு ஆணையிட்டது. அதன்படி போராளிகள் பலர் கைது செய்யப்பட்டனர். ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.



**பழ.நெடுமாறன்**

தலைவர், தமிழர் தேசிய இயக்கம், தமிழீழ பற்றாளர், தமிழகம்.

பிரபாகரனை கைது செய்யாமல் வீட்டுக் காவலில் வைக்கும்படி முதல்வர் எம்.ஜி.ஆர் உத்தரவிட்டார்.

இதற்கிடையில் பெங்களூர் சார்க் மாநாட்டின்பொழுது ஜெயவர்த்தனாவையும் பிரபாகரனையும் சந்திக்க வைத்து ஒரு சமரசம் ஏற்படுத்த பிரதமர் இராஜீவ் ஒரு திட்டமிட்டார். அவருடைய சமரச திட்டம் இது தான்.

1. விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அங்கீகாரம்
2. வடக்கு மாகாணம் மட்டும் தமிழ் மாநிலமாக ஏற்கப்படும்.
3. பிரபாகரன் முதலமைச்சராக நியமிக்கப்படுவார்.

இந்தியாவின் மாநில முதலமைச்சர் பதவி என்பது கிடைக்கக் கூடாத அரிய பதவி. இப்பதவியை அடைய பலர் துடிக்கின்றனர். அதற்காக யார் காலிலும் விழ அவர்கள் தயார். இத்தகைய இழி பிறவிகளையே சந்தித்துப் பழக்கப்பட்டவர் இராஜீவ். அவர் விட்டெறியும் முதலமைச்சர் பதவி என்னும் எலும்புத்துண்டை பாய்ந்தோடி கவ்வுபவர்களையே பார்த்துப் பழக்கப்பட்டவர் இராஜீவ். எனவே முதலமைச்சர் பதவி ஆசையைக்காட்டி பிரபாகரனை தம் வலையில் வீழ்த்த அவர் முயற்சித்தார்.

நவம்பர் 16ஆம் நாள் பிரபாகரன் பெங்களூருக்கு அழைத்துச் செல்லப்பட்டு பலமான நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாக்கப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பட்டார். பிரபாகரன் எதற்கும் மசியவில்லை. ஜெய வர்த்தனாவை சந்திக்கக் கூட மறுத்துவிட்டார். இறுதியாக பிரதமர் இராஜீவ், முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களை அழைத்து பிரபாகரனிடம் பேசும்படி கூறினார்.

எம்.ஜி.ஆரும் பிரபாகரனும் சந்தித்தார்கள். 'தனது திட்டத்தை ஏற்றுக்கொண்டு ஆறுமாதகாலம் செயற்பட்டால் பின்பு அனைத்து உதவிகளையும் செய்வதாக பிரதமர் கூறுகின்றார்', என எம்.ஜி.ஆர் கூறியபொழுது பிரபாகரன் கூறியபதில், எம்.ஜி.ஆரைத் திகைக்க வைத்தது.

"கேவலம்! மாகாண முதலமைச்சர் பதவிக்காக நாங்கள் ஆயுதம் தூக்கவில்லை. என் அருமைத் தோழர்கள் பலர் எங்கள் மண்ணின் விடுதலைப் போராட்டத்தில் தங்கள் இன்னுயிர்களைத் தியாகம் செய்துவிட்டார்கள். அவர்களுக்கு கிடைத்த வாய்ப்பு இன்னமும் எனக்கு கிடைக்கவில்லை. நாளை நானும் மடிய நேரிடலாம். மரணத்தோடு போராடும் வேளையில் முதலமைச்சர் பதவிக்காக இலட்சியத்தைக் காட்டிக்கொடுத்தவன் என்ற பழிக்கு நான் ஆளாக விரும்பவில்லை. எங்கள் விடுதலைப்போராட்டத்திற்கு உதவ பிரதமர் இராஜீவ் விரும்பினால் உதவட்டும். நன்றியோடு ஏற்போம். உதவாவிட்டால் பரவாயில்லை. நாங்கள் தொடர்ந்து போராடுவோம்" என்றார்.



பிரதமர் கருத்தை உங்களிடம் தெரிவித்தேன். உங்கள் பதிலை அவரிடம் தெரிவிக்கின்றேன். உங்களுக்கு விருப்பமில்லாததை வற்புறுத்தி ஒப்புக்கொள்ள வைக்கும் வேலைக்கு நான் உடந்தையாக இருக்க மாட்டேன்.

இந்தியப் பிரதமருக்குக்கூட அஞ்சாமல் இலட்சிய ஆவேசத்தோடு நெஞ்சு நிமிர்த்தி பிரபாகரன் கூறிய பதில் எம்.ஜி.ஆரின் நெஞ்சைத் தொட்டது.

"பிரதமர் கருத்தை உங்களிடம் தெரிவித்தேன். உங்கள் பதிலை அவரிடம் தெரிவிக்கின்றேன். உங்களுக்கு விருப்பமில்லாததை வற்புறுத்தி ஒப்புக் கொள்ள வைக்கும் வேலைக்கு நான் உடந்தையாக இருக்க மாட்டேன்" என்று முதல்வர் எம்.ஜி.ஆர் கூறினார்.

ஆசைவார்த்தை காட்டி பிரபாகரனை பணிய வைக்கமுடியாது என்பதை பிரதமர் இராஜீவிற்கு உணர்த்தினார்.

இந்த நிகழ்ச்சிகள் ஒரு புறம் நடைபெற்றுக் கொண்டிருக்க மறுபக்கத்தில் ஜெயவர்த்தனாவிற்கு கறுப்புக்கொடி காட்டும் போராட்டத்தில் நாங்கள் ஈடுபட்டோம்.

திராவிடக் கழக பொதுச்செயலாளர் வீரமணி அவர்களும், நானும் பெங்களூரில் ஜெயவர்த்தனாவிற்கு எதிராக கறுப்புக் கொடிப் போராட்டம் நடாத்த திட்டமிட்டோம். திடீரென வீரமணிக்கு இதய நோய் ஏற்பட்டதால் அவர் பெங்களூர் வர முடியவில்லை. கறுப்புக் கொடிப் போராட்டத்தை எப்படியும் தடுக்க வேண்டும் என கர்நாடக காவல்துறை வரிந்து கட்டிக்கொண்டு செயற்பட்டது. ஆனாலும் தலைமறைவாக இருந்து குறிப்பிட்ட நேரத்தில் சார்க் மாநாடு நடக்கும் மாளிகைக்கு முன் ஆயிரக்கணக்கில் திரண்டு கறுப்புக்கொடி காட்டினோம். முன் வாயில் வழியாக ஜெயவர்த்தனா வரமுடியவில்லை. பின் வாயில் வழியாக இரகசியமாய் அழைத்துச் செல்லப்பட்டார்.

கர்நாடக தமிழ்ப்பேரவைப் பொதுச் செயலாளர் சண்முகசுந்தரம் பாவிசைக்கோ முதலிய ஆயிரக்கணக்கான தோழர்களும் நானும் கைது செய்யப்பட்டோம்.

சார்க் மாநாட்டிற்கு பின்பு பிரதமர் இராஜீவ் பிரபாகரன் மீது கடும் கோபம் கொண்டார். இலங்கைப் பிரச்சனையில் பெயரளவிற்கு ஏதாவது செய்து புகழ் சம்பாதிக்க அவர் போட்ட திட்டத்தை பிரபாகரன் ஏற்காததால் அவர் ஆத்திரம் அடைந்திருந்தார். இதைப் பயன்படுத்திக்கொண்டு பிரபாகரனை ஒழித்துக்கட்டும் முயற்சிகள் ஆரம்பமாயின.

போட்டி இயக்கங்களுக்கு ஏராளமான ஆயுதங்களும் தாராளமாக பணமும் வழங்கப்பட்டன. தமிழ் நாட்டில் பிரபாகரனை படுகொலை செய்ய இந்த இயக்கங்கள் திட்டமிட்டன.

இதைப்புரிந்து கொண்ட பிரபாகரன் தமிழீழம் செல்லத் திட்டமிட்டார். சார்க் மாநாட்டிற்கு பின் இந்தியாவில் இருந்துகொண்டு செயற்படுவது கடினம் என்று உணர்ந்து கொண்ட பிரபாகரன், தமிழகத்திலிருந்த பயிற்சிமுகாம்கள், அலுவலகங்கள் ஆகியவற்றை மூடி, அனைவரையும் தாயகம் அனுப்பிவிட்டு தானும் புறப்படத் தயாரானார்.

1987ஆம் ஆண்டு, சனவரி, 4ம் நாள் தாயகம் புறப்பட்டுச் சென்றார். செல்வதற்கு முன் முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்களை சந்தித்து பிரியாவிடை பெற்றார் பிரபாகரன்.

விரைவிலேயே போர் மேகங்கள் சூழப்போகின்றன என்பதை அப்போது யாரும் உணர்ந்திருக்கவில்லை.

1993

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பிரபாகரன்

## 21ம் நூற்றாண்டின் இணையற்ற சாதனையாளன்



பெ.சந்திரசேகரன்

தலைவர்,
மலையக மக்கள்
விடுதலை
முன்னணி,
நாடாளுமன்ற
உறுப்பினர்,
இலங்கை.

தமிழ் இலக்கியத்திலே உலக இலக்கியத்தின் இலக்கைத் தொட்ட மகாகவிகள் பலர்: எழுத்துத்துறையிலே, தமிழ் மொழியைக் காத்தவர்கள் - வளர்த்தவர்கள் என்று வந்து கொண்டே இருக்கிறார்கள்.

நாடு பிடிக்கும் நாட்டத்தோடு வலிமைமிக்க சரித்திர நாயகர்களாக, வரலாற்றில் நிரந்தர இடம் பிடித்த பெருமைக் குரிய தமிழ் மன்னர்கள் பலர்.

ஆனால்...

அழிந்து விடுமோ என்ற அச்சத்தின் அங்கலாய்ப்பில் உள்ள தமிழ் இனத்திற்கு அபயமாக, ஒரு விடிவெள்ளியாக, தமிழனுக்கு என்று ஒரு நாட்டை உருவாக்க இளமையி லேயே புயலாகப் புறப்பட்ட வேங்கையே பிரபாகரன்.

உலகெங்கும் வாழுகின்ற தமிழருக்குப் புது இரத்தம் பாய்ச்சுகின்றவன் பிரபாகரன்.

தாழ்ந்து போன தமிழினத்தைத் தலைநிமிரவைத்தவன் பிரபாகரன்.

முதுகொடிந்த தமிழினத்தின் முள்ளந்தண்டை நிமிர்த் திக் காட்டியவன் பிரபாகரன்.

'சாகும்வரை சமர்தான்' என்று விண்ணதிரும் குரலோடு விஸ்வரூபம் எடுத்திருப்பவன் பிரபாகரன் மட்டுமே.

வடக்குக் கிழக்குத் தமிழரின் விடுதலைக்கு மட்டுமன்றி வந்தேறு குடிகளென வசைபாடப்பட்ட இந்தியத் தமிழரான மலையகத் தமிழருக்கும் தோள்கொடுக்கத் துணிந்திருப் பவன் பிரபாகரன்.

உள்நாட்டுத் தமிழரை ஒன்றிணைத்தது மட்டுமன்றி உலகத் தமிழரையும் ஒன்றிணைக்கும் உணர்வுகளை ஊட்டி வருபவன் பிரபாகரன்.

50 வருட வாழ்வல்ல வரலாறு - 20 வருட 'காலத்தை வென்ற' எதிர் நீச்சல் மட்டுமல்ல எதிர்காலச் சரித்திரம்.

வரலாறு என்பது எல்லையற்றது. அதில் வாழ்பவர்க ளும் மடிபவர்களும் கோடான கோடி.

அதில் அழிக்கமுடியாதபடி கால்பதித்து, காலத்தை வென்று, நிரந்தர இடத்தைத் தனதாக்கிக் கொள்பவர்கள் சிலரே. அந்த இடத்தைப் பிரபாகரனுக்கு மாத்திரம் என்று தனியாக ஒதுக்கிக் கொண்டது தமிழர் சரித்திரம்.

சரித்திரத்தையே மாற்றிக் காட்டும் மாபெரும் பிரமிக் கும் சக்தியாகத் தமிழரால் இனம் காணப்பட்டவனே பிரபாகரன்.

அவன் இன்னும் பல்லாண்டு வாழ்வான்!
தமிழையும் தமிழனையும் வாழ வைப்பான்!

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamil Archive

ஈழத் தமிழ் மக்களின் விடுதலைக்கான கனவும், ஏக்கமுற்ற போராட்டமும் சந்தித்த-சந்தித்துக்கொண்டிருக்கிற சவால்கள், நெருக்கடிகளின் பின்னணியில்தான் தேசியத் தலைவரின் பன்முகத் தன்மைகொண்ட தலைமைத்துவத்தை மதிப்பீடு செய்ய முடியும்.

எங்களின் கனவையும் இல்லாதுபோனவர்களின் உயிர்க்கனவை யும்

# சுமந்தவர்



முதலில் பூகோளச் சூழமைவு. இலங்கை ஒரு தீவு நாடு. வேறெந்த நாட்டுடனும் நில இணைவுப் பாதைகள் இல்லாமல் விடுதலைப் போராட்டமொன்றை நீண்டு நடத்துவதென்பது கற்பனையிலும் நினைக்க முடியாத காரியம். ஆனால் பெருங்கடலையே நடந்து செல்லும் நிலம் போல ஆக்கி சோழ மன்னர்களுக்குப் பிறகு ஆழக் கடல்களில் ஆதிக்கம் செலுத்தும் தமிழர்களுக்கான கடற்படையொன்றை கட்டியெழுப்பிய சாதனை சாதாரணமானதல்ல.

இரண்டு, சமூகச் சூழமைவு. தமிழகத்தைப்போல் ஈழத்தமிழகமும் சாதிகளால் பிளவுண்ட சமூகம். அதே போல சமயம் வாழ்வின் எல்லா மட்டங்களிலும் வேரோடி

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

நாட்கள் செல்லச் செல்ல தினசரி வீட்டிற்கு காலதாமதமாக வரத் தொடங்கினார். படிப்பில் மெல்ல மெல்ல நாட்டம் குறைய ஆரம்பித்தது. இவரைத் தேடிவரும் இராணுவம் தம்மைப் பதம் பார்த்துவிடுமென அவர்கள் அஞ்சினார்கள். அயலில் உள்ளவர்கள் உங்கள் மகன் தவறான கூட்டுக் கூடித் திரிகிறார் அவரை கண்டித்து வளருங்கள் என்றார்கள். நீங்கள் கடைசிப் பிள்ளையென்று அடி போடாமல் செல்லம் கொடுத்து வளர்த்ததால் வந்தவினை என்று வேறு சிலர் கூறினார்கள். இவருடைய பெயர் இவ்வாறு மெல்ல மெல்ல அடிபடத் தொடங்கியதும் பலர் தமக்கு இவரால் கஷ்டம் வரப்போவதாக அச்சமடைந்து எனது தந்தையிடம் முறையிடத் தொடங்கினார்கள்.

எமது வீட்டில் சுவர் முழுவதும் குடும்பத்தினரின் புகைப்படங்கள் இருந்தன. இவர் அடிக்கடி ஒவ்வொரு படமாக எடுக்கத் தொடங்கினார். 'ஏன் அப்படிச் செய்கிறாய்' என்று கேட்டால் அது 'கறையான் பிடித்துவிட்டது அதுதான் மாற்றுகிறேன்' என்று சொல்லுவார். இப்படி இவர் நின்ற படங்கள் எல்லாம் வீட்டில் இருந்து மெல்ல மெல்ல மறைய ஆரம்பித்தன.

அப்போது ஒரு சுவையான சம்பவம் நடைபெற்றது. புகைப்படங்களை அழித்துக் கொண்டிருந்த இவருக்கு, புதிதாக ஒரு படம் எடுக்க வேண்டிய நிலை வந்தது. க.பொ.த சாதாரண பரீட்சைக்கு கடதாசி மட்டையில் புகைப் படம் ஒட்டி ஓர் அடையாள அட்டையை வழங்குவார்கள். அதற்காக ஒரு போட்டோ எடுக்க வேண்டிய நிலை வந்தது. அன்றைய தினம் சலூன் சென்று தலையை ஒட்ட, அடையாளம் தெரியாதபடி வெட்டிக் கொண்டு வந்தார். 'ஏன் இப்படி வெட்டினாய்' என்று ஐயா கேட்டபோது, 'நான் முடிவெட்டும் போது உறங்கிவிட்டேன், அதுதான் மொட்டையாக வெட்டிவிட்டார்கள்' என்று தெரிவித்தார். பரீட்சைக்கு போகாவிட் நிற்கிற சமூகம். சாதியும் சமயமும் ஆழ வேரூன்றி ஆதிக்கம் செய்யும் ஓர் சமூகத்தில் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் தாக்குப்பிடிப்பது கடினம். இந்த இரு பெரும் அடி நீரோட்டங்களையும் முரட்டுத் தனம் காட்டாமல் கையாண்டு, பூடகமான ஓர் சமூக இயங்கியல் ஒத்திசைவை விடுதலைப் போராட்டத்திற்காக உருவாக்கியது, மகத்தான தலைமைத்துவச் சாதனை.



**அருட்திரு. ஜெகத் கஸ்பார்**

முன்னாள் பணிப்பாளர் வெரித்தாஸ் வானொலி, இயக்குநர் தமிழ்மையம், தமிழகம்.

மூன்று, பிராந்திய உலகச் சூழமைவு. இந்தியாவும் பாகிஸ்தானும் எதிரி நாடுகள். இந்தியாவும் சீனாவும் போட்டி நாடுகள். அமெரிக்காவும் ரஷ்யாவும் உள்ளுக்குள் ஒருவருக்கொருவர் பரஸ்பரம் சந்தேகிக்கும் நாடுகள். ஆனால் இவர்கள் எல்லாருமே சிறீலங்கா அரசிற்கு உதவுவதிலும், தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதிலும் ஒத்த ஒரே கருத்து கொண்டிருக்கின்றார்கள். நேசநாடு எனச் சொல்லிக்கொள்ளவோ, ஏன் மறைமுக உதவிகள் தரும் நாடு எனச் சொல்லிக்கொள்ளவோ ஓர் சுண்டைக்காய் நாடு கூட இல்லை. இருந்தும் தமிழருக்கான இராணுவமொன்றை கட்டியெழுப்பி, கால் நூற்றாண்டு காலமாய் போராட்டத்தை தொடர்ந்து நடாத்தி, அனைத்துலக அரங்கில் தமிழ் மக்களின் அரசியற் பிரச்சனையை வலுவாக நிறுத்தி வைத்திருப்பது வியக்க வைக்கும் சாதனை.

பல்கலைக்கழகம் சென்று படித்தவரல்ல. எந்த குருகுலத்திலும் புடமிடப்பட்டவரல்ல, எந்த இராணுவக் கழகத்திலும் தேர்ச்சி பெற்றவரல்ல. எனினும் தமிழ் வரலாறு கண்டிராத ஒப்பற்ற தலைவராய், சிதறடிக்கப்பட்ட ஒரு சமூகத்தின் கனவு நம்பிக்கையாய் இவர் அழியவேண்டுமென ஆசிக்கிற பகைச் சக்திகளே இவர்தம் இராணுவ வியூகத்திறன் கண்டு வியந்து இரகசியமாய் பாராட்டுகிற வித்தகனாய், 50 வயதிற்குள் எப்படி எழ முடிந்தது?. எங்கிருந்து வந்தது இவர்தம் ஞானம். எங்கிருந்து கிடைத்தது இவருள்ளிருக்கும் தீர்க்கதரிசனம். எப்படி உருவானது இவர்தம் மதிநுட்பம். இவர் வல்வெட்டித்துறையின் ஓர் சாதாரண அரசு அலுவலரது மகனல்லரோ?

எல்லாம் எழுதவேண்டுமெனில் ஏழு புத்தகங்கள் எழுதினாலும் முடியாது. எட்டு வரிகளில் இப்படிச் சொல்லலாம். இவர் இயற்கையின் மாணவன், தத்துவத்தின் ஆசீர்வதிக்கப்பட்ட செல்லப்பிள்ளை.

வாழ்வின் அனுபவங்களிலிருந்து தெளிவான பாடங்களைக் கற்றுக்கொள்ளும் அறிவாளி, அற்பச் சுகங்களுக்காய் விலைபோக மறுக்கும் ஒழுக்க அதிசயம், எல்லாம் எதிராகப் போகிறபோதும் கலங்காது நிற்கிற ஞானயோகி. இலட்சியத்தை ஒருபோதும் கைவிடாத போராளி, விடுதலைக் கனவை முன்வைத்தோடு நில்லாமல், அதற்கான

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



திட்டத்தையும், அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான திறன்மிகு நிறுவனக் கட்டமைப்பையும் மனிதவள ஆற்றலையும் கட்டியெழுப்பிய தமிழ் வரலாற்றின் மகத்தான கோபரேட் (carporate) ஜாம்பவான். யாவிற்கும் மேலாய் மரணத்தை ஒத்திகை பார்க்கும் நாளில் கூட கலகலப்பாய் சிரித்துப் பேசி வாழ்வின் ஒவ்வொரு கணத்தையும் கொண்டாடுகிற இயல்பான மனிதன்!

இவரைப்பற்றி பல பாடல்கள் பாடப்பட்டுவிட்டன. அவற்றுள் எனக்குப் பிடித்தது இது: 'தலைகள் குனியும் நிலையில் இங்கே புலிகள் இல்லையடா, எவனும் விலைகள் பேசும் நிலையில் எங்கள் தலைவன் இல்லையடா!' எப்போதோ யாரோ எனது ஆஸ்திரேலியப் பயணத்தின்போது சொன்னதாக நினைவு! 'பொய் ஒன்றை வடிவாகப் புனைந்து கொண்டு ஆயத்தமாய் போனாலும் அவர்முன் போகிறபோது உண்மை மட்டும் தான் வெளியே வரும்.' ஐம்பது ஆண்டுகளில் ஒரு தருணத்திலும் விலைபோகாத இந்தத் தலைவன் இன்னும் ஐம்பது ஆண்டுகாலம் நலமாக வாழ்ந்து, எந்தச் சக்திக்கும் விலைபோகாத ஒரு தலைவன் எமது வரலாற்றில் நூறாண்டு காலம் வாழ்ந்தான் என்ற ஆசியை இறையருள் தருவதாக!

மரணம் பலமுறை இவருக்கு வெகு அருகில் வந்து கைகுலுக்கிக் கட்டியணைத்துவிட்டுச் சென்ற கதைகளையெல்லாம் நான் கேள்விப்பட்டிருக்கின்றேன். துரோகத்தின் ஆலகால விஷம் தாங்கிய அம்புகளே இவருக்கு வெகு அருகில் வந்துவிட்டு எவராலும் விளக்கமுடியாதபடி வேலை நிறுத்தம் செய்ததாகக் கூட அறிந்திருக்கிறேன். எல்லோருக்கும் இந்த ஆசி நிகழாது. வரலாற்றில் வெகுசில அதிசயப் பிறவிகளுக்கு மட்டுமே இது ஆகியிருக்கிறது.

> "பொய் ஒன்றை வடிவாகப் புனைந்து கொண்டு ஆயத்தமாய் போனாலும் அவர்முன் போகிறபோது உண்மை மட்டும் தான் வெளியே வரும்"

பஞ்சபூதங்களோடு ஒன்றாகி நின்று பல்லாயிரம் ஆத்மாக்கள் அரணாகி இவரைக் காத்து வருகின்றன என்பதை நான் திடமாக நம்புகிறேன். ஏனெனில் இவர் அடையாளப்படுத்துகிற கனவு இருக்கிறவர்களின் கனவு மட்டுமல்ல-இல்லாது போனவர்களினதும் உயிர்க்கனவு.

எங்கள் ஊர்களில் அந்தக் காலத்திலே, திருவிழாக்கள் நடக்கும்போது 'ரிகார்ட் டான்ஸ்' நிகழ்ச்சிகள் நடக்கும். ஏக கூட்டம் கூடும். கூட்ட நெரிசலில் சிலநேரம் பிள்ளைகள் தற்காலிகமாகத் தொலைந்து போவார்கள். சமாதான முயற்சிகள் என்ற 'ரிகார்ட் டான்ஸ்' நிகழ்ச்சியில் ஈழம் என்ற குழந்தை தொலைந்து போகாதபடி இந்த ஐம்பது வயதுத் தகப்பன் பார்த்துக்கொள்வான் என்பது மட்டுமே இப்பிறந்த நாளின் சந்தோசம்.

நூறாண்டு காலம் வாழ்க!

இல்லாது போய்விட்டவர்களின் சார்பாக,
ஜெகத் கஸ்பார்.

தமிழ் ஆவணகாப்பகம்
Tamileelam Archive



தேசிய அரசியல் இப்பொழுது தெளிவற்ற பாதையிற் சென்றுகொண்டிருக்கிறது. இவ்விதமான அமைதியற்ற தருணத்திலே கடந்தகால நினைவுகளையும் உணர்வுகளையும் மட்டுமல்லாது சாதனைகளையும் வேதனைகளையும் இரைமீட்டிப் பார்ப்பது அவசியமானது. தமிழினத்தின் எதிர்காலம் இனிமேல் எந்தப்பாதையிலே செல்லப்போகிறது?

# தலைவர் பிரபாகரன் போராளி என்ற தளத்திலிருந்து எழுச்சிபெற்ற ஒரு இராஜதந்திரி

தமிழினத்தின் விடுதலைப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கியவர்கள் யாவரும் இப்பொழுது தொய்ந்து போயுள்ள நிலையில் நைந்து போயுள்ள எதிர்காலத்தைப்பற்றிச் சிந்திக்வேண்டியது அவசியமானது. கட்சியரசியல் தலைமைகள் “சுயநல அரசியற் பூச்சாண்டித் தனங்களுடன்” பேச்சுவார்த்தைகள் என்ற பேச்சோடு காலத்தைக் கடத்துகின்றன. இப்பொழுது சமாதானப் பேச்சுவார்த்தையே போராட்டமாகிவிட்டது.

ஆயுதப்போராட்டமானது இப்பொழுது சமாதான ரீதியான அரசியற் போராட்டமாக மாறியுள்ள தருணத்திலே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஐம்பதாவது அகவையை எட்டியுள்ளார். தமிழர் மீது இனவெறியோடு தொடரப்பட்ட கொடூரமான தாக்குதல், இன அழிப்பு நடவடிக்கைகள் இனிமேல், எந்தப் பாதையிலே செல்லப்போகின்றன?

தமிழ் மாணவர் பேரவை என்ற அமைப்பின் வெண் சூட்டிலே பிறந்த விடுதலைப் போராட்டம், ஆயுதப் போராட்டமாக மாறியமையும் இயக்கங்களிடையே மோதல்கள் தொடர்ந்தமையும் வரலாறாகிவிட்டது. தமிழினத்தின் விமோசனத்திற்கான உயிர்ப்பும் உயிர்மூச்சும் தம்பி பிரபாகரனின் தீர்க்கதரிசனமான உறுதி என்ற மயிரிழையிலேதான் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இப்பொழுது நடைபெறுவது போராட்டத்திற்கான பேச்சுவார்த்தையா பேச்சுவார்த்தைக்கான போராட்டமா என்ற கேள்விக்கு விடைகாண முடியாது இலங்கையின் தேசிய அரசியலே தளம்பிப் போயுள்ளது.

நிரம்பிய பட்டறிவுகளின் மத்தியிலே ஐம்பது வயதை எட்டியுள்ள பிரபாகரன், தன்னை ஒரு போராளி என்ற தளத்திலிருந்து எழுச்சி பெறவைத்து, சாணாக்கியம் மிக்க இராஜதந்திரியாகப் புடமிட்ட வரலாறுதான் இப்பொழுது தமிழினத்தின் எதிர்காலத்தை வழிப்படுத்தும் ஒரேயொரு பற்றுக்கோடாகியுள்ளது.

இப்பொழுது நல்லதும் கெட்டதுமாகப் பல காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. நாட்டின் எதிர்காலமே சூனியத்தை நோக்கிச்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



**சிவநேசச்செல்வன்**

அரசியல் ஆய்வாளர்,
முன்னாள்
தினக்குரல்
ஆசிரியர்,
ஊடகத்துறை
விரிவுரையாளர்,
இலங்கை.

செல்கிறது. தமிழினத்தின் விடுதலைக்காகத் தீர்க்க தரிசனமான உணர்வுகளோடு சிந்தித்த தலைவர்கள் இனவாதக் கும்பல்களின் நடுவில் வெறுமனே கையைப் பிசைக்கின்றார்கள். ஆயுதப்போராட்டம் தணிந்த நிலைமையிலே விடுதலைப் புலிகள் இயக்கம் தொடர்ந்து அரசியல் ரீதியான போராட்டத்திலே கால்பதித்துள்ளது.

இனவாத அரசியற் சக்திகளின் பயங்கரவாதப் போக்குகளின் மத்தியிலே அரசியலைத் தனியாகவும் போராட்டத்தைத் தனியாகவும் பிரித்துப்பார்க்க முடியாதென்ற விடயத்தை ஆழமாக உணர்ந்துள்ள பிரபாகரன், இப்பொழுது தமிழினத்தின் தலைமைக் குரலாக மாறியுள்ளமை வரலாறாகி விட்டது. இலங்கையின் அரசியலில் தமிழ் மக்களின் போராட்டமே உரிமைப் போராட்டம் என்பதும் இனவாதிகளின் அரசியல் முரண்பாடுகள்தான் பயங்கரவாத நடவடிக்கைகள் என்பதும் வெளிப்படுவதற்குரிய ஆதார சுருதியாக விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளும் தம்பி பிரபாகரனின் பன்முக ஆளுமை நிரம்பிய உள்ளாற்றல்களும் அமைந்து அனைத்துலக சமூகத்தின் கண்களை மெல்லமெல்லத் திறந்துள்ளன.

தமிழ்ச் சமூகத்தின் மத்தியிலே, ஆயுதப்போராட்டம் என்ற மூச்சோடு வெளிப்பட்ட இளைஞர்களுக்குத் தம்பி பிரபாகரன் அளித்த தலைமைத்துவம் இப்பொழுது உலகளாவிய கவனவீர்ப்பைப் பெற்றுள்ளது. விடுதலைப் புலிகளின் உரிமைப் போராட்டம் அரசியற் போராட்டமாக வியாபித்துள்ளமை அமைதிக்காக ஏங்கும் தமிழ் மக்களுக்கான விமோசனப் பெருந்தெருவைச் செப்பனிடத்தொடங்கியுள்ளது.

அழிவுப் போரென முத்திரை குத்தப்பட்ட ஆயுதப் போரை ஆரம்பித்த சிங்கள இனவாதச் சக்திகள் இப்பொழுது தம்முள்தாமே போரிடும் கட்டத்துக்குத் தள்ளப்பட்டுள்ளன. தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் வெறுமனே பூவா தலையா போட்டுப் பார்க்கும் விடயமன்று. இனவாதக் கட்சிகளும் தலைமைகளும் தமிழினத்தின் விடுதலையைக் கசாப்புக்கடை விவகாரமாக்கி விட்டுள்ளமை, சமாதானம் பேசமுற்பட்ட அனைத்துச் சக்திகளையும் தலைகுனிய வைத்துள்ளது.

சமாதானத்தைப் பற்றிப் பேசுபவர்கள் உணர்ச்சியற்ற வறட்டுத் தனங்களின் மத்தியிற் சிக்கியுள்ளனர். இனவாதம் பேசுபவர்கள் கையாலாகாத கசப்புணர்வுகளோடு நாட்டின் எதிர்காலத்தையே விழுங்கும் செயல்களையெல்லாம் தூண்டிவிட்டுள்ளனர். தேசத்தின் முதுகெலும்பையே தகர்க்கும் முயற்சிகள் சகல கோணங்களிலும் வெளிப்படுகின்றன. இவ்வாறான அரசியற் கலாச்சாரத்தின் மத்தியிலே தலைவர் பிரபாகரனின் உறுதியொன்றுதான் தமிழ் மக்கள் மத்தியில் நிம்மதியையும் சுதந்திரத்தையும் தரும் விடயமாகியுள்ளது.

இடைக்கால நிர்வாக அமைப்புக் கோரிக்கையையும் சுதந்திரமான சுயநிர்ணய உரிமை என்ற வரிசையில் வெளிப்பட்ட உணர்வுகளையும் புறங்கையாலே தட்ட முனைபவர்கள், வடக்குக் கிழக்குப் பிராந்தியத்தில் ஓசைப்படாமல் அங்கீகரிக்கப்படாத ஒரு தனிநாடே உருவாகியுள்ளதையிட்டு ஏக்கமடைகின்றனர். பெரும்பான்மையினர், சிறுபான்மையினர் என்ற பிளவுகளைத் தூண்டிவிட்டபடி, இந்த நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் இலங்கையர் என்ற விடயத்தை அங்கீகரிக்க முற்படாது, தொடரும் 'இனவாத நாயோட்ட அரசியலில்' அமைதி, சமாதானம் என்றபடி வெளிப்படும் உச்சாடனங்களின் உள்ளுடனையெல்லாம், சர்வதேச சமூகம் விழுங்கிக் கக்கியபடி பார்த்துக் கொண்டிருக்கின்றது.




யுத்தத்தின் காரணமாக வடகிழக்குப் பிரதேசங்களை நொருங்க வைத்த இராணுவத்தினர் செய்த சர்வநாசங்கள் இன்னும் முடிவில்லாது தொடர்கின்றன. ஈழத் தமிழர்களின் அபாரத் திறமையும் மன வுறுதியும் சாம்பல் மேட்டிலிருந்து புதிய சக்தியாக எழுவதற்கு, விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தலைமையும் தீர்க்க தரிசனமும்தான் மூச்சாக இருந்திருக்கின்றனவென்பதை இப்பொழுது தமிழ் கூறும் நல்லுலகம் உணர்ந்து விட்டது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

டாலோ வீட்டில் தப்ப இயலாது, அதே வேளை போட்டோவை எடுத்தாலோ போலீசில் மாட்ட நேரும், அவருக்கு சங்கடமான நிலை. இரண்டையும் கருத்தில் கொண்டுதான் அந்த அடையாளம் தெரியாத புகைப்படத்தை எடுத்திருந்தார். பின்னர் தேடப்படுவோர் சுவரொட்டியில் அந்தத் தலை முடியை ஒட்ட வெட்டிய புகைப்படத்தையே இராணுவம் போட்டிருந்தது. அந்தப் புகைப்படத்தை வைத்து அவரைப் பிடிக்கவே முடியவில்லை. உண்மையான பிரபாகரனைப் பிடிப்பதற்கு மிகப்பெரிய தடையாக இருந்ததே அந்தப் புகைப்படம் தான்.



இயல்பாகவே கூச்ச சுபாவம், மற்றவர் மீது மரியாதை, எடுத்த காரியத்தை விடாப்பிடியாக நிறைவேற்றும் ஓர்மம் யாவும் அவரிடம் இருந்தன. பழ. நெடுமாறன் அண்ணா வீட்டுக்கு தோழர்களுடன் அடிக்கடி போய் வருவார். அப்போது தன்னை யாரென அடையாளம் காட்ட மாட்டார். தம்பி பிரபாகரனை அழைத்து வாருங்கள் என்று கிட்டுவிடம் பல தடவைகள் நெடுமாறன் அண்ணா கூறியிருக்கிறார். உமாமகேஸ்வரனுடன் பாண்டிபஜாரில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக இவரை பிணையில் எடுக்கச் சென்ற நெடுமாறன் அண்ணா இவரை பார்த்தவுடன் தங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருபவர்தான் பிரபாகரன் என்று அவர் அறிந்து கொண்டார். இது அவருடைய தன்னை அடையாளம் காட்டாத அமைதிப் போக்கிற்கு அடையாளமாகும். பெண்கள் மீதும் பெரியவர்கள் மீதும்

ஆயுதப் போராட்டத் தலைமை என்ற அத்தியாயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தபடி அரசியற் போராட்டத்தை ஆற்றுப் படுத்தும் விடுதலைப் புலிகளும் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும் தமிழினத்தின் எதிர்காலத்தை நெறிப்படுத்தும் சுக்கானாக மாறியுள்ளமை, பேச்சுவார்த்தை சமாதானம் என்றபடி வெளிப்படும் தென்னிலங்கை அரசியற் சக்திகளை இப்பொழுது விழிப்படைய வைத்துள்ளது.

யுத்தத்தையே நடாத்த முடியாது தறிகெட்டுப் போன இலங்கையின் அரசியற் சக்திகள், பேச்சுவார்த்தை, சமாதானம் என்றபடி செயற்பட முற்படும் அர்த்தமற்ற அரசியல் இப்பொழுது இனவாதச் சாயல்களுடன்தான் வெளிப்படுகின்றது.

இலங்கையில் வெளிப்பட்டுள்ள தீவிரவாதப் போக்குடனான விடுதலைப் போராட்டம், சுதந்திரப் போராட்டமே என்ற உண்மையை உலகிற்கு உணர வைக்கும் போராட்டத் தலைவராக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் எழுச்சி பெற்றுள்ளார். இலங்கையில் வெளிப்பட்ட உள்நாட்டு முரண்பாடுகளையும் யுத்தத்தையும் முடிவுக்குக் கொண்டுவரும் தார்மீகக் கடமையிலிருந்து சர்வதேச சமூகமும் இலங்கை அரசியற் சக்திகளும் பிசகினால் அமைதியையும் சமாதானத்தையும் தேடும் பயணம் தொடர்கதையாகத்தான் போய்முடியும்.

போராடும் அமைப்புக்களைச் சேர்ந்த அனைவரும் முழுமையாக ஒன்றுபடாது முட்டாள்தனமான பாதையிற் கால்பதிக்க முற்படுவதைத் தடுக்கும் ஒரேயொரு சக்தியான விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஐம்பதாவது அகவை நிறைவு, புதிய சமாதான எழுச்சிக்கான பாதையை நிமிர வைக்க வேண்டுமென வாழ்த்துவோமாக!




**தமிழீழ தேசியதலைவர் அவர்களால் விரும்பிப்படிக்கப்பட்ட நாவல்களில் ஒன்று...**

சுதந்திரம் விரும்புகிறோம் என்று ஒருபக்கம் கூறிக் கொண்டே மறுபக்கம் போராட்டத்தை வெறுப்பவர்கள் வயலை உழாமலேயே அறுவடை செய்ய விரும்புவர்கள். இடியும் மின்னலும் இல்லாமலேயே மழை பொழிய வேண்டுமென்பவர்கள் கடல் ஆர்ப்பரிக்காமல் இருக்கவேண்டும் என்பவர்கள். கேட்காமல் போராடாமல் ஆட்சியாளர்கள் எதையும் தரமாட்டார்கள். இதுவரையும் அப்படி நடைபெற்றதில்லை. இனி நடக்கப்போவதுமில்லை...

● நாவலிலிருந்து...

தமிழீழ ஆவணச்சுவடிப்பகம்
Tamileelam Archive



தமிழினத்தின் வரலாற்றுப் பரப்புக்கால எல்லை மிக நீண்டது. அதனைத் தோற்றக்காலம், கழகக் காலம், கழகம் மருவிய காலம், பிற்காலம், தற்காலம் என வகைப்படுத்தியுள்ளனர். இந்த வரலாற்றுக் கால எல்லையில் தமிழர்க்கு நேர்ந்திருக்கின்ற நிகழ்வுகள், ஈட்டங்கள் இழப்புக்கள் பற்பல.

# பிரபாகரன் காலம் தந்த கொடை

தமிழர்களின் தோற்றம் வரலாற்றுக் காலத்திற்கும் முந்தியது என அறிஞர் குறிப்பிடுகின்றனர். சேரன், சோழன், பாண்டியன் என்னும் மூவேந்தர் குடியின் வரலாறுகள் கழகக் காலத்திற்கு உட்பட்டவையாகவே காட்டப்படுகின்றன. இந்தக் காலத்திலேயே தமிழினத்தின் ஏற்றங்களும் படிப்படியான தாழ்ச்சிகளும் நிகழ்ந்து விட்டன. கி.மு.10 ஆம் நூற்றாண்டு அளவில் ஆரியர் புகவு தமிழினத்தின் சிதைவுகளுக்கு மூலக்காரணியாக அமைந்துள்ளது.

கழகக் காலத்திற்குப் பிறகு தமிழர்களின் அரிய கருவூலங்கள் படிப்படியாக அழிக்கப்பட்டன, மறைக்கப்பட்டன. பண்பாட்டுச் சிதைவு, மொழிச் சிதைவு ஏற்படுத்தப்பட்டுத் தனித்தன்மை பொருந்திய இறையாண்மையுந் தமிழரிடமிருந்து பறிபோகியது. அனைத்தையும் தமிழன் வந்தேறிகளிடத்தும் இனமாறிகளிடத்தும் இழக்கலானான்.

தமிழ்க்கலை, தமிழிசை, தமிழ்ப்பண்பாடு, தமிழ் மருத்துவம், தமிழ்க் கணக்கியல், கட்டடக்கலை, வானியலறிவு, மண்ணியலறிவு, உளவியலறிவு, தற்காப்புக்கலை முதலானவற்றை இவற்றுள் அடக்கலாம்.



தொடக்கத்தில் இவற்றைக் காத்துவந்த மன்னாதி மன்னரின் கொடிவழியினர் பெண்ணின்ப வேட்கையாலும் தன்னாதிக்க வெறியாலும் இனத்தையும் மொழியையும் மண்ணையும் சீரழிக்க வந்த பகைகளிடத்து நெடுஞ்சாண் கிடையாக விழுந்து மண்டியிட்டு அடிமைப்பட்டுப் போயினர்.

தமிழினம் என்ற ஓர் இனம் இருக்கின்றதா என்று கேள்வி கேட்கும் அளவுக்குத் தமிழினம், தமிழினத்திற்குரிய அடையாளங்களோடு வாழாமற் பிற இனப் பண்பாட்டுத் தாக்கத்திற்கு ஆட்பட்டுத் தன்னை முற்றிலுமாக இழந்து கொண்டிருந்த வேளையில்தான் தென்றிசையில் ஒரு விடிவெள்ளி முளைத்தது.

கி.பி 1027 ஆம் ஆண்டுக் காலக்கட்டத்தில் இராசேந்திரசோழன் பல்லாயிரக் கணக்கான தீவுக் கூட்டங்களையும் தென்கிழக்காசிய நாடுகளையும் தன் கையகப்படுத்தியிருந்தான் என்று வரலாற்றுக் குறிப்புகள் காட்டுகின்றன. இருப்பினும் ஒரு பயனும் இல்லாமல் ஒரு வரலாற்றுப் பதிவாக மட்டுமே அது இருக்கின்றது. இன்று தமிழனுக்கு நாடு இல்லை, உலகின் மூத்த இனம், மூத்த மொழிக்குச் சொந்த இனம் நாடிழந்து நாதியற்றுக் கிடக்கின்றது. நாடு வேண்டுமென்று குரல் கொடுத்த அரசியலார் பலரும் பல்வேறு நயப்புக்களாலும் சூழ்ச்சிகளாலும் அரசியல் விரகுகளாலும் கொண்ட கொள்கைகளையெல்லாம் கைநெகிழ்த்து விட்டனர்.

தமிழினத்தை இன்று அழுத்திக்கொண்டிருக்கின்ற ஆதிக்கம் பெரும் பூதம் போன்றது. அதை எதிர்த்து வெற்றி பெற வேண்டுமெனில் எண்ணிப்பார்க்க முடியாத அளவு தன்னம்பிக்கையும் மனத்துணிவும் தமிழ்த் தலைமுறைக்கு வந்தாகல் வேண்டும்.

> பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
> வெரூஉம் புலிதாக் குறின்

என்கிறார் வள்ளுவர்.

யானை உருவத்தால் மிகப் பெரியது, கூரிய தந்தங்களை உடையது, ஆனால் புலி தாக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நிறைந்த மரியாதை காட்டிப் பழகு வது அவருடைய பொதுவான இயல் பாகும். இத்தனைக்குள்ளும்தான் அவரு டைய வீரமும் ஆளுமையும் மிளிர்ந்தன.



தேசியத்தலைவரின் பெற்றோர்

போராட்டத்திற்கு சமுதாயம் தயா ரில்லாத ஒரு காலத்தில் இவர் போரா டப் புறப்பட்டதால், சமுதாய வீதியில் எனது பெற்றோர்களும் நானும் பட்ட துயரங்கள் இன்று ஆறிவிட்டன. ஆனால் அவை மறக்க முடியாத அனுபவங்க ளாக உள்ளன. இராணுவமும், போலீ சும் என்னை பல தடவைகள் கைது செய்திருக்கிறார்கள். ஓடும் பஸ்சின் பின்புறம் சி.ஐ.டி இருக்கும். பஸ்சால் இறங்கியதும் அழைத்துச் சென்று மாலை வரை தடுத்து வைத்திருப்பார் கள். இதனால் அம்மா ஐயா இருவரும் வயதான காலத்தில் பெரிதும் சிரமப் பட்டார்கள். இரண்டு வீடுகள் இருந் தும் அவர்களால் அங்கு இருக்க முடிய வில்லை. அவர்கள் கொடிகாமம், உடுப் பிட்டி என பல இடங்களிலும் வாட கைக்கு இடம் கேட்டு போனார்கள். அப் போது அங்கும் இன்னாரின் பெற்றோர் என அந்த இடங்களிலும் இருக்க அனு மதிக்கவில்லை. கடைசியாக அவர்கள் பொலிகண்டி கந்தவன மடத்தில் இருந் தார்கள். அதையும் யாரோ சொல்லிக் கொடுக்க, நிர்வாகிகள் இங்கே இருக் காதீர்கள், நீங்கள் இருப்பதால் போலீஸ் இங்கும் வரப்போகிறது என்று கூறிவிட் டார்கள். இப்படியான சூழ்நிலையில் 1984ம் ஆண்டு இந்தியா சென்றனர். அங்கும் ஏற்பட்ட அரசியல் பிரச்சினை கள் காரணமாக இந்தியாவிலும் இருக்க முடியாமல் தற்போது ஊருக்கு திரும்பி விட்டனர்.

கினால் அது பயந்து ஓடும். எனவே வலிமையான ஒன்றை எதிர்க்க வேண்டுமெனிற் புலியைப் போன்ற துணிச்சல் வேண்டும் என்கிறார் வள்ளுவர்.

'உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்ச மில்லை, அச்சமில்லை' என்கிறான் பாரதி.

அத்தகு துணிச்சல் தமிழனுக்கு வந்தாக வேண்டும். ஆனால் தமிழனின் நிலைமையோ பன்னூறு ஆண்டுகளாக அடிமைப்பட்டு, அடிமைப்பட்டு மரபணு அடிப்படையிற் கோழை மைத தன்மையதாக மாறி இருக்கிறது.

அஞ்சி நடுங்குவது, தனக்குள்ளே அடித்துக் கொள்வது, தன் பெருமை போற்றாமல் மாற்றான் பெருமை போற்றுவது இதுதான் தமிழனின் தற்கால நிலைமை. இவற்றை மாற்றி யமைக்க வேண்டுமானால் தமிழனுக்கு மரபணு மாற்றஞ் செய்யப்பெறுதல் வேண்டும். இத்தகு மரபணு மாற்றத்தைத் தமிழீழத் தமிழனுக்குச் செய்தவர் தான் மேதகு தலைவர் பிரபாகரன் அவர்கள்.

அஞ்சி அஞ்சிச் சாகும் நிலை மாறித் திரும்பி எதிர்க்கும் மன வலிமையையும் வல்லமையையும் தந்த விடுதலைத் தந்தைதான் பிரபாகரன். நான் தலைவர் பிரபாகரனைத் தமிழினத்தின் ஒட்டுமொத்த விடுதலைத் தந்தையாகப் பார்க்கிறேன்.

இன்று தமிழினத்தை அடிமை கொண்டிருக்கும் வல்லா ண்மைகளை எதிர்த்து வெருட்ட வேண்டுமானால்,

1. ஆத வலிமை (ஆத்ம பலம்) பெற்றிருக்க வேண்டும்.
2. நுணுகிய போர்த்திறம் பெற்றிருக்க வேண்டும்.
3. சூழ்ச்சிகளை வெல்லும் நுண்ணறிவு பெற்றிருக்க வேண்டும்.
4. எதிர்ச் சூழல்களுக்குட் சிக்காமல் அவற்றைத் தகர்த்தெறிந்து ஏற்புடைய சூழல்களை உருவாக்க வேண்டும்.
5. நிறைந்த அரசியல் அறிவு பெற்றிருக்க வேண்டும்.
6. அடிப்படையில் தமிழ்த் தேசிய உணர்வு பெற்றிருக்க வேண்டும்.
7. எந்தப் புகழ், ஆசை வலைக்குள்ளும் சிக்காமல் தன்னிலும் மேலான மொழியையும் இனத்தையும் நாட்டையும் நேசிக்க வேண்டும்.
8. உணர்ச்சிகளுக்கு ஆட்படாமல் ஆழ்ந்த தண்ணறிவு (நிதானம்) பெற்றிருக்க வேண்டும்.
9. அறத்தின் பால் நிற்பதோடு, விருப்பு வெறுப்பு அற்றிருக்க வேண்டும்.
10. எந்த வேளையிலும் விழிப்பாக இருக்க வேண்டும்.
11. எவரிடத்தும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

இவற்றை ஒருங்கே ஒட்டுமொத்தமாகக் கொண்டிருக்கும் தனிப்பெருந் தலைவர்தான் பிரபாகரன்.

இந்திய உளவுப்படைத் தலைவரிடம் பிரபாகரன் கூறிய கருத்துக்களே இதற்கு ஏற்புடைய சான்றாகும். "நீங்கள் பலரையும் வென்றிருக்கலாம், அடிமைப்படுத்தியிருக்கலாம். ஆனால் என்னிடம் நான் தோற்கப் போகிறீர்கள். ஏனெனில் நான் உயிரின் மீது ஆசை இல்லாதவன். சொத்துச் சுகங்களின்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamil Eelam Archive

மீது ஆசை இல்லாதவன். எவனுக்கு உயிரின் மீது ஆசை இருக்கிறதோ சொத்துச் சுகங்களின் மீது ஆசை இருக்கிறதோ அவன் மற்றவர்களுக்கு விலை போவான். மற்றவர்களால் விலைக்கு வாங்கப்படுவான், என்று கூறியதோடல்லாமற் சொல்லியபடியே இந்தியப் படையைப் பின்னங்கால் பிட்டத்தில் இடிபடத் தோற்று ஓடச் செய்தார்.

இயக்கத்தின் மீதும் தமிழ் மண்ணின் மீதும் தமிழீழ மக்களின் மீதும் அவர் கொண்டிருந்த பற்று அளப்பரியது. தமிழ் மக்களின் உரிமையை மீட்டெடுத்துத் தமிழீழ மண்ணை விடுதலை பெற்ற மண்ணாக விடுவிப்பதே அவரின் உயிர்க்கொள்கை. இந்தக் கொள்கைக்கு முரணான எந்தச் சூழலையும் அவர் ஏற்றதில்லை.

இந்தியப்படை தமிழீழ மண்ணை வலிந்து பிடித்து இறுகல் நிலையை ஏற்படுத்திய காலத்தில் இச்சூழலைத் தவிர்க்க வேண்டும் என்பதற்காகக் கருவிகளை ஒப்படைத்து விடலாம் என்று பொறுப்பாளர் ஒருவர் கருத்துக் கூறியிருக்கிறார். 'போராட்டத்தை நிறுத்திக் கருவிகளை ஒப்படைத்து விட்டால் தமிழ் மக்களின் உரிமைகள் என்னாவது' என்று தலைவர் கேட்க, 'அதனை இந்தியா பார்த்துக் கொள்ளுமாம்' என்று பொறுப்பாளர் விடையிறுத்திருக்கிறார். இதனைக் கேட்ட தலைவர் 'நான் இறந்த பின் இந்த இயக்கத்தைச் சில்லறையாகவோ ஒட்டுமொத்தமாகவோ விலைபேசி விற்றுவிடுங்கள்' என்று கடிந்து இம்மியளவு கூடக் கொள்கை பிறழா மன உறுதியை வெளிப்படுத்தி இருக்கிறார்.


**இரா.திருமாவளவன்**

எழுத்தாளர்,
உதவி ஆசிரியர்,
செம்பருத்தி,
மலேசியா.


சூரியக்கதிர் நடவடிக்கையின் போது தலைவர் எடுத்த முடிவு மிகச் சிறப்புக்குரியது. காலத்தை எண்ணிப் பார்த்ததும் எதிரிகளின் முகத்திற் கரியைப் பூசியதும் உலகத்தையே வியக்க வைத்தன. எதிரி எதிர்பார்க்காத தாக்குதலை எதிர்பாராத நேரத்திற் தந்துவிடு என்பது பிரபாகரனால் வழங்கப்பட்ட போர் உத்தி.

அன்று புலிகளை இழிவுபடுத்திப் பேசிய மேதாவிகளெல்லாம் இன்று மூச்சுப் பேச்சில்லாமல் இருக்கின்றனர். தொடர்ந்தாற் போல, ஓயாத அலைகள்-1, ஓயாத அலைகள்-2, ஓயாத அலைகள்-3 தலைவர் பிரபாகரனின் மிக நுட்பமான போர்த்திறத்தை உலகுக்கு வெளிக்காட்டி உலகத் தமிழரின் தலைகளை நிமிர்த்தியவை. கருவி ஏந்திய போரில் மட்டுமன்றி அறிவாண்மையைப் பயன்படுத்தும் அரசியற் போரிலும் தலைவர் மன்னாதி மன்னரையெல்லாம் நிலைகுலையச் செய்து வருகின்றார்.

2003 ஆம் ஆண்டு அவரைப் பார்த்து உரையாடும் வாய்ப்பு எமக்குக் கிட்டியது. அவரின் உள்ள வேட்கையினை நேரடியாகவே கேட்டு உரையாடினேன். அவரோடு உரையாடிய போது கூறிய கருத்துக்களிற் சில, "நான் ஏன் இந்தப் படையுடையை உடுத்திக் கொண்டு இங்கு வந்திருக்கிறேன் தெரியுமா? உலகத்தில் எல்லாத் தமிழரும் எல்லா உடைகளையும் அணிந்திருக்கின்றனர். அவர்கள் அணியத் துணியாதது இந்த உடைதான். அதனால் தான் நான் அணிந்திருக்கிறேன்.

மலேசியத் தமிழர்கள் ஒற்றுமையோடு இருக்க வேண்டும். வலிமையோடு இருக்க வேண்டும். சிறுசிறு பொருளியற் கூட்டுறவுத் திட்டங்களின் வழி தங்கள் பொருளியல் வலுவைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். தமிழ்த் தேசிய உணர்வோடு வாழ வேண்டும்.

ஆரியர்கள் தமிழர்களை அரக்கர்கள் என்றும் அசுரர்கள் என்றும் பழித்து எழுதியிருக்கின்றனர். புராணத்தில் அசுரர்களைக் கருப்பர்களாகவும் தடித்த மீசை உடையவர்களாகவும் காட்டியுள்ளனர். யார் அப்படி



இருக்கிறார்கள். நாம் தானே. தமிழர் கொண்டாட வேண்டிய விழா பொங்கலே. இவ்வாறு பல அரிய செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தார். அவரைச் சந்தித்து உரையாடிய அந்த வாய்ப்பினை என் வாழ்நாளிற் கிடைத்தற்கரிய பேறாக நான் கருதுகின்றேன்.

அவருடைய பேச்சும் குரலும் மென்மையானவையாகவும் அன்புமயப்பட்டவையாகவும் இருந்தன. கைகள் மென்மையாகப் பூப்போன்றிருந்தன. ஆனால் அவருடைய உள்ளமும் உணர்வும் அசைக்க முடியாத உறுதி வாய்ந்திருந்தன. அவரின் விழிகள் ஒளியுமிழ்கின்றனவாகவும் கூரியனவாகவும் இருந்தன. தமிழனுக்குக் கிடைத்த அத்தவமகனைச் சந்தித்து உரையாடியது கழிபேருவகையையும் பெருமையினையும் எனக்களித்தது. அவர் காலத்தால்தமிழருக்கு அளிக்கப்பட்ட தனிப்பெருங்கொடை. அப்பெருங்கொடையை உலகத் தமிழினம் கண்ணேபோற் பொன்னேபோற் போற்றிப் பாதுகாக்கவேண்டும். புலிகளின் வேட்கையினை வெற்றி பெறச்செய்ய அனைத்தாலும் உதவவேண்டும்.

'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்'

**மாவீரர்கள்** ● விடுதலை என்பது ஒரு அக்கினிப் பிரவேசம்;
நெருப்பு நதிகளை நீந்திக் கடக்கும் நீண்ட பயணம்; தியாகத்தின் தீயில் குளிக்கும் யாகம்; இந்த விடுதலை வேள்விக்கு தமது உயிரை தியாகம் செய்தவர்கள் மாவீரர்கள்.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



A Personal View On The Tamil Struggle

# Tamil Eelam And Theology Of Liberation

With my congratulations to the 50th birthday of Tamil Eelam leader Velupillai Praba karan, I like to give my personal experience with the Tamil liberation struggle.

After my ordination I was appointed a fellow priest at Krefeld, a city in the south of Ruhrgebiet, the most populated area in Germany. It was the time when hundreds of Tamils fled to Germany every month because of the genocidal aattacks perpetrated by the Sri Lankan armed forces on the innocent Tamil people. This exodus to Europe and Germany began after the horrible days of the "Black July" in 1983.

During those days I had only little knowledge of the happenings in Sri Lanka. During my school days, I still remember how Sri Lanka was hailed as a God's Paradise.

I met a Tamil boy for the first time in front of the church where I was a fellow-priest. With his hands and feet he tried to explain that he was looking for a Hindu temple. He gave me his address. It was a dirty house situated outside the city, in which more than 300 young Tamils were living at the time. I went to see him at his residence. That was my first contact with south Asians and especially with Tamils. I was invited to drink tea with milk or plain tea. Although we could not speak the same language, we conversed a lot

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

of things to each other by way of gestures, eye contacts and facial expressions, intermittently fortified with silence. Later I started visiting them quite often. For days, weeks and months I tried to understand the sad tales of those young men. Listening to their ordeals of oppressions, tortures and the killings of the members of their family. was a blood-curdling experience for me. I saw films in which the consequences of destructions and killings were shown. All these were perpetrated on them for the sole reason that they were Tamils. Gradually I began to understand the actual happenings in that country and the sufferings of the people. I

*The LTTE was pushed to this inevitable state of fighting only to regain their lost rights. Today they are fighting to end the violence perpetrated on their people by the Sinhala armed forces.*



learned about the history of the island before and after colonialisation. I noticed the growing up of Sinhala racism, the religious and racist idea of Sri Lanka as a Sinhala Buddhist country. When they got the news that their fathers or mothers or siblings were killed by bombings or shellings. I was silently listening to their predicaments. I had a little knowledge from my parents about the calamities caused by bombings during the Second World War in Germany.

More and more of the attacks on churches, temples, hospitals and schools were conveyed to us when I was in Germany.The memory of those incidents gave me an insight to understand many more things pertaining to the Tamils, including their love for their motherland, their silent sorrows and their loneliness.

The official view of the German policy makers is quite different from the actual happenings in Sri lanka.According to them the Sri Lankan army is only involved in counter-attacks against the terrorist attacks of the LTTE. In many discussions in which I later participated in the German foreign ministry, for example with G. G. Ponnabalam in 1996, they were upholding the same point of view. Some Tamil people may have had some difficulties in the past with LTTE. But I am made to understand that the Western countries supported the respective governments of the states and not the liberation movements, either in South-Asia or in Latin-America or in Africa.

Although the Tamils were accepted ("geduldet") as victims of ethnic riots promoted and perpetrated by the Sri Lankan government and the army, most of the Tamil people in Germany lived in insecurity. They had no rights in Germany except earning an income that would help them to lead a hand to mouth existence. By the end of the 1980 came a final decision from the German Supreme Court decreeing that victims of ethnic suppression can be accepted as victims of 'civil war'. From then, that is from August 1991 Tamils were accepted as victims of civil war and were allowed to be integrated into the German society. And officially the Sri Lankan situation was seen as civil war by the Germans.

The concerted endeavours of the foundation of Tamil communities paved way for the Tamil population in Germany to live a life embracing their own culture under the prevailing social conditions of the German society.

When Crandrika Kumaratunge came to power in the early 1995, I remember how a lot of Tamils were planning to go back to their motherland. But the atrocities perpetrated by the armed forces against the innocent Tamil people became worser than ever before during her regime and that resulted in the exodus of the people of Yarlpaanam. I was perplexed by the way Chandrika reacted to the I.C.R.C. when they spoke about



தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

## A Personal View On The Tamil Struggle

Fr. Albert Koolin

Professor,
Analyst
Human -
Sociology,
Reverend,
Germany.



the bombing of St Peter's church in Navaly. From 1996 the asylum seekers encountered many embarrasing difficulties at the hands of the German authorities. Outwardly Chandrika Kumaratunge poses herself as a real peace maker but her ulterior motives are many, which will be redundant to mention in this short article. After the signing of the Memorandum Of Understanding in February 2002 the attitude of the German authorities effected a change, and for the Tamils living in Germany it became nearly impossible for them to gain refugee status.This is why Tamils living in Germany are given different types of visas. Some have German citizenships and some have permanent residence visas. Yet there are a lot of people living in Germany for many years who are in permanent danger of being deported to Sri Lanka at any time without any warning.

In 2002, for the first time , I went to the North of Sri Lanka. When I was in Jaffna I saw the devastated houses and ruined buildings, temples, churches, schools, markets and what not. There were army check points everywhere. I

visited Chavakachcheri, the most ruined town , Chemmani, the infamous mass graveyard where hundreds of Tamil youths, who were unofficially declared missing, were linched and buried. I saw millions of felled palmyrah trees. As I wanted to have a first hand knowledge of the liberation struggle, I went to Kilinochchi passing Elephant Pass. I was invited to visit a rehabilitation centre for the wounded cadres of the L.T.T.E. After a brief exchange of polite introductions, they discussed with me all the aspects involved in a freedom struggle. My knowledge of Catholic theology gave me an insight into the Latin- American approach to theology. It says that the essential meaning of the Gospel is to announce to the Kingdom of God about the oppressed and the poor. This is the quintessence of Jesus' Gospel ( Le 4, 16 s). It means that we, the Christians, have to first listen to the cry of the oppressed and find out the cause of their cry and the history of their oppression. This is the bibilical story of the oppressed Israelians in Egypt.

Then we have to regard the ethnic, social or political structure which led the people to this



state of crying for liberation. We must analyse and find out the reason for such a situation of oppression to arise. The blaming of the prophets and the speeches of Jesus against established religious system in Palestine must be considered. And as a last step we have to ask one another rather seriously as to what we, as Christians, can do to help liberation. How is it possible to fight to eliminate the situation that led to oppression? For this, it is necessary to look into the specific historical situation of the oppressed people. What were their possibilities in the past? What can they do now ? This is the beginning of the Kingdom of God. What Jesus says in the Gospel of Luc. "The Kingdom of God is within you" (le 17, 21).

These three steps; **to see** , **to judge** and **to act** are the essentials of the so called Theology of liberation.

During our discussions they had two questions to ask me. One question was about violence and the other was, as to why I could not speak Tamil although I have had lived with Tamils for quite a long time. Jesus has a praise for non-

தமிழ் ஆவணகாப்பகம் • Tamil Archive

violent people. And there was also the question of how peace and reconciliation can be started again after the war.

But in the concrete historical situations no answer is possible. All attempts to work out a peaceful solution by way of political negotiation with the Sinhala majority since independence in 1948 have proved futile. So the LTTE was pushed to this inevitable state of fighting only to regain their lost rights. Today they are fighting to end the violence perpetrated on their people by the Sinhala armed forces. One of the essentials of theology of liberation can be understood only from within. Anyone who is ignorant of the history of the oppressed cannot pass judgement on this question.

From my understanding of the liberation struggle of the Tamil, I said that the struggle started by Velupillai Prabakaran and the LTTE was a historical answer to the Sri Lankan situation.My hope is that, at the end and in the long run this struggle will finally liberate and bring peace for the Tamil people. The next question asked in Vanni was the question of solidarity. The wounded Tigers understood very clearly that to speak the same language is an important sign of being together. In the Theology of Liberation it is important for the Christian to be or to become more or less a part of the oppressed.

But I'm not a Tamil. I'm a German, a member of the first rich world, a member of a culture, which is guilty of oppressing peoples and countries during the colonization and by "monetary exploitation" till today. I will not make an artifical solidarity.

I will stand for the Tamil struggle in my own country. I'm writing this article for the 50th birthday of Velupllai Prabakaran, who is the leader of the Tamils. I have never met him. He is not only a symbol of liberation but also something more. He is the symbol of the never defeated Tamil people. He is also in reality never defeated.

He is the leader of a people who are always self-confident. After hundreds of years of living under oppression, it is a very new experience trying to live with self-confident.

Velupillai Prabakaran gave the Tamils their self-confidence back. It is the duty of every Tamil to re-invent it within himself or herself.

## பிரபாகரனும் 'மலேசிய நண்பனும்'

'அண்ணா, எங்களுடைய நாட்டிலுள்ள தமிழ் பேசுகிற, படிக்கிற மக்களுக்கு, அதாவது மலேசிய நண்பன் வாசகர்கள் உட்பட பலரும் உங்களிடம் சிறப்பான செய்தியொன்றை எதிர்பார்க்கிறார்கள். எனக்குச் சிறப்புச் செய்தி ஒன்றைத் தரமுடியுமா?' எனது கோரிக்கைக்குப் பதில் அளிக்கும் முன்பு கொஞ்சம் நிதானித்தார்.

'எனது கருத்தால் எதுவும் சிக்கல் வந்துவிடாதா?'

'வந்துவிடாது. வராமல் பார்த்துக்கொள்கிறேன் அண்ணாச்சி.' என்றபோது மீண்டும் மாநாட்டு அறையில் சிரிப்பொலி.

வெகுநேரம் யோசித்தார். அவருக்கு நேராக அவரையே பார்த்தவண்ணம் காத்திருந்தேன். அறை முழுவதும் ஒட்டு மொத்த நிசப்தம், தொடர்ந்து யோசித்தார். கிட்டத்தட்ட நிமிட நேரம் தாண்டியிருக்கும். அவர் யோசிக்கக் காரணம் உண்டு. ஏதாவது சொல்லப்போய் பல இன மக்கள் வாழ்கிற நாட்டில் தம்முடைய கருத்து முரணாக -சங்கடமாக அமைந்துவிடக் கூடாதே என்கிற முன்னெச்சரிக்கை உணர்வினால் வந்த நிதானம் அது. பிரபாகரன் இப்போது ஒரு போராளி மட்டுமல்ல. அரசியலையும் மதிநுட்பத்தோடு கையாழுபவராக மாறியிருக்கிறார்.

'மலேசியாவிலும், உலகளாவிய நிலையிலும் எங்கு வாழ்ந்தாலும் தமிழ் பேசுகிற மக்கள் தங்களின் தனித்துவ அடையாளத்தை நிலைப்படுத்திக் கொள்ள வேண்டுமானால், இன்றைக்குக் கல்வியிலும் பொருளாதாரத்திலும் மிகுந்த அக்கறை செலுத்தவேண்டும். இவை இரண்டும் தமிழ்ச் சமுதாயத்தின் மிகுந்த எழுச்சியோடு வளர்ச்சிகாண அடிப்படையாக விளங்கும் நமது கலை, பண்பாடு, மொழி, இனம் என்ற தனித்துவ அடையாளத்திற்கு அடித்தளம் போட்டுத் தரும். இதன் மூலம் மலேசியாவில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.'

மிகச் சுருக்கமான தமது சிறப்புச் செய்தியை முடித்துக்கொண்ட பிரபாகரன், 'இதுபோதுமென்று நினைக்கிறேன். எந்தச் சிக்கலும் இருக்காது' என்று குறிப்பிட்டு என் முதுகில் தட்டிக்கொடுத்தார். இன்றைக்கு மலேசிய இந்தியர்களுக்கு எது தேவை என்பதில் எமது தலைவர்கள் நினைப்பதைப்போல், பிரபாகரனும் சிந்திக்கிறாரே என்ற வியப்பு எனக்குள் விரவியது.

உலகின் உக்கிரமான தலைமறைவுப் படையின் தலைவர் என்று கருதப்பட்டாலும் பிரபாகரன் என்கிற அந்தப் போராளிக்குள் அன்பு பாராட்டுதல், அரவணைத்துப் பேசுதல் போன்ற அந்தக் குணங்கள் அப்படியே நிலைபெற்றிருப்பதை என்னால் உணர முடிந்தது. அவரிடம் மட்டுமல்ல அவருடைய தம்பிமார்களிடமும்தான்.

2002



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



**தமிழர் போராட்டம் பற்றிய ஒரு தனிப்பட்ட நோக்கு**

# தமிழீழமும், விடுதலை பற்றிய இறையியலும்

தமிழ்த் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடைய 50வது பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு, தமிழரது விடுதலைப் போராட்டம் பற்றிய எனது தனிப்பட்ட அனுபவத்தையும் எழுத விரும்புகின்றேன்.

எனது பதவியளிப்புக்குப் பின்னர் Ruhrgebiet ன் தெற்கிலமைந்துள்ள கிறேபெல்டு என்ற நகரில் ஒரு திருச்சபைச் சமயத்துணைக் குருவாக நியமிக்கப்பட்டேன். அப்பாவித் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட இனப்படுகொலைகள் காரணமாக ஒவ்வொருமாதமும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் தங்கள் நாட்டை விட்டு ஜெர்மனிக்கு வந்த காலமது. 1983ம் ஆண்டில் நடைபெற்ற கறுப்பு யூலையின் பயங்கர நாட்களுக்குப் பின்னர் பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் ஐரோப்பாவுக்கும் ஜேர்மனிக்கும் இடம்பெயர்ந்தார்கள். இலங்கையில் நடைபெற்றுக்கொண்டிருந்த அனர்த்தங்கள் பற்றி அந்நாட்களில் நான் மிகவும் கொஞ்சமே அறிந்திருந்தேன். எனது பள்ளி நாட்களில் சிறீலங்கா எப்படி இறைவனின் சுவர்க்கமாகப் போற்றப்பட்டது என்பதை நான் இன்னும் நினைவில் வைத்திருக்கிறேன். நான் குருவாகக் கடமையாற்றிய ஆலயத்திற்கு முன்னால் நான் ஒரு தமிழ் வாலிபனைச் சந்தித்தேன். தான் ஓர் இந்துக் கோவிலைத் தேடுவதாக, அவன் தனது கைகளாலும் கால்களாலும் எனக்கு விளக்கினான். அவன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## தமிழர் போராட்டம் பற்றிய
# ஒரு தனிப்பட்ட நோக்கு




**கலாநிதி அருட்திரு. அல்பேட் கூலன்**

மானுட, சமூகவியல் ஆய்வாளர், ஜேர்மனி.


என்னிடம் தனது விலாசத்தைத் தந்தான். புறநகர்ப்பகுதியில் அமைந்திருந்தது அவனது சுத்த மில்லாத விடுதி. நான் சென்ற வேளை அவ்விடுதியில் 300 க்கும் அதிகமான இளந்தமிழர்கள் வசித்து வந்தார்கள். நான் அவனைப் பார்ப்பதற்கு அவனது விடுதிக்குச் சென்றேன். தென் ஆசியர்களுடன், குறிப்பாகத் தமிழர்களுடன் எனக்கேற்பட்ட முதல் சந்திப்பாக அது அமைந்திருந்தது. நான் வெறும் தேனீரோ, பால் கலந்த தேனீரோ அருந்த வரும்படி அழைக்கப்பட்டேன். எங்களால் ஒரே மொழியில் பேச முடியவில்லையெனினும் நாங்கள் எங்களது சைகைகளாலும், கண்களாலும், முகபாவனைகளாலும், மொழியில்லா வெறுமையினால் எம்முள் முகாமிட்டிருந்த மௌனங்களாலும் நாம் குறைவில்லாமல் நிறையவே பேசினோம் என்று சொல்லலாம். அதன் பின்னர் அவர்களை நான் அடிக்கடி சென்று பார்த்தேன். நாட்கணக்காக, வாரக்கணக்காக, மாதக்கணக்காக அந்த வாலிபர்களின் சோகந்தோய்ந்த கதைகளைப் புரிந்துகொள்ள முயன்றேன். அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒடுக்குமுறை, சித்திரவதை, குடும்ப அங்கத்தவர்களின் கொலைகள் என்ற வகையில் அவர்கள் அனுபவித்த சோதனைகளைக் கேட்பது எனக்கு விறைக்க வைக்கும் அனுபவமாக அமைந்தது. அழிவுகளையும் கொலைகளையும் சித்தரிக்கும் திரைப்படங்களைப் பார்த்தேன். அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காகவே அவர்கள் மீது இக் குற்றங்கள் செய்யப்பட்டன. அந்நாட்டில் நடைபெற்ற-நடைபெற்றுக்கொண்டிருக்கும் சம்பவங்களையும் அதனால் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களையும் நான் படிப்படியாகப் புரிந்து கொள்ளத் தொடங்கினேன். குடியேற்றத்திற்கு முன்னரும் பின்னருமான இலங்கையின் சரித்திரத்தைப் பற்றி படித்தேன். சிங்கள தேசிய வாதத்தின் வளர்ச்சி பற்றியும், சிறீலங்காவை ஒரு சிங்கள பௌத்த நாடாக மாற்ற விரும்பும் அதி தீவிர தேசியவாதம் பற்றியும் நான் தெரிந்துகொண்டேன். எனது தமிழ் வாலிப நண்பர்களுக்கு அவர்களது தந்தைமார்களோ, தாய்மார்களோ, உடன் பிறப்புக்களோ குண்டுவீச்சுக்களாலோ எறிகணை வீச்சுக்களாலோ கொல்லப்பட்ட செய்திகள் அவர்களுக்குக் கிடைத்த போதெல்லாம் நான் அவர்களது பிரச்சினைகளை அமைதியாகக் கேட்பதுண்டு. இரண்டாம் உலக மகாயுத்தத்தின்போது ஜெர்மனியில் குண்டு வீச்சுக்களால் ஏற்பட்ட அழிவுகள் பற்றி எனது பெற்றோர் கூறக்கேட்டிருக்



கின்றேன். ஜெர்மனியில் நான் இருந்த வேளைகளில், அவர்களது தாயகத்திலுள்ள கோயில்கள், ஆலயங்கள், மருத்துவ மனைகள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் பற்றியும் சேதங்கள் பற்றியும் செய்திகளாக எங்களுக்குச் சொல்லப்பட்டன. அந்தச் சம்பவங்கள் பற்றி நான் ஏற்கெனவே பெற்றிருந்த ஆழ்ந்து காணும் அறிவு, அவர்கள் கொண்டுள்ள நாட்டுப்பற்று, அவர்களது துயரங்களை, தனிமை போன்றவற்றையும் புரிந்துகொள்ள உதவியது. சிறீலங்காவில் உண்மையாக நடைபெறும் நிகழ்வுகளிலிருந்து வித்தியாசமான நோக்கையே ஜெர்மன் அரசு கொண்டிருந்தது. அவர்களைப் பொறுத்தமட்டில், சிறீலங்கா இராணுவம், தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கர வாதத் தாக்குதல்களை முறியடிக்கும் தாக்குதல்களிலேயே ஈடுபட்டுள்ளது. நான் பங்குகொண்ட பல கலந்துரையாடல்களில் அவர்கள் அந்த நிலைப்பாட்டையே நிலை நிறுத்தினர். விடுதலைப் புலிகளுடன் சில தமிழர்களுக்கு முன்னர் கஷ்டங்கள் இருந்திருக்க

Tamileelam Archive

லாம். ஆனால் தெற்காசியாவிலோ, லத்தின் அமெரிக்காவிலோ, ஆபிரிக்காவிலோ நடைபெறும் விடுதலைப் போராட்டங்களைப் பொறுத்தமட்டில், மேற்கத்தைய நாடுகள், விடுதலை இயக்கங்களை ஆதரிக்காமல் அந்தந்த அரசாங்கங்களையே ஆதரிக்கின்றன என்று எனக்கு உணர்த்தப்பட்டது. தமிழர்கள், சிறீலங்கா அரசாலும் இராணுவத்தாலும் தூண்டப்பட்ட இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதை ஏற்றுக்கொண்டாலும், ஜெர்மனியில் வாழும் தமிழர்களில் பெரும் எண்ணிக்கையானோர் பாதுகாப்பில்லாமலேயே வாழ்கிறார்கள். அன்றாட வாழ்க்கைக்கான உழைப்பைப் பெறுவதைத் தவிர வேறு எந்த உரிமையும் அவர்களுக்கு ஜேர்மனியில் கிடையாது. 1980 ஆண்டுக் கடைசியில் ஜேர்மன் உயர் நீதிமன்றம், இன ஒடுக்கலால் பாதிக்கப்பட்டவர்களை உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டவர்கள் என ஏற்கலாமெனத் தீர்ப்பளித்தது. அதன்படி அவர்கள் ஜெர்மன் சமூகத்துடன் ஒன்றிணைய அனுமதிக்கப்பட்டனர். எனினும் சிறீலங்காவில் போர் நிலையை உள்நாட்டுப் போராகவே ஜெர்மன் அரசு பார்க்கிறது.

தமிழ் இனத்தவர்களது ஒன்றிணைந்த முயற்சிகளால் இன்று அவர்கள், அங்கு நிலவும் ஜேர்மன் சமூக அமைப்புக்கு இயைபாகத் தங்கள் பண்பாடுகளையும் கலாச்சாரத்தையும் தழுவிய வாழ்க்கையை வாழ்கிறார்கள்.

1995 ஆண்டுத் தொடக்கத்தில் சந்திரிக்கா குமாரதுங்கா பதவிக்கு வந்தபோது, பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் எப்படித்தங்கள் தாய் நாட்டிற்குப் போவதற்குத் திட்டமிட்டார்கள் என்பதை என்னால் ஞாபகப்படுத்த முடிகிறது. ஆனால் தமிழர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அட்டூழியங்கள் முன்னவையை விடக்கூடுதலாக இருந்தன. இதன் விளைவாகவே ஒட்டு மொத்தத் தமிழர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்தனர். நவாலி சென். பீட்டர் ஆலயத்தின் மீதான குண்டு தாக்குதல் சம்பவத்தைப் பற்றிச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பேசியபோது சந்திரிக்கா அதற்கு எதிராகப் பேசிய விதத்தைக் கண்டு நான் திகைத்தேன். வெளித்தோற்றத்தில் சந்திரிக்கா குமாரதுங்கா தன்னை ஒரு சமாதான விரும்பியாகக் காட்டிக்கொள்கின்றார். அவ்வளவுதான், ஆனால் அவரது உள்ளார்ந்த நோக்கங்களை இச்சிறிய கட்டுரையில் வெளிப்படுத்துவது சாத்தியமில்லை என்பதால் விட்டுவிடுகிறேன்.

> கிறிஸ்தவர்களாகிய நாங்கள் முதலில் ஒடுக்கப்பட்டவர்களின் அவலக்குரலைக் கேட்கவேண்டும். பின்னர் அவர்களின் அவலத்திற்கான காரணத்தையும் அதற்குப் பின்னர் அவர்களின் ஒடுக்குமுறைபற்றிய சரித்திரத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும்.

2002ம் ஆண்டு மாசி மாதம் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் ஜெர்மன் அதிகாரிகளினது மனப்பான்மையில் மாற்றம் ஏற்பட்டது. இதனால் ஜெர்மனியில் வாழும் தமிழர்களுக்கு அகதி அந்தஸ்த்து பெறுவது மிகவும் கடினமானது. இதனாலேயே ஜெர்மனியில் வாழும் தமிழர்களுக்கு வித்தியாசமான வதிவிட அனுமதிகள் கொடுக்கப்படுகின்றன. சிலருக்கு ஜெர்மன் பிரஜா உரிமைகளும் சிலருக்கு நிரந்தர விதிவிட அனுமதிகளும் கொடுக்கப்பட்டுள்ளன. அதே வேளை, பல ஆண்டுகளாக ஜேர்மனியில் வாழ்ந்து வரும் தமிழ் மக்கள் எந்நேரமும் சிறீலங்காவிற்கு நாடு கடத்தப்படலாம் என்ற அபாயத்தை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்.



2002ம் ஆண்டு நான் முதன் முதலாக வட சிறீலங்காவிற்குப் போனேன். நான் யாழ்ப்பாணத்தில் இருந்தபோது குண்டு வீச்சுக்களினால் அழிக்கப்பட்ட வீடுகளையும், சீரழிக்கப்பட்ட கட்டிடங்களையும், கோயில்களையும், ஆலயங்களையும், பள்ளிக்கூடங்களையும் வேறு பலவற்றையும் நேரில் கண்டேன். அங்கே எல்லா இடங்களிலும் இராணுவச் சோதனைச்

தமிழ் ஆவணக் காப்பகம் Tamil Archive

சாவடிகள் காணப்பட்டன. நான் சாவகச்சேரிக்குச் சென்றேன். மிகவும் மோசமாக அழிக்கப்பட்ட நகரம் இதுவே. உத்தியோகப் பற்றற்ற முறையில் காணாமற் போனோர் என அறிவிக்கப்பட்டவர்கள் மூர்க்கத்தனமான முறையில் கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்ட செம்மணி புதைகுழிகளைப் பார்த்தேன். வெட்டி வீழ்த்தப்பட்ட பல இலட்சக் கணக்கான பனை மரங்களைக் கண்டேன். ஆனையிறவைத் தாண்டிக் கிளிநொச்சிக்குப் போனேன். காயமுற்ற புலிப்போராளிகளுக்கான மறுவாழ்வு மையத்திற்கு வரும்படி அழைக்கப்பட்டேன். அங்கே சம்பிரதாய பூர்வமான அறிமுகங்களுக்குப் பின்னர், நாங்கள் ஒரு சுதந்திரப் போராட்டத்தில் சம்பந்தப்பட்ட பல விடயங்களைப் பற்றிக் கலந்துரையாடினோம். எனது கத்தோலிக்க கடவுள் பற்றிய சாஸ்திர அறிவு லத்தீன்- அமெரிக்க அணுகுமுறை பற்றிய தெளிவைத் தந்தது. ஒடுக்கப்பட்டவர்களைப் பற்றியும் ஏழைகளைப் பற்றியும் கடவுளின் சாம்ராஜ்யத்திற்கு, தெரியப்படுத்த வேண்டுமென யேசுவின் உபதேசத்தில் சொல்லப்படுவதே முக்கியமானது என்று அது கூறுகிறது. இதுவே யேசுவின் உபதேசத்தின் சாரமாகும். கிறிஸ்தவர்களாகிய நாங்கள் முதலில் ஒடுக்கப்பட்டவர்களின் அவலக்குரலைக் கேட்கவேண்டும். பின்னர் அவர்களின் அவலத்திற்கான காரணத்தையும் அதற்குப் பின்னர் அவர்களின் ஒடுக்குமுறைபற்றிய சரித்திரத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும். எகிப்தில் ஒடுக்கப்பட்ட இஸ்ரேலியரின் விவிலிய கதை இதுவே. பின்னர் விடுதலைக்கான அறைகூவலைச் செய்வதற்கு மக்களை இட்டுச்சென்ற இன, சமூக, அரசியல் அமைப்பு பற்றிக் கவனத்தில் கொள்ளவேண்டும். இத்தகைய ஒடுக்கு நிலை ஏற்படுவதற்கான காரணத்தை ஆராய்ந்து காணவேண்டும். தீர்க்கதரிசிகளைக் குறைகூறியமை பற்றியும் பாலஸ்தீனத்தில் தாபனப்படுத்தப்பட்ட சமயமுறைக்கு எதிராக யேசு ஆற்றிய சொற்பொழிவுகள் பற்றியும் நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

கடைசிப் படியாக, கிறிஸ்தவர்களாகிய நாங்கள் விடுதலைக்கு உதவும் முகமாக என்ன செய்யலாம் என்று ஒருவரை ஒருவர் கேட்கவேண்டும். ஒடுக்கமுறைக்கு இட்டுச்சென்ற நிலையை நீக்குவதற்குப் போராட முடியுமா?, இதற்கு ஒடுக்கப்பட்ட மக்களின் சரித்திரச் சூழ்நிலையைப் பார்ப்பது முக்கியமானது. இறந்த காலத்தில் அவர்களுக்கிருந்த சாத்தியக்கூறுகள் யாவை, இப்பொழுது அவர்களால் என்ன செய்யமுடியும்? இதுதான் சுவர்க்கத்தின் ராஜ்யத்தின் தொடக்கம். யேசு தனது போதனையில் ‘சுவர்க்கத்தின ராஜ்யம் உன்னுள்ளேயே உள்ளது’ என்று கூறுகிறார்.

பார்த்து, தீர்மானம் எடுத்துச் செயற்படுவதே விடுதலை பற்றிய சாஸ்திர அறிவு என்று சொல்லப்படுவதின் சாரங்களாகும். எங்களின் கலந்துரையாடல்களின் போது அவர்களிடம் இரண்டு கேள்விகள் இருந்தன. ஒன்று வன்முறை பற்றியது, மற்றது நீண்டகாலமாக நான் தமிழர்களுடன் வாழ்ந்துகொண்டிருந்தபோதிலும் ஏன் என்னால் தமிழில் பேசமுடியவில்லை என்பது பற்றியது. யேசு சாத்வீக வழிநிற்போரைப் போற்றினார்.

போரின் பின்னர் அமைதியும் இணக்கமும் ஏற்படுவது பற்றிய கேள்வியும் கேட்கப்பட்டது. ஆனால் கடுமையான சரித்திரச் சூழ்நிலைகளில் எதுவித மறுமொழியும் சாத்தியமாகாது. 1948ல் சுதந்திரம் பெற்றதிலிருந்து பேச்சு வார்த்தை மூலம் ஓர் அரசியல் தீர்வை எட்டுவதற்கு மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும் பயனற்றுப் போயின. எனவே இழந்த தமது உரிமைகளைப் பெறுவதற்காகப் போராட வேண்டிய ஒரு தவிர்க்க முடியாத நிலக்குத் தள்ளப்பட்டுள்ளனர். சிங்கள இராணுவத்தினால் தமது மக்கள் மீது புரியப்படும் வன்முறையை முடிவுக்குக் கொண்டுவரவே அவர்கள் சண்டையிடுகிறார்கள். விடுதலை பற்றி உள்ளுக்குள் இருந்துகொண்டுதான் புரியமுடியும்.



ஒடுக்கப்பட்டவர்களது சரித்திரம் பற்றி அறியாதவர்கள் அது பற்றித் தீர்ப்புக்கூறத் தகுதி அற்றவர்கள்.

ஒடுக்கப்பட்டவர்களது சரித்திரம் பற்றி அறியாதவர்கள், அது பற்றித் தீர்ப்புக்கூறத் தகுதியற்றவர்கள். தமிழர்களது விடுதலைப் போராட்டம் பற்றி நான் புரிந்துகொண்டதிலிருந்து கூறுவதென்றால், வேலுப்பிள்ளை பிரபாகரனாலும் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் தொடக்கப்பட்ட போராட்டமானது சிறீலங்காவின் நிலைக்கு அளிக்கப்படும் சரித்திர ரீதியான மறுமொழியேயாகும்.

கடைசியில் இப்போராட்டம் தமிழர்களை ஒடுக்குமுறையிலிருந்து விடுவித்து அவர்கள் விரும்பும் அமைதியைக் கொண்டு

வருமென்பதே எனது நம்பிக்கை.

வன்னியில் கேட்கப்பட்ட அடுத்த கேள்வி கூட்டுப் பொறுப்புரிமை பற்றியதாகும். ஒரே மொழியைப் பேசுவது என்பது ஒன்றாயிருப்ப தற்கான முக்கியமாக அடையா ளம் என்பதை காயமுற்ற புலி கள் மிகவும் தெளிவாகவே புரிந்து கொண்டிருந்தனர். விடுதலைக் கான போராட்டத்தில் கிருஸ்த வர்கள் ஒடுக்கப்பட்டவர்களோடு ஒரே கூறாக அல்லது அவர்களின் ஒரு பகுதியாகத்தானும் இருக்க வேண்டும் என்பது முக்கியம். ஆனால் நான் ஒரு தமிழன் அல்ல. நான் ஒரு ஜெர்மன் நாட்டவன். நான் முதலாவது பணக்கார உல கத்தின் ஓர் அங்கத்தவன். குடியேற் றத்தின்போது மக்களையும் நாடு களையும் ஒடுக்கியதோடு, இன்று வரை பொருளாதாரச் சுரண்டலில் ஈடுபட்டுவரும் ஒரு குற்றமுள்ள கலாச்சாரத்தின் அங்கத்தவன். நான் ஒரு செயற்கையான கூட்டுப் பொறுப்புரிமையைக் காட்டமாட்டேன்.

எனது நாட்டில் தமிழரது போராட்டத்திற்காக ஒரு நிலைப் பாடு எடுப்பேன். தமிழருடைய தலைவரான வேலுப்பிள்ளை பிர பாகரனுடைய 50வது பிறந்த நாளுக்காக நான் இந்தக் கட்டு ரையை எழுதுகின்றேன். நான் அவரை என்றும் சந்தித்ததில்லை. அவர் சமாதானத்தின் ஓர் அடை யாளம் மட்டுமல்ல, அதையும் விடக்கூடியவர். அவர், என்றும் தோற்கடிக்கப்படாத தமிழ் மக் களின் அடையாளம். எப்பொழு தும் தன்னம்பிக்கை கொண்ட மக்களின் அடையாளம் அவர். பல நூற்றாண்டுகளாக ஒடுக்கு முறைக்குள் வாழ்ந்துவிட்டு, தன் னம்பிக்கையுடன் வாழ முயல்வது ஒரு புத்தம்புதிய அனுபவமாகும்.

வேலுப்பிள்ளை பிரபாகரன், தமிழ் மக்களது தன்னம்பிக்கைளை மீளக்கொடுத்திருக்கிறார். அத னைத் தன்னுள் மீளக்கண்டு பிடிப்பது ஒவ்வொரு தமிழனதும் கடமையாகும்.

# பிரபாகரன் பிறந்தநாள் வாழ்த்து !



'பிரபா கரன்' என்னும் பிள்ளை வேங்கை
உரமாய்த் தமிழினம் உய்ய உயிர்தந்து
திருவார் தமிழீழம் தேடப் பிறந்தான்!
பெருமானத் தமிழன்! பெறலரும் வீரன்–அவன்
உருவான நாளெண்ணி ஊதாயே சங்கம்!
ஓங்குகவன் புகழென்றே
ஒலிப்பாயே முரசம்!

இந்தியப் பெரும்படைக்கு எதிர்நின்ற வெம்புலி!
கொந்திய நெஞ்சாங் குலையினி லிருந்து, அவன்
சிந்திய அரத்தத்தால் சிவந்தது தமிழீழம்!
பிந்திய தமிழ்மறம் பேணிப்புரந் தான்!–அவன்
வந்தலர்ந்த நாள் மகிழ்ந்து பாடுகவே வாழ்த்தும்
வளர்க அவன் புகழென்றே
மீட்டுகவே யாழும்!

மறந்த தமிழினத்தின் மறஞ்சொன்ன வேந்தன்!
இறந்த இனப்புகழை ஏற்றிவைத்த வீரன்!
திறந்த மார்பொடு பகையினைத் தீர்த்த
சிறந்த இராவணற்கும் சிறப்பளித்த தமிழன்–அவன்
பிறந்தொளிர்ந்த நாள்நினைந்து பேரிகையே
பெற்றான்காண் பெரும்புகழும்! (முழங்கு!
பிளிறுகவே வேழம்!

பெருஞ்சித்திரனார் 1989.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




சுதுமலைப் பிரகடனம் ● தமிழீழத் தனியரசே [illegible] நிரந்தரத்தீர்வளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## சாதனைகளும்
# சவால்களும்

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் 50 வயதினர் ஆவதென்பது இன்றைய தென்னாசிய சூழலில் முக்கியமான ஒரு பேசுபொருள் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒருவிடயமாகும்.

இதற்கு காரணம் இலங்கையில் தமிழர்களது அர சியல் நிலைப்பட்ட இருப்பு, அந்தஸ்த்து பற்றிய தொடர் நிலைப் போராட்டத்தில் இவர் தமது இயக்கத்தை வளர்த்தெடுத்த முறையிலும் அந்த இயக்கம் இந்த



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உரிமைப் போரில் மேற்கொண்ட அரசியல் நிலைப்பட்டதும் இராணுவ நிலைப்பட்டதுமான நடவடிக்கைகள், தமிழர் உரிமைப் போராட்டத்தின் வேகத்தையும், போக்கையும் நிர்ணயித்துள்ளது மாத்திரமல்லாமல், இவர் தலைமையின்கீழ்வரும் இயக்கத்தையே தமிழர் உரிமைப் போராட்டத்தின் மையப்புள்ளியாக்கும் நிலைமையை ஏற்படுத்தியமையாகும். இந்த செயற்பாட்டிற்கு இருபக்க நிலைப்பட்ட முக்கியத்துவம் உண்டு. இவர் அரசியல் ஈடுபாடு காட்டிய காலத்தில் ஏறத்தாழ சமநிலையினராக இருந்த குழுமங்கள் ஒன்றில் இவருடன் சேர்ந்துள்ளனர், அல்லது அரசாங்க ஈடுபாடுகளுடன் தொழிற்படுகின்றனர். மறுபுறத்தில் இலங்கைத் தமிழரது அரசியல் இருப்புப் பற்றிய பிரச்சினையை தீர்ப்பதற்கு விடுதலைப்புலிகளுடனேயே பேசவேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது மாத்திரமல்லாமல் அது சர்வதேச கண்காணிப்பின் கீழ் செய்யப்பட வேண்டும் என்கிற நிலைமையும் உருவாகியுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் என்ற முறையில், இந்த உரிமைப்போராட்டத்தை இவர் வழி நடத்திய முறைமை காரணமாகவே இந்நிலை ஏற்பட்டுள்ளது. இன்னொரு மட்டத்தில் நோக்கும் போது மிக மிக முக்கியமாவது, உரிமைப்போராட்டம் நடத்தப்பட்ட முறைமையில் வடக்கு கிழக்கு மாநிலத்தில் கணிசமான அளவு ஆள்நிலப்பகுதி இவரது இயக்கத்தினரின் மேலாண்மையின் கீழ் வருகின்றது. இதற்கு தேசிய, சர்வதேசிய அங்கீகாரமும் உண்டு. இந்த வலுநிலையே இதற்கு முன்னர் நடந்த தமிழர் உரிமை பற்றிய பேச்சுவார்த்தைகளுக்கும் இப்பொழுது நடப்பனவற்றுக்கும் உள்ள வேறுபாடாக அமைகின்றது.

இந்த அரசியல் சாதனைகளின் ஊடாக இவருடைய ஆளுமை பற்றிய வியப்புணர்வு இவரை தமிழ் கூறும் நல்லுலகத்தின் ஒரு பிரதான பாத்திரமாக்கியுள்ளது. இவருடைய எதிரிகள் கூட அந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்கின்றனர். இவர் தமது செய்கைகள் மூலமாக சாதாரண தமிழ் மக்களின் போற்றுதலுக்குரிய ஒரு இனக் குறியீடாக அமைந்துள்ளார்.

பிரபாகரனின் திறமை அவரது தலைமையின் தகைமையில் தங்கியுள்ளது எனலாம். இதில் அவரது ஒழுங்கமைப்புத்திறன் சிறப்பாக நோக்கப்படல் வேண்டும். இலங்கையின் வடக்கில் ஆர்வம் மிக்க இளைஞர் சிலரின் ஒருங்கு கூடலாக அமைந்த இந்த இயக்கம், இன்று தேசிய பிராந்திய சர்வதேச முக்கியத்துவம் உடைய ஓர் இயக்கமாக வளர்ந்து, சில நாடுகளால் தடைசெய்யப்படும் அளவிற்கு சர்வதேச முக்கியத்துவம் கொண்டுள்ள ஓர் நிறுவனமாகியுள்ளது.

இந்த ஒருங்கமைப்புத்திறன் பற்றிய எடுகோளுக்கு புறநடையாக கருதப்படத்தக்க சில சம்பவங்கள் அண்மையில் நடந்துள்ளன. எனினும் அப்பிரிவினர் கூட அந்த இயக்கத்தின் பெயரை தமதாக்கிக்கொள்வதன் மூலம் மேற்கூறிய ஒருங்கமைப்புத்திறன் நன்கு தெரியவருகின்றது. இந்த விடயம் பற்றி நோக்கும் பொழுதுதான், இலங்கைத் தமிழர் உரிமைப்போராட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் எவ்வாறு தொழிற்படு நிலைக்கு வருகின்றது என்பது தெரிய வருகின்றது.



**கலாநிதி**
**கா.சிவத்தம்பி**

ஓய்வு பெற்ற
பல்கலைக்கழக
தமிழ்ப் பேராசிரியர்,
அறிஞர்,
திறனாய்வாளர்,
இலங்கை.

காலனித்துவ ஆட்சிக் காலத்தில் 1924க்கு முதலும் பின் காலனித்துவ சூழலிலும் 1949 இல் தொடங்கப் பெறும் இலங்கைத்தமிழரசு கட்சியின் வருகையுடன் புவியியல் தளமுள்ள ஒரு அரசியற்கோரிக்கையாக பரிணமிக்கத் தொடங்கிய இலங்கைத் தமிழரது அரசியல் போராட்டம், தமிழரசுக்கட்சி காலத்திலோ, தமிழர் விடுதலைக்கூட்டணி

> **சரித்திரம் என்பது சாகாத் தொடர்கதை. ஆனால் அதனிலும் கட்டங்கள் உண்டு. வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது 50ஆவது ஆண்டில் தமிழர் உரிமைப் போராட்டத்தினை ஒரு புதிய கட்டத்திற்கு கொண்டு வந்துள்ளார்.**

காலத்திலோ, இளைஞர் இயக்க காலங்களிலோ தமிழ் இன அடையாளப் படுத்துகைக்காக தமிழ்த் தேசியம் என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படவில்லை. அது இப்பொழுது குறிப்பாக யுத்த நிறுத்த காலத்திலேயே திட்டவட்டமான ஓர் அரசியல்வாதமாக ஏற்கப்பட்டு சிங்கள மக்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இன்றைய நிலையில் தமிழ்த்தேசியம் என்பது முற்றுருவான ஒரு அரசியல் சித்தாந்தமாக இலங்கையில் தொழிற்படுகின்றது. இதற்கு பிரதான காரணமாக அமைவது இவ் உரிமைப் போராட்டம் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்டு வந்த முறைமையே.

தமிழீழ ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

இவ்வாறு சில ஈட்டங்களை அடையாளங்காணும் இவ்வேளையில், மேற்கூறிய போராட்ட நடைமுறையின் இரண்டு முக்கிய காரணிகள் கணக்கில் கொள்ளப்படவேண்டியது அவசியமாகும். அவை முறையே வடக்கு கிழக்கின் பாரம்பரியவாசிகளில் ஒரு குழுமத்தினரான (தமிழ் பேசும்) முஸ்லீம்கள் பற்றியதாகும். மற்றையது இந்திய அரசுடனான உறவுச்சீர்கெடுகையாகும். உண்மையில் சற்று நிதானமாக நோக்கும் போது மேற்கூறிய ஈட்டங்களும் அவற்றினூடே வந்த மேற்படி இரண்டு அம்சங்களும் இப்பொழுதுள்ள யுத்த நிறுத்த சூழ் அமைவில் எத்தகைய ஒரு புதிய கட்டத்தை தோற்றுகின்றன என்பதை காட்டுவனவாகும்.

சரித்திரம் என்பது சாகாத் தொடர்கதை. ஆனால் அதனிலும் கட்டங்கள் உண்டு. வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது 50ஆவது ஆண்டில் தமிழர் உரிமைப்போராட்டத்தினை ஒரு புதிய கட்டத்திற்கு கொண்டு வந்துள்ளார். 50 வயதின் அனுபவங்களும் ஆளுமைப் பதனப்பாடுகளும் இப்புதிய சவால்களுக்கு அவரை இட்டுச் செல்லும். இவ்வேளையில் மேல்நாட்டு நிலை நிற்கும் ஓர் உருவகமே மனதில் மேலோங்கி நிற்கின்றது. பிரபாகரன் 50ஆவது வயதில் தான் வளர்ந்து அழகியாக்கி சர்வதேச கவனத்தை ஈர்த்துக்கொடுத்த தனது மகளை அவளது திருமணத்திற்காக தேவாலய நடுபாதையூடாக அழைத்துச்செல்கின்றார். இந்த மணப்பெண்ணின் மாப்பிள்ளையார்? இது அரசியல் சார்ந்த ஒரு விடயம். வரும் எதிர்காலம் அந்த அரசியலால் தீர்மானிக்கப்படவுள்ளது. தீர்மானிக்கப்படவேண்டும்.

தேவாலயத்திற்கு வெளியே பல்வேறு ஒலிகள், கூட்டொலிகள் கேட்கப்படலாம். ஆனால் தேவாலயத்தின் உள்ளே நடைபெறப்போவதோ 21ஆம் நூற்றாண்டில் மாத்திரமல்ல, இனி அடுத்து வரும் நூற்றாண்டுகளிலும் இலங்கைத் தமிழரின் அடையாளத்தை அவர்களின் இருப்பை, அந்த இருப்பின் தனித்துவங்களை தீர்மானிக்கப்போகும் விடயங்களாகும். இவ்வேளை கட்டுரையின் நீட்சிக்கு இடம்கொடாமல் ஒரு முக்கிய வரலாற்று உண்மையை பதிவு செய்து கொள்ளல் வேண்டும்



உரிமைகளுக்கான போராட்டங்கள் அரசியல் நிலைப்பட்டனவே, ஆட்சி அதிகாரங்கள் சம்பந்தப்பட்டனவே, குழும உரிமைகள் பற்றியனவே பொருளாதார சுரண்டல்களுக்கு எதிராக தொடங்கும் புரட்சிகள் கூட நிறைவேற்று நிலையில் அரசியல் நடவடிக்கைகளாகவே ஸ்திரப்படுத்தப்படுகின்றன.

50 வயது ஒரு மைல்கல். கடந்த காலத்து அனுபவங்கள், படிப்பினைகள், அடுத்துவரும் காலப் பிரிவின் ஈழத்தமிழரின் விமோசனத்திற்கான பூபாள இசைப்புக்களாக அமையட்டும். அந்த வெற்றிப் பாதையில் பிரபாகரன் நிற்பார். நிற்கவேண்டும்.

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

# நிமிர்ந்தெழுந்த வரலாறு

வரலாறு மனிதர்களைப் பிறப்பித்துக்கொண்டேயிருக்கின்றது.
ஆனால்
சில மனிதர்கள்தான் வரலாற்றைப் படைக்கப்
பிறப்பெடுக்கின்றார்கள்.

'பிரபாகரன்' என்பது தனிமனிதனின் பெயர் அன்று.
அது ஒரு வரலாற்றின் பெயர்:
அந்த மனிதரே படைக்கின்ற வரலாற்றின் பெயர்.
தமிழ் தேசிய இனத்தின் -
இன்றைய கால வரலாற்றினதும்
எதிர்கால வரலாற்றினதும் பெயர்.

'பிரபாகரன்' என்றால்
அடிமை மனோபாவத்திற்குட் புதைந்துபோய்க் கிடந்த தமிழினம்
கௌரவமும் கர்வமும் மிக்க இனமாக நிமிர்ந்தெழுந்த வரலாறு!

வரலாறு என்பது வளர்ந்தே செல்வது.
அது முடிவற்றது.
இல்லாமையற்றது.
'பிரபாகரன்' என்பது முதிர்ந்தே செல்வது -
அது அகவையற்றது:
முதுமையற்றது.

மூல விதையென உன்னையே இட்டு - தமிழினத்தின்
வீர வரலாறென உருவெடுக்கும் தலைவா!
கோல அழகென உயர்வோடு வாழ்வாய் -
தமிழீழத்தின்,
நிழலாக - பலமாக - கம்பீரமாக!

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
World Tamil Coordinating Committee
ஐக்கிய அமெரிக்கா-The United States of America
மையப்பணிமனை
நியூயோர்க்
20.11.2004

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# கிழக்கு வெளுக்கிறது!

## தமிழுக்கு பொற்காலம் பூக்கிறது!!




மணவை முஸ்தபா

முன்னாள்
இதழாசிரியர்
யுனெஸ்கோ கூரியர்
(தமிழ்),
தமிழ் ஆய்வாளர்,
தமிழகம்.


அன்றைய தமிழன் காதலையும் வீரத்தையுமே தன் வாழ்வியலாகக்கொண்டு வாழ்ந்தவன் என்பது வரலாறு. காலப்போக்கில் அவன் ஊட்டி வளர்த்த வீர வரலாறு தேய்பிறையாகி, அவை காலப்போக்கில் வெறும் இலக்கியச் செய்திகளாக மட்டுமே இலக்கியங்களில் காணும் நிலை உருவானது. அவன் வீரமும் விவேகமும் நீறு பூத்த நெருப்பாய் கனன்று கொண்டிருந்ததே தவிர, மாய்ந்து விடவில்லை - மறைந்துவிடவில்லை என்பது ஈழத் தமிழர்களால் செயல் பூர்வமாக உணர்த்தப்பட்டு வருவது வெளிப்படையான பேருண்மை. அதற்கு ஊற்றுக்கண்ணாக விளங்கிக்கொண்டிருக்கும் உன்னதத் தமிழன் வேலுப்பிள்ளை பிரபாகரன். அவ் வீரத் திருமகன் பொன்விழா அகவையை அடைந்து வீரப்பிழம்பாக, விவேகப் பேரொளியாகத் திகழ்ந்து வீரவரலாறு படைத்து வருவதை - அவர் மூலம் வீரத் தமிழனின் பழம்பெரும் வரலாறு மீள்வதைக்கண்டு உலகத் தமிழ் இனமே உளமார வாழ்த்துகிறது. தமிழ் உள்ளங்கள் மீண்டும் புத்தெழுச்சி கொள்கின்றன என்பது நிதர்சனமான உண்மை. இதன் வாயிலாக தமிழ்மொழி, கலை, இலக்கியம், பண்பாடு என அனைத்துத் துறைகளிலும் ஒரு புதிய ஒளி - புத்தெழுச்சி உருவாவதைக் கண்டுணர முடிகிறது.

அதிலும் குறிப்பாக, தமிழனின் முகமும் முகவரியுமாக அமைந்துள்ள 'தமிழ்வளர்ச்சி' என்றும் காணா அளவில் பேரெழுச்சி பெற்று வருகிறது என்பது மறுக்கமுடியாத பேருண்மை.

தமிழின் எதிர்காலம்பற்றி மனத்திரையில் நாளும் உருக்கொண்டெழும் தமிழ் எழுச்சிக்கான உந்து தலை, உத்வேகத்தை அப் பெருமகனிடமிருந்து பெறுகிறோம் எனக் கூறுவதில் தவறேதும் இருக்க முடியாது.

இன்றைய தமிழ் பெற வேண்டிய எழுச்சியை- மறுமலர்ச்சியை உணர்ந்து தெளிய முதற்கண் வரலாற்றுத் தடயத்தை - பதிவை அறிந்துணரவேண்டும்.

சங்க காலத்துக்கு முந்தைய தமிழகம் சமயச் சார்பற்ற - அறிவு பூர்வமாக வாழ்ந்த சமுதாயமாக இருந்தது. அவனது அறிவியல் அறிவும் உணர்வும் உச்சமாக இருந்தது. அதற்கேற்ப அவன் தமிழை அறிவியல் தமிழாக ஆற்றலோடு வளர்த்திருந்தான் என்பதை அன்றைய இலக்கியங்களுள் பொதியப்பட்டுள்ள அறிவியல் நுட்பச் செய்திகளே இன்றும் பறைசாற்றிக்கொண்டுள்ளன. கால மாறுதலுக்கேற்ப சங்கத் தமிழ், சமுதாயத் தமிழாக மலர்ந்தது. பின், வைதீக சமயம், சமணம், பௌத்தம், அதன்பின் வெளிநாட்டிலிருந்து கிருத்துவம், இஸ்லாமியம் என வந்தபோது சமயத் தமிழாக வடிவெடுத்து வளர்ந்து வளம் பெற்றது.

ஆங்கிலேயர் ஆட்சி வீச்சோடு நிலைபெற்றபோது, அவர்கள் மூலம் மேனாட்டிலிருந்து இறக்குமதியான புதினம், சிறுகதை, திறனாய்வு, ஓரங்க நாடகம்போன்ற இலக்கிய வகைகளை உள்ளடக்கிய

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50



பள்ளித் தோழன் கி.செ.துரை

வல்வை சிதம்பராக்கல்லூரிக்கு அக் காலத்தில் இங்கிலீஸ் பள்ளிக்கூடம் என்று பெயர் இருந்தது. நாலாவது வகுப்பில் இருந்து 12 வது வகுப்பு வரை அங்கு படிக்கலாம். சுமார் 1300 மாணவர்கள், 60 வரையான ஆசிரியர்க ளுடன் பிரபல பாடசாலையாக அது மிளிர்ந்தது. அந்தப் பாடசாலையின் ஆசிரியர்கள் வகுத்துக் கொண்ட கொள்கை, அன்றாடக் கல்வி வாழ்வு இவைகளை இன்று ஐரோப்பிய பாட சாலை ஒன்றின் ஆசிரியனாக இருந்து நினைத்துப் பார்க்கிறேன். ஏறத்தாழ ஒரு இராணுவ முகாம்போன்ற கட்டுப் பாடுகள் நிறைந்த பாடசாலையாக அது இருந்தது. கல்வி மட்டுமல்ல சிறந்த ஆளுமை, வீரம், அஞ்சா நெஞ் சம், போராட்ட மனம் போன்ற தகுதிகள் இல்லாமல் அப்பாடசாலையில் இருந்து வெளியே வருவது இயலாத காரியம்.

இத்தகைய பாடசாலைப் பின்புலம் தலைவருடைய வாழ்க்கையை நெறிப் படுத்தியதில் சிறந்த பின்னணியாக இருந்தது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்தாலும், அனைவ ரும் அவதானிக்கும் ஒரு எழுச்சிமிக்க சிறுவனாக அவர் அந்தப் பாடசாலை யில் நடமாடிக் கொண்டிருந்தார். எங்க ளுக்குள் எந்தக் காரியத்தையும் நேர்த் தியாகச் செய்யக்கூடிய ஒருவராக அவரை சிறுவயதிலேயே ஆசிரியர்கள் அடையாளம் கண்டனர். ஒழுங்காக

புதுமைத் தமிழாக வடிவெடுத்தது.

காலத்தின் போக்கையும் தேவையையும் அனுபவித்துத் தன் வளர்ச்சிப் பாதையை உருவாக்கிக் கொள்ளும் மொழியே வாழும் வெற்றியைப் பெற முடியும். மேலும் நடைமுறைச் சிந்தனைக்கேற்ப, அறிவியல் தமிழாக வளர்ந்து வளம்பெற வேண்டிய கட்டாயநிலை தமிழுக்கு ஏற்பட்டுள்ளது. இக்கட்டான இச் சூழலை உணரமுடியாத தமிழர்கள், வெறும் வாய் வீச்சில் சிக்கித் தமிழ் சீரழிந்து விடுமோ என எண்ணி மறுகும் என் போன்றோர் தமிழின் ஆற்றலை முழுவீச்சில் வெளிப்படுத்தி, 'தமிழ் ஓர் உன்ன தமான அறிவியல் மொழி' என்பதை எண்பிக்கும் முயற் சிக்கு, எல்லா வகையிலும் ஆக்கம் தேடும் வகையில் 'பொங்கு தமிழ்' மாநாடு நடத்தி ஆக்கச் சிந்தனை மூலம் இன்றைய சூழலில் தமிழ் வளர்ச்சியை விண்ணுக்கு உயர்த்த முயற்சி மேற்கொண்ட அச்செயல் வீரனை தமிழ் இனத்துக்கு மட்டுமல்ல - தமிழின் விடிவெள்ளி என்றே கூறவேண்டும். வெறும் உணர்ச்சிக்கு இரை போடாது, அறிவார்ந்த செயல் திட்டங்கள் மூலம் தமிழுக்குப் பொற் காலம் அமைக்க முயலும் - முனைப்புக் காட்டும் முயற்சி என் போன்றோர்க்கு பேருவகை ஊட்டுவதாயுள்ளது.

தமிழ் ஓர் அறிவியல் மொழி - அறிவியலைச் சொல்லுவதற் கென்றே உருவாக்கப்பட்ட மொழி என்பதை நிறுவும் வகையில் இதுவரை சுமார் ஆறரை இல ட்சம் அறிவியல், தொழில்நுட் பம், மருத்துவக்கலைச் சொற் களை உருவாக்கி 6,500 பக் கங்களில் எட்டுத் தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளேன் என் றால், அது என் திறமையோ அல்லது என்னோடு இணைந்து உழைக்கும் என் நண் பர்களின் திறமையோ அன்று. இதெல்லாம் தமிழின் ஆற் றலையே வெளிப்படுத்துகிறது. தமிழால் முடிகிறது. அத னால் அது என்னால் முடிகிறது என்பதே முழு உண்மை.

> தமிழ் ஓர் அறிவியல் மொழி - அறிவியலைச் சொல்லுவதற்கென்றே உருவாக்கப்பட்ட மொழி என்பதை நிறுவும் வகையில் இதுவரை சுமார் ஆறரை இலட்சம் அறிவியல், தொழில்நுட்பம், மருத்துவக்கலைச் சொற்களை உருவாக்கி 6,500 பக்கங்களில் எட்டுத் தொகுதிகளை எழுதி வெளியிட்டுள்ளேன்.

தமிழ் வளர, வாழ, அதன் மூலம் தமிழினம் உயர எல்லா வகையிலும் மாபெரும் உந்துசக்தியாக, கிழக்கு வெளுக்க உதயமாகும் கதிரோனாக விளங்கும் சீர்மிகு செம்மலின் பொன்விழா ஆண்டை உலகத் தமிழர்களெல்லாம் பூரிப் போடு கொண்டாடி மகிழும் இம்மகிழ்ச்சி வெள்ளத்தில் என் உள்ளமும் நீந்தி மகிழ்வெய்துகிறது. இந்த இனிய சூழலில் தமிழுக்கு எல்லா வகையிலும் உந்து சக்தியாய் அமையவல்ல 'செம்மொழி' அங்கீகார முத்திரை படைத்திருப் பது தமிழன்னை 'பொன்விழா செல்வர்'க்கு உவந்தளித்த பரிசு என்றே கருதி மகிழ்கிறேன். வாழ்க பல்லாண்டு! பல்லாண்டு!! பல்லாயிரத்தாண்டு!!!

Tamileelam Archive



# வரலாற்று நாயகனுக்கு

# ஒரு வாழ்த்து

வெறும் தாள் கிழித்து, பேனை எடுத்து எழுதமுடியுமா இதனை? மேசை விரித்து அதன் முன் அமர்ந்து, ஆழ்ந்து சிந்தித்து அதன் பின் எழுத முடியுமா இதனை? வெறும் மையா இதனை எழுதுவது? வெள்ளைத் தாளில், அர்த்தமேயில்லாது கறுப்பு மை படர வரும் கட்டுரைதானா இது?

நம் உணர்வு எடுத்து நம் உயிரினால் எழுத வேண்டிய ஒன்றல்லவா இது! தமிழ் மானம் என்னும் எழுதுகோல் எடுத்து, உண்மை, நேர்மை, கடமை என்னும் 'மை'களில் தோய்த்து எழுதப்படவேண்டிய வரலாறு அல்லவா இது!

தன்னிலையில் தாழாமை
தாழ்வுற்றால் உயிர் வாழாமை

என்றும் 'மை' கொண்டு, உணர்வு செறிந்த உயிர் என்னும் எழுதுகோல் எடுத்து இதனை எழுதத் தொடங்குகின்றேன்.

அரைநூற்றாண்டு ஆயிற்றா?
அட, முருகா, முத்தமிழ்க் குமரா! ஐம்பது ஆண்டுகள் போயிற்றா?
அல்லவே! அதனை நான் நம்பேன். இப்பொழுது போல் இருக்கின்றது எல்லாம். இதோ இப்பொழுது தான்.

1974ஆம் ஆண்டு. தைத்திங்கள். தமிழர் தலைநகர் யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாடு. தமிழர் வெள்ளம் கண்டு, தமிழர் வேகம் கண்டு சிங்கள அரசு சினந்தது. சீறிப்பாய்ந்தது. ஒன்பது தமிழர்களைக் கொன்றது. ஒரு நூறு தமிழரைக் காயப்படுத்தியது. அது கண்டு பல் கடித்தாயே! மனம் வெடித்தாயே!

நான் அறிய, உள்ளே கனன்ற, உன்னுள் கனன்ற தீப்பிழம்புகள் சீறிக்கிளம்பத் தொடங்கியது அந்த நாள்தான். சிறுத்தையென பீறிக்கொண்டோடியது அதே நாள்தான்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

தலைவாரி, சுத்தமான ஆடை அணிந்து, காலுக்கு செருப்பணிந்து, பேனைகள் விழுந்துவிடாமல் இருப்பதற்காக சேட் பொக்கற்றை இடக்கையால் பொத்தியபடி எதையோ அவசரமாகச் செய்து முடிக்க வேண்டியது போல வேகமாக நடந்து போவார். அந்த அசாதாரண வேகமும் வீச்சும் அவர் ஒரு தலைமை தாங்கும் தகுதியுடையவர் என்பதை ஐயத்திற்கு இடமின்றி எடுத்தியம்பின.

அந்தக்காலத்திலே திரு. சாந்தமூர்த்தி என்றொரு ஆசிரியர் இருந்தார். தமிழ், சமயக் கதைகளை அழகாக நகைச்சுவையோடு சொல்வதில் வல்லவர். அவருடைய வகுப்பில் மட்டும் மாணவர்கள் நெருக்குவாரம் இல்லாமல் மகிழ்ச்சியோடு இருப்பார்கள், மனம் திறந்து பேசுவார்கள். நீ எதிர்காலத்தில் என்னவாக வரப்போகிறாய் என்று ஒவ்வொருவராக கேட்டுவந்தார். ஒவ்வொருவரும் எழும்பி தங்களுடைய கனவுகளை சொல்லிக் கொண்டு வந்தோம். அப்பொழுது பிரபாகரன் அவர்களுடைய தவணை வந்தது. அவர் சொன்னார், நான் ஒரு ரெயில்வே காட் ஆக வரப் போகிறேன் என்று. ஆசிரியர் சட்டென்று நின்று சிறு பொழுது அவரையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். என்ஜினியர், டாக்டர் என்று பழகிப் போன விருப்பங்களுக்குள்ளால் ஒரு வித்தியாசமான குரல் கேட்கிறதே! இதுதான் அவருடைய அவதானிப்பின் காரணம்.

அவரிடம் இருந்த இன்னொரு சிறப்பம்சம் எதையும் நேர்த்தியாக செய்ய வேண்டும் என்ற பழக்கமாகும். அக்காலத்திலே ஓவிய ஆசிரியராக இருந்தவர் பாலா மாஸ்டர் என்ற பாலசுப்பிரமணியமாகும். செலவுச் சிக்கனத்திற்காக அவர் ஓவியத்திற்கான பிறஸ்களை ஈச்சந்தடிகளால் தயாரித்திருப்பார். ஈச்சந்தடிகளை நறுக்கி, அவற்றை பிறஸ் போல நசித்து வைத்திருப்பார். பிரபாகரன் அவர்களோ ஓவியத்தில் நிறைந்த நாட்டமுடையவர். வர்ணங்களை ஈச்சந்தடித் தூரிகையால் தொட்டு வரை

அது முடிந்து முழுதாய் முப்பது வருடங்கள் ஓடிவிட்டனவா? அட, அது மகா ஆச்சரியம்!

ஐம்பது ஆண்டுகளில், முதல் பதினைந்து ஆண்டுகள் உன் அம்மாவுடன் போயிருக்கும். அப்பாவுடன் கழிந்திருக்கும். அயலாருடனும் சென்றிருக்கும்.

ஆனால் மீதி-முழுதாய் முப்பத்தைந்து வருடங்கள் எப்படிப் போயிருக்கும் என்று நான் எப்படிச் சொல்ல? சொல்லும் தகுதி எனக்குண்டா? சூழ உள்ள தோழர்களுக்குத் தெரியும். சொல்லியிருப்பாய். துயர்பட்ட நாளை, வதைபட்ட வாழ்வை, சொல்லியிருப்பாய். துடித்தெழுந்ததை, தோளில் தூக்கிய வீரத்தை, வெடித்துக் கிளம்பியதை, வெற்றி சமைத்ததை சொல்லியிருப்பாய்.

கடல் கடந்ததை, காட்டினை ஆண்டதை, திடல் ஏறி, திரையெடும் அளந்ததை, விடலைப்பருவ வாழ்வு, வீணாய்ப் போனதை, வீரனாய் உடல் எடுத்து வந்ததை, ஓர்மம் கொண்டு போரிட்டதைச் சொல்லியிருப்பாய். உன் தோழர்களுக்குச் சொல்லியிருப்பாய்.

அதிகம் பேசமாட்டாயாமே! ஆழ்ந்து சிந்திப்பாய். ஆரும் ஏதும் கேட்டால் உன் புன்னகை பேசும். அது போதும் என்று விடுவாயாமே! புரிகின்றது.

பேசிப்பேசியே அழிந்த வரலாறு அல்லவா நமது வரலாறு. எழுதி, எழுதியே கிழிந்த வாழ்வல்லவா நமது வாழ்வு!

முன்னர் ஒருவர் இருந்தார். கப்பல் ஏறி, கடல் கடந்து இங்கிலாந்து சென்று தொண்டை ஈரம் வத்தும்வரை பேசினார். பேசினார். பேசிக்கொண்டேயிருந்தார்..

பின்னர் ஒருவர் வந்தார். சோல்பரிப் பிரபுமுன், தொடர்ந்து பத்து மணித்தியாலம் பேசிச் சாதனை புரிந்தார்.

பிறகும் ஒருவர் வந்தார். ஆள்வோர் எல்லோருடனும் ஒப்பந்தம் எழுதினார். ஒப்பந்தம் ஒப்பந்தமாய் எழுதினார். ஒன்றும் சொல்லவில்லை. கிழிபட்டது.

அதன் பிறகும் இன்னொருவர் வந்தார். அடுக்கு மொழியில் அழகு தமிழில் அழுத்தம் திருத்தமாய் பேசினார். 'துப்பாக்கிக் குண்டு - விளையாட்டுப் பந்து,

'தூக்குமேடை - பஞ்சுமெத்தை' கர்ச்சித்தார். இரத்தப் பொட்டிட்டோம் நாம். என்ன செய்தார் அவர்? சோரம் போனார்! என்ன செய்தோம் நாம்? யாது செய்வர் தமிழ் மக்கள்? பஞ்சுமெத்தையைத்தான் கொடுக்க முடியவில்லை. 'இந்தா பிடி' என்று விளையாட்டுப் பந்தைக் கொடுத்து வீட்டை அனுப்பினர்.

பேசியும், எழுதியும், யோசித்தும், யாசித்தும் எங்கள் வரலாறு எழுதப்பட்டது. எங்கள் வாழ்வு கருக்கப்பட்டது.

பேசவில்லை நீ! எழுதவில்லை நீ! யாசிக்கவில்லை நீ!

'இயற்கை எனது நண்பன். வாழ்க்கை எனது தத்துவாசிரியன். வரலாறு எனது வழிகாட்டி'

இது ஒன்றையே நீ இயம்பினாய். இதற்கும் அப்பால் செயல் ஒன்றையே நீ நம்பினாய். செய்தாய். செயற்கரிய செய்தாய். ஈரம் படர்ந்த நமது நாளில், வீரம் விளைந்த வாழ்வை எமதாக்கினாய். இன்னும் செய்தாய்.

நமது தேசத்தில், நமது மண்ணில் நமது வரலாற்றை நீ திருத்தி எழுதவில்லை! திருப்பி எழுதினாய். மாற்றி எழுதினாய். மகத்தான எழுத்து அது! மகத்தான வாழ்வு அது.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வரலாற்றின் பக்கங்களில் பலர் வருகின்றார்கள். போகின்றார்கள். வரலாற்றின் பக்கங்களில் பலர் எழுதப் படுகிறார்கள். ஆனால் வரலாற்றை மாற்றி எழுதியவர்கள் ஒரு சிலர். வரலாற்றின் பக்கங்களைப் புரட்டிப் போட்டவர்கள் ஒரு சிலர். லெனின், மாவோ சேதுங், ஹொசிமின், சேகுவேரா என்று அவர் பெயர்கள். அந்த ஒரு சிலரில் ஒருவனாய், உயர்ந்தவனாய், உன்னத தலைவனாய் நீ ஆனாய். எங்கள் நெஞ்சில் நிறைந்து போனாய்.

அனுபவமே ஆசானாய், ஆற்றலே வழிகாட்டியாய், உன் வாழ்வை அமைத்தாய். அதனூடு தமிழர் வாழ்வை செதுக்கினாய். செப்பனிட்டாய்.



**இரவி அருணாச்சலம்**

ஆசிரியர்,
எழுத்தாளர்,
விமர்சகர்.
பிரித்தானியா.

என்னிடம் சில கேள்விகள் உள்ளன. கேட்கவா?

தமிழர் நாம் தலையுயர்த்தி நிமிர்ந்தது யாரினால்? நெஞ்சு நிமிர்த்தி எழுந்தது எவரினால்? இப்பொழுதெல்லாம் நம் கால்கள் நேராய் நடக்கின்றன. கோணல் நடை இல்லை. கூனல் முதுகு இல்லை. நெஞ்சு நிமிர்த்தி நாம் நேராய் நடந்தோம்! கண்கள் ஒளிர, நடையில் வேகம் வந்ததுவே! கைகள் வீசி, இந்த காற்று நமது, இந்த வயல் நமது, இந்த வானம் நமது, இந்த வாழ்வு நமது என்ற உயிர்ப்புடன் ஓர் அடி எடுத்து வைத்தோமே! இவையெல்லாம் யாரினால்? இந்தக் கால் நேராய் நடந்தது எவரினால்?

நாம் தமிழர் என்று சொல்லிப் பெருமைப்பட எவர் காரணம்?

பாருங்கள். நான் பொய்யுரைக்கின்றேனா? இப்பொழுது தமிழரின் தலைகள் குனிவதில்லையே நேரே பார்த்து பீடுநடை போடுகின்றனவே! இதற்கெல்லாம் காரணம் யார்?

புளுகு அவிழ்த்து விடுகின்றேன் என்றா சொல்கின்றீர்கள்?

இப்பொழுது பாருங்கள். தமிழர்களைப் பாருங்கள். அவர்கள் தலை நிமிர்த்தி நடப்பதைப் பாருங்கள். நாம் தமிழர்களைத்தான் சொல்கின்றேன். தறுதலைகளை அல்ல. போலிகளை, பொய்யர்களை, போக்கிரிகளை அல்ல. தமிழர்களைத்தான் சொல்கின்றேன் தமிழர் நாம் தலை நிமிர்த்தி நடக்க எவர் காரணம்?

'மறவர் படைதான் தமிழ்ப்படை - குல
மானம் ஒன்றுதான் அடிப்படை'
என்று சொல்ல வைத்தவர் யார்?
'வெறிகொள் தமிழர் புலிப்படை -அவர்
வெல்வர் என்பது வெளிப்படை'
என்று உணரவைத்தவர் எவர்?

நம்மால் இயன்றதை நாம் செய்வோம் என்னும் நம்பிக்கை தந்தவர் யார்? இயன்றது, இமயம் அளவு உயர்ந்தது என்னும் ஓர்மத்தை தந்தவர் எவர்? எம்பலம் எத்தகையது என்று எவரினால் நாம் அறிந்தோம். யானை தன் பலம் அறியாதாம். சிறிய நூல் கொண்டு கட்டினும் தன்னை அடக்கிக் கொள்ளும் யானை மிரண்டால், திமிறி எழுந்தால், காடே கொள்ளாதாம். இந்த விதமாய் நாம் எழுந்தோமே! யாரினால் இது சாத்தியமாயிற்று?

நம்முள்ளிருந்து முகிழ்ந்த ஒருவரா நமக்கு இத்தனை வல்லபம் தந்தவர்?
நமது மண்ணிலா இந்த உன்னதம் விளைந்தது?
நமது மண்ணா இந்த மகத்துவம் படைத்தது?
நமது கடலில் விளைந்த உப்பா நமக்கு இத்தனை ரோசம் தந்தது?



நமது மரத்தில் கனிந்த பழமா இத்தனை இனிமை தந்தது?
ஆச்சரியம் ஆச்சரியமாக எத்தனை கேள்விகள்! அட, என்று வியந்துபோக எத்தனை கேள்விகள்!

நமக்கு மானம் இருக்கின்றதா?
நமக்கு ரோசம் இருக்கின்றதா?
நமக்கு உணர்வு இருக்கின்றதா?
நமக்கு உரிமை வேண்டுமா?

மானம், ரோசம், உணர்வு, உரிமை என்றால் என்னவென்று எமக்குக் காட்டியவர் யார்? மானத்துடன், ரோசத்துடன் உணர்வுடன் எப்படி வாழ்வது என்று எங்களுக்கு உரைத்தவர் யார்?

உறுதி என்றால் எப்படி?
வலிமை என்றால் என்ன?
வீரம் என்றால் எத்தகையது?
இறுதிவரை போராடுவது எங்ஙனம்?
இலட்சியம் ஈடேறும்வரை நின்று பிடிப்பது எப்படி?
எதற்கும் விட்டுக் கொடுக்கா வீரம்
கொள்கையிலிருந்து விலகிப் போகா ஓர்மம்
இவற்றையெல்லாம் எமக்கு உணர்த்தியவர் யார்?
உரமுடனும், ஓர்மத்துடனும், உத்வேகத்துடனும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archives

அகவை 50

யும்போது நேர்த்தியான கோடுகளை இட முடியாது, வர்ணம் ஊறும், சிதறும். முப்பது மாணவர்களில் ஒருவரின் கையில் மட்டும் ஒரு திரிச்சீலை இருக்கும். ஊறும் வர்ணங்களை ஒற்றி, ஒற்றி அழகான ஓவியத்தை உருவாக்கப் போராடிக் கொண்டிருப்பார் ஒருவர், அவர்தான் பிரபாகரன். இருக்க வேண்டிய இடத்தில் இருக்காமல் கட்டுப் பாட்டை மீறி ஓடினால் வர்ணங்களையே ஒற்றி எடுத்துவிடுவார். அதை மற்ற வர்ணங்களோடு கலந்து ஏதோ பத்தோடு பதினொன்று என்று சமரசம் காணும் கலவைப்பழக்கம் அவரிடமும் இருக்கவில்லை, அவருடைய ஓவியங்களிலும் இருக்கவில்லை. ஈச்சந்தடி பிறஸ்தானே காரியமில்லை என்று மற்றவர்கள் கூறினாலும், செயல் நேர்த்தியில் அன்றுமுதல் இன்றுவரை அவர் தெளிவாகவே இருப்பதை உணர்கிறேன்.

எமது பாடசாலையில் காலை எட்டு மணி முதல் மாலை நாலு மணிவரை எட்டுப்பாடங்கள் நடைபெறும். வீட்டு வேலை செய்யாவிட்டாலும், ஒரு நிமிடம் பிந்தி வந்தாலும் மாலையில் ஒரு மணி நேரம் நின்று பாடசாலையை சுத்தம் செய்ய வேண்டும். ஏறத்தாழ எட்டுப் பாட நேரங்களிலும் எட்டு ஆசிரியர்களிடமும் எல்லோரும் அடி வேண்டியே ஆக வேண்டும். ஏதாவது ஒரு பாடத்தில் அடி வேண்டாமல் தப்பினால் அது மறக்க முடியாத பாடவேளைதான். எட்டாவது வகுப்பு படித்தபோது எமக்கு வகுப்பாசிரியராக ஒருவர் வந்து சேர்ந்தார். கொஞ்சம் அசந்துவிட்டாலும் இருபத்தைந்து தடவைகள் இரண்டு கன்னங்களிலும் ஓங்கி ஓங்கி அடிப்பார். படிப்பதைவிட அவரிடமிருந்து அடி வேண்டாமல் தப்புவதுதான் மிகப் பெரிய சவாலாக இருந்தது.

அவர் ஒரு சட்டம் போட்டார், வகுப்பில் முதலாவது பாடத்திற்கு அவர் வரும்போது அனைவரும் திருநீறு அணிந்து, சந்தனப் பொட்டுப் போட்டி

போரை முன்னெடுப்பது எவ்வாறு என்று எமக்குச் சொல்லித் தந்தவர் யார்?

ஒருமுறை நரம்புகளைச் சுண்டிப் பாருங்கள். நரம்புகள் அதிரும். மானம், ரோசம், உணர்வு இருக்கின்றன என்று சொல்லி அவை அதிரும். இந்த அதிரும் நரம்புகளை எங்களுக்குள் ஆக்கியவர் யார்? கொட்டும் வெற்றிமுரசை எங்களுக்குள் தட்டியவர் யார்? திக்கெட்டும் பட்டொளி வீசிப்பறக்கும் தமிழர் கொடியை உலகத் தமிழர் நெஞ்சில் ஏற்றியவர் யார்?

கழுத்தில் கறுப்புக் கயிறு கட்டி, நெஞ்சில் கடும் நஞ்சைச் சுமந்து, களத்தில், சுடுகலன் கொண்டு, எதிரியின் உயிரைக் சூறையாடி, இத்தனை வெற்றி சமைத்தாரே! யாரை நம்பி அவர் போரினுள் புகுந்தார்? தலைவன் நாமம் உச்சரித்தல்லவா அவர் தலை சரிந்தார்? வீரன் பெயர் சொல்லி அல்லவா விதையாய் வீழ்ந்தார்?

உயிரை ஆயுதமாய் எடுத்து விடுதலைப் போருக்கு தன்னைக் கொடையாய்க் கொடுக்க, ஒரு படை இருக்கின்றதே! காற்றுக் கூடப் புக முடியா இடங்களில் இவர் புகுவாரே! சாவைத் தெரிந்து வைத்து போரை எதிர்கொண்ட சந்ததிகள் இவர்கள். இந்தத்துணிவு எங்கிருந்து வந்தது? எப்படி இவர்களிடை அது விதைபட்டது. தலைவனை நம்பி அல்லவா தம்மைக் கொடுத்தனர். அண்ணனை நம்பி அல்லவா அகிலம் வென்றனர்?

பெண்ணியம் என்று உலகெலாம் பேசுகின்றதே! பேசிக் கொண்டிருப்போர் பலர்! செயலாற்றிக்கொண்டிருப்போர் யார்? ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாக வாழ வழிகாட்டியவர் யார்?

யார் அவர்?

'நாமிருக்கும் நாடு நமது' என்று நமக்கு அறிவித்தவர்.
அது நமக்கே உரிமையாம் என்றும் தெரிவித்தவர்.
புறநானூற்றுக்கு புதிய அத்தியாயம் வரைந்தவர்.
போர் வரலாற்றுக்கு புதிய பக்கம் திறந்தவர்.

மொழியாகி எங்கள் மூச்சாகி நாளை முடிசூடும் தமிழன் வழிகாட்டியாக வாழ்பவர். எங்கள் விழியாகி வீரம் விளை நிலமாகி நிற்பவர். சொல்லிற்கும் அப்பாற்பட்டவர். சோதிப் பிழம்பானவர்.

இதோ வீழ்ந்தார் தமிழர். இனி எழார் என்று எதிரி எக்காளத் தொனியுடன் கூவ 'இதோ எழுந்தார் தமிழர். இனி வீழார்' என்று சங்கநாதம் முழங்கிய தமிழின் தலைமகன் இவர்.

தம்மைக் கொடையாய்க் கொடுத்தவரின் தலைவன்.
தம்மை விறகாய் எரித்தவரின் வீரன்.
வீரா, எம் தேசத் தலைவா, முத்தமிழ் குமரா,
நீ வாழ்க, நின் படை வாழ்க. கொடி வாழ்க.
குலம் வாழ்க.
இனம் வாழ்க. நலமும் பல்லாண்டு வாழ்க.
அண்ணா, நீ வாழ்ந்தால் நாங்கள் வாழ்வோம்.
தலைவா, தாங்கள் வாழ்ந்தால் தமிழ் வாழும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வயதுடன் வளர்ந்த
# இலட்சிய உறுதி கண்டேன்



**கலாநிதி விக்டர் இராஜகுலேந்திரன்**

விரிவுரையாளர்,
அரசியல் ஆய்வாளர்,
அவுஸ்திரேலியா.

தமிழரின் மண்ணை மீட்கப் புலிக்கொடி ஏற்றிப் புதுவீரம் நிலைநாட்டி, தமிழ் வீரத்தை எமது சந்ததியினருக்கு மீளவும் காட்டி, தொடர் வெற்றிகள் பலவற்றிற்கு உரமூட்டி, தமிழரின் உரிமைப் போரிற்குத் தலைமை தாங்கி, ஒரு தேசிய இனத்தின் தன்னிகரற்ற தலைவனாக மதிக்கப்பட்டு, இன்று பொன்விழா கொண்டாடிடும், எனது மதிப்பிற்கும், அன்பிற்கும் உரிய தமிழ் தேசியத் தலைவன் தம்பி பிரபாகரன் பற்றி நான் வெளிநாடுகளில் இருந்து வியந்து அவதானித்தவற்றில் சிலவற்றை, அவரின் பொன்விழா சம்பந்தமாக வெளியிடப்படும் இந்த மலரில் பதிவு செய்வதற்கு நான் பாக்கியம் பெற்றிருப்பதோடு, பெருமிதம் அடைய வேண்டியவனாகவும் இருக்கின்றேன்.

தம்பி பிரபாகரன் 1954ல், பிறந்த வல்வெட்டித்துறைக்கு அருகாமையில் உள்ள ஊரில், அவர் பிறப்பதற்கு சில வருடங்கள் முன்னர் பிறந்த ஒருவன் என்ற முறையிலும், 1970ம் ஆண்டு நான் பேராதனைப் பல்கலைக்கழகம் புகுவதற்கு ஆயத்தமாகின்ற வேளையிலே, தமிழ் மாணவர் பேரவையின் அங்குரார்ப்பண பகிரங்க நிகழ்ச்சியான மௌன ஊர்வலத்தில் (திருநெல்வேலிச் சந்தையடியில் ஆரம்பமாகி, யாழ் GREEN FIELD மைதானத்தில் முடிவடைந்த பொதுக்கூட்டத்தில்) கறுப்புத் துணியால் வாய் கட்டி கலந்து கொண்ட ஒருவன் என்ற முறையிலும் இந்த சிறு வியப்புக் கட்டுரையை பதிவு செய்வதற்கு தகுதியுடையவன் என்ற திருப்தியினால் உந்தப்பட்டவனாகவே இதனை வரைவதற்கு முன்வந்துள்ளேன்.

நான் எனது உயர் பட்டப் படிப்பிற்காக இலங்கையை விட்டு புறப்பட்ட வருடம் தான் (1978) தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் தாம் மேற்கொண்ட 11 இராணுவ நடவடிக்கைகளுக்கு உரிமை கோரிய வருடம். தனது இளந்துளிர் வயதான 14வது பிராயத்தில் இந்தியச் சுதந்திரப் போராளிகளாகத் திகழ்ந்த சுபாஸ் சந்திரபோஸ் மற்றும் பகவத்சிங் ஆகியோரின் வழியைப் பின்பற்றி, தனக்கு வயதிற்கு மூத்தவர்களாகிய, ஒரே இலட்சியம் கொண்ட, இன்னும் 7 பேருடன் இணைந்து தலைமறைவாக செயற்பட ஆரம்பித்த தம்பி பிரபாகரன் 1978ல் ஏற்கனவே 10 வருடங்கள் தலைமறைவான விதத்தில் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு விட்டது பின்னர்தான் என்போன்றோருக்கு எல்லாம்



தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ருக்க வேண்டும். விரல்களில் நகங்களை வெட்டி, கொப்பிகளுக்கு அழகாக உறை போட்டு, தலைவாரி, சிவப்பழங்களாக எல்லோரும் நிற்க வேண்டும். நெற்றியில் திருநீறு, சந்தனம் இல்லையோ வாட்டி எடுத்துவிடுவார். ஆனால் நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து கால் நடையாக வியர்க்க விறுவிறுக்க ஓடிவரும் எங்களுடைய நெற்றியில் திருநீறோ சந்தனமோ நிற்க முடியாது. வியர்வையால் கரைந்துவிடும், அது பற்றி ஆசிரியருக்கு கவலை இல்லை. ஆனால் பிரபாகரன் கவலைப்பட்டார், அதிகாலையே கையில் திருநீறு, சந்தனத்துடனேயே வந்துவிடுவார். அதை வாங்கி நெற்றியில் அப்பி, பொட்டும் வைத்துக் கொள்வோம். தன்னோடு இருக்கும் தோழர்கள் எல்லோரையும் காப்பாற்ற வேண்டும் என்று எல்லோருக் காவும் பொதுவாக எண்ணிய மாணவன் பிரபாகரன் ஒருவர்தான்.

வகுப்பறையில் முதன்மை மாணவனாக அவரையே எல்லோரும் அன்று தேர்ந்தேடுத்தோம். அப்போது அவர் செய்ததை எல்லாம் எண்ணிப் பார்க்க இப்போது பலத்த அதிசயமாக இருக்கிறது. முதலில் வகுப்பிற்கான இலக்கிய மன்றத்தை அமைத்து, வாராவாரம் இலக்கிய மன்றக் கூட்டத்தை நடாத்தினார். அவரே பத்திராதிபராக இருந்து நாம் எழுதுவதை எல்லாம் வாசித்து வகுப்பை பரவசத்தில் ஆழ்த்தினார். அந்த நேரம் வாரம் தவறாமல் கட்டுரைகளை எழுதி அவரிடம் கொடுப்பேன். அப்படி எழுதாதே! இப்படி எழுது! அதுதான் சிறப்பு என்று வரிக்கு வரி திருத்தித் தருவார். எந்தவித தயவு தாட்சணியமும் இன்றி தவறுகளை சுட்டிக் காட்டுவார். இன்றுவரை என்னைப் போன்றவர்கள் எழுத்தாளராக நிற்பதற்கு ஆசான் அவர்தான்.

நாமே சொந்தமாக நாடகத்தை தயாரிக்கலாம் என்று அவரே ஒரு கதையை எழுதினார். வகுப்பில் உள்ள சிலரை வைத்து அந்த நாடகத்தை தெரிய வந்தது. இக்காலப்பகுதியில் தம்பி பிரபாகரன் பற்றி எமக்குத் தெரிந்தது, இவர் இலங்கைப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த தமிழ்த் தீவிரவாதிகளில் ஒருவர் என்பது மட்டுமேயாகும். தம்பி பிரபாகரனின் படம் உட்பட்ட சில தமிழ்த் தீவிரவாத இளைஞர்களின் படங்கள் அடங்கிய சுவரொட்டி ஒன்று, பேராதனைப் பல்கலைக்கழகப் புகையிரத நிலையமான 'சரசவி உயன' உட்பட பல புகையிரத நிலையங்களின் சுவர்களில் ஒட்டப்பட்டிருந்தமையாலேயே இது எமக்கெல்லாம் தெரிய வந்தது. இக்காலப்பகுதியில் நான் இதே பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக பொறுப்பேற்ற பின்னர் எனது அலுவலக அறைக்கு அடிக்கடி விஜயம் செய்யும், அப்பொழுது மாணவனாகவும், ஒரு JVP ஆதரவாளனாகவும் இருந்தவரும், தற்போது தம்பி பிரபாகரனை ஒரு பயங்கரவாதியென்று உலகிற்கு பறைசாற்றும் பணியில் முன்னணியில் திகழ்பவருமான Dayan Jayεthilaka, என்னுடன் இந்தச் சுவரொட்டியில் இருந்த இளைஞர்கள் பற்றியும், அவர்களின் சாதனைகளைப் பற்றியும் வியந்து கதைப்பது வழக்கம். அண்மையில் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் இவருடன் நான் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலைபற்றி வாதாடியபோது, Dayan என்றொருவர் அப்போது எனது வாழ்வில் குறுக்கிடாது இருந்திருந்தால், நான் ஊடகத்துறையினூடாக எமது மக்களின் உரிமைப் போராட்டத்திற்குச் செய்துவரும் பங்களிப்பை இந்தச் சிறு அளவிலேனும் செய்யத்தூண்டப்பட்டிருப்பேனா என்று ஒருகணம் சிந்தித்ததுமுண்டு. அக்காலம் தொடக்கம் தம்பி பிரபாகரனின் செயற்பாடுகளை வெளிநாடுகளிலிருந்து, பெரும்பாலும் ஊடகங்களுடாக கூர்மையாக அவதானித்து வந்ததால்தான் நான் இன்று எனது இந்தச் சிறு வியப்புக்கட்டுரையை வரையக்கூடிய நிலையில் உள்ளேன்.

பள்ளிப் பையனாக ஆயுதப் போராட்டத்தில் இறங்கிய தம்பி பிரபாகரன், ஒருவித இராணுவக் கல்லூரிப் பயிற்சியுமின்றி, உலகின் எந்தவொரு விடுதலை இயக்க தளபதியையும் விட அதிசிறந்த தானைத் தளபதியாக யாவராலும் மதிக்கப்படுவதற்கு, அவர் தான் கொண்ட இலட்சியத்தில் கொண்டிருக்கும் உறுதியும், அவரின் வயது முதிர முதிர இந்த உறுதியும் வளர்ந்து வேரூன்றியமையுமே முக்கிய காரணமென்று நான் மதிப்பிடுகின்றேன்.

1958ம் ஆண்டு நடைபெற்ற தமிழருக்கெதிரான இன ஒழிப்பு நடவடிக்கையின்போது, உருகும் தாரினுள் அமிழ்த்தி கொடூரமாக கோயில் ஐயர் ஒருவர் கொலை செய்யப்பட்டமை பற்றி ஒரு விதவைப் பெண் வர்ணித்ததைக் கேட்டதனால், இனியும் இளந்தமிழர் பார்த்துக் கொண்டிருந்தால் அது அடிமைத்தனம் என்று எண்ணியே தம்பி பிரபாகரன் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்ததாக நாம் அறிகின்றோம். தான் எடுத்திருக்கும் பாதை வெகு கரடுமுரடானது என்பதை அவர் உணர்ந்திருந்தும், தனது இலட்சியத்தை அடைவதற்கு தியாகங்களை செய்வதற்கு அவர் தனது இளவயதிலே தயாராகி விட்டதற்கு ஆதாரங்களும் உண்டு. அவர் சார்ந்திருந்த ஆரம்ப சிறு குழுவானது தமது



தமிழ் ஆவணக் காப்பகம் Tamil Archive

செயற்பாடுகளுக்கென ஒரு கைத்துப்பாக்கியை கொள்வனவு செய்ய விரும்பியபோது தேவைப்பட்ட ரூ. 150ஐ திரட்டுவதற்காக, இவரின் ஒரே ஒரு சொத்தாக அப்போது இவரிடமிருந்த இவரது சகோதரியின் திருமணத்தின் போது இவரிற்கு கிடைத்த தங்க கணையாழியை விற்று, ரூ. 50ஐ திரட்டிக் கொடுத்ததுடன் ஆரம்பித்த இவரது தியாகம், தனது வாழ்நாளின் பாதியை சக பிரஜைகள் போன்று உலகை அனுபவிக்க முடியாத விதத்தில் கழித்தபடி தொடர்கின்றது.

ஆண்டாண்டு காலமாகத் தொடர்ந்த ஆயுதப் போராட்டத்தின் போது பல சோதனைகளைத் தம்பி பிரபாகரன் எதிர்கொள்ள நேர்ந்தது. இவரின் பார்வையாளராக இருந்த எமக்கெல்லாம் பல தடவைகள் மனம் தளர்ந்த போதிலும், அவர் மனம் தளராது செயற்பட்டு அந்தத் தடைகளையெல்லாம் தாண்டுவதற்கு அவர் தனது இலட்சியத்தில் கொண்டிருந்த உறுதியே உறுதுணையாக விளங்கி இருந்திருக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது. இதுபற்றி நான் தம்பட்டம் அடிக்க வேண்டிய அவசியமில்லை. இதுபற்றி அந்தக்காலகட்டங்களில் இந்தச் சோதனைகளையே உருவாக்கக் காலாக இருந்த சிலரே இதற்குச் சாட்சியம் கூறியுள்ளனர்.

தம்பி பிரபாகரன் எதிர்கொண்ட முதல் பாரிய சோதனை அவர்மேல் பிரதமர் ராஜீவ் காந்தி நிர்வாகத்தால் திணிக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தமாகும். இதனூடாகத்தான் அவர் முதன் முதலாகப் பாரிய ஒரு அரசியல் இராணுவச் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்ததை யாவரும் அறிவர். இந்தச் சோதனையை தம்பி பிரபாகரன் எவ்வாறு தான்கொண்ட இலட்சியத்தில் அணுவும் அசையாது செயற்பட்டு முறியடித்தார் என்பது இப்பொழுது பலராலும் பதியப்பட்டிருக்கும் சரித்திரமாகும். இதில் முக்கியமானவர் இந்த இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் சூத்திரதாரிகளில் ஒருவரும், அப்பொழுது இந்தியாவின் வெளிவிவகாரச் செயலாளராக விளங்கியவருமான Joytindra Dixit ஆவார். இவர் தனது அனுபவத்தைப் பின்னர் 1998ம் ஆண்டு தான் எழுதிய “Assignment in Colombo” என்ற புத்தகத்தில், தனது கருத்துக்களாகக் குறிப்பிட்டுள்ள சிலவற்றை இங்கு பதிவு செய்வது பொருத்தமானது என எண்ணுகிறேன்.

**தம்பி பிரபாகரன் எதிர் கொண்ட முதல் பாரிய சோதனை, அவர்மேல் பிரதமர் ராஜீவ் காந்தி நிர்வாகத்தால் திணிக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தமாகும்**

தமிழர்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் ஒரு சிறந்த அரசியல் - இராணுவ சக்தியாக முன்நிலைக்குத் த. ஈ. வி. புலிகள் உயர்ந்ததற்கு Dixit அவர்கள் 6 காரணங்களைத் தனது புத்தகத்தில் நிரல்ப்படுத்தியுள்ளார். அதிலே முதலாவதாக அவர் குறிப்பிட்டுள்ளதுதான் இங்கு குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

முதலாவதாக, “இந்த இயக்கத்தின் தலைவரான வே. பிரபாகரனிடம் காணப்படும் கட்டுப்பாடு, மனவுறுதி, இலங்கைத் தமிழரின் மீட்சி என்ற இலட்சியத்திற்காகத் தன்னை அர்ப்பணம் செய்துள்ளமை ஆகிய குணாதிசயங்கள் ஆகும். இவர் யாராலும் எப்படி விமர்சிக்கப்பட்டாலும், இவரின் நெஞ்சில் சுதந்திரதாகம் சுவாலை விட்டெரிந்து கொண்டிருப்பதையும், இவரிடம் தன்னை அதற்கு அர்ப்பணிக்கும் சுபாவம் உள்ளதென்பதையும், இவர் இயற்கையான இராணுவ வல்லமையைக் கொடையாகப் பெற்ற ஒருவர் என்பதையும் எவரும் மறுக்க முடியாது” என தனது புத்தகத்தில் தம்பி பிரபாகரனைப் புகழ்ந்துள்ளார் Dixit அவர்கள்.

இதேபோன்றுதான் இந்திய அமைதி காக்கும் படை முழுவதற்கும் பொறுப்பாகப் பணிபுரிந்த லெப்டினென்ட் ஜெனரல் Dipinder Singh அவர்களும் தான் எழுதிய ‘IPKF in Sri Lanka’ என்ற புத்தகத்தில் தம்பி பிரபாகரனுக்குப் புகழாரம் சூட்டியதோடு நின்றுவிடாது, எப்பொழுதும் இந்திய அமைதிப்படையினரைத் தம்மேல் ஆரோக்கியமான மதிப்பு வைக்க வைத்துள்ள வியக்கத்தகுந்த அதி அளவிலான ஊக்கம் மற்றும் போர்புரியும் திறமை கொண்ட விடுதலைப்புலிகளுக்கு, தனது புத்தகமானது இடது கையால் வழங்கும் ஒரு Salute என்றும் வர்ணித்துள்ளமை தம்பி பிரபாகரனின் இலட்சிய உறுதியைக் கௌரவிப்பதாகவே அமைந்துள்ளது.

இந்திய அமைதி காக்கும் படையின் யாழ். பகுதித் தளபதியாகப் பணிபுரிந்த லெப்டினென்ட் ஜெனரல் S. C. Sardesh Pande வெளியிட்டுள்ள ‘Assignment Jaffna’ என்ற புத்தகத்திலும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளிற்குப் புத்தக ஆசிரியரால் புகழாரம் சூட்டப்பட்டிருக்கிறது. இந்த இயக்கத்திடம் காணப்படும் கட்டுப்பாடு, தம்மை எதற்கும் அர்ப்பணிக்கும் தன்மை, உறுதி, ஒரு குறிக்கோளை நோக்கிச் செயற்படும் திறமை, மற்றும் தொழில்நுட்பவியல் என்பவற்றால் தமிழீழ விடுதலைப் புலிகள் மேல் நான் மிகவும் மதிப்பு வைத்திருக்கின்றேன் என்றும், தமி

தமிழ் ஆவணக் காப்பகம் Tamil Archive

மேடையேற்றினார். முதல் முதலாக எனக்கும் நடிப்பதற்கு ஒரு வாய்ப்பைத் தந்தார். அவர் நாடகத்தை வகுப்பிலும், பின் மைதானத்திலும் வைத்து அபாரமாக இயக்கினார். அவர் தயாரித்த ஒரேயொரு நாடகம் அதுதான் என்று நினைக்கிறேன். இன்று டென்மார்க் கொங்கிரஸ் சென்டரில் எனது நூறாவது நாடகம் நூற்றுக்கணக்கான நடிகருடன் மேடையேறியபோது நான் அவருக்கு ஒரு கடிதத்தை எழுதினேன். நான் இதுவரை வர காரணம் நானல்ல நீங்கள் தந்த ஆரம்பம்தான் என்று எழுதினேன். இது சுய தம்பட்டமல்ல, பிரபாகரனின் ஆளுமையை, கல்வி அறிவைப் பற்றி சொல்வதற்கு நானும் நேரடியான சாட்சியாக இருக்க வேண்டும் என்ற இதய சுத்தியுடன் இதைச் சுட்டிக்காட்டுகிறேன். இது மட்டுமல்ல மேடைப் பேச்சுக்கலையையும் அவரிடமே கற்றுக் கொண்டேன். அவர் பேசுவதில் நம்பிக்கையில்லை செயலில்தான் எனக்கு நம்பிக்கை என்று கூறுவார். ஆனால் மேடைப் பேச்சின் சகல நுட்பங்களையும் அறிந்த மேதை அவர் என்பது பலருக்குத் தெரியாது.

அத்தோடு மட்டும் நின்றுவிடவில்லை, மேலும் பல காரியங்களைச் செய்தார். வகுப்புக்கான ஒரு இசைக் குழு வேண்டுமென அதை அறிமுகம் செய்தார். பின்னர் ஒரு சிறு கையெழுத்து பத்திரிகையை ஆரம்பித்து அன்றாட செய்திகளை வெளியிட்டார். 'அணில்' என்ற பெயரில் அதை ஆரம்பித்ததாக நினைக்கிறேன். அதில் பாடசாலை வளாகத்தில் நடைபெறும் அன்றாட செய்திகளை சுடச்சுட எழுதி வெளியீடு செய்தார். நாங்கள் எல்லாம் அதை வாங்கி வாசிப்போம். ஒரு நாள் ஒரு செய்தி அந்தப் பத்திரிகையில் வெளியானது, தவறு செய்த 'அணில்' ஒன்றுக்கு மரண தண்டனை என்று வேடிக்கையாக எழுதப்பட்டிருந்தது. பாடசாலை மாணவரின் உணவுகளை திருடித் தின்ழர் மத்தியில் நிலவும் உணர்வலைகளின் பிரதிபலிப்பே த. ஈ. வி. புலிகள் என்றும், இந்த உணர்வலைகள் தணியாதிருக்கும் வரை விடுதலைப் புலிகளை அழித்துவிட முடியாது என்ற அபிப்பிராயத்துடனே நான் திரும்பினேன் என்றும் லெப்டினென்ட் ஜெனரல் Pande அவர்கள் தெரிவித்துள்ளமை இந்த இயக்கத்தின் தலைவரின் இலட்சிய உறுதிக்குச் சான்று பகர்வதாகவே அமைந்துள்ளது.

1970களில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பல புரட்சிகரத் தாக்குதல்களை அடக்குவதற்காக, Hitler, Rommel ற்குக் கொடுத்த கட்டளை போன்று, காலம் சென்ற ஜனாதிபதி J.R.ஜெயவர்த்தனா தனது மருமகனான Brigadier Weeratunga விற்கு, வடக்கிற்குச் சென்று 6 மாதத்தில் எல்லாவித பயங்கரவாதத்தையும் அடக்கி வரும்படி உத்தரவிட்டிருந்தார். Brigadier Weeratunga இந்தக் கட்டளையை நிறைவேற்ற அவருக்குப் போதிய வல்லமையைக் கொடுக்கும் நோக்குடன் 1979ம் ஆண்டு July மாதம் கொடூரமான அந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தையும் நடைமுறைக்குக் கொண்டு வந்தார் ஜனாதிபதி ஜெயவர்த்தனா. ஆனால் ஒரு கைத்துப்பாக்கியுடன் ஆரம்பித்த இயக்கத்தை மரபுவழி இராணுவத்தைக் கொண்ட சிறீலங்காப் படையினை எதிர்த்து ஓயாத அலைகள் I, II, III என்று 3 பாரிய யுத்தங்களைப் புரிந்து பீரங்கிப்படையணி, தாங்கி எதிர்ப்புப் படையணி, கடற்புலி என்ற கடற்படை ஒரு சிறிய வான்படை என்பவற்றைக் கொண்டதாக, சிறீலங்கா இராணுவத்திற்குச் சமபலம் உள்ள, மரபுவழி யுத்தம் புரியும் வல்லமை பொருந்திய ஒரு இராணுவ இயக்கமாக த. ஈ. வி. புலிகளை மாற்றியமைத்துப் பதிலடி வழங்கினார் தளபதி தம்பி பிரபாகரன் அவர்கள். இந்தச் சாதனையை நிலைநாட்டுவதற்கு இவரிடம் காணப்படும் இலட்சிய உறுதியே முக்கிய காரணியாக விளங்கியது என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.


இயற்கையே தனது நண்பனென்றும், வாழ்க்கையே தனது தத்துவ ஆசானென்றும், சரித்திரமே தனது வழிகாட்டியெனவும் கூறிக்கொள்ளும் தம்பி பிரபாகரன், மனித குல மீட்புக்காக யேசுபிரான் எப்படித் தன்னைப் பிறர் இழிவுபடுத்துவதைப் பொருட்படுத்தாது வாழ்ந்து காட்டினாரோ, அவ்வழியைப் பின்பற்றித் தம்பி பிரபாகரனும் தமிழ் மக்களின் மீட்பிற்காக தான் கொண்ட இலட்சியத்தை அடைவதற்காகத் தன்னைப் பிறர் எந்தவிதமான இழிவிற்கு உட்படுத்துவதையும் சகித்துக் கொள்ளவும், சிலசமயங்களில் இதனால் பூரிப்படையவும் தயாராக உள்ளமையானது அவரின் இலட்சியத்திற்கான உறுதிக்குச் சான்று பகர்வதாகவே அமைகின்றது. சிறீலங்கா அரசினால் தேடப்பட்டு வரும் குற்றவாளிகள் வரிசையில் முதலாவது இடத்தில் தம்பி பிரபாகரன் விளங்குவது பற்றி அவரின் உணர்வலைகள் எப்படியாக இருக்கின்றது என்று அவரிடம் ஒரு தடவை பத்திரிகையாளர் ஒருவர் கேட்டிருந்தார். அதற்குத் தம்பி பிரபாகரன் பின்வருமாறு பதிலளித்திருந்தார்; பிரித்தானியர்கள் ஒரு Irish இனத்தவரைப் பயங்கரவாதி என்று குற்றம் சுமத்தினால் அவர் உண்மையான நாட்டுப்

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamil Eelam Archive

பற்றாளன் என்று ஒரு ஐரிஸ் தலைவர் ஒருமுறை குறிப்பிட்டிருந்தார். அதேபோன்றுதான் சிறீலங்கா அரசு என்னைத் தாம் தேடி வருபவர்களில் அதி முக்கியமானவர் என்று குறிப்பிடும் போது நான் ஒரு உண்மையான தமிழ்த் தேசப்பற்றாளன் என்பதையே அது சுட்டிக் காட்டுகின்றது. ஆகவே தேடப்பட்டு வருபவர்களில் அதிமுக்கியமானவ னாகப் பிறர் என்னைக் கருதுவது பற்றி நான் பெருமையடைகின்றேன். இவரின் இந்தக் கூற்றா னது, இழிமையின் விளிம்பிற்குத்தள்ளப்படும் சந் தர்ப்பத்திலும் கூட அதனை ஒரு தியாகமாக மதித் துத் தான் கொண்ட இலட்சியத்தில் உறுதியாக இருக்க தம்பி பிரபாகரன் விரும்புவதையே, எடுத் துக் காட்டுகின்றது.

எமது போராட்ட வரலாறுபற்றி BBC, Voice of America போன்ற சர்வதேச வானொலிச் சேவைக ளூடாக விமர்சிக்கப்பட்டவற்றையும், இதுபற்றிய முக்கிய செய்திகளையும் 1983ம் ஆண்டு இனக் கலவரம் நடைபெற்ற நாள் தொடக்கம் நான் நாளாந்தம் கேட்டு, ஒலிப்பதிவு நாடாக்களில் பதிவு செய்து வந்தேன். இந்தியப்படை யாழ் மண்ணில் சென்று இறங்கியதையும், தம்பி பிரபாகரன் சுது மலைக் கூட்டத்தில் அதனை வரவேற்றுப் பேசிய தையும், Pacific தீவு ஒன்றிலிருந்து கேட்டு ஒலிப் பதிவு செய்து கொண்டதும் எமது போராட்டம் முடிவுக்கு வந்து விட்டது என்று தப்புக்கணக்குப் போட்டு எனது ஒலிப்பதிவு செய்யும் வேலையை யும் அன்றுடன் நிறுத்திக் கொண்டேன். ஆனால் தம்பி பிரபாகரனோ பின்னர் இந்தியப் படைகளால் வன்னிக் காட்டினுள் வைத்துச் சுற்றி வளைக்கப் பட்ட போதிலும் சரி, பின்னர் யாழ்குடா நாட்டைச் சிறீலங்காப் படைகள் கைப்பற்றிய போது சாது ரியமாகப் பின்வாங்கி வன்னிக் காட்டினுள் மீண்டும் புகுந்த போதிலும் சரி மனம் தளராது தான் கொண்ட இலட்சியத்தில் இருந்து ஒரு அணுவேனும் விலகாது தான் கொண்ட இலட்சியத்தில் உறுதி யாக நின்றதன் பயனா கவே த.ஈ.வி.புலிகள் இயக்கம் இன்று தற் போதைய சர்வதேச அரசியல் நிலைப்பாடு கள் மத்தியிலும், ஆல் போல் உலகளாவிய ரீதியில் கிளைகள் பரப்பி, நன்றாக விழுதுகள் பரப்பி வேரூன்றி நிற் கின்றது. இதனூடாகத் தம்பி பிரபாகரனுக்கும் என்போன்றோருக்கும் இடையில் இருக்கும் பாரிய வித்தியாசத்தைக் காண்கின்றேன்.

> தம்பி பிரபாகரனின் இலட்சிய உறுதி பற்றி நான் வியப்பதற்கான இறுதியான காரணம் அவரது எந்தவொரு புறச் சக்தியிலும் தங்கி வாழாக் கொள்கை யாகும்


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தற்போது ஸ்தம்பிதம் அடைந்து போயிருக்கும் சமாதான நடவடிக்கைகளை உரிய நேரத்தில் அரசியல் சாணக்கியத்துடன் ஆரம்பித்து வைத்த தம்பி பிரபாகரன், பின்னர் சிறீலங்கா அரசும் அதற்கு முண்டு கொடுத்துத் தத்தமது இலட்சி யங்களை அடைய முண்டியடித்துக் கொள்ளும் பிறநாட்டு அரசுகளும், தமிழர் தரப்பினை ஏமாற்ற முற்படுவதைத் தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்து கொண்ட தம்பி பிரபாகரன், இடைக்காலத் தன் னாட்சி சபைப் பிரேரணையை உருவாக்கிய விதமும் இதனைச் சமர்ப்பித்துத் தமிழர் தரப்பிற்கு எதிராகச் சதி செய்ய முயன்ற சக்திகள் அனைத் தினதும் திட்டங்களை அவை முன்னெடுத்துச் செல்ல முடியாதவண்ணம் தடைபோட்டுள்ளமை யானது அவர் தனது இலட்சியத்தை அடைவதற் காக எந்தச் சக்தியையும் எதிர்க்கத் தயங்கப் போவதில்லை என்பதைச் சந்தேகம் எதுவுமின்றி எடுத்துக் காட்டுவதாகவே அமைந்துள்ளது.

தம்பி பிரபாகரனின் இலட்சிய உறுதி பற்றி நான் வியப்பதற்கான இறுதியான காரணம் அவரது எந்தவொரு புறச் சக்தியிலும் தங்கி வாழாக் கொள்கையாகும். PLOTE, EPRLF, TELO, EPDP போன்ற மற்றத் தமிழ்த் தீவிரவாத இயக்கங்கள் யாவும் வெவ்வேறு காலகட்டங்களில் இந்தியா விலோ, சிறீலங்காவிலோ அல்லது வேறு வெளி நாட்டுச் சக்திகளிலோ தங்கிச் செயற்பட்டதாலேயே, இவை யாவும் இன்று கூலிக்கும்பல்களாக மாறும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றன. இவர்களும் ஆயுதப் போராட்டத்தில் குதித்த போது தம்பி பிரபாகரனின் அதே இலட்சியத்துடன்தான் களத் தில் இறங்கியவர்கள். ஆனால் அவர்கள் தம்பி பிரபாகரனைப்போன்று தாம் கொண்ட இலட்சி யத்தில் உறுதியாகத் தளம்பாது நின்று பிடிக்க முடியாதுபோனதால்தான் இன்று கூலிக்கும்பல்க ளாகவும், எட்டப்பன் கூட்டங்களாகவும் செயற் பட வேண்டிய நிலைக் குத் தள்ளப்பட்டுள்ள னர். இது விடயத்தில் தம்பி பிரபாகரன் இள வயதில் யார் வழியைப் பின்பற்றினாரோ அதே சுபாஸ் சந்திரபோஸ் அவர்களும் பிரித்தானி யர்களை இந்திய மண் ணிலிருந்து வெளியேற்ற புறச்சக்திகளை நம்பி எப்படி ஏமாற்றமடைந் தார் என்று வெகு அண் மையில் BBC வெளியிட்

னும் சிறு விலங்குகளின் மீது தாக்கு தல் ஆரம்பித்துவிட்டதை அப்பத்திரிகை உணர்த்தியது.

இதன் அடுத்த கட்டம்தான் அவருடைய வேட்டையாடும் பழக்கம். தமிழீழப் போராட்ட வரலாற்றை அவர் ஒரு துப்பாக்கியுடன் ஆரம்பித்ததாக எழுதுவார்கள். ஆனால் அதற்கு முதல் அவரிடம் இருந்த, அவரே உருவாக்கிய முதலாவது துப்பாக்கியை நான் பார்த்திருக்கிறேன். ஒரு நாள் அந்தத் துப்பாக்கியுடன் அவர் வேட்டைக்குப் போன போது அவருடன் போன நண்பர்களில் நானும் இருந்திருக்கிறேன். இரும்புக் குழலில் துளையிட்டு, ஒரு சீனா வெடியின் திரியை அந்தத் துளைவழியாக கயிற்றில் கட்டி இழுத்து குழாயின் அடிப் பகுதிக்கு கொண்டு செல்வார். பின்னர் கற்களை அதற்குள் அடசி ஓடும் முயல்களுக்கு சுட்டு வீழ்த்துவது அவருடைய திட்டம். சிதறு சன்னமாகப் போகும் கற்களை கனன்று துப்பும் அவருடைய துப்பாக்கி. இன்று எத்தனையோ துப்பாக்கிகளை அவர் பார்த்துவிட்டாலும், அன்று ஒரு புல்லாங்குழல் போல அவர் அமைந்திருந்த வேட்டைத் துப்பாக்கியின் முனை இன்றும் என் நினைவுகளில் இருந்து நீங்க மறுக்கிறது. அவர் ஒரு துப்பாக்கியைப் பெற முதல் அடிப்படை கொடுத்தது இந்த இரும்புக் குழல் துப்பாக்கிதான்.




டுள்ள தகவல்களை நான் இங்கு குறிப்பிடாதிருக்க முடியாது. பிரித்தானிய உளவுத்துறை 1945ம் ஆண்டில் அறிந்து, 2021ம் ஆண்டு வரை வெளியிடுவதில்லை என்று ஒளித்து வைத்திருந்த இத்தகவல் இப்பொழுது 17 வருடங்கள் முன் கூட்டியே BBC க்குக் கிடைத்துள்ளது. இதன்படி சுபாஸ் சந்திரபோஸ் தனது இலட்சியத்தை அடைவதற்காகக் கள்ளமாக ஜேர்மனி நாட்டினுள் புகுந்து, Hitlerன் உதவியை நாடி, அவர்வசம் இருந்த இந்திய போர்க்கைதிகளிலிருந்து திரட்டிய 'Free India Legion' எனும் 100, 000 இந்தியப் போர்வீரர்கள் கொண்ட படையொன்றைப் பிரயோகித்து பிரித்தானிய ஆட்சியின் கீழிருந்த இந்தியாவை முற்றுகையிடுவதாகத் திட்டம் தீட்டப்பட்டது. ஆனால் முதலில் Hitlerன் படைகள் சோவியத் யூனியனிற்குள் புகுந்தபோது விரக்தியடைந்த இடதுசாரிக் கொள்கை கொண்ட சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள், Stalingard சம்பவங்களின் பின்னர் பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்த Hitler படைகளினுதவியுடன் தனது இலட்சியத்தை அடைய முடியாது என்பதை அப்பொழுது உணர்ந்து கொண்டார். இதனால் தான் திரட்டிய இந்தியப் படைக்கு துரோகம் இழைக்கும் விதத்தில் 1943ம் ஆண்டு Februaryமாதம் யப்பானிற்குப் புறப்பட்ட நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றில் சென்றுவிட்டார். இதன்பின்னர் தமது படைகளில் உள்ள இந்தியரை நம்பமுடியாது என்று பிரித்தானிய சாம்ராஜ்ஜியம் கருதி இந்தியாவிற்குச் சுதந்திரத்தை வழங்க முன்னதாகவே 1945ம் ஆண்டு சுபாஸ் சந்திரபோஸ் இறந்து விட்டதாக இந்தப் பிரித்தானியரால் இவ்வளவு காலமும் மறைத்து வைக்கப்பட்டிருந்த தகவல் தெரிவிக்கின்றது.

இதுபற்றித் தெரிந்தோ தெரியாமலோ, தம்பி பிரபாகரன் இதுவரை எந்தச் சக்தியினதும் துணையைப் பெறாமலோ எதிர்பாராமலோ இயங்கி வருவது அவர் தனது இலட்சியத்தில் கொண்டுள்ள உறுதியை மாத்திரமன்றி அவருக்கே உரித்தான தூரதிருஸ்டியாக விடயங்களை நோக்கும் திறமையையும் வெளிக்காட்டுகின்றது.

இப்படியான ஒரு தலைவன் தமிழ் மக்களிற்கு இந்தக் காலகட்டத்தில் கிடைத்திருப்பதற்குத் தமிழ் மக்கள் கொடுத்து வைத்தவர்களென்றே கருதுகின்றேன். இந்த இலட்சியவாதியும், தியாகியும், உன்னத தளபதியுமாக விளங்கும் தம்பி பிரபாகரனின் வழிநடத்தலிலேயே எமது மக்களின் சுபீட்சம் அடையப்பட வேண்டும் என்பதே எனது அவாவாகும். இப்படியான எனது அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய தம்பி பிரபாகரனை நேரில் சந்திக்கச் சிறீலங்காவினுள் நான் பாதுகாப்பாக அடி எடுத்து வைக்கக்கூடிய நாள் விரைவில் மலரும் என்ற எதிர்பார்ப்புடன்தான் நான் நாட்களை எண்ணியவண்ணம் காத்திருக்கின்றேன். இந்தத் தலைவன் இன்று தன் பிறந்தநாள், பொன்விழாவைக் கண்டு உவகையுறும் வேளையில் இவர் ஆயுள் நூறும் கண்டு, ஈழத் தமிழ் மக்களோடு சாதாரண மானிடர் போன்று கலந்து வாழும் பாக்கியத்தை அதிவிரைவில் பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# எல்லோருக்கும் விழிகள் உண்டு ஒரு சிலருக்கே தரிசனம் உண்டு

எல்லோருக்கும் விழிகள் உண்டு, உலகினைப் பார்க்க
ஆனால்
ஒரு சிலருக்கே தரிசனம் உண்டு, காலத்தைக் கடந்து
உலகினைப்பார்க்க.
இப்படி ஒரு அறிஞன் கூறிய தரிசனநோக்கு
ஈழத்து மண்ணிலும் கனன்றது ஒருசிலரிடம்
அக்கனலின் ஒரு பொறி
விடுதலைத் தேவியின் வயிற்றில் விழுந்து
நம் தமிழ்ஈழ நாடெனப் பிறந்தாள்.
56ல் ஆரம்பித்த
பேரின ஆதிக்கம் ஓங்குதற்கு முன்னரே,
தலைப்பாகை அணிந்த நம் அரசியல் தலைமைகள்
பல்லக்கில் காவப்பட்ட உபசரணை வெறியில்
குருடராகிப்போன அக்காலத்தில்
தமிழ் ஈழமண்ணின் முழுமையின் தரிசிப்பாய்
விபுலானந்த முனிவன் எம்முன் நிற்கிறான்.
அவன் தரிசன நோக்கின் ஓர் சிறு அலகாய்
'யாழ்நூல்' இசைந்தது.
மட்டுநகர் வாவியின் மீன்பாடும் இசையில்
தோய்ந்த அந்நூல்
தமிழ் ஈழ மண்ணின் முழுமையின் மோகிப்பாய்
தமிழர் பண்பாட்டின் தொன்மையின் விகசிப்பாய்
எங்கும் எழுகிறது.
விபுலானந்த முனிவன் விட்டதின் தொடராய்
தமிழ்ப்பெரும் ஆசான் கணபதிப்பிள்ளை
என்றொரு மனிதனின் இன்னோர் எழுச்சி!

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பேரின ஆதிக்கம் விசிறிய வெக்கையை
தன்னில் உணர்ந்தவன்.
தமிழின சங்காரம் நிகழப்போவதை
அவன் நெஞ்சறிந்தது.
அதன் பதில் குறியாய்
'சங்கிலியன்' என்றொரு நாடகம் தந்தான்.
அதில் அவன் வரைந்த முன்னுரை இன்னும்
நம் தமிழ் மண்ணின் காப்டக்கான
ஆவணமாயிற்று.
இன்னும் 'துரோகிகள்' என்றொரு வீரநாடகம்,
'தவறான எண்ணம்' மற்றோர் நாடகம்
இவைகள் அனைத்தும் பேரின ஆதிக்கத்தை ஆயுதம் கொண்டு
எதிர்த்துப் போராடக் கூவியழைத்தன.
ஆனால் பழைமைபேண் நமது தமிழ்த் தலைமைகளோ
தரிசனமற்ற குருடராய் இருந்தனர்.
இதற்குப் பின்னர், சிங்கள நாட்டில் தொழில்பார்த்திருந்த
'மு.த' என்று பின்னர் தெரியவந்த
நம் தமிழ் இளைஞன்
56லும் 58லும் நம் தமிழ் மக்கள் பட்ட அவலம்
கண்டு கொதித்தான்.
தஞ்சம் அளிக்கும் கோயிலுக்குள்ளும் காடையர் புகுந்து
கோயில் பூசகரையும் இழுத்துவந்து
பெற்றோல் ஊற்றிக் கொளுத்திய கொடுமை...
பேரின வாதிகள் கையில் தமிழர்
கற்பூரம் போன்று எரிந்து சாவதா?
அவன் நெஞ்சு கொதித்தது
உடனிருந்து வாழ்தல் பொய்யெனக் கண்டான்
'ஒரு தனி வீடு' நமக்கினித்தேவை
என்பதை அவனது நாவல் விளக்கிற்று.
இரத்தம் சிந்தாமல் உரிமை கிடைக்காது
என்ற உண்மையை
'இரத்தம்' என்றொரு சிறுகதை அறைந்தது.
ஆயினும் சமஷ்டி கேட்ட எம் அரசியல் தலைமைகள்
அரைகுறைப் பார்வையால் 'அகிம்சை' என்றனர்
இடைக்கிடை விழித்து 'அகிம்சை தோற்றால்
ஆயுதம் தூக்கவும் அஞ்சோம்' என்றனர்.
எதிலும் தெளிவற்று காலத்தை ஓட்டினர்.
பேரினவாதம் இறுக்கியது எம்மை.
எங்கள் இளைஞர் நாளத்தில் ஓடிய
இரத்தம் கொதித்தது.
புதிய போராட்டத் தரிசனம் சித்தித்தது.
அதன் விளைவாக எங்கள் விடுதலைப் போர்வரலாறு
இரத்தம் தோய்ந்த பாய்ச்சல் கண்டது.
எத்தனை அழிவு! எத்தனை துன்பம்!
எங்கள் இளையவர் தற்கொடை ஆற்றலில்
எங்கள் அடையாளம் மீண்டும் உயிர்த்தது.
எங்கள் அடையாளத்தை தக்கவைக்க
எங்கள் போராட்டம் நீண்டு நீண்டு வரலாறு எழுதிற்று.
இப்போ எம்வரலாறு தன் இலக்கை அறிந்து
திருப்பிடம் நோக்கித் தானாய் நடக்குது.
அதுவே இன்றைய எம் பெருந்தலைமையின்
தீர்க்கதரிசனம்.






மு.பொ.

கவிஞர்,
விமர்சகர்,
படைப்பாளி,
தமிழீழம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# Prabakaran In My View



Mr Pirabakaran was a frequent visitor to our house; in both an official and personal capacity. He would come alone with his bodyguards and on other occasions with his family. By mid 1998 we had known and lived with the legendary leader of the Tamil liberation struggle, Veluppillai Pirabakaran for twenty years. During those years of personal and political relationship we have been deeply involved in experiences with him that led to an understanding and insight into one of the most complex and commanding personalities determining the politics of Sri lanka.Those twenty years of relationship embraced an epoch in the struggle during which we walked through many good times together and traversed and triumphed over periods of adversity in both his political and personal life. Over this span of time we had seen the ideals of freedom of a young militant progressively transforming into a concrete reality.

Parallel to the march towards the liberation of his people, Mr Pirabakaran has emerged as a living symbol of national freedom and has grown in adoration to become a venerated figure amongst his oppressed people.

Mr Pirabakaran has always maintained individuality and creativity in fashioning the mode of the armed struggle of the Tamil people.Though he was familiar with the history of the national liberation struggles and freedom moments of the other countries of the world, he did not embrace or capitulate to any established models or theories of liberation warfare. For him, methods of struggle should evolve from the objective conditions unique to each struggle. He devised his own methodology of warfare suited to the necessities and conditions of the struggle of his people. Some of his methods and tactics of warfare have earned him severe condemnation, particularly among the Sinhala political and military analysts. Yet he has defended his 'ruthless' tactics as a necessary means to protect his weak and small nation of people against a strong, powerful and ruthless enemy.

**He has defended his 'ruthless' tactics as a necessary means to protect his weak and small nation of people against a strong, powerful and ruthless enemy.**

Mr Prabakaran is an activist. He believes human action is the propelling force of history. His commitment to action rather than abstract theoretical analysis of problems has been the crucial mobilising force in the growth and development of the organisation he founded. Disillusioned by the vacuous words of mainstream Tamil politicians, many young people admired Mr Pirabakaran for his disdain for the duplicity of their politics and his active politico - military campaign to achieve his objectives. And to a large extent and against even greater odds, Mr Pirabakaran has been successful in creating a Tamil national army capable of resis-

Tamileelam Archive

ting Sinhala state oppression. And while - at this stage of the struggle - he has not achieved his ultimate political objective, if it were not for the brilliant planning and execution of the armed campaign conducted by Mr. Prabakaran, the organisation he has built up over the last twenty five years - the LTTE - and the Tamil people as an identifiable national formation would have been wiped out of the island many years ago. This I concluded from my live experience with the struggle, and it is the widely held view amongst the Tamil people.

**While Mr. Prabakaran prioritised the necessity of armed struggle to achieve political goals, Bala's intervention enhanced the political dimension of the armed struggle.**

But while Mr .Prabakaran prioritised the necessity of armed struggle to achieve political goals, Bala's intervention enhanced the political dimension of the armed struggle. The relationship between these two single - minded individuals has been unique. It's one of those relationships where two different personalities come together at a specific conjuncture and play significant roles in the movement of history.

Bala has always viewed his role with the LTTE and the struggle as the advisor and theoretician to Mr. Prabakaran and the organisation. Bala's lack of concern for power, his preparedness to restrain his role to writing, teaching and advising, and his obvious commitment to the struggle, eventually made Bala the most reliable and trustworthy advisor to Mr Pirabakaran. One quality that Mr Pirabakaran has admired and valued in Bala all these years, is his commitment to truth. Bala has always acted on the principle that he should convey accurate and truthful advice in the best interests of both Mr. Prabakaran and the struggle. Whether Mr. Prabakaran has always heeded the advice or was displeased by what he frankly conveyed, was not Bala's concern. As the advisor to Mr. Prabakaran, Bala has many times told me, it was his duty to tell the truth, regardless of how unpalatable it may be.

And it was at the personal level one can gain more insight into Mr. Prabakaran. Contrary to the perception widely projected abroad, Mr. Prabakaran is a warm and sociable person. In fact if there was one word to sum up Mr. Prabakaran in the social and personal context, it would be 'gregarious'. Mr. Prabakaran loves to converse. He is interested in many issues and holds strong views. On some views I do differ. One of his favourite interests is science and he encourages the cadres to learn new technologies and scientific knowledge. Another interest of Mr Pirabakaran is Tamil culture. He has encouraged cultural expression in many forms in the organisation and society. Indeed cultural programmes constitute an important part of training camp life and most cadres are expected to participate and contribute at one level or another. The development of Tamil liberation literature and arts has always enjoyed the wholehearted support of Mr. Prabakaran. But most of all, Mr Pirabakaran is a connoisseur of good food. He himself has always shown a special interest in cooking different foods, and over the years he has developed a discerning taste. He views cooking as an art and eating a basic pleasure in life. He has often found it difficult to understand how my interest in food can be limited to fresh vegetables. Nevertheless, he has always been considerate enough to prepare food to my taste whenever I have visited his family for a meal. Without fail, before his departure from our house, he would enquire about our diet. He regularly relieved me of the burden of cooking by sending Bala food from his kitchen and when he cooked for functions for his cadres. For me, a vegetarian, he thought hard before deciding on a tasty dish he could prepare for me. Not infrequently, he had his cooks prepare a special vegetarian dish and sent it over to our house along with Bala's food.

Clearly Mr. Prabakaran has an extraordinary interest in military matters. But it is not the simple things of uniforms and weapons and technology of war which attracts this man to a military lifestyle. It is in my perception of him,that Mr. Prabakaran values certain military principles as central to decent living also. These principles form part of his wider social philisophy. The most important of these being discipline. Discipline, in Mr. Prabakaran's perpective, is a central concept in life. It governs his role as leader of a politico - military structure, his personal life and his view of society.

In his personal life M.r Prabakaran is disciplined in all dimensions. There has never been, from the

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

outset of his days in struggle, a whisper of impropriety or scandal surrounding him. He has never smoked or taken alcohol and prefers if other people don't. The only person in the organisation whom he tolerated smoking was Bala, and that was in deference to his age and the personal repect he held for him. On visits to our house he often teased Bala about his unhealthy habit. He also showed his repulsion for the smell of cigarette smoke and Bala avoided smoking in front of him.

Courage in human beings is, for Prabakaran, an admirable trait. He admires and respects manifestation of bravery, not only in his cadres, but people in general. Courage is inextricably linked to a positive and certainly inspiring feature of his character, which is that of not being subdued or deterred by anything in life, no matter how formidable and powerful it may be. He has an indomitable will and confidence that anything can be achieved if the mind is applied and focused on the project. It is not insignificance that one of his favourite sayings is 'Who dares wins'. I inquired from Bala as to what he viewed as the quality he admired most in Mr. Praba karan. The unque characteristic that Bala appreciated in Prabakaran's personality was his supreme self - confidence in times of adversity. Prabakaran has always displayed, Bala observed, a firm, resolute and unflagging confidence in pursuit of the cause of his people. Prabakaran believes in 'Dharma', the law of righteousness. His inner determination and confidence arise from the belief that the cause of his people is right, fair and just and therefore will eventually succeed, Bala explained.



**Adel Balasingam**

Writer,
Social worker,
Political activist,
freedom fighter,
Great Britain.

But apart from being a political figure and a friend to many, Mr.Prabakaran is also a family man. 'On duty' twenty-four hours of the day, every day of his life, he has had to balance his reponsibilities between the struggle with his obligations as a husband and father. Arguably, his wife Mathy has made the greatest sacrifice and has not enjoyed the companionship of her husband on the level she would have preferred. Mathy's constant care of the children obviously places her in a position to have greater influence over them. But the Piraba karan family could never be classified as 'normal'. Being the wife and children of Mr Pirabakaran locates them in a unique social position and determines their lifestyle and relationships. Uppermost in both Mr. Prabakaran and Mathy's mind is the security and future of their children. Hence, both Mathy and Mr. Prabakaran, as is consistent with Jaffna parental thinking and aspirations, encourage the children in their educational pursuits. Mathy in particular has spent many hours privately tutoring her children at home and she fosters in them a healthy passion for knowledge. But his family is lifeblood to Mr Pirabakaran. On many occasions when he is 'off' duty he visits our house with Mathy and their three children, Charles, born in 1985, Towaraha, one year younger, and Balachandran, who was an unexpected addition to the family in 1996. I had no idea when I helped Mathy deliver her first son that he would grow to resemble Mr. Prabakaran not only in looks, but in characteristics also. Towaraha, the only girl, is more serious and studies well. The last child, although with Mr Pirabakaran's features and obviously a favourite in the family, had not grown sufficiently when I left the Vanni for me to comment on his personality.



Security concerns have compelled Mr Prabakaran to adopt what many have mistakenly labelled a 'reclusive' life style. His secluded existence under conditions of continued war and his inaccessibility to the media have made him the most misunderstood and feared guerrilla leader of our times.He has, of course, become most successful and popular in his spectacular military campaign. His military ability has

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

often perplexed the many professional military minds in the world. So what is it that has earned this short, stocky, neat man so much love from his people on the one hand, and notoriety from the world on the other? How do we account for the contradiction in his people's perception of him, and the vilification by the world?

**Mr. Prabakaran's nationalism is not a manifestation of Tamil chauvinism or racism, asmany Sinhala critics would like to argue. His national sentiment arose from a determination to resist Sinhala racist oppression that aims at the destruction of his people.**

Mr. Prabakaran, born in the coastal village of Valvettiturai on 26th November 1954 was a sixteen - year - old teenager when he took up arms and became involved in the political struggle of his people.He was, in other words, a 'child soldier' if we use the language of today. From those early days



he has never lived a 'normal' life. As his commitment deepened, he mobilised and organised a group of radical youth who shared his views into an underground guerrilla organisation and launched an armed resistance campaign. His daring guerrilla attacks brought him to the attention of the state authorities and he became a'wanted' man living an underground life in Jaffna.His bold armed challenge to the might of the Sinhala state earned Mr. Prabakaran a noble reputation and he became a heroic figure amongst his people.The shrewdness and intelligence he successfully deployed in challenging the state was viewed by the people as their triumph and an assertion of their pride and identity. Mr. Prabakaran's sustained and successful armed resistance against mounting state oppression has earned him the mantle of national leader of the Tamil people's struggle for freedom and independence. This noble objective fuels his passion and dominates his spirit. The stuggle has become his life and he has become the struggle.

Although Mr. Prabakaran would never make any pretensions to being a theorist or an ideologue, his politics place him squarely in the camp of a patriotic nationalist. Mr. Prabakaran's nationalism is not a manifestation of Tamil chauvinism or racism, as many Sinhala critics would like to argue. His national sentiment arose from a determination to resist Sinhala racist oppression that aims at the destruction of his people. In other words, the racism of the Sinhala state made him a fierce patriot, a passionate lover of his oppressed nation. His deep love for his people, their culture and-more specifically - their language, fuels his dedication and determination to secure their survival. For him, uncluttered by abstract concepts and theories, the problem confronting the Tamil people is clear - cut and simple and the struggle for freedom is just.His psyche is deeply rooted in the soil of his motherland, the North-East, which he always refers to as Tamil Eelam.He has an unshakeable view that his people have a right to live in peace, dignity and harmony in their historic homeland. His perception of Tamil Eelam is neither secessionist nor expansionist. For him, Tamil Eelam belongs to the Tamils and they have the sovereign right over their territory. Indeed, he has neither demonstrated nor articulated any aspiration to annex traditional Sinhala territory nor does he dream of an expansionist greater Eelam as projected by some Indian critics.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

எமது வீட்டிற்கு திரு.பிரபாகரன் அடிக்கடி வந்து செல்வார். உத்தியோக ரீதியாகவும், தனிப்பட்ட முறையிலும் அவரது விஜயம் அமையும். அவர் தனியே தனது மெய்ப் பாதுகாவலர்களுடன் வருவார். மற்றும் சமயங்களில், தனது குடும்பத்தினருடன் வருவார். அப்பொழுது 1998ம் ஆண்டின் மத்திய காலம், தமிழீழ

# எனது பார்வையில் திரு.பிரபாகரன்



விடுதலைப் போராட்டத்தின் வரலாற்று நாயகனான திரு.வேலுப்பிள்ளை பிரபாகரனை அறிந்து பழகி, சேர்ந்து வாழ்ந்து இருபது ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. இந்த நீண்ட காலகட்டத்தில், தனிப்பட்ட முறையிலும், அரசியல் ரீதியாகவும் கொண்டிருந்த உறவும், அதனால் அவருடன் சேர்ந்து பகிர்ந்த ஆழமான அனுபவங்களும் அவரைப் புரிந்து கொள்ள ஏதுவாக அமைந்தன. அதாவது, இலங்கைத் தீவின் அரசியற் தலைவிதியை நிர்ணயிக்கும் வல்லாற்றலுடைய ஒரு மாமனிதனின் மிகவும் சிக்கலான ஆளுமையை புரியக் கூடியதாக இருந்தது. இந்த இருபது ஆண்டுகால உறவு, தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் ஒரு சகாப்தம் எனச் சொல்லலாம். இந்த சகாப்தத்தில், அவரது அரசியல் வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் ஏற்பட்ட இன்ப துன்பங்களிலும், சரிவு நிமிர்வுகளிலும், இடர்களை மீண்ட வெற்றிகளிலும் நாம் ஒன்றாகவே பயணித்தோம். இந்த நீண்ட பயணத்தின் போது, ஒரு இளம் தீவிரவாதியின் விடுதலை இலட்சியங்கள், முன்னேற்றப் பாதையில் படிப்படியாக மெய்வடிவம் பெற்றுவந்துள்ளதை நாம் காணக்கூடியதாக இருந்தது. தனது மக்களின் விடுதலைப்பாதையில் வெற்றிநடை போட்டுச் செல்லும் அதேவேளை, தேசிய சுதந்திரத்தின் உயிர்ச் சின்னமாகவும் திரு. பிரபாகரன் உருவகம் பெற்றார். அத்தோடு, ஒடுக்கப்படும் அவரது மக்கள் மத்தியில் போற்றிப் பூசிக்கப்படும் புனிதராகவும் அவர் வளர்ச்சி பெற்றார்.

தனது சொந்த பாதுகாப்பு காரணத்திற்காக திரு.பிரபாகரன் ஒதுங்கி வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார். இதனைச் சிலர் தப்பாகக் கருதி அவரைத் தனித்து வாழும் துறவியாக சித்தரிக்க முயன்றனர். தொடரும் போர்ச்சூழல் புறநிலையால் ஒதுங்கி வாழ நேர்ந்ததாலும் ஊடகவியலாளர்களை தவிர்த்து வந்ததாலும் அவரை உலகம் புரிந்து கொள்ளவில்லை. அதனால் இன்றைய நவயுகத்தில் அவர் மிகவும் புரியப்படாத மனிதராக, அச்சத்திற்குரிய கெரில்லாத் தலைவராகவும் கருதப்பட்டு வருகின்றார். ஆயினும் அவரது அலாதியான இராணுவ வெற்றிகள் அவருக்கு பெயரையும் புகழையும் பெற்றுக் கொடுத்தன. போர்க் கலையில் பிரபாகரன் காட்டிவரும் திறனாற்றல் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பூட்டி வருகிறது. ஒருபுறம் தனது மக்களின் ஆழமான அன்பையும், மறுபுறம் உலகத்தாரின் வசைப் பெயரையும் பெற்றுள்ள இந்த உயரம் குறைந்த, கட்டமைப்பான, தூய்மையான மனிதனுக்கு இவற்றைத் தேடிக் கொடுத்தது என்ன? சொந்த மக்கள் மத்தியில் ஒரு பார்வையும், உலகத்தார் மத்தியில் இன்னொரு பார்வையுமாக இரு முரண்பட்ட கண்

> **போர்க் கலையில் பிரபாகரன் காட்டிவரும் திறனாற்றல் உலக இராணுவ நிபுணர்களையே திகைப்பூட்டி வருகிறது.**

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamil eelam Archive

ணோட்டங்கள் ஏற்பட்டதன் காரணம் என்ன?

1954ம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி, யாழ் குடாநாட்டின் கரையோரக் கிராமமாகிய வல்வெட்டித்துறையில் பிறந்த திரு பிரபாகரன் தனது 16 வயதுப் பிராயத்தில் ஆயுதம் ஏந்தி, அரசியற் போராட்டத்தில் குதித்தார். இன்றைய மொழியில் சொல்லப்போனால் அவர் ஒரு 'குழந்தைப்' போர்வீரனாகவே களத்தில் இறங்கினார். சிறுபிராயத்திலிருந்தே அவர் சாதாரண வாழ்க்கையை வாழவில்லை. அவரது இலட்சியப்பற்று தீவிரமாகியதை அடுத்து, தம்மோடு ஒத்த கருத்துள்ள தீவிரவாத இளைஞர்களை அணிதிரட்டி ஒரு புரட்சிகர அமைப்பை உருவாக்கினார். இது ஓர் தலைமறைவு - கெரில்லா இயக்கமாக உருவகம் பெற்று ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தது. பிரபாகரனது துணிச்சலான ஆயுதப் போராட்ட நடவடிக்கைகள் அரச அதிகாரிகளின் கவனத்தை ஈர்த்தன. இதன் விளைவாக அவர் ஒரு 'தேடப்படும் நபராக' மாற்றப்பட்டு யாழ்ப்பாணத்தில் தலைமறைவு வாழ்க்கையைத் தழுவவேண்டி நேர்ந்தது. பலம்மிக்க சிங்கள அரசுக்கு பிரபாகரன் விடுத்த துணிகரமான சவால் அவரைத் தமிழ் மக்கள் மத்தியில் மரியாதைக்கு உரியவராகப் பிரபல்யப்படுத்தியது. காலப் போக்கில், மக்களிடையே ஒரு மாவீரனாக, சரித்திர நாயகனாக அவர் போற்றப்பட்டார். மிகவும் நுட்பமாக, புத்திகூர்மையுடன் அரசுக்கு சவால் விடுத்து அவர் ஈட்டிய சாதனைகளை தமது வெற்றிகளாகவே கருதி தமிழ் மக்கள் பெருமை கொண்டனர். தமது அடையாளத்தையும், தேசிய கௌரவத்தையும் மேம்பாடு செய்யும் சாதனைகளாகவும் இதனை மக்கள் கருதினர். அரச அடக்குமுறை அதிகரித்துச் சென்றபோது பிரபாகரனின் ஆயுதப் போராட்டமும் தொடர்ச்சியான வெற்றிகளையீட்டி முன்னேறியது. இந்த வெற்றிகரமான விடுதலைப் போரின் விளைவாக திரு. பிரபாகரன் தமிழீழ மக்களின் தேசியத் தலைவன் என்ற உன்னத இடத்தை தனதாக்கிக்கொண்டார். தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரம் அவரது இலட்சிய வேட்கையாக, தணியாத ஆன்மீக தாகமாக உருப்பெற்றது. விடுதலைப் போராட்டமே அவரது வாழ்க்கையாகவும், அவரது வாழ்க்கையே விடுதலைப் போராட்டமாகவும் மாறியது.

ஒரு தத்துவ ஆசிரியராகவோ, அல்லது சித்தாந்த வாதியாகவோ திரு. பிரபாகரன் என்றுமே பாசாங்கு செய்ததில்லை. அவரது அரசியல் இலட்சியத்தினை ஆழமாகப் பார்த்தால் அவரை ஒரு நாட்டுப் பற்றுடைய தேசியவாதியாகவே கருதமுடியும். சில சிங்கள அரசியல் விமர்சகர்கள் வாதிடுவதுபோல பிரபாகரனின் தேசியவாதம் தமிழ் இனவெறியைப் பிரதிபலிக்கவில்லை. தமிழ் மக்களை இனரீதியாக அழித்தொழிக்க வேண்டுமென்ற சிங்கள இனவாத ஒடுக்குமுறையை முறியடிக்க வேண்டுமென்பதில் திரு.பிரபாகரன் திடசங்கற்பம் பூண்டு நிற்கின்றார். இந்த திடசங்கற்பத்திலிருந்து பிறந்ததுதான் பிரபாகரனின் தமிழ்த் தேசியப் பற்று. வேறு வார்த்தைகளில் சொல்வதானால் சிங்கள அரசின் இனவெறிக்கொள்கை தான் பிரபாகரனை ஒரு தீவிர நாட்டுப்பற்றாளனாக மாற்றியது எனலாம். தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள ஆழமான பாசமும், அவர்களது பண்பாடு மீதும், குறிப்பாக தமிழ்மொழிமீது கொண்டுள்ள தீராத காதலும் பிரபாகரனின் விடுதலை வேட்கைக்கு ஆதாரமாக அமைகின்றன. அரசியற் சித்தாந்தங்கள், கோட்பாடுகள் பற்றி பிரபாகரன் பெரிதும் அலட்டிக் கொள்வதில்லை. அவரைப் பொறுத்தவரை தமிழ்மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை, சிக்கல்கள் நிறைந்த பூடகமான விடயம் அல்ல. தமிழரின் பிரச்சினையை அவர் மிகவும் தெளிவானதாகவே நோக்குகின்றார். அத்துடன் தமிழரின் போராட்டத்தையும் நியாயமானதாகவே அவர் கருதுகிறார். தமிழீழம் என்கிற தாயக மண்ணில்தான் பிரபாகரனின் ஆழ்மனம் ஆழ வேரோடி நிற்கிறது. தமிழ் மக்கள் தமது வரலாற்று ரீதியிலான தாயக மண்ணில் சமாதானமாக, கௌரவமாக, ஒத்திசைவாக வாழ்வதற்கு உரித்தானவர்கள் என்பதில் பிரபாகரனுக்கு அசைக்க முடியாத நம்பிக்கையுண்டு. பிரபாகரனின் தமிழீழக் கொள்கையில் பிரிவினைவாதமோ விரிவாக்க நோக்கமோ இருக்கவில்லை. தமிழீழம் தமிழீழ மக்களுக்கே சொந்தமானது, தமிழீழ சொந்த மாநிலம் மீது தமிழீழ மக்களுக்கே இறையாட்சி உரிமையுண்டு என்பதே பிரபாகரனின் நிலைப்பாடு. சிங்கள மக்களது பாரம்பரியப் பிரதேசங்களை ஆக்கிரமிப்பதோ, அபகரிப்பதோ பிரபாகரனின் நோக்கமல்ல. அவரது சிந்தனையிலும் செயற்பாட்டிலும் இத்தகைய நோக்கத்தைக் காண முடியாது. சில இந்திய அரசியல் விமர்சகர்கள் சொல்வதுபோன்று தமிழீழத்தை அகன்ற ஈழமாக விரிவாக்கம் செய்யும் கனவு கூட அவர் கண்டதில்லை.

தமிழீழ மக்களின் தேசிய சுதந்திரம் அவரது இலட்சிய வேட்கையாக, தணியாத ஆன்மீக தாகமாக உருப்பெற்றது. விடுதலைப் போராட்டமே அவரது வாழ்க்கையாகவும், அவரது வாழ்க்கையே விடுதலைப் போராட்டமாகவும் மாறியது.

தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தை நெறிப்படுத்துவதில் பிரபாகரன் எப்பொழுதுமே தனித்துவத்தையும், தனிவழியையும் கடைப்பிடித்து வந்திருக்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கிறார். உலக விடுதலைப் போராட்டங்களின் வரலாறு பற்றியும், மற்றைய நாடுகளின் சுதந்திர இயக்கங்கள் பற்றியும் நன்கு அறிந்தபோதும் அந்நிய போராட்ட வடிவங்களை கண்மூடித்தனமாகப் பின்பற்ற பிரபாகரன் விரும்பியதில்லை. எந்த விடுதலைப் போராட்டமும் அந்தந்த வரலாற்றுச் சூழலுக்கும், யதார்த்த புறநிலைகளுக்கும் ஏதுவானதாக வளர்ச்சிநிலை காணவேண்டும் என்பதே பிரபாகரனின் நிலைப்பாடு. தனது மக்களின் போராட்ட புறநிலைகளுக்கும் தேவைகளுக்கும் இசைவாகவே அவர் தனது போர் முறைகளை நெறிப்படுத்தினார். அவரது சில போர்த் தந்திரோபாயங்களும் உத்திகளும் பலத்த கண்டனங்களுக்கு, குறிப்பாக சிங்கள அரசியல் இராணுவ ஆய்வாளர்களின் கண்டனங்களுக்கு ஆளாவதுண்டு. மிகவும் பலம்வாய்ந்த, சக்திமிக்க, ஈவிரக்கமற்ற எதிரியிடமிருந்து மிகவும் பலவீனமான, சிறிய தேசிய இன மக்களைப் பாதுகாப்பதற்கு ஈவிரக்கமற்ற உத்திகளை கையாள வேண்டியது அவசியம் என தனது போர் நடவடிக்கைகளுக்கு நியாயம் கூறுவார் பிரபாகரன்.



**அடேல் பாலசிங்கம்**

எழுத்தாளர்,
சமுகவியலாளர்,
அரசியற்
செயற்பாட்டாளர்,
போராளி.
பிரித்தானியா.

பிரபாகரன் ஒரு கரும வீரர். செயலில் நம்பிக்கை உடையவர். மனித செயற்பாடுதான் வரலாற்றை இயக்கும் உந்து சக்தி என்பதில் அவருக்கு அசையாத நம்பிக்கை உண்டு. பூடகமான தத்துவார்த்த கோட்பாடுகள் மூலம் பிரச்சினைகளை அலசிப் பார்க்காமல், ஆக்கமான செயற்பாட்டில் நம்பிக்கை கொண்டிருப்பது காரணமாகவே அவர் தனது விடுதலை இயக்கத்தை முன்னேற்றப் பாதையில் முன் நடத்திச் சென்றார். தமிழ் அரசியல்வாதிகளின் வார்த்தை ஜாலங்களில் ஏமாந்து விரக்தியடைந்த புரட்சிகர இளைஞர் சமுதாயத்தை பிரபாகரனின் செயற்திறன்மிக்க போராட்டப் பாதை வெகுவாகக் கவர்ந்து இழுத்தது. இதன் காரணமாக, எத்தனையோ இடர்களுக்கும் மத்தியில், இளம் சமுகத்தை அணி திரட்டி, சிங்கள அரச யந்திரத்தை எதிர்த்துப் போராடும் வலுவுடைய ஒரு தேசிய விடுதலை இராணுவத்தை அவரால் கட்டியெழுப்ப முடிந்தது.



தனது போராட்ட இலட்சியத்தை பிரபாகரன் இன்னும் அடையவில்லை என்பது உண்மைதான். ஆயினும், பிரபாகரனது மதிநுட்பமான போர் திட்டங்களும், அவற்றைத் திறம்பட நிறைவு செய்யும் அபாரமான ஆற்றலும் காரணமாகவே, இருபத்தைந்து ஆண்டு காலத்திற்கு மேலாக அவர் கட்டிவளர்த்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு இன்று தலை நிமிர்ந்து நிற்கிறது. தமிழீழ மக்களும் ஒரு தேசிய இனக் கட்டமைப்போடு நிலைத்து நிற்கின்றனர். பிரபாகரன் இல்லாது போனால் விடுதலைப் புலிகள் அமைப்பும், தமிழ்த் தேசிய இனமும் பல வருடங்களுக்கு முன்னரே அழிக்கப்பட்டிருக்கும். புலிகளுடனான எனது வாழ்பனுபவத்திலிருந்தே நான் இதைக் கூறுகின்றேன். தமிழ் மக்களும் நிச்சயமாக இக் கருத்தையே கொண்டுள்ளனர்.

தமிழீழ மக்களின் அரசியல் இலட்சியங்களை அடைவதற்கு ஆயுதப் போராட்டத்தின் தேவையையும் அவசியத்தையும் முதன்மைப்படுத்தி திரு பிரபாகரன் செயற்பட்டபோது, அந்த ஆயுதப் போராட்டத்தின் அரசியற் பரிமாணத்தை மேலோங்கச் செய்வதற்காக பாலா உழைத்தார். ஒருமுகச் சிந்தனையுடைய இவ்விரு தனிப்பட்ட மனிதர்களது உறவு மிகவும் அபூர்வமானது. வரலாற்று இயக்கத்தின் ஒரு முக்கிய கால கட்டத்தில், வெவ்வேறு ஆளுமையுடைய இரு மனிதர்கள் ஒன்றாக இணைந்து முக்கிய பங்குகளை வகித்துச் செயற்படும் அபூர்வமான உறவுகளில் இதுவும் ஒன்று.

திரு பிரபாகரனதும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பினதும் ஆலோசகராகவும் தத்துவாசிரியராகவும் செயற்படுவதே தனது பங்கு என பாலா எப்பொழுதுமே கருதிக்கொள்வார். பாலாவுக்கு அதிகார அபிலாசைகள் எதுவும் கிடையாது. எழுதுவது, கற்பிப்பது, ஆலோசனை வழங்குவது போன்றவற்றுடன் தனது பங்களிப்பை அவர் வரையறுத்துக் கொள்வார். அத்தோடு உறுதி தளராத இலட்சியப் பற்றுள்ளவர். இவை காரணமாகவே திரு பிரபாகரனின் மிகவும் நம்பிக்கைக்குரிய ஆலோசகராக அவரால் பணிபுரிய முடிந்தது. உண்மை பேசும் நேர்மையான பண்பு பாலாவிடம் உண்டு.

Tamileelam Archive

இப் பண்பியல்பு காரணமாகவே திரு. பிரபாகரன் பாலாவிடம் அன்பும் மதிப்பும் வைத்திருக்கிறார். விடுதலைப் போராட்டத்தினதும் திரு. பிரபாகரன தும் நலனைக் கருத்திற்கொண்டு, எப்பொழுதுமே எவ்விடயத்திலும் சரியான, உண்மை வழுவாத ஆலோசனை வழங்கவேண்டும் என்பதே பாலாவின் குறிக்கோள். தமது ஆலோசனைகளை பிரபாகரன் ஏற்றுக்கொள்வாரா அல்லது தாம் மனம் திறந்து நேர்மையுடன் கூறுவது அவருக்கு வெறுப்பூட்டுமோ என்பது பற்றியெல்லாம் பாலா கவலைப்படுவதில்லை. திரு பிரபாகரனின் ஆலோசகர் என்ற ரீதியில், எவ் வளவு கசப்பாக இருந்தபோதும் உண்மையை எடுத் துச் சொல்வதுதான் தனது கடமையென பாலா என்னிடம் அடிக்கடி சொல்லியிருக்கிறார்.

திரு. பிரபாகரனின் தனிமனித இயல்புகளைப் பார்க்கும்போது தான் அவரை ஆழமாக புரிந்து கொள்ள முடியும். வெளியுலகம் அவரை சித்தரிப் பதுபோல் அல்லாமல், அவர் ஒரு அன்புள்ளம் படைத்த மனிதர். மற்றவர்களுடன் எளிதில் பழகு வார். கூடிப் பழகி, உரையாடி மகிழ்கின்ற இயல்பு அவரது தனித்துவப் பண்பு. அவர் பல்வேறு விவ காரங்களில் ஆர்வமும் அக்கறையும் உள்ளவர். சில விடயங்களில் தீவிரமான நிலைப்பாடும் உடை யவர். ஒரு சில விடயங்களில் எனக்கு அவருடன் கருத்து வேறுபாடு உண்டு. விஞ்ஞான அறிவியற் துறையில் அவருக்கு அலாதியான ஆர்வமுண்டு. விஞ்ஞான, தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டுமென அவர் அடிக்கடி போராளிகளை ஊக்குவிப்பதுண்டு. தமிழ்க் கலாச்சாரத்திலும் அவ ருக்கு ஆழமான பற்றுண்டு. போராட்ட வாழ்வு கலாச்சார வடிவங்களில் வெளிப்பாடு காணவேண்டும் என விரும்பும் அவர், இயக்கத்திலும் சமூக மட்டத் திலும் அதனை வலியுறுத்துவார். இராணுவ பயிற்சி முகாம்களில் கலை நிகழ்ச்சிகளுக்கு முக்கிய இடம் கொடுப்பார். இந் நிகழ்வுகளில் போராளிகள் நேரடியாகப் பங்களிக்க வேண்டும் என்பது அவரது அவா. விடுதலை விழுமியம் சார்ந்த கலை, இலக்கியப் படைப்புகள் தமிழீழத்தில் வளர்ச்சிகாண வேண்டும் என்பதில் ஆர்வம் உடையவர். இத்தகைய படைப்பு ஆக்கங்களை அவர் ஊக்குவித்தும் வருகிறார்.

சுவையான உணவு வகைகளை உண்பதிலும் அவற்றைத் தயாரிப்பதிலும் அவருக்கு ஒரு தனி விருப்பு. இதனால் அவர் விசேடமான சுவைத்திறனை வளர்த்துக்கொண்டார். சுவைத்து உண்பது வாழ்க் கையின் அடிப்படை இன்பங்களில் ஒன்று என்பதும், சமைப்பது ஒரு கலை என்பதும் அவரது கருத்து. ஒருசில மரக்கறி வகைகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட எனது சுவையின்பத்தை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனினும் அவரது இருப்பிடத்திற்கு எம்மை விருந்திற்காக அழைக்கும் பொழுதெல்லாம் மிகவும் சுவையான மரக்கறி உணவுவகைகளை எனக்கென்று விசேடமாக ஏற்பாடு செய்வார். அவ ரது இருப்பிடத்திலிருந்து அடிக்கடி பாலாவுக்கு சுவையான உணவு வகைகள் தயாரித்து அனுப்பி வைப்பார். அப்பொழுது எனக்கும் மரக்கறி உணவு வரும். இப்படியான அவரது கவனிப்பால் எனது சமை யல் சுமை குறைவதுண்டு.

போர்க்கலையில் திரு பிரபாகரன் அபாரமான ஆற்றல் படைத்தவர் என்பது அனைவருக்கும் தெரிந்த விடயம். ஆயுதப் போராட்ட வாழ்வில் அவரை ஆழ மாக ஈர்ப்பது வெறும் ஆயுதங்களோ, சீருடைகளோ, இராணுவத் தொழில் நுட்பங்களோ அல்ல. சீரான வாழ்க்கையை நெறிப்படுத்தும் சில போர்ப் பண் புகளை அவர் பெரிதும் மதிக்கிறார் என்பதே எனது கருத்து. அவரது சமூக தத்துவார்த்தப் பார்வையி லும், இந்தப் பண்புகள் முக்கிய இடத்தைப் பெறு கின்றன. இந்தப் போர்ப் பண்புகளில் முக்கியமானது ஒழுக்கம். திரு. பிரபாகரனது பார்வையில், வாழ்க்கை நெறிக்கு மையமான கோட்பாடு ஒழுக்கம்தான். ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற பண்புதான் அவரது தனிப்பட்ட வாழ்விலும், சமூகப் பார்வையிலும், இராணுவ - அரசியல் ரீதியான அவரது தலை மைத்துவத்திலும் மேலாண்மை செலுத்தி நிற்கின்றது.

**திரு பிரபாகரனின் தனிமனித இயல்புகளைப் பார்க்கும்போது தான் அவரை ஆழமாக புரிந்து கொள்ள முடியும். வெளியுலகம் அவரை சித்தரிப்பதுபோல் அல்லாமல், அவர் ஒரு அன்புள்ளம் படைத்த மனிதர்.**

தனது சொந்த வாழ்க்கையின் சகல பரிமாணங்களிலும் பிரபாகரன் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிறைந் தவராக வாழ்ந்து வரு கிறார். அவரது போரா ட்ட வாழ்வின் ஆரம்பத் திலிருந்து இன்றுவரை அவர் மீது ஒழுங்கீனம் பற்றியோ ஏதாவது அவதூறு பற்றியோ சிறிய சிலு சிலுப்புக்கூட ஏற்பட்டது கிடையாது. பிரபாகரன் ஒருபொழுதும் புகைத்தது கிடையாது. மதுபானம் அருந்தியதும் கிடையாது. மற்றவர்களிடமும் இப் பழக்கத்தை அவர் விரும்பவில்லை. விடுதலைப் புலிகள் அமைப்பில் புகைபிடிக்கும் பழக்கம் கொண்ட ஒருவரைப் பிரபாகரன் சகித்துக்கொண்டார் என்றால், அவர் பாலாவாக மட்டுமே இருப்பார். பாலாவின் வயதும் அவர் மீது வைத்துள்ள தனிப்பட்ட மரியா தையுமே இதற்கு காரணமாகும். எமது வீட்டுக்கு வரும் பொழுதெல்லாம் உடல்நலத்தைக் கெடுக்கும் இந்தத் தீப்பழக்கத்தை பிரபாகரன் கேலியும் கிண்டலும் செய்வார். பாலாவிடமிருந்து வரும்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சிகரெட் நெடி பிரபாகரனுக்குப் பிடிப்பதில்லை. இதனால் பிரபாகரன் முன்னிலையில் சிகரெட் பிடிப்பதை பாலாவும் நிறுத்திக்கொண்டார்.

மனிதர்களிடம் வீரத்தையும் துணிவையும் போற்றுதற்குரிய பண்பாக பிரபாகரன் மதித்தார். தனது போராளிகளிடம் மட்டுமன்றி, பொதுமக்களிடமிருந்தும் வீர உணர்வு வெளிப்பாடுகண்டால் அதனை அவர் போற்றிக் கௌரவிப்பார். வீரம் என்பது அவரது ஆளுமையில் ஆழப் பதிந்திருக்கும் ஒரு பண்பு. போராட்ட வாழ்வில் எந்தப் பெரிய சக்தியாக இருந்தாலும், எதைக் கண்டும் அஞ்சாத, கலங்காத குணாம்சம் பிரபாகரனிடம் ஊறிப்போயிருக்கிறது. எந்த ஒரு விடயத்திலும், எந்தவொரு இலட்சியத்திலும் மனதை ஆழமாகப் பதிய வைத்து, அக்கறையுடன் செயற்பட்டால் எதையும் சாதிக்க முடியும் என்பதில் பிரபாகரனிடம் அசைக்கமுடியாத உறுதி இருக்கிறது. துணிந்தவனுக்கு வெற்றி நிச்சயம் என்பது பிரபாகரன் அடிக்கடி கூறும் தாரக மந்திரம்.

'நீங்கள் பிரபாகரனிடம் கண்டுவியந்த குணாம்சங்களில் முக்கியமானது எது' என்று நான் பாலாவிடம் கேட்டேன். 'இன்னல்களும் இடர்களும் எழுந்த நெருக்கடியான காலகட்டங்களில் தளராத தன்னம்பிக்கையுடன் செயலாற்றுவதுதான் பிரபாகரனின் ஆளுமையில் நான் கண்டு வியந்த அபூர்வமான குணாம்சம்' என்று பாலா சொன்னார். தனது விடுதலை இலட்சியத்திற்காக அவர் செயற்படும் போது அவரிடம் காணப்படும் உறுதியான, தீர்க்கமான, தளராத தன்நம்பிக்கையை பல தடவைகள் பாலா அவதானித்திருக்கிறார். தர்மத்தில் நம்பிக்கை கொண்டவர் திரு பிரபாகரன். தனது மக்களின் போராட்ட இலட்சியம் சரியானது. நீதியானது, நியாயமானது, எனவே போராட்டத்தில் இறுதி வெற்றி நிச்சயம் என்பது பிரபாகரனின் அடிமனதில் ஆழவேரூன்றிய நம்பிக்கை என்பது பாலா தரும் விளக்கம்.

ஒரு அரசியல் தலைவனாகவும், எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகிவரும் பிரபாகரன் ஒரு தலைசிறந்த குடும்பத் தலைவருமாவார். தனது வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும், இருபத்திநான்கு மணிநேரமும் கடமையில் ஈடுபட்டிருந்தபோதும், போராட்டத்தின் பெரும் பொறுப்புகளுக்கும், கணவன், தந்தை என்ற நிலையில் தனது குடும்பக்கட்டுப்பாடுகளுக்கும் மத்தியில் ஒரு ஒத்திசைவான சமநிலையைப் பேணி அவர் செயற்பட்டு வருகின்றார். இந்த அபூர்வமான உறவில், பிரபாகரனின் மனைவியான மதிவதனி அதியுயர்ந்த தியாகத்தைச் செய்திருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். தாம்பத்திய வாழ்வில் கணவருடன் எந்த அளவிற்கு ஒன்றித்து வாழ அவர் விரும்பினாரோ அந்த அளவுக்கு வாழ்க்கையை நடத்த நேரமும் வாய்ப்புகளும் அவருக்குக் கிட்டுவதில்லை. பிள்ளைகளைப் பேணிப் பராமரிக்கும் பொறுப்பில் அவர் எப்பொழுதுமே கண்ணும் கருத்துமாக இருப்பதால் அவரது செல்வாக்குத்தான் பிள்ளைகள் மீதுபடிமான மாக இருக்கிறது. பிரபாகரனது குடும்பத்தின் வாழ்க்கையை சாதாரண வாழ்க்கையாக கருதிவிட முடியாது. பிரபாகரனது மனைவி, பிள்ளைகள் என்பதால் அவர்களுக்கு தனித்துவமான சமூக அந்தஸ்து இருக்கிறது. இந்த சமூக தகைமையிலிருந்துதான் அவர்களது வாழ்க்கை முறையையும் உறவு முறையையும் ஆய்வுசெய்யவேண்டும். பெற்றோர் என்ற முறையில் பிள்ளைகளின் பாதுகாப்பு, அவர்களது எதிர்கால வாழ்க்கை பற்றிய கவலை பிரபாகரனுக்கும், அவரது துணைவியாருக்கும் இருக்கத்தான் செய்கிறது. யாழ்ப்பாணபெற்றோரின் அபிலாசைகளுக்கு ஏதுவான முறையில், பிரபாகரனும், மதியும் தமது பிள்ளைகளை கல்வி கற்கையில் ஊக்கப்படுத்திவருகின்றனர். கல்வியறிவை பிள்ளைகளிடம் விருத்தி செய்யவேண்டும் என்பதில் மதிக்கு ஆழமான அவா இருப்பதால், தனது பிள்ளைகளுக்கு, வீட்டில், தனியாக பலமணிநேரமாக அவர் பாடம் சொல்லிக்கொடுப்பார்.

**தனது போராளிகளிடம் மட்டுமன்றி, பொதுமக்களிடமிருந்தும் வீர உணர்வு வெளிப்பாடுகண்டால் அதனை அவர் போற்றிக் கௌரவிப்பார்.**

பிரபாகரன் குடும்பப் பற்றுள்ளவர். அற வாழ்வும், அவரது வாழ்க்கையின் அடிநாதமாக இருக்கிறது. பிரபாகரனுக்கு 'ஓய்வு' கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தனது துணைவியாரையும் மூன்று பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு எங்கள் வீட்டுக்கு வருவார். 1985ம் ஆண்டு பிறந்த அவரது மூத்த மகனின் பெயர் சார்ள்ஸ். சார்ள்ஸைவிட ஒரு வயது இளமையான மகள் துவாரகா. 1996ம் ஆண்டு எதிர்பாராத அதிசயமாக குடும்பத்திற்கு வந்து சேர்ந்த குழந்தை பாலச்சந்திரன். முதற் குழந்தையின் பிரசவத்தில் மதிக்கு நான் உதவி செய்தபோது, உரிச்சுப் படைச்சு தோற்றத்தில் மட்டுமன்றி குணாம்சத்திலும் தகப்பனைப் போலவே குழந்தை வளர்ந்துவருமென நான் நினைக்கவில்லை. ஒரே பெண் குழந்தையான துவாரகா படிப்பில் ஆழமான அக்கறையும் பொறுப்புணர்வும் உடையவர். பிரபாகரனின் கடைக்குட்டி பாலச்சந்திரன் குடும்பத்தில் எல்லோருக்கும் செல்லக் குட்டி. அச்சு வார்த்ததுபோல பிரபாகரனின் மறுதோற்றம். நான் வன்னியை விட்டு புறப்பட்ட வேளையில் குழந்தை பாலச்சந்திரன் குறிப்பிட்ட வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. அதனால் அவரது ஆளுமைபற்றிஅதிகம் என்னால் சொல்லமுடியாது.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

**கலை இலக்கியம்** ● கலை இலக்கிய படைப்புகள் தமிழரின் தேசிய ஆன்மாவைத் தட்டியெழுப்பி தமிழ் தேசிய எழுச்சிக்கு முனைப்பூட்டுவதாக அமைய வேண்டும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இடிபாடுகளைக் கடந்துதான்
உன்
இல்லம் வந்தோம்.

பனையும் தென்னையும்
பச்சை உச்சங்களை இழந்து
கனத்த நெடுங்குச்சிகளாய்க்
காட்சி அளித்தது போலத்தான்
வெறுஞ்சுவர்களாய்
நீ பிறந்த வீடும்.

# கரிக்கோடுகளில் ஒரு தாலாட்டு

எல்லாக் கட்டடங்களிலும்
ஏதாவது ஒரு காயம்.
'ஷெல்' அடியில்
ஜன்னல் தொலைத்தவை
தோட்டாக்களால்
அம்மைக்குழிகள்,
உரிந்த தோலுக்கடியில்
சிவந்த சதையைப் போலத்தான்
மனிதர்கள்
கவலை கிழித்த முகங்களுடன்.

புல்வெளியின் மௌனத்தில்
புதைந்து கிடக்கும்
உயிர் அச்சம்!

குளிர்தருவின் நிழல்பிளந்து
பீறிடக் காத்திருக்கும்
தீயின் கொழுந்துகள்...
நம்பற்குரியனவாய் இல்லை
எந்த ஒரு பசுமையும்
இதந்தரும் நிழல்களும்



இன்குலாப்

தமிழ் ஆசிரியர்,
கவிஞர்,
படைப்பாளி,
அரங்கச்
செயற்பாட்டாளர்.
தமிழகம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சாலையில் இருமருங்கும்
'கண்ணி வெடி
கவனம்'

வெளிகளின் நீட்சியில்
வீழ்ந்து கிடக்கும்
கவச வாகனங்களின் மீது
ஊர்ந்து செல்லும்
பறவைகளின் நிழல்கள்
யுத்தம் நாறும்
புகை முட்டங்களுக்கெல்லாம்
தத்தம் மொழிகளில்
சாட்சியம் சொல்லி...

காதுகளுக்கெட்டும் தொலைவில்
ஓயாமல் பேசும்
கடலலைகள்.
இன்னும் அதன் வெண்ணுரைகளில்
மூழ்கிய புதல்வர்களின்
குருதிச் செம்மையும்
கடைசி மூச்சும்
சிதைந்து போன
உனது
கூட்டில்...

தொட்டில்கயிறு கட்டப்பட்ட
மேற்கூரைச் சட்டமில்லை
தவழ்ந்த முற்றத்தில்
புதர் மண்டிக் கிடக்கும்...
தாலாட்டை எதிரொலித்த
சுவர்கள் மட்டுமே
எஞ்சி...

உன்
மூச்சால் கனத்த காற்றும்
சுவடுகளால் நிறைந்த மண்ணும்
உன்
தோள்களில் கிளைத்த தோழமையும்
பல்கிய ஊர்
இஃதென்பதால்
புறாச்சிறகு போர்த்திய பருந்துகள்
கொத்தியும் பிறாண்டியும்
வெறிதீர்த்த வடுக்கள்
வல்வெட்டித்துறையின்
மேனி எங்கும்.

சுவர் கிறுக்கும்
விடலைகள் அல்லர்
என்
உடன்வந்தோரும்
நானும்

அந்த வயதினரால் கிறுக்கப்படாத
சுவர்கள்
எந்த நாட்டிலும் இல்லை
எழுதப்படும் சொற்கள்தாம்
ஏறுமாறாய்...

உன் சுவர்களிலும் கரி எழுத்துகள்
தமிழிலும்
ஆங்கிலத்திலும்
ஏதோ ஓரிடத்தில்
சிங்களத்திலும் கூட.

பிஞ்சு மனங்களால்
இழைத்து இழைத்து...
எனக்குத் தெரிய
அந்தக் கறுத்த வரிகள்
உன்னை வாழ்த்துபவை
வீர வணக்கம் செலுத்துபவை
இயக்கத்துக்கு நம்பிக்கை தெரிவிப்பவை.

பெரியவர்கள்
சாதிமத இனக்
கரிக்கோடுகளை
இன்னும் கிறுக்கலாம்
தங்கள் மனங்களில்

பிஞ்சு எழுத்துகளோ
உன் சுவரில் இப்படி:

'பிரபாகரன் என்றும் எம்முடன்
அ.மீரான், ஷாகிர், கொழும்பு'

உன்
அன்னை பாடிய தாலாட்டு
இன்னும் ஒலிப்பதை
நாங்களும் கேட்டோம்
சுவர்களில்...
கரிக்கோடுகளில்...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஓங்கியெரியட்டும் அந்த விடுதலைச் சுடர்

கால இட வெளிகளுக்குள் கட்டற்றுப் பிரவகிக்கும் ஆகுதல்களாக வரலாற்றுப் பேராறு ஓடிக்கொண்டேயிருக்கிறது. துளித் துளியாய் உருவெடுக்கும் சம்பவங்கள் பேரலைகளாகவும் பரிணமித்துப் பாரினை அதிசயிக்கிறது.

ஈழத் தமிழர் விடுதலைப்போராட்டம் இன்று கொண்டிருப்பது பேரலைப்பரிமாணம். புயலை எதிர்க்க ஆழத்திருந்து எழுந்த போர்க்கோலம்.

அடக்கு முறையை எதிர்க்கும் அரசியலாய் சொல் மழை பொழிந்த அரசியலார் காலத்தைக் கழித்த காலத்தில் மின்னல் தோன்றியது நம்வானத்தில்.

இன்று கேட்பதோ முழக்கம். உள்ளூரப் புகுந்து எதிரிகளின் உறக்கத்தை நிரந்தரமாய்க் கலைக்கும் முழக்கம்.

இம்மின்னல் ஒளி தோன்றிப் பின் ஒலி தோன்றும் இடைவெளிக்குள் தோற்றமுற்றான் ஒருவன்.
ஒரு தலைவன்.

இவன் உலகத் தமிழர்களின் இறைமைக்கும் தற்பெருமைக்குமான குறியீடு.

இன்று நடைபெற்றுக்கொண்டிக்கும் ஈழத்தமிழர்களின் மகாபுரட்சி சென்றடையவேண்டிய இலக்கையும் அதன் திசையையும் தீர்மானிக்கும் தீர்க்கமான வல்லமை கொண்ட இவனை யாரும் வாங்கமுடியாது.

இவனுக்கு விலையில்லை. தனக்கு இவன் தானிட்ட கட்டளையே தன் மக்களுக்கு இவன் கொடுத்த வாக்குறுதி.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50



ஆசிரியர் வேணுகோபால்

கடற்கரையோரமுள்ள அழகிய நகரம் வல்வெட்டித்துறை. அங்கே இளைஞர் சமுதாயத்தை முன்னேற்றுவதற்கென நல்லெண்ணம் கொண்ட இளைஞர்கள் சிலரின் முயற்சியினால் ஆரம்பிக்கப்பட்டதுதான் 'வல்வைக் கல்வி மன்றம்' அதிலே. 1967ம் ஆண்டிலே நானும் ஒரு ஆசிரியராகச் சேர்ந்தேன். சிவகுருவித்தியாசாலை (ஆலடிப் பள்ளிக்கூடம்) தான் இரவு நேரங்களில் வல்வை கல்வி மன்றமாகச் செயல்பட்டு வந்தது. பாடசாலையின் வடக்குப் பக்கத்திலே கடலும், தெற்குப் பக்கத்திலே எமது வீடும் இருந்தன. மன்றத்திலே கல்வி கற்ற மேல்வகுப்பு இளைஞர்கள் கீழ்வகுப்பு மாணவர்களுக்கு டியூசன் சொல்லிக்கொடுப்பது வழக்கம். பெயரளவிலேதான் டியூசன், ஆனால் ஒரு பாடசாலை போலவே பாடங்கள், ஒழுங்குமுறை எல்லாம் இருக்கும். எனது வீட்டிற்குச் சமீபத்தில் இருந்தபடியினால் நான் அதிகமாக முன்கூட்டியே சென்றுவிடுவேன். ரியூசன் நேரம் மாலை 6-15 முதல் 8.45 வரை. ஆனால் நான் மாலை 5 மணிக்குச் சென்றுவிடுவேன். அங்கு இருந்துதான் அன்றைக்குப் படிப்பிக்க வேண்டிய பாடங்களை ஆயத்தம் செய்வேன். அந்த நேரம் பிரபாகரன் 8ம் வகுப்பிலே படிக்கும் மாணவன். நான் அந்த வகுப்பிற்கு தமிழும், கணிதமும் எடுத்தேன். பொதுவாகவே பிரபாகரன் மாலை 5.30 மணிக்கே வந்துவிடுவான்.

8ம் வகுப்பிற்கு நான் தமிழ்ப்பாடம் எடுத்தபடியினால் தமிழ் உணர்வை ஊட்ட எனக்கு வசதியாகப் போய்விட்டது. தமிழும், கணிதமும் அடுத்தடுத்து இரண்டு பாடங்கள் (Period). அதிக

அடையவேண்டியதை அடைவதற்குக் கொடுக்கவேண்டிய விலையைக் கொடுக்கத் தயங்காதவர்களில் இவன் ஒருவன். மனிதர்களின் தீர்ப்புகள் எவையாயிருந்தாலென்ன. அவர்கள் வெறும் மனிதர்கள்தானே. தீர்ப்பளிக்கும் உரிமை வரலாற்றுக்கு மட்டுமே உண்டு. மனிதர்களுக்குக் கடமைகளேயுண்டு.

இயற்கையிடம் பாடம் கேட்டு, வரலாற்றினால் வழிகாட்டப்பட்டவர்களுக்குத் தோல்வி எப்போதும் வந்ததில்லை.

அவ்வப்போது புரட்சியின் தொல்நகரான பாரிஸின் சில வீதிகளில் நடக்கும் போது இந்நகரின் ஆத்மா அறைகூவி அழைக்கிறது.

அடக்கு முறைக்கெதிராக அணிதிரண்ட மக்களைத் திறம்பட வழிநடத்திய தலைவர்கள் பிறந்த தேசம் இது.

மாறா(Marat), டோன்தோ(ன்)(Danton), காமி தெமூள(ன்) (Camille Desmoulins), ச(ன்) யுயிஸ்த் (Sant Just), றொபெஸ்பியர் (Robespierre)

மக்களுக்காய் மட்டுமே சுவாசித்த இந்த மகான்களின் சுவாசப்பைகளினால்தான் சுத்திகரிக்கப்பட்டது இத்தேசத்தின் நாடிகளில் இன்றும் ஓடும் உதிரம்.

றொபெஸ்பியர்.

விடுதலையும், மக்களுக்கான ஒரு குடியரசும் என்பதற்காகத்தான் இவன் வாழ்ந்தான். மடிந்தான். இவன் மக்களுக்கான விடுதலையை மட்டுமே சுவாசித்தான்.
மக்களின் விடுதலைக்காக அறிவியல் ரீதியில் ரூசோ சிந்தித்ததை செயலுருவில் வடிவமைத்த இவன், சுதந்திரப் பிரெஞ்சு தேசத்தின் காரணகர்த்தா.
காரணம் இவனை யாரும் விலைக்கு வாங்க முடியவில்லை. இவனை யாரும் கறைபடுத்த முடியவில்லை. தனது கொள்கையில் ஒருதுளியையேனும் இவன் விற்கவில்லை. இவனது உறுதிப்பாடுகளின் ஒரு இம்மியையேனும் யாரும் அசைக்க இவன் அனுமதிக்கவில்லை.

வரலாறு உள்ள வரைக்கும் இவனுக்கு 'மாசற்றோன்' எனும் நாமமே இருக்கும். பிரஞ்சுத் தேச வரலாற்றில் இவனுக்குப் பின் வேறு யாருக்கும் இந்நாமம் சூட்டப்படவில்லை.

விடுதலை பற்றியும் அதற்குக் கொடுக்க வேண்டிய விலைபற்றியும் தரவுகளைத் தருபவை இந்நாட்டின் வரலாற்றேடுகள்.

சமாதானப் போர்வையில், பேசுவோம் எனும் தோரணையில் காலத்தை இழுத்துப் போராட்டத்தைச் சிதைப்பதற்கு பேரினவாதச் சக்திகளும், மேற்கு நாடுகளின் 'நாகரீகப் புத்திஜீவிதங்களும்', அண்டை நாட்டின் பிராந்திய வல்லரசுத் திமிரு

தமிழ் ஆவணகாப்பகம் Tamileelam Archive

மாகச் சதிசெய்யும் இவ்வேளையில், விழிப்பாயிருந்து, விலைபோகாது, தூர அரசியல் நோக்குடன், ஈழத்தமிழர் போராட்டத்தை இதயத்தில் வரித்த தலைவனுக்கும் 'மாசற்றோன்' எனும் நாமம் சூட்டப்படட்டும்.

வித்தாய் வீழ்ந்த முத்துகளுக்கு வழங்கிய வாக்குறுதிகள் மீளப்பெறமுடியாதவை. மனிதர்களில் மகோன்னதமானவர்களின் கனவுகளை நனவாக்குவதைத் தவிர கடமையேதும் இல்லை.

றொபெஸ்பியரிடமிருந்து பெற்ற கனவை நிறைவாக்கக் கனலென உதித்தான் நெப்போலியன் எனும் வீர வேங்கை. வெற்றிமேல் வெற்றிவாகை சூடினான். கண்மூடி முழிக்கும் வேகத்தில் ஐரோப்பாவை அதிர வைத்தான். புயலென எழுந்த இவன் வேகத்தில் சருகென மறைந்தனர் எதிர்ப்புரட்சியாளர்களும் அடக்குமுறையாளர்களும்.



இவனது இராணுவ உத்திகளையும், தூர நோக்கையும், மனத்திடத்தையும், அஞ்சாத நெஞ்சையும், அசைக்கமுடியாத கொள்கையுறுதியையும், தீர்க்கமான புத்திக்கூர்மையையும் கண்ட பிரஞ்சு தேசம் இவனிடம் தனது கனவைக்கையளித்தது.

சமகாலத்தவர்களின் எந்தத் தீர்ப்புகளுக்கும் இவன் அஞ்சவில்லை. மாமனிதர்கள் வரலாற்றுக்கு மட்டுமே கணக்குக் கொடுக்கவேண்டியவர்கள். வரலாற்றுக்கு மட்டுமே அவர்களிடம் கணக்குக் கேட்கும் உரிமையுண்டு. மிகுதிகளை அவன் சலசலப்புகளாகவும், இயலாமைகளாகவும், அலறல்களாகவுமே கண்டான்.

பிரெஞ்சு தேசம் தனது வரலாற்றில் பதின்நான்கு தரம் தனது அரசியல் சாசனத்தை மாற்றிவிட்டது. ஆனால் நெப்போலியனால் உருவாக்கப்பட்ட சிவில் சட்டக் கோர்வையின் அடிப்படையில் கைவைக்கவில்லை. நெப்போலியனால் உருவாக்கப்பட்ட அரசியல் நிர்வாகக் கட்டுமானங்கள் இரண்டு நூற்றாண்டுகளைத் தாண்டி இன்னமும் நிமிர்ந்து நிற்கின்றது. பிரெஞ்சுத் தேசியக்கட்டுமானத்தின் அதிசிறந்த இராணுவ மேதையாகவும், அதிசிறந்த அரசியல் ஞானியாகவும் இருந்த ஒரேயொருவன் நெப்போலியன்தான் என்பதை இன்று வரலாறு அறைந்து கூறுகிறது.

இது வரலாறு வழங்கிய தீர்ப்பு.

ஈழத்தமிழரின் எதிர்கால வரலாறு வழங்கப்போகும் தீர்ப்பை இன்றே தமிழர்கள் வழங்கிவிட்டார்கள். தமது தேசியக் கட்டுமானத்தின் தலைவன் யாரென்பதை ஈழத்தமிழர்கள் ஐயமின்றி உணர்ந்து கொண்டுவிட்டார்கள்.

வரலாற்றின் தீர்ப்பிற்காய் காத்திருப்பவர்கள் இருந்து விட்டுப்போகட்டும்.

எகிப்திய அடிமை நுகத்திலிருந்து அறுத்தெடுத்துத் தன் எபிராய மக்களை விடுதலைக்கும், வாக்குறுதியளிக்கப்பட்ட பூமிக்குமாக அழைத்துச் சென்றான் தீர்க்கதரிசி மோசஸ். கட்டளைகளிட்டான், மீறியவர்க்குத் தண்டனை கொடுத்தான். கடக்கவேண்டியிருந்ததோ இரக்கமற்ற பாலைவனம்.

தமிழ் ஆவணகக்காப்பகம்
Tamileelam Archive

அகவை 50

மாக இரண்டு பாட நேரத்தின்போதும் நான் தமிழ்தான் படிப்பிப்பேன். 8ம் வகுப்பிலே 'தமிழ் மலர்' தான் பாடத்திட்டத்திற்குரிய புத்தகம். அதிலே வரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகளைப் படிப்பிப்பதன் மூலம் தமிழும், தமிழர் நாகரிகமும், தமிழர் கலாச்சாரமும் எவ்வளவு உயர்ந்தது என்று போதிப்பேன்.

இந்தக் காலங்களில் பிரபாகரனும், அவரது வயதொத்த தோழர்களும் எல்லாமாக எட்டுபேர் எனக்குப் பின்னாலேயே திரிவார்கள். நாங்கள் மணிக் கணக்கில் பேசிக்கொண்டு இருப்போம். பேசி முடிந்தபின்பு, இருவரும் நடந்து ஊரிக்காட்டில் இருக்கும் எனது வீட்டிற்கு வருவோம். எனது வீட்டுவாசலில் வந்ததும் பிரபாகரன் கேட்கும் முதல் கேள்வி, திரும்பவும் எப்போது சேர் நாங்கள் சந்திப்பது என்பதுதான். ஒரு நாள்கூட 'பிறகு எப்போது சந்திக்கலாம்' என்ற கேள்வியைக் கேட்காமல் பிரபாகரன் போகமாட்டார்.

எமது தூய்மையான இலட்சியத்தை உணராத சிலர் பிரபாகரனின் தந்தையிடம் சென்று நாங்கள் தனித்தமிழ் நாடு பேசிக் கெட்டுப்போவதாகவும் நடக்கமுடியாததற்காக வீணாக இளைஞர்களைப் பலி கொடுக்கப்போவதாகவும் கூறினார்கள். அதை அவர் நம்பவில்லை. அதன்பின்பு சிலர் நான்தான் வல்வெட்டித்துறையின் தமிழ்மாணவர் பேரவை ஏஜண்டு (முகவர்) என்று சொல்லியுள்ளனர். இதன் பின்பு ஊரிலேயே பிரபாகரன் உட்பட அநேக இளைஞர்களுக்கு என்னுடன் சேரவேண்டாம் என்று அவரவர் வீட்டிலேயே அட்வைஸ் (Advice).

இதன்பின்பு பிரபாகரன் என்னைச் சந்திப்பதோ, அல்லது சேர்ந்து திரிவதோ நடக்காத காரியம். ஆனால், பிரபாகரனுக்கோ என்னுடன் பேசித் தானும் அரசியலில் பூரணமான அறிவைப் பெறவேண்டும் என்ற ஆவல். ஆனால் எப்படிச் சந்திப்பது. எப்படியும் வேணுகோபால் மாஸ்டரைச் சந்தித்துப் பேசினால்தான் அதிக விசயங்களை அறியலாம், அந்த நேரம் வேறு யாரிடமும் இவ்வளவு விசயங்களை அறிய முடியாது என்ற நினைப்பு அவருக்கு.

கடினப்பாதைகள் கண்டு மக்களோ அஞ்சினர். மீண்டும் அடிமைகளாகவே எகிப்துக்குச் சென்று விடுவோமே எனக் கெஞ்சினர். கடைமனிதர்களுக்கும், கண்ணீர் வடிப்பவர்களுக்கும் அரை வழியில் விடைகொடுத்து விட்டுத் தொடரவேண்டியிருந்த பயணமது.

யாருக்குச் சுதந்திர பூமி வேண்டும்? அடிமைத்தளைகளை தமது உள்ளங்களிலிருந்து அறுத்தெறியாதோர் சுதந்திரத்தைப் பெற்றுத்தான் என்ன செய்யப்போகிறார்கள்?

அடிமை நிலை மறந்த சுயாதீன மக்களை வழி நடத்த வேண்டி மோஸஸ் நாற்பது வருடங்கள் தன் மக்களைக் கொண்டலைந்தான். சினாய் பாலைவனத்தின் கொடூரங்களுக்கு மக்கள் முகம் கொடுத்தார்கள். இரக்கமற்ற பாலைவனப் பாதையில் மக்கள் துன்பத்தீயில் புடம் போடப்பட்டார்கள்.

நாற்பது வருடங்கள் துன்பத் தீயில் புடம்போடப்பட்ட மக்கள் இறுதியில் போராடித் தமக்கு வாக்குறுதியளிக்கப் பட்ட பூமியை அடைந்தார்கள்.

**வாசுதேவன்**

மொழிபெயர்ப்பாளர்,
விமர்சகர்,
படைப்பாளி.
பிரான்ஸ்.

சுதந்திர பூமிக்குச் சுதந்திர மக்களை, அறிவில் மேம்படுத்தி, ஆற்றலில் உன்னதமானவர்களாக்கி, அடிமைத்தளையறுத்து, சமத்துவம் நிறுவி, சாதியழித்து, அழைத்துச் செல்லும் வல்லமை மிக்க தலைவன்!

இக்கனவை நனவாக்கி நீங்கள் காலத்தை வெல்ல வாழ்த்துகிறேன்.

இதுவன்றோ நாமனைவரும் வித்தாய் வீழ்ந்த முத்துகளுக்குக் கொடுத்த வாக்குறுதி.
இதுவன்றோ நாம் நனவாக்கி அவர்களுக்கு காணிக்கையாச் செலுத்த வேண்டிய கனவுப்பூ.

இடருற்று, அடக்கு முறைக்குப் பலியாகிய ஈழத்தமிழரின் துணிவுச்சுடர் பிறந்து ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்டன.

நீழ்காலம் ஒங்கியது ஒளிருமென வாழ்த்தி நிற்போம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஒப்பற்ற தேசியத்தலைவனுக்கு
# என் பிறந்த நாள் வாழ்த்துக்கள்

ஈழமண்ணின் வரலாறு ஒரு கறைபடிந்த காவியமாகத்தான் இதுவரை வரையப்பட்டிருக்கிறது. தமக்கே உரித்தான தமது பாரம்பரிய பிரதேசத்தில் தமக்கென ஒர் அரசை அமைத்து, தமக்கே உரிய மொழி, மத, கலை, கலாச்சார பாரம்பரிய விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து, பூரண இறைமையுடன் ஈழத்து தமிழ் மக்கள் 15ம் நூற்றாண்டின் இறுதிவரை அந்த மண்ணிலே மகிழ்ச்சியாகவும், சுதந்திரமாகவும் வாழ்ந்து வந்தார்கள் என்பதை முழு உலகமும் அறியும். 16ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை மண்ணில் காலடி வைத்த போர்த்துக்கேயர்களும், தொடர்ந்து டச்சுக்காரர்களும் இறுதியாக ஆங்கிலேயர்களும் தொடர்ச்சியாக 400 வருடங்களுக்கு மேலாக தமிழர்களை தம் அடிமை வலைக்குள் சிக்கவைத்து தமிழ் மக்களின் வாழ்வையும், அவர்கள் இறைமையையும் சீர்குலைத்தார்கள் என்பதையும் முழு உலகமும் அறியாமல் இருக்கமுடியாது.




**கலாநிதி முருகர் குணசிங்கம்**

வரலாற்றாய்வாளர்,
விரிவுரையாளர்,
சார்ள்ஸ் ஸ்ரூபேட் பல்கலைக்கழகம்.
அவுஸ்திரேலியா.


அந்நியர்களான போர்த்துக்கீசரும், டச்சுக்காரர்களும் இலங்கை முழுவதையும் ஆட்சி செய்த போதிலும், தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களாகிய வடக்கையும், கிழக்கையும் தனி நிர்வாக அலகாகக்கொண்டே ஆட்சி செய்தனர். ஆனால் 1796ல் டச்சுக்காரர்களிடம் இருந்து இலங்கை முழுவதையும் தமதாக்கிக்கொண்ட ஆங்கிலேயர், தமது நிர்வாக வசதிக்காக இலங்கை முழுவதையும் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வந்து, தமிழர்களின் பாரம்பரியப் பிரதேசமாகிய வடக்கு கிழக்கை இலங்கை வரைபடத்தில் இருந்து நீக்கிய பாதகமான, துரோகத்தனமான செயல். அந்த மண்ணின் கண்ணீர் சிந்தும் வரலாற்று நிகழ்வுகளில் மிகக் கொடூரமானது. மேலும், ஆங்கிலேயர்கள் 1948ம் ஆண்டு இலங்கையை விட்டு நீங்கும்போது ஜனநாயகம் என்ற போர்வையில் இலங்கை முழுவதையும், பெரும்பான்மை மக்களாகிய சிங்களவர் கையில் தாரைவார்த்துவிட்டுத் தப்பித்துக்கொண்ட, ஜனநாயக முறைகேடான நிகழ்வும் அங்குதான் நிகழ்ந்திருக்கிறது.

ஜனநாயக கோட்பாட்டை பேரினவாதக் கோட்பாடாகக் கருதிக் கொண்ட அல்லது மாற்றிக்கொண்ட சிங்கள அரசு தமிழ் மக்களின் அரசியல் வாழ்வில் செய்த அனர்த்தங்கள் எண்ணற்றவை. இலங்கையிலும், ஈழமண்ணிலும் சிந்திய தமிழர்களின் இரத்தங்களும், சொத்துக்களின் அழிவுகளும், மக்கள் பட்ட துன்பங்களும், துயரங்களும் சோதனைகளும், வேதனைகளும், இழப்புக்களும் எண்ணில் அடங்கா. பொறுத்து, பொறுத்து ஈற்றில் பொங்கி எழுந்த தமிழ்க் குலம், குறிப்பாக இளைஞர்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

இதற்கிடையில், எனக்கும், பிரபாகரனுக்குமிடையில் இருந்த உறவு என்ன? ஒற்றுமை என்ன? என்ன விதத்தில் நாம் வேறுபட்டு நின்றோம், என்பதை நான் இவ்விடம் தெளிவு படுத்த வேண்டியது எனது கடமை. எனக்கும் பிரபாகரனுக்குமிடையில் இருந்த உறவு ஏறக்குறைய புராண காலத்து குரு-சிஷ்யன் உறவுதான் 'வேணுகோபால் மாஸ்டர் மிகவும் நல்லவர். படித்தவர். நல்லதையே பேசுவார். நல்லதையே செய்வார். இலங்கை தமிழ் இனத்தின் வருங்காலத்தைவிட்டு மிகவும் கவலைப் படுகிறார். வேணுகோபால் மாஸ்டர் காட்டும் வழிதான் தமிழ் இனத்தை ஈடேற்றும், மாஸ்டரின் வழியைத்தான் தானும் பின்பற்ற வேண்டும்' என்றும் பிரபாகரன் நினைத்தார், நான் அவரைப்பற்றி என்ன நினைத்தேன். அவரின் கள்ளங்கபமற்ற முகம், ஒழிவுமறைவு அற்ற தெளிந்த பேச்சு, ஒளிவீசும் கண்கள் இவை அனைத்தும் சேர்ந்து அவர் எதிர்காலத்தில் எதையோ சாதிக்கப் போகிறார் என்பதை உணர்ந்தேன். அவருடைய இனப் பற்றும், தமிழர் விடயத்தில் அவர்காட்டும் ஆர்வத்தையும் பார்த்தால், அவரின் சிறிய வயதை மட்டும் வைத்து நான் அவரைப் புறக்கணிக்கக் கூடாது என்று நினைத்தேன். ஆனால், அவர் இவ்வளவு பெரிய ஆளாக ஒரு காலத்தில் வருவார் என்று நான் அப்போது நினைக்கவில்லை. அவருக்கும், எனக்கும் எந்தவொரு வேற்றுமையும் இருக்கவில்லை. நான் சிந்திப்பது போலவே அவரும் சிந்தித்தார். அவர் சிந்திப்பது போலவே நானும் சிந்தித்தேன்.

இதற்கிடையில் நெடுகவே வாயினாலே மட்டும் பேசிக்கொண்டிருந்தால் எந்த பயனும் இல்லை என்று நான் பிரபாகரனையும், சிவபாலனையும் கூட்டிச்சென்று 'பெற்றோல் பொம்ஸ்' எப்படிச் செய்வது என்று செய்து காட்டி, அவற்றை அவர்களின் கையினாலேயே எறியச் செய்து வெடிக்க வைத்தோம். வல்வெட்டித்துறையின் பெருந்தொழுவு மைதானத்தை அண்டியுள்ள பழைய பாழடைந்த கட்டிடத்தில்தான் குண்டுகளை வெடிக்க வைத்தோம். இதுதான் பிரபாகரன் முதலாவதாக வெடிக்க வைத்த குண்டு.

குழாம் தமது இழந்த உரிமைகளை மீளப்பெற்று சுதந்திரமாக வாழச் சித்தம் கொண்டனர்.

தமிழர்கள் இழந்த உரிமைகளை மீள வழங்குவதில் சிங்கள அரசும், மாறிமாறி ஆட்சிக்குவந்த சிங்களத் தலைமைகளும் புரிந்த அரசியல் சாகசங்கள், வித்தைகள், நட




சமரச முயற்சிகளினால் எழுதப்பட்ட பல உடன்படிக்கைகள் எத்தனை தடவைகள் கிழித்தெறியப்பட்டு காற்றில் பறக்கவிடப் பட்டிருக்கின்றன.

வடிக்கைகள் பலப்பல. சமரச முயற்சிகளினால் எழுதப்பட்ட பல உடன்படிக்கைகள் எத்தனை தடவைகள் கிழித்தெறியப்பட்டு காற்றில் பறக்கவிடப்பட்டிருக்கின்றன. இவ்வாறான அவலங்களுக்கு முழுக்க, முழுக்க சிங்களத் தலைவர்கள் மட்டும்தான் பொறுப்பாளிகள் என்று கூறுவது ஒருபக்கச் சார்பானது. குறிப்பாக 1930 களில் இருந்து, ஈழத்தமிழர்களின் தலைவர்கள் ஒட்டுமொத்தமாக தெரிந்தோ, தெரியாமலோ விட்ட தவறுகளும், கைக்கொண்ட தவறான அரசியல் கோட்பாடுகளும், காலத்துக்கு ஒவ்வாத அரசியல் கொள்கைகளும், பல சந்தர்ப்பங்களில் மாற்றான் கைக்கு விலைபோன நிகழ்வுகளும் பலவகைகளில் ஈழத்தமிழர்களின் இன்றைய இந்த அவல நிலைக்கு ஒருவகையில் காரணமாக இருந்திருக்கின்றன என்பதை நியாயவாதிகள் ஒப்புக்கொள்ளாமல் விடமாட்டார்கள்.

ஆனால் 1983 யூலையில் தமிழர்களுக்கு எதிராக சிங்களவர் நடாத்திய இனப்படுகொலையின் பின்னர் ஈழத்தின் அரசியல் நிலைமையிலும், தலைமையிலும் ஏற்பட்டமாற்றம், தமிழர்களின் இந்தப் புரையோடிப்போன துன்பங்களுக்கும், வேதனைகளுக்கும் ஒரு நிலையான பரிகாரம் கிடைக்கும் என்று தமிழ்த்தேசமும், நன்நோக்குள்ள பிறதேசங்களும் உறுதியாக நம்பிக்கொண்டு இருக்கின்றன. தமிழர்களுக்குக் கிடைத்த தலைமையாக 'தமிழீழ விடுதலைப்புலிகள்' என்ற அரசியல் அமைப்பும், அதன் ஒப்பற்ற தேசியத் தலைவரே பிரபாகரன் என்பதும் தமிழ் மக்களும் உலகமும்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive



ஒப்புக்கொண்ட ஓர் உண்மையாகும்.

பேரினவாத சக்திகளுக்கு, பதிலடி கொடுக்கக் கூடிய அரசியல் இராணுவ மாற்றுவழிகளையும், கொள்கைகளையும் மிகவும் திறமையாகவும், சாதுரியமாகவும் தீட்டி, அரசியல் சாணக்கியர்களையும், தன் தளபதிகளையும், போராளிகளையும், உரிய முறையில் வழிநடாத்தி, தமிழ்மக்கள் எல்லோரையும் ஒன்றுதிரட்டி உறுதியுடனும், தூரநோக்குடனும், நாட்டுப்பற்றுடனும், நேர்மையாகவும், உண்மையாகவும் அரசியல் விடிவை நோக்கி விரைந்து செல்லும் ஓர் ஒப்பற்ற தலைவனாக தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தமிழ் மக்களுக்கு கிடைத்தமை காலம் ஈந்த ஒரு பெரும் பேறாகும்.

கடந்த கால்நூற்றாண்டுக்கு மேலாக, தளராமலும், உறுதியுடனும், யாருக்கும் விலைபோகாமலும், நேர்மையாகவும், இதயசுத்தியுடன் கொண்ட கொள்கைக்காக, தமிழ்மக்களின் நிரந்தர விடிவுக்காய் தன் உயிரையும் துச்சமாக மதித்து, களத்தில் நின்று போரை வழிநடத்துகின்ற, போராடுகின்ற ஒரு வீரத் தமிழ் மகனை, ஓர் ஒப்பற்ற தேசியத் தலைவனை தமிழ் மக்கள் பெற்றிருப்பது அவர்களுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதமாகும்.

தளபதிகளோடு தளபதிகளாய், கரும்புலிகளோடு கரும்புலிகளாய், போராளிகளோடு போராளிகளாய், அரசியல் அறிஞர்களோடு சமமாய், தாமும் தலைவனாக மட்டும் இல்லாமல், அநாதரவற்றவர்களுக்கெல்லாம் தாயாய், தந்தையாய், ஊனமுற்றவர்களுக்கெல்லாம் ஊன்றுகோலாய் திகழும் ஓர் ஒப்புயர்வற்ற தலைவனை தமிழ் மக்கள் பெற்றிருப்பது ஈழமண்ணின் வரலாற்றில் இதுவே முதற் தடவையாகும் என்று துணிந்து மகிழ்ச்சியோடு கூறக்கூடியதாய் இருப்பது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

நீதி, நியாயம், தர்மம், என்பன உண்மையானால் இவ்வாசகங்கள் ஈழவரலாற்றின் இறுதி அத்தியாயத்தில் நிரந்தரமாக பதிவு செய்யப்படவேண்டிய காலம் வெகு தூரத்தில் இல்லை. அவ்வாறான ஓர் ஒப்பற்ற தலைவனின் 50வது பிறந்த தினம் 26.110. 2004 அன்று தமிழர்கள் பட்டி, தொட்டிகளிலெல்லாம் கொண்டாடப்படும் இவ்வேளையில், ஈழத்தமிழர் பூரண சுதந்திரம் கொண்ட மக்களாக அந்த மண்ணில் வாழ தலைவனே! நீ வழிசமைக்க வேண்டும் என்று நல்லாசி கூறுவதோடு நீங்கள் நீண்டகாலம் நலமாக வாழவேண்டும் என்று எம் மனமார்ந்த பிறந்தநாள் வாழ்த்துக்களை மன நிறைவோடு தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



கீர்த்தி அந்த மனிதனிலும் பெரிதாய் அமைந் திருந்தது. அது 80களின் ஆரம்பத்தில், நான் முதன்முதலாக விடுதலைப்புலிகளின் தலைவரை சந்தித்த போது அப்படி இருந்தது. அந்த முதல் சந் திப்பை மிக உயிர்ப்புடன் நினைவு வைத்துள்ளேன். அது கடும் வெயிலடித்த ஒரு பகல் பொழுதில் சென் னையில் உள்ள ஒரு புலிகளின் இடத்தில் இடம் பெற் றது. அவ்வீடு வங்காளவிரிகுடாவைப் பார்த்தபடியே இருந்தது. பிரபாகரன் ஒரு பத்திரிகையாளரை முதல் தடவையாக தன் வாழ்நாளில் எதிர்கொள்ளப் போகின் றார். அது எனக்கு ஒரு மிகப்பெரிய விடயம். ஆனால் நான் அந்த அபூர்வமான கெரில்லாத் தலைவரை சந்திப்பதற்கு முன் இரு மணி நேரம் காத்திருக்க வேண்டியிருந்தது.

நான் அந்த அறையில் உட்கார்ந்திருந்தபோது புலிகள் இயக்கப்போராளி ஒருவர் ஒரு வர்ணத் தொலைக்காட்சியை இயங்க வைத்தார். அவை நன்றாக ஒளிப்பதிவு செய்யப்பட்ட நாடாவாகும். ஒளி பிரயோகிக் கப்பட்ட விதமும், கமெராவின் கோணங்களும் பிரபாகரனை நிஜத்திலும் பெரியதாகக் காட்டியது. அவர் பலமானவராக, கடுமையானவராக, வீரம்செறிந்தவராகக் காணப்பட்டார். அந்த ஒளியிழைநாடா, புலிகளை ஒரு பெருமை மிக்க தேசத்தின் ஒழுக்கமான இராணுவமாகக் காட்டியது. அங்கு பிரபாகரன் அணிவகுப்பு மரியா தையை ஏற்கிறார். சீருடையில் உள்ளார். புலிக் கொடியை ஏற்ற அவர் அணிவகுத்து நின்ற புலிப் படையினரைத்தாண்டிச் சென்றார். தேசபக்திப்பாடல் பின்னணியில் ஒலிக்க, பிரகாசமான கண்களுடன் - பெருமையுடன் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட கொடியை சூரியப்பிரகாசம் நிரம்பிய வெளியில் பிரபாகரன் பறக்க விடுகின்றார். அங்கு பிரபாகரன் கொள்கை



அனிதா பிரதாப்

ஊடகவியலாளர்,
தெற்காசியத்
தலைமைச்
செய்தியாளர்,
ரைம்ஸ்,
சி.என்.என்.
இந்தியா.

# பிரபாகரனின் தொலைதூரப்பார்வை அதிசயப்பட வைப்பது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கொண்ட பிரமாண்டமான மனிதர் - புரட்சியாளர், கவர்ச்சிகர மானவர்.

ஆனால் முதல்தடவையாக பிரபாகரனைச் சந்தித்தபோது பேச்சிழந்து போனதுடன் அதிருப்தியுற்றேன். அவர் அந்த அறைக்குள் நடந்து வந்தார். நான் அடையாளம் காணவில்லை. வீடியோவில் கண்ட ஆறடி உயரமுள்ள நேர்த்தியானவரால், பாதிக்கப்பட்டதால் அடையாளம் காணவில்லை. அங்கு வந்த மனிதன் கட்டையான, சிறு தமிழ் வணிகர் போன்ற உருவ முள்ளவர். நான் அவரை புலி ஆதரவாளர் என்று நினைத்தேன். ஒரு ஆர்வமுள்ள தலையாட்டலும் செய்தேன்.

சில நிமிடங்களின் பின்னர் ஒரு மென்மையான குரல் தமிழில் ஒலித்தது. 'நான் தான் பிரபாகரன்' என்றார். அவர் அடையாளம் கண்டுவிட்டார். நான் அடையாளம் காண வில்லை. அந்த மனிதர் மன்னிப்பு கேட்பவர் போன்று சிரித்தார். நான் அந்த முகத்தை ஆராய்ந்தேன். எனது பேர திர்ச்சிக்கு பின் அது பிரபாகரன் தான் என்பதை உணர்ந் தேன். கமெராக்கள் பொய்சொல்லாதென யார் சொன்னார் கள்.

பிரபாகரன் கருஞ்சாம்பல் நிறக்காற்சட்டையும், வான நீலநிறமுள்ள சேர்ட்டும் அணிந்திருந்தார். அவர் வீதியால் நடந்து சென்றால் யாரும் அவரை இரண்டாம் தடவை திரும்பிப் பார்க்கமாட்டார்கள். வீடியோவில் பார்த்த உறுதிமிக்க, சீருடை தரித்த, கொரில்லாத் தலைவருக்கும், இந்த மென்மையான தோற்றமளிக்கும் சிவிலியனுக்குமிடையோன ஒப்பீடு ஒரு தற்செயல் நிகழ்வே.

நான் ஏன் வீடியோவில் பிரபாகரன் பேசவில்லை என் பதை உணர்ந்தேன். பெருமனிதனிடம் மென்மையான குரல். அது ஒரு நாயகனின் தோற்றத்தைப் பாதிக்கும். நான் என் நம்பாத தன்மையை மறைக்க முயன்றேன். ஆனால் அதிர் ஸ்டவசமாக அது பிரபாகரனை சிறிது அதிசயப்பட மட்டும் வைத்தது. எனது குழப்பத்தை மறைப்பதற்கு சிறந்த வழி எனது கேள்விகளை ஆரம்பிப்பது. அது இருமணிநேரம் நீடித்தது. முடிவில் என் வாழ்வில் ஒரு குறிப்பிடத்தக்க மனித னைச் சந்தித்ததை உணர்ந்தேன். இன்று பல குறிப்பிடத்தக்க மனிதர்களைச் சந்தித்த பின்பும் பிரபாகரனே மிகக் குறிப்பிடத் தக்கவராவார்.

பிரபாகரன், நான் சந்தித்தவர்களில் மிக உறுதிகொண்டவர். அவரது தொலைதூரப்பார்வை அதிசயப்பட வைப்பது. அவர் இன்று பார்ப்பதை அவரது எதிரிகள் நீண்டகாலங்களின் பின்னர் தான் உணர்வார்கள்.



**அவர் இன்று பார்ப்பதை அவரது எதிரிகள் நீண்ட காலங்களின் பின்னர் தான் உணர்வார்கள்.**

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**பெண்விடுதலை** ● உண்மையான சமத்துவம் என்பது ஆண் - பெண் உறவில் எழும் ஆழமான புரிந்துணர்வில் தான் சாத்தியமாகிறது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# வரலாற்று நோக்குக்கோணத்தில் பிரபாகரன்

விக்டர் ஐவன்

'ராவய' இதழின்
ஆசிரியர்,
ஊடகவியலாளர்
அரசியல்
செயற்பாட்டாளர்.
இலங்கை.

சிறீலங்காவில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தமிழரது அரசியல் போராட்டத்தின் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தலைவராகக் கவனிக்கத்தக்க பிரபாகரனைப் பற்றி நிரம்ப எழுதப்பட்டிருந்த போதிலும், அவர் வகிக்கும் பாத்திரத்தின் வரலாற்றுப் பின்னணி இதுவரை ஆராயப்பட்டதாகத் தெரியவில்லை.

சிறீலங்கா எதிர்கொள்ளும் தனித்துவ இன அடையாளத்துக்கான கிளர்ச்சியில் அவரைத் தன்னேரில்லாத் தனியொரு வழித்தோன்றலாகக் கொள்ளமுடியும். சிறீலங்கா ஒரு துளி இரத்தம் கூடச் சிந்தாமல் சுதந்திரம் பெற்றது. இங்குதான் சிறீலங்காவின் அரசியல் திருப்பு மையமே அமைந்துள்ளது எனலாம். சிறீலங்கா போராடாமல் சுதந்திரம் பெற்றதனால்தான், சுதந்திரம் பெற்ற பின்னர் அது போர் மூலம் முடிவில்லாமல் செந்நீர் சிந்திக் கொண்டிருக்கிறது.

சிறீலங்காவைப் போலல்லாது, இந்தியா சாத்வீக முறையில் பெரிய அளவிலான சமூகப் போராட்டத்தின் மூலம் தனது சுதந்திரத்தை வென்றெடுத்தது. பிரித்தானிய ஏகாதிபத்திய மேலாண்மையைத் தோற்கடிப்பதற்கு முதற்படியாக இனம், மதம், சாதி, மொழி போன்ற பேதங்களால் பிளவுற்றிருந்த மக்களை, இந்தியத் தலைவர்கள் ஒன்றிணைத்தார்கள். தனித் தேசிய அடையாளங்களைக்கொண்ட மக்களைக் கொண்ட ஒரு நாட்டுக்குத் தேவையான வாழ்வாதாரத்தை அந்த ஒற்றுமை ஒரு புறமாக உருவாக்கியதோடு, மற்றொரு புறமாக அதே ஒற்றுமை இந்தியாவிலிருந்த இனங்களின் பல்வகை வேறுபாடுகளை ஒற்றுமைப் படுத்தி ஒரு நாடு என்ற முறைமைக்குள் கொண்டு வர உதவியது.

சிறீலங்காவோ, ஒரு நாட்டின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான தனித்தனியான தேசிய அடையாளங்களை உள்ளடக்கிய ஒற்றுமையைக் கட்டியெழுப்பாமல் ஒரு நாடு என்ற நிலைக்கு மாறியது. சிறீலங்கா சுதந்திரம் பெறுவதற்குப் போராட்டம் தேவைப்படாமலிருந்ததனால் இனத்தால், சாதி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யால், மொழியால், சமயத்தால் பிரிந்திருந்த மக்களை ஒன்றிணைப்பதற்கான தேவையும் சந்தர்ப்பமும் இருக்கவில்லை.

இந்தியாவில் நடந்ததுபோல் அல்லாமல், இனங்களின் பல்வகை வேறுபாடுகளைக் கருத்திற் கொள்ளாமலேயே சிறீலங்கா நாட்டின் உருப்படிவம் கட்டியெழுப்பப்பட்டது. அத்தகைய உருப்படிவம், பெரும்பான்மை இனத்திற்கும், பெரும்பான்மைச் சாதிக்கும், பெரும்பான்மை மதத்திற்கும், பெரும்பான்மை மொழிக்குமே மதிப்பும் முக்கியத்துவமும் கொடுத்தது. இதன் விளைவாக உரிமையிற் குறைந்தவர்களாகப்பட்ட சிறுபான்மை இனத்தினரோ அந்நியப்படுத்தப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டு, எதிர்க் கிளர்ச்சியை நோக்கி உந்தப்பட்டனர்.

சிறீலங்காவின் அரச அமைப்பிற்கு எதிராக முதலில் எதிர்க்கிளர்ச்சியில் ஈடுபட்டவர்கள் சிங்கள சமூகத்தைச் சேர்ந்த சமுதாய அடிநிலை வகுப்பைச் சேர்ந்த சிங்கள இளைஞர்களேயன்றித் தமிழ் இளைஞர்கள் அல்ல. அவர்கள் முதலில் 1971லும் பின்பு கூடுதலான வன்மையுடனும் உத்வேகத்துடனும் 1987லும் கிளர்ந்தெழுந்தார்கள். அவர்களுடைய இலக்கு அரச அதிகாரத்தைக் கைப்பற்றுவதாக இருந்தபோதிலும், அந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் அரசு அவர்களை நொறுக்கி நசுக்கியது.

சிங்கள இளைஞர்களது 1971ம் ஆண்டின் எதிர்க்கிளர்ச்சிக்குப் பின்னரே தமிழ் இளைஞர்கள் தங்களுக்கான ஒரு சொந்த நாட்டை அமைப்பதற்காக வன்மையாகக் கிளர்ந்தெழும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். தமிழ் இளைஞர்களது கிளர்ச்சியின் முதல்நிலை, கரந்தடிப்படைத் தாக்குதல் வடிவத்தில் கிட்டத்தட்ட பத்து வருடங்களாக நீடித்தது. அவர்களது அடுத்த கட்டக் கிளர்ச்சி 1990 லிருந்து 2001 வரை நேருக்கு நேர் பொருதும் பயங்கரப்போர்ப் படை வடிவமாக அமைந்தது. இந்தப் போர்முறையாலேயே ஒரு பிரபாகரனின் இருப்பு முனைப்பாகத் தொடங்கி, வளர்ந்து, இன்று அவர் வெற்றி கொள்ள முடியாத ஓர் இராணுவத் தலைவராய் தோன்றுகின்றார். வியட்நாமின் ஜெனரல் ஜியாப்பிற்குப் பின்னர், இத்தகைய ஓர் இயக்கத்தை உருவாக்கிய மிகப்பெரிய இராணுவத் தலைவராகக் கணிக்கப்பட வேண்டிய ஒருவராக உருப்பெற்றுள்ளார். அவர் சிறீலங்காவின் இராணுவத்தை மட்டுமல்லாமல், இப்பிராந்தியத்தின் ஆகப்பலம் வாய்ந்த இராணுவமாகக் கருதப்படும் இந்திய இராணுவத்தையும் எதிர்கொண்டு ஓர் 'ஒப்பற்ற இராணுவத் தலைவன்' என்ற தனது புகழை நீடித்து வைப்பதிலும் வெற்றி கண்டார்.

இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களுள் மகாத்மா காந்தியைக் காட்டிலும் சுபாஸ்சந்திரபோஸ் அவர்களையே மிகக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த தலைவராகப் பிரபாகரன் கருதினார். மகாத்மாகாந்தி வன்முறையின் சகல வடிவங்களையும் நிராகரித்து அகிம்சை வழியில் நின்றார். மகாத்மா காந்தியின் அகிம்சை வழியை நிராகரித்து வன்முறைப் போராட்டத்தை ஆதரித்து நின்றவர் சுபாஸ். சுபாஸ் இந்தியச்சுதந்திரப் போராட்டத்திற்குச் சில வலுச்சக்திகளைக் கொடுத்திருந்தாலும், மகாத்மா காந்தியே அதன் வளர்ச்சியின் வடிவத்தையும் பாதையையும் நிர்ணயித்தவர். எப்படியிருந்தபோதிலும், போஸின் பாதையைத் தெரிவு செய்த பிரபாகரனால் போஸைவிட சுதந்திரப்போராட்டத்தை மேலும் முன்நகர்த்திச் செல்ல முடிந்தது என்றே சொல்ல முடியும்.

> இந்தியச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட தலைவர்களுள் மகாத்மா காந்தியைக் காட்டிலும் சுபாஸ்சந்திரபோஸ் அவர்களையே மிகக்கூடிய முக்கியத்துவம் வாய்ந்த தலைவராகப் பிரபாகரன் கருதினார்.

1930களில் யாழ்ப்பாணத்திலிருந்த தமிழ் இளைஞர்கள், சுபாஸ் சந்திரபோஸின் பாதையை விட மகாத்மா காந்தியின் பாதையையே தெரிவு செய்தனர். அவர்கள் சிறீலங்காவிற்குக் கடும் உறுதியான புத்திசாலித்தனமான செய்தியை வைத்திருந்தனர். எனினும், அன்று யாழ்ப்பாணத்தில் நிலவிய குறுகிய மனப்பான்மையினரின் அதிகாரம் காந்திய தலைமுறையை நிலைகொள்ள விடவில்லை. பிரபாகரனால் காட்டப்படும் இரக்கமற்ற தன்மை போற்றக்கூடிய தரத்தைக் கொண்டதாக இல்லாவிட்டாலும், தமிழ் மக்கள் மீது சிங்கள ஆதிக்கமும் அதிகாரமும் காட்டிய இரக்கமின்மையின் இயல்பான பின் விளைவே இது. இறுதியான பகுப்பாய்வின்படி இந்த இரக்கமற்ற தலைவரே மக்களின் ஒப்புதல் பெற்ற தலைவராக வரலாற்றில் இடம்பெறுவார். தமிழர் பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வைக் காணாமல் சிறீலங்கா நீடித்திருக்க முடியாத ஒரு நிலையை உருவாக்குவதில் பிரபாகரன் வெற்றி கண்டுள்ளார்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# PRABAKARAN
## FROM A HISTORICAL POINT OF VIEW

Although much has been written about Prabakaran who may be considered the supreme leader of the Tamil political struggle in Sri Lanka, his role does not appear to have been analysed from a political point of view.

He may be considered a unique fruit of the identity crisis that Sri Lanka faces. Sri Lanka gained her independence without shedding a single drop of blood. There lies the root of Sri Lanka's crisis. It is because Sri Lanka gained her freedom without a struggle that she has had to bleed endlessly after gaining it.

Uulike Sri Lanka, India gained freedom through a massive non-violent struggle. The leaders of the people of India had to unite all the people who had been divided ( by race , religion , caste and language ), in order to defeat the British imperialist dominance, and that unity crreated a united nation as required for the sustenance of a nation state on the one hand , and a state system that suited the majority and the variety that existed in India, on the other.

Sri Lanka , however, shifted to a nation state, without building a united nation required for the sustenance of such a state. As no struggle was required to attain independence there was also no need to bring together the people who had been divided by race , caste, language and religion. The state model that was built up was also not one that took into account the multiplicity and variety in the country as was done in India. The state model gave weightage to the majority race. the majority caste, the majority religion and the majority language. The consequence was that the under-privileged minority communities moved away from the state and were pushed towards rebellion or to capture the state or to create a separate state.



Victor Ivon

Editor Ravaya,
Journalist,
Political
activist.
Sri Lanka.

The first to rebel against the existing state system in Sri Lanka were not the Tamil youth but the under-privileged village youth of the Sinhala society. They rose up in 1971, and more ferociously in 1987. Although their aim was to capture state power, the state was able to crush them mercilessly on both occasions.

It was after the rebellion of the Sinhala youth in 1971 that the Tamil youth were pushed towards rising up violently for a state of their own. The rebellion of the Tamil youth moved on in the form of a guerilla for nearly ten years in its first stage, and in the form of a terrible and face to face war from 1990 to 2001. It was in this theatre of war that a Prabakaran comes into existence , grows up, and emerges as an invincible military leader. He may be considered the greatest leader who created such a movement after Vo Van of Vietnam. He faced not only the army of Sri Lanka but also the army of India which may be considered the most powerful army of the region and managed to survive and to maintain his unique reputation as a military leader.

Prabakaran considered Subhas Chandra Bose rather than Mahatma Gandhi as the more important leader amongst the leaders of the Indian freedom struggle. While Mahatma Gandhi was a leader who rejected all kinds of violence and stood for non-violence , Subhas was a leader who rejected Mahatma Gandhi's non-violence and stood for an ideology of violence. Although Subhas gave some dynamism to India's freedom struggle, it was a Mahatma Gandhi who determined its contours and path of progress. However , it may be said that Prabakaran who took the path of Subhas went further than Subhas could .

There was in the 1930s in Jaffna a generation of Tamil youth who had chosen Mahatma Gandhi's path rather than Subhas Chandra Bose's. They had an extremely positive and bright political message for Sri Lanka. However the parochial dominance of the day in Jaffna did not the Gandhian generation of that day. Although mercilessness shown by Prabakaran in the war is not a quality to be admired , it may be considered as the outcome of the merciless-ness of the Sinhala dominance impeached on the Tamil people. In the final analysis, it is this merciless leader who will go down in history as the leader who had gained acceptance for the Tamil people. He succeeded in creating a situation in which the state of Sri Lanka cannot survive without finding a just solution to the Tamil problem,

Any armed struggle has to stop somewhere. That is where the Tamil armed struggle has arrived now.It is not easy for a person who has shown the path of armed struggle and has stayed in that path for a long period of time to change over to a path of peace. The future of the entire Tamil struggle will depend on the decision taken by Prabakaran on that specific question.

# தாய்க்கு நிகர் தலைவன்

நேரம் முற்பகல் பதினொரு மணியிருக்கும். அலுவலக மேசையிலிருந்த அழைப்பு மணியை அழுத்திவிட்டு வாசலைப் பார்த்தவாறு இருந்தார் தலைவர். தனி உதவி யாளர் கட்டளை என்ன எனக் கேட்பது போன்ற பார்வையுடன் வந்தார். இனியவனுடன் நிற்கும் ஐந்து பேரையும் கூட்டிக்கொண்டு இனியவனை வரச்சொல்லு... என அன்பு கலந்த தொனியிற் சொன்னார். "ஓமண்ணை" என்றவாறே தனி உதவியாளரான அரசன் இனி யவனையும் மற்றவர்களையும் அழைத்து வரப்புறப்பட்டான். சற்று நேரத்தில் எல்லோ ரும் தலைவர் முன் வந்து நின்றார்கள்.

தன்னுடன் நிற்கும் போராளிகள் எல்லோருடைய செயற்பாடுகளையும் தலைவர் நன்கு அறிந்திருந்தார். முன் வந்து நின்றவர்களோடு தலைவர் நகைச்சுவையாகச் சில கதைகளைக் கதைத்தார். பின் கடமையின் நிமித்தம் தனது கதையை ஆரம்பித்தார். சில சிறுரக ஆயுதங்கள் வந்துள்ளன. அவற்றைத் துப்பரவு செய்து தரவேண்டும்? என்று சொன் னார். போராளிகள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து துப்பரவு செய்ய ஆரம்பித் தனர். தலைவர் தன்னைச் சந்திக்க வந்தவர்களுடனான சந்திப்பைத் தொடர்ந்தார்.

நேரம் பி.ப 2 மணி. தலைவர் சந்திப்புக்களை முடித்து விட்டு ஆயுதங்கள் துப்பர வாக்கும் பகுதிக்கு வந்தார். "பெடியள் சாப்பிட்டியளா?" என்று கேட்டார். "இல்லை அண்ணை வேலை முடியுது ஒரேயடியா முடிச்சுப்போட்டுச் சாப்பிடுவம்" என்று போராளிகள் ஒரு மித்துச் சொன்னார்கள்.

சரி, என மௌனமொழி பேசியவாறே தனது வீட்டுக்குச் சென்றார். சிறிய பெட்டியிற் பேரீச்சம்பழம் எடுத்து வந்தார், போராளிகளின் கைகள் அழுக்கடைந்த நிலையில் இருந் ததை அவதானித்துவிட்டுத் தானே போராளி ஒவ்வொருவருக்கும் பேரீச்சம்பழத்தை ஊட்டி விட்டார். பின் மாறி மாறி எல்லோருடைய வாய்களையும் பார்த்தபடி சாப்பிட்டு முடிந்தவர் களுக்கு ஊட்டி விட்டார். இவ்விடத்திலிருந்த போராளியொருவர் இப்படிச் சொன்னான்.

"என் தாய்க்கு நிகர் இல்லை என்றிருந்தேன்.
அண்ணன் வாயில் வைத்த பேரீச்சம்பழம், என் நினைப்பைப் பொய்யாக்கிப் போனது!
தமிழுக்காக என் உயிரைக் கொடுத்தாலும்,
இக்கடனை, அன்புக்கடனை, என்னால் அடைக்க முடியாது"
என ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'



**விசாலகன்**

காந்தரூபன்
அறிவுச்சோலை,
செஞ்சோலை
பொறுப்பாளர்.
போராளி,
தமிழீழ
விடுதலைப்புலிகள்.
தமிழீழம்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## தமிழர் போராட்ட வரலாற்றுத் தலைவர்

# பிரபாகரன்

தமிழீழத் தேசியத் தலைவர் என உலகத் தமிழர்களால் வர்ணிக்கப்படும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பெருந்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இம் மாதம் 26ம் தேதி புதன்கிழமை 49 ஆவது அகவையை பூர்த்தி செய்து ஐம்பதாவது அகவையில் பிரவேசம் செய்கின்றார். உலகத் தமிழர் வரலாற்றில் தமிழர்களுக்கென விடுதலை நோக்கிய பயணத்தை மேற்கொள்ளுவதற்காக தனித் தமிழர் மரபு வழி இராணுவத்தை தரை, கடல் என கடந்து வான் படையை நிறுவுவதற்கு பற்றுறுதியோடு செயற்பட்ட வே.பிரபாகரன், கடந்த வருடத்தைப்போல சமாதானச் சூழலில் 50 ஆவது பிறந்த தினத்தை எதிர் கொள்கின்றார்.




நாட்டுப்பற்றாளர்
ஜி.நடேசன்

ஊடகவியலாளர்,
வீரகேசரி,
ஐ.பி.சி வானொலி.
தமிழீழம்.


அதை விட பதின்நான்கு வயதில் வீட்டை விட்டுப்புறப்பட்டு தமிழர் விடுதலைக்காக அல்லும் பகலும் பாடுபட்ட பிரபாகரன், இம் முறை தனது பெற்றோருடன் பிறந்த நாளை எதிர்கொள்வது குறிப்பிடத்தக்கது. வே.பிரபாகரனின் வரலாறானது தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட வரலாற்றோடு பின்னிப் பிணைந்ததாக இருப்பதால், விடுதலைப் போராட்ட பரிணாம வளர்ச்சியையும் நோக்குவது பொருத்தமானது.

*இயற்கை எனது நண்பன்,*
*வாழ்க்கை எனது*
*தத்துவாசிரியன்,*
*வரலாறு எனது வழிகாட்டி.*

வே.பிரபாகரன்.


யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறையில் 1954 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி வேங்கடம் வேலுப்பிள்ளை - பார்வதி தம்பதி களின் கடைக்குட்டியாக பிரபாகரன் பிறந்தார். ஒரு அண்ணன், இரண்டு அக்காமார்களுடன் செல்லமாக வளர்க்கப்பட்ட பிரபாகரன் அவரின் தந்தையார் காணி உத்தியோகத்தராக இருந்ததால் தந்தையாரோடு நாட்டின் பல இடங்களுக்கு செல்ல வேண்டியதாயிருந்தது.

மட்டக்களப்பு கச்சேரி காணி உத்தியோகத்தராக அறுபதுகளில் கடமையாற்றிய போது வேலுப்பிள்ளை பிரபாகரன் தாமரைக் கேணி வீதியில் பெற்றோருடன் வசித்து வந்ததுடன் முதலாம், இரண்டாம், மூன்றாம் வகுப்புக்களை தற்போது மகாஜனாக் கல்லூரி என்றழைக்கப்படும் அரசடி மெதடிஸ் மிசன் பாடசாலை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

## தலைவரின் கூற்றுக்களாக...




உங்களது குடும்பப் பின்னணி பற்றியும், குடும்பத்துடனான உங்கள் உறவு பற்றியும் கூறுவீர்களா?

நான் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து வளர்ந்தேன். எனது தந்தையார் ஒரு அரச ஊழியர். எனக்கு இரண்டு மூத்த சகோதரிகள் இருக்கிறார்கள். அவர்கள் திருமணமாகி குடும்பம் நடத்துகிறார்கள். இளம் பராயத்திலிருந்தே புரட்சிகர அரசியலில் ஈர்க்கப்பட்ட நான் பொலிசாரால் தேடப்பட்டுவந்தேன். இதனால் 14 வயதிலேயே வீட்டை விட்டு வெளியேறி தலைமறைவு வாழ்க்கையில் ஈடுபட நேர்ந்தது. அதிலிருந்து பெற்றோருடனான உறவுகளை நான் இழந்து விட்டேன்.

தீவிரவாத அரசியல் போராட்டத்தில் உங்களை இறங்கவைத்த புறநிலைகள்பற்றி கூறுவீர்களா?

சிறுபராயத்திலிருந்தே தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகள், கொடுமைகள்பற்றி கேள்விப்பட்டு வந்தேன். எனது பாடசாலைப் பருவத்தில் கற்றார். பின்னர் வல்வை சிதம்பராக் கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

மட்டக்களப்பில் நான் வசித்தபோது எனக்கு ஆறேழு வயதிருக்கும். வீரபாண்டிய கட்டப்பொம்மனின் வசனங்களைப் பேசுவதிலும் சரித்திர வரலாற்று நாவல்கள் வீர புருஷர் காவியங்களை விரும்பிப் படித்தேன். அலெக்சாந்தர், நெப்போலியன் போன்றவர்களின் வீர வரலாறுகளை இப்படியான நூல்கள் மூலமே அறிந்தேன். இந்திய விடுதலைப்போராட்டம் பற்றியும் அதற்கு தங்களையே தற்கொடையாக்கிய சந்திர போஸ், பகவத்சிங், பாலகங்காதர திலகர் போன்றோரில் எனக்கு ஏற்பட்ட பற்றும் கரிசனையும் இந்த வாசிப்பின் விளைவுகள் தான்.

எனது போராட்ட வாழ்வின் அத்திவாரம் இத்தகைய நூல்களால் கட்டியெழுப்பப்பட்டது. அந்நியர் ஆட்சியின் ஆதிக்க அடக்கு முறைகளுக்கெதிரான கொதிப்புணர்வு இந்த வாசிப்புப் பழக்கத்தினாலேயே ஏற்பட்டது என, புலிகளின் தலைவர் பிரபாகரன் ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியில் நினைவு கூர்ந்திருக்கிறார்.

பிரபாகரன் நான்கு வயது சிறுவனாக இருந்த போது நிகழ்ந்த 1958 இனக் கலவரங்களின் கோர அழிவுகளைக் கேள்விப்பட்டார். அவருக்கு திமிழ் மக்கள் மீது ஆழ்ந்த பரிவும் அனுதாபமும் ஏற்பட்டது. நிராயுதபாணிகளான அப்பாவி தமிழ் மக்களுக்கு எதிராக ஆயுத வலிமையை பிரயோகிக்கும் பேரினவாத இயந்திரத்தை ஆயுதப் போராட்டம் மூலமே எதிர்கொள்ள முடியுமென்பதை உணர்ந்தார்.

எழுபதுகளின் பின்னர் தரப்படுத்தல் பிரபாகரனை பெரிதும் பாதித்தது. அத்தோடு அவர் வாழ்ந்த வல்வெட்டித்துறை பிரதேசம் அந்தக் காலத்திலேயே இராணுவ அடக்கு முறைகளை எதிர்கொண்டதை சிறுவன் பிரபாகரன் நேரில் கண்டதால் அவருக்கு வெறுப்புணர்ச்சி மேலோங்கியது. இது பற்றித் தெரிவித்த பிரபாகரன், நான் சிறுவயதில் சண்டித்தனமான ஆளும் அல்ல, யாருடனும் சண்டைக்கு போவதுமில்லை. ஆனால் எனது ஊரில் இராணுவத்தின் அடக்குமுறை தன்னில் பாதிப்பை ஏற்படுத்தியது என தெரிவித்திருக்கின்றார்.

அத்தோடு தனக்கு விடுதலை உணர்வை ஏற்படுத்தியவர்களில் வேணுகோபால் மாஸ்டரை பிரபாகரன் குறிப்பிடத் தவறுவதில்லை. தமிழரசுக் கட்சி வாலிபர் முன்னணி உறுப்பினராக இருந்து பின்னர் அக்கட்சியின் தீவிரம் போதாது என்டதால் சுயாட்சிக் கழகத்தில் இணைந்த வேணுகோபால் மாஸ்ரர் விடுதலைப் போராட்டத்தின் தேவைகள் குறித்து வகுப்புக்கள் எடுத்தார்.

இவரே ஆயுதப்போராட்டத்தின் தேவையையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியதாகக் குறிப்பிடுகின்றார்.

தனது பதினாறாவது வயதில் ஏழு நண்பர்களுடன் சேர்ந்து பெயரில்லாத இயக்கத்தை ஆரம்பித்தார். தலைமறைவாக தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொண்ட போது இவரும் நண்பர்களும் தேடப்படும் நபர்களானார்கள். நண்பர்கள் மெல்ல மெல்ல விலகிச் செல்ல ஒரு நாள் பிரபாகரன் தாயைச் சந்தித்தார். பெரியசோதி, நடேசதாசன், உனது அண்ணன் கூட வெளிநாடு போய்விட்டார்கள். நீயும் போயேன் என்று அம்மா

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கேட்டார். அதற்கு நான் போக மாட்டேன், போறதுக்காக நான் வரவில்லை என்று கூற, அவங் களை நம்பித்தானே நீ போராட வெளிக்கிட்டாய் என்று சொன்னார்.

இதற்கு பதிலளித்த பிரபாகரன் "நான் அவர்களை நம்பி வர வில்லை", என்று கூற அவரது தாயாரோ ஒரு மொட்டையனுடன் சேர்ந்து என்ன செய்யப்போகின்றாய் என்று கடிந்தார். அதற்கு சீற்ற மாக, "ஒரு மொட்டை 9 மொட் டைகளாகும், 9 மொட்டை 90 மொட் டைகளாகும், 90 மொட்டைகள் 900 மொட்டைகளாகும்" என்று தாயாருக்குப் பதிலளித்தார்.

இவ்வாறு வே.பிரபாகரனின் சிறுவயதுக்காலம் இனத்துக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற பேரவாவுடனும் தீர்க்கமான சிந்த னையுடனும் வளர்ந்தது. 1971 இலிருந்து வீட்டை விட்டு முற்றாக விலகிய பிரபாகரன் தமிழ் மாணவர் பேரவை சத்தியசீலனோடு இணை ந்தார், தொண்டரானார். ஆனால் தமிழ் மாணவர் பேரவையை நிறுவனமயப்படுத்தி கொள்கை வழியில் வழிநடத்த நடவடிக்கை எடுக்கப்படாததால் அதிருப்தியுற் றார். இந்த நிலையில் சத்திய சீலன் தலைமறைவாகி பின்னர் கைது செய்யப்பட்டார்.

பொலிசாரின் பார்வையிலி ருந்து தப்பி 1973 இல் தமிழகம் சென்ற பிரபாகரனுக்கு ஈழத்துப் பெரியார் (இராசரத்தினம்) அவர்களு டனான சந்திப்பு மிகுந்த உற்சாகத் தைக் கொடுத்தது. புதிய தமிழ்ப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தார். கடந்த காலங்களில் உருவான அமைப்புக்களின் அழிவுக்காக கார ணங்களை அறிந்து அதற்கேற்ப உறுதி ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றை கடுமையாக அமுல் படுத்தினார். 1974 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி தமிழா ராட்சி மாநாட்டுப் படுகொலை தமிழ் இளைஞர்கள் மத்தியில் விடுதலைப் போராட்டத் தீவிரத்தை வளர்த்தது. 1976 ஆம் ஆண்டு மே மாதம் 5ம் திகதி வவுனியா பூந்தோட்டத்திலுள்ள முகாமில் வைத்து புதிய தமிழ்ப்புலிகள் தமி ழீழ விடுதலைப்புலிகளாக பெயர் மாற்றம் பெற்றது.

அத்தோடு இழந்த இறை மையை மீட்பதில் மட்டுமல்ல தமிழர்களுக்கென தனிக்கொடியை உருவாக்க முனைந்தார். 1977 ஆம் ஆண்டு புலிகள் இயக்கக் கொடியாக இருந்த புலிக்கொடி யிலிருந்த எழுத்துக்கள் நீக்கப் பட்டு 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ஆம் திகதி மாவீரர் ஆரம்ப நாளன்று தமிழீழ தேசியக் கொடியை பிரபாகரன் ஏற்றினார்.




புலனாய்வில் ஈடுபட்ட தமிழ் பொலிசார் மீது தாக்குதலை நடத்திய விடுதலைப்புலிகள் 1981 ஆம் ஆண்டு அக்டோபர் 13 ஆம் திகதி இராணுவத்தினர் மீது முத லாவது தாக்குதலை தொடுத் தனர். கடந்த 27 வருடங்களாக தமிழீழ விடுதலைப் புலிகளை வழி நடத்தி வரும் வே.பிரபாகரனின் பிறந்த நாளை போராளிகளும், தமிழர் தேசமும் எதிர் கொண் டாலும், அவர் அன்றைய தினம் நோன்பிருந்து, முதல் களப்பலி யான மாவீரர் சத்தியநாதன் சங்கரை நினைவு கூர்ந்து வருகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்கு முளையிலே கிள்ளி எறிய 1979 ஆம் ஆண்டு மே மாதம் புலிகள் தடைச்சட்டமும் செப்டெம்பரில் பயங்கரவாத தடைச் சட்டமும் கொண்டு வரப்பட்டது. 1979 ஆம் ஆண்டு யாழ்- குடாவில் அவசரகால சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டு இராணுவ அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப் பட்டன.

விட்டில் பூச்சியாக அழிய முனையாது தனது தோழர்க ளுடன் வன்னி அம்பகாமம் வந்து படிப்படியாக விரிவாக்கம் செய் வதில் பிரபாகரன் தீவிரமாக செயற் பட்டார். 1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து தீவிரவா தத்தின் பால் இளைஞர்கள் குழாம் ஈர்க்கப்பட்ட போதிலும் பிரபாகரன் ஆளணியை பெருக்குவதில் ஆர்வம் காட்டாது, இறுக்கமான கட்டுக் கோப்பான இயக்கமாக தமது அமைப்பை வழிநடத்தினார்.

1984 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதலாம் திகதி தமிழ் நாடு திருப்போரூர் முருகன் ஆல யத்தில் மதிவதனியை திருமணம் புரிந்த பிரபாகரன் தம்பதிகளுக்கு இல்லற வாழ்வில் மூன்று குழந் தைகள். மூத்த மகனுக்கு போராளி சாள்ஸ் அன்ரனியின் பெயரைச் சூட்டினார். இரண்டாவது பெண் குழந்தைக்கு துவாரகா என பெயரிட்ட பிரபாகரன் தம்பதிகள் மூன்றாவது மகனுக்கு பாலச் சந்திரன் என்ற பெயரைச் சூட்டி போராளிகள் மீதான பற்றை வெளிப்படுத்தினார்கள்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தில் இன ஒடுக்குமுறையின் தாக்கத்தை நான் நேரடியாக உணர்ந்துகொள்ள முடிந்தது. தமிழ்த் தேசத்தை சூழ்ந்து வரும் அரச ஒடுக்குமுறையின் பேரா பத்தை எனது வாலிபப் பருவத்தில் நான் தெட்டத் தெளிவாக உணரமுடிந் தது. இந்தப் பேராபத்திலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றுவதாயின் ஆயுத எதிர்ப்பு இயக்கம் ஒன்றைக் கட்டி எழுப்ப வேண்டும் என எண்ணிக் கொண்டேன். இந்த விழிப்புணர்வின் அடிப்படையில்தான் விடுதலைப் புலி கள் இயக்கத்தைத் தோற்றுவித்து, ஆயு தப் போராட்டத்தைத் தொடங்கினேன்.

சஞ்சிகை 'ஜென்டில்மன்'(Gentilmen) 1986ஆம் ஆண்டு. மார்ச் மாத இதழில்.

● இலங்கைத் தமிழர்களுக்கு ஆயு தப் போராட்டமே ஒரே வழியென்று நீங் கள் தீர்க்கமான முடிவுக்கு வர நிர்ப் பந்தித்த உங்களின் தனிப்பட்ட அனுப வங்களைச் சற்றுக் கூறுவீர்களா? கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற்றில் இலங்கை அரசு காட்டிய பாரபட்ச மான கொள்கையால் நீங்களோ உங் கள் குடும்பத்தவரோ அல்லது உங் கள் நண்பர்களோ நேரடியாகப் பாதிக் கப்பட்டுள்ளனரா?

●◐ நான் பள்ளிச் சிறுவனாக இருந்த போது 1958 ஆம் ஆண்டின் இனக் கலவரங்களில் நிகழ்ந்த பயங்கரச் சம் பவங்கள் என் மனதில் ஆழமான பாதி ப்பை ஏற்படுத்தின. சிங்கள இனவெறி யர்களால் எம்மக்கள் ஈவிரக்கமில்லாது குரூரமாகக் கொல்லப்பட்ட நெஞ்சை உலுக்கும் சம்பவங்களை நான் கேள் விப்பட்டேன். எங்கள் குடும்பத்திற்குத் தெரிந்த ஒரு விதவைத் தாயை நான் ஒருமுறை சந்தித்தபோது அவர் இந்த இனவெறியாட்டத்தால் தனக்கு நேர்ந்த துயரமான அனுபவத்தை என்னிடம் சொன்னார். இனக்கலவரத்தின்போது சிங்களக் காடையர்கள் கொழும்பிலி ருந்த அவர் வீட்டைத் தாக்கினார்கள்.

1983 ஆம் ஆண்டைத் தொடர்ந்து பொலிஸ் நிலை யங்கள் யாழ் குடாவில் படிப்படியாக முடக்கப்பட்டதுடன் இராணுவத்தினரும் முகாம்களை விட்டு வெளியேற முடியாது தடுக்கப்பட்டனர். வடமராட்சி ஒப்பரேசன் லிபரேசன் புலி களுக்கு சவாலாக அமைந்தாலும் சுதாகரித்துக் கொண்டார்கள். இந்திய அமைதிகாக்கும் படையினராலும் பின்னர் பிறேமதாச அரசாங்கம், சந்திரிக்கா அரசாங்கம் என்பவற்றினால் கொடுக் கப்பட்ட நெருக்கடிகளிலிருந்து இயக்கத்தை வழிநடத்தி இன்று பலம் மிக்க மரபுப் படையணியாக விடுதலைப் புலி களை பிரபாகரன் வழிநடத்தி தமிழர் சமபலத்தை பேணி இப்போது சமாதான நடவடிக்கை மூலம் அரசியல் தீர்வு கான சிங்கள தேசத்துக்கு வாய்ப்பளித்திருக்கிறார்.

ஆகாய கடல் வெளிச்சமர், மணலாறு சமர், தவளை நடவடிக்கை, கொக்குத் தொடுவாய் சமர், இடிமுழக்கம், ஓயாத அலைகள் -1, சத் ஜெய -2,3 முறியடிப்பு சமர், பரந்தன் ஆனையிறவுச் சமர், வவுணத்தீவு சமர், கிளிநொச்சி பரந்தன் முகாம்கள் மீதான ஊடுருவல் தாக்குதல் ஓயாத அலைகள் -2, ஜெயசிக்குறு முறியடிப்பு சமர், ஓயாத அலை - 3 , ஓயாத அலை -4, தீச்சுவாலை முறியடிப்பு சமர் எனப் பல சமர்கள் புலிகள் தலைவர் வே.பிரபாகரனின் இரா ணுவ வழிநடத்தலுக்கு சான்று பகரும்.

விடுதலைப்புலிகள் பல்வேறு நெருக்கடிகள், அடக்கு முறைகள், அழுத்தங்கள், சவால்களுக்கு முகம் கொடுத்தும் மரபு வழி சமரணியாக தமிழ் மக்களுக்கு பலம் சேர்க்கும் அணியாக விரிவாக்கம் பெறுவதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் கொள்கைப் பற்று, விடுதலை வேட்கை, தன்னம்பிக்கை, துணிச்சல், புலனாய்வுத்திறன், எதிரிக ளையும் நண்பர்களையும் பிரித்தறியும் ஆற்றல், போராளி களை அரவணைத்துச் செல்லும் பரிவு போன்றன முக்கிய காரணங்களாகும்.

சாதாரண புலி உறுப்பினர் ஒருவர் கூட தலைவரைப் பற்றி உரையாற்றும் போது மெய் சிலிர்ப்பதை தனிமனித வழிபாடாக சிலர் விமர்சித்தாலும் பிரபாகரன் என்ற ஆளுமையே வடக்கு கிழக்கு என்று விரிந்து பரந்து இளைஞர் அணியாக தமிழர் தேசம் ஒருமைப்பட காரணம் என்பதை எவரும் மறுக்க முடியாது. பல உள் நாட்டு வெளிநாட்டு சக்திகள் வேலுப் பிள்ளை பிரபாகரனை திசைதிருப்ப, விலைக்கு வாங்க அல்லது விடுதலைப் புலிகளை பிளவுபடுத்த பலவீனப்படுத்த, மக்களிடமிருந்து அன்னியப்படுத்த மேற்கொண்ட பகீரத பிரயத்தனங்களைக் கடந்து விடுதலைப் புலிகளை வழி நடத்தி வருகின்றார்.

தமிழ் மக்களின் பலமாக, மக்களிடமிருந்து பிரிக்க முடியாதபடி விடுதலைப் புலிகள் வியாபித்து வேரூன்றி விருட் சமாகியதற்கு புலிகள் தலைவரின் பற்றுறுதியான அர்ப்பணிப்பு முக்கிய காரணமாகும்.

கால் நூற்றாண்டு கால படைத்துறை அனுபவம், பல நெருக்கடிகள், சவால்களை முறியடித்த ஆற்றல் கொண்ட தமிழ் மக்களின் விலை மதிக்க முடியாத சொத்தான வே.பிரபாகரன் பொன் விழா அகவையில் பிரவேசிக்கின்றார்.

அவரின் அனுபவ ஆற்றல் இன்று சமாதான நடைமுறைகளிலும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
TamilEelamArchive

பிரகாசிக்கின்றது. புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது மட்டுமல்ல, சீண்டல்களால் சீற்ற மடையாது சர்வதேசமே மூக்கில் விரலை வைக்கும் அளவிற்கு சமாதான நடைமுறைகளை பொறுமையோடு கையாண்டு வருகின்றார். சிறிலங்கா அரசாங்கம் புலிகள் தலைவரையும் அமைப்பையும் பயங்கரவாத அமைப்பாக சித்தரித்து உலக அரங்கில் ஏற்படுத்திய அபிப்பிராயத்தை மாற்றுவதில் கடந்த 18 மாதங்களாக விடுதலைப் புலிகளின் தலைவர் வெற்றி பெற்றுளார்.

இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி என்று கூறும் புலிகள் தலைவரைப் பற்றி சுதந்திர வேட்கை நூலில் திருமதி அடேல் பாலசிங்கம் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். 'அவரது அரசியல் இலட்சியத்தினை ஆழமாகப் பார்த்தால் அவரை ஒரு நாட்டுப் பற்றுடைய தேசிய வாதியாகவே கருத முடியும். சில சிங்கள விமர்சகர்கள் வாதிடுவது போல பிரபாகரனின் தேசியவாதம் இன வெறியை பிரதிபலிக்கவில்லை. தமிழ் மக்களை இன ரீதியாக அழித்தொழிக்க வேண்டுமென்ற சிங்கள இனவாத ஒடுக்கு முறையை முறியடிக்க வேண்டுமென்பதில் பிரபாகரன் திடசங்கற்பம் பூண்டு நிற்கின்றார். அந்த திடசங்கற்பத்திலிருந்து பிறந்தது தான் பிரபாகரனின் 'தமிழ்த் தேசியப் பற்று.' என்று குறிப்பிட்டிருக்கின்றார்.

ஈழத்தமிழர் வரலாற்றில் முக்கிய திருப்புமுனைச் சக்தியான விடுதலைப் புலிகளின் பெருந்தலைவர் பிரபாகரன் பற்றிய தெளிவான வரலாற்று நூல் படைக்கப்பட வேண்டும். இது தமிழ் புத்திவிகள், ஆய்வாளர்களின் கடமையாகும். வே. பிரபாகரனின் பொன் விழா அகவையில் இந்த வரலாற்று ஆவணம் தமிழ் மக்கள் முன் படைக்கப்பட வேண்டும்.

## நாட்டுப்பற்றாளர் நடேசன்...

ஊடகவியலாளர் நடேசன் படுகொலை செய்யப்பட்டிருக்கிறார். இது ஒரு அரசியற்படுகொலை. ஒடுக்கப்படும் இனத்தின் விடுதலைக்காக குரல் கொடுத்த நடேசன் கடந்த பத்தாண்டுகளில் தமிழ்ப்பரப்பின் ஊடகத்துறையில் அடையாளம் துலங்கிய ஒருவர். இன்னும் அழுத்திச் சொன்னால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் பற்றாளராகவும் அதற்குரிய ஊடகவியலாளராகவும் முன்னின்று செயற்பட்டவர்.

நெருக்கடி மிக்க சூழலில், அபாயகரமான தளத்தில் சவால்களுக்கு முகம் கொடுத்து இயங்கியதன் மூலம் நடேசன், முதனிலையில் அறியப்பட்ட ஒரு ஊடகவியலாளரானார். இப்படி இயங்கியபோதுதான் நடேசன் கொலை செய்யப்பட்டுமிருக்கிறார். எப்போதும் நடேசனைச் சூழ்ந்திருந்த அல்லது இவ்வாறு செயற்படும் ஊடகவியலாளர் ஒருவருக்கு இருக்கும் அபாய வலைதான், இறுதியில் படுகொலைக் குழிக்குள் அவரை இழுத்தது.

நடேசன் தமிழ் ஊடகத்துறையில் போராட்டம் சார்ந்த செய்திகளையும் கண்ணோட்டங்களையும் எழுதி வந்தார். கொழும்பு மைய ஊடகங்களிற்கூட தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் மெய்ப்பாடுகளை எழுதி அவற்றில் விடுதலைப் போராட்டத்துக்குரிய வெளியை எடுத்தவர். இதுதான் தமிழ் மக்களிடையே நடேசனைப் பரிச்சயமாக்கியது அவரைத் தங்களில் ஒருவராகவும் ஆக்கியது.

வீரகேசரி, ஐ.பி.சி வானொலி ஆகியவற்றில் முதல்நிலைச் செய்தியாளராக நடேசன் இருந்தார். தேச விடுதலை என்ற அடிப்படையிலேயே அவருடைய செய்தித் தேர்வும் செய்தி வழங்கலும் இருந்தது. அரசியல் மயப்பட்ட அல்லது அரசியல் பார்வையுடைய செய்திகளையும் செய்திக்கட்டுரைகளையும் வழங்குவதிலேயே நடேசனுக்கு ஆர்வமிருந்தது. அவருடைய எழுத்துகள் இதற்குச் சாட்சி.

விடுதலை விரோதப் போக்குடையோர் நடேசனை இனங்காண்பதற்கும், அவரை பழி தீர்ப்பதற்கும் மேற்சொன்ன அடையாளங்களும் செயல்களும் காரணமாகின. தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுக்கும் சிங்களப் பேரினவாதம், அந்த உரிமைகளுக்காக குரல் கொடுப்போரை அழிக்க முனையும் ஒரு அடையாளமாகவே நடேசனைப் படுகொலை செய்வித்தது. சமாதானம் என்ற திசை திருப்பும் அரசியலில் தமிழ் மக்களின் போராட்டத்தையும் விடுதலை உணர்வையும் மந்தமடையச் செய்யும் சிங்களத் தரப்பின் உத்தியைச் சாடி வந்தவர் நடேசன். இந்தப் பொய்முக அரசியலின் கபட வெளியை தமிழ் மக்களுக்கு வெளிப்படுத்தி எழுதியவர். இதெல்லாம் சிங்களத் தரப்பாலும், விடுதலை விரோதிகளாலும் தாங்கிக்கொள்ள முடியாதவை. இதனால்தான் அவர்கள் நடேசனைக் கொலை செய்தனர். கொலை செய்தார்கள். அவர்களுடைய இயலாமைதான் நடேசனைக் கொலை செய்யத் தூண்டியது.

ஆனால் எப்போதும்போல யதார்த்தம் வேறுவிதமாக அமைந்துவிட்டது. அது நடேசனை நாட்டுப் பற்றாளன் ஆகவும் தமிழ் மக்களிடையே என்றும் மறக்கமுடியாத ஒரு விடுதலை விரும்பியாகவும் ஆக்கிவிட்டது. அத்தோடு நடேசனைக் கொன்றவர்கள் மீதான கோபத்தையும் மக்களிடையே கிளறிவிட்டது.

நடேசன் விடுதலைப்போராட்ட வரலாற்றில் இணைந்துகொண்ட ஒரு அடையாளமாக என்றும் இருப்பார். ஒடுக்குமுறையை எதிர்த்து செயற்பட்டதற்கு, அநீதியால் பலியாடப்பட்டதற்கு மக்கள் செலுத்தும் மகத்தான மரியாதையை நடேசனுக்கு தமிழ் மக்களும் தமிழீழ விடுதலைப்புலிகளும் செலுத்தியுள்ளனர். வெளிச்சமும் தன்னுடைய மரியாதை வணக்கத்தைச் செலுத்துகிறது.

வெளிச்சம் - சித்திரை, வைகாசி 2004 இதழிலிருந்து...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழினம்
தொலைத்துவிட்ட
சுதந்திரத்தைத் தேட,
தமிழினம் விற்றுவிட்ட
தன்மானத்தை மீண்டும்
மீட்க,
தலை நிமிர்ந்த
மனிதனை
தமிழினம் காண,
வீரத்தாயின்
பிரசவ வேதனையின் பின்னால்
ஓர் ஜனனம்!
அன்றைய குழந்தைதான்
இன்றைய
'வேங்கைகளின் வேந்தன்'

அன்றைய அந்த
குழந்தைச் சிரிப்பு
இன்னும்
இவனுடன்
கொஞ்சிக் குலாவும்
அந்த
குழந்தையுள்ளம்
இன்னும் இவனுடன்
சொந்தம் பேசும்
பிஞ்சுக் கால்களின்
பூப்போன்ற மென்மை
இன்னும்
இவன் இதயத்துள்
இமயமளவுயரத்தில்!

வீரம் அது
இவன்
காலடிச் சுவடுகளிலிருந்து
விழித்துக் கொள்ளும்.
இவனது
சுதந்திரச் சிறகுகள்
அகலமானவை!
மிக... மிக... அகலமானவை
அதனால்
இவனைச் சிறைவக்க
முயன்றவர்கள்
தங்களையே
சிறைக்குள்
போட்டுக் கொண்டார்கள்!

# வேங்கைகளின் வேந்தன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இராமனின்
சந்தேகம் தீர
சீதையின் தீக்குளிப்பை
பாரதம் பாராட்டி
பத்தினியென்று
பூச்சூடுகிறது!
ஆனால் இங்கே
இவனோ
வாழ்வின்
ஒவ்வோர் அத்தியாயத்தை
புரட்டும் போது
ஓராயிரம் தடவைகள்
தீக்குளிப்பு
செய்கிறானே!
யாருக்கிந்த
யதார்த்தம் தெரியப் போகிறது?

இவன்
எல்லாவற்றையும்
தனக்குரியதாக்கி
எதையுமே
தனக்கென்று
சொல்லத் தெரியாதவன்!

அச்சத்துக்குக் கூட
இவனிடம் அச்சம்
அதனால், இவனை
அண்டியதே இல்லை!
பாரபட்சம் அது
இவனுடன்
பாசங் கொண்டதேயில்லை
வரலாற்றை
வழிகாட்டியாக
வரித்துக் கொண்டவன்
இன்று ஓர்
வரலாற்றுக்கே
வழிகாட்டியாகி விட்டான்.

இயற்கையை
நண்பனாக்கியவன்
இன்று
இயற்கைக்கே
நண்பனாகிவிட்டான்.
வாழ்க்கையை
தத்துவாசிரியனாக
ஏற்றவன் இன்று
தமிழீழத்தின்
வாழ்க்கைக்கே
தத்துவாசிரியனாகி விட்டான்!

இவன் கைகள்
மட்டுமே
ஆயுதம் ஏந்தும்
இவன் கண்களோ
கருணை வெள்ளத்துள்
நீந்தும்
அன்புக்கு
அர்த்தம் பார்ப்பதற்கு
அகராதியைத் தட்டுவதை விட
இவனது
ஒவ்வோர்
அணுகுமுறையிலும்
ஓராயிரம்
அர்த்தங்களை
படித்துக் கொள்ளலாம்!

பாரதத்து
பாரதியால்
பாட்டில் மட்டுமே
காட்ட முடிந்த
'புதுமைப் பெண்களை'
இவனோ
காட்டிலே உருவாக்கி
களத்திலே காட்டுகிறான்
சமூகத்தின்
பிற்போக்கு
சிந்தனைகள்
இவனது சீற்றத்தீயினால்
வெந்து... வெந்து
சாம்பலாகியபடியே...!

எழுதி... எழுதி...
எத்தனை
எழுதியும்...
இவனைப் பற்றி
சொல்ல முடிவது
சொற்பமே!
சொல்லக் கிடப்பதோ
மிச்சம்!!
உலகத்தின் கணிப்பில்
உன்னத ஸ்தானத்தை
தன்
உரிமையாக்கியவன்
உண்மையின் உறவுடன்
உருவாகிக் கொண்டிருக்கும்
தமிழனின்
தனிநாட்டில்
தமிழீழத்தில்
நாளை
தேசியக் கொடியில்
சேனை அசைந்திடும்
வேங்கையின் வேந்தனின்
'வீரம்' வென்றிடும்!!



## கப்டன் வானதி

போராளிக்கவிஞர்
(மாவீரர்)
தமிழீழம்.

வரலாற்றுப் பெரும்
போரான ஆனையிறவுப்
போரில் வீரமரணமடைந்த
கப்டன் வானதி
அவர்களால்,
26.11.1989 அன்று
தலைவர்
வே. பிரபாகரன்
அவர்களின்
பிறந்தநாளுக்கு
வாழ்த்துக் கூறி
எழுதப்பட்ட கவிதை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**ஓயாத அலைகள்** ● எத்தகைய பலம் கொண்ட எந்த சக்தியாலும் எம்மை வென்றுவிடமுடியாது என்ற மனோதிடத்தையும், தன்னம்பிக்கையையும் இந்தப் போர் எமக்குத் தந்தது. இந்தப் போர் எமக்குப் புதிய அனுபவங்களைத்தந்து. போராற்றலை என்றுமில்லாத அளவு வளர்த்துவிட்டது.




தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அவர் தமிழினம் நிம்மதியான வாழ்வின்றி, நிரந்தரமாக வாழ இடமின்றி சிங்கள அரசினால் கொல்லப்பட்டும் துரத்தப்பட்டுக்கொண்டுமிருந்த காலத்தில் தமிழினத்தின் துன்பங்களைப் புரிந்து கொண்டு, தமிழருக்கென நிரந்தர விடுதலை ஏற்படுத்துவேன் என்ற உறுதி கொண்டு, சிறிய வயதிலேயே மாறாத உறுதியோடும், உயர்ந்த இலட்சியத்தோடும் தனித்து விடுதலைக்கான பாதையில் காலடி எடுத்து வைத்த ஒப்புயர்வற்ற மனிதன். ஆக்கிரமிப்பாளர்கள் துப்பாக்கி கொண்டு தமிழினத்தை அடக்கிய, அழித்த காலத்தை மாற்றி அதே துப்பாக்கிகளை தமிழரின் கையில் கொடுத்து நிமிர்ந்து நிற்கும் வரலாறு படைத்த அற்புதமான வீரன். இவருக்குள்ளே நிறைந்திருக்கின்ற பன்முக ஆற்றல் அளவிடற்கரியது. சாதாரணமான வார்த்தைகளில் சொல்லிவிட முடியாதது.



## தமிழீழத் தேசியத் தலைவர்

# ஒரு பன்முக ஆற்றல்களின் பிறப்பிடம்

தலைவர் அவர்கள் போராளிகளில் வைத்திருக்கின்ற பற்று ஆழமானது. எப்போதும் மாறாதது. என்னைப் பொறுத்தவரை தலைவரின் அருகிலான போராட்ட வாழ்வு இந்திய இராணுவம் எமது மண்ணை ஆக்கிரமித்த போது மணலாற்றுக் காட்டிலிருந்து ஆரம்பமானது. அன்று தொட்டு இன்றுவரை அவர் போராளிகளில் காட்டுகின்ற பரிவு, அவர்கள் மீதான அக்கறை என்பது ஒரு தேசத்தின் தலைவர் என்பதையும் மீறி, ஒரு தந்தையை, தாயைப் போன்றதாக அமைந்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. நாம் மணலாற்றுக் காட்டில் இருந்தபோது யாருடைய கொட்டிலிலாவது இரவு இருமல் சத்தம் கேட்டுவிட்டால், மறுநாட் காலையிலேயே பொறுப்பாளரை அழைத்து யாருக்கு என்ன வருத்தம் என்பதைக் கேட்டறிந்து அதற்குரிய மருந்துகளையும் ஒழுங்குபடுத்துவார். அதேபோல எமக்குரிய எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், அதனை எமது நிலையில் நின்று விளங்கி, தீர்ப்பது அவரது இயல்பு. இவ்வாறு எமது பிரச்சினைகளை சரியாகப் புரிந்துகொண்டு தலைவர் என்ற நிலையில் மட்டுமல்லாது, ஒரு குடும்பத்தின் தலை

Tamileelam Archive

அவரது வீட்டுக்குத் தீ வைத்து, அவருடைய கணவரையும் குரூரமாகக் கொலை செய்தனர். அவரும் அவரது பிள்ளைகளும் பலத்த எரிகாயங்களுடன் தப்பினார்கள். அவரது உடலில் காணப்பட்ட எரிகாயத் தழும்புகளைப் பார்த்தபோது நான் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். சிறு குழந்தைகளைக் கொதிக்கும் தாருக்குள் உயிருடன் வீசிக்கொன்ற கோரச் சம்பவங்களை நான் கேள்விப்பட்டேன். அநாதரவான அப்பாவித் தமிழர்கள் எவ்வாறெல்லாம் கொடூரமான தாக்குதலுக்கு இலக்காகினர் என்பதையெல்லாம் கேட்கும் போது என் மக்கள் மீது ஆழ்ந்த அனுதாபமும், அன்பும் ஏற்பட்டன. இந்த இனவெறி அமைப்பின் பிடிக்குள்ளிருந்து எம் மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்ற பெரும் உந்துதல் என்னிடம் தோன்றியது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுத வலிமையைப் பிரயோகிக்கும் இந்த அமைப்பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என்று நான் ஆழமாக உணர்ந்தேன்.

'சண்டே' (Sunday) ஆங்கில வார ஏடு
11-17 மார்ச் 1984

❁ விடுதலை இயக்கத்தில் சேர்ந்தது ஏன்? அதற்கு என்ன பின்னணி?

❁❁ 'ஒருநாள் என் அம்மாவிடம் ஒரு பெண்மணி பேசிக்கொண்டிருந்தார். தனது மகள் திருமணத்துக்குப் பணம் திரட்டிக்கொண்டிருந்தார் அந்தப் பெண்மணி என்பது புரிந்தது, அந்தப் பெண்மணியை உற்றுப் பார்த்தேன். அவரது கால்கள் முழுவதும் நெருப்பால் எரிந்து கருகி விட்டிருந்தது. 1958ல் நடந்த இனக் கலவரத்தில் அவர்களது குடும்பம் நாசமாக்கப்பட்ட கதையை அவர்கள் பேச்சிலிருந்து அறிந்தேன். என் இதயத்தில் அழுத்தமாகப் பதிந்துவிட்டது அந்த நெருப்பில் கருகிய கால்கள்! அப்பொழு

வர்போன்று எம்மை வழிநடத்தும் விதம், எமக்கு இப்போதும் கூட எந்த விடயத்தையும் மனம் திறந்து கதைக்கின்ற நெருக்கமான நட்பார்ந்த உறவை அவர்மீது ஏற்படுத்தியிருந்தது. எமக்குத் தரப்படுகின்ற உணவு, உடை தொடர்பான அனைத்துமே சிறப்பானதாக அமையவேண்டும் என்பதில் முழுமையான அக்கறை எடுப்பார். அதேபோல சண்டைக் களங்களில் எமது பகுதிகளில் வீண் இழப்புக்கள் ஏற்படக் கூடாது என்பதற்காக முன்கூட்டியே பல விடயங்களை ஊகித்தறிந்து, எம்மிடம் சொல்லுகின்ற பண்பு அவருக்கே உரித்தானது.

நாம் காட்டில் நின்ற போது உணவு, தண்ணீர் முதலிய அடிப்படைப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள நீண்ட தூரத்திற்கே செல்லவேண்டியிருந்தது. ஒவ்வொரு முறையும் நாம் புறப்பட முன் தலைவர் எமது பணிபற்றியும், எந்தப் பகுதியால் எவ்வாறு போகவேண்டும், யார் முதலில் போகவேண்டும், இராணுவம் எதிர்ப்பட்டால் எவ்வாறு தாக்குதலை ஆரம்பிக்க வேண்டும் என்பது போன்ற சகல விடயங்களையும் சொல்லியே அனுப்புவார். இதனால் மணலாற்றுக் காட்டில் தலைவருடன் இருந்த போராளிகள் தேவையற்ற இழப்புக்களைச் சந்தித்த சம்பவமே இல்லை எனலாம். இதே போலத்தான் தற்போது கூட தலைவரைச் சந்திக்கின்ற போதெல்லாம் எல்லோருக்கும் தரமான, சுவையான உணவுகள் கிடைக்கின்றதா, என்பதை கேட்டறிவதுடன், சத்துள்ள உணவுகள் கிடைக்கவேண்டும் என்பதிலும் கவனம் எடுக்கும் தன்மை அவரது பரிவிற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டு. அத்துடன் அக்காலத்தில் சீருடை பெரும் பிரச்சினையாக இருந்தது. பிரச்சினையை விளங்கி அந்த இராணுவ நெருக்கடியிலும் துணியை ஒழுங்கு செய்து உடுப்பைத் தைத்து அவ்வுடுப்பை போடச்சொல்லி தானே நேரில் பார்த்து சீருடையை ஒழுங்குபடுத்தினார். அதே போல தற்போதும் அமைப்பின் சீருடையில் மாற்றம் ஏற்படுத்தவேண்டும் எனச் சொல்லி சீருடைகளைத் தைத்த பின்பு போராளிகளைப் போடவைத்து நேரில் பார்த்து ஒழுங்குபடுத்தினார். இந்தத் தன்மைகள் தலைவர் எந்த உயர்ந்த இடத்தில் இருந்தாலும் எப்போதும் மாறாத மனப்பான்மை உடையவர் என்பதை வெளிப்படுத்துகின்றது.

> எந்தவொரு சண்டையும் தலைவரின் மனவெளியில் அரங்கேறி நிகழ்ந்து முடிந்த பின்னரே, களத்தில் அரங்கேறும் என்பதற்கு ஒவ்வொரு தாக்குதலின் நுணுக்கமான திட்டமிடல்களே சான்றுகளாகும்.

அதேநேரம் மக்கள்மீதும் அவரது பரிவு அதிகமாக இருப்பதை காணக்கூடியதாக இருந்தது. இந்திய இராணுவம் எமது மண்ணில் நிலைகொண்டிருந்த காலத்தில் தமிழ்த் தேசத் துரோகிகள் எமது போராளிகளின் பெற்றோரைச் சுட்டுக் கொலைசெய்து கொண்டிருந்தபோது, எமது அமைப்பின் மாவட்டப் பொறுப்பாளர் ஒருவர் இதற்குப் பதிலாக நாமும் அவ்வாறு செய்தால் என்ன என கடுமையாக ஆத்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

திரப்பட்ட போது. இதைக் கேட்ட தலைவர் கோபத்துடன், "அந்த அப்பாவிப் பெற்றோரைக் கொன்று குவிப்பதால் எதுவித பயனும் இல்லை. முடிந்தால் சுட்டவரைத் திருப்பிச் சுடும்படி சொன்னார்". இது எல்லோருக்குமே ஒரு பாடமாக அமைந்தது. ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைக் காலத்தில் நடைபெற்ற சம்பவம் ஒன்றையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். புளியங்குளத்தில் எமது அணிகள் நின்றபோது நான் மாங்குளம் வீதியால் சென்றசமயம் வீதியின் அருகிருந்த தேநீர்க்கடை ஐயா ஒருவர் என்னை மறித்து "பிள்ளை இந்தக் கடையில் சரியான வருமானமும் இல்லை. ஆனால் தீர்வையும் கொடுக்கவேண்டியிருக்கு. வருமானம் குறைந்த எங்களுக்கு தீர்வை கொடுக்க இயலாது. என்ன பிள்ளை செய்கிறது. நான் தலைவருக்கு ஒரு கடிதம் தாறன். குடுத்து விடுவீங்களோ?" எனக் கேட்டார். நான் அவரது கடிதத்தை தலைவரிடம் அனுப்பினேன். உடனேயே தலைவர் அதற்குரிய நடவடிக்கையை எடுத்திருந்தார். ஜெயசிக்குறு சண்டை நெருக்கடியிலும் ஐயாவின் பிரச்சினைக்கு தீர்வு செய்தமையானது என் மனதில் தலைவர்பற்றிய மதிப்பீட்டை இன்னும் ஒருபடி உயர்த்தியிருந்தது.

நாம் குடாநாடு நோக்கி சமர்முனையை விரித்தபோது தலைவர் முதலில் குறிப்பிட்ட விடயம் மக்களின் உயிர், உடமை தொடர்பான விடயமே. யாழ்ப்பாணத்தில் மக்கள் செறிவாக வாழுகிறார்கள். ஆகவே தாக்குதல்களைச் செய்யும்போது கூடுதலான இராணுவம் ஒரு சில மக்களை கேடயமாகப் பயன்படுத்தி எம்மீது தாக்குதலைத் தொடுக்க முனைந்தாலும், இராணுவத்தின்மீது எறிகணைத் தாக்குதலைச் செய்யாது, அருகே நெருங்கிச் சென்று சிறுரக ஆயுதங்கள் மூலமே தாக்குதலைச் செய்ய வேண்டும் என்ற ஆலோசனைகளை முற்கூட்டியே எமக்குத் தெரிவித்திருந்தார். இது, எமது போர் நடவடிக்கைகளின்போது மக்களின் பிரச்சினைகளையும் கவனத்தில் எடுத்து எமது கடமைகளைச் செய்ய வேண்டும் என்ற மன உணர்வை ஏற்படுத்தியது. அத்துடன் நாம் உபயோகிக்கின்ற ஒவ்வொரு பொருட்களும் மக்களினது பணத்தில் வாங்கப்பட்டவை என்பதைச் சொல்லி வெடிபொருட்கள், உணவு, உடை என எதிலுமே கவனக்குறைவாக இருப்பதை சிறிதளவும் அனுமதிக்கமாட்டார். ஒரு சண்டைக்குச் செல்லும்போது வெடிபொருள் தொடக்கம் அனைத்தையும் தேவைக்கு அளவாகவே அனுமதிப்பார். இவ்வாறு சிக்கனமாக இருக்கவேண்டிய பொருட்களை வீணாக்கும் நேரத்தில்தான் அவரிடம் கோபத்தைக் காணமுடியும்.

ஆற்றல்களின் பிறப்பிடமான தலைவர் அவர்களிடம் நாம் கண்ட பண்புகளில் இன்னொன்று, சிறந்த திட்டமிடுதல் ஆகும். எந்த விடயத்தையும் ஆழமாக சிந்தித்து, அதற்கேற்ற முறையில் ஒவ்வொன்றையும் கையாள்வார். எந்தவொரு சண்டையும் தலைவரின் மனவெளியில் அரங்கேறி நிகழ்ந்து முடிந்த பின்னரே, களத்தில் அரங்கேறும் என்பதற்கு ஒவ்வொரு தாக்குதலின் நுணுக்கமான திட்டமிடல்களே சான்றுகளாகும். தாக்குதலின்போது ஏற்படுகின்ற சிக்கல்களைத் தவிர்க்க, பயிற்சி நடவடிக்கையில் அதற்கான தயார்படுத்தலைச் செய்கின்ற தன்மை, அவருக்கே உரிய உயர் தனிப்பண்பு ஆகும். இதற்கு எடுத்துக்காட்டாக பல விடயங்களைக் குறிப்பிடலாம்.

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் எமது அணி பலாலிப் பகுதியில் காவலரண்களை அமைத்து நின்றது. போதிய சண்டை அனுபவம் அற்ற அணிகளும் அணித் தலைவர்களும் இருந்த அக்காலகட்டத்தில், படையினரின் அச்சுறுத்தல் என்பது சற்று அதிகமாகவே இருந்தது, அத்துடன் எமக்கும் இராணுவத்திற்கும் இடையிலான இடைவெளி குறைவாக இருந்ததுடன் அடிக்கடி இராணுவத்தின் தாக்குதல்கள் இடம்பெற்றன. இதனால் எமது போராளிகளில், பலர் வாயில் குப்பியை வைத்தபடியே காவற்கடமையில் ஈடுபட்டனர். இதையறிந்த தலைவர் என்னைக் கூப்பிட்டு, "இராணுவத்தின் கையில் இருக்கும் ஆயுதம்தான் உங்கட கையிலையும் இருக்கு, உங்களை அங்கு சாவதற்கு நான் அனுப்பவில்லை. இவ்வாறுதான் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுவீர்களாக இருந்தால், அவ்வளவு பேரும் பின்னுக்கு வாங்கோ. இதைப்பற்றி அங்கு எல்லோரிடமும் கதைத்து இதற்கு ஒரு முடிவை எடுங்கோ" என்று கூறியதுடன் அந்தப் பகுதியின் இயல்பினையும், அங்குள்ள எதிரிக்கு சாதகமான விடயங்களை குறிப்பிட்டு இதற்கு நாம் எடுக்க வேண்டிய எதிர் நடவடிக்கையையும் சொல்லி விளக்கியதுடன், நாங்கள் மேற்கொள்ள



**கேணல் விதுஷா (யாழினி)**

சிறப்புத் தளபதி,
மாலதி படையணி,
தமிழீழ விடுதலைப்புலிகள்.
தமிழீழம்.

இராணுவத்தின் கையில் இருக்கும் ஆயுதம்தான் உங்கட கையிலையும் இருக்கு, உங்களை அங்கு சாவதற்கு நான் அனுப்பவில்லை.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தெல்லாம் தமிழர்கள் படுகொலை செய்யப்படும் செய்திகள் வரும். கூடிக் கூடிப் பேசுவோம். பாணந்துறையில் குருக்களைக் கொலை செய்ததைப்பற்றி ஊர் பீதியுடன் பேசியது, என் இதயத்தை இச்செய்திகள் தாக்கிச் சின்னாபின்னமாக்கும்.

நான் கடைக்குட்டி. வீட்டில் எல்லோருக்கும் செல்லப்பிள்ளை. வெளியே நடமாட விடமாட்டார்கள். புத்தகம்தான் துணை. நெப்போலியன், அலெக்சாந்தர், வீரசிவாஜி, நேதாஜி போன்றவர்களின் வரலாறுகளைப் படித்தவாறு இருப்பேன். வெளியே இருந்து என்னைத் தாக்கிய துயரச் செய்திகளும், இந்த வரலாறுகளைப் படிப்பதும் எனக்குள் மாற்றங்களைச் செய்தன.

வல்வெட்டித்துறையில் நிரந்தர இராணுவ முகாம் உண்டு. கள்ளக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பது இந்த இராணுவமுகாமின் நோக்கம். ஆனால், இராணுவத்தினர் அப்பாவிப் பொதுமக்களை அநாவசியமாகத் திடீரென்று தாக்குவார்கள். பொதுமக்கள் பாதிக்கப்பட்ட சம்பவங்களும் என் உள்ளத்தில் கொதிப்பை ஏற்படுத்தியது.'

'ஜனியர் விகடன்' சஞ்சிகையில்
28-5-1986, 4-6-1986 ஆகிய இதழ்களில்.

● மாணவப்பருவம் தொடக்கம் இன்றுவரை அரசியலில் உங்கள் படிநிலை வளர்ச்சியை அறியவிரும்புகிறேன். சின்ன வயதில் உங்கள் உள்ளுணர்வுகளைத் தட்டி எழுப்பிய விடுதலைப் போராட்ட வீரர்கள் வரலாறுகள் உண்டா?

●● சிறுவயது முதல் இந்தியப் போராட்ட வரலாறுதான் என்னைக் கவர்ந்திருந்தது. இப்போராட்டத்தில் நேதாஜி அவர்கள் கொண்டிருந்த பங்கு என்னை ஆழமாகத் தொட்டது. அந்தக் காலத்தில் நான் வீட்டில் மிகவும் கட்டுப்பாடான சூழலில்தான் வளர்ந்தேன். வெளி

வேண்டிய மேலதிக நடவடிக்கைகளையும் அறிவுரைகளாகக் கூறினார். தலைவரின் அன்றைய அறிவுரையின் பயனாக சில நாட்களின்பின், முன்னேறிய இராணுவத்தின்மீது தாக்குதலை மேற்கொண்டு ஆயுதங்களையும் கைப்பற்ற எமது அணியால் முடிந்தது.

இவ்வாறே சிறீலங்கா இராணுவத்தினரின் பெருமெடுப்பிலான ஜெயசிக்குறு நடவடிக்கைமீதான முறியடிப்புத் தாக்குதலிலும் தலைவர் அவர்களது தனித்துவமான திட்டமிடலைக் காணலாம். இடம், நேரம், எதிரிப்படைகளின் நகர்வுகள் என் பவற்றிற்கு ஏற்ப எமது படையணிகளை நகர்த்தி படைத்தரப்பின் திட்டத்திற்கெல்லாம் பதில் நடவடிக்கை எடுத்து எதிரியை நிலைகுலையச் செய்தார். அப்போது இராணுவத்தின் பாதை திறப்புக் கனவு தலைவரின் மதியூகத்தினால் கனவாகவே போனது. அதேநேரம் சமரின் ஒவ்வொரு கட்டத்தையும் மிகுந்த நம்பிக்கையுடன் நகர்த்தினார். நாம் தீர்வு காண்பதற்குக் கடினப்படும் விடயங்களை அவரது கவனத்திற்கு கொண்டுசெல்லும்போது அவர் அதற்கு மிக இலகுவானதும், முழுமையானதுமான தீர்வினைத் தரும்போது, நான் வியப்புக்குள்ளாவதுண்டு.

ஓயாத அலைகள்-3 நடவடிக்கையின் தாக்குதல் திட்டத்தை தளபதிகளுக்கு விளக்கியபோது குறிப்பிட்ட இவ்வளவு பகுதியும் கைப்பற்றப்பட வேண்டும் என ஒரு வரைகோட்டைக் கீறியிருந்தார். யாருமே எதிர்பாராதவகையில் அவர் குறிப்பிட்ட பகுதி வரை மீட்டபோது, தலைவர் அவர்களது திட்டமிடலின் உச்சத்தை எம்மால் புரிந்து கொள்ளமுடிந்தது. அதேபோல அரியாலைப் பகுதிமீதான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ள முன், பயிற்சியில் ஈடுபட்டிருந்த அனைத்துப் போராளிகளையும் அதிக நீரை உட்கொள்ளுமாறு சொல்லியிருந்தார். பின்னர் தாக்குதலில் ஈடுபட்டபோதுதான் அப் பகுதியின் வரட்சித் தன்மையையும், அதற்காக முற்கூட்டியே தலைவர் மேற்கொண்ட நடவடிக்கையையும் எம்மால் புரிந்துகொள்ள முடிந்தது. இன்னுமொரு சம்பவத்தையும் இதில் குறிப்பிட்டாக வேண்டும். தாக்குதல் ஒன்றிற்கு செல்லுமுன், அதுபற்றி கதைத்துக் கொண்டிருந்தபோது களத்தின் உடனடி உணவுத் தேவையை நிறைவுசெய்ய, தலைவர் 'என்ன வகையான கன்டோஸ் தேவை' எனக் கேட்டபோது நாம் குறிப்பிட்ட ஒருவகைக் கன்டோசைக் கேட்டதும், அதனை தருவதாகச்சொல்லி, இதனை உட்கொள்வதாக இருந்தால் கட்டாயமாக தூரிகையால் பல் துலக்க வேண்டும். எனவே பற்தூரிகைகளையும் கொண்டு செல்வதில் கவனம் எடுக்கும்படி கூறியிருந்தார். இப்படித்தான் சிறிய விடயங்களிலும் நீண்டகால நோக்குடன் சிந்தித்து அதிக கவனம் எடுத்து, ஒவ்வொன்றையும் நுணுக்கமாக திட்டமிட்டு வழிநடத்தும் அவரது ஆற்றல் எப்போதும் வியப்பிற்குரிய தொன்றே.

தலைவர் அவர்கள், யாருடைய ஆலோசனைக்கும், கருத்துக்கும் செவிசாய்க்கும் தன்மையை கொண்டவர். ஆக்கபூர்வமான, விடுதலையை விரைவுபடுத்தவல்ல, தேசத்தில் வளர்ச்சியை ஏற்படுத்தக்கூடிய கருத்துக்கள் போராளிகளிடமிருந்தோ, பொது மக்களிடமிருந்தோ வருமாக இருந்தால், அதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கவனிப்பதுவும், முக்கிய

தமிழ் ஆவணக்காப்பகம் Tamil Archive



மான விடயங்களை உடனடியாக நிறைவேற்றுவதுவும் எந்த விடயத்தையும் அவரவர்களுக்குரிய நிலையில் நின்று அணுகி தீர்வினைக் காணுவதும் தலைவரின் தனித்துவமான பண்புகளில் ஒன்று. இதைக் குறிப்பிடும்போதுதான் அண்மையில் நடந்த சம்பவமொன்று நினைவுக்கு வருகின்றது. எல்லைப்படை வீரர்களாய் களத்தில் நின்று வீரச்சாவை அடைந்தவர்களது குடும்பங்களுக்கான மாதாந்த நிதிக் கொடுப்பனவுகளை அதிகரிக்கவேண்டும் என்ற விடயத்தை போராளி ஒருவர் கடிதம் மூலம் அவரது கவனத்துக்குக் கொண்டுவந்தபோது, நாம் எதிர்பார்த்ததைவிட இன்னும் ஆழமாகவே அதுபற்றி விவாதித்து, உடனடியாகவே அப்பிரச்சினையை விளங்கி, அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்டவர்களைப் பணித்தார்.

2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடவடிக்கை ஒன்றிற்காக மகளிர் சார்ந்த அனைத்துப் படையணிகளின், போராளிகள் ஒன்றுசேர்க்கப்பட்டு, பயிற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். அதற்கான ஒத்திகையை தலைவர் அவர்கள் வந்து பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அவ்வேளை அதில் பயிற்றப்பட்ட குறிப்பிட்ட போராளிகளை வேறு பணிக்காக மாற்ற வேண்டியிருந்தது. மிகுந்த உற்சாகத்தோடு தம்மை வருத்தி பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அவர்களின் மன உணர்வுகளைப் புரிந்துகொண்ட தலைவர் அவர்கள், தனது நேரத்தை ஒதுக்கி, ஒவ்வொரு படையணிப் போராளிகளுடனும் படையணி ரீதியாக தனித்தனியே கதைத்து அவர்களின் பணியை மாற்றுவதற்கான நியாயப்பாட்டையும் அமைப்பின் நலனையும் விளக்கி அவர்களின் மனதைத் தேற்றியிருந்தார். அந்தப் போராளிகளுக்காக தனது நேரத்தையும் பொருட்படுத்தாது அதிக

தலைவரைப் பொறுத்தமட்டில் எந்தப் பணிக்கும் திறமையுடையவர்களைத் தெரிவு செய்யவேண்டும் என்பதில் முழுமையான கவனம் செலுத்துவார்.

அக்கறை எடுத்தமை, எம்மையே வியக்க வைத்தது. தலைவரைப் பொறுத்தமட்டில் எந்தப் பணிக்கும் திறமையுடையவர்களைத் தெரிவு செய்யவேண்டும் என்பதில் முழுமையான கவனம் செலுத்துவார். எந்தப் பணியிலும் போராளிகளை அமர்த்தும்போது, சொல்வதை அப்படியே செய்யாமல் எதனையும் தானாகவே சிந்தித்து, அதில் உள்ள சரி பிழைகளை இனங்கண்டு விவாதித்துச் செய்யக்கூடிய ஆற்றல் உள்ளவர்களை தெரிவு செய்யவேண்டும் என்பதுடன், சொல்வதைக் காட்டிலும் செயலில் அதிக கவனம் இருக்கவேண்டும் என அடிக்கடி கூறுவார்.

நாம் செய்யும் எந்தவொரு பணியிலும் நாமே திருப்திப்படும் தன்மை வரக்கூடாது என்பதற்கமைய

தமிழ் ஆவணகாப்பகம்
Tamileelam Archive

யாரோடு கலந்து பழக எனக்கு அனுமதி இருக்கவில்லை. இளம் பெண்களைக் கண்டால் வெட்கப்படுவேன். என் தந்தையின் நல்லொழுக்கம் என்னை நெறிப்படுத்தியது. வெற்றிலை கூடப் போடமாட்டார். ஒழுக்கங்களை அவரைப் பார்த்தே நான் உருவாக்கிக்கொண்டேன். ஓர் அரச ஊழியராக மாவட்ட நில அதிகாரியாக அவர் இருந்தார். என் தந்தையார் கொஞ்சமும் ஒளிவு மறைவில்லாதவர், நேர்மையாளர். எமது ஊர் மக்கள் இப்படிச் சொல்லிக் கொள்வார்கள். 'அந்த மனிதர் நடந்தால் அவர் காலின் கீழே உள்ள புல்லுக்குக்கூட நோகாது'. ஆம், அப்படிப்பட்ட தந்தைக்கு இப்படி ஒரு மகன் பிறந்தானே என்றுதான் மக்கள் பேசிக்கொண்டார்கள். அவர் கண்டிப்பானவராக இருந்தார். அதேவேளை நெஞ்சைத் தொடுகிற ஓர் ஆற்றலும் அவரிடம் இருந்தது. நண்பன் ஒருவனைப்போல் பக்கத்தில் உட்கார்ந்து நியாயங்களை எடுத்துச் சொல்லி அவர் என்னை நல்வழிப்படுத்தினார்.




சுபாஷ் சந்திரபோசின் வாழ்க்கை என்னைப் பெரிதும் கவர்ந்தது. சிறுவனாய் இருந்த காலத்தில் காந்தி அடிகளின் 'உண்மை', 'பிரமச்சரியம்' பற்றிய நூல்களைப் படித்தேன். சின்ன வயதிலேயே ஆன்மீகத்தைத் தேடிப்போய் ஈற்றில் துறவு வாழ்க்கையில் வெறுப்புற்றுத் திரும்பிய சுபாஷ் சந்திரபோசை எனக்குப் பிடித்திருந்தது (சிரிப்பு). ஆனாலும் வாழ்வில் துன்பமும் தொல்லையும் சூழ்ந்த போதெல்லாம் அவர் மீண்டும் மீண்டும் ஆன்மீகத்தையே நாடி

தலைவரின் அறிவுரைகள் இருக்கும். அவரின் இந்தப் பண்பே எம்மை மென்மேலும் வளர்த்ததெனலாம். 1990இல் கொக்காவில் சிறீலங்காப் படைத்தளம்மீதான தாக்குதலில் எமது அணிப் போராளிகள் நன்றாகச் சண்டை பிடித்திருந்ததை அறிந்த தலைவர், தனது பாராட்டுதலைத் தெரிவித்துவிட்டு, பின்னர் காயத்தைப் பார்த்து கல்கியின் 'பொன்னியின் செல்வன்' நாவலில் வரும் பெரிய பழுவேட்டரையருக்கு அறுபத்து நான்கு வீரத்தழும்புகள் உடலில் உள்ளனவாம். அதேபோல வீரத்தில் சிறந்தவர்களாக வரவேண்டும் என்று சொல்லியனுப்பினார்.

ஜெயசிக்குறு எதிர் நடவடிக்கையின் போது புளியங்குளத்தில் நாம் முன்னரங்கக் காவலரண்கள் அமைக்கும் வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த போது இராணுவம் டாங்கிகளுடன் எமது பகுதியூடாக பெரும் முன்னேற்ற நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டது. எமது அணி இதனை முறியடித்து படையினரை இழப்புக்களுடன் திருப்பி அனுப்பியது. இதற்கு பாராட்டுகளைத் தெரிவித்த தலைவர் அவர்கள், இதைவிட இன்னும் கடுமையான தாக்குதல்களை எதிர்கொள்ளவேண்டியிருக்கும். அதற்காக உங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளவேண்டும் என்று தெரிவித்திருந்தமையானது, நாம் செய்யவேண்டிய பணிகளும் எதிர்கொள்ளவேண்டிய சவால்களும் இன்னும் அதிகம் உண்டு என்பதை அந்த நேரத்தில் உணர்த்தியது.

> கல்கியின் பொன்னியின் செல்வன்'னில் வரும் பெரிய பழுவேட்டரையருக்கு அறுபத்து நான்கு வீரத்தழும்புகள் உடலில் உள்ளனவாம். அதேபோல **வீரத்தில் சிறந்தவர்களாக வரவேண்டும்.**

தொடர்ந்து எதிரி பல முனைகளில் தாக்குதல்களை மேற்கொண்டிருந்த போது எமக்கும் எல்லா முனைகளையும் எதிர் கொள்வதற்கு ஆட்பற்றாக்குறை பெரும் பிரச்சினையாக இருந்தது. உடனே தலைவர் இதற்குரிய மாற்றுத்திட்டம் ஒன்றை ஒழுங்குபடுத்தி அந்த நெருக்கடியை இலகுவாகத் தீர்த்து வைத்தார். இத்திட்டத்தை சமரை வழிநடத்திய தளபதியிடம் சொல்லிவிட அவர் எமக்கு சொன்ன போது, நடைமுறைச் சாத்தியம் போல் தெரியவில்லை. எனினும் தலைவர் சொன்னது என செய்ய முடிவெடுத்தோம். பின்பு தலைவரை நேரில் சந்திக்கும் போது அவர் தனது திட்டத்தை எனக்கு நேரில் விளங்கப்படுத்திய போது அத்திட்டத்தின் மீது நல்ல நம்பிக்கை ஏற்பட்டது. இதேபோல் சமர் எல்லா முனைகளிலும் நடைபெற்ற போது காடுகளில் நின்ற எமது அணிகள், பெரும் நீர் பிரச்சினையை எதிர்கொண்டனர். இப்பிரச்சினை தலைவரிடம் சொல்ல, உடனே காவலரண்களுக்கு அருகில் கிணறுகள் ஒழுங்குபடுத்தப்பட்டது. இவ்வாறு சில பிரச்சினைகளை சிறிய பிரச்சினைகள் எனகருதி இந்த நெருக்கடிக்குள் எவ்வாறு கேட்பது என தயங்கி நின்றால் தானாகவே தேவைகளைக் கேட்டறிந்து ஒழுங்குபடுத்தும் தன்மை அவருடையது.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இதேபோல தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்கின்ற இன்னுமொரு விடயத்தை இங்கு குறிப்பிட்டாகவேண்டும். 'இந்தப் போராட்டத்தில் ஒவ்வொருவரும் தத் தமது கடமைகளைத்தான் செய்கின்றனர். நானும் அப்படியே. இதுவரை இனத்துக்கான எனது பணி முடிவடையவில்லை. எனது மக்களுக்காகத் தாயகத்தைப் பெற்றுக்கொடுத்த பின்னர்தான் எனது பணியை முழுமையாகச் செய்தேன் என நிறைவடையமுடியும்' என்றார். இவ்வாறு தனது பணியிலேயே நிறைவடையாத இயல்பு அவருடையது.

இதுவரைகாலமும் போராட்டத்தை முழுவீச்சுடன் வழிநடத்துகின்ற தலைவரது நெஞ்சுரம் அளவிட முடியாதது. அந்த உறுதிதான் எமது போராட்டத்தை இன்று உலகம் வியக்கும்வண்ணம் மாற்றியுள்ளது. அக்காலப் பகுதியில் மணலாற்றுக் காட்டில் தலைவரோடு இருந்தபோது நடைபெற்ற ஒரு சம்பவத்தை இங்கு நாம் குறிப்பிடுவது பொருத்தமானது. உணவு, நீர் போன்ற அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதிலேயே பெரும் நெருக்கடிகளை சந்தித்த நேரம் அது. காட்டினுள் இருந்த எமக்கும் மக்களுக்குமான நேரடித் தொடர்புகள் இந்திய இராணுவத்தால் தடைப்பட்டிருந்த காலம். காடு முழுவதும் எங்கு பார்த்தாலும் இராணுவத்தின் ரோந்து அணிகள். தலைவருக்குக்கூட திட்டங்களை மேற்கொள்வதற்குப் பாதுகாப்பான இடம் என்று எதுவுமே இல்லாத நேரம். இந்த நிலையைப் புரிந்துகொண்டு காட்டுக்கு வெளியில் இருந்து கேணல் கிட்டு அவர்களால் அனுப்பப்பட்ட தலைவரின் பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகள் தொடர்பான செய்தியை எமக்கு தெரிவித்து 'எனது உயிருக்காக மறுபடி ஒரு ஆயுத ஒப்படைப்பு நடக்க அனுமதிக்கமாட்டேன். நான் வீரச்சாவு அடைந்தால், இன்னொரு பிரபாகரன் அல்லது ஒரு பிரபாகரியாவது தோன்றி இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும். நீங்கள் எல்லோரும் இதில் உறுதியான முடிவை எடுக்கவேண்டும். இந்தக் கடினங்களுக்கு ஈடுகொடுத்து போராடும் மனநிலை யாருக்காவது இல்லையெனில் அவர்களைப் பாதுகாப்பாக அவர்களது பெற்றோரிடம் ஒப்படைக்கின்றேன். நான் விலங்குகளைச் சுட்டுச் சாப்பிட்டாவது இந்தப் போராட்டத்தைத் தொடர்வேன்' என்றார். தலைவர் இவ்வாறு சொல்லும்போது அங்கிருந்த பெண் போராளிகளில் ஒருவரும் இளநிலை அதிகாரியாகக் கூட வளர்ந்திருக்கவில்லை. இந்தச் சம்பவத்தின் மூலம் தலைவர் அவர்களது இலட்சியப் பற்றையும், எம்மீது கொண்ட நம்பிக்கையையும் நேரடியாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கொண்ட கொள்கையில் உறுதியும் விடாமுயற்சியுடன் கூடிய இலட்சியப்பற்றும் தனது நலனையோ உயிரையோ பெரிதாக எண்ணாது நாட்டுக்காக எதையும் செய்வேன் என்ற தலைவரின் உறுதியான நெஞ்சுரமும்தான் இந்திய இராணுவத்தை எமது மண்ணிலிருந்து திருப்பியனுப்பி, சரித்திரத்தில் மகத்தான மாற்றத்தைக் கொண்டுவந்தது.

இத்தகைய அற்புதமான தலைவரின் அடிமன விருப்பு எதுவாக உள்ளது என்பதை எல்லோரும் அறிந்திருக்கவேண்டும். அண்மையில் நடந்த துரோகத்தனமான சம்பவத்தின் பின் ஒருநாள் தலைவர் கதைத்து கொண்டிருந்த போது பின்வருமாறு தனது மனஉணர்வை வெளிப்படுத்தினார். 'இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து நடத்துவதற்கு சிறந்த தொரு தலைமை கிடைக்குமாயின், தான் இந்த நிலையைவிட்டு சாதாரண ஒரு போராளியாக சண்டையிடும் அணிகளுடன் நிற்கவும், மிதிவண்டியில் சென்று கிராமமக்கள் மத்தியில் சேவைசெய்வதும் தான் விருப்பம்' என தனது மனவிருப்பை



வெளிப்படுத்தினார். 1993 இல் காயப்பட்ட போராளிகளின் நலன் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றில் 'தமிழீழம் கிடைத்தபின்னர் எனது பணி, விழுப்புண்ணடைந்த போராளிகள் சார்ந்ததாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் சார்ந்ததாகவுமே முழுமையாக இருக்கும்' என்று கூறியதை மேற்கண்ட கூற்று மீள எனக்கு நினைவு படுத்தியது.

> நான் வீரச்சாவு அடைந்தால், இன்னொரு பிரபாகரன் அல்லது ஒரு பிரபாகரியாவது தோன்றி இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தவேண்டும்.

'எமது போராட்டம் இன்று உலக அரங்கில் உயர்ந்த நிலையை அடைந்திருக்கிறது. இவ்வாறு வளர்ந்தபின்பு எமது மாவீரர்களுடைய, மக்களுடைய, ஈகங்களை மதிக்காமல் எவ்வாறு இத்தகைய பழி பாவங்களை செய்ய முடிகிறது. இவர்களை என்றோ ஒருநாள் தர்மம் தண்டிக்கும்' எனத் தலைவர் சொன்னமை, சிறுவயதில் நாம் பிழைகள் விட்ட போது, 'பாவம் செய்யக் கூடாது' என்று சொல்லி

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

னார். சுபாசின் வாழ்க்கை என்னை மிகவும் ஈர்த்தது. என் நெஞ்சில் சுபாஷ் நிலைத்த மனிதர் ஆனார். அவர் ஆற்றிய சொற்பொழிவுகள் (நூல்வடிவில் வந்ததை) அப்படியே நெஞ்சில் பதிந்தன. 'கடைசித் துளி இரத்தம் இருக்கும் வரை என் மண்ணுக்காக நான் போராடுவேன்' என்ற சுபாஷின் வீர உரையை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். நினைவுக்கு வரும்போதெல்லாம் இந்தச் சொற்கள் என் நெஞ்சைச் சிலிர்க்க வைத்தன. அடுத்து 'பகவத்சிங்கின்' வரலாறு என்னை ஆகர்சித்தது.



சுருக்கமாகச் சொன்னால், அநீதியாளர்களை மோதியவர்களின் வாழ்க்கை வரலாறுகளையே, அந்த நாட்களில் நான் சுற்றிச் சுழன்றுகொண்டிருந்தேன்.

இதற்கெல்லாம் ஒரு காரணம் இருந்தது. எமது தாயகத்தில் சிங்களவர்கள் அப்போது எம்மை மிகவும் கொடுமையாக நடத்திக்கொண்டிருந்தார்கள். அக்கொடுமைகள் பற்றிய செய்திகள் அவ்வப்போது பத்திரிகைகளிலும் நூல்களிலும் வெளிவந்து கொண்டிருந்தன. ஒரு கட்டத்தில் 1958 இல் நடைபெற்ற பயங்கர தமிழர் படுகொலைகள் பற்றி நான் படிக்க நேர்ந்தது. அந்த நிகழ்ச்சிகள் எத்தனை கொடூரமானவை தெரியுமா?. கோயிலில் உறங்கிக் கொண்டிருந்த பூசை செய்யும் ஒரு பிராமணரைத் தட்டி எழுப்பி கொடிய சிங்களவர்கள் எண்ணெய் ஊற்றி எரித்துக்கொன்றார்கள். பாணந்துறை என்ற இடத்தில் இந்த சம்பவம் நடந்தது.

எம்மை வழிப்படுத்துகின்ற பெற்றோர்களின் மன நிலையை ஒத்திருந்தது. எத்தகைய உயர்நிலையில் இருந்தாலும் மனதாலும், செயலாலும், அவர் மிகவும் எளிமையானவர்.

ஓயாத அலைகள்-01 சமரில் நடைபெற்ற சம்பவம் ஒன்றையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. போரில் இறந்த சிங்கள இராணுவ வீரர்களின் உடலுக்கு எமது போராளிகள் உரிய மரியாதை கொடுக்காமல்விட்டதுடன், சிறீலங்கா தேசியக் கொடியையும் எரித்திருந்தனர். இந்தச் செய்தி தலைவரின் காதுகளுக்கு எட்டியபோது இந்த விடயத்தை அவர் கண்டித்திருந்தார். ஒரு நாட்டின் தேசியக் கொடி என்பது மிகவும் புனிதமானது. எமது தேசத்தின் கொடியை வேறு நாட்டினர் எரித்தால் எமக்கு எத்தகைய கோபம் வருமோ, அதேபோலத்தான் அந்நாட்டு மக்களுக்கும் இருக்கும். அதேபோல ஒரு இராணுவ வீரனின் உடலுக்கு உரிய மரியாதையை நாம் கொடுக்கவேண்டும் என்று கூறியதன்மூலம் அவரின் வித்தியாசமான பக்கம் ஒன்றை அறியக்கூடியதாக இருந்தது.

ஒரு நாள் தலைவரைச் சந்திக்கச் சென்றிருந்தபோது, கேணல் ராஜு அவர்கள் வீரச்சாவடைந்த செய்தி அவரை வந்தடைந்துவிட்டது. ஆனால் வெளியில் வேறுயாருக்கும் அச்செய்தி சென்றடையாத நேரம். கண்கள் சிவந்து கலங்கியிருந்தன. அந்தச் செய்தியை நேரடியாக சொல்ல ராஜு என்ற பெயரை உச்சரிக்க இயலாத மனநிலையில், நீண்ட காலமாக ராஜு அவர்களுடன் பழகி ஒன்றாகக் களங்களில் நின்ற லெப். கேணல் விக்ரர், லெப்.கேணல் ராதா ஆகியோரைப்பற்றி நீண்ட நேரமாக கதைத்துக்கொண்டேயிருந்தார். இதைவைத்து ராஜு அண்ணைக்கு ஏதோ நடந்துவிட்டது என்பதை ஊகித்துக் கொண்டேனே தவிர, அந்தச் செய்தியை அப்போது நேரடியாக என்னிடம் தலைவர் சொல்லவே இல்லை. இறுதியில் 'போராட்ட வாழ்க்கையில் மட்டுமன்றி குடும்ப வாழ்விலும் ராஜு மிகவும் எளிமையானவர்' என்று முடித்தார். கேணல் ராஜு அவர்கள் வீரச்சாவடைந்துவிட்டார் என்பதை பின்புதான் என்னால் முழுமையாக அறிந்துகொள்ள முடிந்தது. ஆனால், கேணல் ராஜு அவர்கள் நோயுற்று, குறிப்பிட்ட காலம்வரை இயலாதநிலையில் இருந்து, மிகக் கடுமையாகிய பின்னர் சிகிச்சைக்காக அனுப்பப்பட்டார். சிலநாட்களுக்கு மட்டுமே அவர் உயிருடன் இருப்பார் என்பது தெரிந்தும், அவர்மீது வைத்த அளவில்லாத பற்றினால் தன்மனதை ஆற்றிக்கொள்ள முடியாமல் தவித்ததை பார்த்த பொழுது தான் நேசிக்கும் ஒவ்வொரு தளபதிகளும் போராளிகளும் திடீர் என வீரச்

> தமிழீழம் கிடைத்த பின்னர் எனது பணி, விழுப்புண்ணடைந்த போராளிகள் சார்ந்ததாகவும், பாதிக்கப்பட்ட மக்களின் முன்னேற்றம் சார்ந்ததாகவுமே முழுமையாக இருக்கும்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



சாவைத் தழுவிக்கொள்ளும் போது தலைவரின் இதயத்தில் ஏற்படும் வலி எத்தகையதாக இருக்கும் என்பதை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.

மேலும் சண்டைநடந்து கொண்டிருக்கும் காலப்பகுதியில் மன்னாரில் எமது அணிகள் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் அங்கு நின்ற நான்கு பேர் அவர்களது கவலையீனத்தால் எதிரியின் பதுங்கித்தாக்குதலில் வீரச்சாவு அடைந்துவிட்டனர். அவ்வேளை நான் தலைவரை நேரில் சந்தித்த போது அவரால் இப்படியும் கோபப்பட முடியுமா?, என நான் நினைக்கும் அளவிற்கு கோபம் இருந்தது. அவ்வேளையில் எந்தக் காரணத்தையும் சொல்லவும் முடியாது. தலைவர் அவர்கள் ஆரம்பத்தில் நேரடியாக சண்டைக்களங்களில் நின்று வழிநடத்தியபோது மேற் குறிப்பிட்டது போன்ற இழப்புகளுக்கு இடமளிக்காது செயற்பட்ட வரலாற்றை நினைத்து மனம் ஆறுதல் அடைந்தது. மணலாற்றுக் காட்டுப் பகுதியில் இந்திய இராணுவத்துடன் சண்டை நடந்த சமயம் 'ஜீவன்' என்ற போராளி வீரச்சாவு அடைந்தபோது, அவரது வித்துடலை எடுக்க முடியாது என சண்டையை வழி நடத்திய பொறுப்பாளர் அறிவித்தபோது, தலைவருக்குக் கோபம் வந்து விட்டது. ஏன் எடுக்க முடியாது எனப்பேசி, எப்படியாவது வித்துடலை எடுக்க வேண்டும் என்றும், இல்லையேல் தான் வந்து எடுப்பதாக சொன்னபோது, தலைவரின் உறுதியான கட்டளையின் பின் அந்த வித்துடல் எடுக்கப்பட்டது.

> அளவிட முடியாத ஆளுமைக்கும் அதே நேரம் எளிமைக்கும் எடுத்துக்காட்டான எமது தலைவர் அவர்களுக்கு தமிழீழதேசம் என்றென்றும் கடமைப்பட்டது.

அளவிட முடியாத ஆளுமைக்கும் அதே நேரம் எளிமைக்கும் எடுத்துக்காட்டான எமது தலைவர் அவர்களுக்கு தமிழீழதேசம் என்றென்றும் கடமைப் பட்டது. இவ்வாறு தேசியத் தலைவர் என்கின்ற பெரும் பொறுப்புக்கும் அப்பால், அவரது மனித நேயமும், போராளிகள், மக்கள் மீதான பரிவும், யாருடனும் ஒப்பிடமுடியாதவை. எந்த ஒப்புவமையுமற்று விடாமுயற்சியோடும் உயர்ந்த நெஞ்சுரத்தோடும் விடுதலைப் போரை வழிநடத்தும் தலைவர் அவர்களுக்குப் பின்னால் அனைத்து மக்களும் ஒன்றிணைந்து, தொடர்ந்தும் பெரும் பலம் சேர்ப்போமாக இருந்தால், நிச்சயமாக எங்கள் எல்லோரினதும் 'தாயகக் கனவு' நனவாகும்.

நன்றி.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



## இருபதாம் நூற்றாண்டின்

# செயல் வீரன் பிரபாகரன்

கடந்த சில நூற்றாண்டுகளில் தமிழினம் கண்டும் கேட்டுமிராத ஒரு செயல்வீரனை இந்த நூற்றாண்டில் தமிழீழம் பெற்றிருக்கிறது, பெருமை கொண்டிருக்கிறது.

பட்டம் பெற்றவர்களும் சட்டம் படித்தவர்களும் தங்கள் நாவன்மையாலும் சட்ட நுணுக்கத் திறனாலும் தமிழ் மக்களுக்கு அவர்களது உரிமைகளை நிலை நாட்டவும் பாதுகாப்புப் பெற்றுத் தரவும் செய்த முயற்சிகள் எவையும் வெற்றி ஈட்டிக் கொடுத்ததில்லை.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவும், சுயநிர்ணய உரிமைகளை நிலை நாட்டவும் காந்திய வழியில், தமிழ்த் தலைவர்கள் சாத்வீக வழிமுறையில் நடத்திய போராட்டங்களும் தோல்வியடைந்தன.

ஜனநாயக வழியும் சாத்வீகப் போராட்டங்களும் சிங்களப் பேரினவாதத்தின் தமிழ் இன ஒழிப்புக்கே பயன்பட்டன.

தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கில் விவசாயவிருத்தி என்ற பெயரில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலம் தாயக மண் ஆக்கிரமிப்புக்குள்ளானது. நாட்டின் பாதுகாப்பு என்று சொல்லி தமிழ் இன ஒழிப்பு முடுக்கிவிடப்பட்டது.

தமிழர் தாயக மண்ணைக் காக்கவும் தமிழ் இன ஒழிப்பைத்தடுத்து தமிழ் மக்களைக் காப்பாற்றவும் இனி வேறு வழியில்லை என்ற நிலையில் ஆயுதம் ஏந்திப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி, வல்லரசுகள் உதவியுடன் அழித்தொழிக்க முனைந்தது சிங்களப் பேரினவாதம்.

இந்தச் சதித்திட்டங்கள் யாவற்றையும் தவிடு பொடியாக்கி போர் நிறுத்தத்தைப் பிரகடனம் செய்து சமாதானப் பாதைக்கு வழி காட்டி பேச்சுவார்த்தை நடத்தி நிரந்தர சமாதானத்துக்கு சிங்களத் தலைமைக்கு அழைப்பு விடுத்துக் காத்திருக்கிறார், தலைவர் பிரபாகரன்.

மாவீரன் அலெக்சாந்தர், மாவீரன் நெப்போலியன் போன்றவர்கள் பற்றிப் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களிலும் வரலாற்றுப் பாடங்களாக இடம் பெற்றிருக்கின்றன. அந்த மாவீரர்கள் பற்றிப் படித்துத்தான் அறிந்து கொள்கின்றார்கள்.

நவீன போர்ச்சாதனங்



எஸ்.எம்.கோபாலரத்தினம்

மூத்த பத்திரிகையாளர்,
முன்னாள் ஆசிரியர்,
ஈழநாடு,
ஈழமுரசு,
ஈழநாதம்,
தினக்கதிர்.
தமிழீழம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

களும் போர்க்கருவிகளும் மலிந்துள்ள இந்த விஞ்ஞான யுகத்தில் இந்த நூற்றாண்டில் பல்வேறு நாடுகளின் உதவியுடன் போர் புரிந்த சிறிலங்கா வின் முப்படைகளையும் எதிர்த்து தமிழர் தாயகத் தின் பெரும் பகுதியை மீட்டு தமிழீழ விடுதலைக்கு வித்திட்டிருக்கும் மாவீரன் பிரபாகரன் அவர்களை மக்கள் நேரடியாகவே பார்த்து அறிந்து போற்றிப் புகழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

வடதுருவம் தென்துருவம் என இன்று விரிந்து கிடக்கும் தமிழ் கூறும் நல்லுலகில் மட்டுமல்லாது அகில உலகிலுமே இன்று வரலாற்று நாயகனாக தமிழீழத் தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபா கரன் அவர்கள் விளங்குகின்றார்கள்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் மீது தமிழ் மக் கள் எத்தகைய பாசத்தையும் பக்தியையும் கொண்டி ருக்கிறார்கள் என்பதை நான் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவம் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

இவ்வருடம் ஜூன் மாதம் நான்காம் திகதி நான் கிளிநொச்சிக்கு அழைக்கப்பட்டேன். எனது ஐம்ப தாண்டு காலப் பத்திரிகைப் பணியையும் அதன் மூலம் தமிழ்த்தேசியத்துக்கு நான் அளித்துள்ள பங்களிப்பையும் பாராட்டித் தேசியத் தலைவர் பிரபா கரன் அவர்கள் எனக்குச் சிறப்பு விருது வழங்கி விருந்தும் அளித்துக் கௌரவித்தார்.

தேசியத் தலைவரிடம் கௌரவம் பெற்று மறு நாள் யாழ் நகர் சென்றிருந்தேன். நகரில் இது வரைநான் பலதடவைகளிலும் சந்திப்பவர்கள் கூட அன்று என்னைப் பார்த்து மரியாதைசெலுத்தியது என்னை வியப்படையச் செய்தது.

மறுநாள் 6ஆம் திகதி காலை பெருமாள் கோயி லுக்கு வழமைபோல் சுவாமி தரிசனம்செய்யச் சென்றேன். தரிசனம் முடிந்து வெளியே வந்ததும் ஆஞ்சநேயர் கோயில் வாசலுக்கு நேரே கோபு ரவாசலுக்கு வெளியே ஒரு நண்பர் நின்று 'உங்க ளைப் பார்க்கத்தான் காத்து நிற்கின்றேன்.' என்றார்.

நான் நின்றதும் என்னை நோக்கி வந்த அந்த அன்பர் 'எனது கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டார். நான் அதிர்ச்சியடைந்து நீங்கள் யார்? ஏன் எனது கைகளைப் பிடிக்கின்றீர்கள்?' என்று கேட்டேன்.

அந்தக் காலத்தில் காசிக்கு யாத்திரை போய் வருபவர்களைச் சென்று பலரும் தரிசிப்பார்கள். அப்படிச் செய்வது காசிக்குப் போய்த் தரிசித்த பயனைத்தரும் என்று சொல்வார்கள். 'நீங்கள் எங் கள் தலைவரைத் தரிசித்து அவர் கைகளால் விருது பெற்று வந்திருக்கிறீர்கள். தலைவர் கரங்களால் விருதுபெற்ற பாக்கியம் உங்களுக்கு இருக்கிறது. அந்தப்புண்ணியம் எனக்கும் கொஞ்சம் கிடைக்க வேண்டும் என்பதற்காக உங்கள் கைபற்றிக் கண ணில் ஒற்றிக்கொண்டேன்.' என்று அந்த அன்பர் கூறியதும் நான் மெய்சிலிர்த்து சிறிது நேரம் அசை யாமல் நின்றேன்.

ஒழுக்கமும், கட்டுப்பாடும், வீரமும், விவேக மும், நேர்மையும், அஞ்சா நெஞ்சமும் கொண்ட தன்னலமற்ற ஒரு தலைவன்தான் ஓர் இனத்தின் விடுதலைக்குத் தலைமைதாங்கி வெற்றி நடை போட முடியுமென்பதை நிரூபித்திருக்கிறார் மாவீரன் பிரபாகரன்.

இன்று தமிழ் மக்கள் தரணியில் தலை நிமிர்ந்து நடப்பதற்குத் தலைவர் பிரபாகரனே காரணம்

**நீங்கள் எங்கள் தலைவரைத் தரிசித்து அவர் கைகளால் விருது பெற்று வந்திருக்கிறீர்கள். தலைவர் கரங்களால் விருதுபெற்ற பாக்கியம் உங்களுக்கு இருக்கிறது. அந்தப்புண்ணியம் எனக் கும் கொஞ்சம் கிடைக்க வேண்டும் என்பதற்காக உங்கள் கைபற்றிக் கண்ணில் ஒற்றிக்கொண்டேன்.**



என்பதை உணர்ந்துள்ள தமிழ் மக்கள், வாராது வந்துள்ள மாமணியாம் தலைவர் பிரபாகரன் மீது அளவுகடந்த பாசமும், நேசமும், பக்தியும், விசுவா சமும் செலுத்தி நிற்கின்றனர். அவர் நீடுவாழப் பிரார்த்திக்கின்றனர்; வாழ்த்துகின்றனர்.

தமிழ் ஆவணக் காப்பகம் Tamileelam Archive



# THE BRIGHT NOON

**All** hail to the Leader, the most valorous soul
You can meet on earth's surface from tropic to pole!
A leader ever ready resourceful and unflinchingly bold,
His charismatic radiance pervading the young and the old.

Sans the sweetest of slumbers he shields us all,
For our rights and our future will venture his all;
He is immuned to rancours or to pranks,
And is ours at a moment for succours and pangs.

And the day is not for when all shall behold
The flag of Eelam over the nations unrolled;
And the Leader acknowledged by tongue and by pen,
As the Champion of the oppressed and the Lover of Men.



KANDIAH NAVARENDRAN

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஒளிரும் நண்பகல்

வெப்ப மண்டலம், துருவங்கள், பூவுலகு...
இன்னும் மனித அகம்...
எனவாய் மறைந்தொளிந்த அடிமை இருள்
தகர்க்கும் ஒளிக்கீற்றாய், ஒளி வீச்சாய்,
பேரொளியாய்
பிரகாசிக்கும் தலைவனவன்.

கண்ணயரும் தூக்கமதையும்
காணுறாது, அடிமை இருளகற்றும்
எண்ணச் சிரத்தையுடன்
ஓய்வொழிச்சலின்றி
ஒளி வீசும் தானைத் தலைவனவன்.

மானிட ஒளி கிட்டாது மறுக்கப்பட்டோரின்
இரட்சகனாய்,
பாட்டுடைத்தலைவனாய், காவியனாய்,
மனிதநேயனாய் மிளிரும்
தன்னேரில்லாத் தலைவனவன்.

இதோ, தமிழீழக் கொடி
தென்றல் தழுவ
பகலொளி பட்டு, பட்டொளி வீசப்பறக்கும்
நம் கனவை நனவாக்கும்
நவவுலகத் தலைவனிவன்.



கந்தையா
நவரேந்திரன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**2004** நவம்பர் 26ம் நாள் இன்றைய தமிழர் யுகத்தின் இணையில்லாத் தலைவரான தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களின் 50வது பிறந்த நாள். தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழர்களின் புதிய யுகமொன்றின் சிற்பி. விடுதலையின் பிரபை. தமிழ் இலக்கியங்கள் தமிழர் ஆன்மீகம் தேடுகின்ற தமிழர் பண்பாட்டின் மனிதஉரு. தனக்கென வாழாப் பிறர்க்குரியாளன். இந்த தன்னலம் கருதாப் பெருநெஞ்சம் கொண்டதினால் தமிழர்களின் தன்னிகரற்ற வீரத்தை, தலைசிறந்த தலைமையைத் தமிழர்களுக்குத் தந்து, அவர்கள் இதயமூச்சாகப் பேச்சாகத் திகழ்கின்றார். உலகால் தமிழர் தேசியத்தின் மனிதக் குறியீடாக தமிழர் இனமானத்தின் அடையாளச் சின்னமாக கருதப்படுகிறார். தமிழீழ மக்களின் பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரியவராக மட்டுமல்ல, தமிழர் வரலாற்றில் யாருக்குமே அவர்கள் கொடுக்காத அரசியல் பணிவை அவர்கள் மனம் உவந்து அளிக்கும் மாபெரும் மக்கள் தலைவன் என்ற உன்னதமான பெயருக்குச் சொந்தக்காரனாக அவர் விளங்குகின்றார்.



தேசியத் தலைவரின் 50வது பிறந்தநாள்

# தமிழீழ மக்களின் திருநாள், தமிழீழ தேசத்தின் எழுச்சிநாள்




சு.யோ.பற்றிமாகரன்

அரசியல் ஆய்வாளர், எழுத்தாளர். பிரித்தானியா.


இதனால் அவரின் 50 ம் பிறந்த நாளாம் இந்நாளைத் தமிழீழ மக்கள் தங்கள் அடையாளத்தின் திருநாளாக - தங்கள் உயிரினும் மேலான தமிழீழத் தேசத்தின் விடுதலையினை உறுதி செய்யும் பொன்னாட்களில் ஒன்றாக - பாதுகாப்பான அமைதி என்னும் தங்கள் தேவையை நிறைவேற்றக் கூடிய தன்னாட்சிக்கு தங்களை வழிநடத்தும் நன்னாளாக கருதுகின்றனர். அதனால் இந்நாள் மக்கள் திருநாளாக மாறுகிறது. தேசத்தின் எழுச்சிநாளாக மலர்கிறது, தமிழர் இதயங்களில் இருந்து நன்றி என்னும் நறுமணம் நானிலமெங்கும் பலவகைகளில் பரவுகிறது. தமிழீழ மக்களையும் தமிழீழத் தேசத்தின் இருக்கையையும் உலகிற்குப் பதிவாக்குகிறது.

இந்நேரத்தில் தேசியம் தேச இனம் என்பன குறித்துச் சிறிது எடுத்து நோக்குவது நல்லது. தேசியம் என்பது ஒரு ஆன்மா. அந்த ஆன்மாவின் மகிமையை உணர்ந்து அந்த ஆன்மாவால் மக்கள் இயங்குகின்ற பொழுது அவர்கள் தேச இனமாக உயர்ச்சி காண்பர்.

தேசியத் தலைவனின்
தோற்றம் என்பது;
தேசத்தின், விழிப்பின்,
மானிடக் குறியீடு.

இந்த தேசியம் என்னும் ஆன்மாவை உருவாக்குகின்றனவாக நேற்றும் இன்றும் திகழ்கின்றன. நேற்று என்பது உயர்வான நினைவுகள் ஊடாக உயர்வான பாரம்பரியம் ஒன்றினுக்கு மக்களைச் சொந்தக்காரர் ஆக்குகின்ற பொழுது, அந்த உயர்வான பாரம்பரியத்தைப் பேணிடும் பொதுமை உணர்வு காரணமாக அம்மக்கள்


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இன்றும் என்றும் கூடி வாழும் விருப்புடையவர்களாக மாறுவர். இதுதான் தேசியம். இவ்வாறு இணைந்த மக்கள் தாம் அந்தத் தேசியத்தைப் பேணி வளர்க்க உறுதி பூணுகின்ற பொழுது தேச மக்களாகப் பரிமாணமடைகின்றனர். இவ்வாறு மக்களைத் தேசியத்தால் இணைய வைத்து அவர்கள் மண்ணையும் மக்களையும் காத்திடும் உறுதியுள்ளவர்களாக அவர்களை மாற்றும் ஆற்றலாளன் தான் தேசியத் தலைவன். ஆகத் தேசியத் தலைவன் மக்களின் ஆன்மாவாக இலங்குபவன். தேசியத் தவைனின் தோற்றம் என்பது தேசத்தின் விழிப்பின் மானிடக் குறியீடு.

## மூச்சாய்ப், பேச்சாய், எம்முயிராய்.

நானூறு ஆண்டு கால அடிமை வாழ்வில் இருந்து விழிப்புற்ற தமிழ் மக்களின் விடுதலைக் குறியீடாகி அவர்கள் பேச்சாக, மூச்சாக, ஊணாக, உயிராக, உணர்வாக என்றும் எங்கும் அவர்களுடன் வாழும் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன். பிரபாகரன் என்றதுமே தமிழ் மக்களின் விடுதலை உணர்வின் என்றும் மாறா உறுதியான தலைமையின் வடிவைத் தான் உலகு உணர்கிறது.

## எங்கள் தலைவனை உலகு காணும் விதம்

பிரபாகரன் என்ற வார்த்தை தமிழீழ மக்களுக்கும் உலகில் விடுதலையை அமைதியை விரும்பும் அனைவருக்கும் உன்னதமான புனிதமான தெய்வீக உணர்வை உண்டு பண்ணுகிறது. அதேவேளை ஆக்கிரமிப்பாளர்க்கும், அவர் தம் அடிவருடிகளுக்கும் உலகை தம் சந்தையாக இராணுவ நலனாக காண்பவர்களுக்கும் அதே பிரபாகரன் என்ற வார்த்தை பயங்கரமானதாக, தம் தோல்விக்கு அச்சாரம் என்கிற பயத்தை தோற்றுவிக்கிறது. இதனால் அவர்கள் நடாத்திய நடாத்தும் நடாத்தக் கூடிய அனைத்து ஆக்கிரமிப்புக்களினதும் தன்மைகளை உணர்ந்து அவற்றை ஏற்ற வகையில் தனது மதியுக வழிநடத்தலால் என்றும் முறியடித்து தமிழீழ மக்களையும் மண்ணையும் பாதுகாக்கும் இராணுவ அரசியல் தலைமையாகவும் பிரபாகரன் என்ற வார்த்தைக்கு உலகு பொருள் கொள்கிறது.

> நானூறு ஆண்டு கால அடிமை வாழ்வில் இருந்து விழிப்புற்ற தமிழ் மக்களின் விடுதலைக் குறியீடாகி, அவர்கள் பேச்சாக, மூச்சாக, ஊணாக, உயிராக, உணர்வாக என்றும் எங்கும் அவர்களுடன் வாழும் தேசியத் தலைவர் மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரன்.

தலைவர் பிரபாகரன் ஈட்டிய வெற்றிகள் பார்ப்பவர்களைப் பிரமிப்படையச் செய்வன. ஆனால் அவரிலோ அது அகந்தையை ஆணவத்தை ஏற்படுத்தியதில்லை. மாறாகக் கடமை ஒன்று முடிந்த திருப்தியில் அடுத்த கடமைக்கு தன்னைத் தயாராக்கும் கடமை வீரனாக அவர் மாறுவதையே தமிழர்கள் கண்டுள்ளனர்.

அவ்வாறே தலைவர் பிரபாகரன் தோல்விகளைச் சந்திக்கும் பொழுதும். அது கண்டு அவர் துவண்டதில்லை. அந்த நெருப்பாற்றில் எவ்வாறு நீந்தியெழுந்து அடுத்த வெற்றியை ஈட்டலாம் என்னும் துடிப்பினையும் அந்தத் துடிப்புடன் கூடிய நிதானமான காய் நகர்த்தல்களையுமே, தோல்விகளின் பொழுது அவரில் தமிழ் மக்கள் கண்டனர். இதனால் தான் எதனையும் தாங்கி எழுந்துகொண்ட இலட்சியத்தை அதனை அடையும் வரை முன்னெடுக்கும் உறுதியின் நடமாடும் சக்தி வடிவாக அவரைத் தமிழ் மக்கள் நம்புகின்றனர்; போற்றுகின்றனர்.

போரிலும் களத்திலும் நின்று களப்பணியாற்றும் இக்கட்டான நிலையிலும் மக்கள் நல்வாழ்வுக்கு எவை எவற்றையெல்லாம் செய்யலாமோ அவற்றையெல்லாம் சிந்தித்து செயல் உருக் கொடுத்த மக்கள் தலைவன் எங்கள் தேசியத் தலைவர். புனர் வாழ்வுக் கழகம் யுத்த சூழலிலே மக்கள் தங்கள் நாளாந்த வாழ்வைத் தொடர்வதற்கான மக்கள் நல சக்தி. பொருண்மிய மேம்பாட்டுக்கழகம் தேசத்தின் உட்கட்டுமானங்களை அழிக்க சிறிலங்கா எடுத்த முயற்சிகளுக்கு எதிரான அறிவியல் பொருளியல் திட்டமிடல் சக்தி.

தமிழ்ப் பெண்களை சிங்கள அரசாங்கம் போரின் இலக்குகளாக்கி அவர்களைப் பாலியல் வன்முறைக்கும் வாழ்வியல் அழிப்புக்கும் உள்ளாக்குவதன் மூலம் தங்களின் மக்களை அச்சப்படுத்தி அரசியல் பணிவைப் பெறும் செயற்திட்டத்தை முன்னெடுக்க முற்பட்ட வேளையில் அதே பெண்களுக்கு சக்தியளித்து போராடும் ஆற்றல் கொண்டு அவர்களை எழவைத்த தலைசிறந்த சிந்தனைச் சக்தி எங்கள் தேசியத் தலைவர். மண்விடுதலையும் பெண் விடுதலையும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை என்ற உண்மையை தமிழர்க்கு உணர்த்தியவர் தலைவர் பிரபாகரன். இதனால் இன்று மண்ணும் பெண்ணும் விடுதலை காணும் பெருமைமிகு வரலாறு தமிழீழ வரலாறாக உள்ளது.

அடுத்து தமிழ்ச் சிறுவர்கள் போரின் தாக்கத்தினைப் பலவழிகளில் அனுபவிக்க நேர்ந்த

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பொழுது தாய் தந்தையரை இழந்து ஆதரவு தேடும் அவல நிலைக்குத் தள்ளப்பட்ட பொழுது தமிழ்ச் சிறுவர்களுக்கான செஞ்சோலை போன்ற ஆதரவு நிலையங்களை காந்தரூபன் அறிவியல் கழகம் போன்ற கல்விகேள்வி அளிக்கும் அமைப்புக்களை எல்லாம் தோற்றுவித்து தமிழ்ச்சிறுவர்கள் வாழ்வுக்கு யுத்தகாலத்திலும் இயன்ற பாதுகாப்புக்களை வழங்கி தன்னையே அந்த ஆதரவு தேடும் சிறுவர்களின் தந்தையாக மாற்றி பேரன்பைப் பொழிந்து அவர்களை வளர்த்தெடுப்பவர் எங்கள் தலைவர் பிரபாகரன்.

சிறுவர்களுக்கு மட்டுமல்ல, போராளிகளுக்கும் தந்தைக்குரிய அன்புடன் போர்க்கலையில் மட்டுமல்லாது அவர்கள் எந்த எந்தத் துறைகளில் முன்னேற விரும்பினார்களோ எந்த எந்தக் கலைகளில் தம்மை வெளிப்படுத்த விரும்பினார்களோ அவைகளுக்கு எல்லாம் பயிற்சியும் கல்வியும் அளித்து அறிவார்ந்த கலைத்துவம் மிகுந்த மக்களாகவும் போராளிகள் திகழ வழிகாட்டியவர் எங்கள் தலைவர் பிரபாகரன்.

### ஒரு மனிதனில் இத்தனை பேராற்றலா! கம்பன் தரும் விளக்கம் பதிலாகிறது.

எவ்வாறு ஒருவர் பலவிதமா பேராற்றல்களைப் பலவடிவில் வெளிப்படுத்த இயல்கிறது என்று உள்ளம் ஏங்குகின்ற பொழுது கம்பன் இராமனின் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்த பிரம்மனே பேசுவது போல அமைத்த ஒரு இன்தமிழ்ப்பாடலிலே விடை கிடைக்கிறது.

*என் உருக்கொடு இவ் உலகினை ஈனுதி இடையே*
*உன் உருக்கொடு புகுந்து நின்று ஓம்புதி உமைகோன்*
*தன் உருக்கொடு துடைத்தி மற்று இது தனி அருக்கன்*
*முன் உருக்கொடு பகல் செயும் தரத்தது – முதலோய்!*

எனச் சூரியத்தேவன் காலையிலே தனது தோற்றத்தால் பகலை உண்டாக்கி உச்சமடைந்து பகலை நடத்தி மாலையில் குளிர்த் தென்றல் உலாவரும் அளவுக்கு வெம்மையைக் குறைப்பது போல பிரம்மாவினுடைய படைத்தலையும் திருமாலின் காத்தலையும் உருத்திரனின் அழித்தலையும் செய்யும் மும் மூர்த்திகளும் இணைந்தவனாக இராமன் விளங்குகிறான் எனக் கம்பன் தன் தமிழ் கொண்டு இறைமையின் தன்மை சொல்கிறான்.

இந்த சக்தி, இந்த வலிமை தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு எங்கிருந்து வந்தது என்று பார்க்கின்ற பொழுது, மக்களில் இருந்து மக்களால், மக்களுடைய சக்தியாக தேசியத் தலைவர் பிரபாகரன் பரிணாமமடைந்து நிற்பது தெரிகிறது.

இறை என்ற சொல் நாட்டின் தலைவனையும் குறிக்கும் சொல். மக்களின் இறைமையாளனாகிய நாட்டின் தலைவனும் தன் மக்களுக்குத் தேவையான அமைதி வாழ்வைத் தோற்றுவித்து அதனைப் பாதுகாத்து அதற்கு இடையூறு விளைக்கும் பகைவர்களை அழித்தொழிக்க பொறுப்புள்ளவனாகிறான். அந்த வகையில் சூரியத்தேவனை உருவகப்படுத்தி கம்பன் கூறிய இந்த விளக்கப்பாடல் தமிழீழ மக்களின் சூரியத்தேவனாக அடிமையிருள் அகற்றி நிற்கும் பிரபாகரன் எவ்விதம் பலவித பேராற்றல்களும் ஒருங்கமைந்த மக்கள் சக்தியாக இலங்குகிறார் என்கிற யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

### தேசியத்தின் வெளிப்பாட்டுத் திருநாள்.

இந்த சக்தி, இந்த வலிமை தேசியத் தலைவர் பிரபாகரனுக்கு எங்கிருந்து வந்தது என்று பார்க்கின்ற பொழுது, மக்களில் இருந்து, மக்களால், மக்களுடைய சக்தியாக தேசியத்தலைவர் பிரபாகரன் பரிணாமமடைந்து நிற்பது தெரிகிறது. அவர் மக்களின் விடுதலையை விரும்பினார். அந்த விடுதலை விருப்புக்காக தனது அனைத்து விருப்புக்களையும் துறக்கும் பொதுநல நெஞ்சம் கொண்டவராக அவர் வளரத் தொடங்கியதும், பதவியையும் பணத்தையும் காட்டித் தமிழ்த்தலைமைகளை விலைக்கு வாங்கலாம் என்ற நிலைப் மாறி என்றும் யாராலும் விலைக்கு வாங்கப்பட முடியாத அரசியல் தலைமை ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் தலைமை என்ற வடிவில் வெளிப்பட்டது. இதனால் இலங்கைத் தமிழ் மக்கள் சிறுபான்மையினம் என்று நேற்றையத் தமிழ்த் தலைமைகள் ஏற்று மாற்றார் முன் மண்டியிட்டு தம் வாழ்வுக்குப் பதவிப்பிச்சை பெற்ற நிலை மாறி, தமிழீழ மக்கள் தனியான தேசியத்தவர் என்ற உண்மை உலகிற்கு மீளவும் வெளிப்பட்டது. இவ்வாறாகத் தமிழர் தேசியம் தன்னை தெளிவாகவும் உறுதியுடனும் வெளிப்படுத்த மூலாதாரமாக அமைந்தது தேசியத் தலைவர் பிரபாகரன் என்னும் தமிழர் தலைவரின் உன்னதமான உறுதியான வழிகாட்டலும் பங்கேற்பும் ஆகும். இதனால் தேசியத் தலைவரின் 50வது பிறந்த நாள் என்பது தமிழ்த்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசியத்தின் வெளிப்பாட்டின் திருநாள்.

பாதுகாப்பு ஆற்றலின் பெருநாள்.

அவ்வாறே தலைவர் பிரபாகரன் விடுதலைக்காகத் தன்னை முற்று முழுதாக அர்ப்பணித்துக் கொண்ட பொழுது அந்த அர்ப்பணிப்பில் இலட்சியத்துக்காக மரணத்தையும் எதிர் கொள்ளும் நெஞ்சுறுதி அவருக்கு மட்டுமல்ல தமிழீழ மக்களுக்கும் ஏற்பட்டது. இதனால் மரணமற்ற மனிதகுலமொன்று தமிழீழ மண்ணிலே தோன்றியது. இதன் வழி அது வரை மரணத்துக்குப் பயந்து சிங்களபௌத்த பேரினவாதம் தமிழ் மண்ணிலே நடாத்தி வந்த தமிழினப்படுகொலைகளைத் தமிழீழத் தேச உட்கட்டுமான அழிவுகளை எல்லாம், கைகட்டி வாய் பொத்தி எல்லோரும் ஏற்று சொத்தைப் பல்லிகளாய் வாழ்ந்த நிலை மாறி, விடுதலை வேங்கைகள் பூமியாய் தமிழீழம் தலை நிமிர்ந்தது. சிங்கள பௌத்த பேரினவாதச்சிங்கத்தின் கோரப் பற்களை சாதாரணத் தமிழ் மகளே பிடுங்கி வீசும் வீரபூமியாக தமிழீழம் மாறியது. உலகின் பலம் பொருந்திய இராணுவமான இந்திய இராணுவத்தின் அமைதிப்படைப் போர்வையிலான ஆக்கிரமிப்பைக் கூட தமிழீழம் எதிர்கொண்டு புறந்தள்ளிய வரலாற்றை உலகு கண்டு திகைத்தது. காலத்துக்கு காலம் உலக ஆதிக்க சக்திகளும் பிராந்திய மேலாண்மை சக்திகளும் சிங்களப்படைகளுடன் சேர்ந்து நின்று ஆடிய ஆடும் ஆட்டங்கள் எல்லாம் தமிழீழ மக்களின் நெஞ்சுறுதி முன்னால் செயலிழந்தன, செயலிழக்கின்றன. தமிழர் படையை விடப் பன்மடங்கு ஆயுதப் பலமும் ஆளணிப்பலமும் கொண்ட சிங்களப்படையை கரும்புலிகள் தம் உயிரையே

சிறிலங்காவின் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை விடுதலைப்புலிகள் முறியடித்த விதம் உலகப் போர்க்கலை வரலாற்றில் பொன்னெழுத்துக் களால் எழுதப்பட்டது.



ஆயுதமாகக் கொண்டு எதிர் கொண்டு வெற்றிக்கு தம்மையே ஈகமாக்கும் பண்பை தமிழீழத் தேசியத்தின் சிறப்பம்சமாக உலகு கண்டது. அசுரப்பலத்துடன் நிற்கும் ஆக்கிரமிப்பாளனை தன் உயிரையே ஆயுதமாக்கி வென்றிடும் அளவுக்கு உறுதி கொண்ட தேசியமாகத் தமிழீழத் தேசியம் பலம் பெற்று நிற்கிறது. கடலிலும், தரையிலும் தமிழர் இராணுவப்பலம் என்றால் என்ன என்பதை உலகு கண்டு கொண்டது. சிறிலங்காவின் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையை விடுதலைப்புலிகள் முறியடித்த விதம், உலகப் போர்க்கலை வரலாற்றில் பொன்னெழுத்துக் களால் எழுதப்பட்டது. ஆனையிறவு முதல் கட்டுநாயக்கா வரை தமிழீழ விடுதலைப்புலிகள் நடாத்திய இராணுவச் சாதனைகள் உலக இராணுவ ஆய்வாளர்களை மூக்கின் மேல் விரலை வைக்க வைத்தது. இந்த தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்பு அளிக்கும் திறன் தான், இராணுவ நடவடிக்கைகளால் அல்ல, அமைதி வழிப் பேச்சுக்கள் மூலமே தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமென உலகு சிறிலங்காவின் மேல் அழுத்தங்களைக் கொடுக்க வைத்தது. இவ்வளவு துாரத்திற்கு தமிழர் பிரச்சினையை உலகு உற்று நோக்க வைத்த பெருமைக்குரியவராக உலகின் தலைசிறந்த இராணுவ வல்லுனராக தேசியத் தலைவர் இலங்குகிறார். இந்த பிரபாகரன் என்னும் தமிழீழத் தாயகத்தின் தலைமைத் தளபதியின் வீரத்தால் காப்பாற்றப்பட்ட மண்ணாக தமிழீழத் தாயகம் திகழ்கிறது. இதனால் தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த நாள் என்பது, தமிழர் தாயகத்தின் பாதுகாப்பாற்றல் வெளிப்பட்ட பெருவிழாவாக மக்களால் போற்றப் படுகிறது.

இனியும் அடிமை கொள்ள முடியாதென்பதே தலைவரின் 50வது பிறந்த நாள் பெருஞ் செய்தி.

ஆனால் இந்த இலங்கை வரலாற்றின் இயல்புத்தன்மையை மறுத்து தமிழர்களை அடிமை

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamil Eelam Archive

# அகவை 50

கடவுள் பக்தியுள்ள, சமய உணர்வுள்ள எமது மக்கள் கோயில் அர்ச்சகரையே கொன்று விட்டார்களே கொடியவர்கள், நாங்கள் ஏன் இவர்களைத் திருப்பித் தாக்கக்கூடாது என்று எண்ணத் தலைப்பட்டார்கள். இந்த இனவெறிக் கலவரத்தில் இன்னொரு கொடுமையும் நிகழ்ந்தது. ஒன்றும் தெரியாத பிஞ்சுத் தமிழ்க் குழந்தை ஒன்றைச் சிங்கள வெறியர்கள் துடிக்கத் துடிக்கக் கொதிக்கும் தாரில், தோய்த்துக் கொன்றார்கள். இந்த நிகழ்ச்சிகள் என் நெஞ்சிலும் என் நண்பர்கள் நெஞ்சிலும் அந்தச் சின்ன வயதிலேயே நெருப்பை மூட்டிற்று. ஒன்றுமறியாத அப்பாவிகளைக் கொல்கிறார்களே, திருப்பி நாம் ஏன் இவர்களை ஓங்கி அடிக்கக் கூடாது என்று எண்ணத் தொடங்கினோம்.



இந்தக் காலகட்டத்திலேதான் இந்தியப் போராட்ட வரலாறும் என் உணர்வுகளுக்கு எருவாயிற்று. ஒவ்வோர் ஆண்டும் இந்தியச் சுதந்திர நாளில் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இந்திய விடுதலைப் போராட்டம் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டு வந்தன. அவற்றைப் படிக்கும் வாய்ப்பு அப்போது எனக்குக் கிடைத்தது. திருப்பூர் குமரனை எடுத்துக் கொள்ளுங்கள். அவனுடைய அகிம்சையிலும் ஓர் இரும்பு உறுதி இருந்தது. ஆயுதப் போரின் அனுபவங்களைப்பற்றி நான் கற்றறிந்திருந்த அதேவேளை, அகிம்சைப் போரின் ஒழுங்குணர்வாலும் கவரப்பட்டேன். இப்போராட்டங்களில் காணப்பட்ட மன உறுதியும், துன்பங்க

தேசியத்தலைவர் பிரபாகரன் இன்று, அனைத்து தமிழீழ குடிமக்களினதும் உணர்வில் தாயகம், தேசியம், தன்னாட்சியுடன் வாழும் உரிமையும் கடமையும் கொண்டவர்கள் அவர்கள் என்ற உணர்வை, அவர்களின் மரபணுவாகவே மாற்றி நிற்கிறார்.

கொள்ள யாரும் நினைத்தால் அது இனி எந்த யுகத்திலும் சாத்தியமில்லை என்பதை உலகிற்கு வெளிப்படுத்தி நிற்கும் சரித்திர புருஷனாகத் தேசியத்தலைவர் பிரபாகரன் திகழ்கிறார். இதனைத்தான் அவரின் 50 வது பிறந்த நாள் மாட்சியாகத் தமிழர்கள் காண்கின்றனர்.

தேசியத்தலைவர் பிரபாகரன் இன்று, அனைத்து தமிழீழ குடிமக்களினதும் உணர்வில் தாயகம், தேசியம், தன்னாட்சியுடன் வாழும் உரிமையும் கடமையும் கொண்டவர்கள் அவர்கள் என்ற உணர்வை, அவர்களின் மரபணுவாகவே மாற்றி நிற்கிறார்.

இதனால் இனிமேல் அடிமையுள்ளத் தமிழனை, ஆக்கிரமிப்புகளுக்கு அஞ்சி வாழும் தமிழனை, தமிழீழ மக்களின் சந்ததியில் யாருமே காண முடியாது என்பதை சிறிலங்காவும் உலகும் புரிந்து கொள்ள வேண்டிய காலம் இது. இதுதான் பிரபாகரன் யுகத்தின் செய்தி.

தாயகத்தினதும், தன்னுடையவும் பாதுகாப்பையும் அமைதியையும் பேணியவண்ணம் யாருடனும் இணைந்து மனித மேம்பாட்டுக்கு உழைக்கத் தயாராக இருப்பவர்கள் தமிழீழத்தவர். ஏனெனில், அவர்களுக்கு எதற்கும் அச்சப்படும் நிலை இன்று இல்லை. இதுதான் பிரபாகரன் செய்த மாபெரும் சாதனை.

சமூக பொருளாதார அரசியல் ஆன்மீக விடுதலை என்பது முழுமையாக ஈட்டப்படுவதாக இருந்தால், மனித மனதின் அச்சம் அகற்றப்படல் வேண்டும். இந்த அச்சம் அகன்ற மனிதர்களாக ஆனால் தேவையான சமுதாய முறைமைகளுக்கும் சட்டத்திற்கும் கட்டுப்பட்டு சமுதாய வாழ்வில் சமத்துவம் சுதந்திரம் சகோதரத்துவம் என்னும் உன்னதங்களை நிலைநிறுத்தக் கூடிய அரசியல் சமூகமாக தமிழீழ மக்கள் பிரபாகரனின் மக்கள் விளங்குகின்றனர். இதனால் அவர்களால் எந்த வெற்றியையும் ஈட்ட முடியும்.

இந்த உள்ள உறுதி கொண்ட எங்கள் தமிழீழ மக்களுடன், புலம் பெயர் தமிழீழ மக்களாகிய நாமும் இணைந்து தமிழீழ தேசத்தினதும் மக்களினதும் விடுதலைக்கு சத்தியத்தின் தர்மத்தின் நிலைநாட்டலுக்கு தேவையான பாதுகாப்பைத் தொடர்ந்து பேணவும், தாயகத்தினதும் மக்களினதும் மேம்பாட்டுக்கு தொடர்ந்தும் உழைக்கவும் உறுதி பூணுவது ஒன்றே, நாம் எங்களின் உயிரினும் இனிய தேசியத் தலைவருக்கு நாம் அளிக்கும் மிகச்சிறந்த 50வது பிறந்த நாள் பரிசாக அமையும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




**செ**ன்னை திருவல்லிக்கேணியில் பாட்டுத் திறந்தால் வையத்தை பாலித்திடப் பிறந்த பாரதி நடந்த தெரு வாழ்ந்த தெரு, துளசிங்கப் பெருமாள் கோயில்தெரு, அந்த வீதியில் பாரதியார் இல்லம் இருக்கிறது. பாரதியார் ஒரு ஒண்டிக் குடித்தனக்காரர். அக்ரஹார வீடுகளின் அமைப்புள்ள வீட்டில், ஒரு இடுக்கில் ஒரே ஒரு அறையும் சமையல் கட்டுமுள்ள பகுதியில் பாரதி வசித்து வந்தார். அவர் வாழ்ந்த இல்லம் அரசுடமையாக்கப்பட்டு, ஏகப்பட்ட பணம் செலவழித்து புதுப்பிக்கப்பட்டது. இன்று அரண்மனை போல் காட்சி தருகின்றது. இவ்வளவு பெரிய அரண்மனையிலா பாரதியார் வாழ்ந்தார் என பார்வையாளர்கள் ஆச்சரியப்படுகின்றார்கள்.

*ஏழை எளியவர்கள் வீட்டில் – இந்த*
*ஈன வயிறு பாடும் பாட்டில்...*

என்றொரு கவிதை.

இன்னொரு கவிதை...

*சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்*
*சோற்றுக்கோ வந்ததிந்தப்பஞ்சம்.*

அவர் எழுதிய தன் வரலாற்றில்

*"பொருளில்லாற்கில்லை இவ்வுலகென்ற புலவர் தம் மொழி*
*பொய்ம்மொழியன்று காண்.*
*பொருளில்லாற்கு இனமில்லை, துணையில்லை,*
*பொழுதெல்லாம் இடர்வந்து ஏற்றுமால்"*

என்று பதில் தந்த இத்தனை கவிதை வரிகளும் மாளிகை போலிருந்த வீட்டுக்குள் இருந்து எடுத்தெறியப்பட்டுவிட்டன. அரண்மனையாக்கி, பாரதியின் வாக்குமூலத்தை மறுத்துவிட்ட நிரூபணம் தான் அது.

நிகழ்ந்த வரலாற்றை புனைவாக்க முடியும். புளைவை ஜிலு ஜிலுப்பாய், பளபளவென்று செய்ய முடியும். செய்வதின் வழி விடுதலை வீரர்கள் வாழ்வின் தாற்பரியம் எதுவோ அதை மறைத்து விட சாதாரணமாய் இயலும். தாற்பரியத்தை விட்டு மற்ற சுற்று வட்டங்களில் அதிகார சக்திகள் கவனம் கொள்ளும் என்பதற்கு பாரதியார் இல்லம் ஒரு சாட்சி.

# வரலாற்றின் கண்ணாடி

**வீதி** நடமாட்டம் அற்றுக் கிடந்தது. இயல்பாய் நடமாடிய காற்றை மதிய வெய்யில் அப்புறப்படுத்தியது. இறுக்கம் நிறைந்த தெருவின் தொடக்கத்தில் தனியாய் நின்றது அந்த வீடு. அந்த வீட்டுக்கு முதுகு திரும்பி உட்காந்திருந்தது ஊர். வீடு, வீடு இருந்த வீதி, வீதி நின்ற ஊர் ஒரு அசாதாரண நிலையை காட்சிப்படுத்தின.

இரண்டு சிறுவர்கள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். ஏழெட்டுவயசிருக்கும். அந்த வீட்டைக் காட்டிக் கேட்டோம்.

*"இங்க ஊர்காரங்க யாரும் வர்றதில்லையா"*
*"வர்றதில்லே"*
*"ஏன் வரமாட்டாங்க"*

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## அகவை 50

ளின் நடுவில் நிற்கும் துணிச்சலும் என்னை உணர்ச்சிவசப்படுத்தின. சின்ன வயதிலேயே இத்தகைய உணர்வுகளில் தோய்ந்துதான் சிந்திக்கத் தொடங்கினேன். 'நாமும் ஓர் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கினால் என்ன?'



நெப்போலியனின் எழுச்சி, வீரச் செயல்கள் பற்றி அன்று நான் படித்தவை இன்றும் நெஞ்சில் நிலைத்து நிற்கின்றன.

மகாபாரதத்தில் வீமன், கர்ணன் ஆகிய கதாபாத்திரங்களைப் படித்த போது ஒரு மனநிறைவு ஏற்பட்டது. பாரதத்தில் வரும் கதாபாத்திரங்களை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பார்ப்பார்கள். தன்னிழப்புக்கு, உயிர்த் தியாகத்துக்கு, ஒவ்வொரு மணித்துளியும் தயாராக இருந்தானே கர்ணன் அவனை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. விவேகானந்தரின் பொன்மொழிகள் சிலவற்றைப் படித்தேன். 'இளைஞர் அணி' ஒன்றைத் திரட்ட வேண்டும் என்ற எண்ணம் மெல்ல அரும்பிற்று. ஆம், அப்போது எனக்கு 16 வயதுதான்!

கிருபானந்தவாரியாரின் சமயச் சொற்பொழிவுகளைக் கேட்டிருக்கிறேன். அரசியல் கூட்டங்களுக்குப் போயிருக்கிறேன். எங்களூர் மேடையில் அரங்கேறிய 'சோக்கிரடீஸ்' போன்ற நாடகங்களைப் பார்த்திருக்கிறேன்... இப்படித்தான் நாங்கள் உருவானோம். எமது வரலாற்றுப் பின்னணியே எம்மை ஆயுத பாணிகள் ஆக்கிற்று. நாங்கள் சிந்தித்தோம். 'இன்றி நாம் வெறுங்கைகளோடு

*"வந்தா பிடிச்சிட்டு போயிருவாங்க"*

சட்டென்று புலப்பட்டது, வல்வெட்டித் துறையில் இராணுவம் நிலைகொண்டிருந்தது.

பதில் சொல்வதை விட சிறுவர்களுக்கு விளையாட்டில் மும்முரம் இருந்தது. பிறகு விளையாட்டைக் கொஞ்சம் நிறுத்திவிட்டு எங்களைப் பார்த்தார்கள் அவர்கள் பார்வையில் சந்தேகம் துளிர்த்திருந்தது. இவர்கள் யார்?, ஆமிக்காரங்களா? அமைதிப் படைக்காரங்களா?.

சண்டையடித்துக்கொள்ளும் போராளிகள் குழுக்களைச் சேர்ந்தவர்களா?, அடுத்த கணமே அந்த இடத்திலிருந்து அவர்கள் பறந்து விட்டார்கள். சிறுவர்களிடம் ஒரு கேள்வி மீதி இருந்தது.

"பிரபாகரனை பார்த்திருக்கின்றீர்களா?"

எங்களைப் போல் சிலர் அந்த வீட்டை பார்த்துப் போயிருக்கலாம்.

வரலாற்றின் முக்கியமான சந்திப்பில் நின்றிருந்த அந்த வீட்டை இனிப் பலர் தரிசிக்க வரலாம்.

மாற்றி மாற்றி சிங்கள ஆமிக்கும், இந்தியப்படைக்கும் அந்த வீடுதான் தாக்கும் இலக்காக இருந்தது. அந்த இல்லம் பராமரிக்கப்படவில்லை. மொட்டையாய் சுவர்கள் ஆங்காங்கே மனிதக் கழிவுகள்.

சுவர்களில் சில கரிக்கோட்டு வாசகங்கள்.

"தம்பி பிரபாகரன் எனக்கு
அண்ணன் பிரபாகரன்"

"பிரபாகரன் என்றும் எம்முடன்"
- ஷாகிர், அ.மீரான் - கொழும்பு



**பா.செயப்பிரகாசம்**

எழுத்தாளர்,
இலக்கிய
செயற்பாட்டாளர்,
விமர்சகர்.
தமிழகம்.

இஸ்லாமிய சமுதாயம் போராளிகளை, போராளிகளின் தலைமையை ஏற்றுக் கொள்ளவில்லை. வெறுப்பின் எல்லைக்கும் அந்த எல்லையிலிருந்து எதிர்ச்செயற்பாடுகளுக்கும் போய்க் கொண்டிருக்கின்றது என்பன போன்ற நச்சு விதையை தூவியபடி நடக்கின்றவர்கள் இருக்கின்றார்கள். இந்தப் புள்ளியில் நின்று நிதானித்து சொல்வதானால், அக நிலை முரண்பாடுகள் எல்லாக் காலகட்டத்திலும் இருக்கவே செய்யும். புறநிலையிலுள்ள பிரதான முரண்பாடுகளால் அகநிலை முரண்பாடு கூர்மையடையவே செய்யும். சுயநல விரும்பிகள் ஆதிக்கத்தினர் இந்தக் கூர்மையை 'மட்டுமே' இன்னும் கூர் படுத்திக்கொண்டே போவார்கள். அவர்களுக்கு ஆதாயம், அகநிலை முரண்பாடுகளைத் தீர்ப்பதில் சரியான வழிமுறையைக் கையாளுவதை விடுதலைச் சக்திகள் எப்போதும் மேலெடுத்துக் கொண்டிருப்பார்கள்.

இஸ்லாமிய சமூதாயத்தின் நிலைப்பாடு எதுவென்று ஒவ்வொருவராய் அணுகி விசாரிப்பதில் மேலான சாட்சிகளாக நாங்கள் இருக்கின்றோம் என்று கரிக்கோட்டில் பொறித்து வைத்திருந்தார்கள் ஷாகிரும், அ.மீரானும்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
TamilEelam Archive




மானுடத்தின் தமிழ்க்கூடலின் போது வெளிவந்த புலிகளின் கலைபண்பாட்டுக் கழக ஆடி-ஆவணி - 2002 இதழ் அட்டை முகப்பில் ஒரு செய்தியைத் தாங்கியிருந் தது. சங்கிலி என்னும் தமிழ் மன்னனின் அரண்மனை யின் எஞ்சிய எச்சம், மந்திரி மனையின் இன்றைய நிலையை அட்டைப் படம் தாங்கியிருந்தது. இன்றைக்கு அந்த வரலாற்று எச்சங்கள் வண்ணமிழந்து கிடந்தாலும், புராதன வரலாற்றுச் சின்னங்களைக் காப்போம் என்ற வாசகத்தால் எதிர்வரும் காலத்தில் வண்ணம் கொடுப் போம் என்பது புதிய நோக்காக வெளிப்பட்டது.

வரலாற்றின் ஆதாரங்களும்
தொன்மையின் எச்சங்களும்
தொலைந்து போகின்றன
காப்பது எம் கடமை

என அந்த வாசகம் அறிவிப்புக் கொடுத்தது. வெளிச் சம் இதழ் அட்டையில் பிரபாகரனின் வீடு 'தேசியத் தலைவர் பிறந்த இல்லம்' என குறிக்கப்பட்டிருப்பதும் காண முடிந்தது. 'இப்போது இந்தப் பகுதி உங்கள் கட்டுப்பாட்டில்தானே இருக்கிறது. இதை நீங்கள் நினை வுச் சின்னமாக பராமரிக்கலாமே?'

கேட்டோம், சிங்கள ஆமி, இந்தியப் படை என மாற்றி மாற்றி வந்து வீட்டைத் தாக்குவார்கள். அவர்கள் தமது ஆத்திரத்தைத் தீர்த்துக் கொள்வார்கள். என்னைக் கைப்பற்ற முடியாதபோது, என் வீட்டையாவது பிடிக்க முடிந்ததே என்ற திருப்தி. வரலாற்றுப் போக்கில் தீர்மானகரமாய் ஒரு முடிவு வருகிறவரை, அந்த வீடு அப்படியே இருக்கட்டும் என்பது பிரபாகரனின் விருப்ப மாக இருந்தது என நாங்கள் அறிய முடிந்தது.

முதலில் யுத்தத்தை ஒரு இடத்தில் நிறுத்துவோம். ஒருமுறை யுத்தம் கட்டிப் போடப்பட்டுவிட்டால், பின் னர் இன்னொருமுறை அது மூர்க்கம் கொண்டு எழாதபடி தீர்வு காணப்படவேண்டும். அப்போது எனது இல்லத்தை பராமரிக்க முன் வரலாம் என்பது அந்தப் போராளியின் உள்ளக் கிடக்கை எனக்கண்டபோது வியந்தோம்.

இன்று சமாதானப் பேச்சு, அமைதி இடை வெளியைப் பயன்படுத்திக்கொண்டு, மாவீரர் துயி லுமிடங்களை, புலேந்திரன் போன்ற மாவீரர்க ளின் சிதைக்கப்பட்ட நினைவுச் சின்னங்களை புதுப்பிக்கும் பணியில் தீவிரப்பட்டுள்ள முனைப்பு. ஒரு தலைமைப் போராளியின் இல்லத்தை மொட் டையாய் விட்டிருக்கிறதே என்ற வியப்பு, கேள்விக் குறியாக எழுகிறது.

அந்த வீடு அனாதியாய் இரவும் பகலும் கிடப்பது போல் தெரிகிறது. உடைந்த மேற்கட்டு மானத்துடன், மொட்டைச் சுவர்களுடன் மல்லாக் கப் பார்த்து வானத்துடன் பேசிக்கொண்டிருக்கி றது. இந்த யுத்தம் தீர்ந்து விட்டாலும் அது அப்படியே பேசிக்கொண்டிருக்கும்.

தங்கள் குடையின் கீழ் தமிழீழம் வந்தபிற கும், வல்வெட்டித்துறை வட்டாரம் வந்த பிறகும் அந்த வீட்டை புதிதாகக்கட்டிப் புதுப்பிக்க வேண்டிய அவசியமிருக்காது. அப்படியே விட்டு விடுங்கள் என அவர் தனது இல்லத்தை மட்டுமே சொல்ல முடியும். வாழ்வதற்குத் தகுதியானதாக மாற்றப்படு வதை விட, வரலாற்றைப் பார்ப்பதற்கான கண்ணா டியாக அது நிற்கும், வசிப்பதற்குத்தோதாய் மாற்றப் படுவதிலும் மேலாக, வரலாற்றை வாசிக்கும் முக்கிய எழுத்தாய் நிற்கும்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**Birthday greeting for Mr. Prabakaran.**

You have been stalwart in the defense of the Tamil people and their rights for many years at great personal sacrifice. As you know, our organization has for many years joined with many other human rights organizations at the United Nations to raise the plight of the Tamil people and the massive violations of human rights and humanitarian law committed by the Sri Lankan authorities. On this your birthday I want to honor both your sacrifice as well as the sacrifices of Tamil people as a whole. In the face of seemingly overwhelming odds, you and the Tamil people have persevered. Now you are all on the threshold of achieving what you have been striving for all these years with the mediation efforts of the Norwegian government and a group of countries put together by Norway. May this, your 50th birthday year, be the year of final achievement and so become year one in the calendar of Tamil freedom.

All the best.



## Karen Paker

Chief UN Delegate International Education Devolopment Humnitarian Law Project.
President, Association Humnitarian Lawyers.
USA.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திரு.பிரபாகரனுக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

பெரியளவில் சொந்தத்தியாகத்தைப் பல வருடங்களாகப் புரிந்து தமிழ் மக்களையும், அவர்களது உரிமைகளையும் பாதுகாப்பதில் நீங்கள் ஒரு கட்டுறுதி வாய்ந்த வல்லவராக திகழ்ந்தீர்கள். தமிழ் மக்களது நெருக்கடி நிலைமையையும் மனித உரிமைகளையும் மனிதாபிமான சட்டத்தையும் பெரிய அளவில் சிறிலங்கா அதிகாரிகள் மீறிச்செயற்படுவதைக் கண்டித்து, அவற்றையெல்லாம் ஏனைய மனித உரிமைகள் நிறுவனங்களுடன் சேர்த்து ஐக்கிய நாடுகள் சபையில் எங்கள் நிறுவனம் பல வருடங்களாக எழுப்பி வந்துள்ளது என்பது உங்களுக்குத் தெரிந்ததே. திணறடிக்க வைத்துச் சமாளிக்க முடியாத அளவிற்கு, வெளித்தோற்றத்தில் பெரிய உயர்வு தாழ்வு வேற்றுமைச் சூழலை எதிர்த்து விடாமுயற்சியுடன் செயலாற்றிக்கொண்டிருக்கும் உங்களினதும், தமிழ் மக்களினதும் தியாகங்களுக்காக உங்களை, உங்கள் பிறந்த நாளையொட்டி நான் எனது பாராட்டைத் தெரிவிக்கவிரும்புகிறேன். நீங்கள் எத்தனை வருடங்களாக எதற்காக கடும்முயற்சியுடன் செயற்பட்டு வந்தீர்களோ அதனை நோர்வே அரசாங்கத்தின் மூலமும், அவர்களால் சேர்த்துக்கொள்ளப்பட்ட நாடுகளின் மூலமும் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகளின் பலனை எய்தும் தறுவாயில் நீங்கள் இருக்கின்றீர்கள். இந்த உங்களது ஐம்பதாவது பிறந்த வருடம் உங்களது இறுதியான சாதனையை எய்தும் வருடமாக இருக்கவேண்டும் என்றும், இதுவே தமிழருடைய விடுதலை ஆண்டுக்குறிப்பேட்டில் - நாட்காட்டியில் முதல் வருடமாகவும் இருக்க வேண்டும் என்றும் வாழ்த்துகிறேன்.

உங்களுக்குப் பெருநலம் வாய்ப்பதாக.



**கரன் பாக்கர்**

சர்வதேச கல்வி அபிவிருத்திக்கான ஐ.நா.வின் தலைமைப் பிரதிநிதி,
தலைவர்,
மனித உரிமைகள் வழக்கறிஞர்கள் சங்கம்.
அமெரிக்கா.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# மாவீரர்களை மனதில் சுமந்த தலைவர்

எல்லா நிலைகளும் சுயங்களை நோக்கியே நகர்கின்றன. இந்த சுயங்களை அடையாளப்படுத்தும் முயற்சிகளே எல்லா நிலைகளிலும் தொடர்கின்றன.

அடையாளம் – ஆம்... இதனுள் எத்தனை எத்தனையோ பேருண்மைகள் புதைந்து கிடக்கின்றன. அவற்றைக் காலம் நமக்குக் காட்டும் என்று காத்திருந்தது ஓர் உன்மத்தம்தான்.

ஏனெனில் காலம் என்பது கடின உழைப்பினால் வென்றெடுக்கப்பட வேண்டிய விடயங்களில் முதன்மையானது.

அடையாளத்தை இழந்து கொண்டிருக்கும் ஒரு தொன்மைமிகு சமுதாயத்தின் வழித்தோன்றல் என்கிற பிரக்ஞை மிகக் கொடுமையான ஒன்றே...

இந்த உணர்வு என்னை மட்டுமல்ல, தமிழ்ச் சமுதாயத்தின் பல்வேறு தரப்பினரையும் அடிக்கடி உள்ளூறுத்தி வாட்டுவது உண்டு என்றாலும், அந்த `வலி' கூட பழகிப் போன மாதிரி ஆகிவிட்டது. இது எனக்கு மட்டுந்தானா? ஒட்டுமொத்தமாய் என் சமுதாயத்திற்கே உரித்தான, பழகிப்போன வலியா?

உலகக் களத்தில், ஆதிக்க வேட்டைகளில் தூளாகிக் கொண்டிருக்கிறோமே என்கிற உளைச்சல் நிறையவே!

போட்டி மிகுந்த பொருளாதாரச் சந்தையில், விளைந்தும் விலை போகாத விரயப் பொருளாகிக் கொண்டிருக்கிறோமே என்ற சுயவெறுப்புக்கள் நிறையவே!

நமது ஆளுமை என்பது தொன்று தொட்டு வந்த பாட்டன் வீட்டுச் சீதனம் தானே... எப்படியோ காலவெள்ளத்தில் கரைந்து போனதே என்கிற கவலைகள் நிறையவே!

இப்படியாக, மண்டிக் கிடக்கின்ற எதிர்மறை விளைச்சல்களோடுதான் அன்றொருநாள் ஈழத் தமிழ் மண்ணில் கால் பதித்தேன்.

ஆயினும் சில பொழுதுகள் கடந்து போன பின்னர், அங்கே வாழ்ந்து கொண்டிருந்த தமிழர்களின் போராட்ட வேட்கை, எதிர்காலத்தின் பால் கொண்டிருந்த ஆளுமைமிகு நம்பிக்கையின் அனல், என்னைப் புரட்டியெடுத்துப் புடம் போட்டதை உணர முடிந்தது.

எங்களின் அடையாளம் எங்களை விட்டு எங்கும் போய்விடவில்லை. என் இனத்தின் அடையாளத்தை எத்தகைய ஆதிக்க வெறியர்களாலும் அழித்தொழித்து விட இயலாது. எங்கள் சுவடுகளை அவ்வப்போது வந்து போகின்ற சூறைக்காற்றுகள் சிதைக்கலாம். ஆனால், எங்களது பயணம் தொடர்ந்துகொண்டே இருப்பதால் எங்கள் சுவடுகள் மீண்டும் மீண்டும் புதிது புதிதாய் மலர்ந்துகொண்டே இருக்கின்றன.

ஈழத்து மண்ணில் சிறுவிதையாய் விழுந்து ஒரு விருட்சமாய் எழுந்து விட்ட என் சகோதரர்களின் விழுப்புண் வீரமும் செழுமிய இனச் சாரமும், ஆண்ட பரம்பரைக்கு மீண்டும் உரம்சேர்த்து, விரக்திச் சுமையில் வளைந்துகொண்டிருந்த உலகத் தமிழர்களின் முதுகெலும்பைச் சுண்டி நிமிர்த்தி விட்டுள்ளன.

'எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள். கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தமிழ் தேசியப் போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரண

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



மானதல்ல...' என்று அடிக்கடி பிரகடனம் செய்கிறவர் நமது தமிழீழத் தேசியத்தின் தலைவர், புலிகளின் தலைமகன் வே. பிரபாகரன்.

பல நூற்றாண்டுகளாகவே உரிமைப் போராட்ட நிதர்சனங்களின் பேரொளி வீச்சுக்கு முகம் கொடுக்கத் தயங்கி, ஓரம் போய்க் கொண்டிருந்த தமிழினத்தின் உச்சந்தலையில் அழுத்தித் தட்டி, நெடுந் தூக்கத்தைக் கலைத்த தமிழின நாயகன் தலைவர் பிரபாகரன் தம்முடைய வாழ்க்கையில் அரைநூற்றாண்டை எட்டித் தொட்டிருக்கிறார்.

எங்களது வரலாறு பிழைத்துக்கொண்டது என்ற நிம்மதியான சுவாசம், வெகு சுகமாகவே இருக்கிறது.

2002ம் ஆண்டு ஏப்ரல் 17ம் தேதி...

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மலேசியத் தமிழ்ப் பத்திரிகை உலகில் உழன்று கொண்டிருந்த ஒரு பத்திரிகையாளனாகிய எனக்கு, அந்த ஏப்ரல் 17ம் தேதி பொன் முத்திரையிடப்பட்ட நாள்...

எம் இனத்தின் அடையாளத்தை மீட்டெடுத்து, பத்திரப்படுத்தி, எதிர்காலத் தலைமுறையின் கையில் ஒப்படைக்கும் பொறுப்பை ஏற்றுச் செயலாற்றியிருக்கும் தேசியத் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து கைகுலுக்கி அளவளாவிய அந்த நாளை நான் மறப்பதற்கில்லை.

எண்ணற்ற மலேசியத் தமிழ் மக்கள் இன்னமும் எனது வலது கையைப் பற்றி, இறுகப் பிடித்துக் குலுக்கிவிட்டு, 'இது, எங்கள் அளப்பரிய அபிமானத்தை ஈர்த்துக் கொண்டு விட்ட மாவீரன் பிரபாகரனின் கரம் குலுக்கிய கரம் அல்லவா' என்று பெருமையோடு நினைவு கூர்வது அன்றாட வழக்கமாகி விட்டது.



**அக்னி**

எழுத்தாளர்,
ஆசிரியர்,
மக்கள் ஓசை,
மலேசியா.

எண்ணற்ற மலேசியத் தமிழ் மக்கள் இன்னமும் எனது வலது கையைப் பற்றி, இறுகப்பிடித்துக் குலுக்கிவிட்டு, 'இது, எங்கள் அளப்பரிய அபிமானத்தை ஈர்த்துக்கொண்டு விட்ட மாவீரன் பிரபாகரனின் கரம் குலுக்கிய கரம் அல்லவா' என்று பெருமையோடு நினைவு கூர்வது அன்றாட வழக்கமாகிவிட்டது.

உலகெங்கும் சுதந்திர சுவாசத்திற்கு செங்குருதி சிந்திக் கொண்டிருக்கும் போராளி இயக்கங்கள் பலவற்றைப் பற்றி ஒரு பத்திரிகையாளன் என்ற முறையில் அறியவும், அவர்களின் போராட்டங்கள் பற்றி எழுதவும் வாய்ப்பைப் பெற்றவனாக இருந்து வந்துள்ளேன்.

எனது இந்தப் பயணம் புறப்பட்டது என்னவோ பாலஸ்தீனத்தில்...! போய்ச் சேர்ந்தது தமிழீழத்தில்...!

இந்தப் பயணத்தின்போது உலகில் வேறெங்கெனும் காணமுடியாத – இருந்திராத ஒரு வித்தியாசத்தை ஈழமண்ணில் மட்டுமே காண முடிந்தது. வேறெந்த போராளிகளின் தலைமைக்கும் இல்லாத ஓர் அருந்தவக் குணத்தை தலைவர் பிரபாகரனிடம் காண முடிந்தது.

செருக்களத்தில் செம்புனலாடி, தாய் மண்ணுக்காக இன்னுயிர் நீத்து, நெஞ்சில் கல்லறை மண் சுமந்த வண்ணம் துயிலிடங்களில் நெடுந்துயில் கொண்டு விட்ட மாவீரர்களின் தியாகத்தை, நெஞ்சில் சுமந்த வண்ணமிருக்கும் ஒரே தலைவர் தமிழீழத் தலைவர் பிரபாகரனாக மட்டுந்தான் இருக்க முடியும்.

இன்றைய காலத்தில், ஏற்கனவே விடுதலை பெற்று விட்ட எத்தனையோ தேசங்கள் தாய்மண்ணைக் காக்க தன்னை ஈந்த வீரர்களின் நினைவைத் துறந்து வெட்கமிழந்து நிற்கின்றன.

ஆனால், ஈழத்தில் மட்டுமே, தாய் மண்ணின் விடுதலைக்காக வீழ்ந்து வித்தாகிப் போன மாவீரர்கள் நீடு துயிலுக்கு நேர்த்தியான – நிம்மதியான துயிலிடங்கள் உண்டு.

அவர்களின் நீடுதுயிலுக்கு இடையூறு வராது காக்க, கணப் பொழுதும் இமையாது காத்து நிற்கின்றன தேசியத் தலைவர் பிரபாகரனின் கரங்கள்.

தாய்மண்ணைப் போலவே, அதன் விடுதலைக்காக உயிர் நீத்தவர்களின் தியாகமும் புனிதமானது என்பதனை தலைவர் பிரபாகரனைத் தவிர சரியாக உணர்ந்த தலைவர் வேறெங்கும் இல்லை.

அதனால்தான் ஈழமண்ணில் வீரர்களின் துயிலிடங்கள் என்பது, மண்ணின் சுவர்க்கமாய் மதிக்கப்படுகிறது, போற்றப்படுகிறது.

அதன் முத்தாய்ப்பாகவே, 'மாவீரர்' தினத்தை வீரவணக்கத்துடன் எழுச்சி மிகு அஞ்சலிக்குரிய தினமாக ஆக்கிக் காட்டியிருக்கிறார் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்.

இன்னுயிர் ஈந்த போராளிகளுக்காக தூய்மையும், சாந்தமும், தியாகமும் பரிணமிக்கும் துயிலிடங்களை உருவாக்கி, அதனைப் போற்றுதலுக்குரிய புனித ஸ்தலமாக மாற்றி உலகில் வேறெந்த போராளிகளின் தலைவனுக்கும் இல்லாத சிறப்பைப் புலப்படுத்திய தேசியத் தலைவர் பிரபாகரனின் ஆன்மநேயத்திற்குத் தலைவணங்குவோமாக!

தமிழீழ ஆவணக்காப்பகம்
TamilEelamArchive

# பொன்விழா நாயகனை வாழ்த்தி...

கடலன்னை தன் அலைகளால் தாலாட்டித் தன் அணைப்பிலே தூங்கவைக்கும் இயற்கை வளமும் பெருமையுங்கொண்ட வல்வெட்டித்துறை மண்ணிலே எம் தமிழினத்தின்மேற் கொண்ட பற்றால் தமிழினத்தின் விடுதலைக்கேயென எம் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பிறந்தார். தாயக விடுதலைக்காக நெஞ்சிற் கனத்த நெருப்புடன் மிக இளமையிலேயே விடுதலைப் பாதையைத் தெளிவாய்த் தேர்ந்தெடுத்த, தமிழினத்தின் முதற் செயற்றலைவர். எவ்விடர்வரினும் நேர்கொண்டு அதை உடைத்தெறியும் அஞ்சாத ஆளுமைமிக்க வீரப்புலிப்படையை உருவாக்கிய மாபெருந்தலைவர்.

இன்று உலகையே தமிழனைத் திரும்பிப்பார்க்கவைத்து இராணுவ, அரசியல் நகர்வுகளிற் பிரமிப்படையவைத்து, தமிழரின் இலக்கை எட்டிக்கொண்டிருப்பவர் எம் தேசியத்தலைவர். ஒட்டுமொத்தத் தமிழினத்தின் தலைவராக அனைத்துள்ளங்களிலும் வியாபித்துநிற்கும் அவர், போர்க்களத்திற் போர்த் தளபதியாக, அரசியற்களத்தில் தூரநோக்கராகச் செயற்படுவதில் அனைவரையும் ஆச்சரியத்திலாழ்த்தும் மாபெரும் மனிதர். தேசியக்கொடியான புலிக்கொடியை உருவாக்கி அதன்கீழ்த் தமிழீழத் தேசிய விளையாட்டுப் போட்டியிற் சிங்கள அணியையும் அணிவகுக்க வைத்த தலைவர்.

தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்பவற்றின் ஒட்டுமொத்தச் செயலுருவமாக விளங்கும் எம் மாபெரும் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தனது பொன்விழாக் காணும் இவ்வேளை, பிரான்ஸ் வாழ் தமிழ் மக்கள் சார்பாக வாழ்த்துவதிற் பேருவகையடைகின்றேன்.

பரிதி
பொறுப்பாளர்,
தமிழீழ விடுதலைப் புலிகள். பிரெஞ்சுக்கிளை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

காலத்தை வென்ற

# காவியத் தலைவன்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் தம்பி பிரபாகரன் அவர்களது ஐம்பதாவது பிறந்த தினத்தையொட்டி தங்கள் பாரிஸ் 'ஈழமுரசு' சிறப்பிதழ் வெளியிடுவது மிக்க மகிழ்ச்சிக்குரியது. 'விடுதலைப் பேரொளி' என்னும் அச்சிறப்பு மலருக்கு எனது சில கருத்துக்களை வெளியிடுவது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகம் பல விடுதலைப் போராட்டத் தலைவர்களை கண்டிருக்கிறது. சீனக் குடியரசை உருவாக்கிய மாவோ சேதுங், வியட்நாம் விடுதலைப் போராட்ட வீரன் ஹோசிமிங், கியூபாவை விடுவித்த பிடல் காஸ்ரோ போன்றோர் வரிசையில் தமிழ்த் தேசியத் தலைவர் தம்பி பிரபாகரன் அவர்களும் இடம் பெற்று விட்டார்.

இந்திய அமைதி காக்கும் படையினர் விடுதலைப் புலிகளோடு பொருதிக் கொண்டிருந்த நேரம் இந்திய இராணுவம் உலகிற்கு ஒரு செய்தியைக் கொடுத்தது. அந்தச் செய்தி கேட்டு தமிழீழ மக்கள் கவலைப்பட்ட நேரம் ஒரு முதியவர் பின்வருமாறு குறிப்பிட்டு மக்களுக்கு தெம்பூட்டினார். 'தலைவர் பிரபாகரன் ஓர் அவதாரம். ஓர் இலட்சியத்திற்காக இப் பூமியில் அவதரித்துள்ளார். எனவே இலட்சியம் ஈடேறும் வரைக்கும் அவரை எவராலும் அசைக்க முடியாது'



யோசப் பரராசசிங்கம்

மூத்த அரசியல்வாதி, நாடாளுமன்ற உறுப்பினர், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு. தமிழீழம்.

ஆம்! அவர் ஓர் அவதாரம் என்பது நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது.

இந்திய இராணுவம் இங்கு போராடிக்கொண்டிருந்த அந்தக் காலப்பகுதியில் தமிழகத்தில் இருந்து முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் இலங்கைக்கு வந்திருந்தார்கள். அப்பொழுது நுவரெலியாவிற்கு விஜயம் செய்து அங்கொரு கட்டடத்தில் அவர் பேசும்போது 'நான் பல விடுதலைப் போராட்ட வரலாறுகளை, இலக்கியங்களை எல்லாம் படித்திருக்கிறேன். ஆனால் திரு. பிரபாகரன் போன்ற ஒரு மகாவீரனை நான் காணவில்லை. இன்று இந்திய இராணுவத்தோடு போராடுகிறார். இனிமேல் எந்த நாட்டு இராணுவம் இங்கு வந்தாலும் அவர்களோடும் போராடி வெற்றி பெறும் ஆளுமை மிக்கவர் திரு பிரபாகரன். இப்படி ஒரு தலைவனைத் தமிழினம் பெற்றிருப்பதைக் கண்டு பெருமை அடைகிறேன்' என்று குறிப்பிட்டார்.



> " இலட்சியம் ஈடேறும் வரைக்கும் அவரை எவராலும் அசைக்க முடியாது "

இன்று தேசியத் தலைவரைப் பற்றிய நூல்கள் பல வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அந்த நூல்களெல்லாம் தலைவரின் ஆளுமைபற்றி வியந்து போற்றுகின்றன. ஈழத் தமிழினம் கடந்த அறுபது ஆண்டுகளாக பல தமிழ்த் தலைவர்களை சந்தித்திருக்கிறது. சேர்.பொன்னம்பலம் இராமநாதன் தொடங்கி, தந்தை செல்வா உட்பட பலரையும் பார்த்திருக்கிறார்கள். ஆன்ால் தமிழ்த் தேசியத் தலைவர் என்ற அந்தஸ்தை அவர்கள் பெற்றிருக்கவில்லை.

ஆனால் உலகத் தலைவர்கள் அனைவரும் ஏகோபித்த குரலில் 'தமிழ்த் தேசிய தலைவர்' என்ற மிகப் பெரிய கௌரவத்தை திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கே வழங்கியிருக்கிறார்கள்.

பண்டாரவன்னியன் அரசோச்சிய வன்னி நிலப் பரப்பில் இன்று தமிழ் இராச்சியம் கோலோச்சுகிறது. அண்மையில் கனடா நாட்டு சமஷ்டி அமைப்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதால் தானே ஆயுதங்கள் உள்ள சிங்களவர்கள் கொடுமையாகத் தாக்குகிறார்கள். நாம் ஏன் வெறுங்கையோடு இருக்கவேண்டும்? ஆயுதங்களால் முறியடிப்போம்'. ஆம், அனுபவங்களின் இந்த முதிர்ச்சி நிலையில்தான் நான் இயக்கத்தை ஆரம்பித்தேன்.

'இந்து'ப் பத்திரிகை
4-9-1986, 5-9-1986 ஆகிய திகதிகளில்.

நீங்கள் 'விடுதலைப் புலிகள்' இயக்கத்தை ஆரம்பித்த போது உங்கள் குடும்பத்தாரும் நண்பர்களும் அதனை எவ்வாறு வரவேற்றனர்?

விடுதலைப் புலிகள் இயக்கத்தை ஆரம்பித்ததுமே நான் தலைமறைவாக இயங்கி வந்தேன். அத்துடன் எனக்கும் குடும்பத்தாருக்கும் இருந்த தொடர்பு அறுந்து விட்டது.

உங்கள் குடும்பத்தாரைக் கடைசியாக எப்போது சந்தித்தீர்கள்? உங்கள் தலைமறைவு வாழ்க்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்களா?

என் குடும்பத்தாரை நான் சந்தித்துப் பதினொரு வருடங்கள் ஆகிவிட்டன. சாதாரண வாழ்க்கை நடத்தும் சாமான்யனாக அவர்கள் என்னைக் கருதுகிறார்கள் என்று நான் நினைக்கவில்லை. என் [illegible] தலைமறைவுக் கெரில்லாப் போராளி வாழ்க்கையை அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

ஒரு சாதாரண இளைஞனின் வாழ்க்கையை வாழவில்லையே என்று நீங்கள் வருந்தியதுண்டா?

நீங்கள் சொல்லுகிறமாதிரி சாதாரண வாழ்க்கை நடத்துகின்ற இலட்சக் கணக்கான இளைஞர்கள் உள்ளனர். ஆனால், நாங்களோ ஒரு உன்னத இலட்சியத்துக்காகப் போராடி வருகி

புக்களின் தலைவர் கொழும்பில் ஒரு கருத்தரங்கில் சொற்பொழிவாற்றும்போது 'இலங்கையில் இரு நாடுகள் செயற்படுகின்றன' என்று குறிப்பிட்டார்.

அந்தத் தமிழர் இராச்சியத்திற்கென முப்படைகள்; நீதி, நிதி, நிர்வாக அமைப்பு, காவல்துறை என அனைத்துக் கட்டமைப்புக்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறன. சமாதான உடன்படிக்கையில் தமிழரசின் தலைநகரில் இருந்து கொண்டு தான் தேசியத் தலைவர் அவர்கள் கையொப்பமிட்டார்கள். முன்பு இலங்கைக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டு பிரமுகர்கள் கொழும்பில் மட்டும் சந்திப்பை நிகழ்த்திவிட்டு சென்று விடுவார்கள். இன்று அந்த வெளிநாட்டுத் தலைவர்கள் எல்லோரும் வன்னிக்குச் சென்று தமிழரசின் தலைவர்களோடும் பேச்சுவார்த்தை நடத்திச் செல்கிறார்கள். எனவே இருநாடுகள் என்ற யதார்த்தத்தை இன்று சர்வதேச நாடுகளும் ஏற்றுக்கொண்டுள்ளன. பேச்சுவார்த்தையில் சிங்கள அரசுக்கும்-தமிழ் அரசுக்கும் ஒரே அந்தஸ்து என்ற நிலையை இன்று சர்வதேச சமூகம் ஏற்றுள்ளது.

அண்மையில் தென்தமிழ் ஈழத்தைப் பிரித்து தமிழ்த் தேசியத்தை சிதைக்க நினைத்தார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு பலவீனப்பட்டுவிட்டது என்று எதிரிகள் எக்காளமிட்டார்கள். எவரும் எதிர்பாராத வேளையில் தலைவர் அதிரடி நடவடிக்கையை மேற்கொண்டு நிலைமையை மாற்றி அமைத்தார். மீண்டும் தேசியத் தலைவரின் ஆளுமை குன்றிலிட்ட விளக்காகப் பிரகாசித்தது.

தேசியத் தலைவர் தம்பி பிரபாகரன் அவர்களை நன்றாக அறிந்திருந்தபோதும் அவரை சந்திக்க வாய்ப்பு வராதா? என்று ஆதங்கப்பட்டதுண்டு. ஆனால் அந்த வாய்ப்பு எனக்கு பலமுறை கிடைத்தது. அவர் அருகிலிருந்து உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது எனக்குக் கிடைத்த பெரும்பேறாகும். பிரகாசம் நிறைந்த எழில் வதனம், ஒளிவீசும் கண்கள், ஏறுநிகர் நடை, வீறுகொண்ட மதிநுட்பம் நிறைந்த பேச்சு. இப்படி ஒரு தலைவன் தமிழினத்திற்கு கிடைத்த பெரும் அருட்கொடை.

தேசியத் தலைவர் தம்பி பிரபாகரனின் தந்தையார் திரு வேலுப்பிள்ளை அவர்களோடு மட்டக்களப்பு கச்சேரியில் கடமை புரிந்திருக்கிறேன். அவர் என்னைவிட பல வயதுகள் மூத்தவர். தந்தையார் கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் கொண்ட ஒரு தூய அரச உத்தயோகஸ்தராகும். ஆனால் அவர் மகன தம்பி பிரபாகரனோ தந்தையைவிட பல மடங்கு பண்பு நிறைந்திருப்பதைக் கண்டேன். இவ்விடயம் பற்றி தலைவரிடம் நான் கூறியபோது, அந்த மதிமுகத்தில் புன்னகை தவழ்ந்தது.

புதிய புறநானூறு படைக்கும் அந்தத் தேசியத் தலைவர் காலத்தில் தமிழர்கள் முற்று முழுதாக விடுதலை பெறுவார் என்ற அசையாத நம்பிக்கை அவரது பிறந்த தினத்திலே பிறந்த எனக்கு உண்டு. அந்த நம்பிக்கை ஒருபோதும் வீண்போகாது.

காலத்தை வென்ற காவியத் தலைவனே! நீ பல்லாண்டு வாழ்க! பல்லாண்டு வாழ்க! என வாழ்த்துகிறேன். ஆண்டவா! நீதி வேண்டி, தர்மம் காக்கப் போராடும் எங்கள் காவியத் தலைவனை ஆசீர்வதி!

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

# வையகம் வாழ்ந்திட வாழ்க!



ஈழத்தின் தமிழ்க்குலத்தின் இதயத்துடிப்பாம், உலகத் தமிழினத்தின் உயிர்த்துடிப்பாம், ஆண்டுகள் ஐம்பதுக்கு முன்னால் கார்த்திகைத் திங்களின் வீர மழலையின் பிறப்பாம், புவியார் திகைத்திடும் புலிப்படைத் தலைவராம் புகழ் ஒளியின் முதல்வன் 'தம்பி'யெனத் தரணி போற்றிடும் தன்னிகரில்லாத் தலைவன், ஈழத் தமிழ் தேசிய இனத் தலைவர் பிரபாகரனது பிறந்த நாள் விழாமலர் படைக்கும் ஈழமுரசு-க்கு இதோ என் எண்ணத் துளிகள்.

இமயத்தை சென்டால் அறைந்த கரிகால் வளவனும், கீழ்த்திசை நாடுகள் வென்ற இராஜராஜனும், அவ்வேந்தனின் மைந்தன் கங்கையும், கடாரமும் கொண்ட இராஜேந்திரனும் உயர்த்திய புலிக்கொடி - பழந்தமிழர் பெருமையைப் பரணி பாடிற்று.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியெங்கும் ஈழம் உள்ளிட்ட இலங்கைத்தீவில் பறங்கியர் ஆதிக்கம்! யூனியன் ஜாக் கொடி அகற்றப்பட்டபின் அரை நூற்றாண்டு காலம் ஈழத்தமிழர்கள் வாழ்வில் காரிருள், கண்ணீர், வெள்ளம் கவிந்துவிட்ட அந்தகாரத்தை அகற்றவே ஒளிக்கீற்றாய் எழுந்த பிரபாகரன் "தமிழீழ விடுதலைப் புலிகள்" மூலம் புதிய விடுதலைப் பாதையை அமைத்தார். அதற்கு அவர்கள் வழங்கிட்ட உயிர்கொடை உலகம் இதுவரை கண்டும், கேட்டுமிராதது.

மனிதகுலச்சரித்திரம் மாவீரர்கள் பலரை பல நாடுகளில் சந்தித்திருக்கிறது. தலைகீழ் மாற்றங்களை ஏற்படுத்திய புரட்சியாளர்களைக் கண்டிருக்கின்றது. சிறிய படையால் பெரும் படைகளை வென்றவர்களாம், மசிடோனியாவின் அலெக்சாண்டர், அல்ப்ஸ் மலை கடந்த ஹானிபால், பாலைவன மணலின் பகைவர் கூட்டத்தை வீழ்த்திய லிபியாவின் உமர்முக்தர் இவர்களது ஆற்றலின் மொத்த வடிவமாகவே பிரபாகரனைக் காண்கின்றேன்.



**வைகோ**

பொதுச் செயலர்,
மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.
தமிழகம்.

கொரில்லா யுத்தத்தின் படைப்பாளியாகக் போற்றப்படும் சேகுவேராவால் சாதிக்க முடியாததை சாதித்த வீரன் தான் வல்வெட்டித்துறை தந்த வீரமகன். அகிலம் வியந்து பாராட்டும் புரட்சியாளர்கள், பலர் தங்கள் தனி மனித வாழ்க்கையில் கடைப்பிடிக்கத் தவறிய ஒழுக்கத்தின் உறைவிடம் தான் வேலுப்பிள்ளை பெற்றெடுத்த தமிழ்க் குலத்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தின் தவமைந்தன்.

விமானங்கள் குண்டு வீச, பீரங்கிகள் நெருப்பைக் கக்க இலட்சத்துக்கு மேற்பட்ட சேனா வீரர்கள் நாற்புறத்திலும் தாக்க அனைத்துக்கும் அஞ்சாமல் வெறும் 28 பேருடன் வன்னிக்காட்டுக்குள் பிரபாகரன் பாசறை அமைத்த சரித்திரம் அகிலம் அதுவரை காணாததாகும்.




இலட்சத்துக்கும் மேற்பட்ட பாரசீகப் படையை அஞ்சாமல் எதிர்கொண்டு தெர்மாபிளே கணவாயில் மடிந்தார்களே 300 ஸ்பார்ட்டா வீரர்கள்! அவர்களின் மன்னன் லியோனிடாஸ்! இந்த வீரகாவியத்தை மாவீரன் நெப்போலியனும், புரட்சியாளர்கள் ஃபிடல் காஸ்ட்ரோவும் நினைவு கூர்ந்தனர் தாங்கள் கண்ட களங்களில்! தெர்மாபிளே களத்தை விட புலிகளின் இமயமான செருக்களம் தான் வன்னிக் காடுகளின் களமாகும். ஸ்பார்ட்டார் வீரர்களின் பலிபீடம் கீர்த்தியின் கிரீடமாயிற்று. ஆனால் பிரபாகரனும் அவரது புரட்சிப்படையின் வீரர்களும், வீராங்கனைகளும், களங்களை வென்று காட்டினர். வரப்போகின்ற காலம் இனி வன்னிக் களத்தையே வர்ணிக்கும். நாலாத் திசைகளிலும் தாக்குதல் நடந்து கொண்டிருந்த போது அவ் வன்னிக் காட்டில் என் நெஞ்சமெல்லாம் நிறைந்துள்ள ஆருயிர் பிரபாகரன் அவர்களோடு மூன்று வாரகாலம் உடனிருந்தேன். அதிகாலை மூன்று மணிக்கெல்லாம் கண் விழிப்பார்.

நிலவறைக்குள் மரப்பலகை தான் அவருக்கு கட்டில். சிறுபிராயத்து சம்பவங்களை, அவரது வாழ்க்கை வரலாற்றை நான் எழுதி வெளியிட எனக்கோ தணியாத தாகம். ஒவ்வொரு அதிகாலை வேளையிலும் அவர் சொல்லச் சொல்ல எழுதினேன். ‘புதிய புலிகள்’ அமைப்பை நடத்திய காலம் வரையிலும்தான் பதிவு செய்ய முடிந்தது. மீதமிருப்பதை, மலரப்போகும் தமிழீழம் தந்திட இயற்கைத்தாய் அருள் தருவாள் எனக் காத்திருக்கிறேன்.

புலிப்படையின் களத்தில் நின்று போராடிய வீரர் ஒருவர் சிறிதுகாலம் தமிழ்நாட்டிற் பொறுப்பாளராகவும் இருந்தார். இயக்கத்தில் அவர் பெயர் ‘அன்பு’. ஒருமுறை அவர் என்னிடம் சொன்னார்... “வன்னிக் காட்டுக்குள் 28 பேர் நுழைந்தபோது அக்காட்டின் புதர்களுக்குட் பதுங்கியவாறு இருந்த எங்கள் கரங்களில் துப்பாக்கிகள். ஒருநேர உணவு கூடச் சரியாக இல்லை. உப்பு இல்லாத அரிசிக்கஞ்சி - அதுவும் அரைவயிற்றுக்கு! காட்டுக்குள் எங்களைத்தேடி அலையும் படைவீரர்களோ பல்லாயிரக்கணக்கில்! இந்நிலையிற் பக்கத்து ஊர்களிலிருந்து தலைச்சுமையாகப் பொருட்களைக் கொண்டு வரச்செய்து கண்ணிவெடிகளைத் தயாரித்தார் எங்கள் தலைவர். அப்போது இப்படி நினைத்தேன், ஐயோ, தலைவரும் பட்டினி கிடக்கிறாரே - அரை வயிற்றுக்குக்கூடச் சாப்பிடவில்லையே இனிமேல் கண்ணிவெடி தயாரித்து ஒரு இலட்சம் பேரைக்கொண்ட எதிரிப் படையை நம்மால் எதிர்கொள்ள முடியுமா? நன்கு சாப்பிட்டுப் பலத்துடன் முழு மூச்சாகச் சண்டை போட்டுச் சந்தோசமாகச் சமரிற் சாகலாமே? என்று மனதிற்குள் எண்ணியதுண்டு.

ஆனால், கற்பனைக்கெட்டாத அதிசயமன்றோ நிகழ்ந்தது! எங்கள் பாசறை ஒன்று பத்தாகியது - பத்து நூறாகியது - வேங்கைகளோ ஆயிரமாயிரமாக எழுந்தனர். பகைவர் படை அடிவாங்கியது - திணறியது, கானகத்திலிருந்து பின்வாங்கியது. இந்த மகோன்னதமான சாதனையின் மறுபெயர்தான் எங்கள் தலைவர்” என்று கூறிய அவ்வீரன் பின்னைய நாள் களத்தில் உயிர்துறந்தான். ஆனால், அவனது சொற்கள் என் செவிகளில் இன்னமும் ரீங்காரமிடுகின்றன. மாமன்னர்கள் பலரும் ஈடில்லாத் தமிழ்ப் புலவரும் சான்றோரும் பெற்றுத்தரமுடியாத முகவரியைத் தமிழ் இனத்துக்குத் தரணியிற் பெற்றுத்தந்திட்ட திருப்பெயர்தான் பிரபாகரன்!

பாலஸ்தீனியர் சாதிக்க முடியாததை, நான் மதிக்கும் யாசர் அராபத் எட்ட முடியாத வெற்றியைத் தன் மக்களுக்குப் பெற்றுத்தந்த பாட்டுடைத் தலைவர்தான் பிரபாகரன்!

தேசிய இனங்களின் விடுதலைச் சரித்திரத்தில் ஈடு சொல்ல முடியாத ஒரு அத்தியாயத்தைப் படைத்திருக்கிறார் - தமிழீழ விடுதலைப்புலிகளின் தன்னிகரில்லாத் தலைவர்! இருள் விலகியுள்ள நேரம்! விடியலின் துந்துபி முழங்கிடும் வேளை, தமிழ்த் தாயின் வீரமகன் பிரபாகரன் இன்னமும் பன்னூறு. பன்னூறு பிறை கண்டு நலனும் வலிவும் வளர்ந்து வாழ்க!

வையகம் புகழ்ந்து வாழ்த்திட வாழ்க!

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive



கருமேகத் திரள்வானம்
களங்கம் சுமந்த வீதிகள்
எல்லைகள் பிடுங்கப்பட்டு
பிய்த்தெறியப்பட்ட வீடுகள்...
எங்கள் வானத்தில்
எமக்கென ஒன்றுமற்றுப்போன
அந்த வேளைதான்
நீ நீள் வானத்தில் நிமிர்ந்தெழுந்தாய்
ஆதவனாக இல்லை
அக்கினிக் குஞ்சுகளின் அன்னையாய்
ஓராயிரம் விடிவெள்ளிகளுக்கு
இன்னும் இறுகிக் கறுத்து
இலக்குகள் தேடும்
கறுப்பு மனிதர்களின்
உணர்வுப் பொறியாய்,
எங்கள் வீதிகளில்
வீட்டு வாயில்களில்
அருகு வந்து விளக்கேற்றிய
அன்புச் சுடராய்,
வார்த்தைகளில் வர்ணிக்க
முடியாத வடிவமாய்...

# நீ மனிதமுள்ள மனிதன்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

உலகம் உற்றுப்பார்த்த எம் திசையில்
எங்கிருந்தோ விலங்குச் சங்கிலிகளை
உனக்காய் எண்ணிக்கொண்டிருக்கும்
விலங்குகளின் அர்த்தமற்ற
பேச்சுக்களுக்கு அப்பால்
நீ இப்போதும் –எங்கள்
இதயத்துக்கு அருகு வந்து
அன்பு காட்டுகின்றாய்.
யாரும் காணாத தெய்வமாகவல்ல.
வீடுதேடிவந்து விசாரிக்கும்
எல்லோருக்கும் உரிய மனிதனாய்,
உன்னை உருவகித்துவிட முடியாத
வார்த்தைகளின் வர்ணிப்புக்கு அப்பால்
நான் என்ன சொல்ல?

ஆயினும்
எங்களின் சிறகொடிந்த
விறகுக் கரங்களுக்குத்
துடிப்புக்கொடுத்தவன் நீ.
எம்மை மூட்டி எரித்த
துயர்களைச் சுடுவதற்கு
துப்பாக்கிகளைத் தந்து நிமிர்த்தியவன் நீ.

கரைகாணாத கண்ணீர்ச்
சுழல்களுக்கு நடுவில்
சிக்கித் தவித்தவளை
அகலிகையின் சாப விமோசனமாக
அல்ல,
அக்கினிக் குஞ்சாய்ப்
பிறப்பெடுக்க வைத்தாய்.
இன்று
தழல் சுமந்த விழியுடனும்
தகிக்கின்ற நெஞ்சுடனும்
உதிரம் ஊறிக்கிடக்கும்
மயிர்க்கலங்களில்
தாயகக் காதலையும்
சுமந்து நிற்கின்ற கறுப்பு மனிதர்களாய்
உருமாற்றினாய்.
நேற்றுவரையும் கூனலிருந்தது.
இன்று பிறப்பெடுத்த
அக்கினிக் குழந்தை
எதற்கும் அஞ்சாது
[illegible]ந்து [illegible]க்கின்றது.



அம்புலி

போராளிக்கவிஞர்,
எழுத்தாளர்.
தமிழீழம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆழக் கடற்படகும்
அள்ளிவந்த ஆயுதமும்
நீள நெருப்புச் சுமந்த
காப்பரண் வேலித் தங்ககமும்
எட்டமுடியாது என
எண்ணிய இலக்குகளையும்
இல்லாமல் செய்த பெருமை
எங்களுக்குரியது.
அதை எமக்கென உரித்தாக்கிய
காவலன் நீ.

புண்சுமந்த மனங்களின்
கண்ணீர் வீதிகளில்
புதியதொரு பறவையைச்
சிறையுடைத்துப் பறக்கவிட்டாய்.
இன்று அத்திசையில்
ஆயிரம்... ஆயிரம்... ஆயிரமாய்...
மனிதா,
நரைவிழுந்த அகவையா உனக்கு?
இல்லை.
உனது கனவுகள்
அவை கனவுகள் அல்ல.
செயல்களில் கருப்பொருள்கள்.
எல்லைதொடும் வெகுவிரைவில்.
வாழ்த்துக்கள் சொல்ல –எம்
வாய் மட்டும்போதாது.
வார்த்தைகளும் காணாது.

உனது துளியாய்,
நீ துடிப்பேற்றிய
துணிவுக்கரங்களோடு
துணைநிற்போம்
என்று உறுதி கூறுகின்றோம்.
நீ மனிதன்.
வெள்ளியென,
தெய்வமென,
சூரியனென
இல்லாத,
மனிதமுள்ள,
ஓராயிரம் செயல்களின் கருச்சுமந்த
மனிதன் நீ.

1996

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தமிழீழம் ஓர் உலகளாவிய பார்வை

**நாம்** சிந்தித்துப் பார்க்க வேண்டும். தனிநாடு கேட்பது தவறா? தனிநாடு கேட்பது தவறல்ல என்பதுதான் நமது பதில். என்ன காரணம்? 1983ஆம் ஆண்டு இலங்கையில் தமிழினப் படுகொலை நடந்தபோது ஐக்கிய நாட்டு மன்றத்துக்கு நான் சென்றேன். அங்கிருந்த நாடுகளின் எண்ணிக்கை அப்போது 157. இன்று ஐக்கிய நாடுகளின் பேரவையிலுள்ள உலக நாடுகளின் எண்ணிக்கை 185.

உலகமே ஒன்றாகி வருகிறது. தொழில் நுட்பம் ஒன்றாகியது. தகவல் புரட்சி ஏற்படுகிறது. வாணிபத்திற்கான தடைகள் நீக்கப்படுகின்றன. எங்கு வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் செல்லலாம் என்று விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் வேகமாக வளர்ந்து வளர்கிற இந்தக் காலத்தில் 157 நாடுகளில் இருந்து 185 நாடுகளாகி இருக்கின்றனவே அது எப்படி?

தனி நாடு கேட்பதே தவறு என்பதன் பொருளா, தனி நாடு கேட்பதே கூடாதென்பதன் பொருளா இது? நாடுகளின் எண்ணிக்கை வளருகின்ற காரணம் என்ன? ஒரு அடிப்படையான காரணத்தை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைக்கு இருக்கின்ற நாடு என்பது ஒன்று. தேசிய இனம் என்பது வேறொன்று. தேசிய இனத்தின் அடிப்படையில் ஒரு நாடு அமைந்துவிட்டால் பிரச்சினை இல்லை.

இங்கிலாந்து நாட்டை எடுத்துக்கொண்டால் ஆங்கிலம் பேசுபவர்களுடைய நாடு அது. பிரான்ஸ் நாட்டை எடுத்துக்கொண்டால் பிரெஞ்சு மொழி பேசுபவர்கள் உள்ள நாடு அது. ஜெர்மனியை எடுத்துக்கொண்டால் ஜெர்மன் மொழி பேசுபவர்கள் உள்ள நாடு அது. இப்படி தேசிய இனத்திற்கென்று நாடு அமைந்துவிட்டால் பிரச்சினை இல்லை.

ஆனால் நாடு என்பது பூகோளத்தை அடிப்படையாகக்கொண்டு இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது. வரலாற்றில் ஏற்பட்ட விபத்தின் காரணமாக நாடுகள் சில எல்லைகளைக் கொண்டுள்ளன. வெள்ளைக்காரர்கள் ஆதிக்கம் செய்தபோது ஆப்பிரிக்கக் கண்டத்தை ஒரு சில நாடுகளாக கோடுபோட்டார்கள். குறுக்கும் நெடுக்குமாக கோடுபோட்டு ஒரு சில நாடுகளை நிர்வாகத்திற்காக ஏற்படுத்தி விட்டார்கள்.

விடுதலை கிடைத்தபிறகு அந்தந்த இனமும் தங்களுக்குரிய சுய நிர்ணய உரிமை வேண்டும் என்கிறது. ஜெயிலுக்கு குற்றவாளிகள் விலங்கு பூட்டப்பட்டு கொண்டு செல்லப்படுவார்கள். விடுதலை கிடைத்த பிறகு அவர்களை விலங்கோடா அனுப்புவது? அதுதான் இன்றைக்கு நடக்கிறது.

வெள்ளைக்காரன் வருவதற்கு முன்னால் தமிழ் மக்களின் தாயகம் இருந்தது. அவர்களுடைய அரசுரிமை இருந்தது. சிங்களருடைய அரசுரிமை இருந்தது. இன்னும் கூடச் சொல்லப்போனால் சிங்களருக்கும் சேர்த்து தமிழன்தான் அரசனாக இருந்தான்.

ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்னாலே இரு அரசுகள் இருந்தன. ஆனால் அவர்கள் நிர்வாக வசதிக்காக இரண்டையும் சேர்த்து இலங்கையை ஒரு நாடாக ஆக்கினார்கள். நாடு என்ற இலக்கணமே இன்றைக்கு வெள்ளையர்களால் வரை

ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்னாலே இரு அரசுகள் இருந்தன. ஆனால் அவர்கள் நிர்வாக வசதிக்காக இரண்டையும் சேர்த்து இலங்கையை ஒரு நாடாக ஆக்கினார்கள்.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

யறுக்கப்பட்ட பூகோளத்தை அடிப்படையாகக் கொண்டதே தவிர, தேசிய இனத்தை அடிப்படையாகக் கொண்டது அல்ல.

அதன் விளைவாகத்தான் இன்றைக்கு இவ்வளவு கலவரங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அதனாலேதான் தனிநாடு கோரிக்கை வலுத்து வருகிறது. தனிநாடு கோரிக்கையை உலகத்திலுள்ள நாடுகள் எப்படிச் சந்திக்கின்றன?

சோவியத் ஒன்றியத்தில் அவர்களது அரசியல் சட்டத்திலே தன்னுரிமை பெற வழியிருக்கிறது. வேண்டுமானால் சேரலாம். வேண்டாவிட்டால் பிரியலாம். சோவியத் ஒன்றியம் 15 நாடுகளாக இன்றைக்கு அவர்களாகவே பிரிந்துவிட்டார்கள். ஆயுதம் ஏந்திப் போராட அவசியம் இல்லை.

செக்கோஸ்லோவேகியா இன்றைக்கு செக் நாடு என்றும் ஸ்லோவேகியா என்றும் இரண்டாக இருக்கிறது.

எப்படி ஒரு குடும்பத்தை நடத்துவதற்கு ஒரு வீடு தேவையோ அதைப்போல ஒரு இனத்தை முன்னேற்றுவதற்கு ஒரு நாடு தேவை என்கிற உணர்வு உலகமெங்கும் உருவாகி வருகிறது. தனி நாடு கேட்பது தவறில்லை. தனி நாடு கேட்பது ஏன் என்றால் அந்த இனத்தை வாழ வைக்கத்தான். ஒரு உண்மை என்னவென்றால் உலகத்தையே கட்டி ஆண்ட இங்கிலாந்து நாட்டில் இன்றைக்கு ஆட்சி புரிந்து வருகின்ற டோனி பிளேயர் அவர்கள் ஸ்காட்லாந்துக்கு தனிப் பாராளுமன்றம் தந்திருக்கிறார். இன்னும் சில ஆண்டுகளில் ஸ்காட்லாந்து தனிநாடாகும்.

அதுபோல ஒவ்வொரு இனத்திலும் இன்றைக்கு இருக்கின்றவர்கள் தங்களுடைய இன மேம்பாட்டிற்காக தங்களுடைய சுய நிர்ணய உரிமையைப் பெறுகிறார்கள். அதற்கு நாகரிகமான சமுதாயம் வழிவிடுகிறது. காட்டுமிராண்டிகள் அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கிறார்கள். அதனுடைய விளைவுதான் இன்றைக்கு புரட்சி ஏற்படுகிறது.

கனடா நாட்டில் 10 மாகாணங்களில் 9 மாகாணங்கள் ஆங்கிலம் பேசுபவை. 1 மாகாணம் பிரஞ்சு பேசுவது. அவர்கள் பிரிந்து போகவேண்டும் என்று கேட்கிறார்கள். அந்த மக்களிடையே இரண்டுமுறை கருத்துக் கணிப்பு எடுத்தார்கள். நீங்கள் என்ன பிரிந்துபோக விரும்புகிறீர்களா? அல்லது சேர்ந்து இருக்க விரும்புகிறீர்களா? என்று கேட்டார்கள். அந்த நாட்டுப் பிரதமர் ஒன்றாக இருப்பதிலே என்ன இலாபம் என்று பேசுகிறார். அதற்காகச் செலவு செய்கிறார். அந்த நாட்டினுடைய முதலமைச்சர் இவர்களோடு ஒட்டிக்கொண்டிருப்பதால் என்ன இலாபம், வெட்டிக்கொண்டு போவதால் என்ன நட்டம் என்று கேட்டு பிரிவினையே நல்லது என்று பேசுகிறார்.

இருமுறை கருத்துக் கணிப்பு நடந்தது. இரு முறையும் ஒற்றுமையே வென்றது. ஆனால் மூன்றாவது முறை நடைபெற இருக்கும் கருத்துக் கணிப்பில் அநேகமாக பிரெஞ்சு பேசக்கூடிய கியூபெக் மாகாணம் அமைதியாக பிரிவதற்கான வழி ஏற்படும்.



**பண்ருட்டி இராமச்சந்திரன்**

முன்னாள் தமிழக அமைச்சர், அரசியலாளர் தமிழகம்.

சோசலிச நாடுகளில் எல்லாம் அரசியல் சட்டம் வகுக்கிற போது சுயநிர்ணய உரிமையைச் சேர்த்து உருவாக்கினார்கள். அதனாலேதான் செக்கோஸ்லோவாக்கியா செக் என்றும் ஸ்லோவாக்கியா என்றும் இரு நாடுகளாகப் பிரிந்தது. சோவியத் ஒன்றியத்தில் 15 நாடுகள் பிரிந்தன. ஆனால் முதலாளித்துவ நாடுகளில் அதற்கு சட்டத்திலே இடமில்லை.

தனிநாடு கேட்கிறார்கள் என்பதற்காக அவர்களைத் தடைசெய்ய வேண்டும் என்



றும் அவர்களை தகாதவர்கள் என்றும் சொல்லுபவர்கள் காலத்தை உணராதவர்கள். நாகரிகத்தை அறியாதவர்கள். நாடுகளின் போக்கினைத் தெரியாதவர்கள். உலக வரலாற்றினை உணர்ந்து கொள்ளாதவர்கள்.

இரண்டாவதாக நாம் சிந்திக்க வேண்டியது, ஏன் ஆயுதம் ஏந்திப் போராடுகின்ற அவசியம் ஏற்படுகிறது? என்பதைத்தான். உலகத்தை நாம் புரிந்து கொண்டால் தெரியும். ஒரு காலத்தில் ஐரிஸ் இராணுவம் என்பது வட அயர்லாந்தை சேர்ந்தது. அந்த ஐரிஸ் இராணுவம்; பிரிட்டனைச் சேர்ந்த, ஏன் இந்தியாவிற்கே சுதந்திரம் தந்த லார்ட் மவுண்ட் பேட்டன் படகிலே செல்லுகிறபோது வெடிவைத்து அந்தக் கப்பலை மூழ்கடித்தது. அப்போது பிரதமராக தாட்சர் இருந்தார். அவர் இலண்டனில் தன்னுடைய பொதுக் குழுக்கூட்டத்தை கூட்டினார். அவர்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

அகவை 50

றோம். அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும், வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகிறது.

● தனிமை உங்களை வாட்டும் கணங்கள் உண்டா? அதை எவ்வாறு எதிர்கொள்கிறீர்கள்?

●● இத்தகைய தனிமையுணர்வுகள் என்னைப் பீடித்ததில்லை. தங்களின் தனிப்பட்ட மனக் குகைக்குள் தங்களை அமிழ்த்திக்கொள்பவர்களுக்கு இந்தத் தனிமையுணர்வு ஒரு பிரச்சினைதான். ஒரு உண்மையான புரட்சியாளன் இத் தனி நபர் பிரச்சினைகளை மேவி, ஒரு கூட்டு பிரக்ஞையை, சமூகப் பிரக்ஞையை உருவாக்குகிறான். நான் ஒரு பொதுவான சமூக இலட்சியத்திற்காக வாழ்பவன், அதற்காகப் போராடுபவன்.

● எந்தக் கட்டத்தில் நீங்கள் பாராளுமன்ற அமைப்பில் நம்பிக்கை இழந்தீர்கள்? உங்கள் நம்பிக்கையைச் சிதைத்தது எது?

●● எழுபதுகளின் ஆரம்பத்தில், இளம் தலைமுறையினர் பாராளுமன்ற அரசியலில் நம்பிக்கையிழந்திருந்த கால கட்டத்தில்தான் நான் அரசியலில் நுழைந்தேன். ஆயுதம் தாங்கிய புரட்சிவாதியாகவே நான் அரசியலில் புகுந்தேன். அடுத்தடுத்து பதவிக்கு வந்த சிங்கள அரசுகள் எமது மக்களின் துன்ப, துயரங்களை ஈவிரக்கமின்றி முற்றிலும் புறக்கணித்து வந்த காரணத்தினால் பாராளுமன்ற அரசியலில் எனக்கு அவநம்பிக்கை ஏற்பட்டது.

● நீங்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தை எவ்வாறு ஆரம்பித்தீர்கள்?

●● எம் மக்களின் விடுதலைக்கு ஆயுதப் போராட்டம்தான் ஒரே வழி என்பதில் முழுமையான நம்பிக்கையுடைய புரட்சிகர இளைஞர்களின் துணையுடன்

இருந்தமாடிக்குக் கீழே வெடிகுண்டு வைத்தார்கள். அவருக்கும் சேர்த்துத்தான், ஆனால் அவர் தப்பிவிட்டார்.

அந்தப் போராட்டத்திற்குப் பிறகு இங்கிலாந்து அரசு அவர்களை எல்லாம் தடைசெய்துவிட்டு அவர்களுடன் பேச மாட்டேன் என்று சொல்லிவிட்டதா? அவர்களுடன் பேசி ஒப்பந்தம் போட்டிருக்கிறது.

இன்றைக்கு வட அயர்லாந்திலே கத்தோலிக்கர், புரட்டஸ்டண்டு என இரு மதத்தினரும் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். இரண்டு இனங்களில் ஏதாவது ஒன்றை பாதிக்கின்ற சட்டம் ஏதாவது வருமானால் அவர்களை பாதுகாத்துக்கொள்ள ரத்து அதிகாரம் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றது.

ஒரு காலத்தில் ஜெர்மனியில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளச் சென்ற இஸ்ரேல் வீரர்களை எல்லாம் சாகடித்த பாலஸ்தீனியர்களுடன் பேசி ஒப்பந்தம் போடவில்லையா?

குர்திஸ் இன மக்களின் தலைவர் இன்றைக்கு பிடிபட்டு இருக்கிறார். குர்திஸ் இன மக்கள் அதே போலத் தான் தீவிரவாதிகள் என்று கருதப்பட்டார்களா? ஈராக் நாட்டில் வடபுலத்தில் குர்திஸ் மக்கள் ஒரு மாகாணத்தை ஏற்படுத்தி ஐ.நா. சபையின் நேரிடை நிர்வாகத்தில் வைத்து இருக்கிறார்கள். அமெரிக்கா அதற்கு ஆதரவு தந்திருக்கிறது.

> விடுதலைப் புலிகளின் வேட்கையை அழித்துவிடலாம் என்று கருதினால், சிங்கள அரசின் எதிர்காலம் அழிந்துவிட்டது என்றுதான் பொருள்.

கிழக்கு தைமூரில் தீவிரவாதிகள் என்று கருதப்பட்டவரின் தலைவர் சிறையில் அடைக்கப்பட்டார். அவர் வெளியே வருகிறார். அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மெடேலின் ஐபிரிட் அவரை கைகுலுக்கி மலர்ச் செண்டு கொடுக்கிறார். ஆகவே ஓர் எண்ணம், அதற்கான காரணகாரியங்கள் என்று வருகின்ற போது அந்தப் பிரச்சினையை நேரில் சந்தித்து தீர்ப்பதற்கான சூழ்நிலையை அரசுகள் ஏற்படுத்த வேண்டுமே தவிர அவற்றைக் கிள்ளி எறிந்துவிடலாம் என்று கருதுவோமானால் அப்படிப்பட்டவர்கள்தான் அழிவார்களே தவிர அந்தக் கருத்துக்கள் என்றுமே அழியாது என்பதற்கு இதைவிட சிறந்த எடுத்துக்காட்டு வேறொன்றுமில்லை.

காலச்சக்கரத்தில் மனிதர்கள் அழிந்துவிடுவார்கள். போராளிகள் மடிந்தாலும் அவர்களின் கருத்துக்கள் அழிந்துவிடாது என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் வேட்கை அழிந்துவிடாது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். விடுதலைப் புலிகளின் வேட்கையை அழித்துவிடலாம் என்று கருதினால், சிங்கள அரசின் எதிர்காலம் அழிந்துவிட்டது என்றுதான் பொருள்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# எப்பொழுதும் தலைவனாவது தலைமையினாலேயாகும்

சம்பவம் 1

1987ம் ஆண்டு ஒக்டோபர் 10ம் திகதியானது ஈழத்தமிழர்கள் இலகுவாக மறக்கமுடியாத நாள். அன்று அதிகாலையில் 'ஈழமுரசு', 'முரசொலி' ஆகிய இரண்டு யாழ்ப்பாணத்து தினசரிகளின் காரியாலங்களும் பிராந்திய வல்லரசான இந்தியாவின் இராணுவத்தினால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டன. இக்குண்டு வெடிப்புச் சத்தங்கள் யாழ்ப்பாண நகரத்திற்கு அருகாமையில் உள்ள கொக்குவிலில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் தலைமைக் காரியாலயத்திலும் எதிரொலித்தது. இந்தச் சம்பவம் பத்திரிகைக் காரியாலய இயந்திரங்களை மாத்திரம் தகர்க்கவில்லை. செப்டம்பர் மாதம் 26ம் திகதி திலீபனையும், ஒக்டோபர் 5ம் திகதி குமரப்பா, புலேந்திரன் என்னும் இரண்டு தளபதிகளையும் இந்திய அரசின் மெத்தனப் போக்கினாலும், அகங்காரத்தினாலும், இழந்து ஏற்கனவே கலங்கிப் போய் இருந்த ஈழத்தமிழ் மக்களையும் குழப்பத்திலும் அச்சத்திலும் ஆழ்த்தியது. ஆனால், கலங்காத உறுதியும், திடமான மனமும் கொண்ட எங்கள் தலைவர் பிரபாகரனை அந்தச் சத்தங்கள் எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை. என்றும் போலவே அன்றும் காலையில் விடுதலைப் புலிகளின் தலைமைக் காரியாலயத்திற்கு வந்து அன்றைய காலை நிகழ்வுகளையும் எதிர்காலச் செயற்பாடுகளையும் பற்றி தளபதிகளுடன் கலந்துரையாடிக் கொண்டிருந்தார். அன்றைய பரபரப்பான சூழ்நிலையிலும் அவர் என்றும் போலவே அமைதியாகவும், ஆழமான சிந்தனையுடனும், நிதானமாகவும் காணப்பட்டார்.

அவ்வேளையில் அம்மண்டபத்தில் இருந்த வாக்கிடோக்கி என்னும் தொலைதொடர்புச் சாதனத்தின் ஊடாக பலாலி இந்திய இராணுவ முகாமில் இருந்த பெரியசாமி என்னும் இந்திய இராணுவ அதிகாரி புலிகளின் தலைமையகத்துடன் தொடர்புகொள்ள முயன்றார். மேஜர் தரத்திலான இவ்வதிகாரி ஒரு தமிழனாக இருந்ததால் விடுதலைப் புலிகளின் தளபதிகளுக்கும் இந்திய இராணுவ அதிகாரிகளுக்கும் இடையில் நடைபெறும் சந்திப்புக்களின் போது தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். இதன் மூலம் அன்றைய விடுதலைப் புலிகளின் முன்னணித் தளபதிகளுடன் தனிப்பட்ட நட்புறவையும் வளர்த்துக்கொண்டிருந்தார். ஆனால், அன்று பத்திரிகைக் காரியாலயங்களைத் தகர்த்து ஈழத்தமிழ் மக்கள் மீது போர்ப் பிரகடனம் செய்த இந்திய இராணுவத்தின் ஒரு அதிகாரியான அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது.

மேஜர் பெரியசாமியின் வாக்கிடோக்கி அழைப்பினை செவிமடுத்த தளபதிகள் அனைவரும் அமைதியாகப் பார்த்துக்கொண்டிருக்க தலைவர் பிரபாகரன் தானே அந்தக் கருவியை எடுத்து பெரியசாமியுடன் தொடர்பு கொண்டார்.

"பெரியசாமி .. பெரியசாமி.. பெரியசாமி, இங்கே நான் பிரபாகரன் பேசுகிறேன்" எனப் பதில் கொடுத்தார்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தான் நான் விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆரம்பித்தேன்.

❁ உங்களைப் 'புலிகள்' என்று ஏன் அழைத்துக்கொள்கிறீர்கள்?

❁❁ தமிழர்களின் அரசியல் வரலாற்றில் புலிச் சின்னமானது ஆழ்ந்து வேரோடி இருப்பதால்தான் எமது இயக்கத்திற்கு 'விடுதலைப் புலிகள்' என்று பெயரிட்டேன். புலிச்சின்னமானது தமிழ்த் தேசியத்தின் புத்தெழுச்சியை உருவகப் படுத்துகிறது. அத்துடன் கெரில்லா யுத்த முறையையும் புலிச்சின்னம் குறித்து நிற்கிறது.

'சண்டே'(Sunday) ஆங்கில வார ஏடு.
11-17 மார்ச் 1984

❁ நீங்கள் கியூபாவில் ஆயுதப் பயிற்சி பெற்றதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. நீங்கள் எவ்விதம் இராணுவப் பயிற்சியைப் பெற்றீர்கள்?

❁❁ நான் தனிப்பட்ட முறையில், சொந்த முயற்சியால் பயிற்சியைப் பெற்றேன். நான் எனது இயல்பான திறனாற்றல் மூலமே செயல்படுகிறேன்.

'நியூஸ் வீக்' ஆங்கில ஏடு.
11.08.1986

❁ இலங்கை அரசாங்கத்தால் தேடப்படுபவர்களில் முதன்மையானவராக இருப்பது குறித்து என்ன நினைக்கி

*இவ்வாறு பதில்கொடுத்த தலைவரின் எதிர்பாராத அழைப்பினால் ஆச்சரியத்திற்குள்ளாகிய பெரியசாமி, "யார்? பிரபாகரனா..., வணக்கம் சார்" எனக் கூறிவிட்டு, ஏதோ சொல்ல முயன்றவரை இடைமறித்த தலைவர், "நீங்கள் (இந்தியப் படை) தேவையற்ற முறையில் போரை ஆரம்பித்துவிட்டீர்கள், நாங்களும் போருக்குத் தயார் என உங்கள் தளபதிகளிடம் கூறுங்கள். இனிப் போர்க்களத்தில் சந்திப்போம்" எனக் கூறிவிட்டு பதிலுக்குக் காத்திராமல் வாக்கிடோக்கியின் இயக்கத்தை நிறுத்திவிட்டார்.*

('அலைத்தைத் தந்தவருக்கு அதையே திருப்பிக் கொடு'. கட்டுரை 15. 7. 1996. உலகத்தமிழர் பத்திரிகை, பக்கம் 38).

1987ம் ஆண்டு யூலை மாதத்தின் இறுதி வாரத்தில் இந்தியத் தலைநகரான புது டில்லியில் இந்திய அரசாங்கத்தால் திணிக்கப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஈழத்தமிழ் மக்கள் சார்பில் உறுதியுடன் நின்று அதனை ஏற்க மறுத்த தலைவர் பிரபாகரன் அவர்கள், அதனை அடுத்த ஒருசில மாதங்களுக்குள் இந்திய இராணுவம் ஈழத்தமிழர்கள் மீது திணித்த போரினை எவ்வித தயக்கமும் இன்றி ஏற்றுக்கொண்டார். சளைக்காது போராடினார். அதனால் சரித்திரத்தையும் படைத்தார்.

## சம்பவம் 2

யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் அருகிலேயே தலைவர் பிரபாகரனின் அலுவலகமும் அமைந்திருந்தது. மரங்களால் சூழப்பட்ட அந்தக் கட்டடத்தை இந்தியப் படை அன்று இரவே குறிவைத்துத் தாக்கத் திட்டமிட்டது.

அது பற்றி இந்தியப் படைத் தளபதி திபேந்தர் சிங் பின்வருமாறு அவரது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

*'கொக்குவில் பகுதியில் உள்ள குறிப்பிட்ட கட்டடத்தில் விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் இருப்பதாக எங்களுக்குத் தகவல் கிடைத்தது. உடனடியாகவே அதிரடிப் படை அணி ஒன்றை உலங்குவானூர்திகள் மூலம் அக்கட்டடத்திற்கு அருகாமையில் உள்ள யாழ் பல்கலைக் கழக மைதானத்திற்குள் தரையிறக்குவதற்குத் திட்டமிட்டோம். இவர்கள் இறங்கி அந்த மைதானத்தைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவார்கள். இதைத் தொடர்ந்து 13வது சீக்கியப் படையணி அங்கு இறக்கப்படும். இதற்கிடையில் தரைவழியே 72வது மற்றும் 91வது ஆகிய காலாட் படையணிகள் முன்னேறிவந்து இவர்களுடன் சேர்ந்து கொள்ளும். இத்திட்டத்திற்கு இசைய ஒக்டோபர் 12ம் நாள் நள்ளிரவில் உலங்குவானூர்திகள் பலமுறை பறந்து அதிரடிப்படையைச் சேர்ந்த 103 வீரர்களையும், 13வது சீக்கியப் படையில் இருந்து 30 வீரர்களையும் அங்கு தரையிறக்க முயன்றனர். ஆனால், நாலாபுறத்தில் இருந்தும் விடுதலைப் புலிகளின் குண்டுகள் சீறிப்பாய்ந்து வந்தன. இதன் விளைவாக மூன்று உலங்குவானூர்திகளும் சேதமடைந்தன. அதனால் மேற்கொண்டு பறக்க முடியாதென விமானிகள் மறுத்துவிட்டனர். எனவே 13வது சீக்கியப்படையணிகளில் எஞ்சியிருந்தவர்களை அங்கு இறக்க முடியவில்லை என்ற*

தமிழீழ ஆவணக்காப்பகம்
TamilEelam Archive

செய்தியை ஏற்கனவே அங்கு இறங்கியவர்களுக்குத் தெரிவிக்க முடியாதவாறு அவர்களின் செய்தித் தொடர்பு சாதனமும் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் சேதமடைந்து விட்டன. இதற்கிடையில் விடியும் வேளை நெருங்கிவிட்டதால், அதிரடிப்படையினர் பிரபாகரன் இருந்த வீட்டை வளைத்துக் கொள்வதற்காக முன்னேற முயன்றார்கள். ஆனால், அவர்கள் புலிகளால் சுற்றி வளைக்கப்பட்டனர். கடுமையான போர் நடந்தது. முடிவில் ஒரேஒரு இந்திய வீரர் மட்டும் உயிரோடு மிஞ்சினார்.

இந்தியத் தளபதியே பகிரங்கமாக ஒப்புக்கொண்ட உண்மையிது.

இந்தியத் தளபதி கூறிய விபரம் இவ்வாறிருக்க, இந்தச் சோதனையான காலகட்டத்தில் தலைவர் பிரபாகரனுடன் இருந்த கவிஞர் காசி ஆனந்தன் என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்.

'தம்மைச் சுற்றி வளைத்துப் பிடிக்க இந்தியப் படைகள் முயலும் என்பதை பிரபாகரன் முன்பே உணர்ந்திருந்தார்'. இந்தியத் தளபதிகளை விட இராணுவத்தந்திரத்தில் தான் பலமடங்கு மேலானவர் என்பதை அவர் நிரூபித்தார். பல்கலைக் கழக வளாகத்துள் உலங்குவானூர்திகள் மூலம் படைகளைக் கொண்டுவந்து இறக்குவார்கள் என்பதை அவர் ஊகித்து உணர்ந்து கொண்டார். பல்கலைக் கழக வளாகத்தினுள் புலிகளை மறைவாக நிறுத்தி வைத்திருந்தார். இவர்கள் இருப்பது தெரியாது வந்திறங்கிய இந்தியப்படை வீரர்களை புலிகளின் துப்பாக்கிக் குண்டுகள் வரவேற்றன. இதைச் சற்றும் எதிர்பாராத இந்தியப்படை வீரர்கள் நிலைகுலைந்து சிதறி ஓடினார்கள்.

தம்பி தங்கியிருந்த வீட்டிற்கு அருகில்தான் நானும் மற்றும் சில தோழர்களும் தங்கியிருந்தோம். பல்கலைக் கழக வளாகத்திற்குள்ளும் அதைச் சுற்றிலும் அந்த நள்ளிரவில் நடைபெற்ற போரை என் வாழ்நாளில் என்றும் மறக்கமுடியாது. நாங்கள் இருந்த வீட்டிற்குள்ளும் குண்டுகள் தெறித்து விழுந்தன. இனி வீட்டிற்குள் இருப்பது ஆபத்து என்ற நிலையில் வெளியே வந்தபொழுது நான் கண்ட காட்சி என்னை வியக்கவைத்தது. அந்த நள்ளிரவில் நிலவொளியில் பிரபாகரன் நெருப்பாகக் காட்சிதந்தார். தோளில் ஆயுதமின்றி தம் தோழர்களுக்குக் கட்டளைகளைப் பிறப்பித்தவண்ணம் பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தார்!

எங்கேயோ தொலைதூரத்தில் பாதுகாப்பான அரண்களுக்கு மத்தியில் பதுங்கிக் கொண்டு தங்களுடைய படைகளுக்குக் கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டிருந்த இந்தியத் தளபதிகளைப் போல் அல்லாமல், தன்னுயிரைத் துச்சமாக மதித்துத் தானே களத்தில் குதித்து முன்னணியில் நின்று தனது தோழர்களுக்கு வழிகாட்டும் தம்பியைக் கண்டபோது என் மெய் சிலிர்த்தது.

('தமிழீழம் சிவக்கின்றது' பழ. நெடுமாறன். பக்கம் 25-26)

இதன் தொடர்பான இன்னொரு சம்பவத்தையும் நாம் பார்க்கலாம்.

## சம்பவம் 3

**கே.ஜவர்கலால் நேரு**

எழுத்தாளர்.
கனடா.

புலிகள் இந்தியப் போர் தொடங்கி இரண்டு மாதங்களில் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் இந்தியப் படைகளின் பிரசன்னமாகி விட்டது. இந்நிலையில் வெற்றிகரமாகப் பின்வாங்கிய விடுதலைப் புலிகளின் படையணிகள் தமிழீழத்தின் இதயபூமியாம் மணலாற்றில் நிலைகொண்டன. ஒரு சில ஆயிரம் விடுதலை வீரர்களை, அதிலும் முழுமையான இராணுவப் பயிற்சியின்றி, வெறுமனே உள்ஞர் பயிற்சியை மாத்திரம் பெற்றிருந்த பல நூற்றுக் கணக்கான விடுதலைப் புலிகளையும் உள்ளடக்கிய ஈழத்தமிழ் மக்களின் மேல் சுமார் ஒரு இலட்சத்து இருபதினாயிரம் இந்தியப் படைகள் நடத்திய தாக்குதலினால் யாழ் குடாநாடு அல்லோலகல்லோலப்பட்டது. இதன் மூலம் அப்பாவிப் பொதுமக்களின் இழப்பு அதிகமானது. இதனால் நகர்ப்புற கெரில்லாத் தாக்குதல்களை மட்டுப்படுத்திவிட்டு காட்டுப்புறமான மணலாற்றிற்கு விடுதலைப் புலிகள் வெற்றிகரமாகப் பின்வாங்கியிருந்தனர்.

எனினும் இராணுவரீதியாக பல நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்தவாறே போராடிக்கொண்டிருந்தார்கள். தலைவர் பிரபாகரன் இருக்கும் இடத்தைச் சுற்றிவளைத்த ஆயிரக்கணக்கான இந்திய இராணுவத்தினரின் முற்றுகைக்குள் சில நூற்றுக்கணக்கான விடுதலைப் புலிகளும் தலைவரும் சிக்கியிருந்தார்கள். உணவின்றி, நீரின்றி, மாற்று உடையுமின்றி, சொல்லமுடியாத துன்பத்திலும் தளராத உறுதியோடு பரிச்சயமற்ற காட்டுப் பகுதியில் இடைவிடாது நகர்ந்துகொண்டிருக்கும் இந்திய இராணுவத்தின் கண்களில் சிக்காமல் புலிகளின் முகாம்களை இடம் மாற்றியவாறே இருந்தனர். கண்ணுக்கெட்டிய தூரத்திற்கு மாத்திரமல்ல கைக்கெட்டிய தூரத்திலும் இந்திய இராணுவத்தின் நடமாற்றம் காணப்பட்டது. ஆனாலும், அடர்ந்த மணலாற்றுக் காடுகள் புலிகளுக்கு பாதுகாப்பான கவசமாகவே இருந்தன.

இந்த நிலையில் இவ்வாறு ஏற்பட்ட பாரிய நெருக்கடியைத் தீர்த்து இயக்கத்தைப் பாதுகாப்பதற்காக இந்திய அரசுடன் பேச்சுவார்த்தைக்குப் போவதுதான் ஒரே வழியென சில மூத்த தலைவர்கள் தொலைதொடர்புச் சாதனங்கள் மூலம் தலைவருக்குச் செய்தி அனுப்பினார்கள். இதில் குறிப்பிட்டுச்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நீர்கள்?

பிரிட்டிஷ் அரசாங்கம் யாரைப் 'பயங்கரவாதி' என்று சொல்கிறதோ அவனே உண்மையான ஐரிஸ் தேசியப் போராளி' என்று ஐரிஸ் தலைவர் ஒருவர் குறிப்பிட்டார். அதுபோல, இலங்கை அரசு என்னைத் தேடப்படுபவர்களில் முதன்மையானவராகக் கருதினால், அது நான் உண்மையான தமிழ்த்தேசியப் போராளியென்பதையே உணர்த்துகிறது. அவ்வாறு தேடப்படும் நபராக இருப்பதில் பெருமைப்படுகிறேன்.



சிங்கள இராணுவத்தின் கரங்களில் பிடிபடுவதைவிட மரணமடைவது மேலானது என்று கருதுகிறீர்களா?

உயிரோடு எதிரிகள் கைகளில் பிடிபடுவதைவிட கௌரவமாகச் சாவதையே விரும்புகிறேன்.

'சண்டே'(Sunday) ஆங்கில வார ஏடு.
11-17 மார்ச் 1984.

> "தமிழ்மக்களின் நம்பிக்கைக் குரிய பிராகாசமான நட்சத்திரம், தான் என்பதை பிரபாகரன் மீண்டும் நிரூபித்திருக்கின்றார்."
>
> ஆனையிறவு வீழ்ச்சிக்குப்பின்
> Hindutan Times.

சொல்லக்கூடியது கேணல் கிட்டுவினால் அனுப்பப்பட்ட இவ்வாறான செய்தியும் ஒன்று. இக்காலத்தில் இந்தியாவில் வீட்டுக் காவலிலும் பின்னர் சிறையிலும் கிட்டு தடுத்து வைக்கப்பட்ட நிலையிலும் றோ அதிகாரிகளும் இந்தியக் காவல்துறை அதிகாரிகளும் தொடர்ச்சியாக கிட்டுவுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுக்கொண்டே இருந்தனர். இதனால், கிட்டுவும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சமயோசிதமாக பயனில்லாத பேச்சுவார்த்தையில் பங்குபற்றியதோடு நிலைமைக்கு ஏற்றவாறு தலைவருக்குச் செய்திகளை அனுப்பியவாறே இருந்தார். போரின் வேகத்தைக் குறைக்கவும், தப்பியிருக்கும் சில நூற்றுக் கணக்கான புலிகளை மட்டுமல்ல, தலைவரையும் சூழ்ந்திருக்கும் நெருக்கடியில் இருந்து காப்பாற்றவே இவ்வாறான செய்தியை றோவின் விருப்பத்திற்கு ஏற்றவாறு கிட்டு அனுப்பியவாறே இருந்தார். ஆனால், மணலாற்றுக் களத்தில் இருந்த தலைவரின் நிலைமையோ வித்தியாசமானது. கிட்டுவின் நிலைமையைப் புரிந்துகொண்ட தலைவரும் கைக்கெட்டிய தூரத்தில் வந்து கொண்டிருக்கும் இராணுவத்தைத் தாக்காது பேச்சுவார்த்தைக்குச் செல்வது தற்கொலைக்கு ஒப்பானது என்பதைப் புரிந்துகொண்டார். இதனால் கிட்டுவிற்குப் பதிலனுப்பாது இருந்தார்.

இவ்வாறான காலத்தில் தலைவருடன் இருந்த மேஜர் ஜேம்ஸ் உடனான உரையாடலில் தலைவரின் கூற்று இவ்வாறே அமைந்திருந்தது. 'இன்று இந்த இந்திய இராணுவம் போல் நாளை இதைவிடப் பெரிய இராணுவம் வந்தாலும் போர் போர்தான். கிட்டுவுடன் அவர்கள் பேசட்டும். இங்கே சண்டைதான். எனவே தொடர்ந்து கண்ணில் தென்படும் இந்திய இராணுவத்தினரைத் தாக்குங்கள்' என உறுதிபடக் கூறினார். கைக்கெட்டிய தூரத்தில் இருக்கும் இந்திய இராணுவத்துடன் சமரசமா, சண்டையா? சளைக்கவில்லை. இடைவிடாத போர். இறுதியில் இந்திய இராணுவம் பின்வாங்கி ஓடியது.

இவ்வாறான காலகட்டத்தில் தலைவருடன் இருந்த கேணல் விதுசாவின் அனுபவத்தை இவ்விடத்தில் நாங்கள் பார்க்கலாம்.

## சம்பவம் 4

'அப்பொழுது எங்களுக்கான வழங்கல், பாதைகள் ஒவ்வொன்றாக எதிரியால் அடைக்கப்பட்டதால், மருந்துப் பொருட்கள் கூட இல்லாமல் நாங்கள் சிரமப்பட்டோம். ஒரு சாதாரண பனடோல் கூட எங்களுக்குக் கிடைப்பது அரிதாக இருந்தது. சண்டையிடுவதற்கு ரவைகள் இல்லை. உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு. பன்றி தோண்டிய மொட்டை எனச் சொல்லப்படும் இடங்களுக்கு நீண்ட தூரம் நடந்து சென்று அங்கிருக்கும் தண்ணீரை எடுத்து வந்து சுடவைத்துக் குடிக்கும் அளவிற்கு தண்ணீர் பஞ்சம் நிலவியது'. இவ்வாறு நாங்கள் பலவித நெருக்கடிகளுக்குள் இருக்கும்போது நிகழ்ந்த ஒரு சம்பவத்தைக் கூற விரும்புகின்றேன்.

தலைவர் அவர்களுக்கு ஒரு செய்தியைக் கிட்டண்ணா அனுப்புகின்றார். 'நீங்கள் தமிழீழத்தின் உயிரானவர். உங்க

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ளது உயிரைப் பாதுகாப்பது முக்கியமாகின்றது. நீங்கள் இப்போது இருக்கும் இடத்தைவிட்டு மாறி வேறிடம் செல்லுங்கள். அப்படி இல்லையென்றால் எதிரியுடன் ஒரு சமாதானத்திற்கு நீங்கள் போக வேண்டி இருக்கும்', என்பதே அந்தச் செய்தி. அதைக் கேட்டவுடன் அண்ணைக்கு மிகுந்த கோபம் வந்துவிட்டது. அவருடைய முகத்தில் கோபம் வெளிப்படையாகத் தெரிகிறது. அவர் எங்களை அழைத்துப் பேசுகிறார். நாங்கள் அப்போது இவ்வளவு முதிர்ச்சியோ அனுபவமோ உள்ளவர்கள் அல்ல. நாங்கள் இந்தக் காட்டிற்குள் இருந்து விலங்குகளைச் சுட்டுச் சாப்பிட்டாவது இந்தப் போராட்டத்தை நடத்துவோம் என்ற நம்பிக்கை உள்ளவர்கள் மட்டும் என்னுடன் நில்லுங்கள். சாப்பாடில்லாமல், தண்ணீரில்லாமல், இந்தக் காட்டிற்குள் நின்று சண்டைபிடிக்க என்னால் முடியாது என்று நினைப்பவர்கள் முன்னே வந்து சொல்லுங்கள். அப்படிச் சொல்பவர்களைப் பாதுகாப்பாக உங்கள் பெற்றோரிடம் கொண்டுபோய் சேர்ப்பது என்னுடைய பொறுப்பு. என் ஒருவனுடைய உயிர் மட்டுமே பெரிதென நினைக்காதீர்கள். இந்தக் காட்டிற்குள் ஒரு மஞ்சள் காமாலை வருத்தம் வந்து எனக்கெதுவும் நடந்து விட்டால் பிறகெங்கே நீங்கள் என்னைப் பாதுகாக்கப்போகிறீர்கள்... இது ஒரு மனித உயிர். வாழ்வதானால் இப்படித்தான் வாழவேண்டும். என்னைப் பாதுகாக்கவேண்டும் என்பதில் நீங்கள் ஏன் இவ்வளவு கவனம் எடுக்கின்றீர்கள்? எனக் கடுமையாகப் பேசினார்.

அந்தக் காலகட்டத்தில் இரண்டு மூன்று நாட்களாக இரவிரவாக யோசித்து அண்ணை ஜொனி கண்ணிவெடியைக் கண்டுபிடித்தார். இதற்கு முற்பட்ட காலப்பகுதியில் மணலாற்றுக் காட்டுப் பகுதியில் இந்திய இராணுவம் எண்ணுக்கணக்கற்று மொய்த்திருந்தது. ஒரு தடவை நாங்கள் இருந்த இடத்தில் இருந்து 25 மீட்டர் தூரத்திற்குள் இராணுவம் வந்துவிட்டது. மிகப்பலமான காயக்காரர் இருவர் அப்போது எம்முடன் இருந்தனர். அண்ணை எங்களோடு இருந்த படியால் அவருக்கு ஏதாவது நடந்துவிடுமோ என நாங்கள் பயந்தோம். ஆனால், அவர் தனது உயிரைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. அந்த நிலைமையை மிகத் திறம்பட செயற்பட்டுச் சமாளித்தார். அவரைப் பாதுகாப்பான இடத்திற்கு வந்துவிடும் படி காட்டிற்கு வெளியே இருந்து அழைப்புகள் வந்தவாறே இருந்தன. ஆனால் அவர் கடைசிவரையிலும் தனது உயிரைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. இதை ஏன் சொல்கிறேன் என்றால், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நம்பிக்கை தளராத இலட்சியப் பற்றுறுதியுடைய தலைமையை நாம் கொண்டிருக்கின்றோம் என்பதை உணர்த்தவே.

(கேணல் விதுசா, செவ்வி, உலகத்தமிழர் பத்திரிகை செப்டெம்பர் 26, 2003, பக்கம் 29)

1970ம் ஆண்டுகளில் தனது பதினாறாவது வயதில் ஆயுதப் போரினை தமிழ் மக்களின் விடுதலைக்காக வரித்தெடுத்த தலைவர் பிரபாகரனின் வாழ்க்கையில் இது போன்ற பல சம்பவங்களை நாம் காணலாம். தனது சிறு வயதிலேயே பல புராண இதிகாசங்களையும், சரித்திர மற்றும் வீரதீரக் கதைகளையும் தேடிப் படித்த தலைவரின் வாழ்க்கை இன்று சரித்திரம் போற்றும் சாதனையாளராக அவரை மாற்றிவிட்டது. இவ்வாறு அவர் மாறியதற்கு மேற்கூறப்பட்ட சம்பவங்களில் அவர் காட்டிய உறுதியும் நிதானமும் காரணமாகியது.



இவ்வாறான துணிவும் உறுதியும் ஒரு சத்திரியனுடைய கர்மங்களாக பகவத்கீதையில் குறிப்பிடப்படுகின்றது.

மகாபாரதம் குருகுல அரசர்களாகிய பாண்டவ கௌரவர்களிடையே நடந்த பெரும் போராகும். மனித வாழ்க்கைக்குத் தேவையான பல பாடங்களை பாடல் வடிவில் கொண்டிருப்பது இந்த நூலாகும். இந்த நூலின் இறுதியில் பாண்டவ கௌரவ சேனைகளிடையேயான யுத்தத்தின் ஆரம்பத்தில் போர்க்களத்தில் தடுமாறிய அர்ச்சுனனிற்கு கிருஷ்ணர் கூறு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அகவை 50

# தனியரசு நோக்கி...

## தமிழீழ விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு

1984 இன் ஆரம்பப்பகுதியில் முதன் முதலாக பெண்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப் போராட்டத்தில் மறைமுகமாக ஆதரவு நல்கத் தொடங்கினார்கள். பின்பு தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் அனுமதியுடன் ஆயுதப் பயிற்சி பெற்று இந்திய - தமிழீழப் போர் 1987 ஐப்பசி 10 இல் ஆரம்பமாகிய போது நேரடியாக யுத்தமுனைக்குச் சென்று பல வீர சாதனைகளை இன்று வரை படைத்து வருகிறார்கள்.



விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்புக் குறித்து தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தெரிவிக்கையில், “எமது சமூகத்தின் சனத்தொகையில் பெரும்பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத்தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுதலைப் போராட்டத்தை ஒரு தேசியப் போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப் படுத்தியது. பெண்களை அரசியல் மயப்படுத்தி போராட்டத்திற்கு அவர்களை அணி

வதே பகவத்கீதையாகும். ஆயிரக்கணக்கான சமஸ்கிருத சுலோகங்களினால் அமைக்கப்பட்ட இந்நூலினை ‘செய்’ என்னும் இரண்டு சொற்களில் அடக்கிவிடலாம் என்பது பல அறிஞர்களின் கருத்தாகும். போருக்கென்று களத்திற்கு வந்த அர்சுனன் தனது காண்டீபம் என்னும் வில்லினை கீழே போட்டு போரிட மறுத்தபோது அவனது கடமையை உணர்த்தியது தான் பகவத்கீதையாகும். ஆனால் 30 ஆண்டுகளுக்கு மேலாக தனது கொள்கையில் சிறிதும் தடுமாற்றமின்றி வாழும் பிரபாகரனது வாழ்க்கையும் கீதையைப் போன்ற ஒரு பாடமாகின்றது.



‘எதிரிக்கு அஞ்சாது வீரத்தோடு பாய்ந்து தாக்கவல்லவன் சூரத்தன்மை உடையவனாகிறான்’. அச்சத்தை அறியாத மனநிலை ‘தேஜஸ்’ அல்லது துணிவெனப்படுகிறது. எவ்வளவு ஏராளமாக உழைத்தாலும், களைப்பை அறியாத மனநிலை திருதி அல்லது உறுதி எனப்படுகிறது. காலதேச வர்த்தமானம் அறிந்து எதிரியை வல்லமையோடு தாக்கக் கூடிய நிலைக்குச் சாதுரியம் என்று பெயர். திடீரென்று எதிரிவந்து தாக்குவானாகிலும் மனம் தளராது நொடிப் பொழுதில் தூக்கி வினை செய்வது சாதுரியமாகிறது. சில வேளைகளில் பின்னோக்கிச் சென்று எதிரியைப் பின்பு வளைத்து அடிப்பதும் சாதுரியமாம். ஆனால் பகைவனுக்குப் பயந்து போர்க்களத்தினின்று புறங்காட்டி ஓடிப் பிழைக்க நினைப்பவன் சத்திரியனாகான். பகைவனுக்கு அடிமைப் படுவதைவிட வீரத்துடன் எதிர்த்து நின்று அடிபட்டுச் சாவது மேல். குடிகளை முறையாக ஓம்புதலே தானமென்று சொல்லப்படுகிறது. வள்ளலாக இருந்து அவர்களுக்கு அரசன் யாண்டும் பொருளை வழங்கவேண்டும். மக்கள் நேர் கோடாவண்ணம் அவர்களை ஆளுதல் இறைமையாகிறது. இதற்கு ஈச்வர பாவம் என்பது மூலம். தலைவனாயிருத்தல் என்றும் இச் சொல் பொருள்படும். இரண்டு அல்லது மூன்று பேர்களுடன் சேர்ந்து வாழும் பொழுதும் ஒருவன் தலைவனாகத் திகழலாம். எப்பொழுதும் தலைவன் ஆவது தகைமையினாலேயாம். சுயநலம் கருதாது காரியத்தை நிர்வகிப்பவனும் அதை வெற்றிகரமாகக் கொண்டு சாதிப்பவனும் தலைவன் ஆகிறான்.

(பகவத்கீதை, அத். 18:44).

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பரந்துவிரிந்த தேசிய உணர்வு

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாடுகளையும் ஒழுக்க நடைமுறைகளையும் மீறிச் செயற்பட்டதனால், இயக்கத்தின் நடுவண் அமைப்பிலிருந்து (மத்திய குழுவிலிருந்து) இடைநீக்கம் செய்யப்பட்டு, அடிப்படை உறுப்பினராகச் சிலகாலம் இயங்கிவந்த உமாமகேஸ்வரன், தனது தோழர்களான சந்ததியார், ஊர்மிளா போன்றோரின் அறிவுரையைக்கேட்டு, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து விலகினார். அதனோடு, இயக்கச் செல்வாக்காலும் அறிமுகத்தாலும் பெற்ற தொடர்புகளுடன், இயக்க உடைமைகள் சிலவற்றைக் கைப்பற்றினார். அதுமட்டுமின்றி ஏற்கனவே பல்வேறு காலங்களில் இயக்கத்தினின்றும் விலகியவர்களையும் விலக்கப்பட்டவர்களையும் சேர்த்து, புதியதொரு குழுவாகத் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் என்னும் பெயரில் இயங்கி வந்தார்.

உமாமகேஸ்வரன் தமிழ்மக்கள் நலன்களுக்கான கொள்கைகளுக்கும் நடவடிக்கைகளுக்கும் முதலிடம் கொடாது தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிராகத் தனது குழுவை வளர்த்தெடுப்பதையே முதல் நோக்காகக் கொண்டு செயற்பட்டுவந்தார். ஆயினும் அதே காலத்தில் அவரது குழுவினால் ஆனைக்கோட்டையிலிருந்த சிறீலங்கா அரசின் காவலர் நிலையம் (பொலிஸ் நிலையம்) தாக்கப்பட்டு, அக்காவலர் நிலையத்திலிருந்து பல சுடுகலன்களும் கைப்பற்றிச் செல்லப்பட்டன.

அதே நேரத்தில், அத்தாக்குதல் பற்றித் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் சிலர் குறைகூறிக்கொண்டிருந்ததைச் செவிமடுத்த தலைவர் பிரபாகரன் அவர்கள் உடனடியாக, “சிறீலங்கா அரசுக்கெதிரான அந்தத் தாக்குதல் நிகழ்வு பாராட்டப்படவேண்டுமே தவிர, அதுபற்றி யாரும் குறைகூறக்கூடாது. அவர்களின் உண்மையான குறைகளைப்பற்றி வேண்டுமானாற் கூறுங்கள். ஆனால் அவர்களின் இனநல நோக்குடன்கூடிய நல்ல செயற்பாடுகளை இனிமேல் ஒரு போதும் குறைகூறாதீர்கள். நீங்கள் செய்யாத வேலையில் அவர்கள் அதைச் செய்திருக்கிறார்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்” என்று தமிழீழ விடுதலைக்கான போராட்டம் என்ற பரந்த மனப்பாங்கோடு, குறைகூறிய தனது இயக்க உறுப்பினர்களை மிகவும் கடிந்துகொண்டார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தை அழித்துவிடப் போவதாகச் சூளுரை எடுத்துக்கொண்டு செயற்பட்ட உமாமகேஸ்வரன் குழுவினர், தமிழர்களின் பொது எதிரியான சிறீலங்கா அரசின் படைகள்மீது தாக்குதல் நடத்தியதைத் தலைவர் பாராட்டியதானது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தின்பால் அவருக்கிருந்த நேரிய பார்வையையும், தமிழீழ விடுதலைக்காகப் போராடும் அனைவரையும் அரவணைத்துப்போக வேண்டும், எமது இனத்தில் ஒருமைப்பாடு ஏற்பட வேண்டும் என்ற அவரது பரந்த தேசிய உணர்வையுமே காட்டிநின்றது.



**வே.இளங்குமரன்**

பொறுப்பாளர்
தமிழீழக் கல்விக் கழகம்,
மூத்த உறுப்பினர்
தமிழீழ விடுதலைப் புலிகள்
தமிழீழம்.

தலைவர் பிரபாகரன் அவர்கள் தனக்குத் தீங்கு செய்தவர்கள் என்பதற்காகத் தமிழீழ விடுதலைப் போராட்டச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவந்த எவரையும் வெறுத்து ஒதுக்கிவிடவுமில்லை, விடுதலைப் போராட்டச் செயற்பாடுகளிலிருந்து விலகி அதற்கு மாறாகச் செயற்படுபவர்கள் தனக்கு வேண்டியவர்களாக இருந்தாலும் அவர்களை என்றும் அரவணைத்துக் கொண்டதுமில்லை.

‘புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்’

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# A VISION OF THE LIBERATION OF Tamil people

**It is a tragedy that members of my ethnic group, the Sinhalese, seem to have such difficulty in appreciating the problems faced by the Tamils. If my unqualified support for the struggle of the Tamil people to live with dignity, safety and without discrimination in the country of their birth, makes me a traitor, which Sinhala supremacists think I am, so be it. That is their problem.**

I have had a vision of the liberation of the Tamil people from Sinhala domination ever since I first visited Jaffna in the mid-1940s. It was then that I appreciated the disastrous effects of the Colebrook-Cameron 'Reforms' of 1833 which unified three separate states (kingdoms) and made them into one (Ceylon), and then centralised developmental and administrative power in Colombo for the convenience of the Colonial masters. This British colonial construct has been a disaster in Sri Lanka as has been similar arrangements in numerous former colonies.

Almost everyone, myself included, who has supported the Tamil cause, has focused on the discrimination of the Tamil people in language, education, employment, job opportunities and attempts to make them a minority even in the area (North and East) where they are a majority. These are undoubtedly serious violations of the democratic rights of people and must be condemned and reversed.

However, an equally serious problem that has not been focussed on, is the developmental neglect of the Tamil areas. To appreciate this, one need only travel from Colombo with its 5-star life and business opportunities to Jaffna (even before it was destroyed) and see its striking lack of development. One could pass through the Vanni (pre-1983) and wonder whether human life even existed there. Such was the degree of neglect of the 'periphery' - which encompassed the entire Tamil area.



Dr. Brian Senewiratne

Consultant Physician, Political Analyst. Australia.

An important consequence of this was that the Tamil North-East has been prevented from making any meaningful contribution to the economy. This has damaged not only the life and welfare of the people in this vast area but also the country as a whole which was deprived of considerable income because of policies based on ethnicity and political opportunism. Indeed on my very first visit to the area as a teenager, I told my very Sinhalese parents "Until this area is liberated from the clutches of the regime in Colombo, it will never develop". More recently, I have stated in numerous talks and publications on the Sri Lankan crisis "Until the keys to the development of the Tamil areas are

taken out of the hands of Sinhala politicians and put in the hands of the Tamils in the North and East, there will be no peace (or development) in Sri Lanka". One could call it a Federal State, a Confederal State or a Separate State. Words do not matter. What does is what they mean.

I said I had "a vision". In fact, I have had a series of visions. The first, as I have said, was when I first visited the Tamil areas and saw the appalling developmental neglect. My vision (and hope) was of people being freed from the stranglehold of Colombo, to develop the area they lived in, which was not short of resources or hardworking, intelligent, and very capable men and women.

As Sinhala political opportunists heaped load upon load of blatantly discriminatory acts on the Tamil people, my vision changed. It was now a vision of an area where people would cease to be second-class citizens, where they could speak their language, where their rich culture could flourish, where their children could get into universities without discrimination, and their people could compete for jobs on a level playing field.

As non-violent Tamil protests were met by Sinhala hoodlum violence, I had a vision that someone would whisper in the ears of the Tamils that non-violent protests do not work against thugs and hooligans and Governments prepared to unleash these hoodlums on peaceful protests. Gandhi-style protests do not work against the likes of Idi Amin, Suharto, Milosovic, or the Sri Lanka Armed Forces. Gandhi would have been blown off the planet by any one of them.

As the Sri Lankan government decided to bomb and shell its own people, I had a vision of someone telling the Sri Lankan government that the Tamils in the North and East were also citizens of the country and that it was not a responsible government that destroyed its own country and people.

As Sinhala soldiers acted like an army of occupation, I had a vision of a North and East where Tamils could live without the fear of having their homes, their properties, their businesses, market places, schools, places of worship and even their hospitals, reduced to rubble and then into dust. A vision of an area where women would feel secure that they would not be raped by every passing Sinhala hoodlum, some in uniform.

I had these visions, but whom does one take them to? Tamil politicians were not interested. With few examples, they could not conceive of a system of government based on regional autonomy. Seats in Parliament seemed adequate, cabinet positions even better.

Tamil politicians and political leaders must take full responsibility for the abysmal plight of the Tamil people from the dawn of Independence. A major problem has been that the Tamil leadership came from the same elitist group which also produced the Sinhala leadership. The Tamil leaders had more in common with Sinhalese leaders than with their own people. They had the same business and professional



**The world acted against the apartheid policy of the South African government which was very clearly an 'internal problem' of that country. With a degree of hypocrisy that beggars the imagination, it has failed to do so against the blatantly anti-Tamil discriminatory policy of the Sri Lankan (read 'Sinhala') State. Why?**

interests, they lived with them and socialised with them and had the same class-consciousness of the privileged people whose 'right' it was to be where they were. It is abominable that Tamil politicians were prepared to grovel at the feet of Sinhalese politicians and pick up whatever crumbs came their way. The most they ever did was to make fiery speeches which no one took any notice of, or sign a series of Pacts with the Sinhala leaders which one knew from past experience would not be honoured. Yet they went on and on pursuing a useless strategy, an exercise in futility.

What was clearly needed was to stand up to the Sinhala leaders on behalf of their people (the Tamil people) and do something about their fast-disappearing rights. Did they do so? There is no evidence that they did. Gandhi, Nehru, Mandela, and others were prepared to go to jail for their people. Would the Tamil politicians do the same for their people? Let alone going to

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

jail, when they were asked to sign a document by President Jayawardene which was a contravention of the mandate they had received from the Tamil people at the 1977 Election, they put their tail between their legs and meekly withdrew from parliament, essentially depriving the Tamil people of representation (not that they were doing much for them anyway in that 'House of Talk').

Then came the 1970s and the Tamil militants. What they did was to stand up to the Sinhalese and tell them that enough is enough. This is the contribution that Velupillai Prabakaran and his fellow militants have made. Were it not for the stance they adopted, Tamils would have not been second class citizens but probably third class citizens. They would be sitting, not at the negotiating table but grovelling under it to pick up whatever crumbs fell off it. Is this an endorsement of all the actions of the LTTE? No, it is not. It is a factually correct statement of what happened. Am I 'pro-LTTE' as the Sinhala racists and, alas, even some Tamils say I am? I am neither pro- nor anti- LTTE. I do not need to be. I am, however, very 'pro-the cause of the Tamil people' to live with dignity, safety and without discrimination. Any individual or any group which supports these long-suffering people will have my support. I hope this clarifies the stance adopted by myself and several other Sinhalese such as Adrian Wijemanne and my uncle the late Edmund Samarakkody (and even some non-Sri Lankans), to Sinhala supremacists and racist bigots who have attacked us over two decades.

It has been claimed that the Tamil Tigers are the **cause** of the problem. I would argue that they are the **result** of the problem. The 'problem' is an attempt to make multicultural, multiethnic, multireligious Sri Lanka into a Sinhala-Buddhist nation. If that is the Sinhala objective (and of that, there can be no doubt), then there is no alternative to the establishment of a separate Tamil nation. In one of my recent books 'Self-determination for the Tamils', I said that it is the denial of this fundamental right that has been responsible for some of the bloodiest and most intractable conflicts across the world. Sri Lanka is a glaring example.

There is nothing more powerful than an idea whose time has come. The time has come for freeing the Tamil areas from Sinhala domination. Liberation of the Tamil people is no longer a vision, it is a reality. A de facto reality but a reality nonetheless. Those who do not know what I am talking about should visit the Vanni and see what is being done and has been done despite every possible obstruction by the Sri Lankan government, the Cease-fire Agreement notwithstanding. They will see an area where the writ of the Sri Lankan government does not run and has not run for over a decade. They will see an area which has its own army, police force, banks, schools, hospitals, law courts and much more. They will see a degree of efficiency and organisation which could well be exported to the chaotic Sinhala South and its incompetent politicians and bureaucrats wallowing in corruption and waste, Given



**If that is the Sinhala objective (and of that, there can be no doubt), then there is no alternative to the estab lishment of a separate Tamil nation.**

the horrendous destruction wrought on the Tamil area by the Sri Lanka Armed Forces, the achievement to date has been remarkable. This will take a quantum leap forward if a de facto state is made a de jure one

Those of us who have not had the courage to stay and support our people (the Tamil people are my people too) through their relentless trauma and suffering in the past two decades must surely have the interest to at least go and see what has been achieved. It is for the expatriates who have done precious little for the Tamil people to at least generate the necessary international pressure to compel the Sri Lankan government to see sense and not precipitate another blood-bath and inflict another round of destruction on the Tamil people. The world acted against the apartheid policy of the South African government which was very clearly an 'internal problem' of that country. With a degree of hypocrisy that beggars the imagination, it has failed to do so against the blatantly anti-Tamil discriminatory policy of the Sri Lankan (read 'Sinhala') State. Why?

● 19.Oct.2004

தமிழீழ ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

# தமிழ் மக்களின் விடுதலைக்கான தொலைநோக்கு

எனது இனக்குழுவைச் சேர்ந்த சிங்கள மக்கள், தமிழர்களால் முகம் கொடுக்கப்படும் பிரச்சனைகளைப் புரிந்து கொள்வதில் சிரமப்படுவதாகத் தோன்றுகின்றது. தாங்கள் பிறந்த நாட்டில் ஓரங்கட்டப்படாமல் கௌரவத்துடனும், பாதுகாப்புடனும் வாழ்வதற்கான தமிழ் மக்களது போராட்டத்துக்கு நான் அளித்துவரும் உரிய தகுதியற்ற ஆதரவானது, என்னை ஓர் இனப்பகைவனாக மேலாண்மைச் செருக்காளர்கள் நினைப்பார்களேயானால், அது அவ்வாறே இருந்துவிட்டுப் போகட்டும். அது அவர்களது பிரச்சனை.

1940களின் நடுப்பகுதியில் நான் யாழ்ப்பாணத்துக்கு எனது முதற்பயணத்தை மேற்கொண்டது முதற்கொண்டு எப்பொழுதும் சிங்கள வல்லாட்சி மேலாண்மையிலிருந்து தமிழ் மக்களின் விடுதலை பற்றி எனக்கு ஒரு தொலை நோக்கு இருந்தது. அப்பொழுது தான் குடியேற்ற நாட்டு எசமான்களால் தங்கள் நிர்வாக வசதிக்காக, ஏற்கனவே மூன்று தனி அரசுக்களாக (இராச்சியங்கள்) இருந்தவற்றை 'இலங்கை' என்ற பெயரில் ஒரு நாடாக்கி, அபிவிருத்தியையும், நிர்வாகத்தையும் 'கொழும்பு' என்ற மையம் நோக்கி ஒருமுகப்படுத்தப்பட்ட ஆட்சி முறை சார்ந்த அதிகாரத்தைக் கொண்டு வந்தார்கள். பெரிய அளவிலான முன்னைய குடியேற்ற நாடுகளிலிருந்தது போன்று, பிரித்தானியக் குடியேற்றக் கட்டமைப்பு சிறீலங்காவிலும் துக்ககரமான - அவலமான விளைவுகளையே ஏற்படுத்தியது.

தமிழர்களது இலட்சியத்துக்காக ஆதரவளித்துவரும் எம்மிற் பலருக்கு, தமிழ் மக்கள் மொழி ரீதியாகவும், கல்வி ரீதியாகவும், தொழில் ரீதியாகவும் ஓரங்கட்டப்படுவதிலேயே எங்களது கவனக் குவிப்பு இருந்தது. அவர்கள் பெரும்பான்மையினராக இருக்கும் வடக்கிலும், தெற்கிலும் அவர்களைச் சிறுபான்மையினராக ஆக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதும் எங்களது கவனத்தை ஈர்த்தது. இவை யாவும் மோசமான மக்களின் ஜனநாயக உரிமை மீறல்களாகும். இந்த மீறல்கள் கைவிடப்பட வேண்டியவை. நேர்மாறாக்கப்பட வேண்டியவை.

கவனத்திற்கு எடுக்கப்படாத அதே வேளை, மிகவும் மோசமான பிரச்சனை யாதெனில், தமிழ் பிரதேசங்களில் அபிவிருத்தி புறக்கணிக்கப்படுவதேயாகும். இதனை நேரிடையாகப் புரிந்து கொள்வதற்கு ஒருவர், தலை சிறந்த ஆடம்பரத்தோடும், வாழ்க்கை வசதிகளோடும், தொழில் சந்தர்ப்பங்களோடும் வாழ்ந்து கொண்டிருக்கும் கொழும்பு வாழ்க்கையை யாழ்ப்பாண மக்களின் அவலங்களோடு ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு, அது அழிக்கப்படுவதற்கு முன்னர், பயணம் செய்து அங்கு சென்று அங்கு நிலவும் மிகவும் மோசமான நிலையைப் பார்வையிட வேண்டும். 1983 ஆண்டுக்கு முன்னர் வன்னியூடாகப் போகும் போது அங்கு மனித உயிர்கள் வாழ்ந்திருக்கின்றனவா? இல்லையா? என வியக்கத் தோன்றும். அத்தகைய அளவுக்குத் தான் முழுத்தமிழ்ப் பிரதேசத்தையும் சுற்றியுள்ள அந்தப் புறப்பகுதிகளில் புறக்கணிப்பின் அளவு இருந்திருக்கின்றது.



**வைத்திய கலாநிதி பிறையன் செனவிரத்ன**

உடற்கூற்றியல் வல்லுனர்,
அரசியல் ஆய்வாளர்.
அவுஸ்திரேலியா.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

திரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழச் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தி இருக்கிறோம். தமிழர் வரலாற்றிலேயே நடைபெறாத புரட்சி ஒன்று தமிழீழத்தில் நடைபெற்றிருக்கிறது. காலம் காலமாக அடுக்களையில் அடங்கிப் போயிருந்த தமிழீழப் பெண்ணினம் இன்று ஆயுதம் ஏந்தி நிற்கிறது. சீருடை தரித்து நிற்கிறது. காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று விழிப்படைந்து, எமது போராட்டத்தின் ஒரு புரட்சிகர சக்தியாக எழுச்சி கொண்டு நிற்கிறது. வீரத்திலும் தியாகத்திலும் விடுதலையுணர்விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை எமது பெண் போராளிகள் தமது வீரசாதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ளனர்" என்றார்.

## விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு

நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் இளைய தலைமுறையினரின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகவே இளைய தலைமுறையினர் அறிவுள்ளவர்களாக, ஆற்றல் மிகுந்தவர்களாக, பொறுப்புணர்வு கொண்டவர்களாக வளர்க்கப்பட வேண்டியது ஒரு கட்டாயத் தேவை. எனவே அதற்கேற்ற வகையில் இளஞ் சிறார்களுக்குக் கல்வி ஊட்டப்பட வேண்டியதும் மிக முக்கியமான தொன்றாகிறது. ஆகவேதான் எமது தேச மாணவர்களின் நலன் கருதி, தமிழீழத் தேசியத் தலைவரின் ஆணைப்படி உருவாக்கப்பட்ட அமைப்புத்தான், விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு.

## தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை நடத்திய தமிழீழப் பொதுக்கல்வித்

இதன் முக்கிய பின் விளைவு காரணமாகப் பொருளாதாரத்திற்கு, வடக்கு கிழக்கு தமிழ்ப்பிரதேசங்கள் எவ்வித ஆக்க பூர்வமான பங்களிப்பும் செய்வதிலிருந்து தடுக்கப்பட்டன. இது இந்தப் பரந்த பகுதில் வாழும் மக்களின் வாழ்க்கையை மட்டுமல்லாது அவர்களது வாழ்க்கை நலத்தையும் சேதப்படுத்தியதோடு, ஒட்டுமொத்தமான நாட்டின் கணிசமான வருமானத்தையும் பாதித்துள்ளது. இவையெல்லாவற்றிற்கும் காரணமாய் அமைந்தது சிங்கள அரசாங்களால் கடைப்பிடித்து வரப்பட்ட இனத்துவேச



> தமிழ்ப்பிரதேசங்களின் அபிவிருத்திக்கான திறவுகோலைச் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து எடுத்து வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் கரங்களில் ஒப்படைத்தாலன்றிச் சிறீலங்காவில் அமைதியோ அபிவிருத்தியோ ஏற்படாது.

அரசியல் சந்தர்ப்பவாதத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த கொள்கைகளேயாகும். ஒரு பதின்ம வயதுச்சிறுவனாக இந்தப்பகுதிக்கு நான் முதன்முதலாக மேற்கொண்ட பயணத்தின் போது அங்கு நிலவிய அவலநிலை கண்டு எனது பெற்றோரிடம் நான் உண்மையாகவே கூறியது என்னவென்றால் "இந்தப் பகுதி கொழும்பிலிருக்கும் ஆட்சியின் இறுகப்பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டாலன்றி என்றுமே அபிவிருத்தி அடையாது". தமிழ்ப்பிரதேசங்களின் அபிவிருத்திக்கான திறவுகோலைச் சிங்கள அரசியல்வாதிகளிடமிருந்து எடுத்து வடக்குக் கிழக்குத் தமிழ் மக்களின் கரங்களில் ஒப்படைத்தாலன்றிச் சிறீலங்காவில் அமைதியோ அபிவிருத்தியோ ஏற்படாது என்று மிக அண்மைக்காலத்தில் சிறீலங்காவின் அரசியல் நெருக்கடி பற்றி எனது பல சொற்பொழிவுகளிலும் பிரசுரங்களிலும் தெட்டத் தெளிவாக தெரிவித்துள்ளேன். அதனை ஒருவர் சமஷ்டி ஆட்சியென்றோ, கூட்டாட்சியென்றோ, தனி நாடென்றோ வேண்டுமென்றால் அழைத்

தமிழ் ஆவணகாப்பகம் Tamileelam Archive

துக் கொள்ளலாம். சொற்கள் முக்கியமில்லை. சொற்களையிட்டு யாரும் கவலைப்படவும் தேவையில்லை. அவை எதைக்குறிக்கிறதோ அதனையே தான் அவை குறிக்கும்.

நான் ஒரு தொலைநோக்கு பார்வை கொண்டிருந்தேன், எனக்குறிப்பிட்டு இருந்தேன். உண்மையைச் சொல்லப்போனால் இது தொடர்பாக நான் வரிசையாகப் பல தொலைநோக்குகளைக் கொண்டிருந்தேன் என்று தான் சொல்ல வேண்டும். முதலாவதாக நான் கூறியது போல் நான் முதல்முதலாக தமிழ்பிரதேசங்களுக்குப் பிரயாணம் செய்து அங்கு நிலவிய கேவலமான அபிவிருத்திப் புறக்கணிப்பைக் கண்ணுற்றதால் ஏற்பட்டது. அங்கு வாழ்ந்த மக்கள் தாங்கள் வாழ்ந்து கொண்டிருந்த அந்தப்பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு வேண்டிய சகல தகைமைகளையும், ஏன் அவற்றை விடக்கூடிய தகைமைகளையும் கொண்டிருந்தனர். மூலவளங்களும், விடாமுயற்சியும், கூரிய அறிவும், ஆண்கள் பெண்கள் ஆகியோரிடையே இருக்க வேண்டிய வல்லமையும் அவர்களிடம் தேவைக்கு அதிகமாகவே இருந்தது. போதா நிலை எதுவுமற்ற சிங்கள சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் மிகத்தெளிவாகவும் முழுமையாகவும் இன வேறுபாடுகளையும் ஓரங்கட்டும் வகையில் அவர்கள் மேற்கொண்டிருக்கும் செயற்பாடுகளையும் தமிழ் மக்கள் மீது சுமைக்கு மேல் சுமையாக அவர்களால் குவிக்கப்படும் பாரப்பளுக்களையும் பார்க்கும் போது எனது தொலைநோக்கு மாறிவிட்டது. அம் மக்கள் இரண்டாந்தர பிரசைகள் என்ற நிலையிலிருந்து முற்று முழுதாக விடுபட்டு தங்கள் சொந்த மொழிபேசி, தங்களது கலாசார பண்பாட்டு நாகரீக விழுமியங்களைச் செழுமையாக வளங்கொழிக்க வைத்து வாழவேண்டும். தங்களது பிள்ளைகள் எவ்வித பாகுபாடுமின்றி பல்கலைக் கழகங்களுக்குச் சென்று கல்வி கற்கவும் தங்களுடைய மக்கள் சமதளப்பரப்புடைய விளையாட்டுக் களத்தில் தொழில்களுக்காக போட்டி போடும் ஆரோக்கியமான வாழ்வு வாழவேண்டும். இதுவே எனது தற்போதைய தொலைநோக்காகும்.

தமிழர்களுடைய சாத்வீக கண்டனங்களும், கண்டன அறிவிப்புக்களும், எதிருரைகளும், போராட்டங்களும் சிங்களப் போக்கிரிகளின் வன்முறையாளால் எதிர்கொள்ளப்பட்டன. இத்தகைய அமைதியான கண்டன முறைகளும் போராட்டங்களும் அரசாங்கங்களினால் திட்டமிடப்பட்டு, கயிறுருவி ஏவி விடப்படும் காடையர்களினதும் போக்கிரிகளினதும் வன்முறைக்கெதிராக எதுவும் செய்யவியலாது என்ற உண்மையை யாராவது தமிழர்களது காதுகளுக்குள் இரகசியமாகச் சொல்வார்கள் என்ற ஒரு தொலைநோக்கையும் கொண்டிருந்தேன். இடிஅமீன், சுகார்டோ, மிலோசோவிச் அல்லது சிறீலங்காவின் அரச படையினர் போன்றோருக்கு எதிராக காந்தி முறை எதிர்ப்புக்களும் போராட்டங்களும் பயனளிக்காது. இவர்கள் எவராவது ஒருவரால் காந்தி இப்பூமிக்கோளிலிருந்து அப்பால் ஊதிவீசப்பட்டிருப்பார்.

தனது சொந்த மக்கள் மீது குண்டுகளையும், ஏவுகணைகளையும் சரமாரியாகப் பொழிய சிறீலங்கா அரசாங்கம் முடிவுசெய்த போது, வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களும் இந்நாட்டுப் பிரசைகளே என்றும் தமது சொந்த நாட்டையும் மக்களையும் அழிப்பது ஒரு பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தின் செயற்பாடல்ல



இடிஅமீன், சுகார்டோ, மிலோசோவிச் அல்லது சிறீலங்காவின் அரச படையினர் போன்றோருக்கு எதிராக காந்தி முறை எதிர்ப்புக்களும் போராட்டங்களும் பயனளிக்காது.

என்றும் யாராவது சிறீலங்கா அரசுக்கு சொல்வது போன்ற ஒரு தொலைநோக்கு எனக்கு இருந்தது.

சிங்கள அரசபடையின் ஆக்கிரமிப்புப் படைபோல் செயற்படும்போது வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்கள் தங்கள் வீடுகளையும், சொத்துக்களையும். வியாபாரங்களையும், சந்தை இடங்களையும், கல்லூரிகளையும், வணக்க தலங்களையும், அவர்களுடைய மருத்துவமனைகளும் கூட சூறையாடப்பட்டு, இடிந்த கட்டிடக் கூளமாக்கப்பட்டு தூசுப்படலமாக்கப்பட்டது எதுவுமில்லாமல் வாழக்கூடிய சூழல் ஏற்பட வேண்டுமென்ற ஒரு தொலைநோக்கு எனக்குண்டு.

ஒரு பிரதேசத்துப் பெண்கள் தங்களைக் கடந்து செல்லும் ஒவ்வொரு சிங்களப்போக்கிரியாலும் (சிலர் சீருடையுடன்) கற்பழிக்கப்படாமல் பாதுகாப்பு உணர்வுடன் வாழக்கூடிய நிலைபற்றியும் எனக்கு ஒரு தூரநோக்குண்டு.

என்னிடம் இத்தகைய தூர நோக்குகள் உள்ளன. ஆனால் இவற்றை யாரிடம் கொண்டு செல்வது. தமிழ் அரசியல் வாதிகள் இவை பற்றி எவ்வித அக்கறையும் கொண்டிருக்கிறார்கள் இல்லை. சில உதாரணங்களோடு, அவர்களால் பிரதேச தன்னாட்சி உரிமையை

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# அகவை 50

தேர்வில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரன் 1993 மாசி 13 இல் வெளியிட்ட அறிக்கையில் 'மனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கல்வி ஆதாரமானது. ஆணிவேர் போன்றது. சமுதாய விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் செயபாட்டுக்கும் கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்க வேண்டும். இன்று தமிழீழத்தில் கல்வித்துறை சீரழிந்த நிலையில் உள்ளது. தமிழரின் கல்வியைத் திட்டமிட்ட வகையில் சிறீலங்கா அரசு புறக்கணித்து வருகிறது. எத்தனையோ நெருக்கடிகள் இடர்பாடுகளை எதிர்கொண்டு எமது மாணவர் சமூகம் கல்வியை கற்க வேண்டியிருக்கிறது. தமது ஆர்வத்தினாலும் திறமையினாலும் கடும் உழைப்பினாலும் கல்வி கற்றுப் பொதுத் தேர்வுக்கு தயாரானாலும் உரிய காலத்தில் அவை நடைபெறுவதில்லை. தேர்வு நடைபெறும் காலங்களிலும் அரச படைகள் அமைதியைக் குலைத்து விடுகின்றன. இத்தனை தடைகளையும் தாண்டித்தான் எமது மாணவர்கள் தேர்வுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தர தேர்வுக்கு ஈடாக முதல் தடவையாக தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவை சிறப்புற நடாத்தி முடித்திருக்கிறது. இந்த முயற்சியை நான் மனப் பூர்வமாக பாராட்டுவதுடன் இத் தேர்வில் தோற்றிய தேர்ச்சி பெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்' என்று கூறியிருந்தார்.

அடிப்படையாகக் கொண்ட அரசாங்க முறையை அவர்களால் எண்ணிப்பார்க்க முடியவில்லை. நாடாளுமன்ற ஆசனங்களும் அதனை விட மந்திரிப்பதவிகளும் அவர்களுக்கு போதுமானவை போல் தோன்றுகின்றன.

சுதந்திரம் கிடைத்ததிலிருந்து தமிழ் மக்களின் படுபாதாள அவல நிலைக்கு, தமிழ் அரசியல் வாதிகளும் அரசியல் தலைவர்களுமே முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதில் நாம் எமது கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டிய ஒரு பாரிய பிரச்சனை என்னவென்றால் எந்த உயர்ந்தோர் குழாம் சிங்களத் தலைமைத்துவத்தை உருவாக்கியதோ அதே குழாமிலிருந்தே தமிழ் தலைமைத் துவமும் வந்தது. தமிழ்த் தலைவர்களுக்கு தங்களது மக்களோடு தங்களுக்கு இருக்க வேண்டிய பொதுவான பிணைப்புக்களை விடச் சிங்களத் தலைவர்களுடன் கூடுதலாக ஒத்துப்போக பல பிணைப்புக்கள் இருந்தன. அவர்கள் இரு சாராருக்கும் வியாபார தொழில் பிணைப்பு அக்கறைகள் போன்றவை ஒன்றாகவே இருந்தன. அவர்கள் அவர்களுடனேயே வாழ்ந்தார்கள். அவர்களுடனேயே சமுதாயம் சார்ந்த கூட்டு வாழ்வில் ஈடுபட்டார்கள். அவர்கள் இருக்கும் நிலையின் உரிமையினால் அவர்கள் சிறப்புரிமை பெற்ற மக்களின் முதற் தர மேம்பாட்டிற்கான உணர்வு நிலையிலே இருந்தார்கள். சிங்கள அரசியல் வாதிகளின் பாதங்களில் மானங்கெட்ட வகையில் அஞ்சி அஞ்சி அடிமைகள் போல் கீழ்ப்படிந்து, கிடைக்கும் துண்டு துணுக்குகளைப் பொறுக்கி எடுக்கும் தமிழ் அரசியல்



வாதிகளின் நடைமுறை பழக்கம் அருவருக்கத்தக்கது. என்றுமே அவர்கள் செய்த ஆகப்பெரிய விடயங்கள் என்னவென்றால், நெருப்புமிழ்கின்ற சொற்பொழிவுகளை ஆற்றியதும், சிங்களத் தலைவர்களுடன் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டதும்தான் என்பதை கடந்த காலத்தங்களது அனுபவம் மூலம் தமிழ் மக்கள் அறிவார்கள். அவர்களால் செய்துகொள்ளப்படும் ஒப்பந்தங்கள் எதுவும் சிங்களத் தலைமைத்துவத்தால் ஒரு போதும் கௌரவிக்கப்படமாட்டாது என்பதையும் அவர்கள் அறிவார்கள். அவர்களது கனல்கக்கும் சொற்பொழிவுகளையும் எவ் ஒருவரும் கவனத்தில் எடுத்துக்கொள்ளவில்லை என்பதும் ஒரு யதார்த்தமான உண்மையாகும். எனினும் அவர்கள் தங்களது பயனற்ற சூழ்ச்சிமுறையை மீண்டும் மீண்டும் தொடர்ந்து கொண்டே இருந்தார்கள். சிங்களத் தலைவர்களை ஆண்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மையோடு எதிர்த்து நின்று விரைவாக மறைந்து கொண்டிருக்கும் தமது மக்களின் உரிமைகளை மீளப்பெறுவதற்கு அவர்கள் ஏதாவது செய்ய வேண்டும் என்பதே தெளிவாகவும் அவசரமாகவும் தேவைப்படும் ஒன்றாகும். அவர்கள் அவ்வாறு செய்தார்களா?, அவர்கள் அவ்வாறு செய்தார்கள் என்பதற்கு சான்றுகள் இல்லை. காந்தி, நேரு, மண்டேலா போன்ற வேறு பலரும் தங்கள் மக்களுக்காக சிறை செல்லத் தயாராக இருந்தார்கள். தங்கள் மக்களுக்காகத் தமிழ் அரசியல்வாதிகள் அவ்வாறு செய்வார்களா?, சிறைக்குப் போவது என்பதை ஒரு பக்கம் விடுவோம். சனாதிபதி செயவர்த்தனாவினால் ஓர் ஆவணத்தில் கையொப்பமிடும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட போது 1977ம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ் மக்களிடமிருந்து தாங்கள் பெற்றுக்கொண்ட ஆணையையும் மீறி அடக்கவொடுக்கமாக கீழ்ப் படிவைக்காட்டும் விதமாக தங்களது வாலை வளைத்து தங்களது கால்களுக்கிடையே வைத்துவிட்டு, நாடாளுமன்றத்திலிருந்து பின்வாங்கினர். இப்படிச் செய்வதன் மூலம் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை இல்லாததாக்கினார்கள். இப்படிச் சொல்வதனால் அவர்கள் அந்த ‘பேசும் வீட்டில்’ தமது மக்களுக்காக ஏதோ சாதனை செய்தார்கள் என்று சொல்லவில்லை.

பிறகு வந்தது 1970களிலும் தமிழ் தீவிரவாதமும் அவர்கள் செய்தது என்னவென்றால், சிங்களவர்களை ஆண்மையோடு எதிர்த்து நின்று, ‘போர் என்றால் போர்’ என்று அவர்களிடம் சொன்னது தான். இது தான் வேலுப்பிள்ளை பிரபாகரனும் சகதீவிரவாதிகளும் செய்த பங்களிப்பாகும். அவர்கள் இந்நிலைப் பாட்டை மேற்கொண்டிராவிட்டால் தமிழர்கள் இரண்டாந்தர பிரசைகளாக மட்டுமல்லாமல் முன்றாந்தர பிரசைகளாகவும் ஆக்கப்பட்டிருப்பார்கள். அவர்கள் முன்பு கூறியது போல் அமர்ந்திருப்பார்கள். ஆனால் பேச்சுவார்த்தை மேசையிலல்ல. கீழே அமர்ந்திருப்பார்கள். மேசையிலிருந்து விழும் எந்தத் துண்டு துணுக்குகளையும் பொறுக்கி எடுப்பதற்காக. தமிழீழ விடுதலைப்புலிகள் செய்யும் எல்லாச்செயல்களுக்கும் என் கூற்று ஓர் ஏற்பிசைவா என்று யாரும் கேட்கலாம். அல்ல, அப்படி அல்ல. எது நடந்தது என்பது பற்றிய ஓர் உண்மை நிகழ்ச்சியே சரியான கூற்றாக அமையும். சிங்கள தேசிய வாதிகளில் சிலரும், தமிழர் சிலரும் கூறுவது போல் நான் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவனா, நான் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானவனும் அல்ல. எதிரானவனுமல்ல. எனக்கு அவ்வாறு இருக்க வேண்டிய அவசியமும் கிடையாது. தமிழ் மக்கள் இன ஓரங்கட்டப் படுவதற்கு ஆளாகாமல் கௌரவத்துடனும் பாதுகாப்புடனும் வாழுவதற்கான தமிழரது இலட்சியத்தை ஆதரிப்பவன் நான். நீண்டகாலமாகத் துன்பத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் இம் மக்களை ஆதரிப்பவர்களுக்கும் எனது ஆதரவு கிடைக்கும். என்னாலும், அட்ரியன், விஜெய மானேயினாலும் எனது மாமனாகிய காலஞ்சென்ற எட்மன் சமரக்கொடியினாலும் இலங்கையர் அல்லாத வேறு சிலராலும் கூட எடுக்கப்பட்ட இந்நிலைப்பாட்டால் எங்களைக் கடந்த இருபது வருடங்களாக தாக்கி வருபவர்களான உச்ச உயர்நிலை மேலாண்மையுடைய சிங்களவர்களுக்கும், இனவாத குருட்டுப்பிடிவாதம் உடையவர்களுக்கும் இதனால் தெளிவு ஏற்படுமென நான் நம்புகிறேன்.



பிரச்சனைகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகளே காரணம் என்று வாதிடப்படுகின்றது. அவர்கள் வெறுமனே பிரச்சனையின் விளைவுகளே என்று நான் வாதிடுவேன். பல் கலாச்சார, பல்லின, பல்மத நாடான சிறீலங்காவை ஒரு சிங்கள பௌத்த நாடாக மேற்கொள்ளப்படும் முயற்சி தான் உண்மையான பிரச்சனை. இது தான் சிங்களவரது நோக்கமாயின் (இதையிட்டு எவ்வித சந்தேகமும் இருக்கமுடியாது) தனியான தமிழீழம் அமைப்பதை விட வேறு மாற்றீடு கிடையாது. என்னுடைய அண்மைய நூல்களில் ஒன்றான “தமிழருக்கு சுயநிர்ணயம்” என்ற நூலில் இந்த அடிப்படை உரிமை மறுத்தலே உலகமெங்கும் நடைபெறும் எளிதில் கையாள முடியாத குருதி வெறியாட்டப் பிணக்குகளுக்கு காரணம் என்று நான் கூறியுள்ளேன். சிறீலங்கா இதற்கு ஒரு வெளிப் படையான உதாரணம்.

வரவேண்டிய காலத்துக்கு வரவேண்டிய கருத்தைப் போல் சக்தி வாய்ந்தது வேறு ஒன்றுமில்லை. சிங்கள மேலாதிக்கத்திலிருந்து தமிழ்ப் பிரதேசங்களை விடுவிக்கும் காலம் வந்து விட்டது. தமிழ் மக்களின் விடுதலை இனிமேலும் ஒரு ‘நோக்கு’ அல்ல. அதுவே கற்பனை இல்லாத மெய்மை. அது சட்டப்படி எவ்வாறாயினும் நடப்பின்படியும், யதார்த்தத்தின் படியும் அதுவே மெய்மை. நான் எதைப் பற்றிக் கூறுகின்றேன் என்பதை அறியாதவர்கள் வன்னிக்குச் சென்று சிறீலங்கா அரசாங்கத்தின் ஒவ்வொரு தடையையும் பொருட்படுத்தாமல் வெற்றிகரமாக அங்கு என்ன என்ன செய்யப்படுகின்றன என்பதையும் என்ன என்ன செய் யப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதையும் நேரில்

# அகவை 50

## தமிழீழ காவல் துறை

1991 கார்த்திகை 9ம் நாள் தமிழீழ மக்களின் நலன்களைப் பேணுவதை மட்டுமே நோக்கமாக வரித்துக்கொண்டு தோற்றுவிக்கப்பட்ட ‘தமிழீழ காவல் துறை’யினது செயற்பாடுகள் அதிகார பூர்வமாக தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் ஆரம் பித்து வைக்கப்பட்டது. தமிழீழ தேசி யத் தலைவரால் தோற்றுவிக்கப்பட்ட இக் காவல்துறை, அவரின் நேரடிப் பொறுப்பின் கீழ் செயல்படுகிறது. இக் காவற்துறையின் செயற்பாடுகள் பற்றி தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது “தமிழீ ழக் காவல்துறையினர் நல்லொழுக் கம், நேர்மை, கண்ணியம், கட்டுப்பாடு போன்ற சீரிய பண்புடையவர்களாக இருப்பார்கள். பொது மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பாங்குடன் சமூகநீதிக்கும் சமூக மேம்பாட்டுக்கும் உழைக்கும் மக்கள் தொண்டர்களாகவும் கடமையாற்றுவார்கள். எமது பண்பாட் டிற்கு ஏற்ற வகையில் மக்களொடு அன்புடனும் பண்புடனும் பழகுவார் கள். சமூக விரோத குற்றச் செயல்கள் எவற்றுடனும் சம்பந்தப்படாதவர்களா கவும் தேசப்பற்று மிகுந்தவர்களாகவும் 24 மணி நேரமும் பணியாற்றுவார்கள். தமிழீழ காவல்துறையைப் பொறுத் தவரை குற்றங்கள் நடந்து முடிந்தபின் குற்றவாளியைத் தேடிப்பிடித்து கூட் டில் நிறுத்துவது அதன் நோக்கமல்ல. குற்றங்கள் நிகழாதவாறு தடுத்துக் குற்றச் செயல்களற்ற ஒரு சமூகத்தைக்

பார்க்க வேண்டும். சிறீலங்காவின் ஆணை செயற்படாத ஒரு பிரதேசத்தை அவர்கள் அங்கே காண்பார்கள். கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகவே சிறீலங்காவின் ஆணை அங்கு செயறபடவில்லை. செல்லுபடியாகவில்லை. தங்களது சொந்த இராணுவப்படையையும், பொலீஸ் படையையும், வங்கிகளையும் பள்ளிக்கூடங்களையும், மருத்துவமனைகளையும், நீதிமன் றங்களையும் மேலும் பலவற்றையும் கொண்டுள்ள ஒரு பிரதேசத்தை அங்கு காண்பார்கள். அங்கு வல்லமையையும் அமைப்பாண்மையையும் காண்பார்கள். இலஞ்சத்திலும், ஊழ லிலும், விரயத்திலும் புரளும் திறமையற்ற அரசியல்வாதி களாலும் ஒருமுக மைய ஆட்சிக் கோட்பாட்டாளர்களாலும் ஒழுங்கற்று குழப்பமாக இருக்கும் சிங்களத் தெற்கிற்கு இவற்றை ஏற்றுமதி செய்யலாம்.

இது நாள் வரை சிறீலங்கா அரசபடையினரால் தமிழ் பிரதேசத்தில் உருவாக்கப்பட்டுள்ள படுபயங்கரமான அழி வுச்சாதனை கவனத்துக்குரியது. நடப்பின்படி இப்பொழுது

பிரச்சனைகளுக்கு
தமிழீழ விடுதலைப்புலிகளே
காரணம் என்று
வாதிடப்படுகின்றது.
அவர்கள் வெறுமனே
பிரச்சனையின் விளைவுகளே
என்று நான் வாதிடுவேன்.



தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள நாடு சட் டப்படி அவர்களது நாடாக்கப்படும் போது, இது ஒரு முன் னோக்கிய மொத்தப்பாய்ச்சலை எடுக்கும்.

எங்கள் மக்களோடு (தமிழ் மக்களும் எம்மக்களே) அவர் கள் அனுபவித்து வரும் கடுமை தணியா அடிவேதனையை உணர்ந்து, ஆதரிக்கத் துணிவில்லாத நாங்கள் அங்கு சென்று அங்கு என்னென்ன சாதிக்கப்பட்டுள்ளன என்பதை போய்ப்பார்ப்பதற்கு உண்மையிலே அக்கறை கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் மீது இன்னுமொரு சுற்று படுகொலைக் களரியையும் பேரழிவையும் சிறீலங்கா மேற்கொள்ளாமல் சரியான நோக்கத்தோடு யதார்த்த உண்மை நிலையைப் பார்க்கும்படி தூண்டத் தேவையான சர்வதேச அழுத்தத்தை சிறீலங்காமீது கொண்டு வரும் பொருட்டு புலம்பெயர்ந்த மக்களே தமிழ் மக்களுக்கு சிறியதொரு அருமந்த பங்களிப்பைச் செய்துளார்கள். தென் ஆபிரிக்காவில் நிகழ்ந்தது ஓர் உள்நாட்டுப் பிரச்சனை எனத் தெரிந்திருந்தும் தென் ஆபிரிக்க அரசாங்கத்தின் இன ஒடுக்கு முறைக் கொள்கைக்கு எதிராக உலகம் செயற் பட்டது.

கற்பனை கடந்த பண்புடன் கூடிய சிறிதளவு பாசாங்கோடு தானும் உலகம் ‘சிறீலங்கா’வினால் (‘சிறீலங்கா’ என்ற சொல் லை, “சிங்கள” என்று வாசியுங்கள்.) தமிழருக்கெதிராக கடைப்பிடிக்கப்பட்டுவரும் கடுமையான இனப்பாகுபாட்டுக் கொள் கைக்கு எதிராக அவ்வாறு செய்யத் தவறிவிட்டது ஏன்?

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அமைதியின் ஒளியில்...

● சந்தர்ப்பங்கள் வரும்போது நாம் சமாதான வழியை கடைப்பிடிக்க பின்நின்றதில்லை.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையொப்பமிடுகின்றார்.
Signing of 'Memorandum of Understanding' (MoU) on the 22nd of February, 2002.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவு ஆணையாளர் திரு. கிறிஸ் பற்றனுடன்...
With Mr Chris Patten, the Commissioner of the European Union (EU)'s (External Relations) on the 26th of November, 2003.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



நோர்வே வெளிவிவகார அமைச்சர் திரு. ஜோன் பீற்றர்சனுடன்...
With Mr Jan Petersen, Norway's Foreign Minister on the 11th of May, 2004.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



ஜப்பானிய சமாதான சிறப்புத்தூதுவர் திரு. யசூசி அஹாசியுடன்...
With Japanese peace special envoy Mr Yasushi Akashi on the 8th of May, 2003.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



நோர்வேயின் சமாதான தூதுக் குழுவினருடன்...
With Norwegian peace delecation.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



இலங்கையின் முன்னாள் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரைவ் ரெல்வ்செனுடன்...
With Major General (Retd.) Tryggve Tellefsen, former President, Sri Lanka Monitoring Mission (SLMM) on the 5th of March, 2003.



இலங்கை கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் துரோான் புருகொவ்டவுடன்...
With Major General (retd) Trond Furuhovde, President, Sri Lanka Monitoring Mission (SLMM).

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழ்த்தேசிய கூட்டமைப்பினருடன்...
With Tamil National Alliance (TNA) MPs on the 20th of April, 2004.



சிறீலங்கா முஸ்லீம் கொங்கிரஸ் தலைவர் திரு. ரவூப் ஹக்கீமுடன்...
With Mr Rauff Hakeem, leader of Sri Lanka Muslim Congress (SLMC) on the 13th of April, 2002.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு.பி.சந்திரசேகரனுடன்...
With Mr P.Chandrasekaran, leader, of the Upcountry People's Front (UPF) on the 20th of April, 2004.



மேல்மாகாண மக்கள் முன்னணித் தலைவர் திரு. மனோ கணேசனுடன்...
With Mr Mano Ganeshan, leader, Western Province People's Front on the 20th of April, 2004.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



நெதர்லாந்துப் பிரதிநிதி லெப்.கேணல் ஹென்றி ஹோஸ்ரிக்குடன்...
With Lt.Col. Henry Horstric, representative of the Netherlands.



கொழும்பு ஆயர் கென்னத் பெர்னாண்டோவுடன்...
With Rev. Fr Kenneth Fernando, Bishop Colombo.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# இமாலய வியப்பு

எல்லா வகையிலும் எம்மால் எட்ட முடியாத உயரத்திலுள்ளவர் பற்றி எழுதுவதற்கு இப்படியொரு வாய்ப்புக் கிட்டியமை எனக்கு எதிர்பாரா தது. ஆனால் இவ்வாறு எழுதுவதன் மூலமா வது அவரை ஏதோவொரு வகையில் எட்டவோ, தொடவோ முடிந்தது பற்றி எனக்குப் பெரு மகிழ்ச்சி. இவற்றினைவிட நன்றியை, பிறர் நயப் பைக்கூட எதிர்பார்க்காத அவருக்கு இப்படியாவது எமது பெரு நன்றியை பேரன்பை செலுத்த முடிந் ததே என்கிற ஆறுதலும் கிட்டுகின்றது.

ஆனால் வாய்ப்பு கிடைத்தாலும் எதனை, எப்படியெழு துவது? எழுதுவோர்கள் அனைவருமே அவரை முழுமை யாக உணர்ந்தவர்கள் என்றாகுமா? எந்தவொரு தத்துவத்திற் கும், வடிவத்திற்கும், விளக்கத்திற்கும், இலக்கணத்திற்கும் உள் ளடக்க முடியாத மனிதர் பற்றி எப்படியெழுதுவது? எந்தவொரு வரலாற்றின் தீர்க்கமான கட்டங்களிலும் எந்தவொரு எதிர்பார்ப் பிற்கும் ஊகத்திற்கும் தோல்வியையும் எதிரிக்கு எப்பொழுதும் அதிர் ச்சியையும் நண்பருக்கு எப்பொழுதும் வியப்பையும் இடைவிடாது பிறப்பிக்கிறவர் பற்றி எவராலும் எழுத முடியுமா? ஆகவே எழுதுவது என்பது பயனற்ற முயற்சிதான். ஆயினும் எழுத முடியாது என்பது பற்றியாவது எழுத முடிகின்றதே என்பதுதான் எமது வெளிப்பாடாக அமைகின்றது. அதேவேளை இவ்வளவிற்கும் வியப்பூட்டுகிற பிரபா கரன் அதேவேளை எந்தளவிற்கு கீழிறங்கி சகமனிதர்களோடு, போராளிகளோடு, முதியோரோடு, நண்பர்களோடு சிறுபிள்ளைக ளோடு இயல்பாக அவர்கள் தள்ளிப் போகாமல் பார்த்து தன் னோடு அரவணைத்து அவர்கள் மகிழ்ச்சியடையும் வண்ணமும் தாழ்வுணர்ச்சியடையாமலும் அதேவேளை அவர்கள் தங்களை இப்பெரும் தலைவன் எவ்வளவு தூரம் மதிக்கின்றான் என்பதன் வழி தங்கள் மதிப்பினை உணர்கின்ற வகையிலும் பெறுகின்ற உளவியல் ஊக்க பரிமாணத்தினை எப்படி விளக்குவது? ஆனால் விளக்கத்தான் வேண்டுமென்பதற்காகவே இங்கே எழுத நேரிடு கின்றது.

எனது வியப்பினை, உள்ளத்தில் கிளர்ந்தெழும் உயரிய சிந் தனையோட்டத்தினை பெருமிதத்தின் பூரிப்பினை இப்பொழுது பட்டியலிட முனைகின்றேன். கீழ்மையடைந்து அடிமை வாழ்வை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அகவை 50

கட்டி எழுப்புவதே அதன் இலட்சியமாகும்" என்றார்.



குறிப்பு - சிங்கள காவல்துறையினரால் யாழ்.பொது நூலகம் எரித்துச் சாம்பலாக்கப்பட்ட நினைவு நாளான ஆனி 1ம் நாள் தமிழீழ காவற்துறையினர் தமது பயிற்சிகளைத் தொடங்கினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ நீதித்துறை

1993 ஆவணி 19 இல் தமிழீழ நீதித்துறையின் நீதியாளர் சட்டவாளர் ஆகியோரின் சத்தியப் பிரமாண வைபவத்தில் ஆற்றிய சொற்பொழிவில் "போராளிகள் நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் பொறுப்பை ஏற்றால் தமது பிரச்சினைகளை நேர்மையாக அணுகி சரியான முறையில் நீதி வழங்குவார்கள் என எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். போராளிகள் ஒரு உன்னத குறிக்கோளுக்காக தமது உயிரையும் துறக்கத் தயாராகவுள்ள இலட்சியவாதிகள் என்பதை பொதுமக்கள் அறிவார்கள். எனவே போராளிகளாகிய நீங்கள் நீதி நிர்வாகத்தை பொறுப்பேற்கும் பொழுது மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நீங்கள், நேர்மையுடனும் பொறுப்புணர்வுடனும் செயலாற்றுவீர்கள் என நம்புகிறேன். கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்பார்கள். இந்த உண்மையின் அடிப்படையில் நீங்கள் உலக அனுபவத்திலிருந்து நிறையக் கற்றுக்கொள்ள முயல வேண்

வாழ்கின்றோமே என்பதனை மறந்து சிதைந்து சீரழிந்து உதிரிகளாக பிளவுண்ட ஒரு தேசிய இனத்தினை எவ்வாறு அவர் ஒழுங்குபடுத்தினார்? ஒரு முகப்படுத்தி ஒன்றிணைத்தார்? இணைந்தவொரு ஆற்றல்மிக்க அரசியல் இராணுவ, இராசதந்திர வன்மை நிறைந்த அணியாக்கி அதனை சர்வதேச முன்றலிலே எவ்வாறு முன்னிறுத்தினார்? இங்கேதான் எனது வியப்பு விரிகின்றது. ஒரு தேசிய இனத்தின் இணைக்கும் பண்புகளே எம்மை பிரித்தன. இறை நெறியோ, மொழிப் பற்றோ, வதிவிட வாழ்வுரிமையோ எம்மை இணைக்கவில்லை. மாறாக பிரதேசவாதம் எம்மைப் பிரித்தன. மதம் எம்மை மாற்றானாக்கியது. இதன் விளைவென்ன? 1970 களில் தமிழரின் கதை. முடிந்த கதையென்றானது. தப்பித்தலே, தாயகம் விட்டு புலம் பெயர்வதே இறுதிவழியென்றானது. தமிழன் எனச் சொல்வதே இழிவானது. இந்நிலை நீடித்திருந்தால் என்னவாகியிருக்கும்? உலகின் அழிந்துபடுகிற மொழியாக தமிழும், அழிந்துபடுகின்ற இனமாகத் தமிழினமும் ஐ.நாவால் பிரகடனப்படுத்தப்படும் நிலையல்லவா தோன்றியிருக்கும்.

தலைவனே தேசியத்தின் வடிவமாகிவிட்டதைக் காண்கின்றோம். இதனாலே அவரை தேசியத்தின் தலைவன் என்கின்றோம்.

இக்கட்டத்தில்தான் பிரபாகரன் அவர்களின் வருகை நிகழ்கின்றது. அவர் மட்டுமல்ல இன்னும் பலரினதும் வருகையும் நிகழ்ந்தது. ஆனால் வரலாறு வழங்கிய வாய்ப்பினை அவர் ஒருவரால் மட்டுமே நிறைவேற்ற முடிந்தது. ஏனையோர் பின் வாங்கியதும், பழைய நிலைக்கு சென்றதுவும், அதற்குக் காரணங்கள் தேடுவதில் இன்றளவும் காலம் கழிப்பதுவும் எவ்வளவு நகைப்பிற்குரிய விடயம். இன்று பிரபாகரன் அவர்கள் தனது பணி மூலம் தமிழ்த் தேசிய இனத்தினை, ஒரு கட்டுக்கோப்பான தனது விடுதலைக்காக பல்வேறு தளங்களில் போராடுகின்ற நவீன தேசியங்களின் பண்புகள் பொதிந்த ஒரு முன்னணி அணியாக்கிவிட்டார். அதாவது அவரே தமிழ்த் தேசிய இனத்தினை இணைக்கிற காக்கிற மாபெரும் சக்தியாகிற அதேவேளை அவரே அதன் உருவகமுமாகி விட்டார். இதுவொரு வரலாற்றின் புதிய பரிமாணம். தலைவர்கள் தேசியப் போராட்டத்தினை முன்னெடுத்தமை பற்றி அறிந்திருக்கின்றோம். ஆனால் இன்றோ தலைவனே தேசியத்தின் வடிவமாகிவிட்டதைக் காண்கின்றோம். இதனாலே அவரை தேசியத்தின் தலைவன் என்கின்றோம்.

இதற்கான அவரது உழைப்பை, சிந்தனையை, ஏற்பாடுகளை, அவரை உயிரென மதித்து செயற்பட்டோர் சிந்திய குருதியை, பட்ட துயரை எவராலும் மறக்க முடியுமா? இன்று பிறநாட்டு அறிஞர், ஆர்வலர் என எல்லோரும் அவர் முன்னே பணிந்து அவரைக் காண்பதே பெரும் பேறென

தமிழ் ஆவணகாப்பகம்
Tamil Eelam Archive

நினைத்து மகிழும் நிலை தோன்றி இருக்கின்றது. இதற்கொரு வரலாற்றுக் காரணம் இருக்கின்றது. ‘மனிதம் தளிர்க்க வேண்டும், மானுடம் பிழைக்க வேண்டும்’ என்று முனைந்த வித்தகன் கார்ல் மார்க்சின் சமூக வளர்ச்சிக் கோட்பாட்டின் அடிப்படையிலான ஆண்டான் அடிமை சமூகக் கால கட்டத்திலே தோன்றிய அடிமைத் தளையை அறுக்க ஸ்பாட்டகஸ் போன்றோர் தோற்றிய போராட்டத்தின் இன்றைய தொடர்ச்சியாக அவர் காணப்படுகின்றார். மனிதகுல விடுதலை வரலாற்றின் இன்றைய இணைப் புச்சங்கிலி அவரே.

எனது அடுத்த இமாலய வியப்பு என்னவென்றால் அவர் இதுவரை காலமும் பயன்படுத்திய அனைத்து இராணுவ, அரசியல், இராஜதந்திர உத்திகள், அணுகுமுறைகள் எல்லாமே உள்ளடக்கிய போரியல் சிந்தனை முறைமை பற்றியது. எங்கிருந்து இத்தனை ஆற்றல்களையும் அவர் பெற்றார்? அலுப்பு சலிப்பற்று ஓய்வற்று இடைவிடாது சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் அவர் மன உலகம் பற்றியே நான் பெரிதும் வியக்கின்றேன். அவர் மன

எங்கிருந்து இத்தனை ஆற்றல்களையும் அவர் பெற்றார்? அலுப்பு சலிப்பற்று ஓய்வற்று இடைவிடாது சிந்தனையில் ஈடுபட்டிருக்கும் அவர் மன உலகம் பற்றியே நான் பெரிதும் வியக்கின்றேன்.

உலகத்தின் பல்வேறு தளங்களிலே சமகாலத்திலே பல்வேறு அரசியல் போராட்டங்கள், இராணுவப் போர்கள், இராஜதந்திரச் செயற்பாடுகள் எல்லாம் தனித்தனியாக நிகழ்த்தப்படுவதாக நான் உணர்கின்றேன். இத்தகைய அதி அற்புத ஆற்றல்கள் கைவரப் பெற்றவர் என்று சொல்வதைவிட அவ்வாற்றல்களை அவர் தனக்குள் கிளர்ந்தெழ வைக்கின்றார் என்பதே பொருத்தமானது. இவ்வாறாகும் அவர் பெரு மனிதராக ஏனையோருக்கு தான் தோற்று விடக்கூடாதென்பதற்காக இயல்பு வாழ்வைப் பேணுகின்ற விதமே இன்னொரு இமாலய வியப்பிற்குரிய விடயம். இச் சமநிலையைப் பேண அவரிடம் எவ்வளவு மனத்திடம் வேண்டும். இன்னொரு அதிசயம் என்னவென்றால் அவரிடம் காணப்படும் அபாரமான எளிமை. மிக முதிர்ந்த மனநிலையையும், மிக இளைய மனநிலையையும் சமகாலத்திலே ஒருவர் பெறுகின்றார் என்பது எம்மால் நினைத்தும் பார்க்க முடியாத விடயம். ஏனைய பிற மனிதருக்கு அவர் புகட்டும் பாடம் வரிகளில் அடக்கமுடியாதவை. இங்கே தான் அவர் வழி வரலாற்றுத்தாய் உணர்த்தும் அரிய செய்தி மனிதருக்காக வெளிப்படுகின்றது. மனிதரிடை மறைந்திருக்கும் மாபெரும் ஆற்றலை உணர்வது அதனை வெளிப்படுத்துவது என்பதுதான் அவர் வழிநிகழ்வதாக உணர்கின்றேன். நவீன அறிவுலகத்தின் அதி அற்புத மனிதப் பிறவியாக அவரை நான் உணர்கின்றேன். ‘உன்னையே நீ அறிவாய் என்பார்கள்’ அவர் தன்னையே தான் அறிந்து தன்னையே தான், தான் நம்புகின்றார். அவர் ‘இயற்கையிடமோ, மனிதனிடமோ தோல்வியை ஒப்புக்கொள்ளப் போவதில்லை’ ஏனெனில் அவர் தனது இன்றைய



நிலையை அடைவதற்கு ‘எவருக்குமே கடமைப்பட்டவர்’ அல்லர். அவ்வாறே அவர் உருவாக்கிய அணியே இன்று உலகின் கவனத்தை ஈர்த்து தமிழினம் தலை நிமிர்ந்து தாழ்வுச் சிக்கல் அகன்று இனமானம் பெற்று வாழ வழிவகுத்துக்கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். அதற்காக அந்தப் போராளிகள் அணியே தேசியத் தலைவருக்கு பெரு நன்றிக்கடன் செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றது. ஏனெனில் ஒவ்வொரு போராளிக்குள்ளும் மறைந்திருக்கும் அரிய ஆற்றலை அவனோ அவளோ உணர வழிவகுத்த

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

டும். அனுபவம் மூலமாகவே நீங்கள் நிறைந்த அறிவைப் பெற்றுக் கொள்ள லாம். மக்களின் உணர்வுகளைப் புரிந்து அவர்களின் முரண்பாடுகளைக் களைந்து அவர்களுக்கு நீதி வழங்கு வதை உங்கள் கடமையாகக் கொள்ள வேண்டும். நேர்மையாகவும் உண்மை யாகவும் செயற்படுவதில் பல சிக்கல் கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் எப்போதும் நேர்மை தவறாது சத்திய த்தின் வழியில் நீங்களும் உங்களது கடமையைச் செய்ய வேண்டும். அதற் கான உறுதியும் துணிவும் உங்களிடம் இருக்க வேண்டும்'' என்றார்.

## தமிழீழ சட்டக் கல்லூரி

1993 தை 25ம் நாள் தமிழீழ சட்டக் கல்லூரியில் தமிழீழ தேசியத் தலை வர் பிரபாகரன் அவர்கள் உரையாறும் போது "தமிழீழத் தனியரசு என்ற இலக்கை நோக்கி நாம் நகர்ந்து கொண் டிருக்கிறோம். அந்தத் தனியரசுக்கான அத்திவாரங்களை நாம் இப்போதிருந்தே கட்டியெழுப்ப வேண்டும். நீதித்துறை அரச நிர்வாக இயந்திரத்தில் முக்கிய பங்கை வகிக்கும் ஒரு நிறுவனம் என்




பதால் இப்பொழுதிருந்தே இத்துறை சம்பந்தமாக எமது போராளிகளாகிய உங்களுக்குச் சிறந்த பயிற்சி அளிக்கப் படுகிறது. சமூக நிர்வாகத்தில் நீதித் துறை பிரதானமானது. நேர்மை, ஒழுக் கம், கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளைக் கொண்டவர்களே நீதி பரிபாலனத்தைக் கையாள வேண்டும்.

திறன் அவரிடமே இருந்தது.

மனித குலத்திற்கே பிரபாகரன் மூலம் சொல்லப்படும் பெறுமானம் மிக்க அரசியல் உணர்த்துகையை இன்றைய நவீன ஆய்வாளர் ஆய்வுகளில் காண முயல்கின்றார்கள். மனிதனுக்குள்ளே மறைந்திருக்கும் அரிய ஆக்கத்திறனை, ஆற்றலை, புதிதாக உலகைப் படைக்கும் ஆற்றலை அவன் உணராதிருக்கின்றான். அதை அவன் உணர்ந்தால் அவனை வெல்ல எவராலும் முடியாது என்கிற பேருண்மையை பிர பாகரன் ஆய்வுகூட ஆய்வுகளின் வழியன்றி, போராட்ட வழி நின்று நிரூபித்துள்ளார். இது நிச்சயமாக அறிவியலாளர் ஆய்வுக்குப் பின்னொரு காலம் முதன்மைப் பொருளாக அமையப்போகிறது. எனவேதான் இன்று அவருக்கு அருகா மையில் இருக்க, அவரைக்காண, உணர எம்மக்கள் அலை யாக மோதுகின்றார்கள். இது 'தரிசனம்' பெறும் காட்சியல்ல.



க.வே.பாலகுமாரன்

அரசியல் ஆய்வாளர்,
முக்கிய உறுப்பினர்,
தமிழீழ
விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.

அவர்மூலம் பரவும் பேராற்றலின் பேரொளி வட்டத்தின் கதிர்வீச் சிற்குட்படுவதன் தாக்கம் தம் மையும் உயிர்ப்பிக்கும் என்பத தன் வெளிப்பாடே இது. எனவே தான் இன்றைய நூற்றாண்டின் வரலாற்றின் விளைபொருள் அவரே ஆகின்றார்.

ஒவ்வொரு நூற்றாண்டிலும் அவ்வவ் காலகட்டத்திற்கேற்ப மனித விடுதலையைத் தொடர் வதாக உருவாகிய தலைவர் களை நாம் கண்டுள்ளோம். அவ்வவ் காலகட்டங்களில் உள்ள சூழ்நிலை இத்தகைய விடுத லையை யாசிப்பதாக உந்தித் தள்ளுவதாக அமைவதையும் பார்க்கின்றோம். ஆனால் தேசி யத் தலைவரின் காலகட்டத் தினை நோக்கும்போது எனக்கு உண்மையில் ஏற்படுவது இமாலய வியப்புத்தான். நவீன போரியல் வளர்ந்த கால கட்டத்திலே கரந்துறைப் போராளியாக மிகச் சிறிய அணி யைத் தொடங்கினார். இதுவே பல நூற்றாண்டுக்கால பின் தங்கிய போருத்தி. பனிப்போர் காலகட்டத்து வல்லரசின் பிராந்தியத் தலைமை நாடான இந்தியாவோடு மோதவும் அவர் முடிவெடுத்தார். பின்னர் 20ம் நூற்றாண்டின் இறு திப்பகுதியிலே முதலாளியம் கொடிகட்டிப் பறந்த கால கட்டத்திலே அனைத்து நாடுகளுக்கும் எதிராகவே (மறைமுக மாக) அவர் பெரும்போரை எதிர்கொண்டு நடத்தினார். இங்கே கவனிக்க வேண்டிய விடயம் என்னவென்றால் நவீன போரி யல் வளர்ச்சி, நவீன அறிவியல் உச்ச வளர்ச்சி, தொடர் பாடல் துறையால் உலகம் கிராமமாகி விட்ட நிலை, உலக மயமாக்கல் உச்சக்கட்டமாக அரங்கேறியவேளை, தனி மனித மேம்பாடு தலையாய விதியாகியவேளை, இந்நிலையால் இத்தகைய போக்குகளின் தாக்கத்தினையும் தாக்கி

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

அதனை எதிர்த்து போராடி மனிதரின் தாக்கு சக்தி யான ஆற்றலே என்னைப் பெருத்த சிந்தனையாள னாக்குகின்றது. எனவேதான் நாம் கூறுகின்றோம் இந்த நூற்றாண்டின் இணையற்ற மனிதர் அவர். இவரது இப்புதிய அரசியல், இராணுவப் பாங்கு இந்த நூற்றாண்டினதும், இனிப் பின்வரும் நூற்றாண்டி னதும் விடுதலை வேண்டுவோருக்கான வழிகாட்டி.

எனது வியப்புக்களோ எல்லையற்றவை. இவற் றினை இங்கே சிறப்பித்து எழுதியமைக்குப் பிரதான நோக்கம், மேம்பாடடைந்த ஆக்கத் திறன்மிக்க போரா ற்றல் இசைவடைந்த வாழ்வினைப் பெறமுயலும் மனித குலத்திற்கு அவரது சிந்தனைகள் எவ்வளவு பயன் படும் என்பதை உணர்த்துவதேயாகும். மிகப்பெ ரும் போராற்றலின் வித்தகனாகத் தோன்றிய அவர்



இன்று அமைதியின் எளிமையின் ஆக்கத்திறனின் அறிவியல் வாழ்வின் குறியீடுமாகின்றார். போரை நடத்தி போரையே இல்லாமல் செய்துவிட்டார். இன்னொரு போர் முளுமானால் அதனையும் எதிர் கொள்ளவும் அவர் ஆயத்தமாய் உள்ளார். சுவீடன் நாட்டு உப்சலா பல்கலைக்கழகத்தின் பெருநூலகத் தின் வாயிலிலே பொறிக்கப்பட்டிருக்கும் வார்த்தை கள் இவை.

'To think Freely is great
To think Correctly is greater'

சுதந்திரமாக சிந்தித்தல் என்பது மிகப்பெரிய விடயம்தான். ஆனால் மிகச் சரியாகச் சிந்திப்பது என்பது அதனையும்விடப் பாரிய விடயம். இத னையே எமது தேசியத் தலைவருக்கு நாம் எமது பேரன்பின் வரிவடிவமாகச் சூட்டுகின்றோம்.

# இனம் தெரிய வைத்தவனுக்கு!



அறிவுமதி

கவிஞர்,
படைப்பாளி,
தமிழீழப் பற்றாளர்,
தமிழகம்.

*இனம்தெரியாத*
*தவிப்பு.*


*எப்படி*
*பிறந்த நாள்*
*வாழ்த்துச்*
*சொல்வதென்று...*

*இனம்*
*தெரிய*
*வைத்தவனுக்கு!*

# பிரபாகரன்,

## ஆசியாவின் 50 வல்லவர்களில் ஒருவர்!

ஏசியா வீக் எனும் ஆங்கில சஞ்சிகை, ஆசியா வின் 50 வல்லவர்களை தேர்வு செய்தது. ஆசியாவின் அரசியல் - பொருளாதார பலத்தை கணித்து 50 வல்ல வர்கள் தெரிவானார் கள். சீன - இந்திய- மலேசிய-இந்தோ னேசிய பிரதமர்கள் கொண்ட அந்தப்பட் டியலில், தமிழீழ தேசியத் தலைவரும் இடம்பிடித்துள்ளார். சிங்கள இனவாதிக ளால் மோசமாக தூற் றப்பட்டும், தமிழர்களால் போற்றப்பட்டும், பிரபா கரன் உலகின் மிக வெற்றிகரமான கெரில்லாத் தலைவர் என வர்ணிக்கும் ஏசியா வீக்கின் நிபு ணர்குழு, தமிழர் சுதந்திரத்தை தீவிரமாக வலிந் துகொண்ட படையணியின் தளபதி பிரபாகரன் என்கின்றது.




ஏசியா வீக். 2000.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# போரிலும் முதல்வனாய், சமாதானத்திலும் முதல்வனாய்.

தமிழ்த்தேசியத்தின் உயிராகவும், தமிழர் தாயகத்தின் உறைவிடமாகவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் செயலுருவமாகவும் விளங்கும் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரனின் 50வது பிறந்த நாளன்று உலகத்தமிழ் மக்களுடன் சேர்ந்து எனது உளங்கனிந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

ஒரு தேசிய இனத்திற்கான புறக்காரணிகளான தனித்துவமான மொழி, கலை, பண்பாடு, கலாச்சாரம் என்பவற்றையும் தமக்கென ஒரு மரபுவழி தாயகத்தையும் கொண்டுள்ள தமிழ்மக்களுக்கு ஒன்றுபட்ட ஒரு இன உணர்வை, விடுதலை உணர்வை ஊட்டி தமிழ் இனத்தை தேசிய இனமாக வளர்த்து எடுத்தவர் தலைவர். பிரதேச வேறுபாடு கடந்து நிற்கும் தமிழர் தாயகத்தின் பிரதிபலிப்பாக திகழ்பவர் தலைவர். தமிழ்தேசிய இனத்தின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை தமிழ் மக்களுக்கு மட்டுமே உண்டென்றும், வேறு எந்த ஒரு சக்திக்கும் கிடையாது என்ற உண்மையை, எதார்த்தத்தை சிங்கள பேரினவாதத்திற்கு எடுத்துக்காட்டியவர் தலைவர்.

சிறீலங்கா அரசின் இனப்படுகொலைக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கையாகவும், சுயநிர்ணய உரிமை தொடர்பான சர்வதேச சட்டங்களுக்கு அமைவாகவும், தலைவரது தலைமையின் கீழான மரபுவழிப் போர், வடகிழக்கு தாயகத்தையும், அதனை அண்டிய கடல்சார் பிரதேசத்தையும் ஈழத்தமிழரின் நியாயாதிக்கத்தின் கீழ் கொணர்ந்து இன்று ஒரு நிகழ்வுபூர்வமான தமிழீழ அரசு செயல்பட்டு வருவது, தலைவரின் தலைமைக்கு, ஆளுமைக்கு, வினைத்திறனுக்கு சான்றுகளாக அமைகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆனையிறவு தரையிறக்கம் நோர்மாண்டி தரையிறக்கத்துடன் ஒப்பிட்டு பேசப்பட்டு வருவதும், மற்றும் பூனகரி 'தவளைப் பாய்ச்சல்' தொடங்கி முல்லைச் சமர் போன்ற தாக்குதல் சண்டைகள் இன்று இராணுவக் கல்லூரிகளில் மாதிரிப்பாடமாக கற்பிக்கப்பட்டு வருவது தலைவரின் போர்வியூகத்திற்கும், போர்த்தந்திரத்திற்கும், இராணுவ மதி நுட்பத்திற்கு உலக அரங்கில் கிடைத்த அங்கீகாரங்களாகும்.



**வி.உருத்திரகுமாரன்**

சட்ட ஆலோசகர்,
தமிழீழ
விடுதலைப் புலிகள்.
அமெரிக்கா.

நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர்பாக தலைவருடன் பழகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. சமரச பேச்சிற்கு சமபல நிலை அவசியம் என்ற தலைவரின் திடமான கருத்து, வின்ஸ்டன் சேர்ச்சிலின் "Peace through strength" நிலைப்பாட்டை எனக்கு நினைவூட்டியது. பேச்சுவார்த்தை தொடர்பான அரசியல் தூரநோக்கு, சர்வதேச அரசியல் நிலைப்பாடுகள், பிராந்திய நலன்கள் என்பவற்றில் தலைவர் தெளிவான அரசியல் கருத்துக்களை கொண்டிருந்தமை காணக்கூடியதாக இருந்தது.

ஜோர்ஜ் வோஷிங்டன் தொடர்பாக confederate இராணுவ தளபதி 'லீ'யின் வாசகங்களில் கூறுவதாயின், போரிலும் முதலாவதாக, சமாதானத்திலும் முதலாவதாக, தமிழர் நெஞ்சங்களிலும் முதலாவதாக தலைவர் திகழ்கின்றார். அவருக்கு தொடர்ந்தும் பயனுள்ள நீண்ட ஆயுளுக்கு இறைவனை இறைஞ்சுகின்றேன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive




# தலைவா!
# நீ என்றும் வாழி!!




**ந.தமிழன்பன்**

பொறுப்பாளர்,
புலிகளின் குரல்
நிறுவனம்,
தமிழீழ
விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.


1619 ஆம் ஆண்டு தொட்டு போத்துக்கீசர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், சிங்களவர் என மாறி மாறி எமது தேசம் ஆக்கிரமிப்புக்களுக்கும் முற்றுகைகளுக்கும் உள்ளாகி மீள முடியாமல் அவலப்பட்டு, அழிபட்டு, அடிமைப்பட்டு அடிபட்ட நேரம்தான், வேலுப்பிள்ளை பார்வதி தம்பதியினருக்கு நான்காவது பிள்ளையாக, யாழ் வல்வையில் எங்கள் தலைவர் 1954, கார்த்திகை 26 இல் பிறப்பெடுத்தார். அவர் வாழ்ந்து வளர்ந்து 1971 இல் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைக்காக, தன்னை அர்ப்பணித்து விடுதலைப்போராட்டத்தை ஆரம்பித்தார். எமது இனத்துக்கெதிராக சிங்கள அரசுகளும் இந்திய வல்லரசும் தொடுத்த கொடும் யுத்தங்களையும், தடைகளையும், முற்றுகைகளையும் எதிர்த்து இன்றுவரை ஏறக்குறைய 33வருடங்களாக, தொடர்ந்து போராடி எமது மக்களையும், மண்ணையும் காத்து விடுதலைப்போரை வீச்சாக்கி, வெற்றியின் விளிம்பிற்கு இட்டுச்சென்று தமிழீழ விடுதலையின், வெளிச்சத்தைக் காட்டி நிற்கின்றார். அவரது கடந்த 50வருடவாழ்வில் நான் அறிந்த, அனுபவித்த பல விடயங்களில் சிலவற்றை சிறு சிறு குறிப்பாக பதிவு செய்ய முயல்கின்றேன்.

எங்கள் தலைவர், இதுவரை நடந்து கொண்டிருக்கும் விடுதலைப் போராட்டத்தில் ஒரு விடுதலைப்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## அகவை 50

முன்பு நீதிபரிபாலனத்திற்கென நாம் உருவாக்கிய இணக்க மன்றுகள் என்ற அமைப்பில் பல தவறுகள் நிகழ்ந்ததை நீங்கள் அறிவீர்கள். இந்த இணக்க மன்றுகளால் வழங்கப்பட்ட தீர்ப்புகளும் மக்களின் விமர்சனத்திற்கும் கண்டனத்திற்கும் இலக்காகின. சுயநலமற்ற முறையில், பாரபட்சமற்ற முறையில் நீதி வழுவாது தீர்ப்புகள் வழங்கப்படவில்லை. எனவேதான் ஒழுங்கும் கட்டுப்பாடுமுடைய எமது இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளைக் கொண்ட நீதி நிர்வாகமானது ஒரு வலுவான அரசிற்கும் கட்டுப்பாடுடைய சமூக அமைப்பிற்கும் ஆணிவேரானது. சமூக நீதி சரிவரப் பேணப்பட்டால்தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வளரும்" என்றார்.

### விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம்

எமது மொழியும், கலையும், பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது கலையும் பண்பாடும் எமது தேசத்தின் ஆன்மா. இந்த நோக்கத்திற்குச் செயல் வடிவம் கொடுக்கும் விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழகத்தினரால் நடத்தப்பட்ட முத்தமிழ் விழாவிற்கு 1992 ஆடி 15 இல் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அனுப்பிய செய்தியில், 'எமது விடுதலைப் போராட்டத்தை மக்கள் மயமாக்கி, மக்கள் போராட்டமாக முழுமைப்படுத்தி மக்கள் அரங்கிலிருந்து ஒரு பலமான உறுதிமிக்க தேசிய எதிர்ப்பியக்கத்தைக் கட்டி எழுப்பும் பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக எழுந்திருக்கிறது. இந்தத் தேவையை பூர்த்தி செய்வதில் எமது, கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு முக்கியமானது' என்று குறிப்பிட்டிருந்தார்.

போருக்காக, கிடைக்கப் பெறும் வளத்தைப் பயன்படுத்தி, வல்லாதிக்க சக்திகளின் பிற்புலத்தோடு, எமது மக்களின் மீதும் எமது மண்ணின் மீதும், சிங்கள அரசுகள் தொடுத்த இடைவிடாத கொடும் யுத்தங்களையெல்லாம் எதிர்கொண்டு, வென்றுகொண்டிருக்கும் ஒரு பெரும் விடுதலை இயக்கத்தைக் கட்டி வளர்த்துக் கொண்டு, ஏக காலத்தில் அதே வளத்தில் தமிழீழத் தனியரசிற்கமைவான மக்கள் ஆட்சிக் கட்டுமானங்களையும், நிர்வாகங்களையும் திட்டமிட்டு, ஆரம்பித்து, வளர்த்து மக்களைச் சகல வழிகளிலும் காத்து வருகின்றார்.

1985 ஆம் ஆண்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் விடுதி இராணுவமுகாம் தாக்குதலில் கைப்பற்றிய ஆயுதங்களை, நல்லூரடியிலுள்ள கிட்டண்ணாவின் மெயின் காம்பில் (சிக்காக்கோ) அழகாக அடுக்கிவைக்கப்பட்டிருந்ததை, தலைவர் பார்வையிடுகிறார். அப்போது கிட்டண்ணாவுடன் ஏதோ கதைத்துக் கொண்டிருந்தவர், திரும்பி ஒரு பார்வை பார்த்துச் சிரித்தார். அந்த ஆயுதங்களின் அடுக்கும், தலைவர் அவர்களது பார்வையும் அவரது சிரிப்பும் சுற்றிநின்ற எங்களுக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

> கிடைத்த உணவைச் சிக்கனப்படுத்தியும் பங்கிட்டு சிறுகச் சிறுக உண்டு உயிரைத்தக்கவைத்த வாழ்வுதான் வாழவேண்டி இருந்தது.

இந்திய இராணுவம் அமைதிப் படை என்ற பெயரில் பெரும்படையெடுத்து தமிழர் தாயகப் பகுதியில் ஆக்கிரமிப்பைச் செய்தது. எமது மக்களை ஏமாற்றியது. அப்போது நான் ஈழமுரசுப் பத்திரிகைப் பணியில் இருந்தேன். அவ்வேளை பத்திரிகை வாயிலாக மக்களை தெளிவுபட வைத்தார். தேவையான கருத்துக்களை தந்திருந்தார். பின்னாளில் இந்திய வல்லரசை எதிர்த்துப் போரிட்டு வெற்றி கொண்டார் தலைவர்.



ஒரு நாள் தலைவருடைய இடத்திற்குச் சென்றிருந்தேன். பழைய கதைகள் மீட்கப்பட்டன. அப்போது தலைவர் அவர்கள் என்னைக் கேட்டார். 'யாழ்ப்பாணத்தில எப்பிடி நிண்டனீங்கள், சண்டைகள் எப்பிடி' என்று. அப்போது நான் எங்கள் கஷ்டங்களை உரைத்தேன். அப்போது தலைவர் தனது சிறு சம்பவம் என கூறி, இதைக் கூறினார்.

'ஒரு நாள் 200'ற்கும் மேற்பட்ட இந்திய இராணுவம் எமது முகாமை அண்மித்துக் கொண்டிருந்த நேரம் நாங்கள் எல்லோரும் இன்னோர் முகாமிற்கு இடம் மாறவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. அப்ப நவம் உட்பட கொஞ்சப் பேர்தான் அதில நிண்டனாங்கள். உடனடியாக அந்த இடம் மாறவேணும்: வெளிக்கிட்டம். காலமை மதி (துணைவியார்) பால்ச் சோறு செய்திருந்தா, அதையும் கிடந்த கௌப்பி கொஞ்சம் அதையும், ஒரு கான் தண்ணியையும் எல்லாவற்றையும் அவசர அவசரமாக ஆளுக்காள் தூக்கிக் கொண்டு வெளிக்

தமிழ் ஆவணக் காப்பகம் Tamileelam Archive

கிட்டம். ஆமியின் கண்ணில் படாத இடம் நோக்கி ஆமியை விலத்தி நெடுந்தூரம்நடக்க வேண்டி இருந்தது. நடந்தம். தாகம் பசி எடுக்க ஒரு இடத் தில் இருந்து, கொண்டுபோன பால்சோத்தை பங் கிட்டு சாப்பிட்டு தண்ணியையும் ஆளுக்கொரு குவளையாய் குடிச்சம், பிறகும் நடந்தம். ஒரு ஆறு வந்துது. அதிலும்தண்ணி இல்லை. ஆனால் அதிலை இருந்து கிடந்த கௌப்பியை அவிக்க திட்டமிட்டம். நீர்ப்பற்றான அந்த இடத்தைக் கிண்டி ஒரு மாதிரி தண்ணி எடுத்து, மரக்கட்டையில் அடுப்புமூட்டி கௌப்பியை ஒருவர் அவிய வைச்சார்.


அவிஞ்சு வர எல்லோரும் சுற்றிப் பார்த்துக் கொண் டிருக்க கௌப்பிப் பானை பொறிஞ்சு அடுப்புக்க மண்ணுக்க கொட்டுண்டு போச்சு. எல்லாரும் ஒரு வரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தினம். நான் முதலில மண்ணுக்க கொட்டுண்ட கௌப்பியை எடுத்து வாயிலை போட்டன். பிறகு எல்லாரும் எடுத்துச் சாப்பிட்டினம். பிறகும் நெடுந்தூரம் நட ந்து ஒரு இடத்தில முகாமிட்டம்,

அப்ப காட்டில தண்ணி உணவொண்டும் இருக் காது. கிணறு வெட்டியும், மிகுந்த சிரமத்தின் மத் தியில் உணவு சேகரித்தும், கிடைத்த உணவைச் சிக்கனப்படுத்தியும் பங்கிட்டு சிறுகச் சிறுக உண்டு உயிரைத் தக்க வைத்த வாழ்வு தான் வாழவேண்டி இருந்தது. இப்போப்பட்ட எந்தக் கஷ்டத்திலும் நெருக் கடியிலும் கொண்ட கொள்கையிலும் இலட்சியத் திலும் இம்மியளவுகூட அசையாமல், அசைக்க முடி யாத உறுதியுடன் தலைவர் இருந்துள்ளதை, மேற்படி சிறுவிடயம் என, தலைவர் அவர்கள் கூறிய, பெரும் வர லாற்றுச் சம்பவம் எனக்கு உரைத்தது.

வேறொரு நாள் தலைவர் என்னை அழைத்து, நிதர்ச னம் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தார். அப்போது அண்ணையோடு நிற்கும் முக்கிய போராளி ஒருவர் காயப்பட்ட போராளிகளுக்கு கொடுக்கவென, தலைவர் கூறியபடி பொரிவிளாங் காய்கள் பெரிய பொதியில் கொண்டு வந்தார். அப்போது தலைவர் 'காயப்பட்ட பிள்ளைகளுக்கு கொடுக்கிற உணவுப் பொருட்களை எடுத்து வா, சுவைச்சு பாத்துக் கொடுப்பம்' என்றார். அந்தப் போராளி ஒன்றைக்கொண்டு வந்து கொடுத்தான். இல்லை "எல்லாவற்றையும் கொண்டுவா" எனக் கூறி, எல்லாவற்றையும் பார்த்து, ஒன்றை எடுத்து எனக்கும் தந்து தானும் சுவைத்து பார்த்தார். "நல்லாய் இருக்கு எல்லாருக்கும் காணுமோ?" எனக் கேட்டு, "பத்திரமாய் கொண்டு போய் கொடு" எனவும் அவரிடம் பணித்தார்.

இதில் நான் எதைப் பார்த்தேன் என்றால், தலை வர் ஒவ்வொரு விடயங்களுக்கும் எவ்வளவு முக் கியத்துவம் கொடுத்து, ஒவ்வொருவரையும் மதித்து, தனது கடமைக்கு மேலால் செயற்படுகிறார் என் பதைத்தான்.

ஒரு நாள் பிரம்மசிறி வீரமணி ஐயர் அவர் களை தலைவர் அவர்களிடம் கூட்டிச் சென்றேன். அவர் கலைத்துறையில் பரதம், சங்கீதம், கவித்து வம் என துறைசார் நிபுணத்துவம் பெற்ற நிறைந்த அறிவாளி. எதிரிக்கெதிராக எங்களின் தாக்குதல் சம்பவம் ஒன்று நடந்து விட்டது என்று கேள்விப்பட் டால், உடனே புலிகளின்குரலுக்கு வந்து சம்பவத்தை



வினவி, சிறப்பு நிகழ்ச்சி படைத்து விடுவார். அவ் வளவு உணர்வாளன். நிற்க, தலைவர் இவரை வரவேற்றார். ஐயா உடனே தலைவர் அவர்களைக் கட்டியணைத்து 'எடே கண்ணா' என முத்தமிட்டார். இருந்து கதைத்தார்கள். நீண்ட உரையாடல். பின் னர் என்னிடம் தலைவரைப் பற்றி, ஐயா வியந்து கதைத்தார். 'எடே பிள்ளை என்னடா தலைவருக்கு எங்கையடா 'புறநானூறு' படிக்க நேரம், நானும் படித்தனான் தான், ஆனா தலைவர் "புறநானூற் றில இத்தினையாவது பக்கத்தில புலி கிடந்து போன குகை பற்றிய பாடல் இருக்கெல்லே ஐயா, அதை போல அதை ஒப்பிட்டு எங்கட மாவீரர் பெற்றோர் பற்றி நிகழ்ச்சி செய்யலாமோ" எனக் கேட்கிறார். 'எட எனக்கு... என்னையே மறந்திட்டன்' என்னடா அறிவுக்கடல். எட, எதைப் பற்றி கதைத்தா லும் அதைப் பற்றி அதில மட்டும் கற்றுயர்ந்த அறிவாளியாய் கதைக்கிறாரடா. அவர் ஒரு 'அவதார புருசர்' என நீண்ட கதையாகக் கதைத்தார், வியந்தார், புகழ்ந்தார் வீரமணிஐயர். பின்பு தலை வர் அவர்கள் கூறியது போல் புலிகளின்குரலுக்கான நிகழ்ச்சியும் அரங்குக்கான நிகழ்ச்சியும் செய்தார்.

**என்னடா அறிவுக்கடல். எட, எதைப் பற்றி கதைத்தாலும் அதைப் பற்றி, அதில மட்டும் கற்றுயர்ந்த அறிவாளியாய் கதைக்கிறாரடா. அவர் ஒரு 'அவதார புருசர்'**

Tamileelam Archive

## புலிகளின் குரல் வானொலிச் சேவை

புலிகளின் குரல் வானொலிச் சேவையின் ஓராண்டு பூர்த்தி நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் 'எமது எதிரியான சிங்கள அரசும் அதன் கைக்கூலிகளான தமிழ்த் துரோகக் குழுக்களும் எமக்கு எதிராக மிகவும் கேவலமான விசமப் பிரச்சாரங்களை ஆற்றி வருகின்றன. எதிரியின் பொய்மையான கருத்துப் போருக்கு எதிராக உண்மையின் ஆயுதமாக எமது வானொலியின் குரல் ஒலிக்க வேண்டும். ஒரு சத்திய யுத்தத்தின் போர் முரசாக புலிகளின் குரல் ஒலிக்க வேண்டும்' என்றார்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
TAMILS REHABILITATION ORGANISATION

1985 ல் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் தேவைபற்றி தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் குறிப்பிடும் போது "தமிழீழ மக்கள் இரு போர் முனைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பை எதிர்த்து மண்மீட்கும் போர் முனை, மற்றையது சிங்களப் பேரினவாத அரசின் பொருளாதாரத் தடைகள் என்னும் அடக்கு முறையை எதிர்த்து உற்பத்திப் போர்முனை. இதயம் எவ்வாறு குருதிச் சுற்றோட்டத்தை ஒழுங்கு படுத்தி நோய்களையும் பாதிப்புக்களையும் வென்றிட உடலுக்கு உதவுகின்

புலிகளின் குரலில் புறநானூறும் புதுநானூறும் எனும் தொடர் நிகழ்ச்சியும் ஒலிபரப்பானது.

எங்கள் தலைவர் எல்லாவற்றையும் கற்றறிந்தவர். எதையும் தட்டிக் கழிக்காமல் எல்லாவற்றையும் ஆராய்ந்தறிந்தவர். அறிபவர். உண்மையிலேயே எமது இனத்துக்கான கொடை தான் தலைவர். இவர் ஒரு காலத்தின் பரிசு. வேண்டக் கிடைத்தவர் அல்லர் தலைவர். கிடைத்ததைக் கொண்டு வேண்டியதைக் கிடைக்க வைப்பவர் தான் எங்கள் தலைவர்.

மாங்குள சிறிலங்கா இராணுவமுகாம் தாக்குதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட ஒரு நாட்டுப்பற்றாளனின் கதையை வைத்து நெறியாளர் ஜெயபாலன் அவர்கள் செய்த ஒரு குறும் படத்தை, தலைவர் அவர்களின் பார்வைக்காகக் கொடுத்தேன். அப் போது அதில் உள்ள காட்சிகள் பற்றிக் கதைத்தார். கதைத்த போது எதிரியைக் கொச்சைத்தனமாக, பிழையாகக் காட்டக்கூடாது என, பிழையான காட்சிகளைக் காட்டிக் கூறினார். அத்துடன் கமராவை எப்படிக் கையாள் வது, சண்டைக் காட்சிகள் எப்படி எடுப்பது, ஒராளைச் செவ்வி காண்பது என்றால் எப்படி கமரா இருக்க வேண்டும், எவ்வாறு வினா தொடுக்க வேண்டும், எப்படி படம்? தொகுக்க வேண்டும், எப்படி கதையோட்டம் இருக்க வேண்டுமென ஏராளமான கருத்துக்களைக் கூறினார்.

ஒவ்வொரு விடயத்தையும் ஆழமாக நோக்குபவர் எங்கள் தலைவர். எதிரியைக்கூட, குறைத்து மதிப்பிடவோ, எழுதவோ, காட்டவோமாட்டார்

ஒவ்வொரு விடயத்தையும் ஆழமாக நோக்குபவர் எங்கள் தலைவர். எதிரியைக்கூட, குறைத்து மதிப்பிடவோ, எழுதவோ, காட்டவோமாட்டார். அவ்வளவு திடமான, உண்மையான உத்தமனாகத் தான் எங்கள் தலைவர் இருக்கிறார்.



ஒருநாள் சண்டைப் படப்பிடிப்புப் பற்றி கூறும் போது சினிமா அல்ல 'எங்களின் விடுதலைப் போர்க்களங்கள்.' போர்க் களங்களில் கமராக்களை வைத்து படங்களை எடுப்பவர்களுக்கு 'கவர்' இல்லை. பாதுகாப்பும் இல்லை. இதனால் இதை உணர்ந்த தலைவர் அவர்கள் முடிந்தளவு பாதுகாப்பு எப்படி தேடுவது எனவும், எப்படியான முறையில் சண்டைகளைப் படம் பிடிக்கலாம் எனவும் கருத்துக்களைக் கூறினார். 'ஒவ்வொரு கமராக்களுக்கும் ஒவ்வொரு துப்பாக்கியும். கொடுக்கவேணும், நான் அனுப்பி விடுறன்' எனக் கூறினார். பின்பு அடுத்த நாளே ஏ.கே ரக துப்பாக்கிகள் வந்து சேர்ந்தன. எமது படப்பிடிப்புப் போராளிகளுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. அப்ப துவக்குச் சரியான தட்டுப்பாடு. இருந்தும், தலைவர் எங்களுக்கு துவக்கு தந்துள்ளார் என பெருமகிழ்ச்சி. படப்பிடிப்பாளர்கள் பிற்காலத்தில் துவக்கையும் கொண்டு படப்பிடிப்புக்கெனச் சென்ற போது, கூடிய பாதுகாப்புடன் சிறப்பாக சண்டைகளைப் படம் எடுக்கக்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கூடியதாக இருந்தது. பல நெருக்கடிகளுக்குள் சண்டை பிடித்து தப்பி வந்த வரலாறுகளும் உண்டு.

எங்கள் தலைவர் தீர்க்கமாகச் சிந்தித்து, சொன்னதைச் செய்து, வாக்குறுதிகளை நிறைவேற்றி நல்ல பாடம் சொல்லித் தந்திருக்கிறார். அவருடைய, ஒருபார்வையில் ஓராயிரம் கருத்துகள் இருக்கும். புரிந்து கொள்வோருக்குத் தான் அவை விளங்கும். ஒரு நிமிடம் தலைவருடன் இருந்து கருத்தறிந்தால், எமது விடுதலை நோக்கிய பயணத்தில் வெற்றிப் பாய்ச்சலைச் செய்யலாம். வளமான வலிய வகை வகையான ஏற்ற, ஏற்கக்கூடிய, காலத்துக்கேற்ற கருத்துக்களை தலைவர் அவர்கள் கூறி, செய்து செய்வித்து வருகிறார்.

அது 1993 காலப்பகுதி தவளைத்தாக்குதலுக்கான ஏற்பாடுகள் பூர்த்தி. தலைவர் அவர்கள் போராளிகளைச் சந்தித்து, விருந்துண்டு வழியனுப்பும் நிகழ்வு நடைபெறுகிறது. அப்போது தலைவர் அவர்கள் பெண் போராளிகளைப் பார்த்து, "முந்தித்தான் 'சென்றுவா மகனே வென்றுவா' என அனுப்பினாங்கள். இப்ப 'சென்றுவா மகளே வென்றுவா' எனவும் தான், நான் அனுப்ப வேண்டி இருக்கு. 'நீங்கள் ஒவ்வொரு வரும் தனித்தனிச் சண்டைக்காரராகவும் இருக்க வேணும், தனிச் சண்டைக்கும் சந்தர்ப்பம் வரும்' எனக் கூறி", வழியனுப்பி, வழி நடாத்தி வெற்றி பெற்றார்.

போர் பற்றி, அரசியல் பற்றி, ஊடகங்கள் பற்றி, இன்னும் புகைப்படம், சலனப்படம், ஓவியம், சிற்பம், அச்சுக்கலை, தொல்பொருள், பொருளாதாரம், நீதி நிர்வாகம், முகாமைத்துவம், குடும்பத் தலைமை, ஆதரவற்றோருக்கான ஆதரவு, பகிர்ந்துண்ணல், மனிதாபிமானம், மனித உரிமை, பாசம், பற்று, பகுத்தறிவு, மனவியல், தத்துவம், சமயங்கள், விருந்தோம்பல், வந்தோரை வரவேற்கும் பண்பு, வழியனுப்புதல், இரசனைகள், இன்னுமின்னும் சங்ககாலம் தொடக்கம் நவீன இக்காலம் வரை, மொத்தத்தில் எல்லாம் பற்றி, எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு மனிதனின் சுதந்திரம், தேசத்தின் விடுதலை பற்றி எல்லாம், புகட்டி நிற்கும் சகலக லாவல்லவன் எங்கள் தலைவர்.

> முந்தித்தான் 'சென்றுவா மகனே வென்றுவா' என அனுப்பினாங்கள். இப்ப 'சென்றுவா மகளே வென்றுவா' எனவும் தான், நான் அனுப்ப வேண்டி இருக்கு

ஈற்றில் ஓர் விடயம், இந்திய வல்லாண்மைக்கும், ஈழத் தமிழர் தரப்பினரான தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில், தமிழீழத்தில் தொடர் பேச்சுக்கள் நடைபெற்ற வண்ணம் உள்ளன. எமது மக்களின் வாழ்வுக்காக திலீபன் அவர்கள் ஐந்தம்சக் கோரிக்கையை இந்திய வல்லரசுக்கு முன் வைத்து, ஒரு சொட்டு நீர் கூட அருந்தாமல் உண்ணா விரதம் இருக்கின்றார். மக்களாதரவு கொதிப்பு நிலைக்கு வந்திருந்தது. இந்திய வல்லாதிக்கத்தின் நயவஞ்சகத்தை மக்கள் நன்றாக புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரந்தான் டிக்ஸிற், தலைவர் பேச்சு. சிறிலங்கா இராணுவத்தின் கோட்டையாகத் திகழ்ந்து, பின்னர் இந்திய சிறிலங்கா கூட்டுப்படைப் பெருந்தளமாக உள்ள பலாலியில் பழைய ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில், இந்திய இராணுவம் ஆயுதங்கள் சகிதம் விறைத்த பார்வையுடன் நின்றிருக்க, தலைவர் எதிரியின் குகைக்குள் மக்களுக்காக, தியாகி திலீபனின் கோரிக்கைகளுக்காக மீண்டும் தன்னை துச்சமாய் மதித்து பேசச்சென்றார். நானும் கமராவுடன் சென்றிருந்தேன். டிக்ஸிற்றும், இந்திய இராணுவப் பெருந்தளபதிகளும் உசார் நிலையில். துப்பாக்கிகள் சகிதம் இந்திய இராணுவத்தினர் ஒரு புறம், அதே சூழலில் தலைவர் அவர்களும் இன்னும் சில போராளிகளும் ஒருபுறம். அவ்விடத்தில் யாழ். பத்திரிகையாளர்கள் சிலரும் வந்திருந்தனர். அவர்களும் முன்னே இருக்க மிரட்டற் சூழ்நிலையில் பேச்சுக்களை இந்தியன் ஆரம்பித்தான். தமிழர் தலைவர் கிறுங்காமல், தயங்காமல் தமிழ் தேசிய இனத்திற்காகக் கதைத்தார். தொடர்ந்து கதைத்த வண்ணம் இருந்தார். டிக்ஸிற் சீற்றம் கொண்டு மிரட்டினான். ஒரு கட்டத்தில் கர்ச்சித்தான். பேச்சு அகோரம் கொண்டது. தலைவர் தளரவில்லை. தயங்கவில்லை. சிவந்த விழிகளுடன், தெளிவான பார்வையோடு, அந்தக் குழப்பக்காரர்கள் முன்; அந்தக் கயவர்கள் முன்; அந்தக் காமுகர்கள் முன்; பேசினார். முடிந்தளவு எடுத்துரைத்தார். பேச்சு முடியவில்லை. ஒத்தி வைக்கப்பட்டது. அந்தக் கூட்டுச்சதி முகாமிலிருந்து தலைவர் திரும்பினார். அடுத்தடுத்தநாள் பேச்சுக்கள், பிரதித்தலை



தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

றதோ அவ்வாறே தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தமிழீழம் எங்கும் உழைப்பைக் குருதியாய் ஓட வைத்து தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியின் அத்திவாரமாக திகழ வேண்டும்" என்றார்.

இவ் அமைப்பின் வளர்ச்சியால் இன்று தமிழீழத்தில் பல குடும்பங்கள் நிவாரணத்தை நம்பி வாழாமல் தாமாகச் சுயதொழில் மூலம் வாழும் நிலையைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்

வைகாசி 6, 1994 வேளாண் மன்னர்களுக்கு பரிசு அளித்து கௌரவித்து உரையாற்றிய தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன், "தமிழீழம் ஒரு செழிப்பான பூமி, வளங்கள் பல நிறைந்த தேசம், தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பி அதனை அபிவிருத்திப் பாதையில் இட்டுச்செல்லக் கூடிய நீர் வளத்தையும் நில வளத்தையும் மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனம் கண்டு அவற்றை உச்சப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும். மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். வேளாண்மையும் கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானது. இந்த இரு துறைகளையும் கட்டி வளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்துதல் வேண்டும். இந்த இலக்கில் 'தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்' ஆக்கபூர்வமான பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. இந்த முயற்சிகள் மேலும் மேலும் தீவிரம் பெற்று, விடுதலை பெறும் தமி



வருடன் நடந்து கொண்டிருக்க திலீபன் தியாகியானான்.

2003இல் புளொட் அமைப்பில் இருந்து இப்போது இராணுவ ஆய்வாளராக இருக்கும் தராகி என அழைக்கப்படும் டி.சிவராம் என்னுடன் கதைக்கும் போது கூறினார். 'பலாலியில் தலைவரைக் கூப்பிட்டு நாங்கள் கதைக்கிறம். வரும் போது கண்ணி வெடி வைத்து முடிக்கும் பணி உங்களுக் குரியது' என்று இந்தியப் படை அதிகாரி புளொட் அமைப்பின் அமைப்பாளர் உமாமகேஸ்வரனிடம் கூறினாராம். ஆனால் உமாமகேஸ்வரன் அதைச் செய்யவில்லை எனக் கூறினார்.

உண்மையிலேயே, எமது இனத்தை அழிக்க எங்கள் தலைவருக்கு, இந்தியப் படை இந்திய அரசு எப்படியெப்படியெல்லாம் சூழ்ச்சிகளைச் செய்துள்ளது. எவ்வளவு நாசகார சதிவலைகளை விரித்துள்ளது. எல்லாவற்றையும் எமது இனத்தின் தலைவர், தனது தனித்துவமான சாதுரியத்தால் வென்றும் தற்துணிவால் வாழ்ந்தும், பற்றுணர்வால் எமது விடுதலைப் போராட்டத்தை வளர்த்தும், எமது இனத்தின் விடுதலை உணர்வைத் தாங்கி, ஒரு நாடு என்னும் உயர்நிலையை விடுதலையின் வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்கின்றார்.

நன்றி.
'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# ஊர்வலத்தில் வராத உற்சவமூர்த்தி

இருள் கவிந்த வானத்தில் ஒளிகொண்டுவரும் சூரியனாகவே இம்மண்ணில் இறங்கியவர் எம் தேசியத் தலைவர். வெளியே அவரின் போரியல் ஆளுமை புலப்பட்ட அளவுக்கு இன்னும் பலவாகவுள்ள பன்முகப் பட்ட ஆற்றல்களும், மென்மையான உணர்வுப் பக்கங்களும் பேசாப் பொருள்களாகவே இன்றும் இருக்கின்றன. தனி மனிதனாகத் தலைவரைப் பரிசீலனைக்கு எடுக்காமல் தலைமையின் வகிபாகமாவே ஆய்வுக்கு உட்படுத்தும் நிலையே தொடர்கிறது. இனியும் தொடரலாம்.

எங்கள் தலைவருக்கு மட்டுமல்ல வரலாற்றைத் திருப்பி வைத்த உலகின் பெருந்தலைவர்கள் எல்லோருக்குமே இது பொருந்தும். சரித்திர நாயகர்கள் தங்கள் இலக்கை வென்றாக வேண்டும் என்ற பெருவிருப்பில் சுயத்தின் முழுமையையும் இலக்குக்கே அர்ப்பணிப்பதனால் தனிமனிதரென்ற வகைப் படுத்தலுக்கு உட்படுத்தப்படாமல் பொதுமனிதர்களாகவே போய்விடுகின்றனர். இதனால் வரலாற்றுத் திருப்பிகளான தலைவர்களின் அடிமனத்தின் அழகுகள். அவர்களுக்குள்ளிருக்கும் மெல்லிய உணர்வுகளின் மலர்வுகள் வெளியே அதிகம் அறியமுடியாமற்போவது தவிர்க்கமுடியாத ஒன்றாகியேவிடுகிறது.



புதுவை இரத்தினதுரை

கவிஞர்,
பொறுப்பாளர்,
கலை பண்பாட்டுக்கழகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.

நான் எமது பெருந்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களுடன் கடந்த பதினெட்டு வருடங்களுக்கு மேலாகப் பழகிவருகின்றேன். அண்ணன் தம்பி போன்று அருகருகான நெருக்கமுள்ளவனாகவும், தலைவர் என்ற வகையில் கட்டளை இடுபவராக அவரும், ஏற்றுப்பணிபுரிபவனாக நானும் ஒரு நேர்கோட்டிலேயே நிற்கின்றோம். தோழமையுள்ள சக போராளிகளாகவும், என் கவிதைகளின் ஈர்ப்பினால் அவர் வாசகனாகவும், நான் படைப்பாளியாகவும் இன்னோர் மாறுபட்ட தளத்திலும் உள்ளோம். இவைதவிர, அவரைச் சுடரும் விளக்கொளியாக எட்டநின்று பார்த்து இரசிக்கும் பிள்ளைத்தனமான பக்தனாக வியப்புறும் நிலையிலும் நானுள்ளேன். இப்படிப் பலபட்ட கோணங்களில் எங்கள் நெருக்கமும், பழக்கமும் நீடிக்கிறது. இந்தக் கிடைத்தற்கரிய வாய்ப்புக்களின் மூலம் எமது தலைவரை அறிந்துகொண்டதிலும் பார்க்க, எங்கள் இருவரையும் ஒருசேர உலுக்கிய சம்பவங்களின்போது அவரின் முகத்தின் பிரதிபலிப்புகளிலிருந்தும், அவர் உறைந்திருந்தநேர மௌனத்திலிருந்தும், அவ்வேளைகளில் வெளிவந்த ஒரிரு வார்த்தைகளிலிந்தும் அறிந்துகொண்டவையே அதிகம்.

மிகப்பெரிய சாதனைகளாக வெளியுலகம் வர்ணிக்கும் பகைவரின் படைத்தளங்களை வெற்றிகொண்ட வேளை

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

# அகவை 50

ழீழம் தங்கு நிலையற்றதாக தன் காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக் கூடியதாக அமைய வேண்டும், என்றார்.

## செஞ்சோலை சிறுவர் இல்லம்

யுத்த சூழ்நிலையால் பெற்றோரை, பாதுகாவலரை இழந்த பெண்பிள்ளைகளின் பராமரிப்புக்காக தமிழீழத் தேசியத் தலைவரின் பணிப்புரையின் பேரில் 1991 ஐப்பசி 23ம் நாள் செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனால் அனுப்பப்பட்ட வாழ்த்துச் செய்தியில் 'வரலாற்றுப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்தச் செஞ்சோலை வளாகத்தில் நாம் இன்று இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாய் மாறி, ஒரு காலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் செழிப்புற வேண்டும் என்பதே எனது ஆவல். இந்த புரட்சிகரமான பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட எனது நல்லாசிகள்' என்றார்.



## காந்தரூபன் அறிவுச்சோலை

1993 கார்த்திகை 13ம் நாள் காந்தரூபன் அறிவுச் சோலை தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது அவர் ஆற்றிய உரையில் "எல்லோருக்கும்

*யிலும், எங்கள் அசைவியக்கத்தையே ஒருகணம் நிறுத்தி வைத்த முத்த தளபதிகள் பலர் வஞ்சனை வலைவிரிப்பில் உயிரிழந்த சோக நிகழ்வுகளின்போதும் தலைவரின் அருகிலிருக்கும் வாய்ப்பைப் பெற்றவன் என்ற வகையில் அவரை என்னால் அதிகமாக அறியமுடிந்தது. இப்படியான பல்வேறு தளங்களில் அவருடைய உள்ளூறும் உண்மை உணர்வுகளை உணர்ந்தவன் என்றவகையில் –*

* விடுதலை ஒன்றே அவரின் மூலவேர்
* எமது இனத்தின் விடுதலைக்காக என்ன விலையாயினும் (தன் உயிரைக்கூட) கொடுக்கச் சித்தங்கொண்டவர்.
* தான் மட்டுமே, தன் ஆளுமையால் மட்டுமே பெறும் தனித்த வெற்றிகளைக்கூட கூட்டுழைப்பின் வெற்றியாக கருதி மையப்புள்ளியைப் பொதுமை செய்பவர்.
* ஆற்றமுடியாத ரணமாக நெஞ்சிற்கீறும் சகபாடிகளின், போராளிகளின் இழப்புக்களுக்குத் துடித்துப்போனாலும் அதிலிருந்து மிகத்துரிதமாக மீண்டு இயல்புநிலைக்கு வருவார். (இதுவே பெருந் தலைவர்களுக்கு வேண்டிய பண்புகளில் பெரிதாகும்)
* காட்டாற்று வெள்ளம் காலடிக்கு வரும்போதும் கலங்காதிருப்பவர்.
* அறிவுத்தளத்தில் நின்று முடிவுகளை எடுத்து, எடுத்த முடிவுகளை உணர்வுத்தளத்தில் இருந்து செயற்படுத்துபவர்.
* நீண்டகாலமாக விடுதலையற்றுக் கிடக்கும் எம்மினத்தில் கவிந்துள்ள பல்வேறு அடக்குமுறைகளையும், அறியாமைகளையும் அடியோடு மாற்றிவிடவேண்டும் என்ற தீரா ஆவலுடையவர்.
* பெண் போராளிகளை தன்பிள்ளையாக கருதி ஒரு தந்தைக்குரிய கவனிப்பிலும், பெருமிதத்திலும் பேசிக் கொள்பவர்.
* விடுதலைக்கனவை வரித்து, தன் தலைமையை ஏற்றுக் கொண்டு மாவீரரானவர்களைத் தெய்வங்களாக பூசிக்கும் தெளிவுடையவர்.
* கலை, இலக்கியங்கள் மீது கட்டற்ற காதலும், அவற்றில் உயிரோடும் இடங்களை உற்றுணர்ந்து கொள்ளும் ஆற்றலும் ஒருசேரப்பெற்றவர்.
* எல்லாவற்றுக்கும் மேலாக ஞானம் சித்தித்த ஒரு தபசியின் வாழ்வாகவே தன்வாழ்வை அமைத்துக்கொண்டவர்.
* எதையும் தனிமனித விருப்பு வெறுப்புகளாகக் கொள்ளமால் அதற்கு அப்பாற்பட்டு எமது இனத்தின் விடுதலைக்கான விருப்பு வெறுப்புக்களாகக் கணக்கு வைத்துக் கொள்பவர்.

*அவரின் பன்முக ஆற்றலையும், உள்ளூறும் அழகிய மெல்லிய உணர்வுகளையும் இந்த உலகம் எப்படி அறிந்துகொள்ளுமோ, எவ்விதம் இதை அறியச் செய்வோமோ என்பதே எனக்குள் அடிக்கடி எழுகின்ற ஆதங்கமாகும். எங்கள் தலைவரின் காலத்தில் அவருடன் இணைந்து 'இராமர் அணைக்கு அணிற்பிள்ளைப் பங்காகவேணும்' நானும் உழைத்தேனென்பது என்பிறப்புக்கும் அர்த்தம் தரும். இந்த நிறைவிலேயே பெருமகிழ்வுடன் நானும் முற்றுப் பெறுவேன். எனக்கிதுவே போதும்.*

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'



தமிழீழ ஆவணக்காப்பகம்
TamilEelam Archive







# தேசியத் தலைவர்

## கடந்துவந்த பாதையில் சில துளிகள்

1985 ஆரம்பப்பகுதியில் எமது பயிற்சி முகாம் நிறைவுற்றபோது அதனைப் பார்வையிட வந்திருந்த தேசியத்தலைவர் அவர்கள் எம்முன் உரையாற்றினார். அப்பொழுது அவர் 'எந்தவொரு பலம் வாய்ந்த எதிரியிடத்திலும் பலவீனம் நிச்சயமாக இருக்கும். அதை நாங்கள் கண்டறிந்து தாக்குதல்களை மேற்கொள்வோமேயானால் நிச்சயமாக நாம் வெற்றி பெறுவோம்' எனக்கூறியதுடன் அதற்கு உதாரணமாக 'கோலியாத்தும் சிறுவனும்' என்ற கதையையும் எடுத்துச் சொன்னார். இது அதிக எண்ணிக்கை, ஆயுதபலம் மற்றும் பணபலம்மிக்க எதிரியை எம்மாலும் வெல்ல முடியும் என்ற நம்பிக்கையை எமது போராளிகளிடையே ஊட்டியது.

1987இல் எமது வடமராட்சி மண்ணை ஆக்கிரமிப்பதற்காக இலங்கை இராணுவம், கடற்படை, மற்றும் வான்படையினர் 'ஒப்பரேசன் லிபரேசன்' எனப் பெயர் சூட்டி, கூட்டு நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டிருந்தனர். அந்நடவடிக்கையானது இலங்கையின் பாதுகாப்பு அமைச்சுக்குட்பட்ட பெரும்பாலான அனைத்து வளங்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையாகும். இந்நடவடிக்கையின்போது எதிரியின் முன்னேற்றத்தைக்கண்டு

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அஞ்சிய ஒருசில போராளிகள் அப்பிரதேசத்தைவிட்டு பின்வாங்கியதுடன் 'அவன் அடிக்க அடிக்க வருகிறான்' எனவும் கூறலாயினர். அப்பொழுது தேசியத்தலைவர் அவர்கள் அப்போராளிகளை அழைத்து 'நீங்கள் சரியாகக் குறிபார்த்துச் (Aim பண்ணி) சுட்டீர்களா?. உங்களுக்கும் அவர்களுக்குமிடையில் எவ்வளவு தூரமிருந்தது?' போன்ற கேள்விகளைக் கேட்டார். அதற்குச் சரியாகப் பதிலளிக்க முடியாத அப்போராளிகள் தமது அறியாமை என்ற தவறை உணர்ந்தனர். அத்தவறை அவர்கள் உணர்ந்ததன் பயனாக அவர்கள் மீண்டும் வடமராட்சிப் பிரதேசத்திற்குள் ஊடுருவிச் சென்று எதிரிக்கெதிரான வெற்றிகரமான சில பதுங்கித்தாக்குதல்களை மேற்கொண்டனர். எனவே ஒருவனுக்குள் இருக்கும் அறியாமை, பயம் என்பனவற்றைப் போக்கி அவனுக்குள் இருக்கும் வீரம், திறமை என்பவற்றை வெளிக்கொணருவதற்குத் தலைவருக்கு நிகர் அவரேதான்.

1987இல் இந்தியப்படையினர் எமது பிரதேசங்களில் நிலைகொண்டிருந்தபோது இந்தியாவிற்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையில் உலகக்கிண்ணக் கிரிக்கட் இறுதிச்சுற்றுப்போட்டி நடைபெற்றது. அப்பொழுது நிச்சயமாக இங்கு நிலைகொண்டிருந்த ஒவ்வொரு இந்தியப்படையாளும் கிரிக்கட் வர்ணனையைக் கேட்டுக்கொண்டேயிருந்திருப்பான் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. ஆனால், இப்போட்டியில் இந்தியாவே வெல்லும் என முழுமையாக நம்பியிருந்த இந்தியப்படையினருக்கு ஏமாற்றமே எஞ்சியது. இப்போட்டியில் இந்தியா தோல்வியைத் தழுவும் என்றநிலை வந்தவுடன் சுழிபுரம் மற்றும் வட்டுக்கோட்டைப் பகுதிக்கு எழுந்தமானமாக ஆட்டிலறி எறிகணைகளை வீசும்படி பிரிகேடியர் பெர்ணான்டஸ் பணித்தார். இவரே இங்கு ஆட்டிலறி பிரிகேட்டின் கட்டளையதிகாரியாகப் பலாலியிலிருந்து கடமையாற்றிக் கொண்டிருந்தவர். மேலும் சுழிபுரம், மூளாய் மற்றும் வட்டுக்கோட்டை போன்ற வலிமேற்குப் பிரதேசமே அப்போது எமது முழுமையான கட்டுப்பாட்டில் இருந்தது. பின்னர், இவ்வதிகாரியின் பணிப்பில் மேற்கொள்ளப்பட்ட எறிகணை வீச்சுக்களால் சுழிபுரப் பகுதியில் அகதிமுகாமில் தங்கியிருந்த அப்பாவித் தமிழ் மக்கள் ஐவர் கொல்லப்பட்டதுடன் 15 இற்குமேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இச்சம்பவத்தைக் கேள்வியுற்ற தேசியத் தலைவர் அவர்கள் 'தமது நாட்டின் கிரிக்கட் தோல்விக்காக எமது அப்பாவி மக்களைக் கொல்லும் ஈனர்களுக்குத் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்' எனக்கூறினார்.

*"கிரிக்கட் தோல்விக்காக எமது அப்பாவி மக்களைக் கொல்லும் ஈனர்களுக்கு தகுந்த பாடம் புகட்ட வேண்டும்"*

1988 காலப்பகுதியில் நாம் தலைவரின் மணலாற்றுப் பாசறைக்குச் செல்ல முன்பு, தலைவர் அவர்களின் முகாம் மிகவும் இறுக்கமானதாக, சிரிப்பொலியற்றதாக, பகிடிகளற்ற ஓரிடமாகவே இருக்கும் என நம்பியிருந்தோம். ஆனால், அங்கு சென்ற பின்னர்தான் தெரிந்தது நாம் தவறான கணிப்பை மேற்கொண்டிருந்தோம் என்பது. ஒப்பரேசன் செக்மேற் 1, 2, 3 எனப் பெயர் குறிப்பிட்டுப் படை நடவடிக்கைகளை இந்தியப்படையினர் மேற்கொண்டிருந்தனர். மோப்ப நாய்கள், சூழல் வெப்பத்திலிருந்து வெப்பம் கூடிய பொருளைக் காண்பிக்கும் ரேடார் சகிதம் அக்காட்டை இந்திய இராணுவம் அங்குலம் அங்குல



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**சு.பிருந்தன்**

படைய அறிவியற்
கல்லூரி,
தமிழீழ
விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.


மாக வேவு எடுத்துக்கொண்டிருந்தனர். அவ்வேளை யிலும்கூட மாவீரர் லெப்.கேணல் விக்டர் (மன்னார் மாவட்டத் தளபதி) அவர்களின் நினைவுநாள், லெப் சங்கரின் நினைவுநாள் (மாவீரர் நாள்) என்பன கலைநிகழ்வுகளுடன் அங்கு நடாத்தப் பட்டன. அது மட்டுமன்றி, புதுவருடப்பிறப்பைக்கூட நடனம், நாடகம், பாட்டுபோன்ற கலைநிகழ்வுக ளுடன் நடாத்த அவர் தவறவில்லை. 'பம்பல்' அடிக்கிற நேரத்தில் பம்பல் அடிக்க வேண்டும் அதேவேளை கடமையைப் பொறுப்புடன் செய்ய வேண்டும் என்றே அவர் கூறுவார். அங்கிருந்த போராளிகளின் பிறந்த நாட்களிற்கூட இனிப்புகள் வழங்கி வாழ்த்துக் கூற அவர் தவறவில்லை. அவரது கட்டுக்குலையாத மனவுறுதி, தீர்க்கமான முடிவெடுக் கும் தன்மை, முன்னெதிர்வுகூறும் ஆற்றல் என்பன அவரை எப்பொழுதும் ஒரு மன அழுத்தமற்ற (English) மனிதனாக ஆக்கிவிட்டிருந் தது என்பதுதான் அவற்றுக் கெல்லாம் ஒரே காரணம்.



1989 ஆரம்பத்தில் மண லாறு மாவட்டத்தில், சாம்பல் குளம் (கஜபாபுர) பகுதியில் இலங்கை இராணுவத்தின ரின் ரோந்து அணி ஒன்று ரோந்து நடவடிக்கையில் ஈடு பட்டு வருவதாக எமது வேவு அணி தலைவரிடம் கூறியது. அத்துடன் தம்முடன் வேறுசில போராளிகளும் வந்தால் இவ் இராணுவப் படையணியைச் சுலபமாகத் தாக்கியழிக்க முடியும் எனக்கூறினர். அதற்குத் தலைவர் அவர்கள் அவசரப்பட வேண்டாம், மேலும் சில தகவல்களை எடுத்துவிட்டு அந்த ரோந்துப்படையணியைத் தாக்கலாம் என அவ்வேவு அணியிடம் கூறினார். (அங்கு கார்த்திக் மாஸ்டரை அவ்வேவு அணியுடன் அனுப்பி அந்த ரோந்து அணியின் நகர்வு வீடியோவில் பதிவு செய்யப்பட்டது.) பின்னர் தலைவர் அவர்கள் உடன டியாகவே செயலில் இறங்கினார். இத்தாக்குதலுக் கான திட்டத்தை வகுத்தார். இத்தாக்குதலுக்கு 20 பேர்கொண்ட ஆண், பெண் போராளிகள் தெரிவுசெய் யப்பட்டனர். இவர்களுக்கு நேரடியாகத் தலைவர் அவர்களே 2 நாட்கள் பயிற்சிகளை வழங்கினார். பின்பு அவர் இக்குழுவைக் குறிப்பிட்ட இடத்திற்கு அனுப்பித் தாக்குதலில் ஈடுபடுத்தினார். இத்தாக்கு தலில் 19 இலங்கை இராணுவத்தினர் கொல்லப்பட் டனர். ஒருவர் காயத்துடன் தப்பியோடிவிட்டார். சுமார் 20 றைபிள்கள் கைப்பற்றப்பட்டன. எமது தரப் பில் இரு போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண் டனர். இத்தாக்குதல் நடைபெற்ற அடுத்த நாள் இலங்கை அரசு (பிரேமதாசாவின் அரசு) விடுதலைப் புலிகளுடன் போர் நிறுத் தத்தை அறிவித்தது என் பது இங்கு குறிப்பிடத்தக் கது. பின்னர் (அப்பொழுது) நடைபெற்ற பேச்சுவார்த்தை மேசையிலும் புலிகளின் கை ஓங்கியிருந்தது என்பது நோக்கத்தக்கது.

1992 இல் மண்டைதீவு கூட்டுப்படை முகாமின் இறங்குதுறையில் இலங் கைக் கடற்படைக்குச் சொந் தமான நீருந்து விசைப்படகு ஒன்று இரவுவேளைகளில் தரித்து நிற்கின்றதென அப் பகுதி மக்கள் எமக்குக் கூறினர். இது பகலில் பூநகரி முகாமிற்கான வழங்கல் பணியில் ஈடுபடுவதுடன் அப்பிரதேசத்திலுள்ள மீன வரை இரவு பகல் பாராது துன்புறுத்தியும் வந்தது. எனவே இப்படகினை அழிக்க வேண்டும் எனத் திட்டமிட்டு அத்திட்டத்தைத் தலைவரிடம் சமர்ப்பித்த போது அவர் 'ஏன் அப்பட கினை எம்மவர்களால் கைப்பற்ற முடியாது' எனக் கேட்டார். அத்துடன், அதனைக் கைப்பற்றுவதற்கான திட்டத்தையும் தந்தார். அதுவரை காலமும் உட்கரை யோர ரோந்துப்படகுகள், வழங்கல் படகுகள் பலவற்றை அழித்த எம்மவர்களுக்குத் தலைவரின் கேள்வி மிகுந்த தன்னம்பிக்கையைக் கொடுத்தது.

பின்னர் தலைவரின் பணிப்பிற்கிணங்க அப்பட கிற்கருகாமையில் சென்று வேவு பார்க்கப்பட்டது. அதன்பின்னர், ஒத்திகை மேற்கொள்ளப்பட்டு, நட வடிக்கை மேற்கொண்டபோது எவ்வித இழப்பு மின்றி அப்படகினை எம்மவர்கள் கைப்பற்றிக் கொண்டுவந்து சேர்த்தனர். உண்மையில் தலைவர் அவர்கள் அப்படியொரு கேள்வியைக் கேட்டிருக்கா விட்டால் பல இலட்சம் பெறுமதியானதும் அதுவரை எம்மவர்களின் கைகளுக்குக் கிடைக்காததுமான பெரிய அப்படகினை எம்மவர்களால் எடுக்க முடி யாது போயிருக்கும். பின்னாளில் எதிரியின் பல படகுகளைக் கைப்பற்றுவதற்கு அத்திவாரமிட்டது இத்தாக்குதலே என்றால் அது மிகையாகாது. இப்படகு எமது கையில் கிடைத்தவுடன் அத்தாக்குதலில் பங்குபற் றியவர்கள் ஒவ்வொருவரும் தலைவரின் ஆற்றலை வியந்து நின்றனர்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

# அனைவருக்கும்
# ஒரே நீதி



திருகோணமலை மாவட்டத்தில் எமது கட்டுப்பாட்டிலுள்ள மூதூர் பிரதேசத்தினுள் அமைந்த காட்டுப் பகுதியினுள் அயல் எல்லைக் கிராமத்தைச் சேர்ந்த ஒரு சிங்களப் பெண்மணி வழிதவறி வந்து விட்டார். அப்போது அங்கு வைத்து அச்சிங்களப் பெண்மணிக்குத் துப்பாக்கியைக் காட்டி மிரட்டி ஒரு தமிழ் வாலிபன் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி விடுகின்றான். இதனை அச்சிங்களப் பெண்மணி எமது இயக்கத்தின் முகாமிற்கு வந்து முறைப்பாடு செய்தாள். உடனே எமது இயக்கப் போராளிகள் அனைவரும் தேடுதலில் ஈடுபட்டு அந்த வாலிபனை இறுதியாக ஆதாரங்களுடன் தேடிக் கண்டு பிடித்து விட்டார்கள். அத்துடன் அச்சிங்களப் பெண்மணியும் அவனை அடையாளங் காட்டி விட்டார். அவ்வாலிபன் எமது இயக்கத்தினுடைய தீவிர உதவியாளனும், அங்கு பெரும்பாலான காட்டுப் பிரதேசங்களுக்கான வழிகாட்டியுமாவான். அவ்வேளை அச்சிங்களப் பெண்மணியானவள் அங்குள்ள தமிழ்ப் பெண்கள் சிலரின் உதவியுடன் அங்கு அமைந்துள்ள சிறிய வைத்தியசாலை ஒன்றிற்கு வைத்திய சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டாள்.

இச்செய்தியை மூதூர் பிரதேசப் பொறுப்பாளர் தேசியத் தலைவர் அவர்களுக்கு விரிவாக அறிவித்து என்ன செய்வதென்று கேட்டார். அத்துடன் அச்சிங்களப் பெண்மணியைக் வல்லுறவுக்கு உட்படுத்திய வாலிபன், அச்சிங்களப் பெண்மணியானவள் முன்பு தமிழர்கள் வாழ்ந்த அதே கிராமத்தில் தமிழர்களைத் துரத்தியடித்து விட்டு குடியேற்றப்பட்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டவள் என்றும் அதே சிங்களக் குடியேற்றத்தைச் சேர்ந்த சிங்களவர்கள் எமது தமிழ்ப் பெண்களை வல்லுறவுக்கு உட்படுத்தியிருக்கின்றார்கள் என்றும் அதனால்தான் தான் அந்தச் சிங்களப் பெண்மணியைக் வல்லுறவுக்கு உட்படுத்தியதாக நியாயப் படுத்தியும் தலைவருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன் அத்தமிழ் வாலிபன் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்குச் செய்த பங்களிப்புக்களையும், அவன் இல்லாது விட்டால் அங்குள்ள பெரியதொரு காட்டுப் பிரதேசத்திற்கு வழிகாட்டி இல்லை என்பதையும் அந்தப் பொறுப்பாளர் அறிவித்திருந்தார்.

அதற்குத் தேசியத் தலைவர் அவர்கள் உறுதியாக 'அனைவருக்கும் ஒரே நீதிதான்' என்றும் அச்சிங்களப் பெண்மணியை அவரது சொந்தக் கிராமத்திற்கு அனுப்புவதற்கு முன்பு அப்பெண் அறியக்கூடியதாக அவ்விளைஞனுக்கு மரண தண்டனை வழங்கும் படியும் அதன் பின்பு அப்பெண்ணைப் பாதுகாப்பாக அவரது சொந்தக் கிராமத்திற்கு அனுப்பும்படியும் அறிவித்திருந்தார். மறுநாள் தண்டனை நிறைவேற்றப்பட்ட விடயமும், சிங்களப் பெண் பாதுகாப்பாக அவரது கிராமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட விபரமும் பிரதேசப் பொறுப்பாளரால் தேசியத் தலைவர் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதனைப் படித்த தேசியத் தலைவர் அவர்கள் அங்கிருந்த தளபதிகளுக்குக் காட்டிவிட்டு, அனைவருக்கும் ஒரே நீதிதான் என்று உறுதியாகக் கூறினார்.

**சமூக விரோதிக்கும், விடுதலைப் போராளிக்குமான இடைவெளி மிகமிகக் குறைவு.**

சமூகத்தில் விடுதலைப் போராளியும் கொலை செய்கின்றான். கொள்ளையடிக்கின்றான். வேண்டிய வாகனங்கள் மற்றும் உடமைகளைப் பறித்துக் கொள்கின்றான். இதே போன்றே சமூக விரோதியும் சமூகத்தில் கொலை செய்கின்றான், கொள்ளையடிக்கின்றான், வேண்டிய வாகனங்கள் மற்றும் உடமைகளைப் பறித்துக் கொள்கின்றான். அப்படியானால் விடுதலைப் போராளிக்கும், சமூக விரோதிக்கும் என்ன வேறுபாடு இருக்கின்றது. இருவருமே ஒரே செயலைச் செய்தாலும் இருவரினதும் மனதில் செயற்படத் தூண்டும் எண்ணமொன்று மட்டுமே வேறுபடுகின்றது.

சமூக விரோதி தனது சுய தேவைக்காக அல்லது பொறாமையினால் அல்லது கோபத்தினால் அல்லது மனவேதனையினால் இவற்றை மேற்கொள்கின்றான். விடுதலைப் போராளி தனது தேசத்தின் விடுதலைக்காகச் செய்கின்றான். இவற்றைக் கடமை உணர்வோடு, விடுதலையுணர்வோடு அவன் மேற்கொள்கின்றான். இவற்றை அவன் விரும்பிச் செய்வதில்லை. எனினும் தேசத்தின் விடுதலைக்கு அவசியமானபோது அவற்றைச் செய்கின்றான்.

**தினேஷ் மாஸ்ரர்**

போராளி,
தமிழீழ
விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.



விடுதலைப் போராளியும் சில சந்தர்ப்பங்களில் சமூக விரோதியாகலாம். அதற்கு உதாரணமாக நான் உங்களிற்கு ஒரு கதையைச் சொல்லுகின்றேன். 'நீங்கள் பாடசாலையில் படித்தீர்கள். அப்போது உங்களுடன் படித்த சக மாணவன் கல்வியிலும், விளையாட்டிலும் தொடர்ச்சியாகப் போட்டியிடுகின்றான். சில வேளைகளில் நீங்கள் வெல்லுவீர்கள், சில வேளைகளில் அவன் வெல்லுகின்றான். இவ்வாறு போட்டியிட்டுக் கொண்டிருந்த நீங்கள் தமிழீழ விடுதலைப் போராட்ட உணர்வினால் இயக்கத்தில் இணைந்து கொள்ளுகின்றீர்கள். ஆனால் அவனோ தொடர்ந்து கற்று பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி மருத்துவக் கல்லூரிக்குச் செல்கின்றான். மருத்துவராகின்றான். பணம் சம்பாதித்து சொந்தமாக ஓர் கார் வாங்கி வசதியாக இருப்பதைக் காண்கிறீர்கள்.

நீங்கள் ஒரு நாள் சைக்கிளில் சென்று கொண்டிருக்கும் போது வீதியில் அவனது கார் உங்களுக்கு எதிரே வருகின்றது. உடனே உங்களுக்குப் பழைய ஞாபகங்கள் வருகின்றன. இன்றைய உங்களின் நிலையை அவனது நிலையுடன் ஒப்பீட்டுப்பார்த்து பொறாமை உணர்வு ஏற்படுகின்றது. இதன் விளைவால் நீங்களோ அல்லது வேறு விடுதலைப் போராளிகளூடாகவோ, அக்காரினை விடுதலைப் போராட்டத்திற்குத் தேவையெனக் கையகப்படுத்துகின்றீர்கள். இச்சம்பவத்தை வெளியிலிருந்து பார்க்கும் மக்களுக்கு ஏன் உங்களின் சக விடுதலைப் போராளிக்குக் கூட சிலவேளை நீங்கள் செய்யும் செயல் சரியாகப் படலாம். ஆனால் நீங்கள் செய்யும் செயல் சமூக விரோதச் செயல் என்பதை உங்களால் மட்டுமே உணர்ந்து கொள்ள முடியும்.' விடுதலைப் போராளிகளாகிய நீங்கள் இவற்றை மனதில் நிறுத்தி விடுதலை உணர்வுடன் உங்கள் கடமைகளைச் செய்ய வேண்டும். நீங்கள் ஒரு போதும் சமூக விரோதியாகிவிடக்கூடாது, என்று ஒருமுறை போராளிகள் மத்தியில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தேசியத் தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

'புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்'

தமிழ் ஆவணக்காப்பகம் TamileelamArchive

**நீதித்துறை** ❁ தனிப்பட்ட உறவுகளுக்கும், பந்த பாசங்களுக்கும் இடமளிக்காது; நேர்மையுடன் பிணக்குகளை அணுகி, சத்தியத்தின் அடிப்படையில் மக்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## ‘சிறந்து பிறந்த மொழிகளில் பிறந்ததும் சிறந்தது தமிழே’

அத்தகைய தமிழின மக்கள் தலைவனாம் மேதகு. வே.பிரபாகரன் அவர்கள் ஓர் அதிமனிதன். ஆம், அவர் அதீத வல்லுநர்களின் மொத்தமாகவும் சாரமாகவும் உள்ளார்.

அதனாற்றான், அவரால் ஒரு தளத்தில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், மறு தளத்தில் தமிழீழ நிருவாகக் கட்டமைப்பையும் ஒருங்கே வெற்றிவழிப்படுத்திச் செல்லமுடிகின்னறது.

அவரே ஆரம்பித்து முன்னெடுக்கும் ஆயுதவழிப் போராட்டம் அவரது அதிமனிதத்தைக் காட்டும் கண்ணாடியாக பெரும்பாலும் இருக்கின்றது.

இதனை அறியப் பெற்றதும் நான் அவர் மீது ஈர்க்கப்பட்டேன். காரணம், ஆசைக்கு விலைபோகும், சுகபோகங்களுக்கு அடிமைப்படும், ஆடம்பர அலங்காரங்களால் கவரப்படும் இளைஞர்கள் மத்தியில் அவர் மட்டும் தேசப் பற்றுறுதியினாலும் விடுதலை வேட்கையினாலும் தனது உன்னத குறிக்கோளுக்காக தன்னையே தியாகம் செய்துழைத்து அவரது அதிமனிதப்பண்பை வெளிப்படுத்தியுள்ளமையாலாகும்.



### எங்கள் அதிமனிதன் காணட்டும் இன்னும்

# ஆயிரம் பிறைகள்

ஆம், அவராற்றான் அவரினத்தின் அடிமை விலங்கொடிக்க முடியும், தன் மக்களுக்காக தன்னையே ஒறுத்த அவராற்றான் அம்மக்களை இரட்சித்து மீட்க முடியும். பொருத்தமான போராட்டத்தையே தெரிவுசெய்யும் தீர்க்கதரிசி அவராற்றான் தேசியப்போராட்டத்தையும் தேச நிருவாகத்தையும் சிறப்பாக வழிப்படுத்த முடியும்.

அந்நிய ஆதிக்கமாகவோ, தேசத் துரோகமாகவோ எம் மண் மீதும், மக்கள் மீதும் வரும் பகைமீது புகையில்லா

தமிழீழ ஆவணக்காப்பகம்
TamilEelamArchive

# அகவை 50

பொது அன்னையான தமிழ் அன்னை இந்தச் சிறுவர்களைத் தாயாக அரவணைத்திருக்கிறாள். எமது போராளிகள் அனைவருமே இவர்களது சகோதரர்கள். எமது இயக்கம் என்னும் மாபெரும் குடும்பத்தில் இவர்கள் இணைபிரியாத அங்கமாக இணைந்து உள்ளனர். தனிக்குடும்பம், அந்தக் குடும்பத்தை சுற்றி உறவுகள் என்ற வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால் ஒரு பரந்த வாழ்வையும் விரிந்த உறவுகளையும் வைத்துக் கொண்டுவளரப் போகும் இவர்கள், எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாகத் திகழ்வார்கள் என்பது திண்ணம். இந்தச் சமூகச் சூழலில் இவர்களிடம் மண்பற்றும் மக்கள் பற்றும் ஆழமாக வேரூன்றிகாணம். ஆனால் இத்தகைய சமூக சேவைகள் வெற்றி பெற சமுதாயம் தனது ஆக்கபூர்வமான உதவிகளை மனப்பூர்வமாக வழங்க வேண்டும்'' என்று கூறினார்.

குறிப்பு - பெற்றோரை இழந்து யாரும் அற்ற நிலையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்த காந்தரூபன் என்ற இளைஞன் தானே விரும்பி தலைவரிடம் கேட்டு கரும்புலியாய் சென்று வீரச்சாவை தழுவிக் கொண்டார். இம் மாவீரன் தலைவர் பிரபாகரனிடம் ''யாரும் அற்றவனாக வாழ்ந்த என்னை விடுதலைப் புலிகள் என்னும் குடும்பத்தில் இணைத்து ஆளாக்கியதைப் போல், தமிழீழத்தில் அநாதைகளாக வாழும் பிள்ளைகளை இணைத்து அவர்களை அநாதைகள் என்ற நிலையில் இருந்து மீட்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார். அந்த மாவீரனின் ஆசையை நிறைவேற்றும் முகமாக காந்தரூபன் அறிவுச் சோலை எனப் பெயரிடப்பட்டது.

## கடற்புலிகள்

எமது ஆயுதப் போராட்டம் கடந்து வந்த ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் தமிழீழக் கடல் மிகப்பெரிய பாத்தி

நெருப்பாகவே விழுந்து, எமது இருளகற்றும் ஞான ஒளியாகவே அவர் நிமிர்ந்து நிற்கிறார்.

எந்தச் சக்தியாலேனும் இந்த அதிமனித ஒளியை கவிழ்த்துப்பார்க்க முடியுமா? கவிழ்த்துப்பார்க்க முனைந்தோர் எல்லோரும் நிமிர்ந்து ஒளியாக எரிந்த அந்த ஒளியைப் பார்த்து ஒழிந்தே போயினர்.

நாம் விடும் ஒவ்வொரு மூச்சும் மரணத்தை நோக்கி எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிதான். அந்த அடிகளை இந்த அதிமனிதன் வழியில் எடுத்துவைத்தவர் யாவரும் உன்னதமடைந்தார்கள். ஏனெனில் அவர்களே இந்த விடுதலையின் மூலவினைதகள்.

போரியல் வரலாற்றில் 'பிரகாசிக்கும் நட்சத்திரம்' ஆகவும், போராட்ட வரலாற்றில் 'நம்பிக்கை நட்சத்திரம்' ஆகவும் முத்திரை பதித்த இந்த அதிமனிதன் தமிழீழ நிருவாக ஆட்சியில் 'இறைமாட்சியும், குறிப்பாக முறையாட்சியில்'முறைமாட்சி'யும், படைத்துள்ளார்.



இ.பரராஜசிங்கம்

பொறுப்பாளர்,
நீதி நிர்வாகத்துறை,
தமிழீழ
விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.

இந்த அதிமனிதனின் கீழ் நெறிப்படுத்தப்படும் தமிழீழ நிருவாக ஆட்சியில் தூய்மை இருக்கின்றது. அதாவது, சிறிலங்கா நிருவாக அமைப்புகளைப் போல கையூட்டுக்களோ, ஊழல்களோ, முறையற்ற செல்வாக்குகளோ, அதிகார வரம்புமீறல்களோ, துஷ்பிரயோகங்களோ தமிழீழ நிருவாக அமைப்புகளில் இடம்பெறாதவகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன அந்தவகையில், இந்த அதிமனிதன் தமிழீழ நிருவாக ஆட்சியில் 'இறைமாட்சி' படைத்துள்ளார்.

பேரினவாதத்தினால் சட்ட உரிமைகள் மறுக்கப்பட்டதற்கும், நீதிகள் புறக்கணிக்கப்பட்டதற்கும் எதிராக எமது விடுதலைப் போராட்டத்தை நடாத்தினால் மட்டும் போதாது, எமக்கேயுரியதான முறையாட்சிக் கட்டமைப்பை நாமே நிறுவிச் செயலாற்றவும் வேண்டுமென இந்த அதிமனிதன் தமிழீழ நீதிநிருவாகத் துறையைநிறுவி முறையாட்சி புரிகின்றார்.

அந்தவகையில், அவர் காலத்திற்குக் காலம் சூழ்நிலைக்குத் தக்கதான, சட்டநீதிக்கு ஒத்ததான மதியுரைகளையும், நீதிமொழிகளையும் நீதித்துறைக்கு வழங்கி நெறியாளுகின்றார்.

'உணர்வுகளுக்கும், உறவுகளுக்கும் அடிமைப்படாது, சமூக நீதிக்கு முதன்மை கொடுக்க வேண்டும்'. 'முன்னர் ஒவ்வொரு நாடுகளும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்தவே சட்டங்களை உருவாக்கின. ஆனால், நாம் அப்படியில்லாது மக்களின் நலனுக்கு உகந்தவகையில் சட்டத்தைப் போற்றவேண்டும். அதேபோன்று அச்சட்டத்திற்கு ஏற்றவாறு நீதியையும் செலுத்தவேண்டும்.'

அதிமனிதனாம், எங்கள் தேசியத்தலைவர் அவர்களது

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நீதிமொழிகள் இவை மட்டுமல்ல, இவை அவற்றுள் சில. உண்மை நீதிக்காக அவரது நீதிமொழிகள் மட்டுமல்ல, செயற்திறனும் உள. விடுதலைப் போராளிகளையே நீதியாளர்களாக அமர்த்தி அவர் நீதிநிருவாகத்தை நெறிப்படுத்துகின்றார்.

'போராளிகள் ஓர் உன்னதமான குறிக்கோளுக்காக தமது உயிரையும் துறக்கத் தயாராகவுள்ள இலட்சியவாதிகள் என்பதை எமது மக்கள் அறிவார்கள். எனவே போராளிகளாகிய நீங்கள் நீதி நிருவாகத்தைப் பொறுப்பேற்கும்போது மக்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள்' என அவரால் மதியுரை வழங்கப்பட்டு நியமனம் பெற்ற நீதியாளர்கள் அவரது நெறியாளுகைக்கமைய, 'அறநெறி பிழையா அன்புடை நெஞ்சோடு' கடமை செய்கின்றனர்.

*போராளிகள் ஓர் உன்னதமான குறிக்கோளுக்காக தமது உயிரையும் துறக்கத் தயாராகவுள்ள இலட்சியவாதிகள் என்பதை எமது மக்கள் அறிவார்கள்.*

ஆதலால், அவையாவும் இந்த அதிமனிதனின் முறையாட்சியில் 'முறைமாட்சி' நிலவுவதையே காட்டுகின்றன.

தேச விடுதலைப் போராட்டத்தில் மட்டுமன்றி சமூக விடுதலைப் போராட்டத்திலும் அவரது அதிமனிதம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. அதற்காக, அவர் 'எமது சமூகத்தில் பெண்களுக்கெதிரான ஒடுக்குமுறைகள்,



தம்முன் வந்த வழக்குகளை நன்கு அலசி ஆராய்ந்து பார்க்கின்றனர். வழக்குப்பகுதியார் யார்மீதும் அவர்கள் கண்ணோட்டம் காட்டுவதில்லை. தராசு முள்ளை ஒத்த நடுநிலைமையில் இருந்து அவர்கள் சிறிதும் விலகுவதில்லை, முன்வைத்த சான்றுகளை மட்டும் வைத்துப்பார்க்காது சந்தர்ப்ப சூழ்நிலைகளையும் பார்த்தே தீர்ப்புக்களைத் தேர்ந்து கூறுகின்றனர்.

மற்றும், அத்தகைய தீர்ப்புக்கள் 'தருமம் தன் வழிச் செல்கை கடன்' என்ற அறவழி நீதிக்கொள்கைக்கும், 'சட்டம் தன்வழிச் செல்கிறது' என்ற சட்டவழி நீதிக் கொள்கைக்கும் அமைவாக வழங்கப்படுகிறதே ஒழிய, அவற்றின் மீது எவரது தலையீடுகளும் இருப்பதில்லை.

அநீதிகள் தொடர்ந்து ஆணாதிக்கக் கொடுமைகள் வளர்கின்றன. இந்தச் சமூக அநீதிகளிலிருந்து பெண்களுக்குப் பாதுகாப்பளிக்கும் வகையில் சட்டங்கள் உருவாக்கப்படுவதோடு, சீதனம் போன்ற பாதிப்பை ஏற்படுத்துகின்ற முறைகளும் சட்டத்தினால் நீக்கப்படவேண்டும்' எனக்கூறினார். பொருத்தமான சட்டங்களையும், பெண்கள் மேம்பாட்டு அமைப்புக்களையும், விடுதலைப் போராட்ட வாய்ப்புக்களையும் வழங்கினார்.

ஆதலால், அடுப்படிக்கும், படுக்கையறைக்கும் மட்டுமே பெண்கள் என்ற நிலையை அவர் இல்லாமல் செய்தார். மகாகவி பாரதி சொன்ன புதுமைப் பெண்களை அவர் நிகழ்த்தியே காட்டினார். ஆணுரிமையென்ன, பெண்ணுரிமையென்ன அவை சம

Tamileelam Archive

ரத்தை வகித்துள்ளது. 1984ம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தின், கடற்புலிகள் படைப்பிரிவிற்கு அதன் வரலாற்று ரீதியான பிறப்பைக் கொடுத்து, ஆரம்பத்தில் அதற்கு “கடற்புலிகள்” என்ற பெயர் சூட்டினார்.



சிறீலங்காக் கடற்படைக்குச் சவால் விடும் அளவிற்கு, விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் அணி இன்று வளர்ந்துள்ளது. இவ்வமைப்பில் ஆண் போராளிகளின் அணியுடன், கடற்புலிகள் மகளிர் படை அணி 01-03-1992 அன்று ஆரம்பிக்கப்பட்டு ஆண்களின் பங்களிப்புக்குச் சமமான தமது பங்களிப்பை ஆற்றி சாதனை படைத்து வருகின்றனர்.

### கரும்புலிகள்

இலட்சியத்தில் இரும்பு மனிதர்கள்.



கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு 1993 ஆடி 5இல் தமிழீழத் தேசியத் தலைவர் விடுத்த அறிக்கையில், கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பம் ஆகியது. என்றுமே உலகம் கண்டிராத, வுரிமையேயென அவர் எண்பித்தே காட்டினார். மணக்கொடைக் கொடுமையால் மணமாலை சூடமுடியாமல் ஏங்கியே மரணிக்கும் பெண்ணவலங்களையும் அவர் இல்லாமல் செய்தார். மற்றும், சமூகத்தாலும், சம்பிரதாயத்தாலும் சித்திரவதைப்பட்ட பெண்நிலைமைகளை மட்டுமல்ல சாதியென்று மோதி அழியும் வாழ்வையும் மாற்றியமைத்தார்.

இவற்றிடையே, அவர் தேச - சமூக பற்றுறுதியாளனாக மட்டுமன்றி மனித உறவுகளை நேசிக்கும், மன உணர்வுகளை மதிக்கும் குணவியல்பிலும் தனது அதிமனிதத்தைக் காட்டியுள்ளார்.

அதற்காக, ‘யாருமில்லை என்று யாருமில்லை’ என்ற அவர், பெற்றோரை - இரத்த உறவுகளை இழந்த பிள்ளைகளை தனது பிள்ளைகளாக காந்தரூபன் அறிவுச்சோலையிலும், செஞ்சோலையிலும் அரவணைத்து வளர்க்கின்றார். மாவீரர்களின் பெற்றோருக்கு தானே மகனாக இருந்து அன்புச்சோலையில் பராமரிக்கின்றார்.

*மணக்கொடைக் கொடுமையால் மணமாலை சூடமுடியாமல் ஏங்கி மரணிக்கும் பெண்ணவலங்களையும் அவர் இல்லாமல் செய்தார்.*

ஆதலால், அங்கே அவரது அத்தகைய உறவுகள் தமக்குள் சகோதர உறவுகளையும் வளர்த்துக் கொள்ளுகின்றன. அவை ஒருவர் மற்றவருக்கு அண்ணனாக, தம்பியாக, அக்காவாக, தங்கையாக மற்றும், எங்கள் அதிமனிதனுடன் தந்தை-பிள்ளைகளாக, மகன் - பெற்றோராக உறவுகூறும் அவர்களுக்கு அத்தகைய உறவு அடையாளத்தையும் முகவரியையும் கொடுத்துள்ளன.

மற்றும், அவர்கள் தனிமைச் சிறை உணர்வையன்றி சுதந்திர உணர்வையே, பாசப்பரிவு உணர்வையே கொண்டுள்ளனர்.

அதனாற்றான், அவர்களுள் ஒருவருடைய மகிழ்ச்சியில் பங்குகொள்ள, அவரது துன்பங்கண்டு கண்ணீர்விட மற்றவர்கள் உணர்வு காட்டுகின்றனர். உறவு சொல்லுகின்றனர்.

எனவே, மனித உறவுகளை நேசிக்கும், மனித உணர்வுகளை மதிக்கும் அவரது மாண்புக் குணவியல்பினாலும் அவரது அதிமனிதத்தைக் காட்டியுள்ளார்.

ஆகவே, சுதந்திர வாழ்வுக்குத் தடையான எல்லா எல்லைக் கோடுகளையும் கடக்கவும், அழிக்கவும் எல்லையற்ற வல்லமை கொண்ட எங்கள் அதிமனிதனிடம் அந்த ஒளிமயமான நாளைக்காக இந்த ஆட்சி தரப்பட்டிருக்கின்றது.

அந்தவகையில், எம் விடுதலையின் தரிசனமாகித் தன் பொன் அகவை விழாக்காணும் எங்கள் அதிமனிதன் காணட்டும் இன்னும் ஆயிரம் பிறைகள்.

‘புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்’

தமிழீழ ஆவணச்சுவடகம்
Tamileelam Archive



போராட்டம் சந்தித்த நெருக்கடிகளும்,
தடைநீக்கியாகச் செயற்பட்ட **தலைவனும்.**

*1972 / 1973 / 1974*

ஆயுதப் போராட்டம் கருவிலிருந்த காலம்.
தனியாகவும் சிறு குழுவாகவும் ஆயுதப் போராளிகள் உருவாகிக் கொண்டிருந்த நேரம்.
துப்பாக்கி, வெடிகுண்டு, புரட்சி என்பவற்றில் அனுபவம் எதுவுமே இல்லாத ஒரு பூச்சியநிலை.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

ஆயினும் அரச வன்முறையை எதிர் வன்முறையாலேயே எதிர் கொள்ள வேண்டும் என்ற துடிப் புடன் இளைஞர்கள் சிலர் வீதிக்கு வரத்தொடங்கிய காலம். சிங்கள இனவாத அரச அடக்கு முறைக்கு 'முண்டு கொடுக்கும் தூண்களை' ஆயுதம் கொண்டு அப்புறப்படுத்த அவர்கள் விரும் பினர்.

அன்றைய நிலையில் விடுத லைப் போராட்டத்தின் ஒரு பெரிய தடையாக, கோடரிக் காம் பாக துரையப்பா விளங்கினார். சிங்களஅரசின் முகவரான இவர், யாழ். நகர மேயராக பதவிவகித் தபடி தமிழினத்தைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தார். இதனால் துரையப்பாவை அழித்து ஆயுதப் போராட்டப் பாதையை திறந்து வைக்க அவர் கள் விரும்பினர்

அன்றைய நிலையில் விடுதலைப் போராட்டத்தின் ஒரு பெரிய தடையாக, கோடரிக்காம்பாக துரையப்பா விளங்கினார். சிங்கள அரசின் முகவரான இவர், யாழ். நகர மேயராக பதவிவகித்தபடி தமிழினத்தைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருந்தார்.

இந்தப் பணியை நிறைவேற்ற பலர், பலதடவைகள் முயன் றனர். வெற்றி கிடைக்கவில்லை. அதேவேளை தமிழின விரோத நடவடிக்கைகளில் தொடர்ந்தும் தீவிரமாக ஈடுபட்ட துரையப்பா, போராட்டத்தின் பிரதான தடைக்கல்லாகவே மாறிவிட்டார்.

இந்தத் தடைக்கல் அகற்றப்படாவிட்டால் ஆயுதப் போராட் டப் பாதையை திறக்கவே முடியாது என்ற நிலை உரு வாகி விட்டது.

பலர் முயன்றனர்.

சிலர் திட்டங்களுடன் நின்று விட்டனர்.

சிலர் இலக்குவரை சென்று இயலாமையால் திட்டங்களைக் கைவிட்டனர்.

ஆனால் சிவகுமாரன் பலதடவை முயற்சி செய்தார்.

கைக்குண்டு வீசி, துப்பாக்கியால் சுட்டு, காருக்குள் குண்டு வைத்து பலவாறு முயன்றார். ஆனால் வெற்றி கிடைக்க வில்லை.

இராணுவ அனுபவமின்மை, அதனால் பதட்டம். அது காரணமாக சகபாடிகளிடமிருந்து ஒத்துழைப்பின்மை. முறையான வழிநடாத்தலின்மை என்பன தோல்விகளைக் கொடுத்தன.

இந்தத் தடைக்கல்லை எப்படியாவது அகற்றிவிடுவதென்று தலைவர் முடிவெடுத்தார்.

அது 1975 ஆம் ஆண்டு.

அப்போது தலைவருக்கு வயது 21.

நம்பிக்கையான சிலரைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, துணிவை மூலதனமாக்கினார். என்ன நடந்தாலும் இலக்கை அழித்து விடுவது என்று உறுதி எடுத்தார். தாக்குதலணிக்குத் தலைமை ஏற்றுச்சென்று, பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவி

# அகவை 50

எண்ணிப் பார்க்கவும் முடியாத தியா கப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதய மாகியது. கரும்புலிகள் வித்தியாசமா னவர்கள். அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மனித நேயம் படைத்தவர் கள். கரும்புலி என்ற சொற்பதத்தில் கருமையை மனோ திடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடு கின்றோம். இன்னொரு அர்த்த பரிமா ணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத பூடகமான இரகசியத் தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே கரும்புலி என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும். ஆழமான படிவமாக அமையப் பெற்றிருக்கிறது. இந்த இரகசியத் தன்மை கரும்புலி களின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலா தாரமானது. இது கருப்புலிகளின் சகா ப்தம். இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர் கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள், என்று தெரிவித்தார்.

## தமிழீழ படைத்துறைப் பள்ளி

1991 புரட்டாதி 19ம் நாள் உருவாக் கப்பட்ட தமிழீழ படைத்துறைப் பள்ளி யின் ஓராண்டு நிறைவு தினத்தை முன் னிட்டு அனுப்பிய வாழ்த்துச் செய்தி யில், தமிழீழப் படைத்துறைப் பள்ளி எனது முயற்சிகளில் ஒன்று. எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ளவேண்டும். ஆற்றல் மிகுந்த வர்களாக, புத்திசாலிகளாக, தேசப்பற்று உள்ளவர்களாக, போர்க்கலையில் வல்லுனர்களாக, நேர்மையும் கண்ணி

தமிழீழ ஆவணகாப்பகம்
Tamileelam Archive

லடியில் வைத்து - தடைக்கல்லை உடைத்து - ஆயுதப் போராட்டத்தின் ஆரம்பப் பாதையை திறந்து வைத்தார்.

துரையப்பா அழிக்கப்பட்டது தமிழர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. முதன் முதலில் தமிழ்த்துரோகிகளிற்கு எதிரான தாக்குதலை தலைவர் அவர்களே நடாத்தியிருந்தார். துரோகிகள் ஒழிப்புப் படலம் தொடங்கியது.

தமிழரின் ஆயுதப் போர் தத்தித் தத்தி நடைபயிலத் தொடங்கியது.

◆◆◆

துரோகிகள் களையெடுக்கப்படத் தொடங்கியதும், சட்டம் - ஒழுங்கைப் பேணல் என்ற போர்வையில் சிங்களக் காவல்துறை போராட்டத்தை பின் நோக்கி இழுக்க முயன்றது.

தகவல் கொடுப்போரும், உளவுத் துறையினரும், பொலிசாரும் போராளிகளின் இலக்குகளாகத் தொடங்கினர். போராட்டப் பயணம் வெற்றிகரமாகத் தொடர்ந்தது.

அப்போது இராணுவம் குறுக்கே வந்து நின்றது.

இராணுவம் மீது தாக்குதல் நடாத்தி வெற்றிகாண முடியுமா? போராளிகளின் உள்ளத்தில் ஒரு மனத்தடை எழுந்தது. இந்த மனத்தடையை உடைத்தெறியும்படி அன்றைய தாக்குதலணித் தளபதியாக இருந்த லெப். சீலனிடம் தலைவர் பணித்தார்.



லெப். சீலனின் தலைமையில் சென்ற லெப். கேணல் புலேந்தி அம்மானும் கப்டன் ரஞ்சனும் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் வைத்து முதன்முதலாக சிங்கள இராணுவத்தினர் சிலரை அழித்து அந்தச் சாதனையைப் படைத்தனர்.

போராட்டம் புதியதொரு பரிமாணத்துக்குள் சென்றது. ஒன்று, இரண்டு என்று உதிரிகளாக இராணுவத்தினர் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த போக்கிலிருந்து முன்னேறி பெருந்தொகையில் இராணுவத்தினரை அழித்து ஆயுதங்களைக் கைப்பற்றி இப்புதிய பரிமாணத்தை முன்னோக்கி நகர்த்திவிடும்படி தலைவர் ஆணையிட்டார்.

கண்ணிவெடி உபாயத்தைக் கைக்கொண்டு அதைச் சாதிக்கும்படி பணித்தார்.

போராளிகள் முயற்சிகளைத் தொடங்கினர்.

ஆரம்ப முயற்சிகள் சில அரங்கேறாமலே முடிவைச் சந்தித்தன.

உமையாள்புரத்தில் ஒரு கண்ணி புதைக்கப்பட்டு வெடிக்கவைக்கப்பட்டது. ஆனால் வெற்றிவரவில்லை. பொன்னாலைப் பாலத்துக்கு அருகில் கடற்படை வாகனம் மீது ஒரு கண்ணிவெடித்தாக்குதல் முயற்சி நடந்தது. கண்ணி வெடித்தும், முயற்சி வெற்றி பெறவில்லை.

இதேபோல மேலும் சில முயற்சிகள் பிசுபிசுத்தன.

புதிய பரிமாணம் ஸ்தம்பித நிலைக்கு சென்று விட்டது.

அதுவே போராட்டப் பாதையில் ஒரு தடைக்கல்லாகவும் மாறிவிட்டது.

> தம்பிதமடைந்து நின்ற போராட்ட வண்டியை திருநெல்வேலியில் வைத்து தலைவர் விரைந்தோடச் செய்தார்.

இந்த நிலையை வளரவிட்டால் போராளிகளின் மனவுறுதி சிதைந்து விடும். அது இராணுவத்துக்கு வாய்ப்பாக அமைந்து போராட்டத்தைப் பாதித்து விடும் என்றுணர்ந்த தலைவர் அவர்கள், கண்ணிவெடித் தாக்குதலொன்றை தானே நெறிப்படுத்தி நேரடியாகக் களத்தில் நின்று வெற்றிகரமாகச் செய்து முடித்து போராட்ட வண்டியை நகர்த்திவிட முடிவெடுத்தார்.

எமது விடுதலைப் போரை சர்வதேச மயப்படுத்திவிட்டதும், சிங்கள அரசின் குரூர முகத்தை உலகிற்கு புலப்படுத்திவிட்டதுமான 1983 யூலை 23 கண்ணி வெடித் தாக்குதலுடன், ஸ்தம்பித மடைந்து நின்ற போராட்ட வண்டியை திருநெல்வேலியில் வைத்து தலைவர் விரைந்தோடச் செய்தார்.

◆◆◆

திருநெல்வேலிக் கண்ணி வெடிக்குப் பின்னர் எமது விடுதலைப் போராட்டத்தில் பல்வேறு திருப்புமுனைகள் நிகழத்தொடங்கிவிட்டன. இதில் இந்தியத் தலையீட்டை குறிப்பிட்டுச் சொல்லலாம். இந்திய அரசின் அழைப்பை ஏற்று தமிழ்நாடு சென்ற தலைவர் அவர்கள், அங்கிருந்தவாறு போராட்டத்தை

**எல்லாளன்**

எழுத்தாளர்,
போராளி,
தமிழீழ
விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெற வேண்டும், என்று கூறியிருந்தார்.

## சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியை நான் உருவாக்கியதற்குக் காரணம் உண்டு. இரண்டாம்கட்ட ஈழப் போர் தொடங்கித் தீவிரமடைந்து வந்த காலகட்டம் அது. எமது தாயகத்தின் இதயபூமியான வன்னிப் பெருநிலத்தைக் கைப்பற்றும் நோக்குடன் எதிரியானவன் பெரும் படையெடுப்புகளுக்கு ஆயத்தங்கள் செய்துவந்த காலம். பிரதேசப் படையணிகளால் கெரில்லாப் போரியல் உத்திகளுடன் எதிரியின் பாரிய படையெடுப்புகளை முறியடிப்பது காலப்போக்கிற் சாத்தியமாகாது என்பதை நான் உணர்ந்தேன். எதிரியின் போரியல் வளர்ச்சிக்கேற்ப எமது விடுதலைப் படையும் வளர வேண்டும். இராணுவச் சமநிலையைப் படிப்படியாக எமக்குச் சார்பாகத் திருப்பவேண்டுமாயின் நாம் அடுத்த கட்டவளர்ச்சிக்கு ஆயத்தங்கள் செய்ய வேண்டும். எனவே மரபுவழிப் போரியல் வளர்ச்சிக்கு முன்னோடியாக ஒரு தாக்குதற் படையணியை உருவாக்க முடிவெடுத்தேன். அந்த படையணிதான் 'சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி.'

வழி நடாத்தத் தொடங்கினார்.
இதேவேளை தமிழீழமெங்கும், குறிப்பாக, வடதமிழீழத்தில் நிகழ்த்தப்பட்ட தொடரான கண்ணிவெடித் தாக்குதல்கள் சிங்களப் படைக்கு பெரும் இழப்புக்களை ஏற்படுத்தின. அதே வேளை அரசபடைகளுக்கெதிரான கெரில்லாப் போர்முறையும் உயர்ந்த பரிமாணத்தை நோக்கி வீறு நடை போடத் தொடங்கியது.
விளைவு: இராணுவம் முகாம்களுக்குள்ளேயே முடக்கப்பட்டது. முடக்கப்பட்ட இராணுவத்தை அதன் முகாம்களுக்குள்ளேயே வைத்து தாக்கி அழிக்கும் திட்டங்களுடனும் போராட்டத்திற்கு எதிரான இந்திய அழுத்தங்களிலிருந்து தப்பிக்கவும் தலைவர் மீண்டும் தமிழீழம் வந்தார்.
வந்தவுடனேயே மினிமுகாம்கள் மீதான தாக்குதற் படலத்தை ஆரம்பித்து வைத்தார்.
பதுங்கித் தாக்குதல், என்ற கெரில்லாத் தாக்குதற் போர்முறையின் ஆரம்ப வடிவம் கொமாண்டோத் தாக்குதல்களாகவும், அதிரடிகளாகவும் பரிமாணம் கண்டன. சிங்களப் படையணிகள் இராணுவத் தோல்விகளைச் சந்திக்கத் தொடங்கின.
போராட்டம் புது வேகத்துடன் விரைந்தது.
இந்த உண்மையை உணர்ந்த இலங்கை - இந்திய அரசுகள் எமது போராட்டத்திற்கு எதிராக கைகோர்த்தன.
இந்திய அரசின் அனுசரணையுடன் சிங்களப் படைகள் 'ஒப்பறேசன் லிபரேசனை' நடாத்தி வடமராட்சியை ஆக்கிரமித்தன. அத்துடன் நிற்கவில்லை.
ஆனையிறவிலிருந்து படைநடாத்தி வந்து அதன் துணையுடன் வலிகாமத்தையும் கைப்பற்ற முயற்சிகள் நடந்தன.
யாழ்ப்பாண மக்கள் நம்பிக்கையிழந்தனர்.
போராட்டவண்டி பெரிய நெருக்கடிக்குள் மாட்டிக்கொண்டது.
எனவே புதிய போர்முறை ஒன்றை அறிமுகப்படுத்தி, சிங்களப் படைத்துறைக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் கொடுத்து விடுதலைப் போரை ஒரு புதிய - உயர்ந்த பரிமாணத்துக்குள் கொண்டு செல்ல தலைவர் முடிவெடுத்தார்.
கரும்புலிகள் போர்முறையை வரைந்தார்.
மில்லர் என்ற வீரப்புலியை கரும்புலியாக்கி எதிரியின் கூடாரத்திற்குள் அனுப்பி ஆக்கிரமிப்புப் புற்று நோய்க்கு அறுவைச் சிகிச்சை ஒன்றைச் செய்தார் சிங்களப் படைத்துறை திகைத்தது.
போராட்டம் எதிர்கொண்ட நெருக்கடி தகர்ந்தது.

முடக்கப்பட்ட இராணுவத்தை அதன் முகாம்களுக்குள்ளேயே வைத்து தாக்கி அழிக்கும் திட்டங்களுடனும் போராட்டத்திற்கு எதிரான இந்திய அழுத்தங்களிலிருந்து தப்பிக்கவும் தலைவர் மீண்டும் தமிழீழம் வந்தார்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

மீண்டும் போராட்ட வண்டி நெல்லியடியில் இருந்து முன்னேறத் தொடங்கியது.

ஆனால் இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற ஒரு சதித் திட்டத்தைத் தீட்டி, இந்தியத் துருப்புக்களை தமிழீழத்துக்குள் கொண்டுவந்தனர்.

ஒரு வல்லரசுடன் மோதுவதைத் தவிர்க்கவும், 'அமைதி இழைகள் கொண்டு பின்னப்பட்ட சூழ்ச்சி வலைக்குள்' தமிழினம் சிக்கிவிடாது தடுக்கவும் அரசியல் சதுரங்கத்தை தலைவர் அவதானமாக ஆடினார். ஆனால் இந்திய அரசோ அரசியல் விளையாட்டுகளுக்கு அப்பால் 'நரபலி' எடுக்கத் தொடங்கியது.



தமிழருக்கு உரிமை பெற்றுக் கொடுப்பதற்குப் பதிலாக தமிழீழ தேசியத்தை கொன்று விடுவதிலேயே இந்தியா குறியாக இருந்தது.

இந்திய இராணுவ பலத்திற்கு அடி பணிவதன் மூலம், இரத்தம் சிந்தி நாம் வளர்த்தெடுத்த, தமிழீழ தேசியத்தை இந்தியா கொலை செய்ய அனுமதிப்பதை விட, எதிர்த்துப் போராடி அதைப் பாதுகாக்க முனைவதே சிறந்தது. என தலைவர் முடிவெடுத்தார்.

இந்திய- புலிகள் போர் தொடங்கியது. ஒரு மாதத்தில் யாழ். மாவட்டம் வீழ்ச்சியுற்றது. மற்றைய மாவட்டங்களும் இந்தியச் சிப்பாய்களின் ஆக்கிரமிப்புக்குள்ளாகின.

ஆயினும் தமிழீழத்தின் இதயத்துக்குள் புகுந்துகொண்ட தமிழீழத் தேசியக் காவலன், இந்தியச் சிப்பாய்களிடம் சிக்கிவிட்ட போராட்ட வண்டியை மீட்டெடுக்க ஒரு மீட்புப் போரை தொடங்கினார்.

ஆனால் தலைவரைக் கொல்லும் இலக்குடன் தமிழீழத்தின் இதயம் மீதே இந்திய அரசு ஒரு பெரும் படையெடுப்பை நடத்தியது.

வெள்ளம் போல் வரும் இந்தியச் சிப்பாய்களிடமிருந்து உயிரைப் பாதுகாக்க பணிந்து போவதே சிறந்தது என்று தலைவருக்குப் பலர் ஆலோசனை கூறினர்.

தலைவர் உயிருடன் இருந்தால்தான் போராட்டத்தை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தமுடியும் என்ற உண்மையை எடுத்துக்கூறி- வாதிட்டனர்.

ஆனால், போராட்ட வண்டியை இழந்துவிட்டு - தான் உயிர் வாழ தலைவர் விரும்பவில்லை.

எனவே போராட்ட வண்டியை மீட்டெடுப்பதற்காக இந்தியப் படையுடன் போராடி அதன் மூலம் சாவு வந்தால் அதை எதிர் கொள்ளவே தலைவர் விரும்பினார்.

போராட்ட வண்டியை இழந்துவிட்டு, தான் உயிர் வாழ தலைவர் விரும்பவில்லை.

இதேவேளை இந்திய வல்லரசுடன் போரிட்டு வெல்ல முடியுமா? என்ற அவ நம்பிக்கை மக்களை மட்டுமல்ல எமது மூத்த உறுப்பினர்கள், தளபதிகள், போராளிகள் என்று அனைவரையும் ஆட்கொண்டிருந்தது.

இந்த நிலையில் இந்தியப் படையுடன் போரிட்டு எமது விடுதலைப் போராட்டத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற மிகவும் துணிச்சலான - வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த முடிவை தன்னந்தனியனாகவே நின்று எடுத்த தலைவர் அவர்கள், தீர்மானத்துடன் நின்று விடாது, தானே போர்க்களத்தை நேரடியாக வழிநடாத்தத் தொடங்கினார்.

கெரில்லாப் போர்முறையில் புதிய-புதிய நுட்பங்களை, புதிய-புதிய தந்திரோபாயங்களை புகுத்திய தலைவர் அவர்கள் புலிகள் இயக்கம் சரித்திரம் படைக்க வழி காட்டினார்.

மணலாற்றுக் காட்டுக்குள் தலைவரின் நேரடி வழிகாட்டலில் புதிய சரித்திரம் படைக்கத் தொடங்கிய புலிவீரர்கள் படிப்படியாக தமிழீழமெங்கும் இராணுவ சாதனைகளைப் படைக்கத் தொடங்கினர். இந்தியப் படைகளின் 'செக்மேற்' நடவடிக்கையினை வெற்றிகொண்டதன் மூலம், மீட்கப்பட்ட எமது போராட்ட வண்டி மணலாற்றுக் காட்டுக்குள் இருந்து புத்தூக்கத்துடனும், புதிய வேகத்துடனும் புறப்படத் தொடங்கியது. தோல்விச் சகதிக்குள் இந்தியப் படை மாட்டிக்கொண்டது.

இழப்புக்கள் என்ற தேரேறி தோல்வியை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இந்தியப்படைகளை மேலும் விரைவாகத் தோற்கடிப்பதற்காக ஒரு இராஜதந்திர வியூகம் வகுத்த தலைவர் அவர்கள் சிங்கள அரசின் ஒத்துழைப்பையும் பெற்று அரசியல் - இராணுவ ரீதியில் பெருவெற்றி ஒன்றை தமிழினத்துக்குப் பெற்றுக் கொடுத்தார்.

இதன்பின்னர் இரண்டாவது ஈழப்போர் என்ற பகுதியூடாக எமது போராட்ட வண்டி, சிங்களப் படையணிகளுக்கு பேரிழப்புக்களை ஏற்படுத்திக் கொண்டு உறுதியான ஒரு தளத்தில் இறுதி வெற்றியை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றது.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# அவன் பெயரின் உச்சரிப்பே போதும் இனம் எழுந்து நிமிர!

**ஜெயா**

கவிஞர்,
எழுத்தாளர்,
சமூக
அரசியல்
செயற்பாட்டாளர்.
பிரான்ஸ்.

அகங்களைத் தந்து
முகங்களைத் தந்து
முகவரி தந்து
இருப்பின் வரியை
எழுதிய தலைவன்.

வற்றிய குரல்மொழி
வறுமை நீக்கி
சபையெலாம் நம் மொழி
பேசிடச் செய்தோன்.

விதியினை நொந்து
பொய்மையைப் போர்த்தி
சுருங்கிய மனிதம்
உயிர்பெறச் செய்தோன்.

சரித்திர நதியின்
திசையினை வகுத்தவன்.
காலச் சக்கரம் உருளும் போக்கை
சரியாய்க் கணித்த காலக் கணிதன்.

துன்பச் சிலுவையை தூக்கியபடிக்கு
துயர முள்முடி சூட்டியபடிக்கு
அகதி என்ற பொதுப்பதம் தாங்கி
இகழும் இனமாய் இளைத்தவர் தன்னை
மான இனமென நிமிர்த்திய புனிதன்

கட்டளை விரலின்
காலில் பணிந்து
நெளியும் மனிதப் புழுவென
நோக்கியோர்
நோக்கம் நோக முதுகினை நிமிர்த்தி
வீரப் புலியினம் இதுவென நிறுத்திய
காலத்தின் தலைவன்.

சுடரும் விழி
சோதனைக் கற்களை
சாதனைப் படிகளாய் மாற்றி மிதிக்கும்
சூரிய மதி
மனங்களை அளக்கும்

மகிமைப் பண்பு
குலையாக் கொள்கை
வளையா வீரம்
நேர்வரும் பகையை மோதிச் சரிக்கும்
நிமிர்ந்த நடை
சதிப்படை அடிப்புலம்
அறுக்கும் ஆற்றல்.
அஞ்சுதல் அடங்குதல்
கெஞ்சுதல் கீழ்ப்படல் எனும்
பொருள் அறியா
பொங்கும் முழுமை.

சூரியத் தகிப்பும்
சந்திர குளிர்ச்சியும்
ஒன்றிக் கலந்த மனிதப் புதுமை.
பகையினைக் கண்டால் தகிக்கும்
சூரியன்
சனத்திடை நின்றால் குளிரும் சந்திரன்

காலப் புதுமையை– இனம் செய்த
தவத்தின் மகிமையை
வாழ்வாங்கு வாழ்கவென
வாழ்த்தித் திளைப்பது மனம் செய்த
பேறு.

பரம்பரை இருளை
போக்கிய பகலவன்
பாதை நெடுகிலும் வாழ்த்தும் மலர்கள்.

இனத்தின் உயிராய்
இனத்தின் உணர்வாய்
இனத்தின் உருவாய்
இனத்தின் அகமாய்
இனத்தின் அழகாய்
இனத்தின் மூச்சாய்
இனத்தின் பேச்சாய்
இனத்தின் வளமாய்
இனத்தின் வாழ்வாய்
வாழும் தலைவா! வாழி நீ வாழ்!



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# Prabakaran
# The Man who sets the Agenda



S.Sivanayagam

Senior Journalist and Editor, Political Analyst, (former Editor of Saturday Review, Tamil Nation, Hot Spring) Tamil Eelam.

Political power, as is known, lies with Presidents, Prime Ministers and Heads of State. It is the office that they hold that gives them the authority (if not the wisdom) to determine the political fate of the countries they head. Why does it happen therefore that in a country like Sri Lanka, where the constitution itself bestows extraordinary powers to the President - powers unmatched by those of a Bush or a Chirac - that the incumbent in office looks powerless either to carry forward her mandate for peace, or rescue her country from being bogged down in war? The answer is simple. The one who is determining the political and military agenda in Colombo, is nowhere near Colombo, holds no office, sports no military title, but what is more ridiculous, he carries a price on his head and is known in Sri Lankan terminology as a "terrorist"!

We know of terrorists planting bombs in secret, but where in the world do you get over thousands of "terrorists" in uniform , and in full view, attacking a well-fortified army camp, overrunning it, wiping out the entire garrison, and taking away heavy weaponry? Is it not obvious that the Sri Lankan terminology is flawed? Once the terminology is flawed, the thinking gets erratic, and the entire behavioural pattern gets muddled. That is the basic semantic self-deception that is preventing successive Sri Lankan governments from making any headway in its 21-year old war against the Tamils. You keep on calling a powerful liberation force like the Tigers as "terrorists" till you are blue in the face, but that will only help you display your anger - your helpless anger at that - but will never help you to come to touch with cold reality.

Tamileelam Archive

Careless use of the word "terrorist" could also result in ultimate embarassment. Some "terrorists" of yesterday have the habit of turning up to be tomorrow's "Your Excellencies" Some even end up receiving the Nobel Prize for Peace!

**The one who is determining the political and military agenda in Colombo, is nowhere near Colombo, holds no office, sports no military title, but what is more ridiculous, he carries a price on his head and is known in SriLankan terminology as a "terrorist"!**



If Tiger leader Velupillai Pirabakaran is not a "terrorist", what kind of a man is he? Years ago, a veteran Sinhalese editor voted him - The Man of the Decade - and carried his photograph on the cover of his journal, Lanka Guardian. A religious man, Bishop Kenneth Fernando, a Sinhalese himself, saw in him a "humane person". Some military analysts describe him as being in the category of a "military genius" To the thousands and thousands of Tamil youths, men and women, who go smiling to their deaths, he is a demi-God.

In 1996 April, an Australian newspaper sent its Asia Desk editor Norman Aisbett to the northeast. He interviewed "Thamilaval" a Tigress whom he describes as a 25-year old battle veteran and asked her what she thought of Pirabakaran.

"My impression of him cannot be described in words", she said, "I am just proud to have been born in the age of the Leader" To millions of Tamils today, spread all over the world, he is the messiah, come to deliver. Dravida Kalagam leader in Tamil Nadu was once quoted as saying "There is only one Thiruvalluvar, one Kamban and one Pirabakaran" If such be the composite image that he conjures up in the minds of assorted people, it seems to us that President Kumaratunga's celebrated quote supplied to her user-friendly Indian journal India Today ("A merciless megalomaniac") is a trifle inadequate.

Madame President has only one Pirabakaran to contend with. But it has to be remembered that the Tamil leader has seen four Presidents before her come and go. He has seen Five War Ministers from Lalith Athulathmudali to the present Ratnasri Wickremanayake. He has seen ten Indian Major Generals in the northeast in his time, not to mention dozens of Sri Lankans with pips and ribbons and swagger sticks. And, he has not been trained in Sandhurst or Lebanon or in any military academies, not even in Wirawila.

So, what makes him tick? What makes the Tigers such a formidable force that Israeli weapons and Chinese gunboats and American training do not daunt them? In trying to get the right answers to these questions lies the hope for peace in Sri Lanka. And the day the Sri Lankan government and the Colombo Press and the Sinhalese people stop throwing the word "terrorists" around, will be the day when wisdom will dawn and peace prevail in that island so favoured by Nature but so sadly brought to the brink of ruin by its leaders. That will also be the day when the Sinhalese take control of their own destiny and the Tamil people of theirs.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் பிரபாகரன்



**எஸ்.சிவநாயகம்**

மூத்த ஆங்கில பத்திரிகையாளர், அரசியல் அறிஞர், (முன்னாள் ஆசிரியர், Saturday Review, Tamil Nation, Hot Spring) தமிழீழம்.

எமக்குத் தெரிந்தமட்டில், அரசியல் அதிகாரம் என்பது சனாதிபதிகளினதும், பிரதம மந்திரிகளினதும், நாட்டின் தலைவர்களினதும் உரிமை. அவர்கள் வகிக்கும் பதவிகளே அவர்களுக்கு அவ்வந்த அரசியல் அதிகாரங்களைக் கொடுக்கின்றன. அந்த அதிகாரங்களைக் கொடுக்கும் பதவிகளைக் கொண்டுதான்(மெய்யறிவைக் கொண்டல்ல) தாங்கள் தலைமை தாங்கும் நாடுகளின் அரசியல் விதிகளை அவர்கள் தீர்மானிக்கிறார்கள். ஒரு புஸ்சுக்கோ ஒரு சிறாக்குக்கோ இருக்கும் அரசியல் அதிகாரத்தை விடக்கூடிய மாபெரும் அதிகாரத்தை அரசியல் யாப்பால் பெற்றிருக்கும் சிறீலங்காவின் சனாதிபதி, மக்களால் அளிக்கப்பட்ட சமாதானத்திற்கான ஆணையை நிறைவேற்றாமல் இருக்கக் காரணமென்ன? சரி, அதுதான் முடியாவிட்டாலும், போரில் மூழ்கியிருக்கும் நாட்டைத்தானும் மீட்க முடியாமலிருப்பதற்குத்தான் காரணமென்ன?

இதற்கான விடை மிகவும் சுலபமானது. அரசியல் இராணுவ நிகழ்ச்சி நிரல்களைத் தீர்மானிக்கும் அந்த ஒருவர் கொழும்புக்கு அண்மையில் இல்லை. அவர் எந்த ஒரு பணித்துறைப் பதவியையும் வகிப்பதில்லை. அவருக்கு எந்த ஓர் இராணுவப்பட்டமும் கிடையாது. இதில் நகைப்புக்குரிய விடயம் என்னவென்றால், அவர் தனது தலைமீது ஒரு விலையைச் சுமந்து கொண்டிருக்கிறார். அதுமட்டுமல்ல, சிறீலங்காவின் சொற்பிரயோகத்தின்படி அவர் 'பயங்கரவாதி' என்ற திருநாமமும் சூட்டப்பட்டுள்ளார்.

இரகசியமாக வெடிகுண்டுகளைப் புதைக்கும் பயங்கரவாதிகளைப் பற்றி எங்களுக்குத் தெரியும். ஆனால் ஆயிரக்கணக்கான 'பயங்கரவாதி'களைச் சீருடையில் வைத்துக்கொண்டு, கோட்டை கொத்தளங்கள் எழுப்பி வலுப்படுத்தப்பட்ட இராணுவ முகாங்களுக்குள் இருக்கும் இராணுவத்தினர் மீது படையெடுத்துப் பாழ்படுத்தித் துடைத்தழித்துப் பாரிய ஆயுத் தளபாடங்களையெல்லாம் கைப்பற்றும் 'பயங்கரவாதி'களை உலகில் வேறு எங்கு பார்க்க முடியும்? இதிலிருந்தாவது, 'பயங்கரவாதிகள்' என்ற

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சிறீலங்காவின் இச்சொற்பிரயோகம் தவறானது என்பது தெட்டத்தெளிவாகத் தெரியவில்லையா? சொற்பிரயோகம் பிழையானால், அதனை உருவாக்கிய சிந்தனையும் ஒழுங்கற்றதாகிவிடுகிறது. சிந்தனை ஒழுங்கற்றதாயின் முழு புறவாழ்வு வடிவமுமே ஒழுங்கின்றித் தாறுமாறாகிறது அல்லவா? அறியாமையில் இந்தத் தன்மையே ஏய்க்கும் அடையாளக்குறிப்பே தமிழர்களுக்கு எதிரான 21 வருட போரில் எவ்வித முன்னேற்றமும் காணமுடியாமல் அடுத்தடுத்துப் பதவிக்கு வரும் சிறீங்கா அரசாங்கங்களைத் தடுத்து நிறுத்துகிறது. புலிகளைப்போன்ற பலம் வாய்ந்த ஒரு விடுதலைச் சக்தியை உங்கள் முகத்தில் நீலம் பாயும்வரைக்கும் நீங்கள் ‘பயங்கரவாதிகள்’ என்று அழைத்துக்கொண்டிருங்கள். இது உங்களது கையறு நிலையினால் உங்களுக்கு ஏற்பட்டுள்ள சினத்தைத்தான் காட்டுகிறது. இது உண்மையை உணரவைக்காது.

பயங்கரவாதி என்ற சொல்லின் பிழையான பிரயோகத்தின் இறுதிப் பின்விளைவு குழப்பமான தொன்றாகவே இருக்கும். நேற்றைய ‘பயங்கரவாதிகள்’ சிலர் நாளைய ‘மேதகையீர்’களாக மாறியிருக்கிறார்கள். சிலர் சமாதானத்திற்கான நொபேல் பரிசையும் பெற்றிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு ‘பயங்கரவாதி’ இல்லையென்றால் அவர் எத்தகைய ஒரு மனிதர்? பல வருடங்களுக்கு முன்னர், மூத்த சிங்களப் பத்திரிகை ஆசிரியர் ஒருவர் அவரை ‘பத்தாண்டின் மனிதர்’ என்று குறிப்பிட்டதோடு அவருடைய படத்தைத் தனது சஞ்சிகையின் முன் அட்டையிலும் பிரசுரித்திருந்தார். ஒரு சிங்களக் கிறிஸ்துத்துறவியாகிய ஆயர் கெனத் பெர்ணான்டோ பிரபாகரனில் ஒரு ‘பண்பு நயமுடைய மனிதனை’க் காண்கின்றார். இராணுவ ஆய்வாளர்கள் சிலர் அவரை ‘இராணுவ மேதை’ என்று வகைப்படுத்தி விபரிக்கிறார்கள். தங்கள் மரணங்களைத் தழுவுவதற்குப் புன்னகையுடன் களம் ஏகும் ஆயிரக்கணக்கான இளந் தமிழ் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர் ஓர் அரைத்தெய்வ உருவாகக் காட்சியளிக்கின்றார்.

1996 சித்திரை மாதம், அவுஸ்திரேலிய செய்திப்பத்திரிகையொன்று தனது ஆசியச் செய்திப்பீட ஆசிரியரான நோமன் ஐஸ்பெற் என்பவரை வடகிழக்குக்கு அனுப்பி வைத்திருந்தது. அவர் ‘தமிழவள்’ என்ற பெண்புலிப்போராளியைச் செவ்வி கண்டார். இப்பெண் போராளியை 25 வயது நிரம்பிய ‘போர் முதுவர்’ என்று குறிப்பிடும் அவர், பிரபாகரனைப்பற்றி அப்பெண் போராளி என்ன நினைக்கின்றார் என்று வினவினார். இதற்கு விடையளித்த தமிழவள் ‘அவரைப் பற்றிய எனது எண்ணப்பதிவை என்னால் வார்த்தைகளால் வெளியிடமுடியாது. தலைவர் பிறந்த காலத்தில் பிறந்ததற்காக நான் பெருமைப்படுகிறேன்.’ என்று கூறினாராம்.

உலகெங்கிலும் பரவி வாழும் இலட்சோப இலட்சம் தமிழர்களுக்கு அவர், அல்லற்பட்ட மக்களை விடுவிக்க வந்த ஒரு மீட்பாளர். தமிழ்நாடு திராவிடக் கழகத்தின் தலைவர் ஒருமுறை பிரபாகரனைப்பற்றிக் கூறும்போது, ‘திருவள்ளுவர் என்று ஒருவரே உள்ளார். கம்பன் என்று ஒருவரே உள்ளார். பிரபாகரன் என்றும் ஒருவரே உள்ளார்’ என்றார்.

பலதரப்பட்ட மனிதர்களது மனக்கண்களில் இத்தகைய பல சேர்ந்தமைந்த ஓர் உருவமைப்பைக் கொண்டிருக்கும் அவரைப்பற்றிச் சனாதிபதி குமாரதுங்க ‘இந்தியாடுடே’ என்ற சஞ்சிகைக்கு அளித்த பேட்டியொன்றில் பிரபாகரனைப்பற்றிக் குறிப்பிடும் போது ‘ஓர் இரக்கமற்ற தற்புகழ்ச்சிக்கோளாறு பிடித்திருக்கு’ என்று கூறுகிறார்.

போராடுவதற்கு, இந்தத் திருவாட்டி சனாதிபதிக்கு ஒரேயொரு பிரபாகரனே உள்ளார். அவரது போக்கு வரவுக்கு முன்னர் பிரபாகரன் நான்கு சனாதிபதிகளைச் சந்தித்துள்ளார். லலித் அத்துலத்முதலி முதல் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா வரை அவர் ஐந்து போர் மந்திரிகளைக் கண்டிருக்கிறார். அவரது காலத்தில் வடகிழக்கில் பத்து இந்தியப் படைத்துறைப் பணித்தலைவர்களைக் கண்டிருக்கிறார். நான் இங்கு குறிப்பிட்டாலும் எத்தனையோ தோள் சின்ன நட்சத்திரக் குறிப்புள்ளிகளையும், வார்ப்பட்டிகைகளையும் சூட்டியவர்களையும் போர் வீரப் பிரம்புகளையும் வைத்திருந்த சிறீலங்கா படைவீரர்களையும் கண்டிருப்பார். இவர் Sandhurst சிலோ, லெபனானிலோ, வேறு எந்த இராணுவக் கல்விச் சாலையிலோ பயிற்சிபெற்றவர் அல்ல. ஏன், வீரவில்லவில் கூட அவர் பயிற்சி பெறவில்லை. அப்படியானால் அவரை வெற்றிகரமாக இயங்க வைப்பது எது? இஸ்ரேலிய ஆயுதங்களாலும், சீனப் பீரங்கிக்கப்பல்களாலும், அமெரிக்க பயிற்சிகளாலும் அடக்கமுடியாதபடி புலிகளை அத்தகைய வல்லமை மிக்க சக்தியாக்குவது எது? இக்கேள்விக்குச் சரியான விடைகளைப் பெறும் முயற்சியிலேயே சிறீலங்காவின் சமாதானத்திற்கான நம்பிக்கை தங்கியுள்ளது. எப்பொழுது சிறீலங்கா அரசாங்கமும் கொழும்பு பத்திரிகைகளும், சிங்களவர்களும் ‘பயங்கரவாதிகள்’ என்ற சொல்லால் அடிப்பதை நிறுத்துமின்றனரோ, அப்பொழுதுதான் சிங்கள இனவாதத் தலைவர்களால் சீரழிந்துபோகும் இயற்கை வளம் கொழிக்கும் இலங்கைத் தீவில் சமாதானம் திரும்பும். அப்போதுதான் சிங்களவர்களும், தமிழர்களும் தங்கள் தங்கள் தலைவிதிகளைத் தத்தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவர்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# பெயர்சூட்டும் போர்

தணிகைச்செல்வன்

எழுத்தாளர்,
கவிஞர்,
இலக்கியச்
செயற்பாட்டாளர்.
தமிழகம்.

வெற்பினிலே செய்த உடல்,
வெண்கலத்தில் செய்த குரல்,
கற்பதிலே யானைப் பசி,
களத்தினிலே ராஜரிஷி,
சொற்களிலே ஜீவநதி,
தூங்கையிலும் திறந்த விழி,
எப்போதோ சூடிவிட்டாய்
தமிழினத்தின் ஈழமுடி.

பிறந்தாச்சு மணிக்குழந்தை
பேருலகம் அறியும் இதை
அறுந்தாச்சு பேரினவேர்
அறியும் புவி இச்சரிதை
பிறந்திருக்கும் குழந்தைக்குப்
பெயர் சூட்டும் போர் அன்றோ
நடந்திருக்கப் பார்க்கின்றோம்
நாளை அதைத் தீர்க்கின்றோம்.

யாழ்முனையில் வேர்பிடித்துப்
போர் முனையாய் வடிவெடுத்தாய்
தாயினத்தை மீட்பதற்குத்
தீக்கணையாய்த் தரைப்போரில்
திமிங்கலமாய்க் கடற்போரில்
வாய்த்தவனை எழுகோடி
வாழ்த்தொலியும் பூச்சொரியும்.

போர்க்கலையில் புது உத்தி
போர்வியூகம் புதுயுகம்
நேர் முறையில் தாக்குதலா?
நின்றெதிர்ப்பான், காந்தியாரின்
போர்முறையா? வென்று அதையும்
புறந்தருவான் திலீபனை
போர் முறைகள் பல பயின்று
படைத்தளிக்கும் போர்க்கலைஞன்.

நரம்புகள் உணர்ச்சித் திரியாய்
நாளங்கள் நெருப்பு நதியாய்
எரிந்திடச் சினந்த தம்பி
ஏகலைவனுக்கு முன்னால்
மேலைப் போர்முறையால் மிரட்டும்
மேட்டிமைத் தலைமையெல்லாம்
நாளைப் போர் நெறியைக்கற்க
நம்அகம் வருவர், வருவர்.

சோழர்குடிச் சின்னத்தை
ஈழர் கொடி யாக்கினையே
ஈழவரின் குடிமுழுதும்
இனி உனது ஆக்கினையே
ஈழகமும் தமிழகமும்
இணைந்திங்கே கைகுலுக்கும்
காலம் இதோ வருகிறது
கரை கடந்து – கடல் கடந்து!

தமிழீழ ஆவணகக் காப்பகம்
Tamileelam Archive

# மறக்கமுடியாத ஓர் இனிய அனுபவமாக அமைந்த

# தேசியத்தலைவருடனான சந்திப்பு

அன்புள்ள மாமா,

நாங்கள் வன்னிக்குச் சென்ற சமயம் நானும் சாந்தியும் எங்களது தேசியத் தலைவரையும் அவரது மனைவியையும் மகனையும் சந்தித்ததைப் பற்றி நான் உங்களுக்குக் கூறவேண்டும். கனவுபோல், நடந்தேறிய எங்களால் எதிர்பார்க்கப்படாத, கோரப்படாத அந்தச் சந்திப்புப்பற்றிய எங்களது உணர்வுகளை என்னால் சொற்களால் வெளியிடுவது கடினமானதாகும்.

இந்நயமான குரலுடைய பிரபாகரன், அடிப்படையில் இந்நயப்பண்பும், ஆழ்ந்த அறிவும், சிந்தனையும் கொண்டவராகக் காணப்பட்டார். நாங்கள் கலந்துரையாடிய எல்லா விடயங்கள் பற்றியும் தெளிவான விளக்கம் பெறுவதற்கான ஆர்வம் அவரிடம் காணப்பட்டது. எங்களது கலந்துரையாடலின்போது நாம் அரசியல் பற்றியோ, எங்களது விடுதலைப் போராட்டத்தின் எதிர்காலம் பற்றியோ எதுவுமே பேசவில்லை. நெருங்கிய நண்பர்கள் உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று சுதந்திரமாக மனம் திறந்து பேசுவது போல் நாங்கள் உரையாடிக்கொண்டோம். எங்களது கலந்துரையாடலின் முக்கிய விடயங்களாக மருத்துவ சம்பந்தமான விடயங்களே இருந்தன. நாங்கள் கூறியவற்றை திரு பிரபாகரனும் அவரது மனைவியும் மிகவும் ஆர்வமாகக் கேட்டுக்கொண்டிருந்ததுடன், இடைக்கிடையே பொருத்தமான கேள்விகளைக் கேட்டுத் தெளிவு பெற்றுக்கொண்டனர். குறிப்பாகப் பிரபாகரனின் வினாக்கள் யாவும் கண் நோய்களின் அடிப்படைகளைத் தனிப்பட்ட நோக்குக் கோணத்திலும், வன்னியில் நாங்கள் பார்த்த நோயாளிகளின் நிலைகளைப் பற்றித் தெரிந்துகொள்ளும் நோக்குக் கோணத்திலுமே அமைந்திருந்தன.

நாங்கள் பார்த்த நோயாளிகள் பலரது பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களது நோய்களின் தன்மை பற்றிய விபரங்களையும், அவர்களுக்கு எவ்விதமான சிகிச்சையளிக்கப்பட்டால் அவர்களது நிலையைச் சீர் செய்யப்படலாமென்ற விபரங்களையும் அறிந்துகொள்ளவதற்கு அவர் காட்டிய ஆர்வம் எம்மிருவரையும் கவர்ந்தது. நாங்கள் கண்ட சில கண் காயங்களைப் பற்றியும், நல்ல மருத்துவ வசதிகளின் முக்கியத்துவம் பற்றியும், நோய் தீர்வுக்குப் பின்னுள்ள கவனிப்புப் பற்றியும் நாம் அவரிடம் வலியுறுத்திக் கூறியபோது, அவர் நோயாளிகளின் துயரங்களை அனுபவ ரீதியாக உணர்ந்தவர் போல் உணர்ச்சியுற்றதை வெளிப்படையாகவே கண்டோம். இளவயதினருக்கு ஏற்பட்ட போர்க் காயங்களைப் பற்றியும், பொது மக்களுக்குத் தேவையான சுகாதார சேவைகளில் காணப்படும் புறக்கணிப்பு பற்றியும், மக்களது நலம் பற்றியும் அவர்கள் இருவரும் கொண்டிருந்த ஈடுபாடு தெட்டத் தெளிவாகத் தெரிந்தது.

நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது அவர்களுடைய 7 வயது மதிக்கத்தக்க மகன் தந்தை மீது ஏறி விளையாடிக்கொண்டும், அவரது தலை மீது பூ இதழ்களை வீசிக்கொண்டும் இருந்தான். தனது மகன் விரும்பியபடி விளையாடி மகிழட்டுமெனக் கூறிய அவர், அவன் அப்படிக் குறும்பு செய்வ

ஐக்கிய இராச்சியத்திலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர், கண் நோய்களால் பீடிக்கப்பட்ட மக்களுக்குத் தன்னார்வத் தொண்டு செய்வதற்கென வவுனியாவுக்கும் கிளிநொச்சிக்கும் கண் அறுவை மருத்துவ வல்லுநர் ஒருவரும் அவரது மருத்துவ மனைவியும் சென்றிருந்தனர். அங்கு பொது மக்களுக்கும் முன்னைய போராளிகளுக்கும் கண் சிகிச்சை முகாம்களை நடாத்தினர். தங்களது பணிகளை முடித்துக்கொண்டு மீளவும் ஐக்கிய இராச்சியத்திற்கு அவர்கள் திரும்ப எண்ணிய வேளையில், அவர்களை முக்கிய பிரமுகர் ஒருவர் சந்திக்க விரும்புவதாக அவர்களிடம் செய்தி ஒன்று கூறப்பட்டது. அங்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்ட பின்னரே, தங்களை வரவேற்றவர் திரு பிரபாகரனைத் தவிர வேறு யாருமில்லை என்பதைக் கண்டு திகைப்பும் எதிர்பாராத அதிர்ச்சியுமடைந்தனர். உறவினர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் அம்மருத்துவர் தங்களது இனிய அனுபவத்தை விபரிக்கின்றார்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தால் எங்களுக்குத் தடையேதும் உண்டாவெனக் கேட்டார். பெற்றோர் என்ற ரீதியில் நாங்களும் எங்களது அனுபவங்களையும் அவர்களுடன் பகிர்ந்துகொண்டோம். எங்களுடைய பேச்சு அடிக்கடி குழந்தை வளர்ப்பு பற்றியும், பெற்றோர்களதும் குழந்தைகளதும் சமுகப் பொறுப்புக்கள் பற்றியும் திரும்பியது. வெளி உலகிற்குப் பலம் வாய்ந்த ஓர் இராணுவத் தலைவர் என்ற தோற்றத்தைக் கொண்டிருந்த ஒருவரோடு, இத்தகைய கருத்துக்களைப் பரிமாறியது எங்களுக்குள் வித்தியாசமான அனுபவம் ஒன்றை ஏற்படுத்தியது எனலாம். 'தனது மனைவியைத் தங்களது விருந்தினருடன் கருத்துப் பரிமாற விட்டுவிட்டு, பிரபாகரன் தனது மகனுக்கு நண்பகலுணவு ஊட்டுவதற்காக எங்களிடம் விடைபெற்றுச் சென்றார்'. இங்கே நாம் அவரிடம் ஓர் அன்பான தந்தையையும் கடமையுணர்வுடைய கணவனையும் அவரது முகத்தில் கண்டோம். அவருடைய மனைவி, எனது மனைவி சாந்தியுடன் நீண்ட உரையாடலில், ஈடுபட்டிருந்தார். அவர்களது உரையாடல்கள் குழந்தை வளர்ப்பில் பெற்றோர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியதாகவும், ஆன்மீக விடயங்கள் பற்றியதாகவும், கல்வி சார்ந்த விடயங்கள் பற்றியதாகவும் இருந்தன. சொந்த வீட்டிலிருப்பது போன்று கருதுமளவுக்குத் தாராளமாக எங்களுடன் பழகினர். மிக நீண்ட காலம் நெருங்கிப் பழகியவர்களுடன் இருக்கும் உணர்வே எம்மிருவருக்கும் இருந்தது.

நண்பகலுணவின் போது எங்களது ஓம்புநர்கள் இருவரும் தங்கள் கைகளாலேயே எங்களுக்கு உணவு பரிமாறினர். சாந்திக்கு சைவ உணவு அளிக்கப்பட்டது. சமைக்கப்பட்ட பல தரப்பட்ட கறி வகைகள் பற்றியும் வன்னியில் எத்தனை மரக்கறிவகைகளும் பழவகைகளும் வளர்க்கப் படுகின்றன என்பது பற்றியும் பெருமையாக விளக்கினார். உணவு மேசையில் அமர்ந்திருந்த மற்றவர்களும் நன்றாக உண்கிறார்களா என்பதை நிச்சயப்படுத்திக் கொண்டார். இது தமிழரது விருந்தோம்பல் பண்பிற்கு ஒரு மாதிரி எடுத்துக்காட்டாக அமைந்திருந்தது. இப்படி சிறந்த முறையில் விருந்தோம்பும் பண்புகளை எங்கள் மீது வாரி வழங்கிக் கொண்டிருக்கும் இந்த மனிதர், முன்பு ஒருபோதும் அறிந்திராத எங்களைப் பொறுத்த மட்டில் நெடுந்தொலைவில் தள்ளி இருந்திருக்க முடியும். அதனை விடுத்து, நீண்ட காலமாக விட்டுப்போன குடும்பத்திற்கு உணவளித்துக் களிப்புறும் சகோதரனைப்போல் நடந்து கொண்ட முறையும், எங்களது பண்பாட்டு வழக்கங்களை நிலை நிறுத்திய பாங்கும் எங்கள் மனங்களை நெகிழ வைத்தன. இவ்வேளையில் எங்கள் தலைவருக்கு இருந்த நகைச்சுவை உணர்வுகளையும் கண்டு கொண்டோம். மொத்தத்தில் இந்த அனுபவம் எங்களை உணர்ச்சியால் உலுப்பிவிட்டது.

நாம் உரையாடிய வேளைகளில் அவர்கள் இருவரும் எமக்கு கடும் மரியாதை தந்து ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கேட்டுக் கொண்டிருந்ததை அவர்களது கண்களில் கண்டோம். திரு தமிழேந்தியின் கண்களைப் பரிசோதித்துப் பார்க்க முடியுமாவென மிகவும் பண்பாகவும் பணிவாகவும் கேட்டார். அவரது வேண்டுகோளில் எதிர்பார்ப்போ கட்டாயப்படுத்தலோ இருக்கவில்லை. ஒரு நெருங்கிய சகாவுக்கு உதவும்படி கேட்டுக்கொள்ளும் ஓர் அன்பான வேண்டுகோளே அது. நேரமின்மை காரணமாக நான் அவரது வேண்டுகோளை மறுத்திருக்கலாம். இதனை விடுத்து, அவரது வேண்டுகோளால் நாம் கௌரவிக்கப்பட்டதாகவே நாம் உணர்ந்தோம். விடைபெறும் வேளை வந்த போது முதன் முதலாக மெய்க்காவலர் அங்கு வந்தனர்.

தடையரண் மூடும் நேரத்துக்கு முன்னர் நாங்கள் போய்விடலாம் என்பதையும், நாங்கள் போவதற்கான வாகனம் ஆயத்தமாக உள்ளதென்பதையும் நிச்சயப்படுத்திய பின்னரே அவர் தனது வாகனத்திற்குள் ஏறினார். ஓர் அருமையான, அன்பான குடும்பத்தை விட்டுப் பிரியும் உணர்வுடன் அங்கிருந்து புறப்பட்டோம். அதேவேளை எங்களது தலைவரது விதிவிலக்கான உயர்ந்த பண்புகளையும் நாங்கள் அவதானிக்கத் தவறவில்லை. பலமும், திறனும், வல்லமையும் ஒருங்கே அமையப்பட்ட தலைவரிடம் மறைந்திருந்த ஓர் அன்பான கணவனையும், தந்தையையும், அக்கறையுடைய மனிதரையும் இவற்றுக்கு எல்லாம் மேலாக கூரிய நுண்ணறிவும் ஆய்வாராய்வு செய்யும் மனமும் கொண்ட ஓர் உன்னத மனிதரை அவருள் கண்டோம்.

**புவிச்சந்திரன்**

வைத்திய கலாநிதி,
சத்திர சிகிச்சை
நிபுணர்.
பிரித்தானியா.

Tamileelam Archive

## 2000 ஆண்டு மே மாத இறுதியில் ஒருநாள்...

நேரடித் தொடர் வண்டிகள், பேருந்துகள் அனைத்தும் புறப்பட்டுப்போய்விட்ட அகால வேளையில் சென்னையில் உறவினர் ஒருவரின் பிரிவுச் செய்தி கிடைக்கிறது. உடனே புறப்படுகிறேன்.

தென்காசி, செங்கோட்டை, ராஜபாளையம், ஸ்ரீவில்லிப்புத்தூர், மதுரை, மணப்பாறை, திருச்சி, உளுந்தூர்பேட்டை, விருத்தாச்சலம், விழுப்புரம், திண்டிவனம், மதுராந்தகம், தாம்பரம் என்று குறுக்கு வெட்டாக தமிழ்நாட்டின் ஒரு கணிசமான பகுதி வழியாக 22 மணி நேரம் தொடர்ந்து பிரயாணம் செய்கிறேன். தமிழ் நாட்டின் உணர்வுகளைக் கொஞ்சம் நேரிடையாகவே நாடிப் பிடித்துப் பார்க்க இது உதவுகிறது.

முதலில் கண்ணையும், கருத்தையும் கவர்வது கடைகள் தோறும் கட்டித் தொங்க விடப்பட்டுள்ள தமிழ் சஞ்சிகைகள். இவை அநேகமாக வாரம்தோறும் வியாழன், வெள்ளி தினங்களில்தான் வெளிவரும். பெரும்பாலான பத்திரிக்கைகளில் அட்டைப்படக் கதையாக இடம் பெற்றிருப்பது இலங்கைப் பிரச்சனைதான். அதுவும் ஈழம்... குறிப்பாக, பரபரப்பான செய்திகளை வெளியிடும் நக்கீரன், நந்தன், நெற்றிக் கண், தராசு, தாகம் சஞ்சிகைகள்தான் இதில் முன்னணியில் நின்றன.

ஒன்று, 'யாழ் வெற்றியைத் தொடர்ந்து தனி ஈழம் உருவாகிறது' என்றது.. மற்றொன்று, 'தனி ஈழம் அமைவதால் இந்தியாவுக்கு ஆபத்தா?' என்று கேட்டிருந்தது. மற்றொன்று 'மகா ஈழம் உருவான கதை' என்று தலைப்பிட்டிருந்தது. தெரிந்த செய்திகள்தான் எனினும், புதிய கோணங்களில் பரபரப்பையும் சேர்த்திருந்தன பத்திரிக்கைகள். இதன் பொருள் தமிழக வாசகர்களின் கவனம் முழுவதும் இலங்கைப் பிரச்னையிலேயே இருக்கிறது, அந்த 'தாகத்துக்கு' தண்ணீர் வார்க்கிறார்கள் இவர்கள்.

கவனத்தை ஈர்ந்த இன்னொரு விடயம் வழி



அப்துல் ஜபார்

வானொலி, தோலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர், அரசியல் ஆய்வாளர், தமிழகம்.

# குடத்தில் இட்ட தீபங்கள்...

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நெடுக சுவர்கள் தோறும் மின்னிய வண்ணச் சுவரொட்டி. அது புதிய தமிழகம் கட்சி இலங்கைத் தமிழர் ஆதரவு பேரணிக்கு மக்களுக்கு விடுத்த அழைப்பு. இலங்கை வரைபடத்துக்குள்ளே நின்று கொண்டு அழைப்பது போல இந்த வண்ணச் சுவரொட்டி வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆனால், ராஜபாளையத்தில்?!...

விடுதலைப் புலிகளின் இராணுவ உடை தரித்த ஒரு கம்பீரமான உருவம் கட் அவுட்டாக வைக்கப்பட்டிருந் தது. தடைசெய்யப்பட்டுள்ள விடுதலைப் புலி களின் தலைவருக்குத் தமிழ் நாட்டில் கட் அவுட்டா என்றெண்ணி அருகே சென்று பார்த்த போதுதான் அது வைகோவின் உருவத் தோற்றமென்று நமக் குப் புரிகிறது. 'கடல் கடந்து வாழும் தமிழர்களின் கலங்கரை விளக்கே' என்கிற வாசகமும் அடியில் எழுதப்பட்டிருக்கிறது. பக்கத்தில் ஒரு குரல் 'என்ன அப்படி அதிசயமாகப் பார்க்கிறீர்கள்? தடை செய் யப்பட்ட ஓர் இயக்கத்தின் உடையில் இவ்வளவு தைரியமாக இப்படி ஒரு கட் அவுட் என்றா?' உண் மைதான். இத்தடைச் சட்டம் வந்ததும் ஏதேனும் ஒரு சரத்தின் கீழ் எப்படியாவது உள்ளே தள்ளி விடு வார்கள் என்ற பயம் வந்து பலர் அடக்கி வாசிக்க ஆரம்பித்து விட்டார்கள். ஆனால், எங்க தலைவர் துணிந்துவிட்டார். புலிகளை ஆதரித்தால் கூடிக் கூடிப் போனால் என்ன தண்டனை தருவீர்கள்? என்ன தூக்கு தண்டனையா? அதனால் என்ன நடக்கும். உயிர் போகும் அவ்வளவுதானே? அத ற்கு மேல் ஒன்றும் நடக்காதே, உயிர் ஒரு முறை தான் போகும். அது ஒரு நல்ல இலட்சியத்துக் காகப் போகட்டும் என்று துணிந்து விட்டால்..? சரி. அப்படியே சாவது என்றாலும் நாங்கள் சும்மா சாகமாட்டோம்' என்றவரை இடைமறித்தேன்.

'உங்கள் கடைசி வரிகளைத்தான் தீவிரவாதம் என்கிறார்கள். அதனால் தடை செய்திருக்கிறார்கள்'

பதிலாக அவர், 'காலிஸ்தான், காஷ்மீர், அஸ் ஸாம், நாகலாந்து, திரிபுரா என்று இடத்துக்கு இடம் தீவிரவாத இயக்கங்கள் இருக்கின்றன. இவற் றுள் எதைத் தடை செய்திருக்கிறீர்கள்? சாதி, சமயங்களின் பெயரால் எத்தனை தீவிரவாத இயக் கங்கள்? இவற்றின் நிலை என்ன?'

நான் சொன்னேன். 'அவற்றில் எவையுமே ஒரு நாட்டின் பிரதமரைக் கொலை செய்யவில்லை என்று சொல்கிறார்களே?'

'அதனால்தான் தடையா? அப்படியானால், மகாத் மாவைக் கொன்ற ஆர்.எஸ்.எஸ்ஸை ஏன் தடை செய்யவில்லை? இந்திரா காந்தியைச் சுட்டுக் கொன்ற அகாலி தளத்திற்கு ஏன் தடை விதிக் கவில்லை?. செய்தார்கள்... ஆர்.எஸ்.எஸ்ஸை மூன்று முறை செய்தார்கள். பிறகு அரசே அவற்றை வாபஸ் பெற்றது, மூன்றாவது முறை அவர்களே நீதிமன்றம் சென்று தடையை உடைத்தார்கள்.'

'கோட்ஸே என்ற தனிமனிதரை நீங்கள் எப்படி ஆர்.எஸ்.எஸ். என்ற இயக்கத்தோடு முடிச்சுப் போட முடியும்?' இது நான்.

'நாங்க முடிச்சுப் போடலய்யா... மே நாதுராம் கோட்ஸே போல்தீ ஹும்'என்று அவர்களே நாடகம் போட்டு முடிச்சைப் போட்டுக்கொண்டார்கள். இந்திரா காந்தியைக் கொன்றது சீக்கியர். அவரை அகாலி தளத்தோடு முடிச்சுப் போடுவது சரியில்லைதான். ஆனால், கைநாட்டுக் கூடப் போடத் தெரியாத அவர் மனைவியைத் தன் கட்சி சார்பாக நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட வைத்து வெற்றி பெறவும் வைத்ததன் மூலம் தானாகவே முடிச்சுப் போட்டுக் கொள்கிறதே அகாலிதளம்!! ஆக, அவர்களை



யெல்லாம் விட்டுவிட்டார்கள். விடுதலைப்புலிகளை பிடித்துக்கொண்டார்கள். ஏன்னா, தமிழன் மட்டும்தான் இளிச்சவாயன். நாங்க என்ன பாவம் செய்தோம். தப்பு செய்தவங்களுக்குத் தண்டனை கொடு. ஆனால், தவிக்கும் தமிழர்கள் என்ன பாவம் செய் தார்கள்? அடிபட்டவன் தமிழன். மிதிபட்டவன் தமிழன். சொத்து, சுகம், வருவாய், வசதி ஏன், வாழ்க்கை யையே தொலைத்து விட்டவன் தமிழன். அவனைக் காப்பாற்றச் சென்ற இராணுவம் அவனையே அடித் துக்கொன்ற கொடுமை வேறெங்காவது நிகழ்ந்த துண்டா?'

அகப்பட்டுக்கொண்ட 40,000 படைதான் இவர்கள் கண்களுக்குத் தெரிகிறது. ஐந்து லட்சம் மக்களைப் பற்றி யார் கவலைப்படுகிறார்கள்? இலங்கைப் படை புலிகளை அழித்தொழிக்கச் சென்றது. அதன் பலன்

Tamileelam Archive

களை அவர்களே அனுபவிக்கட்டும் என்று விட்டு விடுவதுதான் நல்லது. ஆனால், எந்தப் பாவமும் செய்யாத அப்பாவித் தமிழர்களின் உயிர் காப்பாற் றப்பட வேண்டாமா? இவர்களுக்குத் தேவையான உணவு வகைகள் முறையாக விநியோகம் செய்யப் படுவதாக இலங்கை அமைச்சர் அமுனுகம அனு தினமும் சொல்கிறார். காதில் பூச்சுற்றவும் ஒரு அளவில்லையா? ஐயா, உன் படைக்குத் தேவையான உணவையும், மருந்தையுமே உன்னால் விநியோ கிக்க வக்கில்லை. அப்பாவித் தமிழர்களைப் பத்தி நீ எங்கே கவலைப்படப்போறே? இங்கேதான் இந் தியா தன் கடமையைச் செய்யவேண்டும் என்று நாங்க சொல்கிறோம்'

'சரி, அப்படியே வைத்துக்கொண்டாலும் ஒரு அண்டை நாட்டின் உள்விவகாரங்களில் அவர்கள் சம்மதமில்லாமல் நாம் எப்படித் தலையிட முடியும்?'

'பங்களாதேஷ் நம் உள்நாட்டு விவகாரமா? பாகிஸ்தானிய உள்விவகாரம்தானே? நாம் தலை யிட்டு, அந்த நாட்டைத் துண்டாடி தனிநாடே அமைத்துக்கொடுக்கவில்லையா? அவர்கள் என்ன மேற்கு வங்கத்தில் உள்ள வங்காளிகளையும் சேர்த்து என்ன 'மகா பங்களாதேஷா' அமைத்துவிட்டார்கள்? தனி ஈழம் வந்து விட்டால் மட்டும் அது தமிழ் நாட்டுடன் சேர்ந்து மகா ஈழமாக மாறும் என்று ஏன் கற்பனை செய்கிறீர்கள்? அன்று நாம் நட வடிக்கை எடுக்க முக்கிய காரணம் அங்கிருந்து இங்கு வந்த அகதிகள்தானே?! அந்த பாரத்தை மேலும் தாங்க இயலாது என்றுதானே அன்று இந்தியா காரணம் சொன்னது? இன்றும் நிலைமை அதுதானே? அகதிகள் வந்து குவிந்து கொண்டுதானே இருக்கிறார்கள்? ஒன்று சொல்கிறேன் கேளுங்கள். இலங்கையை ஆள்பவன் பாகிஸ்தான்காரன் என்று வையுங்கள். ஈழம் என்றோ ஏற்பட்டிருக்கும். ஏற்பட இந்தியா உதவி இருக்கும்.

ஆனால், ஆள்பவன் சிங்கள ஆரியன். முன்னை நாள் இந்திய டுடே ஆசிரியர் இந்தியன் எக்ஸ்பிரஸில் எழுதிய கட்டுரையில், 'உதவி செய்ய தமிழர்கள் நமது உறவுக்காரர்கள் என்பது ஒரு காரணமாக இருக்கக் கூடாது. அப்படிப் பார்த்தால் தமிழர்கள்தான் அங்குள்ள பழங்குடிகள். அவர்களுக்குப் பின்னர் இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சென்று குடி யேறியவர்கள்தான் சிங்களவர்கள். ஆகவே அவர்கள் தான் நமக்கு 'First cousins' என்கிற அர்த்தத்தில் குறிப்பிட்டிருக்கிறார். தமிழகத்தில் கூட ஈழ ஆதரவு, எதிர்ப்பு என்று இரண்டு அணிகள் இருக்கின்றன. திராவிட இயக்கங்கள் ஆதரிக்கின்றன. ஆரிய பத்திரிக்கைகள் எதிர்க்கின்றன.'

நான் கேட்டேன். 'இந்தியர்கள் ஆதரிப்பதும் எதிர்ப்பதும் இருக்கட்டும். சந்திரிகாவே தமிழர்கள் எங்கள் எதிரிகளல்லர். சகோதரர்கள்தான் என்று சொல்லியிருக்கிறாரே'

பதில் பளீரென வந்தது. 'நாங்கள் மட்டும் என்ன மாத்தியா சொல்கிறோம்? நாங்களும் அதையேதான் சொல்றோம். இதில் நினைப்பு மட்டும் போதாது. செயலும் வேண்டும். ஆனால், இவர்களது செயல் எங்களை அடிமையாக்குவதாகத்தானே இருந்தது? அங்குதானே பிரச்சினை ஆரம்பித்தது? வாழு, வாழவிடு என்கிற தத்துவம் இலங்கையை எவ்வளவோ முன் னேற்றியிருக்குமே!! 'நான் மட்டுமே வாழுவேன். நீ எக்கேடாவது கெட்டுப்போ' என்று சொன்னதால் தானே பிணக்கு, பிரச்னை எல்லாமே.

'அகிம்சையை விரும்பும் பௌத்தர்களும், லோக சமஸ்தா சுகினோ பவுந்து' என்கிற தத்துவத்தில் ஊறிய இந்துக்களும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ்ந்திருக்க வேண்டுமே? எங்கே தவறு நிகழ்ந்தது? இது நான்.

'பௌத்த சாமியார்களுக்கு ஆன்மீகத்தை விட அரசியலில் அதிக ஆசை. அகிம்சையைக் கடைப் பிடித்தார்களோ இல்லையோ வன்முறையைத் தீவிரமாகக் கடைப்பிடித்தார்கள். பிரச்சாரம் செய் தார்கள். பண்டார நாயக்காவைக் கொன்றதே ஒரு பௌத்த சாமியார்தான். அந்த வழக்கில் முதல் குற்றவாளி ஒரு பிரபலமான பௌத்த மடத்தின் பெரிய சாமியார். 58 இல் நடந்த வகுப்புக் கலவரங்களுக்கு மூல காரணமும் முழுமுதல் காரணமும் இவர்கள் தாம். கதிர்காமம் போகும் வழியில் களுத்துர என்னுமிடத்தில் ஒரு முருகன் கோவில் இருக்கிறது. அதன் பூசாரி உயிரோடு எரித்துக் கொல்லப் பட்டார். அந்த இடத்தை மட்டும் இன்னமும் வெள்ளை யடிக்காமல் அப்படியே வைத்திருக்கிறார்கள்.

'பறதெமளோ' என்று இழித்துரைக்கப்பட்டபோதும் அமைதி காத்தவர்கள்தான் தமிழர்கள். இனியும் தாங்க முடியாது என்றபோதுதான் ஆயுதங்களைக் கையில் எடுத்தார்கள். வலுக்கட்டாயமாக அவர்கள் கைகளில் ஆயுதங்களைத் திணித்து விட்டு அவர் களைத் தீவிரவாதிகள் என்பது என்ன நியாயம்? இருப்பதை இவனுடன் பங்கு போட்டுக்கொள்வதா என்றுதான் சிங்களவர்கள் தமிழர்களை ஒதுக்கு கிறார்கள். ஆனால், இதனைவிட எத்தனையோ பங்கு உற்பத்தி செய்யலாமே எல்லோரும் ஒற்று மையாக, சந்தோசமாக வாழலாமே என்று அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. உங்களுக்கு ஒண்ணு சொல்றேன். மதி நுட்பத்திலும், புத்திக் கூர்மையிலும் இங்குள்ள பிராமண சகோதரர்களை உயர்வாகச் சொல்வார்கள். ஆனால், இவர்களை விட இலங்கைத் தமிழர்கள் ஒருபடி மேல். இன்று அகதிகளாக உல கெங்கும் பரவி வாழும் இவர்கள் கௌரவம் மிக்க இலங்கைப் பிரஜைகளாக உலகெங்கும் சென்று பொருளீட்டி இலங்கையை ஒரு குபேர பூமியாக்கி விட்டிருப்பார்கள். சிங்களவர்களின் குறுகிய மனப்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

போக்கு அதைச் செய்யவிடாமல் தடுத்து விட்டது.

அவர் தொடர்ந்தார். 'இன்று துப்பாக்கிக்கும், தோட்டாவுக்கும் இலங்கை அரசு செலவழிக்கும் பணத்தை நாட்டின் மேம்பாட்டு திட்டங்களில் செலவழித்திருந்தால் தமிழர்கள் கேட்டது மட்டுமில்லாமல் அதற்கும் மேலாகவே கொடுத்திருக்கலாம். இப்போது பட்ஜெட்டில் பாதி படைக்காகப் பயன்படுகிறது. அது போக 175 மில்லியன் டாலர்கள் அதிகம் செலவு செய்யப் போகிறார்களாம். அன்றாட உபயோகப் பண்டங்கள் அத்தனைக்கும் வரிக்கு மேல் வரி.. நாட்டின் உணவுக்காக ஓர் ஆண்டு முழுவதும் தேவைப்படும் தொகை போரில் வீணானால் எந்த நாட்டால், எத்தனை காலம் தாக்குப் பிடிக்க இயலும்? இந்த நிலை குறித்து, எங்கள் நாடு இப்படி சிதைந்து சின்னாபின்னமாகிறதே என்று கண்ணீர் வடிக்காத இலங்கைத் தமிழர்கள் யாரேனும் இருப்பார்களா?'

'சரி.. இவ்வளவுக்குப் பிறகும் சர்வ தேச நாடுகளின் ஆதரவு இலங்கைக்குத்தானே இருக்கிறது?'

'இருக்காதா பின்னே. இலங்கை அரசுக்கு இராஜ தந்திர தூதுவராலயங்கள் உலகெங்கும் இருக்கின்றன. இலங்கைத் தமிழர்களுக்கென்று யார் இருக்கிறார்கள்? மேலும் ஊடகங்கள் மேற்கத்திய நாடுகளின் கைகளில்... அமெரிக்கா சீனாவுடனான ஆதிக்கப் போட்டியில் இலங்கையை அரவணைத்துப் போகிறது. அதுவும் நேரிடையாக இல்லாமல் தன் சிஷ்யப்பிள்ளை இஸ்ரேல் மூலம்... நேரிடையாகத் தலையிட்டுப் பார்க்கட்டும். இன்று இலங்கை அரசின் பக்கம் இருக்கும் சீனா இலங்கைத் தமிழர் பக்கம் திரும்பும். மேலும் ஒரு நாட்டின் இறையாண்மை என்ற விடயம் பல நாடுகளைக் குழப்புகிறது. ஆனால், மீறப்படும் மனித உரிமைகளை இதனோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சாயம் வெளுத்து விடும். விடுதலைப் புலிகளின் சொல்லையும் செயலையும் தீவிரவாதம் என்று விமர்சிப்பவர்கள் சிங்கள வீர விதான அமைப்பின் ஒரு மேடைப் பேச்சையாவது கேட்கட்டும். பிறகு சொல்லட்டும். எது தீவிர வாதமென்று? அடிப்பவன் அடிபடுபவனை தீவிரவாதி என்றால் என்ன சொல்வது?

'சரி, கலைஞரே உங்கள் விடுதலைப் புலிகளை ஆதரிக்கவில்லையே?'

'இலங்கைத் தமிழர் ஆதரவில் இன்று முதலிடம் வைகோவுக்கு. இரண்டாமிடம் டாக்டர் ராமதாஸ். மூன்றாமிடம் புதிய தமிழகம் கிருஷ்ணசாமி. நான்காவது இடத்தில் இருக்கக் கலைஞருக்கு விருப்பமில்லை. எனவே, முழு தமிழர் ஆதரவு புலிகள் எதிர்ப்பு என்றொரு வினோதநிலை. அறிஞர் அண்ணா மூதறிஞர் ராஜாஜியை 'குல்லுகப்பட்டர்' என்றார். இன்று ராஜாஜி இருந்திருந்தால் அந்தப்பட்டம் கலைஞருக்குத்தான் பொருந்தும் என்று சொல்லியிருப்பார். மாநிலத்தில் தமிழர் ஆதரவு கொட்டில் ஓர் தட்டு. மத்தியில் புலிகள் எதிர்ப்பு ஜால் ராவில் ஒரு தட்டு என்று சாணக்கிய அரசியல் நடத்துகிறார் அவர்'

'சரி, உங்கள் பெயரென்ன? உங்கள் கருத்துக்கள் தெளிவானதாகவும் தீவிரமானதாகவும் இருக்கிறதே?'

'அது முக்கியமல்ல. மேலும் நான் சொன்ன கருத்துக்கள் எல்லாம் எனது ஏக போக சிந்தனையின் விளைவு அல்ல. தமிழகத்தில் வாழும் இலட்சக்கணக்கான மக்களின் ஒட்டுமொத்தக் கருத்துக்கள்தான். ஆகவே, என் கருத்தென்று வேண்டாம்'

'இப்போது நான் ஒரு கேள்வி கேட்கிறேன். நீங்கள் என்ன பத்திரிகையாளரா?'

'இல்லை'

'நம்ப முடியவில்லை' இது நான்.

'நம்பமுடியாது. ஏனெனில், இங்குள்ள பத்திரிக்கைகள் தங்கள் எஜமானர்களின் உத்தரவின் பேரில், தங்களுக்கு இனிக்கும், தாங்கள் திணிக்கும் கருத்துக்கள்தாம் தமிழகத்தின் கருத்து போன்ற மாயத் தோற்றத்தை ஏற்படுத்த முனைகிறார்கள். எனவே, இலங்கைத் தமிழர்கள் மத்தியில் கூட தமிழகத்தைப் பற்றிய தவறான கருத்துக்கள் நிலவுகிறது. நீங்கள் யாரோ எனக்குத் தெரியாது. என் கருத்துக்கள் முழுவதையும் நீங்கள் ஏற்க வேண்டும் என்றோ பிரசுரிக்க வேண்டுமென்றோ நான் கோரவில்லை. ஆகவேதான், என் பெயரைக் கூடநான் சொல்லவில்லை. நன்கு சிந்தியுங்கள். உங்களுக்கு எது நியாயம் என்று படுகிறதோ அதை வெளியிடுங்கள். எதைச் செய்தாலும் தங்கள் சொந்த நாட்டிலேயே கைவிடப்பட்ட, அண்டை நாட்டாலும் சரியாகப் புரிந்து கொள்ளப்படாத, மேலைத் தேச ஊடகங்களால் அவர்களுக்கு மட்டுமே புரியக்கூடிய காரணங்களால் திட்டமிட்டுப் பழிவாங்கப்படும், தினம் தினம் கண்ணீரையும், செந்நீரையும் சிந்தும் இலட்சக்கணக்கான அப்பாவி இலங்கைத் தமிழ் மக்களின் பரிதாப நிலையைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்து எதையும் செய்யுங்கள்.

தர்மத்தைச் சூது கவ்வும். ஆனால் தர்மம்தான் வெல்லும். விடை தாருங்கள் நண்பரே! உங்களை தமிழ் வெறியராக இருக்கச் சொல்லவில்லை. மனித நேயம் உள்ளவராக இருங்கள். அது போதும். வணக்கம்'

அன்று நியாயம் கேட்டு கண்ணகி எரித்த கூடல் மாநகர் அதுதான் மதுரை வருகிறது. விடைபெற்றுச் செல்கிறார் நண்பர். ஆனால், அவர் சொல்லிச் சென்றவை இன்னமும் என் சிந்தையில் நிற்கின்றன.

எத்தனை குடத்தில் இட்ட தீபங்கள் ஐயா இந்த நாட்டிலே !!!

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தமிழீழ விடுதலைப் போராட்டம்

"தமிழர்கள்,
சிங்களவர் ஆட்சியில் இருந்து
விடுபடவேண்டும்,
அல்லது செத்து மடியவேண்டும்"

இலங்கை
நாடாளுமன்றத்தில் தந்தை செல்வா இறுதிப் பேச்சு.

தமிழீழ மக்கள் யாவராலும் தந்தை என ஏற்றுக்கொள்ளப்பட்டவர் தந்தை செல்வா. அவர் புகழ் பெற்ற சட்டவல்லுநர். உண்மை, நேர்மை, அமைதி, எளிமை என்ற தமிழீழ பண்பாட்டின் பெட்டகம். அவருடைய இறுதிச் சொல் தமிழீழ மக்களின் காதில் தினமும் ஒலிக்க வேண்டும். அவர் கனவை நனவாக்க ஒவ்வொரு தமிழரும் அயராது உழைக்க வேண்டும்.

தந்தை செல்வா தமிழீழ அரசியலை ஆழமாய் அறிந்தவர். அவருடைய 47வது வயதில்தான் அரசியலில் புகுந்தார். 1977ல் அவரது 77 வது வயதில் மறைந்தார். இந்தக் காலத்தில் தமிழீழ மக்களுக்கு விடுதலை உணர்வுகளை கற்றுக்கொடுத்து வளர்த்தவர்.

1949ம் ஆண்டு தொடக்கம் தமது இறுதி மூச்சு வரை தமிழர் சுதந்திரமாய் வாழ, கூட்டாட்சியே சிறந்தது என்ற கோட்பாட்டில் சிங்களவர்களுடன் அமைதிப் போராட்டத்தை நடத்தியவர்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இருபெரும் பகுதிகள் உண்டு. ஒன்று அமைதிப்போராட்டம், மற்றது ஆயுதப் போராட்டம். அமைதிப்போருக்கு தலைமை தாங்கி தமிழீழ மக்களை வழி நடத்தியவர் தந்தை செல்வா. சிங்களத்தலைவர்கள் அவரை ஏமாற்றி எழுதிய ஒப்பந்தங்களைக் கிழித்தெறிந்து தந்தை செல்வாவின் அயராத உழைப்பை வீணடித்தனர்.

இறுதியில் சிங்களவர்களுடன் கூட்டாட்சி நடத்த முடியாது என்ற முடிவுக்கு வந்து மேல்



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

காணும் குறிக்கோளை வற்புறுத்தி மறைந்தார்.

மேலும் சிங்களவர்களுடன் பேச்சு வார்த்தையில் காலம் கடத்துவது மடமைத்தனம். இதில் தமிழீழ மக்களுக்கு எவ்வித நன்மையும் கிட்டாது என்றுரைத்தார்.

தம்பி பிரபாகரன்

தந்தை செல்வா அமைதிப்போரை 1949 தொடக்கம் 1977 வரை வழி நடத்தினார். 1983 தொடக்கம் இன்றுவரை தம்பி பிரபாகரன் ஆயுதப்போரை வழி நடத்துகிறார். அமைதிப்போரிலும் ஆயுதப்போர் ஆபத்தானது. ஆயினும் அமெரிக்க இராணுவ தளபதிகள், இந்திய இராணுவ தளபதிகள் யாவரும் அதிசயப்படும் அளவுக்கு உலகத்திலேயே தலைசிறந்த கெரில்லாத்தளபதி என்ற பெயர் பெற்ற தம்பி பிரபாகரன் அஞ்சா நெஞ்சனாய் போர் புரிகிறார்.

தந்தை செல்வாவும், தம்பி பிரபாகரனும் தமிழீழ மக்களின் தவப்பயனால் பெற்ற பொக்கிசங்கள். அதைத் தமிழீழ மக்கள் முறையாய் பாவித்து விடுதலை பெற ஒத்துழைக்கிறார்களா?

அமிர்தலிங்கம்

1977 தொடக்கம், 1989 வரை தமிழீழத்துக்கு தலைமை தாங்கியவர் அமிர்தலிங்கம். இவர் காலத்திலேயே முறையான வழிநடத்தல் இல்லாமல் தமிழீழ விடுதலைப்போர் தடம் புரண்டு ஓடியது.

1977 பொதுத் தேர்தலில் அமிர்தலிங்கம் தமிழீழமக்களுக்கு சுதந்திரம் பெற்றுக் கொடுப்பதாக உறுதி கொடுத்தார். தமது கட்சி வென்றால், சட்ட அமைப்புக் குழு நிறுவிதனித்த தமிழீழ அரசு நிறுவுவதாயும் கூறினார். ஈழத் தமிழினம் திரண்டு வந்து அமிர்தலிங்கத்துக்கு அமோக வெற்றியை பெற்றுக் கொடுத்தது. அமிர்தலிங்கம் இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி தலைவரானார். தமிழீழ மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை காற்றில் பறக்கவிட்டு சிங்கள இனவெறியன் ஜெயவர்த்தனா காலடியில் விழுந்து மாவட்ட சபை அமைப்புக்கு ஒப்பந்தம் செய்தார். தமிழீழ இளைஞர் கொதித்தெழுந்து 1981 மாவட்ட வாக்கெடுப்பை வன்மையாய் தடுத்து நிறுத்தி ஆயுதப்போரில் இறங்கினர்.

சிங்கள வெறியன் ஜெயவர்த்தனா, சிறில் மாத்யூஸ், அத்துலத்முதலி, எல்லோரும் கூடி 1977, 1981, 1983 களில் கட்டவிழ்த்துவிட்ட கோரத் தமிழின அழிப்புச் செயல்களே தமிழீழ விடுதலை போருக்கு அடித்தளமாகின.

இப்பொழுது முதலைக் கண்ணீர் வடிக்கும் அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, யப்பான், ஐரோப்பிய கூட்டணி எல்லாம் தமிழர்களின் இந்த இருண்ட காலத்தில் எங்கு இருந்தார்கள்?

சிங்கள இராணுவத்தால் ஈழத்தமிழரை அடக்க முடியாது என்பதை உணர்ந்த அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, யப்பான் இன்று அமைதிப் பேச்சை உருவாக்கி தந்திரமாக தமிழீழத்தை சிங்களவர்களுக்கு அடிமையாக்கி சிங்களவர்களிடம் சலுகைகள் பெற சதித்திட்டம் தீட்டி செயல்படுகின்றனர்.

1985 அளவில் சிங்களப் படைகள் 3 வருடமாய் போராடி விமானப் போரால் யாழ்ப்பாணத்தை தரைமட்டமாக்கி வன்னியிலும் ஊடுருவி பெருமிதத்துடன் பலப்பரீட்சை நடத்தினர். ஆனால், பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் மூன்று மாதத்தில் ஓயாத அலையால் சிங்கள இராணுவத்தை வெருட்டி அடித்து வடக்கே கொண்டு போய் பலாலி காங்கேசன்துறையில் தஞ்சம் புக வைத்தனர். இந்தியக் கப்பல்கள் சிங்கள இராணுவத்தைக் காப்பாற்ற ஆயத்தமாய் இருந்தன. நான்கு நாட்களில் சிங்களப்படை தமிழீழ மண்ணில் இல்லாமலே வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும். ஆனால், அமெரிக்கரும், இந்தியரும் கொடுத்த நெருக்குவாரத்தில் சிங்கள இராணுவம் தப்பிப்பிழைத்தது.

மீண்டும் வல்லரசுகள் தலையிடாவிட்டால் பிரபாகரனும் விடுதலைப் புலிகளும் சிங்கள இராணுவத்தை தமிழீழ மண்ணில் இருந்து முற்றாகவே வெளியேற்ற முடியும்.

தம்பி பிரபாகரன் தலைமையில் விடுதலைப் புலிகள் தமிழ் மண்ணைக் காப்பாற்ற தம் உயிரைப் பணயம் வைத்து விழிப்புடன் இருக்கின்றனர். ஈழத்தமிழ் மக்கள் விசேடமாய் வெளிநாட்டு ஈழத் தமிழர் ஒன்றுபட்டு தியாகம் செய்து தமிழீழ மண்ணைக் காப்பாற்றத் தயாரா?



ச.வே.டேவிட்

முன்னாள் தலைவர்
காந்தியம்,
கட்டடக் கலைஞர்.
தமிழீழம்.

மேலைத்தேயத் தமிழர் இப்பணியில் சிறப்பாய் இயங்கலாம். அவர்களிடம் தமிழீழ கலாச்சாரம் அழிந்து போகும் அபாயம் தென்படுகிறது. தந்தை செல்வாவின் உண்மை, நேர்மை, அமைதி, எளிமை என்ற அடிப்படையிலும், தம்பி பிரபாகரனின் தலை மையிலும் தமிழீழத்தின் பெருமை கட்டி எழுப்பப்பட வேண்டும்.

விடுதலை பெற ஒரு பலமான தேசியம் உருவாகி வளரவேண்டும். தமிழீழ தேசியத்தை சிதறடிக்கவே சிங்கள வெறியன் ஜெயவர்த்தனா இனப்படுகொலையை கட்டவிழ்த்துவிட்டு ஏழு இலட்சம் ஈழத்தமிழர்கள் தம் நாட்டை விட்டு அகதிகளாக வெளியேற வழி வகுத்தான்.

மானமுள்ள ஈழத் தமிழர் சிங்கள வெறியனின்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# தலைமை என்பது ஒரு கொள்கலன்



ஐம்பது அகவைக்குள், ஒருவர் ஒரு 'தேசத்தின் தந்தை' என்று மதிக்கப் படுவது அரிதிலும் அரிதான சாதனை. தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் இச் சாதனையை நிகழ்த்தியுள்ளார்.

இவ்வாறான சாதனைபுரிய இலட்சியம் குறித்த தெளிவும் உறுதியும் இளம்வயதிலேயே அமைந்திட வேண்டும். இலட்சியத்தை அடையும் பாதை குறித்த பார்வைத் தெளிவும் அதே பருவத்தில் அமைந்திட வேண்டும்.

கூர்த்த மதி, இலக்கு நோக்கிக் குவிக்கப்பட்ட மனம், அச்சம் அறுத்த நெஞ்சம், அர்ப்பணிப்பு போன்ற ஆற்றல்களும் பண்புகளும் ஒரு புரட்சிக்குத் தலைமை தாங்குவோர்க்கு இன்றியமையாத் தேவை.

தலைமை என்பது அதிகாரம் மட்டுமல்ல, தலைமை என்பது பதவி மட்டுமல்ல, தலைமை என்பது ஒருவிருது அல்ல, தலைமை என்பது ஒருவரின் சகலகலா வல்லமையும் அல்ல, தலைமை என்பது பன்முக ஆற்றல்களின் கொள்கலன். பலரின் ஆற்றல்களை உள்வாங்கிக்கொள்ளும் திறன். அவர்களுக்கு வழிகாட்டும் வலிமை. கற்றுக்கொண்டு கற்றுக்கொடுக்கும் வித்தை. தளபதியின் கண்டிப்பு, தாயின் அரவணைப்பு, அது ஒரு வியத்தகு கலை!

சிலுவையில் அறையப்பட்டவர்கள் எல்லாம் ஏசுநாதர் ஆகிவிடுவதில்லை. பெத்லஹேமில் பிறந்திருக்கவேண்டும், பன்னிரண்டு சீடர்கள் இருக்க வேண்டும், என்று சொல்லும் உலக வழக்கு உள்ளது. இதன் பொருள் தனிமனித ஆற்றல் மட்டுமல்ல, சமூகச் சூழலும் வாய்ப்பளிக்கும் போதுதான் ஒருவர் தலைவர் ஆகமுடியும் என்பதாகும்.

ஜாரின் கொடுமை தாங்கா உருசியம் நேருற லெனினை ஈன்றே தீரும் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கூறுவதும் சமூகச் சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும்.




பெ.மணியரசன்

பொதுச் செயலாளர்,
தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி,
ஆசிரியர்,
தமிழர் கண்ணோட்டம்.
தமிழகம்.


சிங்கள இனவெறியர்கள் ஈழத்தமிழர்களை இனப் படுகொலை செய்தும், தமிழ்ப் பெண்களை சிங்களப் படையாட்கள் வல்லுறுவு கொண்டும், தரப்படுத்துதல் என்ற பெயரில் தமிழ் மாணவர்களின் மேற்கல்வி வாய்ப்புகளைப் பறித்தும், ஈழத் தமிழர்களை சிங்களவர் அடிமைகளாக நடத்திய சமூக நிலைதான் விடுதலைப் புலிகள் என்ற ஆயுதப்போர் அமைப்பை உருவாக்கியது.

ஈழவிடுதலைக்கென்று ஆயுதந்தரித்த கொரில்லாக் குழுக்கள் பல அதே காலத்தில் உருவாயின. ஆனால் விடுதலைப்புலிகள் அமைப்புதான் வரலாற்றின் தேர்வில் நிலைத்தது. விடுதலைப் புலிகள் அமைப்பு மற்ற விடுதலை அமைப்புகளை அழித்துவிட்டது என்று ஒரு புகார் உள்ளது. இப்புகாரை வாதத்திற்காக ஏற்றுக்கொண்டால், விடுதலைப் புலிகள் அமைப்பை முறியடித்து பிறி

Viduthalaipperoli

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

தொரு அமைப்பு ஏன் நிலைக்கவில்லை,என்ற வினா எழுகிறது.

ஈழவிடுதலைப் புரட்சியின் ஆயுதப் போராட்டப் பாதையை விடுதலைப் புலிகள் அமைப்புதான் சரியாகக் கணித்திருந்தது. வேறொரு விடுதலை அமைப்பு பாட்டாளி வர்க்கத்தை இணைக்காமல் விடுதலைப் புரட்சி சாத்தியமில்லை என்று கருதியது. அதற்காக, ஈழத் தமிழ்த் தேசிய இனத்தின் கூறாக தமிழ் நாட்டிலிருந்து சென்ற தொழிலாளர்களை இணைத்துக்கொண்டது. அவர்கள் தென்னிலங்கையில் சிங்களர் நடுவே வாழ்கிறார்கள். அப்பகுதிகளையும் இணைத்துத் தமிழ் ஈழ தேசப்படம் வெளியிட்டது.

நடைமுறைப்படாத இத்திட்டம் நடைமுறை ஆகவில்லை. இன்னொரு விடுதலை அமைப்பு வெளிநாட்டில் விடுதலைப் படையை முழுவதுமாகக் கட்டி, அது ஈழத்தின் மீது படையெடுத்து, சிங்களப் படையை விரட்டி, தமிழ் ஈழத்தை விடுவிக்கும் என்றது.

சிங்களப் படையுடன் இந்தியப் படையும் சேர்ந்து ஈழத்தைச் சூழ்ந்து கொண்டபோது வெளிநாட்டில் இருந்த படை ஈழத்திற்குள் நுழைய முடியவில்லை. வெளிநாட்டிலும் அப்படை முகாம் கலைக்கப்பட்டது.

இன்னொரு விடுதலை அமைப்பு, சீனப் புரட்சியில் பேசப்பட்ட வசனங்களைப் பேசிக்கொண்டிருந்தது.

இவற்றிலிருந்து மாறுபட்டு, ஈழ தேசத்தை துல்லியமாக அடையாளப் படுத்தி, ஈழ மண்ணை புரட்சிப் படைகளின் முகாம்களாக்கி ஈழ மக்களைச் சார்ந்து நின்று விடுதலைப் புரட்சி செய்த உத்தியில்தான் விடுதலைப் புலிகளின் வெற்றி தங்கியிருந்தது. கொரில்லாக் குழுக்களை மரபு வழிப்பட்ட படையாக விடுதலைப் புலிகள் பின்னர் வளர்த்தெடுத்தனர். அதே சமயம் கொரில்லாத் தாக்குதல்களை அவர்கள் கைவிட்டுவிடவில்லை. மரபு வழிப்பட்ட படையின் போரையும் கொரில்லாத் தாக்குதல்களையும் பொருத்தமாக இணைத்தது மற்றொரு சாதனை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சாதனை போர்க்களத்தில் மட்டுமல்ல, சமாதானக் களத்திலும் உயர்ந்து நிற்கிறது. சண்டை போடத் தெரியுமே தவிர, ராஜதந்திரக் கலை புலிகளுக்கு கைவராது என்று எதிர்த்தரப்பார் இறுமாந்து பேசித்திரிந்தனர்.



**ஈழவிடுதலைக்கென்று ஆயுதந்தரித்த கொரில்லாக் குழுக்கள் பல அதே காலத்தில் உருவாயின. ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்புத் தான் வரலாற்றின் தேர்வில் நிலைத்தது. விடுதலைப் புலிகள் அமைப்பு மற்ற விடுதலை அமைப்புகளை அழித்துவிட்டது என்று ஒரு புகார் உள்ளது. இப்புகாரை வாதத்திற்காக ஏற்றுக்கொண்டால், விடுதலைப்புலிகள் அமைப்பை முறியடித்து பிறிதொரு அமைப்பு ஏன் நிலைக்க வில்லை?**



நியுயோர்க்கில் இரட்டை கோபுரங்கள் 2001 செப்டம்பர் 11இல் தகர்க்கப்பட்ட பின் அரச பயங்கரவாதம் அங்கங்கே புதிய வேகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டது. அமெரிக்கா உலகத்தின் சமாதானக் காவலர் என்ற போர்வையில் நாடுகளை ஆக்கிரமித்தது. உலக மக்களையும் விடுதலை இயக்கங்களையும் மிரட்டியது. பல அமைப்புகளை அமெரிக்கா தடைசெய்தது. அவற்றுள் விடுதலைப் புலிகள் அமைப்பும் ஒன்று.

இந்த உலகச் சூழலைப் பயன்படுத்திக்கொண்டு சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்கள், விடுதலைப் புலிகளுக்கு எதிராக அமெரிக்காவின் நேரடித் தலையீட்டை வருவித்துவிட முயன்றார்கள். விடுதலைப் புலிகள் நிலைமையைப் புரிந்துகொண்டு தன்னிச்சையாகப் போர் நிறுத்தம் செய்து இராஜதந்திர வழியில் பதிலடி கொடுத்தனர்.

இன்றுவரை சமாதானப் பேச்சு வார்த்தையில் விடுதலைப் புலிகள் கையாண்ட உத்திகள், சிங்கள அரசின் பிடிவாதத்தை முரட்டுத்தனத்தை உலக அளவில் அம்பலப்படுத்தியிருக்கின்றன. அமைதிப் பேச்சு ஏற்பாட்டாளரான நோர்வே நாடே, சிங்கள அரசின் அணுகுமுறையால் வருத்தமுற்றுள்ளது.

அதேவேளை, போர் ஓய்வு முறிவுற்றால், அடுத்த போருக்கு அணியமாக உள்ளனர் விடுதலைப் புலிகள். வேற்று நாட்டார் யாரைச் சேர்த்துக் கொண்டு சிங்களர் வந்தாலும் அவர்களைச் சந்திக்கத் தயாராக உள்ளனர் விடுதலைப்புலிகள்.

போர்க்களத்தில் மட்டுமல்ல, பேச்சுவார்த்தை மேசையிலும் விடுதலைப் புலிகள் கை ஓங்கியே உள்ளது. அரசியல் என்பது இரத்தம் சிந்தாத யுத்தம், யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல் என்றார் மாசேதுங்.

பிரபாகரன் அவர்களின் தலைமைத்துவம் உலக அங்கீகாரம் பெற்றுள்ளது. குறிப்பாக சிங்களரின் அங்கீகாரம் பெற்றுள்ளது.

பிரபாகரன் தலைமைத்துவம் என்பது அவரது ஆற்றல், அர்ப்பணிப்பு, அவரின் சக தோழர்களின் பங்களிப்பு அனைத்தும் இணைந்தது. இந்த அனைத்தையும் இணைத்த பேராற்றல் பிரபாகரனுக்குரியது.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## காந்தரூபன் அறிவுச்சோலை

முழுமையான மனிதர்களை உருவாக்கும்

புதுமையான பரிசோதனைக் களமாக காந்தரூபன் அறிவுச்சோலை அமைய வேண்டும் என்பது எனது ஆவல்.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

Thalaivar Velupillai Pirabakaran

# A Tribute

**"Nature is my friend. Life my philosopher and history is my guide."**
(V. Pirabaharan, March 1984.)



**I wish Thalaivar Velupillai Prabakaran many more years of healthy life with his family, his organization and the Tamil people. In you, the LTTE and the Tamil people rest the renaissance of the Tamils.**



Pro. Ethirveerasingam

Visiting Professor (Asia - America - Africa Universities), Former Professor of Agriculture, Former winner of Olympic award. U.S.A

## The Liberator

The first quotation aptly describes where Prabakaran draws his inspiration. His vision is to liberate the Tamil people and the Tamil homeland from colonization and political domination by the Sinhala nation using its majoritarian laws, coercive economic and administrative forces and its armed forces. Equally important are his efforts to liberate the Tamils from their dependent mind-set developed over the long foreign and Sinhala colonial period since 1658 when Jaffna fell to the Portuguese. Some Tamils had compared the pre-Prabakaran Tamil's dependent syndrome to that of the "Battered wife Syndrome," because, whether it was the Portuguese, the Dutch or the British, they would bear the humiliation, burden and atrocities for the sake of the life of the children, family and community. With the colonial Sinhala domination it was a continuation of the same mind-set when the Tamils tolerated the attacks on them in 1956, 1958, 1961, 1977 and 1983. With each assault we accepted far-fetched rationale and commiseration by the Sinhala leaders and returned each time to be assaulted again just because we asked for our freedom to use our language and to govern ourselves. It is reported by current historians that when Prabakaran heard the tragic stories of the 1958 riots, he asked, "Why didn't the Tamils hit back?" The Tamils of old, like those who are now supporting the Sri Lanka Government (SLG), would maintain that they, like a wife battered by her husband would rationalize that she bears the brutal assaults and returns or stays with the husband for the sake of her children, are doing it for the sake of the survival and advancement of the Tamil community.

Twenty years of non-violent protests inside and outside the First Parliament to safe guard the rights of the Tamils, guaranteed by and entrenched in Section 29 of the Soulbury Constitution, failed. That constitutional right was not only denied and broken by the Sinhala Only Bill in 1956, but was totally removed in 1972. Prabakaran decided to take up arms to protect those rights from those who would want to wrest it from us. He committed his life to break the cycle of violence and pacification once and for all and protect the Tamils in their homeland – Tamil Eelam. Prabakaran's and the LTTE's continued armed struggle, supported by the Tamil people, is in concordance with Abraham Lincoln's position articulated in his Inaugural Address on March 4, 1861. He said:

"If by force of mere numbers a majority should deny a minority any clearly written constitutional rights, it might, in a moral point of view, justify revolution - certainly if such a right were a vital one."

Tamileelam Archive

## அகவை 50

### தலைவர் பற்றி...



### போரியல் கல்வி.

தலைவர் ஆரம்பகாலத்தில் இருந்தே கல்விக்கு கொடுத்த முக்கியத்துவம் என்பது தான் எங்களுடைய போராட்டத்தைப் போரியல் அடிப்படையில் உலகின் வேறு வேறு போராட்டங்களில் இருந்து வித்தியாசப்படுத்துகின்றது.

இதைப்பற்றி அமெரிக்க போரியல் ஆய்வாளர்களில் முக்கியமான ஒருவரான Steephan Gogan என்பவர் இந்திய இராணுவத்தைப் பற்றியும், அதனுடைய வரலாறு, மற்றும் போரிடும் குணாம்சங்கள் பற்றியெல்லாம் எழுதிய ஒரு மிகமுக்கியமான நூலில் குறிப்பிட்டிருக்கின்றார். அதாவது இந்திய இராணுவத்துடன் போரிட்ட இயக்கங்களின் வரிசையில் புலிகள் வித்தியாசப்படுகின்றார்கள் என்று அவர் கூறுகின்றார். அவர் முக்கியமாகக் குறிப்பிடுவது, புலிகள் கல்விகற்ற ஓர் இராணுவ அமைப்பாக - அதாவது, அவர்கள் தமது போரியலை நன்கு கற்றவர்களாக, தேர்ச்சி பெற்றவர்களாக இருந்ததன் காரணமாகவே இந்திய இராணுவம் இலங்கையில் ஒரு பெரும் சவாலைச் சந்திக்க வேண்டியதாயிற்று என்று குறிப்பிட்டு,

When such rights are denied through rewriting of the constitution by the Sinhala nation without the consent of the Tamil nation, then the Tamil nation is justified to take up arms and establish their own government.

**Creator of Tamil Eelam in the mind and in fact**

In 1990, he established a de facto state, under the control of the Liberation Tigers of Tamil Eelam (LTTE), with the traditional name, Tamil Eelam, within 70-80% of the traditional homeland that the SLG calls the "merged North East province". During this process of establishing the de facto state, Prabakaran earned the admiration of the Tamil people for articulating the basis for the state of Tamil Eelam and getting the people, who have been a community dependent on the Portuguese, the Dutch, the British, and since 1956 on Sinhala Sri Lanka, to accept that we were a kingdom and a nation in the past and will be a nation and a state in the future.

His battle for the minds of the Tamil people to convince them that they are a sovereign nation with the right to self-determination and the right to govern themselves was a struggle with the Tamil people that he won and he continues to convince them to maintain it. The Sri Lanka government, other Tamil groups, and their international supporters continue to attempt to wean the Tamil people away, through personal rewards and concessions, from their resolve to liberate themselves in mind and in fact.

Tamil Eelam is now not only a territory that is the homeland of the Tamils. He has also made us realize and feel that it is also a concept that reflects liberty, equality and justice for all its inhabitants.

**Peace Attempts Before the SLG's Jaya Sikuru (Victory Assured) Offensive**

There are many finest hours in the military, civilian, social and education spheres in Tamil Eelam led by Thalaivar Prabakaran that have been recorded already by many authors. The prelude to the SLG's Jaya Sikuru offensive on the morning of May 13, 1997 stands out in my mind as one of the major events orchestrated by Prabakaran to prevent that war and negotiate for peace.

To me, his attempt to prevent Jaya Sikuru illustrates his humanity, desire for peace and fairness to prevent the untold suffering of civilians and combatants from both sides then and in the future. He attempted to start a negotiated solution to the Tamil question. The events related below are one episode that lasted only a few days but which illustrates Prabakaran's desire to resolve the conflict through negotiation rather than resorting to war, which, to him, is an option of last resort. I have no doubt he had sent his message, to the SLG leaders through others also to stop the planned offensive operation to capture the Vanni, and expressed his willingness to negotiate with third party mediation to resolve the conflict.

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

**Harvard University**

In early March 1997 the Harvard University conflict resolution team composed of Professors Donna Hicks and William Weisberg invited me to go with them to meet with Anton Balasingam and S.P. Thamilchelvan to explore a second track process of conflict resolution. (See Harvard University Report to US Institute of Peace ) In Colombo, before I joined them, they had already met with GL. Peiris (who was with the Peoples Alliance government then), Neelan Thiru chelvam and other leading members of the SLG and Colombo civil society interested in a negotiated settlement. I joined the Harvard Team to meet the American Ambassador Burleigh, who was joined by the Defence and political attaches, on the morning of March 25.

The Ambassador was not keen on the Harvard Team visiting the Vanni, though the State Department had supported their visit and was funded by the U.S. Institute of Peace. Also GL Peiris had nominated three non-government conflict resolutionists as the SLG unofficial representatives to join the Harvard Team to explore the process in meetings in another country. The LTTE was supposed to nominate three non-LTTE members also when the Team met them in the Vanni. Ambassador Burleigh advised the Team to consult with the Indian Ambassador before they went to the Vanni. The Harvard Team was not keen to expand their consultations at that point.

The next day the Harvard Team informed me that Prof. Peiris had withdrawn the names he had nominated and withdrew the permission he gave them to go to the Vanni. The reason he stated was that as they were both foreigners (white) who

> Tamil Eelam is now not only a territory that is the homeland of the Tamils, but also a concept that reflects liberty, equality and justice for all its inhabitants.

would be visible, many questions would be asked by the armed forces, the media, UN and international institutions as to the purpose of the Team's visit to the Vanni. This may lead to speculations and questions by those who oppose negotiation with the LTTE and the government would not be able to keep the visit of the team confidential. The Harvard Team, who had obtained an appointment with Balasingam and Thamilchelvan, prior to their arrival in Sri Lanka, had to cancel the appointment. I was asked to go to the Vanni and explain the situation and offer apologies on their behalf, and to explain to the LTTE the Harvard Team's wish to facilitate the exploration of a path that would result in the two parties meeting together to negotiate a solution at a future date.

**Offer of Negotiated Peace before the SLG Offensive**

I travelled to Mankulam on the 11th of April 1997, and on the 17th April I met Balasingam and Thamilchelvam and explained and expanded on the messages from the Harvard Team, whom they had met in 1994 in Jaffna. Mr. Balasingam informed me that he was not surprised that Prof. Peiris denied permission to the Team to visit the Vanni. He said that the SLG was preparing to invade the Vanni and control the A9 road to Jaffna. This is a story that was already circulating in Mankulam where most of the residents were repeatedly displaced from the Jaffna peninsula and Kilinochchi. I was staying with my displaced brother's family. He lost his wife to the July 1995 SLG army operation.

After some discussion Bala singam advised me to take notes on what he was going to say as the message was from Thalaivar Prabakaran. He then advised me to give the message to the American Ambassador, President Chandrika, UNP leaders, and others who have sent their thoughts through me. Though we spoke in Tamil, Mr. Balasingam repeated each point in English so that I would not mistranslate his statements. The points he emphasized as coming from Thalaivar Praba karan were:

1. We are disappointed that the SLG has not given permission for a Team from Harvard University to visit us to explore the possibility of mediation. It shows that the SLG is not interested in a negotiated solution through a third party.

2. Harvard can be a second track facilitator to start talks through mediation of a third party government. Harvard does not have the resources to be a mediator. Only a third party government has such resources. Current conditions need authoritative and knowledgeable representatives about conditions. Middle people are not suitable to discuss solutions to current and long-term conditions.

3. The names Prof Peiris nominated did not have any authority to make decisions.

தமிழ் ஆவணகாப்பகம் Tamileelam Archive

அகவை 50

அதை இந்திய இராணுவத்துறை தமிழர் படையாக இருந்த மற்றாஸ் றெஜிமென்றுடன் ஒப்பிடுகின்றார்.

அதாவது இந்த மற்றாஸ் றெஜிமென்ற் என்பதும் கல்வியில் சிறந்த ஓர் இராணுவ அணியாக இருந்ததாகவும் அதை விடச் சிறந்த முறையில் புலிகளுடைய போர் அணிகளின் கல்விப்பலம் மிகச் சிறப்பாக இருந்ததும், இந்திய இராணுவம் இலங்கையில் தோல்வியைச் சந்தித்ததற்கு ஒரு முக்கிய காரணமாக இருந்ததென்றும் அமெரிக்க போரியல் ஆய்வாளரான Steephan Gogan தன்னுடைய 'இன்டியன் ஆமி' (Indian Army) எனும் நூலில் குறிப்பிடுகின்றார்.



● டி.சிவராம்
இராணுவ ஆய்வாளர்.

### பெறுமதிமிக்க உயிர்.

திரு பிரபாகரன் ஒரு சாதாரண மனிதரல்ல. உலகிலேயே மிகவும் கட்டுக்கோப்புமிக்கதும் பலமான விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர். அவருடைய உயிர் பெறுமதிமிக்கது. அவருக்குப் பின்னால் எதுவித கறையும் கிடையாது. மிகவும் எளிமையான மனிதர். அவருடைய மனைவியிடம் மூன்று புடவைகள் மாத்திரமே இருந்தன. ஒன்று அணிந்து அழுக்கானதாக இருக்கும். இன்னொன்று தோய்த்து அணிவதற்குத் தயாராக இருக்கும். ஒன்றை அவர் அணிந்திருப்பார். விருந்தினர்களுக்கு மாத்திரம் கொக்கோ கோலா போன்ற மென்பானங்களை அருந்தத்

**4.** The SLG is not genuine because they are preparing for an offensive to capture the Vanni.

**5.** Their public posture is to prepare their people for the offensive. This is not a signal for peace.

**6.** The SLG should contact the LTTE directly to talk about third party mediation.

**7.** We are for third-party mediation openly and not in secret. If the Commonwealth Secretariat wants to mediate, they should first contact the SLG and LTTE directly.

**8.** We have a massive refugee problem and no assistance. SLG preparing for another operation to capture the Vanni will displace the already displaced and will cause destruction and death of civilians.

**9.** If the major Operation that the SLG is planning to invade the Vanni is implemented, it will be a draw back for future negotiations. If LTTE is weakened it will tighten the conditions for negotiation.

**10.** If SLG wants to negotiate before the offensive, the conditions for negotiation are same as before – 1994. That is, alleviation of the people's suffering first through rehabilitation, reconstruction and that process has to be in the control of the LTTE as specified in the last peace talks.

**11.** Definite policies have to be negotiated and the LTTE leadership in negotiation should be recognized as equals. The mediator has to be an international government.

**12.** By end of May we want an international government third party to send a fact-finding mission to North and South.

**Briefings in Colombo**

In responds to the request made by Anton Balasingam, I met many a political leader including Ranil Wickremasinghe. I have copies of Balasingam's message and briefed everyone of them on all the details of the discussions I had with Balasingam and Tamilselvan. I tried to presuade them that the impending security operation by armed forces must be stopped. in order to initiate negotiations with the LTTE. Although some of them were enthused about the LTTE's desire to negotiate with the help of a third party mediation, all my genuine efforts ultimately proved futile. Owing to lack of space I am refraining from giving details of the briefings that took place in Colombo from the 22nd of April till the 13th of May 1997.

**Winning the War after Peace Efforts**

As everyone now knows, Jaya Sikuru operations that went on for two years with the training received from the world military powers were driven back in less than ten days.

After recapturing Kilinochchi, Elephant Pass and beyond in the Peninsula. by the LTTE, Prabakaran could have marched into Jaffna and captured it but he was not prepared to pay the price of the death of thousands of innocent civilians who would be caught in the crossfire. His success is our future and our Liberty.

We wish you a long and healthy life with your family, organization and the Tamil People.

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# ஒரு புகழுரை

## வேலுப்பிள்ளை பிரபாகரன்

"இயற்கை எனது நண்பன், வாழ்க்கை எனது தத்துவாசிரியன், வரலாறு எனது வழிகாட்டி"

(வே. பிரபாகரன் - பங்குனி 1984)



**தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் அவரது குடும்பத்துடனும், இயக்கத்துடனும், அவர் நேசிக்கும் தமிழ் மக்களுடனும் மேலும் பற்பல ஆண்டுகள் ஆரோக்கியமான பெருவாழ்வு வாழ வேண்டும் என நான் வாழ்த்துகின்றேன்.**

**தலைவா! உங்களிலும், தமிழீழ விடுதலைப்புலிகளிலும், தமிழ் மக்களிலுமே தான் முழுத்தமிழ் இனத்தின் மறுமலர்ச்சி முற்று முழுதாகத் தங்கியுள்ளது.**




**கலாநிதி எதிர்வீரசிங்கம்**

வருகைதரு பேராசிரியர், (ஆசிய, அமெரிக்க, ஆபிரிக்க, பல்கலைக்கழகங்கள்), முன்னாள் விவசாயப் பேராசிரியர், முன்னாள் ஒலிம்பிக் விளையாட்டுவீரர். அமெரிக்கா.


### விடுதலை வீரன்

பிரபாகரன் தனது உள்ளுயிர்ப்பூட்டலை எங்கிருந்து பெறுகின்றார் என்பதை மேலே தரப்பட்டுள்ள மேற்கோள் மிகவும் பொருத்தமாகவே விபரிக்கிறது. வல்லந்தப்படுத்திடும் பொருளாதார ஆட்சிமுறை சார்ந்த சக்திகளையும், படை பலன்களையும், மேலாண்மை வெறிகளுடன் இயற்றப்பட்டு வரும் பெரும்பான்மைச் சட்டங்களையும், சிங்கள தேசத்தின் ஆக்கிரமிப்புக் குடியேற்றங்களையும், ஆதிக்க வல்லாட்சிக் கொடூரங்களையும் எதிர்த்து நிற்கும் அதேவேளை, இவற்றின் கொடூரப் பிடிகளிலிருந்து தமிழ் மக்களையும் தமிழர் தாயகமாம் தமிழீழத்தையும் மீட்பதே அவரது தொலை நோக்குடைய இலட்சியமாகும். 1658ம் ஆண்டு யாழ்ப்பாணம் போத்துக்கீசரிடம் வீழ்ச்சியுற்றதிலிருந்தும், அந்நிய சிங்களக் குடியேற்றக் காலங்களிலிருந்தும் தமிழர்களிடையே வளர்ந்து வந்த பிறரில் தங்கி வாழும்-தங்கியிருக்கும் மன நிலையிலிருந்து அவர்களை மீட்கும் அவரது முயற்சிகளும் அதே அளவு முக்கியத்துவம் வாய்ந்தவை. பிரபாகரனுக்கு முந்திய தமிழர்களது பிறரில் தங்கியிருக்கும் தாழ்வு மனப்பான்மைகொண்ட போக்கை - ஒத்திசைவை, நையப்புடைத்து நொறுக்கப்பட்ட மனைவியின் ஒத்திசைவோடு சில தமிழர்கள் ஒப்பிட்டிருக்கிறார்கள். அன்றைய தமிழர்கள் தமக்கு ஏற்படும் மானமிழப்புக்களையும், சுமைகளையும், அட்டுழியங்களையும் அவை போத்துக்கீசரால் வந்தாலும், டச்சுக்காரரால் வந்தாலும், பிரித்தானியரால் வந்தாலும், அவற்றையெல்லாம் தங்களது பிள்ளைகளுக்காகவும், குடும்பத்திற்காகவும், சமுதாயத்திற்காகவும் பொறுத்துக்கொள்ளும் மன நிலையை அன்றிலிருந்தே வளர்த்துக்கொண்டு விட்டார்கள். சிங்களவர்களது ஆக்கிரமிப்புக் குடியேற்ற ஆதிக்கத்தின் போதும் இம்மன நிலையே அவர்களிடம் தொடர்ந்தது. 1956, 1958, 1961, 1977, 1983ம் ஆண்டுகளில் தம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களை எல்லாம் சகித்துக்கொண்டு வாளாதிருக்க வைத்ததும் அம்மன நிலையின் விளைவேயாகும். ஒவ்வொரு தாக்குதலுக்குப் பின்னரும் சிங்களத் தலைவர்களது வலிந்து பெறப்பட்ட அடிப்படைக் கோட்பாட்டையும் பரிவிரக்கத்தையும், நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டு மீண்டும் தாக்கப்படுவதற்காக அவர்களிடமே நாம் திரும்பிச் சென்றோம். எங்களது மொழியை நாம் உபயோகிப்பதற்கும், எங்களை நாங்களே ஆளுவதற்கும் சுதந்திரம் கேட்டோம் என்ற காரணங்களுக்காகவே நாம் இவ்வாறு நடாத்தப்பட்டோம். அண்மைக்கால வரலாற்று ஆசிரியர்களின் கூற்றுப்படி, 1958ம் ஆண்டு நடைபெற்ற இனக்கலவரத்துச் சோகக் கதைகளைப் பற்றிப் பிரபாகரன் கேள்வியுற்றபோது, எதற்காகத் தமிழர்கள் திருப்பித்தாக்கவில்லை எனக் கேட்டாராம். கணவனால் நையப்

தமிழ் ஆவணக் காப்பகம் Tamileelam Archive

# அகவை 50

கொடுப்பார்கள். தாங்கள் சாதாரண சோடா வகைகளையே அருந்துவார்கள்.

● மேஜர் ஜெனரல் கர்கிரத் சிங்.
(தளபதி இந்திய அமைதிகாக்கும் படை.)

### அழிக்க முடியாதவர்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு, உறுதிப்பாடு, குறிக்கோள், தொழில் நுட்பச்சிறப்பறிவுத் திறமை ஆகியவற்றிற்காக எனக்கு அவர்கள் மீது மதிப்பும் மரியாதையும் மதிப்பார்வமிக்க பாராட்டும் உண்டு. தமிழ் மக்களின் உணர்ச்சி வெளிப்பாடுதான் தமிழீழ விடுதலைப்புலிகள் என்ற எண்ணப்பதிவே என்னுள் மிஞ்சியிருந்தது. அந்தத் தமிழ் உணர்ச்சிக்கனிவும், ஆர்வகொள்கையும் இருக்கும் காலம் வரை அவர்களை அழிக்க முடியாது.

● ஜெனரல்
S.C சர்டேஷ் பாண்டே.
(தளபதி இந்திய அமைதிகாக்கும் படை,1992)

### புலிகளின் கட்டுப்பாடு.

புலிகள் கடுமையான ஆட்சியாதிக்கக் கொள்கையுடையவர்களாக இருந்தாலும், அவர்கள் கைக்கூலி வாங்கும் இயல்புடையவர்கள் அல்ல. போலி வேடங்கொண்டவர்கள் அல்ல. உலகிலுள்ள ஏனைய இராணுவத்தினர் சில இழிசெயல்களுக்குப் பெயர் போனவர்கள். ஆனால் புலிகளோ களவு, கைக்கூலி, பாலியல் வன்முறை போன்ற இழிசெயல்களைச் சகித்துக் கொள்வதில்லை. தமிழ் மக்களின் பாதுகாப்பையே தமது ஒரே நோக்கமாகக் கொண்டவர்களாகப் பார்க்கப்படுகிறார்கள். எதிரியிடம் புடைத்து நொறுக்கப்பட்ட மனைவி எப்படி அக்கொடுமைகளைத் தனது குழந்தைகளுக்காகப் பொறுத்து கொண்டு கணவனிடம் திரும்பி வருகிறாளோ அல்லது அவற்றையெல்லாம் தாங்கிக்கொண்டு கணவனுடனேயே தங்கிவிடுகிறாளோ, அதைப் போலவே, தமிழ்ச் சமுதாயத்தின் சீவியத்திற்காகவும், முன்னேற்றத்துக்காகவுமே சிறீலங்கா அரசைத் தற்பொழுது ஆதரித்துக்கொண்டிருப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கும் தமிழர்களும் தங்கள் நிலைப்பாட்டை அடிப்படையிலேயே அதன் நியாயப்படுத்திக்கொண்டு முன்னாள் தமிழர்கள் போல் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சோல்பெரி அரசியல் யாப்பின் 29ம் பிரிவின்படி உத்தரவாதமளிக்கப்பட்டு வலுவாக்கப்பட்ட தமிழர்களது உரிமைகளைப் பாதுகாக்க, நாடாளுமன்றத்திற்குள்ளும் வெளியிலும் மேற்கொள்ளப்பட்ட 20 வருட சாத்வீகப் போராட்டங்கள் தோல்வி கண்டன. அந்த அரசியல் யாப்பால் அளிக்கப்பட்ட அரசியலமைப்புரிமைகள் மறுக்கப்பட்டதோடு, தனிச் சிங்களச் சட்டத்தால் தகர்த்தப்பட்டன. பின்பு 1972ல், அவ்வுரிமை முற்றாகவே நீக்கப்பட்டது. எங்களிடமிருந்து இவ்வுரிமைகளைப் பறித்தோரிடமிருந்து எமது அவ்வுரிமைகளைப் பாதுகாப்பதற்காகவே பிரபாகரன் ஆயுதம் தூக்க முடிவு செய்தார். வன்முறையும் பின்னர் அமைதிப்படுத்தலும் என்று தொடரும் இந்த நச்சு வட்டத்தை முடிவாக உடைத்துத் தமிழ் ஈழம் என்ற தமிழர் தாயகத்தில் தமிழர்களைப் பாதுகாக்கத் தனது உயிரையே ஈடுபடுத்தினார் அவர். பிரபாகரனதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் ஆயுதப்போராட்டம் தமிழ் மக்களால் பூரணமாக ஆதரிக்கப்படுகின்றது. இந்தப் போராட்டம், 1861ம் ஆண்டு பங்குனி மாதம் 4ந் திகதி ஏபிரகாம் லிங்கனால் நிகழ்த்தப்பட்ட தொடக்க வுரையில் அவரால் சொல்லப்பட்ட அவரது நிலைப்பாட்டுடன் ஒத்ததாக அமைகிறது. அவர் அவ்வுரையில் பின்வருமாறு கூறுகின்றார்:

'தெளிவாக எழுதப்பட்ட ஒரு சிறுபான்மையினருக்கான அரசியலுரிமைகளைப் பெரும்பான்மையினர் மறுப்பார்களேயானால், அந்த உரிமைகள் நிச்சயமாகவே அவர்களது உயிர் வாழ்வுக்கு ஆதாரமாகவிருக்கும் பட்சத்தில், அவற்றைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் புரட்சி, நீதிக்குரிய கருத்து நோக்கில், நியாயமானதாகவே இருக்கும்.'

### மனத்திலும் நடைமுறையின் உண்மை யதார்த்தத்திலும் தமிழீழத்தைத் தோற்றுவித்தவர்

சிறீலங்கா அரசினால் 'ஒன்றிணைக்கப்பட்ட வட கிழக்கு மாகாணம்' என அழைக்கப்படும் நிலப்பரப்பு 'தமிழீழம்' என்ற மரபு சார்ந்த பெயரைக் கொண்டுள்ளது. இந்தத் தமிழீழத்தில் 70-80 விழுக்காடு நிலப்பரப்பு தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதோடு, அங்கே 1990ம் ஆண்டு அவரால் ஒரு மெய்யான அரசும் நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் நாங்கள் முன்னர் ஓர் இராச்சியமாய் - ஒரு தேசியமாய் இருந்தோம் என்பதையும், எதிர்காலத்திலும் ஒரு தேசியமாய் - ஒரு நாடாய் இருப்போம் என்பதையும் காட்டியுள்ளதோடு, அவர்களது பாராட்டையும்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பெற்றுள்ளார் பிரபாகரன். தாங்கள் இறைமையுடைய தேசியம் என்பதையும், தங்களுக்குச் சுய நிர்ணய உரிமையுண்டு என்பதையும், தங்களைத் தாங்களே ஆள உரிமை பெற்றவர்கள் என்பதையும், தமிழர்களை நம்பவைக்கும் போராட்டத்தை நடாத்தி அவர்களது மனங்களை வெற்றி கொள்வதோடு அவர்கள் அந்த மன நிலையைத் தொடர்ந்து பேண வேண்டுமென்பதையும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றார். மனத்திலும் நடைமுறையின் உண்மை யதார்த்தத்திலும் தங்களை விடுவிக்கவேண்டும் என உறுதி பூண்டுள்ள தமிழ் மக்கள், தங்கள் இலட்சியத்தை மறக்க வைக்க வேண்டுமெனச் சிறீலங்கா அரசு, ஏனைய தமிழ்க்குழுக்களினதும் சர்வதேச ஆதரவாளர்களினதும் உதவியுடன் கடுமையாகத் தொடர்ந்து முயன்றுகொண்டிருக்கிறது. இதற்காகத் தனிப்பட்ட சன்மானங்களையும், சலுகைகளையும் தொடர்ந்து வாரி இறைத்துக்கொண்டு இருக்கிறது சிறீலங்கா அரசு. தமிழீழம் தமிழரது ஆட்சிப் பிரதேசம் மட்டும் அல்ல, அது தமிழரது தாயகமும் கூட. 'தமிழீழம்' என்பது ஆதிகாலத்திலிருந்து வாழ்ந்து வரும் குடியிருப்பாளர்கள் அனைவரையும் பொறுத்தமட்டில், சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகியன வற்றை உள்ளடக்கிய ஒருகோட்பாடு என்பதை நாம் எமது நினைவிற்குக் கொண்டுவரவேண்டும் என்பதை எமக்கு உணர்த்தியவர் பிரபாகரன்.

### சிறீலங்கா அரசின் ஜெயசிக்குறு (வெற்றி நிச்சயம்) தாக்குதலுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட சமாதானத்திற்கான முயற்சிகள்

தமிழீழத்தில் தலைவர் பிரபாகரனால் இராணுவ, குடியியல், சமூக, கல்வித் துறைகளில் முன்னெடுக்கப்பட்ட நகர்வுகள் யாவும் ஏற்கெனவே நூலாசிரியர்கள் பல



'தெளிவாக எழுதப்பட்ட ஒரு சிறுபான்மையினருக்கான அரசியலுரிமைகளைப் பெரும்பான்மையினர் மறுப்பார்களேயானால், அந்த உரிமைகள் நிச்சயமாகவே அவர்களது உயிர் வாழ்வுக்கு ஆதாரமாகவிருக்கும் பட்சத்தில், அவற்றைப் பாதுகாக்க மேற்கொள்ளப்படும் புரட்சி, நீதிக்குரிய கருத்து நோக்கில், நியாயமானதாகவே இருக்கும்.'

ரால் பதிவு செய்யப்பட்டுள்ளன. சிறீலங்கா அரசினால் வைகாசி 13, 1997ல் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு தாக்குதலைத் தடுத்து, பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான பிரபாகரனோடு கூட்டாகச் செய்யப்பட்ட பிரதான சம்பவங்கள் எனது மனத்தை விட்டகலவில்லை. அன்றும் எதிர்காலத்திலும் இரு பக்கத்து குடிமக்களுக்கும் போரிலீடுபடுபவர்களுக்கும் ஏற்படக்கூடிய சொல்லிலடங்காத் துயரங்களைத் தவிர்ப்பதற்காக அவர் மேற்கொண்ட முயற்சியானது அவர் எத்துணை தூரம் மனித இனத்தின் மீதும், சமாதானத்தின் மீதும், நடு நிலை மீதும் அவர் அக்கறை கொண்டுள்ளார் என்பதை விளக்குகிறது. கீழே சொல்லப்படும் நிகழ்ச்சிகள் யாவும், போரை நாடாமல் பிணக்கைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்க்க வேண்டுமென்ற பிரபாகரனின் விருப்பத்தைக் காட்டும் ஒரு சில நாட்கள் மட்டும் நடந்து முடிந்த சம்பவமாகும். வன்னியைக் கைப்பற்றத் திட்டமிடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையை நிறுத்தி, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பிணக்கைத் தீர்ப்பதற்கான தனது பரிபூரண விருப்பத்தைத் தெரிவிக்கும் தகவலைப் பிறர் மூலமும் சிறீலங்கா அரசாங்கத் தலைவர்களிடம் அவர் அனுப்பியிருந்தார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

### Harvard பல்கலைக்கழகம்

1997ம் ஆண்டு பங்குனி மாதத் தொடக்கத்தில் பேராசிரியர்கள் டொன்னா Hicks விலியம் வீஸ் பேர்க் ஆகியோரைக் கொண்ட, ஹவாட் பல்கலைக்கழகப் பிணக்குத் தீர்க்கும் குழு, அன்ரன் பால சிங்கத்தையும் சு.ப.தமிழ்ச்செல்வனையும் சந்தித்துப் பிணக்குக்குத் தீர்வு காணும் பொருட்டு ஓர் இரண்டாம் பாதையை ஆராய என்னை அழைத்தது. (பார்க்க; சமாதானத்துக்கான ஐக்கிய அமெரிக்க ஸ்தாபனத்திற்கு (ஹவாட் பல்கலைக்கழகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை)

கொழும்பில் நான் அவர்களைச் சந்திப்பதற்கு முன்னர், அவர்கள் ஜி.எல்.பீரிசையும் (அப்பொழுது அவர் மக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தில் இருந்தார்) பின்னர் நீலன் திருச்செல்வத்தையும், சிறீலங்கா அரசாங்கத்தின் முன்னணி அங்கத்தவர்களையும் சமாதானத் தீர்வில் அக்கறை கொண்டிருந்த கொழும்பிலுள்ள நாகரீக சமுதாயத்தைச் சேர்ந்த சிலரையும் சந்தித்திருந்தனர். சமாதானத்துக்கான ஐக்கிய அமெரிக்க ஸ்தாபனத்தின் நிதியுதவியுடனும், அமெ

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamil Heritage Archive

பிடிபட்டால், அவர்களது சித்திரவதையின் கொடுமையால் எதையாவது சொல்லவேண்டிய நிர்ப்பந்த இடருக்கு உள்ளாகுவதைக் காட்டிலும் தங்களோடு எந்நேரமும் கொண்டு செல்லப்படும் கொடு நஞ்சை விழுங்கித் தங்கள் உயிரை மாய்த்துக்கொள்ளும் அளவுக்குக்கடும் கட்டுப்பாடு மிக்கவர்கள்.

● சு.சிங்கா.Phd.
(பிறிஸ்பேர்க் பல்கலைக்கழகம்)

### வெற்றிக்குப் பின்னால்.

கீழ்க்காணும் காரணங்களே, தமிழ் மக்களின் நலன்களைப் பிரதிநிதிப்படுத்தும், மிகவும் விஞ்சிய ஆற்றலுடன் செயலுரமிக்க அரசியல் இராணுவச் சக்தியாகத் தமிழீழ விடுதலைப் புலிகளை வெளிப்படச் செய்தது.

இலங்கைத் தமிழர்களுடைய விடுதலை என்ற இலட்சியத்திற்காகப் பேரார்வத்தோடு ஈடுபட்டுவரும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடைய ஒழுக்கமும், தனி மனிதச் சிறப்பியல்புகளும், தன்னொழுக்கத்தில் அவர் கண்டிப்புடன் கடைப்பிடித்துவரும் சுய கட்டுப்பாடுகளுமே முதலாவது காரணமாக அமைகிறது. வேறு எதற்காகவேனும் குற்றங் காணப்பட்டாலும், அந்த மனிதரிடம் ஓர் உள் நெருப்பு கொழுந்துவிட்டெரிந்துகொண்டு இருக்கின்றது என்பதையும், அசைக்க முடியாத ஓர் உறுதியான அர்ப்பணிப்பு இருக்கின்றது என்பதையும். போர்த்திறன் சார்ந்த திட்டமிட்டுச் செயற்படும் ஓர் அசாதாரண திறமை இயற்பண்பாக அவரிடம் அமைந்துள்ளது என்ற உண்மையையும் எவராலும் மறுக்க முடியாது. போட்டியால் முடிவு செய்யப்படும், திறனாய்வு சார்ந்த, நெருக்கடியான அரசியலைக் கடும் ஆர்வத்துடன் கூர்ந்து அவதானிக்க அரசின் ஆதரவுடனும் வந்திருந்த இக்குழு வன்னிக்குச் செல்வதில் அமெரிக்கத் தூதர் அக்கறை காட்டவில்லை. இன்னொரு நாட்டில் சந்திப்பதற்கான சாத்தியக்கூறை இக்குழுவினருடன் இணைந்து கண்டறிவதற்கு அரசாங்கத்தைச் சேராத, பிணக்கு தீர்க்கவல்லவர்கள் மூவரை G.L. பீரிஸ் நியமித்திருந்தார். இக் குழுவினர் வன்னியில் தங்களைச் சந்திக்கும்போது தமிழீழ விடுதலைப்புலிகள் அல்லாத மூவரை தமிழீழ விடுதலைப் புலிகள் நியமிப்பர் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. வன்னிக்குச் செல்லும் முன்னர் இக்குழுவினர் இந்தியத் தூதரையும் சந்திக்க வேண்டுமென அமெரிக்கத் தூதர் அறிவுறுத்தினார். அந்நிலையில் தனது ஆலோசனையை விரிவுபடுத்த இக் குழு விரும்பவில்லை.

தன்னால் நியமிக்கப்பட்ட பெயர்களையும், இக்குழுவினர் வன்னிக்குச் செல்வதற்குத் தன்னால் கொடுக்கப்பட்ட அனுமதியையும் பேராசிரியர் G.L.பீரிஸ் மீளப்பெற்றுவிட்டார் என்ற தகவலை என்னிடம் ஹவாட் குழு அறிவித்தது. வெள்ளை நிறங்கொண்ட வெளிநாட்டவர் இருவரும் இலங்கையில் அடையாளம் காணப்பட்டு, அவர்களிடம் படையினராலும், ஊடகவியலாளர்களாலும், ஐக்கிய நாடுகள் சபையாலும், சர்வதேச ஸ்தாபனங்களாலும் அவர்களது வன்னிப் பயணத்துக்கான நோக்கம் தொடர்பாகப் பல கேள்விகள் கேட்கப்படும் என்னும் காரணங்கள் கூறியே அவர்களது அனுமதி மறுக்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை எதிர்ப்போரது நெடு நீளாய்வுக்கும் வினாக்களுக்கும் வழிகோலலாம். எனவும், இக்குழுவின் விஜயத்தை அரசாங்கத்தினால் இரகசியமாக வைத்திருக்க முடியாமற் போகலாம் எனவும் அரசாங்கத்தால் அஞ்சப்பட்டது. சிறீலங்காவிற்கு வருவதற்கு முன்பே பாலசிங்கத்துடனும் தமிழ்ச்செல்வனுடனும் பெறப்பட்ட சந்திப்பதற்கான நேர ஒதுக்கீட்டை அக்குழு இரத்து செய்ய வேண்டியிருந்தது. வன்னிக்குச் சென்று நிலைமையை விளக்கி அக்குழுவின் சார்பில் மன்னிப்புக் கோரும்படியும், ஓர் எதிர்காலத் திகதியில் இருதரப்பாரும் சந்தித்து ஒரு தீர்வை பேச்சுவார்த்தை மூலம் காண்பதற்கான ஒரு பாதையைக் கண்டறிவதற்கு அக்குழு கொண்டிருக்கும் விருப்பத்தை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் விளக்கிக் கூறும்படியும் அக்குழுவினால் நான் கேட்டுக்கொள்ளப்பட்டேன்.

### சிறீலங்கா அரசாங்கத்தின் இராணுவத் தாக்குதலுக்கு முன்னர் சமாதானத்திற்கான பேச்சுவார்த்தைக்கான யோசனை

நான் 1997ம் ஆண்டு சித்திரை மாதம் 11ம் திகதி மாங்குளத்திற்குச் சென்று, 17ம் திகதி பாலசிங்கத்தையும் தமிழ்ச்செல்வனையும் சந்தித்து ஹவாட் குழுவின் செய்தியை விரிவாக விளக்கிக்கூறினேன். இக்குழுவினரை 1994ம் ஆண்டு அவர்கள் யாழ்ப்பாணத்தில் சந்தித்திருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சிறீலங்கா அரசாங்கம் வன்னியை ஆக்கிரமித்து யாழ்ப்பாணத்திற்கான A9 பாதையைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆயத்தங்கள் நடைபெறுவதால் தான் இக்குழுவுக்கு G.L. பீரிஸ் அனுமதி மறுத்தார்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

என்றும், எனவே அவ்வனுமதி மறுப்பையிட்டு தான் ஆச்சரியம் கொள்ளவில்லை என்று பாலசிங்கம் தெரிவித்தார். இச்செய்தி ஏற்கெனவே மாங்குளப்பகுதியில் பரவி இருந்ததனால் யாழ் குடா நாட்டிலிருந்தும் கிளிநொச்சியிலிருந்தும் மக்கள் மீண்டும் இடம் பெயர்ந்தார்கள். நான் இடம் பெயர்ந்து எனது சகோதரன் குடும்பத்துடன் தங்கியிருந்தேன். அவர் 1995ம் ஆண்டு ஆடி மாதம் சிறீலங்கா இராணுவ நடவடிக்கையின் போது தனது மனைவியை இழந்தார்.

கலந்துரையாடல்களின் பின்பு, தான் சொல்லப்போவது தலைவர் பிரபாகரனின் செய்தியாகையால் என்னைக் குறிப்பெடுக்கும்படி பாலசிங்கம் அறிவுறுத்தினார். தங்கள் கருத்துக்களை என் மூலம் அனுப்பிய சனாதிபதி சந்திரிக்காவுக்கும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களுக்கும் ஏனையோருக்கும் இச்செய்தியைக் கொடுக்கும்படி அறிவுறுத்தினார். நாங்கள் தமிழில் பேசியபோதிலும், அவர் கூறிய கூற்றை நான் பிழையாக மொழிபெயர்க்காதவாறு ஒவ்வொரு விடயத்தையும் ஆங்கிலத்தில் திருப்பிச் சொன்னார். தலைவர் பிரபாகரனிடம் வரும் விடயங்களை அவர் வலியுறுத்திக் கூறினார். அவற்றை ஒவ்வொன்றாகக் கீழே தருகின்றேன்.

1. மத்தியஸ்தம் செய்வதற்கான சாத்தியக்கூறை கண்டறிய விரும்பிய ஹவாட் பல்கலைக்கழகக் குழுவுக்குச் சிறீலங்கா அரசாங்கம் அனுமதி மறுத்ததையிட்டு நாம் ஏமாற்றமடைகின்றோம். இதிலிருந்து சிறீலங்கா அரசாங்கம் மூன்றாம் தரப்பின் உதவியுடன் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைக்குத் தீர்வுகாண அக்கறை கொள்ளவில்லை என்று தெரிகிறது.

2. மூன்றாம் தரப்பினரின் மத்தியஸ்தத்துடன் பேச்சுக்

**பிரபாகரனால் யாழ்ப்பாணத்தையும் சுலபமாகக் கைப்பற்றியிருக்க முடியும். பொதுமக்களுக்குப் பாரிய பாதிப்பு ஏற்படக்கூடாதென்பதற்காகவே அவ்வாறு செய்யாமல் விட்டார்.**



களைத் தொடங்குவதற்கு ஹவாட் ஓர் இரண்டாம் வழி அனுசரணையாக இருக்கமுடியும். ஒரு மூன்றாம் தரப்பு அரசாங்கத்திற்கே வளங்கள் உள்ளன. அதிகாரமும் அறிவும் மிக்க பிரதிநிதிகளே தற்போதைய நிலைமைகளின் தேவையாகும். தற்போதைய நிலையில் தீர்வுகளைப்பற்றி கலந்தாலோசிக்க நடுநிலை ஆட்கள் பொருத்தமற்றவர்கள்.

3. பேராசிரியர் பீரீஸினால் நியமிக்கப்பட்டவர்கள் தீர்மானங்கள் எடுப்பதற்கு எவ்வித அதிகாரமும் அற்றவர்கள்.

4. வன்னியைக் கைப்பற்றுவதற்கு ஒரு தாக்குதலை நடத்துவதற்கு ஆயத்தமாக இருக்கும் சிறீலங்கா அரசு இம்முயற்சியில் நேர்மையாகவும் உண்மையாகவும் இல்லை.

5. அவர்களுடைய நிலைப்பாடு தங்களுடைய மக்களைத் தாக்குதலுக்கு தயாராக்குவதே ஆகும். இது சமாதானத்துக்கான ஓர் அடையாளம் அல்ல.

6. அவர்களுடைய மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றி நேரடியாகப் பேசுவதற்கு சிறீலங்கா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

7. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் இரகசியமாக இல்லாமல் வெளிப்படையாக இருக்க வேண்டும் என விரும்புகின்றோம். Commonwealth Secretariate மத்தியஸ்தம் செய்ய விரும்பினால் அது முதலில் நேரிடையாகவே சிறீலங்கா அரசாங்கத்துடனும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனும் தொடர்பு கொள்ள வேண்டும்.

8. நாங்கள் பாரிய அகதிகள் பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றோம். அதற்கு எவ்வித உதவிகளும் இல்லை. சிறீலங்கா அரசினால் திட்டமிடப்படும் இன்னொரு இராணுவ நடவடிக்கையால் ஏற்கெனவே இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் இடம்பெயர நேரிடும். இது அழிவையும் பொதுமக்களின் இறப்பையும் ஏற்படுத்தும்.

9. சிறீலங்கா அரசினால் திட்டமிடப்படும் வன்னியை ஆக்கிரமிக்கும் பாரிய இராணுவ நடவடிக்கை நடைபெறுமானால், அது எதிர்கால சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளில் பின்னடைவுகளைக் கொண்டுவரும். தமிழீழ விடுதலைப்புலிகள் பலவீனப்படுத்தப்படுவார்களேயானால் அவர்கள் பேச்சுவார்த்தைகளுக்கான நிபந்தனைகளை இறுக்

தமிழ் ஆவணகாப்பகம் TamilEelamArchive

னித்துப் பார்க்குந் திறமை கொண்ட ஒருவர் அவர் என்றும் நிரூபித்துள்ளார். அரசியல் சம்பவங்களை நலன் சீர்தூக்கி மதிக்கும் வல்லமை பெற்றவர் என்பதோடு அவற்றிற்குச் சரியான எதிர்ச் செயலளிக்கும் முன்திறமையும் கொண்டவரென்பதையும் நிரூபித்துள்ளார்.

'கொடுநஞ்சு பற்றீடுபாடு' என்று அழைக்கத்தக்க ஒரு பற்றீடுபாட்டை வெளிப்படையாகவே காட்டி நிற்கும் உள்ளார்ந்த மனவுறுதியோடும், கடும் கட்டுப்பாட்டோடும், அர்ப்பணிப்போடும் செயற்படும் போராளிகளை அவர் உருவாக்கியுள்ளார் என்பது இரண்டாவது காரணம். தமிழீழ விடுதலைப் புலிகளின் ஒவ்வோர் இயற்பணி முறைப் போராளியும் ஒரு கொடு நஞ்சுக் குளிகையைத்தான் செல்லுமிடமெல்லாம் கொண்டு செல்கின்றான். எதிரியிடம் பிடிபடுவதைக் காட்டிலும் அதனை உட்கொண்டு தற்கொலை செய்வதற்கு அவன் உறுதிபூண்டுள்ளான்.

வள ஆதாரங்களையும், தேவை நிரப்பு வகைதுறை வாய்ப்புகளையும் பகிர்ந்து கொடுத்தலிலும், பயன்படுத்தலிலும் தமிழீழ விடுதலைப் புலிப்போராளிகள் கடுமையாகக் கடைப்பிடித்துவரும் நேர்மையான பற்றீடுபாடு அவரது வெற்றிக்கு மூன்றாங்காரணமாகும்.

நீண்ட வருடங்களைப் போராட்டத்தில் கழித்த போதிலும், தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளின் எளிமையான வாழ்க்கை முறையும், மக்களைச் சுரண்டாப் போக்கும், செயல்முறை சார்ந்த ஆயத்த நிலையும் அவர்களைப் பலரது கவன வட்டத்திற்குள் கொண்டு வந்துள்ளன.

முதலில் சிறீலங்காப் படையினராலும் பின்பு இந்தியாவினாலும் போடப்பட்ட கட்டுப்பாடுகளுக்கு எதிர்மாறாகவே, நவீன தொழில் நுட்பங்களை உள்வாங்கி இராணுவ ரீதியான வல்லமைகளின் திறம் உயர்த்தல் என்பது நான்காவது காரணியாய் அமைகிறது.

குவார்கள்.

**10.** இராணுவத் தாக்குதல்களுக்கு முன்னர் பேச்சுவார்த்தையில் ஈடுபட சிறீலங்கா அரசு விரும்புமானால், பேச்சுவார்த்தைகளுக்கான நிபந்தனைகள் 1994க்கு முன் இருந்தவைபோலவே இருக்கும். கடந்த சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகளின்போது தமிழீழ விடுதலைப்புலிகளால் குறிப்பிட்டதுபோல், மக்களது கஷ்டங்களையும் துன்பங்களையும் நீக்குவதற்குத் தேவையான மறுசீரமைப்பும் மறுகட்டமைப்பும் முதலில் தமிழீழ விடுதலைப்புலிகளாலேயே நடைமுறைப்படுத்தப்படவேண்டும்.

11. வரையறுக்கப்பட்ட கொள்கைகள் பற்றி இணக்கப்பாடுகள் ஏற்படவேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமை சிறீலங்கா அரசின் தலைமைக்குச் சமனானதாக அங்கீகரிக்கப்படவேண்டும். மத்தியஸ்தம் செய்வது ஒரு சர்வதேச அரசாங்கமாக இருக்கவேண்டும்.

12. வைகாசி மாதக் கடைசியில் மூன்றாம் தரப்பான சர்வதேச அரசாங்கம் ஒன்று வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு உண்மையைக் கண்டறியும் தூதுக்குழுவை அனுப்பிவைக்கவேண்டும்.

### சமாதான முயற்சிகளுக்குப் பின்னர் போரில் வெற்றி பெறுதல்

உலக இராணுவ சக்திகளின் பயிற்சி பெற்று இரண்டு வருடங்களாக நடாத்தப்பட்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப்புலிகளால் பத்து நாட்களுக்கும் குறைந்த நாட்களில் ஒடுக்கப்பட்டது. கிளிநொச்சியையும, ஆனையிறவையும் அதற்கு அப்பாலுள்ள இடங்களையும் கைப்பற்றியிருந்த பிரபாகரனால் யாழ்ப்பாணத்தையும் சுலபமாகக் கைப்பற்றியிருக்க முடியும். பொதுமக்களுக்குப் பாரிய பாதிப்பு ஏற்படக்கூடாதென்பதற்காகவே அவ்வாறு செய்யாமல் விட்டார். அவரது வெற்றிதான் எங்களது எதிர்காலம், எங்களது விடுதலை, எங்களது சமத்துவம்.



**மணிவண்ணன்**

இயக்குநர்,
நடிகர்,
தமிழீழப்பற்றாளர்,
தமிழகம்.

### தமிழீழம் உறுதி.

● தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன் பற்றி உங்களது கருத்தென்ன?

இந்த நூற்றாண்டின் இணையற்ற தமிழனாக நான் கருதுவது பிரபாகரனைத்தான். சர்வதேச இராணுவ விஞ்ஞானிகள் கூட அவரைப்புகழ்கிறார்கள். தமிழீழம் அமையப்போவது உறுதி. அதற்கான அரசியல் தீர்வுக்கு நிச்சயம் அவர் வழிவகுப்பார். சந்திரிக்காவின் இரட்டை வேடத்தை அம்பலப்படுத்துவதற்காக பேச்சுவார்த்தையைக் கூட பயன்படுத்தலாம் என்பது எனது அபிப்பிராயம்.

● நந்தன்-2000

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



**நாவண்ணன்**

கவிஞர்,
எழுத்தாளர்,
அரங்கச் செயற்பாட்டாளர்.
தமிழீழம்.

1998 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆம் நாள் மடுத்திருப்பதி மீண்டும் விடுதலைப் புலிகளின் வசமானது. போராளிகளைக் கண்ட பொது மக்கள் அவர்களை ஆரத்தழுவி, முத்தமிட்டு, உள்ளதை உண்ணக் கொடுத்து உபசரித்து வரவேற்று மகிழ்ந்தனர்.

மூதாட்டி ஒருவர் பெண்போராளிகளில் ஒருவரிடம் 'எப்படியோ மீண்டும் வந்திட்டியள் முதலில் போய் நன்றி சொல்ல அந்த மாதாவுக்கு மெழுகுதிரி கொழுத்துங்கோ' என்றார். அந்தப் பெண்போராளி பதில் கூறுமுன்னரே பக்கத்தில் நின்ற இளம் வட்டம் ஒன்று 'மாதாவுக்குக் கொழுத்திற மெழுகுதிரியை அண்ணை (தலைவர்)க்கு கொழுத்துங்கோ' என்றாராம். அப்படியிருந்தும் கூட அந்த அம்மா தான் நினைத்ததை அப்பெண் போராளிகளைக் கொண்டு தான் நினைத்தபடி செய்து முடித்தாராம்.

போராளிகள் மடுத்திருப்பதியை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்ட வெற்றிக்களிப்பிலும், பெருமையிலும் தனது சிறுபிள்ளைத்தனத்திலும் அந்த இளவட்டம் அப்படிச் சொல்லியிருந்தால் கூட எமது தேசியத்தலைவர் அவர்கள் அப்படி ஒரு புகழுரையைக் கேட்டு மகிழ்ந்திருக்கமாட்டார் என்பதுவே உண்மை. உறுதியும்கூட.

ஏனெனில் இத்தகைய ஒரு பெருவிருட்சமாய் தான் வளர்த்து விட்ட இயக்கத்தின் தலைமையைக் கூட தானாக வலிந்து, விரும்பி ஏற்றுக்கொண்டவர் அல்ல. இதய சுத்தியுடனும், சுய அர்ப்பணிப்புடனும் எம் போராட்டத்தை முன் நின்று நடத்தக்கூடிய மூத்தவர்கள் பலரிடமும் கேட்டு, அவர்களாலும் முடியாது என்ற நிலையிலேயே தலைமைப் பொறுப்பை தன் தோளில் சுமக்கத் தொடங்கியவர். அப்படியிருந்தும் தான் தலைவர் என்று அழைக்கப்படுவதைவிட தன்னிலும் இளையவர்களால் 'அண்ணன்' என்றும் மூத்தவர்களால் 'தம்பி' என்று தான் அழைக்கப்படுவதையுமே மனதார விரும்புபவர்.

எமது இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வு கிட்டியதும் எந்த ஒரு பதவியும் தனக்குத் தேவையில்லை. எங்கள் போராட்டத்தில் தன்னோடு உறுதுணையாக நின்று ஊனமுற்ற போராளிகளிடையே அவர்களுக்குத் தொண்டு செய்து வாழ்வதே தனது எதிர்கால நோக்கம் என்று இப்பொழுது முதலே சொல்லிக்கொண்டிருப்பவர்.

'என்னை மற்றவர்கள் ஒரு வீரன் என்று சொல்வதைக்கூட நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அந்தத் தகைமையைப் பெற ஒன்றில் நான் எனது இலட்சியத்தில் வென்றிருக்க வேண்டும். அல்லது மாவீரனாகியிருக்க வேண்டும். இரண்டுமே இல்லாதபோது என்னை நான் ஒரு வீரன் என்று எப்படி ஏற்றுக் கொள்வது?' என்று அடிக்கடி சொல்லிக் கொள்பவர்.

'தமிழேந்திமாமா தான் எனக்குச் சம்பளம் தாறவர்' என்று தான் பெற்ற பிள்ளைகளிடம் சொல்வதன் மூலம் தன்னை ஒரு தொண்டனாக பிள்ளைகள் நெஞ்சத்தில் பதிய வைத்து நிற்பவர். போராளி ஒருவர் எனக்குச் சொன்னார் 'எங்களோட ஒப்பிட்டுப் பார்க்கையில் தனிப்பட்ட வாழ்க்கையில் அண்ணை மிகவும் எளிமையானவர்.

கிழிந்த தன் சாரத்தைதானே தைத்துக் கட்டுவார். வழங்கலுக்கு அவருக்கும் கொடுக்கப்படும் புதிய சவர்க்காரத்தின் மேல் தேய்ந்த பழைய சவர்க்காரத்தை ஒட்டி அதன் முழு உச்சப்பயனையும் பெறுவார்.' என்றார்.

தேசியத் தலைவர் அவர்களைச் சந்திக்க ஆயர் குழுவொன்று ஒருமுறை போனது. மிகவும் பாதுகாப்பாக அவர்கள் தலைவரிடம் அழைத்துச் செல்லப்பட்டார்கள். அவர்கள் அங்கே பெற்ற முதல் அதிர்ச்சி என்ன வென்றால் தேசியத்தலைவர் அவர்களே அவர்கள் சென்ற வாகனத்தின் கதவைத் திறந்து வரவேற்றமைதான். பின்னர் அவர்கள் நீண்டநேரம் பேசிக் கொண்டிருந்தபோது அவர்கள் பேசியதை அமைதியாக முழுமையாக கேட்டுக்கொண்டிருந்தபான்மை அவரது அடக்கமான அந்தப் போக்கு ஆயர்களை மிகவும் ஈர்த்துக்கொண்டதாம்.

'பெருக்கத்து வேண்டும் பணிவு
சிறிய சுருக்கத்து வேண்டும் நிமிர்வு' என்று வள்ளுவன் கூறிவைத்ததும் இதுதான்.



# பெருக்கத்துப் பணிவு

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கடற்புலிகள் ● எமது கடலில் நாம் பலம்பெறும் போதுதான், விடுவிக்கப்படும் நிலப்பகுதியை நிரந்தரமாக நிலை நிறுத்திக்கொள்ள முடியும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

இது பொங்கு தமிழ்க் காலம். தமிழினம் பொங்கியெழுகின்ற காலம். இந்தப் பொங்கியெழும் எழுச்சியைத் தந்தவர், அந்தத் துணிவை எமக்குத் தந்தவர் எங்கள் தலைவர். தமிழினத்தின் தேசியத் தலைவர். ஐந்து நூற்றாண்டு காலம் தமிழினம் அந்நியனுக்கு அடிபணிந்து கிடந்தது. அதை ஐம்பதே ஆண்டுகளுக்குள் மாற்றியமைத்தவர் எங்கள் தலைவர். அந்தத் தலைவருக்கு இது பொன்விழா ஆண்டு.

1954, கார்த்திகை 26 – வரலாற்றில் ஒரு பதிவு. ஈழத் தாயின் வலியில் நிகழ்ந்தது பிரசவிப்பு. நூற்றாண்டு காலமாக துருப்பிடித்துக்கிடக்கும் அடிமைச் சங்கிலி அகலும் விடுதலை நாள் இதுவென்று அக மகிழ்ந்தாள் அன்னை. கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே,



## வரலாற்றுக்காலத்தில்
# வாழ்வதில் பெருமை

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

முன்தோன்றிய மூத்தகுடியின் வீரம் மீண்டதென்றும் அவள் பேருவகை கொண்டாள். அந்நிய அடக்குமுறைக்கு எதிராக போர் தொடுத்த சோழக் கரிகாலனுக்குப் பின், புறநானூற்றை புரட்டிப்போட எங்கள் தாய் நிலத்தில் வந்துதித்தார் ஈழக் கரிகாலன். "மெல்லத் தமிழினிச் சாகும். அந்த மேற்றிசை மொழிகள் புவிமிசை யோங்கும். என்று சொன்னவர் வாய்கள் பொய்க்கும்" என்ற பாரதியின் கனவை நனவாக்க எங்கள் நாயகன் தோன்றினார்.

பேசிப் பேசியே காலத்தை வீணடித்த தமிழ் தலைமைகள் தோன்றிய மண்ணில், பேசாமல் சாதித்த முதல் தமிழ் தலைவன். பதின்மூன்றே பேருக்காக பலியெடுத்தவர்கள், வேட்டுக்களோடு வீடுதேடி வந்து எள்ளிநகையாடி தமிழனைக் கிள்ளுக் கீரையென்றெண்ணியவர்கள் ஆயிரமாயிரமாய்ப் போனபோது பாய்ந்து, பயந்தோடினர்..! புலி என்றால் கிலி கொண்டனர், கரும்புலி என்றால் கதிகலங்கினர்..!



கி.ஜெய்சந்தர்

பொறுப்பாசிரியர்,
ஈழமுரசு ஐரோப்பா.
பிரான்ஸ்.

நாள் குறித்து, நேரம் குறித்து கணக்கு முடிக்க வந்தது இன்னொரு பெரும் சேனை. நேபாம் குண்டுகளை காடுகளுக்குள் அள்ளிக்கொட்டியது. காடே தீப்பற்றியெரிந்தது. சதுரங்கக் காய்களை மாறிமாறி, மாற்றிமாற்றி நகர்த்தி 'செக் மேற்'றும் சொன்னது. சாம்பல் மேட்டில் இருந்து பீனிக்ஸ் பறவைகள் உயிர்த்தெழுவதாக கதைகள் சொல்லப்படுகின்றன. ஆனால், புலிகள் எழுந்துவந்த வரலாறு தமிழீழத்திலே நிகழ்ந்தது. பத்தாக அல்ல, நூறாக அல்ல ஆயிரமாயிரமாக, பெரும் அணியாக எழுந்து வந்தனர். வரலாற்றில் இவை நிகழ்ந்ததெப்படி?

ஆயுதமே தமிழன் பலம் என்று நாம் சொல்வதெல்லாம் சும்மா. தமிழன் பலம் தலைவன். இதுவே என்றும் உண்மை.

ஆயுதப் பிரியன், போர் வெறியன்... சொல்பவர்கள் சொல்லட்டும். அகிம்சையை வென்றதையும், மகாத்மாவே ஈழ மண்ணில் தோற்றோடிப் போனதையும் புரியாமல் அவர்கள் புலம்புகின்றார்கள். புறநானூற்றையே இன்னும் வாய் புண்ணாகும் வரை புகழ்ந்து தள்ளும் இவர்கள், தாங்கள் வாழும் காலத்தில் நிகழும் இந்த விடுதலை வீச்சை எப்படிப் புரிந்துகொள்வார்கள். புலி பசித்தாலும் புல்லுத் தின்னாது. சமாதானப் புல்லை மேயவே மேயாது என்றெல்லாம் குதர்க்கம் பேசியவர்களே, இன்று தலைவரின் அமைதியைப் பார்த்து வாயடைத்து நிற்கின்றனர். புலிகளை போருக்குள் இழுத்துவிட முடியாமல் தவிக்கின்றனர்.

துயிலுமில்லங்களை நாசம்செய்து, போரியல் நாகரீகத்தையும் குழிதோண்டிப்புதைத்த எதிரிகள் வாழும் மண்ணில், துரோகிகளையே மன்னிக்கும் உயர்ந்த குணம் கொண்ட வீரன். குழந்தையின் கடிதத்திற்கே மதிப்பளித்து எதிரியையே மன்னித்து, விடுதலையளித்த மணிமகுடம். தமிழன் வரலாற்றில் அதிகம் இழந்ததும், அதிகம் வென்றதும் எங்கள் தலைவர் தான். இழந்தது எவ்வளவென்பதை மாவீரர்களின் கல்லறைகள் சொல்லும். வென்றதை, இழந்துபோன எதிரியே அறிவான்.

விடுதலையை நேசிக்கும் ஒவ்வொருவனும் நேற்று வியட்நாம், கியூபா தேசங்களையே பாடமாக அதிகம் படித்தான். இன்று ஈழத்தையும் படித்தே ஆகவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளான். போரியல் கலையை ஆய்வுசெய்பவர்கள் கோசிமின், மாவோ சே துங் வரலாறுகளோடு பிரபாகரன் என்ற மாமேதையையும் ஆய்வுசெய்யாமல் தங்கள் ஆய்வை முழுமையாக்க முடியாது என்ற அளவிற்கு உலகில் உச்சரிக்கப்படும் ஒருவராகிவிட்டார் எங்கள் தலைவர்.



என் தேசத்தவனே...!

இத்தனை உயர்வு கொண்ட தலைவனுக்குள்ளே இன்னும் எதனைத் தேடுகின்றாய்...? கலிலியோ காலத்து மனிதர்களைப் போல் 'சூரியனே பூமியைச் சுற்றுவதாக' எதற்கிந்த அடம்பிடிப்பு...? பூமி இன்னும் தட்டைதான் என்று ஏன் இந்தப் பிடிவாதம்? எதிரிக்குத்தான் எரிமலை. எட்ட நிற்காதே கிட்ட வந்துபார், உன்னையும் வழிகாட்டும் கலங்கரை விளக்கிது.

எல்லாமே விலைபோகும்! மனிதம் கூட... என்றும் விலைபோகாத எங்கள் தலைவர். வரலாற்றில் இது தலைவனின் காலம். வரலாற்றுக் காலத்தில் வாழ்வதற்காய் பெருமைப்படு!

'உலகத் தமிழர் நாமெல்லோரும்
ஒருவர் தாய் வயிற்று மைந்தர்.
நலிந்தினிக் கிடக்கமாட்டோம்
நாமெல்லாம் நிமிர்ந்துநிற்போம்'
தலைவன் பின்னே.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**மறு**பிறப்பின் மீது நம்பிக்கையுள்ள ஒவ்வொரு தமிழனும் 'அவர் கரிகால் சோழனின் அடுத்த பிறவிதான்' என்று மனமார நம்புகிறான்! புலிப்படை கட்டி, போர்க்களத்தில் இனப்பகைவர்களைப் புறங்காண விரட்டி, இனத்தைக் காக்கவும் ஈழத்தை மீட்கவும் அளப்பரிய ஈகம் செய்து, கால் நூற்றாண்டுக்கும் மேலாய்க் கருவியேந்திக் களமாடி வரும் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுக்கு இயல்பாகவே அமைய பெற்றிருக்கும் புறநானூற்று வீரமும் தீரமும் ஒவ்வொரு தமிழனுக்கும் 'கரிகால் பெருவளத்தானையே நினைவூட்டுகிறது! அதனால், அவர் கரிகால் சோழனின் அடுத்த பிறவி' என்று நம்புகின்றனர்.

# இன்றைக்குச் சந்தித்தால்?...

அத்தகைய வீரம்செறிந்த வரலாற்று நாயகனை நேரில் காணும் பெரும்பேறு ஏறத்தாழ பதினெட்டு ஆண்டுகளுக்கு முன் எனக்குக் கிடைத்தது. சென்னை அடையாறு பகுதியில், தாம் தங்கியிருந்த இல்லத்திலேயே உண்ணாநிலை அறப்போரில் ஈடுபட்டிருந்த தமிழீழத் தேசியத் தலைவரை, நெருக்கமாய் நின்று நேருக்கு நேராய்ப் பார்க்கும் அரிய வாய்ப்புக் கிட்டியது. சட்டக்கல்லூரி மாணவர்கள் பத்துக்கும் மேற்பட்டவர்கள் திரண்டுபோய்.

'ஆயுதமேந்திப் போராடும் தலைவா அகிம்சைப் போரைக் கைவிடு'

என்று வாசலில் நின்று உரத்து முழங்கினோம்! எமது முழக்கம் கேட்டு வாசலுக்கு வந்த புலியின் முகத்தை அன்றுதான் முதன் முதலாய்ப் பார்த்தேன். பார்த்த நொடிப் பொழுதில், அவரின் கூரிய பார்வை கொண்ட ஒளிவீசும் கண்கள் நெஞ்சில் ஊடுருவிப் பாய்ந்தது. 'என்னே கண்கள்!' என்று வியப்பூட்டி நிலை தடுமாற வைத்தது! நெஞ்சில் வேறு எதுவுமே பதியவில்லை! இன்னும் அந்த கண்கள் இரண்டும் என் நெஞ்சுக்குள் உருண்டு கொண்டேயிருக்கின்றன. எம்மைப் பார்த்துப் புன்னகைத்தபடியே வாசலுக்கு வந்த புலிகளின் தலைவரைக் கண்டதும், பொங்கியெழுந்த பெருமகிழ்ச்சியால், துள்ளிக் குதிக்கத் துடித்தன கால்கள்! ஆனால், கட்டுப்பாடு காத்து, குரலை உயர்த்தி கூடியிருந்த மாணவர்கள் தொடர்ந்து முழங்கினோம்! பின்னர்




**தொல்.திருமாவளவன்**

பொதுச்செயலாளர், விடுதலைச் சிறுத்தைகள்.
ஆசிரியர், தாய்மண்.
அரசியற் செயற்பாட்டாளர்.
தமிழகம்.


எம்மை அமைதிப்படுத்திப் பேசத் தொடங்கினார்! அவர் பேசிய ஈழத் தமிழ் இனியத் தமிழ்! அதுவும் மழலைத் தமிழாய் இனித்தது! அவரைச் சூழ்ந்து புலிகள்! அவர்களில், அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், ஜானி ஆகியோர் மட்டும் ஏடுகளில் பார்த்துப் பழகிய முகங்கள்! எல்லோரும் அமைதியாய் நிமிர்ந்து நின்றனர். மெல்லிய குரலில் அவர் பேசினார்! ஒவ்வொரு சொல்லும் மென்மையாய் மெதுவாய் வந்தன. ஆனால், அந்த சொற்களிலிருந்து உறுதியும் வலிமையும் தெறித்தன! "நாங்கள் ஆயுதம் ஏந்தியிருப்பது சிங்கள பேரினவாத அரசுக்கு எதிராக மட்டுமே! இந்திய அரசுக்கு எதிராக அல்ல! இந்திய அரசின் நட்பையே நாங்கள் விரும்புகிறோம்! ஆயுத மேந்திப் போராடும் எங்களால் அகிம்சை வழியிலும் போராட முடியும் என்பதை இந்திய அரசுக்கு உணர்த்த விரும்புகிறோம்! தமிழகக் காவல்துறை திடீரென்று எம்மிடமிருந்து பறிமுதல் செய்த தொலைத் தொடர்புக் கருவிகள் மற்றும் ஆயுதங்களைத் திருப்பி எம்மிடமே ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தியே இந்த உண்ணாநிலை அறப்போரைத் தொடங்கினோம்! தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். 'உதகை'யிலிருக்கிறார்! அவருக்கு எமது கோரிக்கையைத் தெரிவித்திருக்கிறோம்! அவரிடமிருந்து நல்ல தீர்வை எதிர்பார்த்திருக்கிறோம். அதுவரை இந்த அறப்போராட்டத்தைத் தொடருவோம்! மாணவர்களாகிய உங்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் எமது நன்றி!"

இவ்வாறு அவர் உரையாற்றிக் கொண்டிருந்த


தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## அகவை 50

தமிழீழ விடுதலைப் புலிகள் யாரையெல்லாம் எதிரிகளாகக் கொள்கின்றதோ அவரையெல்லாம் எதிர்கொள்வதற்கு முற்றுமுழுதாக ஒழுங்கு முறை சாராத, தப்பித்துவிட முடியாத வியூகங்கள் அமைக்கப்படுகின்றன. இது பிரபாகரனது வெற்றிக்கு ஐந்தாவது காரணியாக இருக்கிறது.

ஆற்றல் வாய்ந்த பயிற்சிகளைத் தனது போராளிகளுக்கு அளிப்பதற்கும், போர்த்தளவாடங்களை வளரச்சி வளங்களுக்கு உகந்த முறையில் பயன்படுத்துவதற்குமான முயற்சிகளில் பங்குகொண்டு உதவக்கூடிய அரசியல், நிர்வாக, தொழில்நுட்ப வல்லமை ஆகிய பல்வேறு துறைகள் சார்ந்த கைதேர்ந்த மூத்த நிபுணர்களைத் தன்னைச் சூழத்திரட்டி வைத்திருக்கும் வல்லமை அவரது வெற்றிக்கு ஆறாவது காரணியாக அமைகிறது.

● ஜோதின்ர டிக்ஷித்
(கொழும்பில் பணியாற்றிய இந்திய வெளியுறவுச் செயலர்)

### மௌனமொழியும் வலியும்.

இந்து நாளேடு, குமுதம், கல்கி, ஆனந்த விகடன், துக்ளக் போன்ற பத்திரிகைகள் 'சரியாகத் தயார் செய்யாத இந்த நேர்காணல் எதிர்பார்ப்புகளை பொய்யாக்கிவிட்டது' என விமர்சனம் செய்துள்ளனவே?

'அவர் புலி என்பதால் உறுமுவார் என்று எதிர்பார்த்தோம். அவர் என்ன உறுமவில்லையே' என்ற விமர்சனத்தைத் தவிர எல்லாவிதமான விதண்டாவாதங்களையும் இந்த இதழ்கள் முன்

போதே, திடீரென்று அழைப்பு வந்தது. முதலமைச்சர் எம்.ஜி.ஆர் தொலைபேசி வழியாக பேசவிரும்புகிறார் என்று ஒருவர் பரபரப்பாய் ஓடிவந்து சொன்னதும் வீட்டுக்குள் போனார். அவரைச் சூழ்ந்து நின்ற புலிகள் அனைவரும் அவருடன் உள்ளே சென்றனர். ஒரு சில நிமிடங்களில் மீண்டும் வெளியே வந்தார்! அவரது ஒளிமுகத்தில் பெருமகிழ்ச்சி பொங்கி வழிந்தது!

'உதகையிலிருந்து முதல்வர் எம்.ஜி.ஆர். பேசினார். போலீசு கைப்பற்றிய தொலைத் தொடர்புக் கருவிகளனைத்தையும் உடனே ஒப்படைக்கும்படி ஆணையிட்டு விட்டதாகக் கூறினார். அத்துடன், உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிடும்படியும் கேட்டுக்கொண்டார். எனவே, போராட்டத்தைக் கைவிடுகிறேன். உங்கள் அனைவருக்கும் நன்றி' என்று வெற்றிக்களிப்போடு பேசினார். பின்னர், அங்கே வந்திருந்த தி.க.பொதுச் செயலாளர் கி.வீரமணி பழச்சாறு கொடுக்க, தனது உண்ணாநிலை அறப்போரை முடித்துக்கொண்டார். உடனிருந்த புலிகளுக்கும் மாணவர்களுக்கும் குளிர்பானங்கள் வழங்கப்பட்டன. குளிர்ச்சியால், மகிழ்ச்சியால் உள்ளம் பூரித்தது. உலகமே வியந்து பார்க்கும் வீரம் செறிந்த தமிழ்மகனை நெருங்கிப் பார்த்த பேரின்பத்தில் நெஞ்சம் உள்ளுக்குள்ளே துள்ளிக் கொண்டேயிருந்தது! அச்சந்திப்பைப் பற்றி நண்பர்கள் பலரிடமும் சொல்லி மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டதோடு பெருமைகொள்ளவும் முடிந்தது. அப்போதைய காலகட்டத்தில், இந்தியாவில் விடுதலைப்புலிகளுக்குத் தடையேதும் இல்லை. தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி 'டெலோ' என்னும் 'தமிழீழ விடுதலைக் கழக'த்தை ஆதரித்து வந்த நிலையில், தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர். விடுதலைப் புலிகளை ஆதரித்து அரவணைத்து வந்தார். அத்தகைய ஒரு சூழலில், அன்றைய காவல்துறை தலைவர் மோகன்தாஸ் திடீரென்று புலிகளின் தொலைத் தொடர்புக் கருவிகளை ஏன் பறித்தார் என்பது தான் தெரியவில்லை. இந்திய அரசோ தமிழக அரசோ ஈழவிடுதலைக்காகப் போராடும் போராளிகளின் எந்தவொரு அமைப்பையும் எதிராக நடத்ததாக சூழலில், ஒரு காவல்துறை அதிகாரி தன்னிச்சையாக நடந்துகொண்டாரா? என்பதுதான் பெரும் அதிர்ச்சியாக இருந்தது. அந்தக் காலகட்டத்தில்தான் 'ரா' என்ற உளவு அமைப்பின் செயல்பாடுகளைப் பற்றியும் கேள்விப்படும் வாய்ப்புக் கிட்டியது. தமிழகத்திலுள்ள அரசியல் கட்சிகள் மட்டுமன்றி அகில இந்திய அளவிலுள்ள தேசியக் கட்சிகளும் கூட ஈழவிடுதலைப் போராட்டத்தை வெகுவாக எதிர்க்கவில்லையென்றாலும், உளவுத்துறையினர், ஆதரவு காட்டும் அனைவரையும் கண்காணித்து வந்தனர். என்றாலும், அப்போது மாணவப் பருவம் என்பதனால், காவல்துறை, உளவுத்துறை, கண்காணிப்பு போன்ற எதையுமே பொருட்படுத்துவதில்லை.

> "நாங்கள் ஆயுதம் ஏந்தியிருப்பது சிங்கள பேரினவாத அரசுக்கு எதிராக மட்டுமே! இந்திய அரசுக்கு எதிராக அல்ல! இந்திய அரசின் நட்பையே நாங்கள் விரும்புகிறோம்!"

தமிழ் ஆவணகாப்பகம் Tamileelam Archive



எங்கெல்லாம் ஈழவிடுதலைக்கு ஆதரவான அறப்போர் நடக்குமோ அங்கெல்லாம் ஓடோடிச் சென்று பங்கேற் பதைக் கடமையாகக் கொண்டிருந்தேன்.

1983இல் சிங்கள இனவெறியாட்டம் தலைவிரித் தாடியபோது, தமிழகத்தில் பெரும் பதற்றம் நிலவியது. கண்டன ஆர்ப்பாட்டங்களும் பேரணிகளும் தமிழ் நாடெங்கும் தீயாய்ப் பரவின. அப்போது கல்லூரி மாணவர்களும் ஆங்காங்கே களம் குதித்தனர். அந்தச் சூழல்தான் என்னையும் தீவிரமான பொதுவாழ்வுக்கு ஈர்த்தது. 1984இல் ‘ஈழவிடுதலைக்கு ஆதரவாக மாணவர் மாநாடு’ ஒன்றை எனது தலைமையில் சென்னை பெரியார் திடலில் ஒருங்கிணைத்தேன் ‘விடுதலைப் புலி’ என்னும் கையெழுத்து மாத ஏடு ஒன்றை நடத்தி, ஈழவிடுதலைக்கான ‘கருத்துப் பரப்பலைச்’ செய்தேன். நான்கு மாதங்கள் மட் டுமே அந்த ஏட்டை நடத்திட முடிந்தது. விடுதலைப் புலிகளின் ஈக வாழ்வில் வெகுவாக ஈர்க்கப்பட்டு, புலி களின் தலைவர் பிரபாகரனைப் பற்றி அறிந்து கொள் வதற்கான தேடலில் தீராத ஆர்வம் காட்டினேன். அந்த தேடல் அவர் மீது ஆழ்ந்த பற்றுதலையும் அவரை நேரில் காணவேண்டும் என்னும் ஏக்கத்தையும் வளர்த்தது. இந்நிலையில்தான், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன், தனது அடையாறு வீட்டில் உண்ணாநிலை அறப்போரில் ஈடுபட்ட செய்தியறிந்து, சட்டக்கல்லூரியில் வகுப்புகளையெல்லாம் புறக்கணித்து வெளியேறும்படி ஒவ்வொரு வகுப்புக்கும் சென்று மாணவர்களுக்கு வேண்டுகோள் விடுத்தோம். எமது வேண்டுகோளையேற்று மாணவர்களும் தொடர்ச் சியாக சில நாள்கள் வகுப்புகளைப் புறக்கணித்தனர். இவ்வாறான போராட்டச் சூழலில்தான், என் மனதில் தேக்கிவைத்த ஏக்கமெல்லாம் தீரும் வகையில் அந்த மாபெரும் விடுதலைப் போராளியைச் சந்திக்கும் வாய்ப்புக்கிடைத்தது. இராணுவ உடையிலேயே ஏடு களில் பார்த்துப் பழகிப்போன கண்களுக்கு, திடீரென்று இயல்பான உடையில் பார்த்ததும் ‘இவர்தானா புலிப் படைத் தலைவர்?’ என்ற எண்ணம் எழுந்தது. அந்தச் சந்திப்புக்குப் பின்னர், கால ஓட்டத்தில் எத்தனை எத்தனை மாற்றங்கள்! இந்தியாவில், தமிழகத்தில், இலங்கையில், ஈழத்தில் என்னென்ன அரசியல் மாற்றங்கள்! புலிகளைப் பற்றி வாய்திறந்து பேசவே முடியாத நிலை இந்தியாவில்! குறிப்பாக தமிழகத்தில்! ஆனால், புலிகளோடு பேசுவதே தீர்வு என்னும் நிலை இலங்கையில்! இத்தகைய தலைகீழ் மாற்றமானதொரு சூழலில் கொஞ்சமும் மாறாத விடுதலைவேட்கை, போர்க்குணம், நெஞ்சுறுதி ஆகியவற்றோடு உலக அரசியல் அரங்கில் தலைநிமிர்ந்து நிற்கும் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களை இன்றைக்கு இராணுவ உடையில் நேரில் சந்தித்தால் எப்படியிருக்கும்?... கற்பனை விரிகிறது...!

04.10.2004

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

**காவல்த்துறை** ● தமிழீழ காவல்த்துறையைப் பொறுத்தவரை குற்றங்கள் நடந்து முடிந்தபின் குற்றவாளியைத் தேடிப்பிடித்து கூண்டில் நிறுத்துவது அதன் நோக்கமல்ல. குற்றங்கள் நிகழாதவாறு தடுத்து, குற்றச் செயல்களற்ற ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்புவதே அதன் இலட்சியமாகும்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

SALUTING THE LEADER AND ARCHITECT OF A

# NEW TAMIL NATION



## Prabakaran
## A Hope For The Tamils And
## A Challenge For The Rest

Tamils of Sri Lanka, living in Thamil Eelam and across the continents, are honouring a man at his 50th. Birthday on 26.11.2004, because he has become the challenging response to their agonies in the hands of the Sinhala oppressive powers as well as their true liberator. While rising up like a giant against all the forces of Sinhala political and military oppressions, he is not only a formidable challenge to the immediate oppressors but also a stumbling block to the self-interest and hidden agenda of the mighty who are aiding and abetting this oppression. The type of military power he has built in defence of his people and land, the type of infra-structures he has already initiated to sustain his people, the type of unity he has shaped between the armed and the political leaderships, the global solidarity of Tamils he has forged, - they all speak eloquently of the force of leadership personified in this man. Hence the liberation that he leads and the leadership that he wields are unique in many ways and write new chapters in the history of liberation and leadership in the world.

## Sinhala Oppressions
## Of The Pre-Prabakaran Times

He was born in a Tamil society where internal slaveries like caste system, regionalism and an undue cravings for dowries, academic qualifications and immovable properties were rife. Already on the eve of Independence, and many years before his birth, had the Tamil leaders smelt the hidden agenda of the Sinhala leaders to seize total power from the British and make Ceylon an exclusively Sinhala Buddhist State. But these Tamil leaders by their background, education and culture had neither the backbone nor the people's power to cry foul and oppose independence. They fell victims to the mischievous plans and pleadings of the Singhalese and entrusted the future of the Tamils into the goodness of the Singhalese.

Quick on the heals of the British departure, the Ceylonese Government went into operating its hidden agenda of exclusive Sinhala domination - denying citizenship rights to Tamils of Indian origin, state-aided colonisation of traditional Tamil homelands and making Sinhala as the official language of the country discriminating the Tamils in all aspects of education and employment and development. The Tamil leaders,



**Fr . S. J. Emmanuel**

Professor, Doctor, Reverend, Writer Germany.

**The liberation that he leads and the leadership that he wields are unique in many ways and write new chapters in the history of liberation and leadership in the world.**

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

who visited their constituencies in the Northeast mostly at election times were taken aback by the speed of changes and their protests both within and without the parliament failed and fizzled. Sinhala Mob-terror and State-terror made the Tamils run for safety and survival, not one could stand up to that state-aided terror.

Educated and refined democratic leaders of the Tamils panicked. The world did neither condemn nor protest the actions of a "democratic" government and its forces. Prabakaran was yet unborn and there was no militant opposition to the rowdyism of the Ceylonese State!

## Born and bred amidst Sinhala brutalities

The post-independence Ceylon with its mob and state-terror, with its cruelties of burning Tamils, their properties and their treasured Public Library, with raping of Tamil women and destruction of Tamil cultural symbols, that was the context and cradle for the birth and growth of young Prabaharan. His eyes and ears and heart were wide open to the agonizing cries of his people. He grew with a passion for freedom and a determined will to lead his people. Yet he waited for his day, calculated his move and charted out his plan - though painful and shocking to many, yet a beginning had to be made to call off the Sinhala Buddhist brutality to a halt. Tamils had sent the message: enough is enough. And the Sinhala South had woken up to this alarm signal!

**"His eyes and ears and heart were wide open to the agonizing cries of his people. He grew with a passion for freedom and a determined will to lead his people."**

## Misunderstandings about the new leadership

Now many doubts and questions are being raised about this new leadership, which the Sinhala people and their leadership indirectly helped to emerge.

Ignorance about the genesis and the causes for this new Tamil leadership raises many questions and make it difficult for the majority Singhalese and its Government to relate to, talk and handle with this new leadership. There are many, Singhalese and even some Tamils, who think that this leadership has to be militarily defeated, if not destroyed, and the Tamils 'liberated' from this militant leadership. The Sinhala Governments have also tried hard, even using under-hand methods, to get an alternative to this Tamil leadership. The Government, side-stepping this leadership, offered attractive enticements to win over some Tamil Members of Parliament who will slavishly support them and with whom they can comfortably "do business" as in the past. Such Members were often "labeled and exhibited" by the government as the democratic and moderate forces from among the Tamils. Irrespective of the negligible or no support they had among the Tamils, they were provided with plenty of money, ministerial posts and other privileges and used "as mercenaries and show-cases of moderate Tamil opinion" by the government. A non-Tamil-speaking man with only a Tamil name was hired to be Foreign Minister to lead a mischievous propaganda tarnishing the image of all Tamils and their militant leadership. But the majority of Tamils have rejected them as betrayers of the Tamil cause. History will judge them.

Hence the majority Singhalese and their government, if they want a realistic peaceful solution to the conflict and war, must make an effort to understand the Tamil leadership, as a new and alternative leadership, without attempting to destroy it. In the process of searching and reaching a true democratic solution, this Tamil leadership will abide more and more by the genuine categories of democracy and human rights. And at the same time and by the same process, the Sinhala leadership will hopefully be liberated from their corrupt democracy, mass and blatant violation of the human rights of a people and desist from rowdyism inside and outside parliament.

## Humiliation and Rejection of Tamil MPs

The art of governing has not been an exclusive privilege of the elite and the college-educated. In fact such men have made some of the worst blunders in history. In our own history and in our long experience of the struggle, we Tamils have painfully learnt of some educated elites who have betrayed the Tamil cause for their own personal profits.

Besides, even the good Tamil leaders have undergone humiliation and frustration within the Sinhala

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

democracy. The post-colonial leadership fostered by the British period of education and parliamentary system brought out highly qualified and internationally recognized Tamils, mostly based in Colombo and representing the Tamils of the Northeast. The least qualified of those could only be a lawyer. With clarity and eloquence they expressed and argued for the rights of the Tamils, but they were either ignored or heckled down to their seats by Sinhala extremists. Thus there was no purpose served in sending enlightened Tamil Members to the Parliament in Colombo. Even today one can see the bad behaviour of elected Sinhala MPs within Parliament.

The present generation of Tamil youth who have taken up the leadership are promising because they have had bitter experiences of the earlier leadership. Let us not rush to make biased judgements about their style and competence at governance. We welcome the so called educated arm-chair critics from the South to look beyond their newspapers and see how well the LTTE, even in the absence of basic facilities, is running a de facto government in Wanni.

**The convictions, consistency and firmness in aspiring for those goals do not mean that they are closed for negotiation, dialogue and arriving at a just and reasonable peaceful solution to the conflict.**

## A Leadership consistent in their Aspirations

Whether one likes it or not, the de facto situation is that the LTTE has emerged to leadership, admittedly not through the parliamentary elections the South is familiar with, but through an armed struggle against betrayers among its own people and oppressive forces of the state. It has established itself,

(i) As the only group which has consistently articulated and still articulates the genuine aspirations of the Tamils in the Northeast,

(ii) As the only organization protecting the People against the artillery shelling and the aerial bombings carried out by the State.

(iii) As the only group that has sacrificed so many thousands of its cadres for the noble Cause of Tamil freedom

(iv) As the only group that has set up the infrastructures (police, courts, education, transport etc.) of governance for human life to continue against all odds And

(v) As the only group that has been acknowledged even by the elected Tamil Parliamentarians as "the sole representatives of the Tamil people"

After a long history of attempts, by the Tamils marked suffering and deaths at the hands of Sinhala thugs and soldiers, and after so many agreements and pacts were unilaterally torn up by the Sinhala Governments and after a series of deceptions and broken promises, the Tamils have at last helped emerge a form of leadership that the Sinhala Majority and its Government are finding it difficult to deal with, if not to buy or to win over. Until recently the Sinhala Governments either bought over the Tamil leadership with some ministerial privileges, or pacts and promises unfulfilled, or kept them watering in their mouths and clinging to their feet with a promise of sharing power in the future. But that is no more possible with the present leadership.

Neither heavy losses of lives, nor military defeats, nor mounting criticisms about its moral conduct, nor international threats from major powers, nor the temptations of power from the Sinhala government could wean away this Tamil leadership from its aspirations and commitments. Sinhala Governments have changed and their leaders have adopted varying tactics and offers, but the LTTE leadership has stood firm on its ground for its ideals and commitments.

The convictions, consistency and firmness in aspiring for those goals do not mean that they are closed for negotiation, dialogue and arriving at a just and reasonable peaceful solution to the conflict. No. Not at all.

## A politico-military Leadership with a parliamentary wing

The Governments, during the first three decades of the ethnic conflict used their armed forces to put down democratic Tamil opposition in the Northeast. Later the same Army was empowered by the notorious Prevention of Terrorism Act to act against Tamil militancy with impunity, thus increasing the role of the Army in the ethnic conflict. At present no real political solution can be found without the government

தமிழீழ ஆவணகம்
Tamileelam Archive

heavily depending on the armed forces. Tamils know by their own experience how the Army personnel have their own agenda and disagree with their own government. They react even against gazetted government decisions e.g. lifting the economic embargoes against the Tamils in 1995. This power conflict between the government and its armed forces will remain a hindrance in arriving at any true and stable solution. Against this situation, the politics and the military force of the Tamils are harmonized as one politico-military leadership of the LTTE, with a parliamentary wing in the Tamil National alliance (TNA).

## A Leadership undettered by false propaganda of the Goverrnment

The Government of Chandrika was bending backwards to justify its "War for peace" against the Tamils. International propaganda was intensified by her Foreign Minister to get the Tamil expatriate organisations banned as "front organisations of the LTTE". Slogans like "Let's have a war as a way to Peace", "Let's liberate the Tamils of Jaffna from the terrorist activities of the LTTE", "We wanted Peace, but the LTTE asked for war", "Our War is against the LTTE and not against the Tamils" - such false statements were used lavishly even by the Sri Lankan embassies to demonise and tarnish the good name of the Tamils and their struggle. But such malicious propaganda never weakened the Tamil Leadership nor lessened their commitment to the struggle. On the contrary, the Tamil leadership survived all these false propaganda and the Tamils of Tamil Eelam have grown in thier togetherness, sympathy and solidarity. And LTTE have reached the status of being accepted, even by other elected representatives of the people, "as the sole representatives of the Tamil people"

## A Leadership not gloating in mere military victory

An adamant and prolonged refusal on the part of the Sinhala majority and its successive Governments to accept the true situation about the Tamils in the Northeast and their contemptuous disregard for the LTTE leadership have resulted in Government's desperate option for escalating war.

**Malicious propaganda never weakened the Tamil Leadership nor lessened their commitment to the struggle.**

Though leaders like President Premadasa have told the Singhalese people repeatedly that there is no victor in this war, yet the people without counting the loss of life and property, cry out for a war-victory that will quench their thirst for power. The majority are so excited, angered and affected by certain setbacks in the war that they think only of war-victories to wipe out the LTTE and keep up their pride.

The shameful defeat of the government forces, as it happened in LTTE's Operation code named "Leap of the Tiger" wakes up the Government only temporarily to its senses. Even the dead bodies of Sinhala soldiers, from very poor families, returning home in plastic bags did not make an impact for good on the power hungry leaders in the capital. The LTTE in spite of its resounding military victories, offered unilateral cease fires to the Government. But the latter arrogantly refused to reciprocate them. Dead bodies of Sinhala soldiers unaccepted by the Government on flimsy grounds of deterioration were burnt with military honours by the LTTE. This shows clearly the deep committment of the Tamil leadership to fallen soldiers as against the Sinhala military which bulldozed to the ground the Cemetery of the fallen heroes in Kopay. Shame!

## Creating the right conditions for Democracy and Human Rights

Once conditions are normalised for Tamil life and Tamils can live in their own land with dignity, a higher quality of democracy and human rights will definitely set in. Without rectifying the violation of the basic rights of a people for life, security, food, clothing and shelter, the Government wants to discuss highly complicated perrmanent solutions. The Tamils are not prepared for endless political discussion with the threat of war hanging over them, with insufficient food, clothing and shelter. Hence they demand normalisation of life as the first need.

Till then this de facto leadership has to be understood, acknowledged and encouraged to incorporate gradually the ingredients of true parliamentary democracy, namely human rights, justice and freedom. But until civilian life returns to normalcy,

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

the government has to deal with the LTTE without getting behind flimsy excuses. The government cannot with an air of superiority talk-down to the LTTE or preach to them democracy and human rights without practising them.

## Tamils reject Pseudo Leaderships

In their inability to deal with the leadership put out by the Tamils of the Northeast, many Singhalese still entertain the wish for meaningful negotiation with some pseudo Tamil representatives, by side-tracking the LTTE. Many Singhalese, even at this late stage, hope for a weakening or division of the LTTE, if not its complete disappearance, so that they can promote the emergence of some pseudo Tamil leaders with whom they can do business.

There are those Tamil groups who initially were militant, but in recent years have become armed-politicians supportive of the Government, even to the extent of betraying the struggle. They have managed to enter the Parliament through the backdoor by buying a handful of votes with money given by the government- and that too with the help of the army. Though they cannot speak for the Tamils, the government exposes them as "Tamil democrats".

The Sinhala majority and their political parties have tended to devalue the Tamil Struggle as mere terrorism and tried to contain the militant reaction of the Tamils with international help. Time has come when the new Tamil leadership after showing its military capabilities is showing its political acumen and readiness for a political solution. The racism and feudalism inherent in the party leaderships of the Singhalese are tested before the world whether they would rise up to statesmanship in finding a democratic and just solution for the ethnic problem.

## A politico-militant leadership with a voice in parliament

The LTTE is not convinced of the democratic nature of the Parliament of Sri Lanka, because it is a majoritarian democracy capable of bulldozing over the rights of the non-Singhalese. Nor does it believe in the constitution passed by such Sinhala majoriotarian democracies without the consent of the Tamils. Nevertheless it wants to send a clear message to Sri Lanka and to the world in a language spoken and understood by the so called democratic world. For this purpose it fielded proxy-candidates for the Parliamentary elections of 2004, gave a manifesto and campaigned for the election. The resounding victory of the Tamil National Alliance and the routing of the others have proved to the world clearly the strength of the LTTE leadership among the people.

It is the Tamil people who have freely and overwhelmingly voted for the Tamil National Alliance and their manifesto acknowledging LTTE as the sole representatives of the Tamils fighting for the inalienable right of self-determination of the Tamil people and for their traditional homeland.

Hence the LTTE leadership, is one that has emerged from below, from among the people, soaked in the conviction of their ideals and strengthened to fight with their lives for those ideals. Thus the parting of ways in 1976 to follow a parliamentary path and a politico-military path has again closed ranks to stand up for one ideal under one leadership. And this leadership has a voice in the Sri Lankan Parliament too.

> **Prabakaran is not only the present national leader standing up for his people against oppressors and challengers, but also the unforgettable architect of a leadership.**

## We salute the Architect of the new Tamil Nation

The liberation struggle of the Tamils in Sri Lanka, as unfolded during the last fifty five years through various phases and fronts, has enriched the meaning of liberation as understood by a people as well as help identify the evil forces of oppression against which they have to struggle. It has also made clear the price a people have to pay for their liberation in terms of lives and property as well as identify the destructive resources of the oppressive states and governments. These truths have been learnt once and for all and embedded in the memory of the Tamil nation.

Prabakaran is not only the present national leader standing up for his people against oppressors and challengers, but also the unforgettable architect of a leadership that established the Tamils of Thamil Eelam as a nation with self-respect and self-dignity. We all salute him.

தமிழ் ஆவணகாப்பகம்
Tamileelam Archive

புதிய தமிழ்த் தேசத்தை நிர்மாணித்து வழிநடத்தும் தலைவரை

# தமிழினம் பெருமையுடன் வாழ்த்துகின்றது



## தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரியவர் பலருக்குச் சவாலுமானவர் பிரபாகரன்

இலங்கை, தமிழீழம் மற்றும் உலகெங்கும் வாழுகின்ற தமிழர்கள் அனைவரும் 26.11.2004ல் தனது 50வது அகவையை நிறைவு செய்யும் தமிழர் தலைவரை நெஞ்சம் நிறைந்து நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள். ஏனென்றால் அவர் சிங்கள ஏகாதிபத்திய சக்திகளுக்குச் சவாலாகவும், தமிழ் மக்களின் விடுதலை வேட்கை நிறை வீரனாகவும் கணிக்கப்படுகிறார். சிங்கள அரசியல் சக்திகளுக்கும், அதன் அடக்குமுறையின் கருவியான இராணுவத்துக்கும் அவர் ஒரு சவால் ஆக இருப்பது மட்டுமல்ல, அடக்குமுறையை மறைமுகமாகவும், நேரடியாகவும், ஊக்குவிக்கின்ற சுயநல மிக்க வல்லரசுகளுக்குத் தடையாகவும் சவாலாகவும் எழுந்து நிற்கின்றார். தன் மக்களைக் காப்பாற்ற நம்பிக்கையுடைய இராணுவ பலத்தைக் கட்டியெழுப்பி தாயக மண்ணினதும், மக்களினதும் ஒற்றுமைக்கு வழிகாட்டியாக இருக்கின்றார். இவரது தலைமைத்துவத்தை தாயகத்தில் மட்டுமல்ல உலகில் வாழுகின்ற பெரும்பான்மையான தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டு இவரை தங்களுடைய விடுதலையின் வீரனாகவும், உலகில் ஓர் தனித்துவ தலைமைத்துவத்தைப் பேணுபவராகவும், கருதுகின்றபடியால் 26.11.2004 நாள் முக்கியத்துவம் பெறுகின்றது. இவரின் செயற்பாடுகள் உலகின் விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தோற்றுவிக்கின்றது.

**இலங்கை நாட்டை ஒரு முழு பௌத்த நாடாக மாற்றக் கொண்டிருந்த இரகசியத் திட்டத்தை அன்றைய தமிழ்த் தலைவர்கள் ஓரளவிற்கு அறிந்திருந்தனர்.**

## பிரபாகரன் தோன்றுவதற்கு முந்திய சிங்கள அடக்குமுறைகள்

சமூகவேறுபாடு, பிரதேசவேறுபாடு, சீதனக் கொடுமை, படித்தோர்-படியாதோர் வேற்றுமை, அசையா சொத்துக்களை மேலாகத் தேடும் போக்கு இப்பேர்ப்பட்ட அடிமைத்தனங்கள் பீடித்திருந்த தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் தான் இவரது பிறப்பு அமைந்தது. ஏற்கனவே இலங்கை பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பொழுது சிங்கள அரசியல் தலைவர்கள் முழு அதிகாரத்தையும் தாமே பெற்று அதைப் பயன்படுத்தி இலங்கை நாட்டை ஒரு முழு பௌத்த நாடாக மாற்றக் கொண்டிருந்த இரகசியத் திட்டத்தை அன்றைய தமிழ்த் தலைவர்கள் ஓரளவிற்கு அறிந்திருந்தனர். ஆனாலும் அதற்கெதிராகக் குரல் கொடுத்து போராடத் தயங்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கினர். இதன் காரணமாக தமிழ் மக்களின் எதிர்காலம் பறிபோவதற்கு காரணமாகவும், சிங்கள மக்களின் மேலாண்மை ஓங்குவதற்கும் உந்து சக்தியாகவும் ஒரு வகையில் அமைந்து விட்டார்கள்.

பிரித்தானிய அரசு இலங்கையிலிருந்து வெளியேறியதும் சிங்கள அரசு தன்னுடைய பெரும்பான்மை அதிகாரத்தைப் பயன் படுத்தி இந்திய வம்சாவளித் தமிழர்களின் பிரஜா உரிமையைப் பறித்தனர், தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களில் அரசின் உதவியுடன் சிங்களவர்களை குடியேற்றினர், சிங்கள மொழியை தனி அரச மொழியாகப் பிரகடனம் செய்து, தமிழ் மக்களினது கல்வியிலும், வேலைவாய்ப்புக்களிலும், அவர்களுடைய முன்னேற்றங்களிலும் தடைகளையும் ஏற்படுத்தினர். இவைகளின் பாரிய விளைவுகளை தமிழ் பொது மக்கள் வேதனையுடன் அனுபவித்தனர். ஆனால் தேர்தல் காலத்தில் மட்டும் தங்களுடைய தொகுதிகளைச் சந்தித்து வந்த தமிழ்த் தலைவர்கள் இம்மாற்றங்கள் ஏற்படுத்திய தாக்கங்களை முழுமையாக உணர முடியவில்லை. அதனால் அவர்கள் நாடாளுமன்றத்துக்கு உள்ளும் வெளியிலும் செய்த போராட்டங்கள் பிசுபிசுத்துப் போயின.

> தமிழ் மக்களின் பேரறிவின் அடையாளச் சின்னமாகக் கட்டி எழுப்பப்பட்ட யாழ் பொது நூலகத்தைச் சிங்கள காடையர் எரித்தனர், தமிழ் பெண்களை வல்லுறவுக்கு உள்ளாக்கினர், தமிழ் மக்களின் மொழி கலாச்சாரச் சின்னங்களை அழித்தனர். இக் காலகட்டத்தில் தான் பிரபாகரன் தோன்றினார்.

சிங்களக் காடையரும் அரச படைகளின் காடைத்தனமும் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கும் உயிர் வாழ்விற்கும் சவாலாக எழுந்த வேளையில், அன்றைய தமிழ் தலைவர்கள் என்ன செய்வது என்று அறியாது திளைத்தனர். சர்வ தேசம் தமிழ் மக்கள் மேல் அவிழ்த்து விடப்பட்ட காடைத்தனத்தைக் கண்டு மௌனம் சாதித்தனர். இந் நிலையில் இராணுவ அடக்குமறைக்கும் காடைத்தனத்திற்கும் சவாலாக எவரும் அன்று இருக்கவில்லை.

## சிங்கள கொடுமைத்தனத்தின் மத்தியில் அரசிற்குச் சவாலாகத் தோன்றிய பிரபாகரன்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்பு, இலங்கை அரச பயங்கரவாதம் தமிழ் மக்களை கொன்று எரித்தும், அவர்களுடைய உடமைகளை சூறையாடிக் கொள்ளையடித்தும் வந்தனர். தமிழ் மக்களின் பேரறிவின் அடையாளச் சின்னமாக கட்டி எழுப்பப்பட்ட யாழ் பொது நூலகத்தை சிங்கள காடையர் எரித்தனர், தமிழ் பெண்களை வல்லுறவுக்கு உள்ளாக்கினர், தமிழ் மக்களின் மொழி கலாச்சாரச் சின்னங்களை அழித்தனர். இக் காலகட்டத்தில் தான் பிரபாகரன் தோன்றினார்.

அவரின் கண்களும், காதுகளும், இதயமும் மக்கள் அனுபவிக்கும் துன்பங்களின் கொடூரத்தைக் கண்டன, அழு குரலை கேட்டன. அவர் வளர வளர, மக்களின் அபயக் குரல் அவர் மேல் வளர்ந்தது. சிங்கள கொடுமையிலிருந்து தன்மக்களை விடுதலைக்கு இட்டுச்செல்ல வேண்டும் என்ற உறுதி மலை போல் அவர் உள்ளத்தில் திரண்டது. ஆனால் அவர் தன்னுடைய நாளுக்காகக் காத்திருந்தார். பதுங்குவதில் பலம் தேடினார்.

பலருக்கு வேதனையாகவும், அதிர்ச்சியுமாக அமைந்த தன்னுடைய திட்டங்களை மெதுவாக நடைமுறைப்படுத்தித் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பௌத்த சிங்களக் கொடூரங்களை நிறுத்தினார்?. நீங்கள் செய்த கொடூரங்கள் இனிப் போதும் என்ற செய்தியை தென்னிலங்கை சிங்களவருக்குச் செய்தியாக அனுப்பினார். சிங்களவர்கள் இதன்பின்புதான் விழித்தெழத் தொடங்கினர்.

## புதிய தலைமைத்துவத்தைப் பற்றிய தவறான கணிப்பு

யார் புதிய தமிழ் தலைமைத்துவத்தைத் தோற்றுவிக்க காரண கர்த்தாக்களாக இருந்தார்களோ அவர்கள் தான் இன்று இப்புரட்சியான தலைமைத்துவத்தைப் பற்றி பல சந்தேகங்களும் கேள்விகளும் எழுப்புகின்றனர்.

தமிழ் தலைமைத்துவம் அகிம்சை வழியிலும் ஜனநாயகத்திலும் இருந்து எவ்விதம் இப்புதிய தலைமைத்துவத்தை ஆரம்பித்தனர் என்ற உண்மையை ஒதுக்கிவிட்டு புதிய தமிழ் தலைமைத்துவம் சென்ற நோக்குப் பற்றிப்பல கேள்விகள் பெரும்பான்மை சிங்களவருக்கும் அவர்களது அரசுக்கும் எழுகின்றது. இப்புதிய தலைமையுடன் எவ்வாறு பேசிக் கையாளுவது என்ற பிரச்சினையும் எழுந்தது. பல சிங்களவர்களும், ஏன் சில

தமிழ் ஆவணகாப்பகம் Tamileelam Archive

தமிழர்கள் கூட, இந்தத் தலைமையை இராணுவ பலத்தால் வெற்றி கொள்ள முடியும் என்றும், அப்படி அழிக்கப் படாவிடின் இத் தீவிரவாதிகளால் தமிழர் விடுதலையடைந்து பிரிந்து போய் விடுவர் என்றும் எண்ணினர்.

சிங்கள அரசும், வல்லரசுகளின் உதவியுடன், இதற்காக பல வழிகளில் கடின முயற்சி செய்து, பல மறை முகமான வழிகளில் இந்தத் தலை மைக்குப் பதிலான வேறு தமிழ்த் தலைமையை ஏற்படுத்த முனைந்தது. அரசு புதிய தலைமையைப் புறம் தள்ளி தங்களுக்கு விசுவாசமாக இருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப் பினர்களை கவர்ச்சிகரமான ஆசைக ளைக் காட்டித் தன் பக்கம் இழுக்க முனைந்தது. கடந்த காலத்தில் மித வாத அரசியல்வாதிகள் என்று பெயர் சூட்டப்பட்ட சில தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் இவ் வலைக்குள் விழுந்தார்கள். தமிழ னாய்ப் பிறந்தாலும், தமிழ்ப் பேசத் தெரியாத கூலிக்கு அமர்த்தப்பட்ட வெளிநாட்டமைச்சருடைய செயற்பாடுகள் தமிழ் மக்களையும் அவர்களுடைய தீவிரவாதத் தலைமைத்துவத்தையும் புறம்தள்ள முயன்றது. ஆனால் பெரும்பான்மையான தமிழர் கள் அவற்றை ஒரு நய வஞ்சக காட்டிக்கொடுப் பாக கணித்து அவரையும் சகாக்களையும் நிரா கரித்தார்கள். வரலாறு இவர்களுக்கு நீதி வழங்கும்.

> நாடுகளை ஆளுவதும் வழி நடத்துவதும் உயர் கல்லூரிகளில் படித்தவர்கள் அல்லது உயர்ந்த சாதியில் உள்ளவர்களின் பிரத்தியேகமான உரிமை அல்ல. உயர்நிலையினரும், கல்விகற்றவர்களும் ஈழத்தமிழர் வரலாற்றில் பாரதூரமான தவறுகளை செய்திருக்கின்றார்கள்.

உண்மையாகவே ஜனநாயகத் தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்க வேண்டுமென்று பெரும்பான் மையான சிங்கள மக்களும் அதன் அரசுகளும் நினைக்குமாக இருந்தால், புதிய தலைமையைப் புரிந்துகொண்டு அத்தலைமையை தமிழ் மக்களின் உண்மையான தலைமையாக ஏற்று, இனப்பிரச் சினைக்குத் தீர்வு காண முன்வரவேண்டும். இது முன்னெடுக்கப்பட வேண்டுமாக இருந்தால் சிங் களத் தலைமைத்துவம் ஊழல் நிறைந்த ஜன நாயகத்திலிருந்தும், நாடாளுமன்றத்தின் உள்ளும் வெளியும் நடாத்தும் காடைத்தனத்திலிருந்தும் விடுபட்டு, புதிய தமிழ் தலைமைத்துவத்தை யதார்த்த முறையில் ஏற்றுக்கொண்டு, தமிழரின் தனி மனித உரிமைகளையும், இன உரிமைகளையும் மதிக்க வும் காக்கவும் முன்வரவேண்டும்.
தமிழர் தேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிங்கள பாராளுமன்றத்தினால் இழிவுபடுத்தி நிரா கரிக்கப்பட்டனர்.

நாடுகளை ஆளுவதும் வழி நடத் துவதும் உயர் கல்லூரிகளில் படித் தவர்கள் அல்லது உயர்ந்த சாதியில் உள்ளவர்களின் பிரத்தியேகமான உரிமை அல்ல. உயர்நிலையினரும், கல்விகற்றவர்களும் ஈழத்தமிழர் வர லாற்றில் பாரதூரமான தவறுகளை செய்திருக்கின்றார்கள். தமிழ் மக்க ளின் வரலாற்றிலும் அவர்களுடைய சோகமான போராட்ட அனுபவங்களி லும் சில கல்விகற்ற உயர்நிலையி னர் தமிழ் மக்களின் போராட்டத்தை தங்களுடைய சொந்த விருப்பு வெறுப் புகளுக்காகக் காட்டிக் கொடுத்தது கொச்சைப் படுத்தியது வேதனைக்குரியது.

அதேவேளையில் நல்ல தமிழ்த் தலைவர்கள் சிங்கள ஜனநாயகத் துக்குள் இழிவுபடுத்தப்பட்டு நிராகரிக் கப்பட்டிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒரு காலத் தில் பிரித்தானிய கலாசாலைக் கல்வி யிலும் நாடாளுமன்ற முறைகளிலும் தகுதிபெற்று, பன்னாடுகளாலும் மதிக்கப்பட்ட தமிழர்கள் வட - கிழக்குத் தமிழர்களைப் பிரதி நிதித்துவம் செய்தனர். இவர்களுக்குள் ஆகக் குறைந்த தராதரம் ஒரு வழக்கறிஞராகவாவது இருந்தது. இவ் வழக்கறிஞர்கள் தெளிவான, ஆணித்தரமான வாதாடும் திறமையால் தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் எழுப்பினாலும் இவர்கள் சிங்கள பேரினவாதிகளால் பேசவிடாது இடைமறித்து கூச்சலுடன் புறம்தள்ளப்பட்டனர். ஆகவே இப்படியான வாதாடும் ஞானம் கொண்ட தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை கொழும் புப் பாராளுமன்றிற்கு அனுப்புவதில் எவ்வித அர்த்தமும் உள்ளதாகத் தெரியவில்லை. இதே போலவே இன்றும் தெரிவு செய்யப்பட்ட சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்கள் கீழ்த்தரமான முறையில் பாராளுமன்றத்தினுள் நடந்து கொள் கின்றனர்.

இன்றைய இளைஞர் சமூகம் எடுத்திருக்கின்ற தலைமைத்துவம் உறுதியூட்டுவதாக அமைகின் றது. ஏனென்றால் கடந்தகால தலைமைத்துவத்தின் கசப்பான அனுபவங்கள் அவர்களுக்கு அறிவூட் டும் பள்ளியாக அமைந்தது. இவர்களின் சில செயற்பாடுகளை நாம் அவசரப்பட்டு தவறாகக் கணித்துக் கொள்ளக் கூடாது. விசேடமாகத் தென் னிலங்கையில் குளிரூட்டும் அறைகளில் சாய்வு நாற்காலியில் பத்திரிகை படித்துக் காலாட்டிக்

தமிழ் ஆவணக் காப்பகம் Tamileelam Archive

கொண்டு விமர்சனம் செய்யும் கல்வி மான்கள் தமது விமர்சனங்களை நெறிப்படுத்த வேண்டும். வன்னிக்குச் சென்று பல இடையூறுகள் மத்தியிலும் மேற்கொள்ளப்படும் புதிய தலைமைத்துவத்தின் நிர்வாகத்தை சற்று அவதானித்த பின்பு தமது விமர்சனத்தை மேற்கொள்ளுவது நலம்.

## தெளிவான வேட்கைகளில் உறுதி கொண்ட தலைமைத்துவம்

விரும்பியோ விரும்பாமலோ ஒரு உண்மையை எல்லோரும் யதார்த்தமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது இன்று விடுதலைப் புலிகளே ஈழத் தமிழரின் தலைமைத்துவம். இத் தலைமைத்துவம் சிங்களவர்கள் பழகிய ஊழல்நிறை தேர்தல்கள் ஊடாகவல்ல, மாறாக தமிழ் மக்களைக் காட்டிக் கொடுத்தவர்களுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தினாலும் அரச பயங்கரவாதத்துக்கு எதிரான ஆயுதப் போராட்டத்தினாலும் தானாகவே உருவாகியது.

> **விரும்பியோ விரும்பாமலோ ஓர் உண்மையை எல்லோரும் யதார்த்தமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது இன்று விடுதலைப் புலிகளே ஈழத் தமிழரின் தலைமைத்துவம்.**

இத் தலைமைத்துவம் பின்வரும் காரணிகளில் தன்னை உறுதிப்படுத்திக் கொண்டது.

1. வட-கிழக்கு தமிழ் மக்களின் ஈலட்சியத்தை தொடர்ச்சியாக பிரமாணிக்கத்துடன் முன்னெடுத்து போராடுகின்ற ஒரேயொரு அமைப்பாக.
2. தமிழ் மக்களுக்கு எதிராக ஏவப்படுகின்ற ஏவுகணைகளிலிருந்தும் குண்டுத்தாக்குதல்களிலிருந்தும் அவர்களைப் பாதுகாக்கின்ற அமைப்பாக.
3. தமிழர் விடுதலைக்காக அதிக ஆயிரப் போராளிகளை பலிகொடுத்தவர்களாக.
4. வடகிழக்கு மக்களின் நல்வாழ்வுக்காக ஒரு நிர்வாகக் கட்டமைப்பை (காவல்துறை, நீதிமன்றம், கல்வி, போக்குவரத்து) ஏற்படுத்தியவர்களாக.

5. தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக, தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அமைப்பாக.

## யுத்தத்தை நியாயப்படுத்தி நீடிக்கும் அரசின் போக்கு

கூலிக்கு கூத்தாடும் வெளிவிவாகார அமைச்சரால் புலிகளுக்கு எதிராக பல பன்னாட்டுப் பிரச்சாரங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. வெளிநாட்டிலுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புக்களைப் பயங்கரவாதத்திற்கு சார்பென்று குற்றம் சுமத்தி தடைசெய்திருக்கின்றார்.

சமாதானத்துக்காகப் போர் செய்கின்றோம், தமிழ் பயங்கரவாதிகளிடமிருந்து யாழ் மக்களை விடுவிப்போம், எங்களுக்குச் சமாதானம் வேண்டும் ஆனால் புலிகள்தான் போரைத் தொடங்கினார்கள், எங்களுடைய யுத்தம் புலிகளுக்கு எதிரானது தமிழ் மக்களுக்கு எதிரானது அல்ல - இப்பேர் போன்ற பல பொய் சுலோகங்கள் வெளிநாடடில் இலங்கைத் தூதரகங்களால் பரப்பப்பட்டது. தமிழ் மக்களையும் அவர்களின் போராட்டங்களையும் மாசுபடுத்த கொச்சைப்படுத்த பயன்படுத்தப்பட்டது. ஆனால் இப்படியான வஞ்சகமான பிரச்சாரங்கள், தமிழ் மக்களை தமது போராட்டத்தின் நிலைப்பாட்டிலிருந்து பலவீனப்படுத்தவில்லை. மாறாக, புலம்பெயர் தமிழர்கள் தவறான பிரச்சாரத்துக்கு இடத்கொடாது தலைமைத்துவத்துடன் ஒன்றித்து புரிந்துணர்வுடனும் தோழமையுடனும் ஒத்துழைக்கின்றனர். தலைமைத்துவமும் பெலம் குன்றாது தன்னைப் பாதுகாத்துக்கொண்டு ஒற்றுமையில் வளர்ந்து வருகின்றது. எதிரியின் பொய் பிரசாரம் விடுதலைப் புலிகள் அனைத்து மக்களாலும், ஏன் மக்களிடமிருந்து தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளாலும், ஏக பிரதிநிதிகளாக மாறுவதற்கு வழி செய்துள்ளது.

## இராணுவ வெற்றிகளில் மிதமிஞ்சி பெருமிதங்கொள்ளாத தலைமைத்துவம்

சிங்களப் பெரும்பான்மையும் அதன் அரசுகளும், வடகிழக்குத் தமிழ் மக்களின் உண்மையான நிலையை ஏற்றுக் கொள்வதில் காட்டுகின்ற பிடிவாதமும், புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்ளக் காட்டுகின்ற நீடித்த அரக்கத்தனமும் யுத்தத்தை விஸ்தரிக்கச் செய்தது. முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா "இந்த யுத்தத்தை எவராலும் வெற்றிகொள்ள முடியாது" என்று பல தடவை சிங்கள மக்களுக்கு கூறியிருப்பினும், அவர்களுள்

தமிழீழ ஆவணகாப்பகம்
Tamileelam Archive

பலர் உயிருக்கும் சொத்துகளுக்கும் ஏற்படுகின்ற அழிவை கவனத்திற் கொள்ளாது, தங்களுக்கே வெற்றி வேண்டுமென்ற தாகத்துடன் போர் வேண்டுமென்று இன்னும் கூச்சல் இடுகின்றனர்.

பெரும்பான்மையானோர் யுத்தத்தில் ஏற்பட்ட இழப்புகளால் கோபம் கொண்டவர்களாக, யுத்தத்தின் வெற்றிகளால் தங்களுடைய பெருமையை நிலைநாட்ட முடியும் என்று நம்புகின்றார்கள். புலிப்பாச்சல் என்று பெயரிடப்பட்ட புலிகளின் இராணுவ நடவடிக்கையால் அரசாங்கப் படைகள் அவமானமிக்க தோல்வியைத் தழுவிக்கொண்டதும், இலங்கை அரசு தற்காலிகமாகத்தான் விழித்துக் கொண்டது. ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த இறந்த சிங்கள இராணுவத்தினரின் உடல்கள் பொலித்தின் உறைகளில் தென்பகுதிக்கு அனுப்பப்பட்டாலும், அதிகார ஆசை உடையவர்களின் மனதில் அது எந்தவித நீடித்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.



**கலாநிதி அருட்திரு. எஸ்.ஜே. இமானுவல்**

அரசியல், சமூக செயற்பாட்டாளர். ஜெர்மனி

ஆனால் விடுதலைப் புலிகள் இராணுவ வெற்றியைத் தமதாக்கிக் கொண்டாலும் பெருமையடையாமல் பெருந்தன்மையுடன் ஒருபக்க சார்பாக தமது யுத்த நிறுத்தத்தை அறிவித்தார்கள். அப்படியிருந்தும் அரசாங்கம் கர்வமாக அதை நிராகரித்தது. அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப் படாத இறந்த சிங்கள இராணுவத்தினரின் உடல்கள் விடுதலைப் புலிகளால் இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்யப்பட்டது. புலிகளின் இச்செயல் சிங்கள இராணுவம் தமது எதிரிகளாக இருந்தாலும் தமிழர் தலைமைத்துவம் எவ்வளவு மரியாதையுடன் போரில் வீழ்ந்தவர்களை மதிக்கின்றது என்பதற்கு ஒரு சான்று. கோப்பாயில் 5000 மாவீரர்களுடைய கல்லறையை கனரக வாகனங்களால் தரைமட்டமாக்கிய சிங்கள இராணுவம் தனது சீர்கெட்ட அநாகரிக செயலையிட்டு வெட்கித் தலைகுனிந்து நிற்க வேண்டிய நிகழ்வு இது.

## ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் சாதகமான சூழலை உருவாக்குதல்.

தங்களுடைய சொந்த மண்ணில் மனித மாண்போடு, தமிழ் மக்கள் வாழத் தொடங்க உயர்ந்த ஜனநாயகமும், மனித உரிமை மதிப்பீடுகளும் இயல்பாகவே தோன்றும். தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளான பாதுகாப்பு, உணவு, உடை, உறைவிடம் இவற்றை அரசு கருத்திற்கொள்ளாது, சிக்கலான நிரந்தரத் தீர்வைப்பற்றி பேச அரசு விரும்புவது வேடிக்கையானது. ஆகையால் இவற்றிற்கு தமிழ் மக்கள் ஆயத்தமில்லை. போரின் பயமுறுத்தல் எம் மக்களின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்க, வயிறார உணவின்றி வாட, முடிவுறாத அரசியல் பேச்சுவார்த்தையில் தமிழ் மக்கள் ஈடுபட ஆயத்தமாக இல்லை. இந்த நிலையில் தமிழ் மக்களின் யதார்த்த நிலையை புரிந்து கொண்டு புதிய தலைமைத்துவத்துடன் ஒத்துழைக்க வேண்டும். உண்மையான ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் நிலை நாட்ட தமிழ் தலைமைத்துவத்தோடு ஒத்துழைக்க வேண்டும். ஆகையால் மக்களின் வாழ்க்கை இயல்பு நிலைக்குத் திரும்ப மட்டும் அரசு சாக்குப் போக்குகளைச் சொல்லாது விடுதலைப் புலிகளோடு பேசியே ஆக வேண்டும். அரசாங்கம் ஜனநாயத்தையும் மனித உரிமைகளையும் தான் பேணாமல், விடுதலைப் புலிகளுக்குப் அதைப்பற்றிப் போதிப்பதில் பயனில்லை.

## தமிழர்கள் பொய்யான தலைவர்களை நிராகரிக்கிறார்கள்

வடகிழக்குத் தமிழ் மக்களால் தெளிவாக முன்னிலைப்படுத்தப்பட்ட புலிகளின் தலைமைத்துவத்தோடு ஒன்றும் செய்ய முடியாத நிலையில், சிங்களத் தலைவர்கள் புலிகளை ஓரங்கட்டவும், இன்னும் பொய்யான தமிழர் பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தைகளை செய்யவும் எத்தனிக்கின்றனர். பல சிங்களவர்கள் புலிகளை பலவீனப்படுத்தி அல்லது பிளவுபடுத்தி, போலியான தமிழர் தரப்புகளோடு தங்களது அரசியல் வியாபாரத்தை வைத்துக் கொள்ளலாமென கனவுகாண்கின்றனர்.

சில தமிழ் குழுக்கள் ஆரம்பத்தில் தீவிரவாதிகளாக இருந்தாலும் அண்மைக் காலங்களில் ஆயுதம் தாங்கிய அரசியல்வாதிகளாக அரசுக்கு ஆதரவாளர்களாகவும், தமிழர் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பவர்களாகவும் வலம் வருகின்றார்கள். அரசின் பணத்தோடும், இராணுவத்தின் துணை

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

யோடும், சில ஆதரவாளர்களின் வாக்குகளையும் பெற்றுக்கொண்டு பின்கதவால் நாடாளுமன்றுள் நுழைந்தவர்கள், இன்று தமிழர்களுக்காகக் குரல் கொடுக்காவிட்டாலும் அரசு அவர்களை ஜனநாயகத் தமிழர் என முத்திரைகுத்தி சர்வதேசத்திற்கு அவர்கள் தான் உண்மையான ஜனநாயக தமிழ் தலைவர்களென காட்ட முயற்சிக்கின்றது.

சிங்களப் பெரும்பான்மைச் சமூகமும் அவர்களின் அரசியற் கட்சிகளும், தமிழ் மக்களின் போராட்டத்தைப் பயங்கரவாதிகளின் போராட்டமாக கொச்சைப் படுத்தி அதற்கெதிராக பன்னாட்டு பணம், ஆயுத உதவிகளையும் கோருகின்றார்கள்.

> தமிழர்களின் புதிய தலைமைத்துவம் தன்னுடைய இராணுவ ஆற்றலை வெளிப்படுத்திய தற்குப்பின், தன்னுடைய அரசியல் சாதுரியத்தையும் அரசியல் தீர்வுக்கான ஆயத்த நிலையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

தமிழர்களின் புதிய தலைமைத்துவம் தன்னுடைய இராணுவ ஆற்றலை வெளிப்படுத்தியதற்குப்பின் தன்னுடைய அரசியல் சாதுரியத்தையும் அரசியல் தீர்வுக்கான ஆயத்த நிலையையும் வெளிப்படுத்தி நிற்கின்றது. இன வாதத்தாலும் பிரபுத்துவ வாதத்தாலும் உள்வாங்கப்பட்ட சிங்கள அரசியல் தலைமைப் பீடங்களே இன்று சர்வதேச அரங்கில் சோதிக்கப் படுகின்றன. தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை ஜனநாயக ரீதியாக, நீதியான முறையில் தீர்ப்பார்களா என்பதன் மூலம் தங்களின் இராஜ நிர்வாகத் திறமையை உலகத்துக்கு முன்னால் நிருபிக்க வேண்டிய நிற்பந்தம் நெருங்கிக் கொண்டு வருகின்றது.

## மக்களின் இலட்சிய உறுதியில் வேரூன்றிய தலைமைத்துவம்

அரச பயங்கரவாதத்தை ஆயுதம் கொண்டு எதிர்ப்பதும், மக்களிடையே விடுதலைக்குரிய அரசியல் வேட்கைகளை பலப்படுத்துவம் விடுதலைப் புலிகளின் தலைக்கடன் ஆயிற்று. தங்களுடைய இராணுவ வெற்றிகளின் ஊடாக ஊதியத்துக்காகப் போராடுகின்ற அரச படைகளுக்கும் ஒரு கொள்கையோடு போராடிய விடுதலை வீரர்களுக்கும் இடையே இருக்கும் வித்தியாசத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் அடிக்கடி கூறுவது - எங்களின் பலம் நாங்கள் வைத்திருக்கும் ஆயுதங்களிலும் மேலாக நாங்கள் பெற்ற இராணுவ வெற்றிகளிலும் மேலாக எமமில் வேரூன்றியிருக்கும் ஆழமான இலட்சிய உறுதியே. இவ்வுறுதி நிலைப்பாடு அரச படைகளது இரும்புப் பிடியினால் ஏற்பட்ட துன்பங்களின் நிமித்தம் மக்களிடையே ஆழமாக வளர்ந்து விட்டது.

விடுதலைக்காக போராடுகின்ற மக்களை இராணுவப் பலம் கொண்டு அடக்க முடியாது என்பதை உணர சிறிலங்கா அரசுக்கு நீண்ட காலம் எடுத்தது. விடுதலைப் புலிகளின் உயர் மட்டத்தில் குழப்பமேற்பட்டு அவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வார்கள் என்றும், அண்மையில் இடம்பெற்ற கிழக்குப் பிரதேச பிரச்சினைகளில், கருணாவால் ஏற்படுத்தப்பட்ட பிளவால் குழம்பிவிடுவார்கள் என்றும், அந்நிய, ஏகாதிபத்திய சக்திகள் ஊடாக விடுதலைப் புலிகளை அழித்து விடலாம் என்றும் பல கனவுகள் இன்றும் இன்னமும் பல சிங்கள மக்கள் மத்தியில் உண்டு. ஆனால் தமிழ் மக்களின் இலட்சிய உறுதியை எந்த இராணுவ பலமும் அழிக்க முடியாது.

## நாடாளுமன்றத்தினுள்ளும் குரல் கொடுக்க வல்ல தமிழ் தலைமைத்துவம்

விடுதலைப் புலிகள் பெரும் பான்மை சிங்கள ஜனநாயக முறையிலான நாடாளுமன்றில் நம்பிக்கை வைத்தவர்கள் அல்ல. பெரும்பான்மை சிங்கள ஜனநாயகம் சிங்களவர்கள் அல்லாதவர்களின் உரிமைகளை பாழடிக்கச் செய்திருக்கின்றன. சிங்கள பெரும்பான்மை ஜனநாயத்தால் நிறைவேற்றப்படுகின்ற அரசியற் கோட்பாடுகள் சட்டங்கள் தமிழ் மக்களின் சம்மதத்தைப் பெற்றிருக்கவில்லை. எனினும் ஜனநாயகத்தில் பெரும் நம்பிக்கை கொண்டிருக்கும் இலங்கைக்கும் சர்வதேசத்துக்கும் வழங்கக்கூடிய செய்தியை அவர்களின் ஜனநாயக மொழியில் கொடுப்பதற்கு ஒரு வழி தேடினர். ஆகையினால் கடந்த தேர்தலை உபயோகித்து ஒரு செய்தியை விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கைக்கும் சர்வ தேசத்திற்கும் சொல்லி நின்றது. இதற்காக 2004ல் நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலே தன் சார்பாக தேர்தல் விஞ்ஞாபனத்தையும் அதற்கான ஆதரவையும் வெளிப்படுத்தி நின்றது. இத் தேர்தலில் தமிழர் தேசியக்

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

கூட்டமைப்பினது அமோக வெற்றி, விடுதலைப் புலிகளின் தலைமையின் சக்தியை தமிழ் மக்கள் மத்தியிலும் உலகத்திற்கும் வெளிப்படுத்தி நின்றது. தமிழர் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் மக்கள் சுதந்திரமாகவும் வெற்றிவாகையோடு தங்களது வாக்குரிமையை அளித்து விடுதலைப் புலிகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஏற்றனர். விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளென அகிலமெங்கும் பறைசாற்றி நின்றார்கள்.

விடுதலைப் புலிகள் அடித்தளத்திலிருந்து, மக்கள் மத்தியில் இருந்து மேலெழுந்து தங்களுடைய கொள்கைகளில் உறுதியாக நின்று அதைப் பலப்படுத்தி அக் கொள்கைக்காக தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் போராடினார்கள்.

அன்று 1976 பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் பிரிந்து தனித் தமிழ் நாடு கோருவதே ஒரே வழி என்று அமோகமாக வாக்களித்தனர். இம் முடிவை செயல் படுத்த ஒரு சிலர் தொடர்ந்தும் பாராளுமன்றப் பாதையில் சென்றனர். தோல்விக்கு மேல் தோல்வி கண்டனர் விரக்தியின் எல்லைக்குத் தள்ளப் பட்டனர். மாறாக இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி இலட்சிய பாதையில் சென்றனர். உயிர்ப் பலி கொடுத்து இலட்சியத்தைப் பெலப்படுத்தி ஆயுத பலத்தையும் நிரூபித்தனர். 30 வருடங்களின் பின் அரசியல் இலட்சிய இராணுவ வழிகள் இணைந்து ஒரு உயரிய குறிக்கோளுக்காக ஒரு தலைமைத்துவத்தின் கீழ் பயணிக்கின்றது. இத் தனிப் பெரும் தலைமைத்துவத்தின் குரல் தான் இன்று வன்னியிலும் இலங்கை நாடாளுமன்றினுள்ளும் ஒலிக்கிறது.

> விடுதலைப் புலிகள் அடித்தளத்திலிருந்து, மக்கள் மத்தியில் இருந்து மேலெழுந்து தங்களுடைய கொள்கைகளில் உறுதியாக நின்று அதைப் பலப்படுத்தி அக் கொள்கைக்காக தங்கள் உயிரையும் பணயம் வைத்துப் போராடினார்கள்.

தமிழ்த் தேசியத்தின் தனிப்பெரும் தலைமைத்துவத்தை நிர்மாணித்த தலைவரை நெஞ்சம் நிறைந்து வாழ்த்துகிறோம்.

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டம் கடந்த 55 வருடங்களாக பல எல்லைகளையும் எதிர்ப்புகளையும் கடந்திருக்கின்றது. ஓர் மக்களின் விடுதலைக்கு உண்மையான அர்த்தத்தை ஊட்டி, அதேவேளையில் தீய சக்திகளான பல்வேறு அடக்கு முறையாளர்களையும் அடையாளம்காண வைத்துள்ளது. உண்மையான விடுதலைக்கு மக்கள் வாழ்வாலும் சொத்து அழிவாலும் விலை கொடுக்க வேண்டும் என்ற நிலையை நிரூபித்துள்ளது. அழிவின் சக்திகளாக செயல்படும் அடக்குமுறை நாடுகளையும் அரசுகளையும் அடையாளம் காட்டத் தவறியதில்லை. இந்த உண்மைகள் புதிய தமிழ்த் தேசத்தால் உள்வாங்கப்பட்டு எம் தமிழ்த் தேசியத்தின் நித்திய நினைவுகளில் பதியப்பட வேண்டியவை!!

தலைவர் பிரபாகரன் தமிழ் மக்களின் சார்பாக அடக்குமுறையாளர்களுக்கு எதிராக எழுந்து நிற்பவர் மாத்திரமல்ல, தமிழர்கள் மதிப்போடும், மாண்போடும் வாழ, ஒரு தேசியத்தைக் கட்டியெழுப்பிய தலைவருமாக இருக்கின்றார். இவரை தமிழினம் பெருமையுடன் வாழ்க வளர்க என வாழ்த்துகின்றது.



மருத்துவர் ராமதாஸ்

பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர். தமிழகம்

## ஈழத்தின் எல்லைக்கோடு.

தமிழர் நிலப்பகுதியின் பெரும் நகரங்கள் மட்டுமே சிங்களவர்கள் ஆட்சி செய்கின்றனர். போர்நிறுத்த உடன்பாட்டை ஏற்றுக்கொண்டதன் மூலம், தமிழர் நிலப்பகுதியில் தமிழர் ஆட்சியை சிங்கள அரசும் ஏற்றுக்கொண்டுள்ளது.

உலக நாடுகளின் படைகள் போர் நிறுத்த எல்லைக்கோட்டை கண்காணிப்பதன் மூலம் சிங்கள நிலப்பகுதியையும் தமிழர் நிலப்பகுதியையும் பிரிக்கும் எல்லைக் கோட்டினை உலகமே ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்தச் சாதனையை ஏற்படுத்திய வரலாற்று நாயகன் தம்பி பிரபாகரன்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# இயற்கையின் நண்பன்

மேம்பட்ட சமூகங்கள், தேசங்களிளெல்லாம் இன்று அன்றாடம் பேசப்பட்டு, விவாதிக்கப்படும் தலைப்புகளில் அச் சமூகங்கள் தேசங்களின் இயற்கை வளங்கள் அவற்றின் பேணல், பராமரிப்பு என்பன முக்கிய இடம் பெறுகின்றன என்பதை நாமெல்லாம் நன்கறிவோம். ஆனால் எம் தாய் மண்ணிலேயும் நீண்டதோர் விடுதலைப் போராட்டத்தின் மத்தியிலேயும் கூட இதே விடயங்கள் பேசப்படுவதோடு மட்டுமல்லாமல் இயற்கையின் நலத்தினைக் கருத்தில்கொண்டு தீர்க்கமான செயற்பாடுகளும் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பது எம்மில் பலருக்குப் புதிய தகவலாகவும் இருக்கலாம். எனவேதான் தமிழீழ மண்ணில் இத்துறையில் நான் கண்ட போற்றத்தகு மாற்றங்களைக் கருத்தில்கொண்டு, விடுதலை யுகத்தின் வெளிப்பாடான ஆழ்ந்த சிந்தனை கலந்த செயற்பாட்டாற்றலை இங்கே விபரிக்க விழைகின்றேன்.



மானிடம் தவிர்ந்த எல்லாவற்றையும் சேர்த்து இயற்கை எனக் குறிப்பிடுவது அறிவியல் சார்ந்த வழமை. நிலமும், நீரும் அவற்றிடை உயிர்வாழ்வனவெல்லாம் இதனுள் அடங்கும். மனித இனம் வாழும் பரந்த சூழல் எனவும் இதைக் கொள்ளலாம். இவ்வியற்கையோடு இசைவுறவாழ்ந்த ஆதி மனிதன் காலப் போக்கில் தன் தேவைகட்கும் விருப்பத்துக்கும் ஏற்றபடி இயற்கையினைக் கையாண்டு வந்தான்.

காடுகள் கழனிகளானது போல நீர் நிலைகள், புற்றரைகள் வயல்வெளிகளென உணவுக்கும் உடைக்குமாக மட்டுமல்

Tamileelam Archive

வைத்துள்ளன. பிரபாகரன் சண்டப் பிரசண்டம் செய்யும் பேச்சாளரோ அல்லது தினமும் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை நிகழ்த்தி அறைகூவல் விடுக்கும் அரசியல்வாதியோ அல்ல. அவர் விழி அசைவிலும் நடக்கின்ற நடையிலும் ஒரு பெரும் இயக்கத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டிருப்பவர். 'சொல்லுக சொல்லை அதனை வெல்லும் சொல் இன்னொன்று இல்லை என்பதை அறிந்து' என்று வள்ளுவர் சொன்னதைப் போல அவர் சொற்களை நிதானத்தோடு பயன்படுத்திய இந்த நேர்காணலில் வரிகளை மட்டும் படிக்காதீர்கள். ஆங்கிலத்தில் 'Reading between the lines' என்று சொல்லுவார்கள். வரிகளுக்கு இடையே உள்ள மௌனத்தைப் படியுங்கள். அங்கு பேசப்படாத சொற்களைப்படியுங்கள். அப்பொழுது தான் இந்த நேர்காணலின் முழுப் பரிமாணமும் இந்த நீண்ட போராட்டத்தின் பின்னால் உள்ள வலியும் புரியும்.

● வழக்கறிஞர் அருள்மொழி.
(2002 பத்திரிகையாளர் சந்திப்புக் குறித்து...)

## தமிழீழமும் பிரபாகரனும்.

தமிழீழப் புலிகளின் தீர்வே தமிழினத்திற்கு ஏற்ற நல்ல தீர்வு. பிரபாகரன் எடுக்கும் முடிவுதான் தமிழீழத்திற்கு மட்டுமன்று, தமிழினத்திற்கே உகந்தது. தமிழர்களுக்கென்று ஒரு தனி நாடு அமைந்தே ஆகவேண்டும்

லாது எழில்மிகு காட்சிகட்கும், களிப்புக்குமாக இயற்கை மனிதனின் கையில் உருமாற்றம் பெறத் தொடங்கியது. இயற்கையை முற்றாகப் புரிந்துகொள்ள முடியாத நிலையில், மனித இனம் தன் மட்டான தேவைகள் போக இயற்கையை இறைவடிவாகக் கண்டது. இயற்கைமேல் மரியாதையே கொண்டிருந்தது. காட்டு வளங்களில் மனிதன் தங்கியிருந்ததைக் கூறவந்த தொல்காப்பியரும் 'மாயோன் மேய காடுறை உலகமும்' என்ற அடியில் தமிழரின் அன்றைய இயற்கை சார் சிந்தனையைக் கூறிப்போந்தார்.

இன்றைய மனிதன் இயற்கையிலிருந்து தன்னை முற்றிலும் புறம்பாக்கியதோடு, மனித இனத்தின் தேவைகளை மட்டும் மையமாகக் கொண்ட சிந்தனையின் ஆதிக்கத்தின் கீழ், தன் கட்டுப்பாடற்ற நுகர்வுக்கு இயற்கை வளங்களை உட்படுத்தி வருகிறான். மக்கள் தொகைப் பெருக்கம் தந்த அழுத்தங்களை நவீன தொழில்நுட்ப வளர்ச்சி எவ்வாறாயினும் ஈடுசெய்யும் என்ற துணிவோடு, உற்பத்தியுக மனிதன் இயல்பாகவே மண்ணுக்கும் மனிதருக்குமிடையேயுள்ள பிணைப்பினை இழந்துவிட்டான். இதுவே இன்று உலகெங்கிலும் இயற்கையின் சிதைவெனவும், சூழலின் அழிவெனவும் பேசப்படும் மாற்றங்களின் மூல காரணியாகின்றது. மேற்குலகம் வழிநடத்தி வந்த இவ் வளர்ச்சிப்பாதை கேள்விக்குள்ளாக்கப்பட்ட நிலையில், 1992இல் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சூழல் மாநாட்டுப் பிரகடனங்களின் உந்துதலின்படி பேணத்தகு அபிவிருத்தி என்ற பெயரில் இயற்கை பற்றிய புதிய விழிப்புணர்வு முன்னெடுக்கப்பட்டது. மக்களினத்துக்கும் இயற்கைக்கும் இடையேயுள்ள நெருக்கமான பிணைப்புக்களை நன்கு புரிந்து செயற்படவும், மனித தேவைகளையே என்றும் மையமாகக் கொள்ளாமல் இயற்கைக்கெனச் சில பெறுமானங்கள் உண்டென்ற வகையில் அவற்றினை மையைப் படுத்திப் பேணவும் உலக சமூகத்தில் ஒரு பகுதி முன் வந்துள்ளது. சூழல் சார்ந்த அமைப்புக்களும், பசுமை இயக்கங்களும் பலநாடுகளில் இவ்வகையில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றன. ஆனால் வளர்ச்சிப் பாதையில் முன்னணியிலிருக்கும் பெரும் தேசங்கள் பலவற்றில் புதுமைவாய்ந்த இக் கருத்தாக்கம் சிறுகச் சிறுகவே உள்வாங்கப் படும்போது, பல எதிர்ப்புக்களின் மத்தியில் விடுதலைபெற்று வெளிவரக் காத்திருக்கும் ஒரு சிறிய தேசிய இனம் தன் இயற்கை வளங்களை எவ்வாறு பேண முயற்சிக்கலாம்? இது சாத்தியமானதொன்றா?

தமிழ்த் தாயகத்தின் இயற்கை வளங்கள் பரந்தவை. பல்வேறுவகைப் பட்டவை. வரண்ட யாழ் குடாநாட்டின் வயல்வெளிகளும், பனந்தோப்புக்களும், கடல்வளமும் நிலத்தடி நீர்வளமும் அடர்த்தியான மக்கள்தொகையைத் தாங்கும் அதேவேளையில், வன்னிப் பெருநிலமும், கிழக்கு மாவட்டங்களும் அடர்ந்த இயற்கைக் காடுகள் முதல் ஐதான வரண்ட நிலக் காடுகள் வரையும், பரந்த நெற்பயிர் நிலங்களும், எத்தனையோ குளங்களும் கொண்

Viduthalaipperoli
தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டவை. பறவைகளும், வனவிலங்குகளும் ஏராளமாகப் பரவி வாழ்கின்றன. நீண்ட கரையோரம், ஆழ்கடல், நன்னீர், உவர்நீர் வாவிகள் எனப் பல்வேறு இயற்கைக் கூறுகள் வளமும், வாழ்வும், வனப்பும் தருபவை. இவையெல்லாம் யுத்தகாலம்வரை நல்லதோர் சமநிலையில் இருந்தனவென்றால், கடந்த 20 ஆண்டு காலமாகப் படிப்படியாக இச் சமநிலை சீர்குலைக்கப்பட்டு, பலபகுதிகள் பெரும் சூழல் பேரழிவுநிலைக்குத் தள்ளப்பட்டன. முழு இலங்கையிலுமே எஞ்சியுள்ள இயற்கை வனங்களில் பாதியளவு தமிழர் தாயகத்தில் உள்ளதென்பதும், யுத்தகாலத்தில் பெரும் அழிவினைச் சந்தித்த இயற்கைவளம் இதுவே என்பதும் நினைவிற்கொள்ள வேண்டியவை.

எனவேதான் நிறைவுடைய தேசம் ஒன்றினை நிர்மாணிப்பதில் நிலையான இயற்கையைப் பேணுவதிலும் குறிப்பாக வனவளத்தினைப் பாதுகாப்பதிலும் மிகக் கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தைத் தெரிந்துகொண்ட தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள். அதற்கான கொள்கைத் திட்டங்களை வகுத்ததோடு, வனவளப் பாதுகாப்புப் பிரிவு என்ற நிறைவேற்றும் அலகினையும் பத்து ஆண்டுகளின் முன்னரே ஆரம்பித்தார். அழிக்கப்பட்ட காடுகளை மீள்வனமாக்கல் முறையில் திரும்ப நிறுவியும், நடுகைக் காடுகள் என்ற பெயரில் உற்பத்திக்கான மரங்களை பெரும் திட்டங்களாக நட்டு வளர்த்தும், சாலை மருங்குகள், பொது இடங்கள், பள்ளிகள் எனப் பல்வேறு இடங்களில் நடுகை செய்தும் இற்றைவரை பல இலட்சம் பயன்தரும் மரங்கள் தமிழீழ மண்ணில் நட்டுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. சமூகக் காடுகள் என்னும் பரீட்சார்த்தத் திட்டம் மூலம் மக்களின் ஈடுபாடு பெருக்கப் படுவதோடு, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளின் மூலம் இயற்கை பற்றிய அறிவுறுத்தல் சமூகத்தினிடையே சென்றடைகின்றது. அனுமதியின்றி சிறுமரத்தினைக் கூடவெட்ட முடியாத வகையில் கட்டுப்பாடுகள் இவ்வனவளப்பிரிவினால் நடைமுறைப்படுத்தப் படுகின்றன. சர்ச்சைக்குரிய இவ்விதிகள் மக்களிடையே படிப்படியாக ஏற்றுக்கொள்ளப்படும் அதேவேளையில் அம்மக்களின் தேவைகட்கு மாற்றீடுகள் தேடவும், அதுபற்றி அறிவுரைகள் பெறவும் தொடர்ச்சியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வனவிலங்குகள் வேட்டையாடப்படுவதற்கான தடை, இவ்விலங்குகட்காகச் சரணாலயங்கள் அமைக்கும் திட்டம் எல்லாம் இன்றைய சூழ்நிலையில் முற்போக்கான சிந்தனைகளாகும். வனவளம் பாதுகாக்கப்படுவது போலவே எம் மண்ணின் நிலவளம், நீர்வளம் என்பனவும் பொருண்மிய மேம்பாட்டின் கூறுகளாக நீண்ட காலமாக அவதானிக்கப்பட்டுவந்துள்ளன என்பது பெருமைக்குரியது.





**கலாநிதி சிறீஸ்கந்தராசா**

விவாசாயத்துறைப் பேராசிரியர்.
சமூக செயற்பாட்டாளர்.
டென்மார்க்.

இயற்கையை மதித்து வாழும் பாரம்பரியம் ஈழத் தமிழ் மக்களிடையே முற்றாக அற்றுப்போகவில்லையென்றாலும், நகர மயமாதல், பணப்பயிர் உற்பத்தியின் வளர்ச்சி என்பனவற்றின் காரணமாக எம் மண்ணில், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மற்றைய நகரங்களிலும். இயற்கை பாழடைந்து போனதும் வனவளம் குன்றிப் போனதும் கசப்பான உண்மைகள் தான். இந்நிலை மறுதலிக்கப்படவேண்டியது. ஆனால் சவால்கள் நிறைந்தது. தனிமனிதனின்பால் பொறுப்புணர்வும், நடத்தையில் மாற்றமும் அவசியமானவை.

உலக அரங்கில் இயற்கையின் சார்பில் பேசுபவர்கள் இயற்கை பேணப்படவேண்டுமாயின் ஒரு நிலையான அரசும் அதற்கொப்பான நீதி நிர்வாகமும் வேண்டுமென்கின்றார்கள். இவையிரண்டும் இருந்தாலும் இவற்றுக்கும் மேலாக, இயற்கையின் அவசியத்தை நன்கு புரிந்துகொண்ட தலைமைத்துவம் அங்கு தேவைப்படுகின்றது. தமிழ் மண்ணைப் பொறுத்தவரை அரசும், நீதி நிர்வாகமும் ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ளன. அவற்றுக்கான அங்கீகாரம் கிட்டும்போது இயற்கையின் நண்பனே தலைவனாக வழிகாட்டுவான். அதுவே இயற்கை பேணும் வழி. அவனே எம் சொத்து.

Tamileelam Archive

# விடுதலைப் பேராறு

குதிரைகளின் காலடிக் குளம்புகள் பதிந்த
பாலமாய் விரிகிற முதுகுகளின் கீழ்
இரத்தமும் கண்ணீரும் கலந்த ஆறு புரண்டது
ஒரு முன்னூறு ஆண்டுகளுக்கு மேலாக...

காணமற் போன குழந்தைகளினதும்
கதறல்களை ஒலிக்கும்
தாய்மார்களின் குரல்கள் நெரிவுறும் கரைகளில்.
நீராடிக் களித்த இளம் பெண்களினதும்
சேலைகள் கிழிந்த ஓசை காற்றில் படபடக்கும்.

காலச் சக்கர சுழலுள் சிக்குண்ட ஆன்மா
கானலாறாய் நெழிவுற்று அலைந்தவொரு நாளில்
ஆதிப் பண்பாட்டினுடைய சங்கப் பாடல் தோய்ந்த
சுருதியை மீட்டிய படி வீரர்கள் கருவுற்றனர்

எல்லோருக்கும் ஒளியின் சிறகு பொருந்தியது.

இனிப்படுவதற்கு ஒன்றும் இல்லை என்றான பிறகு,
எல்லோரிடமும் இரண்டு கேள்விகள் எஞ்சி இருந்தன
போராடுவதா? அடிமைப்படுவதா?.

பாளம் பாளமாய் வெடித்துக் கிடந்த நிலத்தில்
நெருப்புச் சுடரின் பாங்கோசையோடு வீரியம் மிக்க
குழந்தை பிறந்து திசைகளை விழிக்கத் தொடங்கியது.

பல்லக்குக் காவிகள் குப்பற வீழ்ந்தனர்
கதிரைகள் உடைந்து நொருங்கிட வீழ்ந்தனர்
தூக்குக் காவடிகள் சரிந்திடச் சாய்ந்தனர்
விசிறிகளை வீசியே எறிந்தவர் போயினர்
சாமரங்கள் தொலைந்தன நுகத்தடிகள் முறிந்தன
கால்சங்கிலிகள் அறுந்து போயின
கைவிலங்குகள் நொருங்கின
இது நிகழத்தொடங்கியும் ஒரு ஐம்பது ஆண்டு காலம்
இருக்கும்.

எல்லோர் முதுகுகளின் மேலாலும் உயர்ந்து விரியும்
மலையின் சிகரங்கள் தோறும் விடுதலையே நிமிர்வு
கொள்கின்றது.

பிறகு,
பாலையெனக் கிடந்த நிலத்தில் விடுதலைப் பேராற்றின்
பாய்தல் பற்றிய பேச்சே எங்கணும் நிறைந்திருந்தது.

2004.

தா.பாலகணேசன்

கவிஞர்,
எழுத்தாளர்,
கலை
இலக்கியச்
செயற்பாட்டாளர்.
பிரான்ஸ்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சிறு தெய்வங்கள் கதையில் வாழ்கின்றன நீங்கள் நிஜத்தில் வாழ்கிறீர்கள்



**சீமான்**

திரைப்பட இயக்குனர், சமூக செயற்பாட்டாளர். தமிழகம்.

அன்பு அண்ணாவிற்கு...

அது ஒரு கோடைகாலம். இராமநாதபுர மாவட்டத்தின் வெயில் பொறுக்காது கரையோரத்துப் பனைமரங்கள் கானலில் நெளிகின்றன. சூடு தாங்காமல் கடந்த வெற்றுக்கால்களின் சுவடுகளால் வைகைநதி மணலாக நிறைந்து கிடக்கிறது. ஒவ்வொரு முறை வைகையைக் கடக்கும் போதும் இந்தநதி கடலுக்குப் போகிறது என்கிற ஞாபகம் வரும். கடல் என்றால் இராமேஸ்வரம். இந்த நதியில் காகிதக் கப்பல் செய்து விட்டால் அது கடல்போய்ச் சேரும் என்பது பள்ளிப் பருவத்தின் நம்பிக்கை. நம்பிக்கைகளோடும் கனவுகளோடும் வறண்ட நதியில் இறங்கி உள்ளங்கைச் சூடு பொறுக்கக் கூழாங்கல் கண்டெடுப்போம்.

அதுபோல்... வெப்பம் தகிக்கும் ஆறெனப் பரந்த நினைவு நதிகளில் இருந்து கூழாங்கற்களெனச் சில வார்த்தைகள். கடலுக்கு அப்பால் தம்பியாகவும் தலைவனாகவும் இருக்கும் அண்ணனுக்குத் தர.

இங்கு எங்களுக்கு ஆயிரம் பிரச்சனைகள். காவிரிப் பிரச்சனை, கட்டாயத் தமிழ்க்கல்வி இன்னொரு பிரச்சனை, தலைவர்களுக்குப் பதவிப் பிரச்சனை, அப்பாவித் தமிழனுக்குத் தண்ணீர்ப் பிரச்சனை, சில தன்மானப் பிரச்சனை. இத்தனைக்கும் மத்தியில் நாங்கள் தமிழனாகப் பிறந்ததில் வெட்கப்பட ஆயிரம் சிக்கல்கள் இங்குண்டு. ஆனால் பெருமைப்பட ஒரே ஒரு விஷயம்தான் உண்டு. 'பிரபாகரன்'.

மும்பையில் தமிழன் தாக்கப்பட்டான். கர்நாடகத்தில் தமிழன் துரத்தப்பட்டான். ஆந்திராவில் தமிழன் அடிக்கப்பட்டான். சென்ற இடமெல்லாம் தமிழன் பயந்து பின்வாங்கினான். பிழைப்புக் கருதி காயம்பட்ட தன் புறமுதுகுடன் ரயிலேறித் தாயகம் திரும்பினான். ஆனால் ஒரு இடம். உலகிலேயே ஒரு இடத்தில் மட்டும் தமிழன் எழுந்து நின்றான். புலியாக நின்றான்.

'தமிழன் என்றொரு இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு' என்கின்ற

பாரதிதாசனின் கவிதையைச் செயலாக்கினான்.

சங்கப்பாடல்களில் தமிழ் மறத்தி முறத்தால் புலியை விரட்டினாள் என்பது புத்தகப் பாடமாக இருக்கிறது. ஆனால் எதிரிக்கும் நிலை வந்தால் அந்த தமிழச்சியே புலியாக மாறுவாள் என்பது வாழ்க்கையின் யதார்த்தப் பாடமாக இருக்கிறது.

பேசிப்பேசியே நாட்டைப் பிடித்தார்கள் இங்கு. பேசாமலே ஆட்சி நடக்கிறது அங்கு. தமிழனுக்கெனப் பேசுவதற்கு பல இயக்கங்கள் இருக்கின்றன. ஆனால் செய்வதற்கு ஒரே ஒரு இயக்கம்தானே இருக்கிறது! உலகின் எந்த மூலைக்குப் போனாலும் நான் தமிழன் என்கிற ஒரு அடையாளம் போதுமே. இந்த முகவரி யார் தந்தது? நீங்கள்தானே அண்ணா...!

தமிழர் மரபில் ஊர்காக்கும் காவல் தெய்வங்களாக முனியசாமியும், அய்யனாரும் ஆயுதம் ஏந்தி ஊரின் எல்லையில் நிற்கிறார்கள். ஆனால் உலக அரங்கில் தமிழனின் மானம் காக்கும் காவலென ஆயுதம் ஏந்தி நிற்பது யார்? நீங்கள்தானே... சிறு தெய் வங்கள் கதையில் வாழ்கின்றன. தமிழ்க் குடும்பங்க ளின் பெருந்தலைவனென நீங்கள் நிஜத்தில் வாழ்கிறீர்கள்.

'காகிதம் செய்வோம் – நல்ல
ஆய்தம் செய்வோம்' என்றான் பாரதி.

எங்கள் அண்ணன்கள் அறிக்கைகள் மூலம் காகிதம் செய்தார்கள். தம்பி நீங்கள்தான் ஆய்தம் செய்தீர்கள். நாங்கள் தமிழுக்காகப் போராட்டம் செய்தோம். நீங்கள்தான் போர் செய்தீர்கள். ஆங்கில மொழியிலும் ஆய்த எழுத்து உண்டென்றால் அது LTTE தானே...!

இலங்கையின் வரைபடத்தை எல்லோரும் கண்ணீர்த்துளியெனப் பார்த்தார்கள். நீங்கள்தான் நாளை மலரும் ஈழத்தின் மகிழ்ச்சிமிக்க தமிழனின் இதயமாகப் பார்த்தீர்கள்.

மானமும் அறிவும் மனிதர்க்கழகு என்ற மந்திரத்தைச் சொல்லித் தந்த நம் தந்தைப் பெரியாரின் கைத்தடிதான் காலத்தின் கட்டாயம் கருதி உங்கள் கைகளில் ஆயுதமாக இருக்கிறது.

போராடும் மனிதனுக்கு ஆயுதமும் ஒரு உறுப்புதான். கலிங்கத்துப் பரணியில், புறநானூற்றில், பாடலில் படித்த தமிழனின் வீரத்தை நிகழ்காலத்தில் நீங்கள் நிகழ்த்திக் கொண்டிருக்கிறீர்கள் அண்ணா.

பெருமையோடும் மகிழ்ச்சியோடும் எங்கள் தம்பிக்கு... தம்பியின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

Tamileelam Archive

## தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு கிடைத்த

# சரியான தலைமை

வணக்கம்,

தேசியத் தலைவர் திரு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் 50வது பிறந்த தினத்திற்கு வாழ்த்துச் செய்தி கொடுப்பதில் எமது அமைப்பு மிக மகிழ்ச்சி அடைகிறது.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தில் மூத்த தமிழ்.' 'தமிழன் என்று சொல்லடா, தலைநிமிர்ந்து நில்லடா' போன்று பல வாக்கியங்களை வெறும் பேச்சாய், காற்றோடு காற்றாய் பல சகாப்தங்களாக உலகம் பூராகவும் தமிழன் பெருமையோடு பேசிய அதேவேளை, தமிழ்மொழி, கலை-கலாச்சாரம், இனம் படிப்படியாக அழிந்து போகும் வேளையிலேயே தமிழரின் பெருமை, சரித்திரம், வீரம்போன்றவற்றை மறுபடியும் உலகில் நிலை நாட்ட பிறந்தவரே தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள்.



ச.வி.கிருபாகரன்

பொதுச்செயலாளர், தமிழர் மனித உரிமைகள் மையம் பிரான்ஸ்.

தேசியத் தலைவர் தனது ஐம்பதாவது வயதில் கால் அடி எடுத்து வைக்கும் இவ் வேளையில், தலைவர் அவர்களுடைய சாதனைகள், நிதானமான மதிநுட்பம், அவதானமான திட்டமிடல், இறுக்கமான ஒழுக்கம், அசையாத நம்பிக்கை, விடாமுயற்சி, எளிமையான வாழ்கை பற்றி நாம் வாசித்து, அறிந்தவற்றை எழுதுவதானால் பல நூற்றுக் கணக்கான பக்கங்கள் எழுதவேண்டும். உண்மையில், தேசியத் தலைவர் அவர்கள் தனது சுயசரிதையை எழுதினால் அன்று, வேறு யாராவது தேசியத் தலைவரின் வாழ்க்கை வரலாறு பற்றி எழுதுவார்களானால், அது நிச்சயம் தலைவரின் உண்மைக் கதைகளாக இருக்கமுடியாது என்பது எமது கருத்து.

உலகில் பல விடுதலை, புரட்சி இயக்கங்கள் தோன்றி, சில வெற்றியுடனும் பல சரியான தலைமையின்றி உடனேயே மறைந்ததும் உண்டு.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு சரியான தலைமைகிடைத்தது மட்டுமல்லாது, உலகில் மற்றைய விடுதலைப் போராட்டங்களின் தலைவர்களுடன் ஒத்துப்பார்க்கும்போது, எமது தேசியத் தலைவரின் வழிகாட்டல் மிக வித்தியாசமானதாக அமைந்துள்ளதை யாரும் வெளிப்படையாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

தமிழீழ மக்களின் விடுதலைப் போராட்டத்தை நடாத்தும் அதேவேளை -தமிழீழ மக்கள் இன்று என்றும் ஒழுக்கமுள்ள, வறுமையற்ற, சீர்குலையாத எதிர் காலத்துடன் வாழவேண்டும் என்பதற்காக-காவற்துறை, நீதித்துறை, நிதித்துறை அத்துடன் பல விதப்பட்ட நலன்பேணும் அமைப்புகள், பாரிய தொழில்நுட்பத் திட்டங்கள் போன்றவற்றை வளர்த்த, உலகில் வேறு எந்த விடுதலை தலைவர்களுக்கும் கிடையாத பெருமை தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரனுக்கே உரியது.

இன்று, சில மேற்கு நாடுகள் உட்பட பலநாடுகளில், பெண்ணுரிமை கேள்விக் குறியாகவே உள்ளது. ஆனால் இன்று எமது தமிழீழ சகோதரிகள், எந்தத் தயக்கமும் இன்றி சம உரிமைகளை தமிழீழத்தில் அனுபவிப்பதைக் பெரும் வல்லரசுகள் கூட கண்டு வியப்படைகின்ற பெருமை திரு பிரபாகரன் அவர்களுக்கு மட்டுமே உரியது.

உலக ஒழுங்கு முறை மாறிய இன்றைய உலகில், குடியாட்சியாக இருந்தாலென்ன முடியாட்சியாக இருந்தாலென்ன, ஐக்கிய நாடுகள் சபையாக இருந்தாலென்ன ஐரோப்பிய ஐக்கிய ஒன்றியமாக இருந்தாலென்ன, பிரான்ஸ் ஜனாதிபதி ஜக்சிறாக்கா இருந்தாலென்ன, பிரித்தானியா பிரதமர் ரொனிபிளேயராக இருந்தாலென்ன-இன்று எவ்வித எதிர்ப்பும், எதிர்த்தரப்பும் இல்லாமல் உலகில் எதுவும் நூறுவித ஆதரவுடன் நிறைவேறியது கிடையாது என்பது சரித்திரம்.

எதிர்ப்பின் அடிப்படை சிறிய விகிதமாக தன்னும் இருக்கும் என்பது உலக ஆய்வாளரின் கருத்து. இதற்கு சுயநலம், இயலாமை, ஒன்றை எதிர்ப்பதன் மூலமே தமக்கு பெருமை தேட முயற்சிப்பது போன்று பல காரணங்கள் உள்ளன.

ஆகையால் சமுத்திரம் போன்ற ஆதரவைக் கொண்ட தேசியத் தலைவரின் சேவை, துளிபோன்ற எதிர்ப்பை பொருட்படுத்தாது, தொடர்ந்தும் தமிழீழ மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற செயற்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

தமிழர் மனித உரிமைகள் மையத்தின் (TCHR) சார்பிலும், அதன் பிரதிநிதிகள் சார்பிலும், தேசியத் தலைவரின் ஐம்பதாவது தினத்திற்கு எமது வாழ்த்துக்களை கூறும் இவ்வேளையில், தலைவர் நீடூழி வாழ வேண்டும் என்றும், இவரின் மதிநுட்பம் வாய்ந்த சேவை தொடரவேண்டுமென்றும் வாழ்த்துகிறோம்.

நன்றி.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# புதுயுகத் தமிழர்



காப்பியக்கலவைகள்
கடலிலே மிதந்தது
இலக்கியமும் இதிகாசமும்
துலங்க மறுத்தது
புராணங்களின் மரணங்களாய்
நீராடும் பூமியிலே
போராட்டமாகியது.
வானமிடிந்து
விண்மின்கள் தவிப்பதாய்
ஒரு காட்சி !
கடலலை கொதித்து
உடலவிந்த மீன்களாய்
மறுகாட்சி !!
இத்தனைக்கும் சாட்சியில்லை
இத்தரைத் தமிழன் சாவுகள் போல
வயல்கள் யாவும் நெற்கதிர்கள்
வீதிகள் தோறும் விளக்குகளாய்
செழித்திருந்த கிராமங்கள்
அழிக்கப்பட்டது
பனிக்காட்டில் தொலைந்த
நெருப்புத்தணல்களாய்
இடம் புலம் பெயர்வுகள்
திடம் கொண்ட தமிழனை
தூரத்திற்கு விரட்டிச் சென்றது
முகவரி இழந்து போகிலும்
முத்திரை அடையாளங்களான
கலை கலாச்சார பண்பாடுகளையும்
சுமந்து நடந்தவன் தமிழன்
துன்ப அடவியினிடையே
அன்னியர் அமிழ்த்திய போதும்
புதுயுகத்தமிழனாய் நிமிர்ந்தான்
விதைகளாய் புதைந்தவன்
விருட்சங்கள் ஆனான்
கிளைகள் நறுங்கிய போதும்
விரைந்து துளிர்ந்தான்
அமைதி வாழ்விற்காய்
தீமையழிக்கத் துணிந்தான்
புதுயுகத்தமிழன்
உலக மயமாக்கலக்கும்
உலக அரசியலுக்கும்
எடுபட்டுப்போகாது
தலை நிமிர்ந்து நிற்கின்றான் !
கெமிக்கலுக்காய் றுகாண்டாவும்
தொலைபேசி மூலப்பொருளிற்காய்
கொரியாவும் அடிமைப்படுத்தப்பட்டது
வல்லரசுகளின் சூழ்சியால்?
இலங்கையின் ஈழத்து அரிசியில்
மதுபானம் தயாரிக்கும் திட்டம்
புதுயுகத்தமிழனால் உடைக்கப்படும்
எட்டுக்கோடி தமிழர் கொடி
கட்டிப்பறக்கும் உலகில்
உன்னதமான தலைமைத்துவமும்
உயிரை அர்ப்பணிக்கும் மக்களும்
புதுயுகம் நோக்கிய பயணத்தில்
புதிய தமிழ் உலகம் புறப்படும்
பயணத்தின் நிறைவாக
நிஜமாகத் தமிழ் நிமிர்ந்து நிற்கும்
பாரதியின் சொல்லில் வீரமடா
பிரபாவின் செயலிலும் தீரமடா
தமிழ் மண் விடியலுக்காய்
புதிய காவிய சரிதம் படைக்க
புதுயுகத்தமிழர் புறப்பட்டு விட்டனர் !

யோ.ஜஸ்ரின்

கவிஞர்,
தமிழீழம்.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# இனத்திற்கு வந்த ஆபத்தை தனது தலையில் சுமந்த தலைவர்

10.10.87 இந்தியப் படைகள் புலிகள் மீது திடீரெனப் போர் தொடுத்த நாள். இத் திடீர்ப் போர்ப்பிரகடனத்திற்கு உடனடிக் காரணங்கள் என்று எதுவும் இருக்கவில்லை. எல்லாம் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டவைதான்.

தலைவர் பிரபாகரனைக் கொன்றுவிட்டு புலிகள் இயக்கத்திற்குச் சமாதி கட்டவேண்டும் என்பதுதான், இந்திய ஆளும் வர்க்கத்தின் ஏகோபித்த விருப்பம். இதற்கு ஆழமான காரணங்கள் பலவற்றை அது வைத்திருந்தது.

'திராவிட எழுச்சி' என்ற சொற் பிரயோகத்தால் அழைக்கப்பட்டு வந்த தமிழ்த் தேசிய எழுச்சி என்ற விடயம், காலாதிகாலமாக இந்திய ஆளும் வர்க்கத்தை அச்சுறுத்திக்கொண்டே வந்தது.

இந்த நிலையில், தமிழ் நாட்டில் செத்துக்கொண்டிருந்த தமிழ்த் தேசியத்தைப் பார்த்து அகமகிழ்ந்தபடியிருந்த இந்திய ஆளும்வர்க்கம், அது தமிழீழத்தில் தலைவர் பிரபாகரனின் தலைமையில் புது வடிவம் எடுத்து வீறுடன் வளர்ந்து வந்ததைத் சரியாகவே இனங்கண்டு, அஞ்சத் தொடங்கியது.

எனவே, தலைவர் பிரபாகரனைத் தனது முக்கிய எதிரியாக இந்திய ஆளும் வர்க்கம் கருதத் தொடங்கியது.

தமிழீழத்தில் சகோதரச் சண்டை ஒன்றை உருவாக்கி, ஆழவேரூன்ற முயன்ற தமிழீழ தேசியத்தைக் குழந்தைப் பருவத்திலேயே கொலை செய்ய, இந்திய ஆளும் வர்க்கம் முடிவெடுத்தது.

முதலில் அரசியல் வழிமுறைகள் மூலம் முயன்றுபார்க்க விரும்பியது. இந்திய - இலங்கை ஒப்பந்தம் என்ற அரசியல் சதுரங்க விளையாட்டின் மூலம், நயவஞ்சகமாகத் தமிழீழத் தேசியத்திற்குக் குழிபறிக்க முயன்றது.

ஆனால், அந்த அரசியல் சதுரங்க அரங்கை புலிகள் இயக்கம் திறமையாகக் கையாண்டதுடன், இந்திய ஆளும்வர்க்கத்தின் உண்மைச் சொரூபத்தையும் தமிழீழ மக்களுக்குத் தோலுரித்துக் காட்டத் தொடங்கியது.

மெது மெதுவாக தமிழீழ மக்களும் இந்தியாவின் கபடத்தனத்தை உணரத்தொடங்கினர்.

இதை வளரவிட இந்திய ஆளும் வர்க்கம் விரும்பவில்லை. எனவே, ஏற்கனவே முடிவு செய்துவைத்திருந்த அடுத்த கட்டமாகிய போருக்குச் செல்ல, அது முடிவெடுத்தது.

புலிகள் மீது நேரடியாகப் போர்ப் பிரகடனம் செய்யுமுன், வெளி உலகிற்கும் தமிழீழத்திற்கும் இடையிலிருந்த செய்தித் தொடர்பைத் துண்டிக்க விரும்பி ஈழமுரசு, முரசொலி பத்திரிகை நிறுவனங்களையும், நிதர்சனம் ஒளிபரப்புக் கோபுரத்தையும் குண்டு வைத்துக் தகர்த்து, போர் முரசு கொட்டியது.

இந்தியப் படைகளின் பிரதான இராணுவ இலக்காக தலைவர் பிரபாகரனே இருந்தார்.

படைப்பலத்தை பயன்படுத்தி தலைவர் பிரபாகரனை அழித்து, புலிகள் இயக்கத்தின் பற்களையும்,

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

நகங்களையும் பிடுங்கி எறிந்துவிட்டுத் தமிழீழ தேசியத்தைத் தூக்கி விடுவது என்று, இந்தியா முடிவு செய்தது.

ஆனால், இந்திய இராஜதந்திரிகள் கணித்த கால எல்லைக்கும் அப்பால் போர் நீண்டு சென்றது. அழிவுகளும் இழப்புகளும் பெருமளவில் அதிகரித்தன.

இந்தியப் படைப்பலத்திற்கு அஞ்சி, தனது உயிரைப் பாதுகாப்பதற்காக தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழ் இனத்தின் அரசியல் உரிமைகளை விட்டுக்கொடுத்து விடுவார் என்று எதிர்பார்த்த இந்திய ஆளும்வர்க்கத்திற்கு, அது நடைபெறாமல் போனது ஆச்சரியத்தையும், அதேவேளை ஆத்திரத்தையும் கொடுத்தது.

எனவே படைப் பலத்துடன் சேர்த்து ஒரு அரசியல் பேரத்திலும் இந்தியா இறங்கியது.

போரை நிறுத்தி ஆயுதங்களை ஒப்படைக்கத் தலைவர் முன்வருவாரானால், பெருந்தொகைப் பணமும் மற்றும் சலுகைகளும் அவருக்கு வழங்கப்படும் என, இந்திய அரசு கூறியது.

நிபந்தனைகளை ஏற்றால் புலிகள் இயக்கத்திற்கு தருவதாக வாக்களிக்கப்பட்ட தொகை கொஞ்சநஞ்சமல்ல. மக்களின் புனர்வாழ்வுக்கென்று 500 கோடி ரூபாவும், இயக்கத்திற்கென்று 200 கோடி ரூபாவும் வழங்கத் தயாராக இருப்பதாக, இந்தியாவில் இருந்த புலிகளின் பிரதிநிதிகளிடம் இந்திய அரசு உறுதியளித்துக் கூறியது.

இந்திய அரசின் சார்பில், அதன் உளவுத்துறையான 'றோ' வின் பிரதம அதிகாரி கேணல் வர்மா அவர்கள் பேரத்தில் ஈடுபட்டார்.

இந்தப் பெருந்தொகைப் பணத்தை வைத்துக்கொண்டு தொழிற்சாலை போடலாம், மற்றும் முதலீடுகளைச் செய்து வருமானம் சம்பாதிக்கலாம், அத்துடன் இந்தப் பணத்தை வீசியெறிந்து தேர்தலையும் வென்று பதவியிலும் அமரலாம், அதைப் பயன்படுத்தி மேலும் மேலும் சுகங்களையும் அதிகரிக்கலாம் என்று இந்தியப் பிரதிநிதியான கேணல் வர்மா தலைவருக்கு ஆசை காட்டினார். அது மட்டுமல்ல, ஆயுதங்களை ஒப்படைத்தாலும் தலைவரின் மெய்ப்பாதுகாப்பிற்கென்றும் மற்றும் தளபதிகளினது பாதுகாப்பிற்கென்றும் தேவையான ஆயுதங்களை வைத்திருக்கலாம் என்றும், சலுகைகளை அள்ளி வீசினார்.

சலுகைகளையும் பணத்தையும் அள்ளி வீசுவதாகக் கூறிவிட்டு இந்தியா சும்மா இருக்கவில்லை. அந்தச் சலுகை வலைக்குள் தலைவரை விரைவாக வீழ்த்துவதற்காக, அவருக்கெதிரான இராணுவ அழுத்தத்தையும் இந்திய அரசு அதிகரித்தது.

மணலாற்றுப் பகுதியை முற்றுகையிட்டு, இராணுவ நடவடிக்கையை இந்தியப்படைகள் தீவிரப்படுத்தின. தலைவரின் இருப்பிடம் என்று கருதிய பகுதிகளெங்கும் இந்திய வான்படை 200 கி.கி. குண்டுகளை வீசத் தொடங்கியது. அடர்ந்த காடுகள், திறந்த வயல்வெளிகளைப் போல மாறும் அளவுக்கு - பாரிய விருட்சங்களைத் தகர்த்தெறிந்து அங்கிருந்தோரை அஞ்சச் செய்யுமளவுக்கு - அப்போது பாரிய குண்டுகள் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. இப்பாரிய குண்டுகளைத் தலைவரின் இருப்பிடப்பகுதிகள் மீது வீசிக்கொண்டு, இந்தியாவில் இருந்த புலிகளின் பிரதிநிதிகளிடம் 200 கி.கி.குண்டுகளின் தன்மைகளை விளக்கியபடி, 'விரைவில் தலைவர் சாகப்போகின்றார். அதற்கிடையில் கோரிக்கைகளை ஏற்கச் சொல்லித் தகவல் அனுப்புங்கள்' என்று, இந்திய அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்தனர்.

என்ன செய்தாவது தலைவரைப் பாதுகாத்துவிட வேண்டும் என்பதில் அக்கறைகொண்ட எமது மூத்த உறுப்பினர்களான அந்தப் பிரதிநிதிகள், கோரிக்கைகளை ஏற்கும்படி தொலைத்தொடர்புச் சாதனம் மூலம் தலைவரிடம் மன்றாடினர். அக்கோரிக்கைகளை ஏற்பதால் இயக்கத்திற்கு நட்டமேற்பட்டுவிடப் போவதில்லை என்று எடுத்து விளக்கினர். இயக்கத்திற்கென்று இந்திய அரசு தருவதாக ஒப்புக்கொண்ட 200 கோடி ரூபா என்பது, அந்த நேரம் எமது இயக்கத்திடம் இருந்த ஆயுதங்களின் மொத்தப் பெறுமதியைவிடப் பல மடங்கு அதிகமானது என்ற உண்மையைச் சுட்டிக்காட்டி, 'ஆயுதங்களை ஒப்படைத்தால் நட்டமேற்படப் போவதில்லை, தேவை ஏற்பட்டால் அப்பணத்தைப் பயன்படுத்தியே ஆயுதங்களைக் கொள்வனவு செய்யலாம்' என்று வாதிட்டனர்.

> இந்திய வான்படை குண்டுகளை அள்ளிக்கொட்ட, இந்திய இராணுவம் முற்றுகையை இறுக்கி புலிகளின் அசைவியக்கத்தைத் தடுத்து புலிவீரர்களை மூச்சுத்திணற வைத்துக்கொண் டிருந்தது.

இதேவேளை, தலைவரோடு தோளோடு தோள் நின்றபடி களமாடிக்கொண்டிருந்த தளபதிகளும் சண்டைக் களத்தின் கடுமையை நன்றாகவே உணர்ந்திருந்தனர்.

இந்திய வான்படை குண்டுகளை அள்ளிக்கொட்ட, இந்திய இராணுவம் முற்றுகையை இறுக்கி புலிகளின் அசைவியக்கத்தைத் தடுத்து புலிவீரர்களை மூச்சுத்திணற வைத்துக்கொண்டிருந்தது. இதனால், மணலாற்றுக் காட்

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

டுக்குள் பட்டினியும் -நோயும்-சாவும் போட்டி போட்டுக்கொண்டு, தலைவர் உட்பட புலிவீரர்களை வதைத்தன.

இந்த நிலையில் தலைவரைப் பாதுகாக்க முயன்ற தளபதிகள் மணலாற்றுக் காட்டைவிட்டு வேறிடம் செல்லும்படி தலைவரிடம் வேண்டினர்.

வேறிடம் செல்வதால் மட்டும் உயிர்ப்பாதுகாப்பு ஏற்பட்டுவிடப்போவதில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய தலைவர் அவர்கள், தளபதிகளின் வேண்டுகோள் களை ஏற்க மறுத்தார்.

அந்தக் காடு அடங்கிலும் பரந்து கிடந்த பழைய கால நினைவுச் சின்னங்களைச் சுட்டிக்காட்டி விட்டுத் தலைவர் சொன்னார்,

“இது பண்டாரவன்னியன் உலாவித் திரிந்த காடு. இந்தக் காட்டில் இருந்தபடியே நான் போராடி வெல்வேன் அல்லது வீரச்சாவடைவேன்” என்று வைராக்கியமாகக் கூறிவிட்டு, சண்டையை வழிநடாத்துவதிலேயே முழுக்கவனம் செலுத்தினார்.

இவ்விதம் இந்தியாவில் இருந்த எமது மூத்த உறுப்பினர்களும், களத்தில் நின்று போராடிக கொண்டிருந்த தளபதிகளும் தலைவரைப் பாதுகாக்கப் பிரயத்தனப்பட்டனர். ஆனால், தலைவரது எண்ணமெல்லாம் தனது சொந்தப் பாதுகாப்பின் மீதோ அல்லது தருவதாக வாக்களிக்கப்பட்ட சலுகைகள் மற்றும் பணத்தின் மீதோ இருக்கவில்லை, அவரது முழுக்கவனமும் எமது இனத்தின் அரசியல் உரிமைகள் மீதே இருந்தது.

புனர்வாழ்வுக்கான பணத்துடன் மட்டும் நின்றுவிடாது, அரசியல் உரிமைகளையும் உறுதிப்படுத்தும் வகையில் எழுத்துமூல உறுதி தரவேண்டும் என்று இந்திய அரசைக்கோரும்படி, பேச்சுவார்த்தை பிரதிநிதிகளிடம் தலைவர் பணித்தார். இந்திய அரசின் சார்பில் அரசியல் பேரத்தை நடாத்திக் கொண்டிருந்த கேணல் வர்மா இதற்கு உடன்பட மறுத்தார். ‘ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டு பணத்தை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள், தமிழ்மக்களுக்கு உரிமை பெற்றுக்கொடுக்கும் விடயத்தை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம்' எனப் பதில் கூறினார்.

ஒடுக்கப்படும் இனத்தின் தலைவர்களுக்கு வசதிகளையும் சலுகைகளையும் வாரி வழங்கி அவர்களை வளர்ப்பு நாய் நிலைக்கு ஆளாக்கிவிட்டு அந்த இனத்தின் எழுச்சியை நசுக்குவது அல்லது இதற்கு உடன்பட மறுத்தால் அந்தத் தலைவர்களுக்கு எதிரான அழுத்தங்களைப் பிரயோகித்து அவர்களை அடிபணியச் செய்து, அவர்கள் மூலமாக அந்த இனத்தின் அடிமைச் சாசனத்தை எழுதுவிப்பது அல்லது அழிப்பு வேலைகளைச் செய்து அந்த இனத்தைப் பலவீனப்படுத்திவிட்டு, அதன்மேல் அரைகுறைத் தீர்வுகளைத் திணிப்பது... இவைதான் காலாதி காலமாக ஏகாதிபத்தியவாதிகளும் ஆக்கிரமிப்புச் சக்திகளும் வெற்றிகரமாகச் செயற்படுத்தி வந்த-வருகின்ற சித்தாந்தங்கள் ஆகும்.

ஆனால், இந்த ஏகாதிபத்திய சித்தாந்தங்கள் எதுவுமே, தலைவரிடம் எடுபடவில்லை.

சலுகைகளைக் கண்டு வாய் பிளக்கும் தலைவர்களிடமும், தனதும் தனது குடும்பத்தினதும் உயிர்களுக்கு அஞ்சி ஒரு தேசியத்தின் உயிரை அழியவிட விரும்பும் தலைவர்களிடமும்தான், அந்தச் சித்தாந்தம் எடுபடும்.

படைப்பலத்திற்கு அடிபணிந்து - உயிருக்கு அஞ்சி -தமிழினத்தின் அரசியல் உரிமைகளை விட்டுக் கொடுத்தார் என்ற வரலாற்று அவச்சொல்லை ஏற்க, தலைவர் பிரபாகரன் தயாராக இருக்கவில்லை. அதற்குப் பதிலாகச் சாவையும், பட்டினியையும், அழிவையும் ஏற்கவே அவர் தயாராக இருந்தார்.

தமிழ் இனத்திற்கு நிரந்தர விடுதலையைப் பெற்றுக் கொடுப்பதே தலைவரின் இலட்சியம். அது முடியாவிட்டாலும், ‘எவர்க்கும் அடிபணியாது விடுதலை கிடைக்கும்வரை தொடர்ந்து போராடு' என்ற செய்தியையே அடுத்த சந்ததிக்குக் கொடுக்க அவர் விரும்பினார். எனவேதான் இந்திய அரசு கொடுத்த அனைத்து நிர்ப்பந்தங்கள், ஆபத்துக்கள் மத்தியிலும் தப்பிப்பிழைப்பதற்கு வழி ஒன்று இருந்த நிலையிலும், தலைவர் அவர்கள் ஆபத்தை விரும்பித் தேர்ந்தெடுத்தார் என்பது, எமது இன வரலாற்றில் முதற் தடவையாக நடந்துள்ளது.

இதுவரை நாளும் தமிழினத்தின் தலைவர்களாக இருந்தவர்கள் விட்ட தவறு யாதெனில், தங்களுக்கும் தமது குடும்பத்தவர்களுக்கும் வரும் கஷ்டங்களை - ஆபத்துக்களை -நீக்குவதற்காக, இலட்சியத்தை - இனத்தை - எதிரிக்கு விற்றுவிட்டு அதன் பின்னர், அதற்கு நியாயங்கள் கற்பிப்பதிலேயே காலத்தைக் கழித்து வந்தனர்.

இந்தப் பழைய அரசியல் மரபுக்கு முரணாக தலைவர் பிரபாகரனின் செயற்பாடு அமைந்திருந்தது. எமது இனத்திற்கு வரும் எந்த ஆபத்துக்குமெதிராகப் போராடி வெல்வது அல்லது அப்போராட்டத்தில் வீரச்சாவடைவதே சிறந்தது என்ற விடயமே இந்தச் சம்பவத்தின் வாயிலாக எதிர்காலச் சந்ததிக்குத் தலைவர் பிரபாகரன் கொடுத்த செய்தியாகும்.

சலுகைகள், பணம் என்பவற்றைக் கொடுத்து இந்தியா எதை வாங்க முயற்சித்தது என்ற உண்மையையும், அதன் அபாயத் தன்மையையும், இந்திய மண்ணில் இருந்தபடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட எமது பிரதிநிதிகளுக்குச் சூசகமாகத் தெரிவிப்பதற்காக, தொலைத்தொடர்புச் சாதனம் மூலம் தலைவர் இப்படிச் செய்தியனுப்பினார்.

“நான் செத்த பிறகு, யாரென்றாலும் மொத்தமாகவோ சில்லறையாகவோ, இயக்கத்தையும் இனத்தையும் யாரிற்கும் விற்கலாம்”.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# சரித்திரம் படைத்தவா!

உலக வரலாறின் வெவ்வேறு காலப் பகுதிகளில் மனித குலத்தின் வாழ்க்கையை மாற்றும் சம்பவங்கள் பலவும் இடம் பெற்றுள்ளன. இச் சம்பவங்களே நாம் படிக்கும் சரித்திர நூல்களில் இடம் பெறுபவை. இச்சரித்திர முக்கிய காலங்களில் கிடைப் பதற்கரிய அனுபவங்களுடன் வாழ்ந்தவர்கள் உண்மையிலேயே பாக்கியம் செய்தவர்கள்.

இன்று இலங்கைத் தீவில் ஒரு சரித்திரம் படைக் கப்படுகின்றது. இப் புனித காலத்தில் பிறந்து வாழ்வதற்கே நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அதிலும் இச்சரித்திரப் படைப்பில் தம்மை இணைத்துக் கொண்டவர்களோ பெரும் புண்ணியம் படைத்தவர்கள். புராணங்களையும் சேர, சோழ, பாண்டியர்களின் ஆட்சிக் கால மாண்புகளையும் சுவடிகளில் படித்துவிட்டு ஆகா என்று புகழும் நாம் எமது காலத்திலேயே, உலகமே வியப்போடு நோக்கும் சரித்திரம் ஒன்று படைக்கப் படுவதை காணத் தவறிவிடுகின்றோம். எமது மத்தியிலேயே பிறந்து, எமது அனுபவங்களையே பகிர்ந்து, எமது உணர்வுகளையும் ஆர்வங்கங்களையும் அறிந்து, எம்மவர்களின் அடிமைத்தனத்தை உடைத்து எமது இனத்துக்கே விடிவு வரவேண்டும் என்ற சிந்தனையோடு செயற்பட்டு, அந்த சிந்தனைக்கு வடிவம் கொடுத்து, நீண்ட கால யுக்தியோடு, தூர நோக்கோடு, தீர்க்கதரிசனத்தோடு செயற்படும் ஒரு தலைவனை நாம் பெற்றிருப்பது எமக்கு கிடைத்த ஓர் வரப் பிரசாதம்.

ஏட்டிலே படிக்காவிட்டாலும் மக்களோடு பிணைந்து, தனது மக்களின் உணர்வுகளைப் பகிர்ந்து, அந்த மக்களின் விடிவுக்காக, அந்த மக்களின் நிரந்தர நல் வாழ்வுக்காக, நவீன சிந்தனையோடு, யுக்திகளை வகுத்து செயற்படும் ஒரு தலைவன் கிடைத்ததில் நாம் பெருமையடைகிறோம். அரசியல் இலாபங்களுக்காகவும் தனிப்பட்ட இச்சைகளுக்காகவும் போட்டி போடும் உலக தலைவர்களுக்கு மத்தியிலே, தூய சிந்தனையோடு, தான் எடுத்த காரியத்தை செயற்படுத்த சிதறாத உன்னிப்போடு, தனது பாதையிலே துளி கூட மாறாமல் செயற்படும் எமது தலைவன் எமக்குக் கிடைத்த அளப் பெரிய சொத்து.

போராட்ட வடிவமாயிருந்தாலென்ன, அதை வழி நடத்தும் நெறியாயிருந்தாலென்ன, மக்களின் வாழ்க் கைக்குத் தேவையான திட்டங்களாயிருந்தாலென்ன, அனைத்தையும் தானாகவே சிந்தித்து, சிந்தனையை வடிவாக்கும் மகத்தான செயற்றிறனைக் கொண்ட ஒருவனோடு அவனது இலட்சியங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடியதாயிருப்பது எமக்குக் கிடைத்துள்ள அரிய பாக்கியமாகும், இன்று விடுதலைப் புலிகள் என்ற அமைப்பு ஒரு இராணுவ போராட்ட அமைப்பு என்ற நிலையைக் கடந்து ஒரு இலட்சிய அரசியலமைப்பாக, நியாயமான நிர்வாக சேவையாக, ஊழலற்ற நிதி நிர்வாகமாக, மக்களைப் பேணும் காவற்துறையாக, நீதி வழங்கும் மன்றாக, மக்களின் சமூக தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரிவாக, ஓர் சக்தி வாய்ந்த கடற்படையாக, வான் எல்லைகளைப் பாதுகாக்கும் வான் படையாக, ஓர் அரசிற்குத் தேவையான அனைத்து வடிவங்களுமாக ஓர் போராட்ட பின்னணியிலேயே



**கலாநிதி ஜே.மகேஸ்வரன்**

அரசியல், சமூக செயற்பாட்டாளர். அவுஸ்திரேலியா.

வளர்ந்துள்ளது என்றால் அது இந்த தலைவனின் சிந்தனையிலிருந்து உருவானதே.

இள வயதிலே விளையாட்டு போக்கோடு, நாட்களைக் கற்பனையோடு சிந்திவிடும் பருவத்திலேயே, இளைஞர்களை அணிவகுத்து, அம் மனங்களை நெறிப்படுத்தி, ஒருங்கிணைத்து, சீரிய சிந்தனையுடன் தமது சந்ததி மடிந்தாலும் அடுத்த சந்ததியாவது சுதந்திரமாகவும் நிம்மதியாகவும் வாழவேண்டும் என்று தம்மையே அர்ப் பணிக்கத் தயாராக்கி முன்னின்று வழி காட்டும் இத் தலைவனின் காலத்தில் அவனது இலட்சியங்கள் கை கூடவேண்டியது மிகவும் முக்கியம். உலக சக்திகளின் அழுத்தங்களுக்கு மத்தியிலும் சிந்தனை பிசகாத செயற்பாடு கொண்ட ஒரு தலைவன் எமக்கு இன்னுமொரு யுகத்தில் கிடைப்பான் என்பது நிச்சயமாக நடக்கப் போவதில்லை.

நாம் வாழ்வது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த காலம். சரித்திரம் படைக்க, எம்மை சரியான வழியில் இட்டுச் செல்ல, எமக்குக் கிடைத்திருக்கும் தலைவன் பிரபாகரன். இவனது காலத்திலே இவனுடன் ஒரு கல்லையேனும் தூக்கி வைத்து இவனது எண்ணத்தில் நிறைந்துள்ள தமிழீழம் என்ற அரண்மனையைக் கட்டியெழுப்ப எமக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமானால் அது பல கோவில்களைக் கட்டியதற்குச் சமமாகும்.

ஐம்பது அகவைகளை தாண்டி விட்டாலும், தமிழீழம் என்ற அகத்தை கட்டி முடிக்கும் வரை உனது பணிகள் ஓயப் போவதில்லை. உனது எண்ணங்கள் கூடி திண்ணமாகி எம்மனைவருக்கும் திசை காட்டியாக நீ தொடர்ந்தும் நீடூழி வாழ எனது வாழ்த்துக்கள்.

நீ படைப்பது சரித்திரமல்ல...
நீயே ஒரு சரித்திரம்.

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

# A Skilful Statesman

The greatest threat to human character and fulfilment is the contemporary world wide destruction of great human cultures created from the cumulated experience, contribution, wisdom and folly of millions of people over thousands of years. The Tamil culture, one of the oldest, largest, and most invaluable embodiments of the human experience, a treasure for all peoples, is among the most endangered.

As has often been true of ancient cultures under attack, the Tamils have produced a hero worthy of their cause in which he struggles.

Velupillai Prapakaran will be half a violent century old on November 26, 2004. Already his achievements for the Tamil's are legendary.

While still a child, he felt the violent oppression of his people and decided the Ghandian way could not save them. Among his earliest acts, he took up arms to free the Tamils of Sri Lanka. He learned to use arms well and against great odds succeeded time and again toward the goal of liberation.

What other leaders in the great struggles of the last century began so young, worked with so little, organized so relentlessly, sacrificed so much of a personal life, faced such overwhelming force, survived so many perilous engagements and secured so much in land and rights and dignity for so small a minority?

Having emerged victorious over extreme adversity, to a place from which his people could maintain their own institutions, free, independent, and defensible, occupying close to a fair and proper share of the island where they live, Prapakaran moved from military action to a difficult diplomatic cease fire, now approaching the beginning of its fourth year, in which he revealed skills as a statesman that equal his skills as a soldier. Earning international support and with the solid backing of the Tamil population manifested in the April 2004 elections, Prapakaran has demonstrated political skills that promise autonomy to the Tamils in northeast Sri Lanka within a national system of government for all Sri Lanka that can bring peace and prosperity to the island and preserve the precious culture of the Tamils for the benefit of humanity.

The many achievements of Velupillai Prapakaran hold great hope that the best is yet to be for the wonderful Tamil and their neighbors in Sri Lanka.



**Ramsey Clark**

Former Attorney General.
U.S.A

Dated: October 29, 2004
New York.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# வல்லமைமிக்க இராஜதந்திரி

மனித சமுதாயத்தியத்திற்கும் அதன் பூரணத்துவத்திற்கும் மாபெரும் அச்சுறுத்தலாக இருப்பது அதன் சமகாலத்தில் உலகெங்கும் நடைபெறும் ஒன்றிணைக்கப்பட்ட அனுபவங்களால் உருவாக்கப்பட்ட பாரிய கலாச்சார அழிவுகளும் அதன் கொடுப்பனவுகளும் பல ஆயிரம் வருடங்களாக உருவான கோடிக்கணக்கான மக்களின் அறிவும் அறிவீனமுமே ஆகும். ஒரு பண்டைய பாரம்பரிய விலை மதிப்பற்ற மனித அனுபவங்களால் உருவாக்கப்பட்ட எல்லோராலும் பொக்கிஷமாகப் போற்றப்படுகின்றதுமான தமிழ்க் கலாச்சாரம் மிகப் பெரும் அழிவை எதிர் நோக்குகின்றது. பாரம்பரிய கலாச்சாரங்கள் அடிக்கடி தாக்கப்படுவது உண்மையாகிக் கொண்டிருக்கும் இவ் வேளையில் தமிழர்கள் தமது விடுதலைக்காக போராடிக் கொண்டிருக்கும் ஒரு மாபெரும் வீரத் திருமகனை உருவாக்கி உள்ளார்கள்.

வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் அரை நூற்றாண்டு வயதை கார்த்திகை மாதம் 26ம் திகதி 2004ஆம் ஆண்டு பூர்த்தியாகும் இத் தருணத்தில் அவர் தமிழ் மக்களுக்கு ஆற்றிய அளப்பெரும் சாதனைகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

தனது மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை நடவடிக்கைகளை உணர்ந்து காந்தீய வழி அவர்களை காப்பாற்ற முடியாதென முடிவு செய்தார். அதனால் அவர் தமிழரின் விடுதலைக்காக தனது முதற்கட்ட நடவடிக்கையாக ஆயுதம் எந்தினார். அவர் மிகுந்த பலம்மிக்க எதிரிகளை தக்க தருணத்தில் வெற்றி கொள்ளவும் விடுதைலை இலக்கை அடைவதற்கும் ஆயுதங்களைப் பிரயோகிப்பதிலும் தகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார்.

சிறுபடை அமைப்பு கட்டுப்பாட்டுடன் கூடிய ஒழுங்கமைப்பு சொந்த வாழ்க்கை அர்ப்பணிப்பு நாசகாரப் படைஎதிர்கொள்ளல் அபாயகரமான கட்டங்களிலும் நிலைத்து நிற்கும் வல்லமை - அத்துடன் தன் மக்களை நிலைப்படுத்தியமை - சிறுபான்மை இனத்தவரின் உரிமைக்கும் கௌரவத்திற்கும் குரல் கொடுத்தமை இது போன்று இளம் பிராயத்தில் இருந்தே போராடத் தொடங்கிய வேறு தலைவர்கள் எவராவது கடந்த நூற்றாண்டில் இருக்கிறார்களா?



ரம்ஷி கிளார்க்

முன்னாள்
சட்டமா அதிபர்,
அமெரிக்கா.

இறுதியான துரதிஸ்டமான காலகட்டத்தை கடந்து வெற்றிப் பாதையில் முன்னேறும் போது தனது மக்கள் சுதந்திரமான தனித்துவமான தற்பாதுகாப்புடன் கூடிய தத்தமது நிர்வாக இயந்திரங்களை நிர்வகிக்கவும் தமது சொந்த இடங்களில் சமத்துவமாக வசிப்பதற்காக பிரபாகரன் அவர்கள் தனது இராணுவ ரீதியான நிலைப்பாட்டிலிருந்து சுலபமற்றதும் இராஜதந்திரமான போர் நிறுத்தத்திற்கு உடன்பட்டார். போர் நிறுத்தமானது அதனது நான்காவது வருட தொடக்கத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் வேளையில் திரு பிரபாகரன் அவர்கள் தான் ஒரு திறமை மிக்க படை வீரர் மட்டுமன்றி ஒரு வல்லமைமிக்க இராஜ தந்திரி என்பதையும் நிருபித்தார். சர்வதேச ஆதரவும் சித்திரை மாதம் 2004ஆம் ஆண்டு தேர்தல் பின்னனியில் தமிழ் மக்களின் ஏகோபித்த பக்க பலமும் பிரபாகரன் அவர்களை அரசி யல் ரீதியான செயற்பாட்டின் முலம் தமிழ் மக்களின் தனித்துவத்தை வடக்கு கிழக்கு இலங்கையில் ஒரு தேசிய அமைப்புடன் கூடிய சுயாட்சியை உருவாக்க வழி வகுத்தது. இதன் முலம் சமாதானமும் சுபீட்சமும் இலங்கைத் தீவில் உருவாகி விலைமதிப்பற்ற தமிழர்களின் கலாச்சாரமும் பேணப்பட்டு மனித மேம்பாட்டிற்கு வழிவகுக்கப்படும்.

திரு வேலுப்பிள்ளை பிரபாகரனது பல்வேறு சாதனைகள் எதிர் காலத்தில் அவரின் மிகப்பெரிய சாதனையொன்றின் எதிர்பார்ப்பிற்கு அற்புதமான தமிழ் மக்களையும் அவர்களது அயலவர்களையும் உள்ளாக்கும்?

Tamileelam Archive

## Velupillai Prabakaran

# Living Legend

Writing about a revolutionary leader and a military genius like Velupillai Prabakaran of the Liberation Tigers of Tamil Eelam (LTTE) is not an easy matter. He has so many outstanding achievements so much so it is rather difficult to emphasize one or two aspects without touching on other related ones. While governments and forces against the genuine aspirations of Tamils have castigated him in extreme terms to the people of Tamil Eelam and the Tamil Diaspora Prabakaran stands out as one of the great leaders of all times. He will be always remembered for generations to come as supreme individual who organized and galvanized the Tamils to fight not only against racist oppression but also to yearn for the creation of a separate state-Tamil Eelam. It is the utter dedication and commitment of Prabakaran and his close aides that have given much hope for Tamils all over the world to stand up as equals to others.



**Prof P.Ramasamy**

Centre for History, Political Science and Strategic Studies National University of Malaysia.

The struggle for the coveted prize of Tamil Eelam has invariably involved both the direct and indirect participation of the Tamil Diaspora. The LTTE's constant pronouncements for the need for Tamil Diaspora support and Prabhakaran's rationalization of Tamil Eelam as the ultimate expression of global Tamil solidarity has invariably provided great hope for Tamils in places like Malaysia, Singapore, Mauritius, South Africa and not to speak of Tamil Nadu, Europe and North America. In a more particular sense, the discrimination and marginalization of Tamils in these places have naturally influenced them to become sympathetic to the larger cause of Tamils in the north and east of the island of Sri Lanka. Needless to say, some sections of the Tamil Diaspora have gone to the extent of providing material and moral support to the cause of the LTTE. Overseas Tamils betrayed by their own leaders and faced with extreme ethnic and religious discrimination secretly wish they have a leader like Prabhakaran to take up their cause.

Since the start of the Eelam War, the Tamil Diaspora has been closely following the events in the island. In the 1980s and 1990s, many

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamil Archive

demonstrations have been organized to support the cause of the LTTE. During these demonstrations, Tamils have proudly displayed pictures and portraits of Prabakaran so much so raising concern about the radicalization of Tamils of South Indian origin in places like Malaysia, Singapore and South Africa have a great sympathy for the LTTE in general and the courageous leadership of Prabakaran. In the past, these segments of the Tamil population looked to leaders in Tamil Nadu for cultural leadership, but now they are turning more and more to the leadership of the LTTE. It has become quite clear to Tamils of Indian origin that the Dravidian leadership in Tamil Nadu especially after the demise of Periyar Ramasamy offers not cultural or intellectual vision for their advancement and progress. In a specific sense, the narrow politics of Kalainjnar Karunanathi and Jayalalitha, the current Chief Minister of Tamil Nadu, offers no hope for world Tamils.

It has been commonly observed that the LTTE's alleged assassination of Rajiv Gandhi deprived them of the much needed support from Tamil Nadu. While there is no concrete proof of LTTE's involvement in the murder of Gandhi, the propaganda generated in the aftermath of this episode did register decline in support. However, it was the opportunistic role of some political parties and leaders that gave the general impression that Tamils in the state would shy away from the LTTE for good. Nothing can be further from truth. My recent visit to Tamil Nadu and discussions with few groups provide indications that Tamil in the state will never abandon their brothers and sisters in Tamil Eelam. While they might have some reservation about the LTTE and about its alleged links to the murder of Gandhi, they fully support the quest for an independent Tamil Eelam.

If not for the presence of the dreaded Prevention Of Terrorism Act ( POTA ), more and more ordinary Tamils would be able to express their opinions openly.

Moreover the role of leaders like Vaiko Gopalaswamy and Nedumaran attests to the fact that Tamils in Tamil Nadu will never sever their historical and cultural ties with those in the island of Sri Lanka.

There are basically two important reasons for the support of the L.T.T.E. in general and Prabhakaran's leadership in particular. The first reason for support is usually associated with military prowess of the L.T.T.E., its victories against the Sri Lankan armed forces, the heroic role of the Black Tigers and others. It is this external role that has provided much support for the L.T.T.E. However, there is second reason that is very often not well elaborated and this relates to the L.T.T.E.'s role in the socio - economic transformation of the Tamil society. While the L.T.T.E. has fought heroic battles and today is in control of more than 80 percent of the territory in the North and East of the island of Sri lanka, such an achievement has come about because of the progressive internal role of the outfit. L.T.T.E.'s internal organization of the Tamil society - removal of caste barriers, liberation of women, eradication of old customs and traditions and others have given a unique role to the L.T.T.E. in the evolving history of Tamils. It is the progressive and egalitarian outlook of the L.T.T.E. that has endeared the organization to hundreds and thousands of youths, ready to give up

> More than its military prowness, its role in the social transformation of the Tamil society is the most attractive of the organization's representation of Tamils.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

their lives for the future cause of Tamil Eelam.

More than its military prowness, its role in the social transformation of the Tamil society is the most attractive of the organization's representation of Tamils. While I have admired the battle - field successes, the natural leadership of Prabakaran, its unselfish quest for Tamil nationhood, I was most struck by the outfit's social agenda - the need to shape and transform the caste - ridden Tamil society. One really wonders whether the L.T.T.E. could have managed to mobilize the youths of the North and East without liberating the human potential from the constraints of caste, class and gender.

It is the external and internal dimensions that endeared me and many others to the L.T.T.E.. I supported the Tamil independence movement even before having the opportunity to meet their leaders. The writings of Anton Balasingham on the Tamil national question from a Marxist perspective provides a powerful rational as to why the quest for Tamil Eelam is a progressive one. His writings were highly theoretical and very convincing. Prabakaran's speeches and some interviews were inspiring : his rationale for Tamil Eelam predicated on the basis of global Tamil solidarity was an eye opener. They coincided with my own writings on Tamil Diaspora nationalism.

From the early 1990s I wanted to visit the Tamil homeland, but unfortunately the war prevented me from doing so. The ceasefire arrived between the two warring parties in early 2002 provided me with the golden opportunity. In fact, I was asked to provide a ten-day course on federalism to the senior political cadres of the L.T.T.E. I gladly accepted this assignment. One or two days before my return, I had the rare opportunity of meeting the living history / legend himself - Veluppilai Prabakaran - the pride and asset of the oppressed masses.

After dinner and before he parted, he remarked the following words to me : "Thamilanukku oru nadu thevai" ( Tamils need a country ). I was totally overwhelmed by the manner in which these words were expressed and I could not help how singularly be was committed to attain the Tamil cause. Really, it took me a while to regain my composure. Such was the impact of my first meeting with the greatest Tamil hero of modern history. I have met so many leaders in the course of my life, but my meeting with Prabakaran was something else. I was overwhelmed by his presence, his deep knowledge of world politics, his utter commitment to realize the aim of Tamil Eelam and not the least, the ability to withstand any odds in realizing the vision for Tamils. I have not met such leaders and I don't think there will be a leader like Prabakaran in another one thousand years. He is a living legend-the pride and property of Tamils.

I met Prabakaran once again in December 2003 with my family, wife and two daughters. Again we had dinner and spent some time talking about politics, the future of Tamil Eelam, and the problems faced by Tamils abroad. My second meeting merely reaffirmed the greatness of this man in leading the Tamil cause. His courage and dedication convinced me that Tamil Eelam was within his grasp, it was just a matter of time. When posed questions about the threat posed by the United States in the aftermath of the 9/11 episode, he remarked that it should first build bridges, buildings and highways in Tamil areas before bombing them. In other words, his message was that there was nothing to bomb in Wanni.

Prabakaran is not the least intimated by the big powers. The LTTE fought the Indian forces before the latter left the shores of the island shamelessly. The United States stuck in the Iraqi quagmire is hardly in a position to extend its military tentacles to crush the LTTE. While the LTTE is determined to pursue the Tamil cause, it is not mechanically orientated. It is always open to a negotiated settlement although it has not given up the quest for a separate state, it is prepared to discuss with the Sri Lanka government to reach a solution that would be in line with the objectives of internal self-determination.

The LTTE controls more than 80 percent of the territory in the North and East of the island. It has a standing battle-tested army and a powerful sea-wing and not to speak of its own police force, judiciary, tax-system, customs, immigration and administration. Despite the presence of a de facto state, the LTTE is still pursuing the option of discussing the interim self-government proposal with the government of Sri Lanka. It is this magnanimity that seems not to be appreciated by the international community. It is not too difficult for the LTTE to unilaterally declare independence.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

வேலுப்பிள்ளை பிரபாகரன்

வாழ்ந்துகொண்டிருக்கும்

# ஒரு காவியம்



**பேராசிரியர் இராமசாமி**

வரலாற்றுக்கும், ஆட்சியியலுக்கும், போர்த்திறன் சார்ந்த ஆய்வுக்குமான மையம். தேசியப் பல்கலைக்கழகம். மலேசியா.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்ற ஒரு புரட்சிகரத் தலைவரைப்பற்றி - இராணுவ மேதையைப் பற்றி எழுதுவது என்பது ஒரு சுலபமான விடயமல்ல. முதன்மையான சாதனைகள் பலவற்றை ஈட்டியவர் என்ற அளவில், அவற்றோடு தொடர்புடைய மற்றவற்றைத் தொடாமல் ஒன்றையோ இரண்டையோ மட்டும் வலிறுயுத்திக் கூறமுனைவது ஓரளவுக்குக் கடினமான முயற்சியேயாகும்.

தமிழருடைய போலியில்லாத-மெய்யான அபிலாசைகளுக்கு எதிரான அரசுகளும் சக்திகளும் அவரை மட்டுமீறிய கடும் சொற்பிரயோகங்களால் தீவிரமாகக் கண்டித்துரைத்த போதிலும் தமிழீழ மக்களுக்கும், புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்கும் எல்லாக் காலத்திலும் மிகப் பெரிய தலைவராகப் பிரபாகரன் முனைந்து நிற்கின்றார். இனவாத ஒடுக்கு முறைக்கு எதிராகக் கிளர்ந்தெழச் செய்தது மட்டுமல்லாது, தமிழீழம் என்ற ஒரு தனி நாட்டை அமைப்பதற்கான இலட்சியத்தில் நாட்டங்கொள்வதற்கும் தமிழ் மக்களைத் தூண்டியெழுப்பி இயங்க ஏற்பாடு செய்தவரும் அவரே. எனவே யாவருக்கும் மேலான ஓர் உன்னத தனி நபராக அவர் என்றென்றும் நினைவு கூரப்படுவார். பிரபாகரனினதும் அவருடைய நெருங்கிய உதவியாளர்களினதும் முழுமையான அர்ப்பணிப்பும் ஒப்படைப்பும், தமிழர்கள் அனைவரையும் மற்றவர்களுக்கு அடிப்பணிந்து எவ்வித விட்டுக்கொடுப்பும் செய்யாது, சம நிலையில் நிற்பதற்குத் தேவையான கூடிய நம்பிக்கை ஊட்டியுள்ளன.

ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கப்படும் தமிழீழம் என்ற பரிசு, நேரடியாகவும் மறைமுகமாகவும் புலம் பெயர்ந்த தமிழ்மக்களைத் தமிழீழப் போராட்டத்தில் மாறுபடாத ஈடுபாட்டை ஏற்படுத்தியுள்ளது. புலம் பெயர்ந்த தமிழரது ஆதரவின் தேவையைக் கோரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

சியான அறிக்கைகளும். சர்வதேச தமிழர்களது கூட்டுப் பொறுப்பின் முடிவான வெளிப்பாடாகவே தமிழீழம் அமையும். பிரபாகரனது அறிவார்ந்த விளக்கமுமே மலேசியா, சிங்கப்பூர், மொறீசியஸ், தென் ஆபிரிக்கா போன்ற இடங்களிலிருக்கும் தமிழர்களுக்கு மாறாத பெரும் நம்பிக்கையைக் கொடுத்துள்ளது. தமிழ்நாடு, ஐரோப்பா, வட அமெரிக்கா போன்ற இடங்களைப் பற்றி குறிப்பிடத்தக்கதொன்றுமில்லை. இவ்விடங்களில் குறிப்பிட்ட அர்த்தத்தில் தமிழர்கள் பாகுபடுத்தப்படுவதும் ஓரங்கட்டப்படுவதும் அவர்களைச் சிறீலங்காவின் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களது பெரும் இலட்சியத்தின் பால் அனுதாபம் காட்ட இயல்பாகவே செல்வாக்குச் செலுத்த வைத்தன. புலம்பெயர்ந்த தமிழர்களுள் சில பகுதியினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் இலட்சியத்திற்கு தமது உடல்-மனம் சார்ந்த ஆதரவு அளிக்கும் அளவுக்குச் சென்றுள்ளார்கள் என்பதைக் கூறத்தேவையில்லை. தங்களது தலைவர்களால் ஏமாற்றப்பட்டும் காட்டிக்கொடுக்கப்பட்டும், ஈற்றில் கடுமையான இன மத ரீதியான ஓரங்கட்டலுக்கு முகங்கொடுக்க வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்பட்டதனாலேயே அவர்கள் தங்களது இலட்சியத்தை ஆதரித்துப் போராடப் பிரபாகரனைப் போன்ற தலைவர் ஒருவர் தங்களுக்கு இருக்கின்றார் என மனதார நம்புகிறார்கள்.

ஈழப்போர் தொடங்கியதிலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் இலங்கைத் தீவில் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் சம்பவங்களை நெருக்கமாக அவதானித்துக்கொண்டிருக்கிறார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளின் இலட்சியத்திற்கு ஆதரவு தெரிவதற்காக 1980 களிலும் 1990 களிலும் பல ஆர்ப்பாட்டங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன. இந்த ஆர்ப்பாட்டங்களிலெல்லாம் பிரபாகரனது படங்களையும், உருவப்படங்களையும் தமிழீழ விடுதலைப் புலிகளின் துகிற்கொடிகளையும் சுமந்து சென்று தமிழர்கள் பெருமையுடன் காட்சிக்குரியதாக்கினார்கள். அந்த ளவுக்குத் தமிழர்களது அக்கறை தீவிரப்படுத்தப்பட்டுக் கிளர்ந்தெழப் படுத்தப்பட்டது. மலேசியா, சிங்கப்பூர், தென் ஆபிரிக்கா போன்ற இடங்களிலுள்ள தென்னிந்திய வம்சாவழியினர், பொதுவாக தமிழீழ விடுதலை புலிகளுக்கும் குறிப்பாக பிரபாகரனுடைய துணிவான தலைமைத்துவத்திற்கும் பெரும் ஆதரவைக் கொண்டிருக்கிறார்கள். கடந்தகாலத்தில் தமிழ்ப் பொதுமக்களின் இப்பிரிவினர், தமிழ்நாட்டைச் சேர்ந்த தலைவர்களிடமே பண்பாட்டுத் தலைமையை நாடியிருந்தனர். ஆனால் அவர்கள் இப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை நாடத்தொடங்கி வம்சாவழித் தமிழர்கள் தமிழ் நாட்டிலுள்ள திராவிடத் தலைமை, குறிப்பாகப் பெரியார் இராமசாமியின் இறப்புக்குப் பின்னர், தங்களது முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும், பண்பாட்டு அல்லது அறிவுப் பார்வையை அளிக்கவில்லையென்பது தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. குறிப்பிடத்தக்க அர்த்தத்தில் கூறுவதானால், கலைஞர் கருணாநிதியினதும் தற்போதைய தமிழ் நாட்டு முதல்வர் ஜெயலலிதாவினதும் குறுகிய அரசியல்கள் உலகத் தமிழர்களுக்கு எவ்வித நம்பிக்கையையும் அளிப்பதாகவில்லை.

ராஜீவ் காந்தியின் அரசியற் படுகொலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் சம்பந்தப்பட்டிருப்பதாகச் சாட்டப்பட்ட குற்றச் சாட்டானது அவர்களுக்கு மிகவும் தேவைப்பட்ட தமிழ்நாட்டு மக்களது ஆதரவை இழக்கச் செய்துள்ளது. காந்தியின் கொலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சம்பந்தம் பற்றி மெய்யான நிரூபணம் இல்லாதபோதிலும், இந்தச் சம்பவத்தின் தீங்கான பின்விளைவு காரணமாக மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு இருந்துவந்த ஆதரவில் வீழ்ச்சியை உருவாக்



ஈழப்போர் தொடங்கியதிலிருந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் இலங்கைத் தீவில் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் சம்பவங்களை நெருக்கமாக அவதானித்துக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

கியது. எப்படியிருந்த போதிலும், சில அரசியற் கட்சிகளினதும் தலைவர்களினதும் சந்தர்ப்பவாத அரசியலே தமிழ் நாட்டுத் தமிழர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து நிரந்தரமாகவே ஒட்டாது விலகிச் சென்று விடுவார்கள் என்ற பொதுவான நிலையை ஏற்படுத்தியது எனலாம். உண்மையிலிருந்து எதுவுமே நீண்ட காலத்திற்கு அப்பாலிருக்காது. தமிழ்நாட்டிற்கு நான் அண்மையில் மேற்கொண்ட பயணத்தின்போது சில குழுக்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டேன். தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் தமிழீழத்திலுள்ள தங்களது சகோதரர்களை ஒருபோதும் கைவிட்டுவிட மாட்டார்கள் என்பதற்கான அறிகுறிகளைக் கண்டேன். தமிழீழ விடுதலைப்புலிகள் பற்றியும், காந்தியின் கொலைபற்றியும் அவர்களுக்கு அடக்கி மறைக்கக்கூடிய சில காரணங்கள் இருக்குமானாலும் அவர்கள் சுதந்திரத் தமிழீழக் கோரிக்கைக்குப் பூரண ஆதரவாளர்களாகவே உள்ளனர். அச்சுறுத்தும் POTA என்ற பயங்கரவாதத் தடைச் சட்டமில்லாவிட்டால் கூடுதலான சாதாரணத் தமிழர்கள் கூடத் தங்களது அபிப்பிராயங்களை வெளிப்படையாகவே வெளியிடுவார்கள். மேலும், வைகோ, நெடுமாறன் போன்ற தலைவர்கள் வகித்துவரும் பாத்திரம், தமிழ்நாட்டுத் தமிழர்கள் சிறீலங்காவிலுள்ள தமிழர்களுடையதான தங்கள் சரித்திர கலாச்சாரப் பிணைப்புக்களை ஒருபோதும் துண்டிக்கமாட்டார்கள் என்ற உண்மையை உணர்த்தி உறுதிப் படுத்துகிறது.

பொதுவாக தமிழீழ விடுதலைப் புலிகளையும் குறிப்பாகப் பிரபாகரனுடைய தலைமையையும் ஆதரிப்பதற்கு இரண்டு அடிப்படைக் காரணங்கள் உள்ளன. இராணுவ வீரமும், சிறீலங்காவின் அரச படைகளுக்கு எதிரான இராணுவ வெற்றிகளும், கரும்புலிகளின் துணிவான தற்கொடைச் சாதனைகளும், வேறு சிலவும் சேர்ந்தே தமிழீழ விடுதலைப் புலிகளின் மீதான ஆதரவுக்கான முதற்காரணியாகத் தொடர்புபடுத்திக் கூறப்படுகிறது. இந்தப் புறக்காரணங்களே தமிழீழ விடுதலைப்புலிகளுக்குக் கூடுதலான ஆதரவைத் தேடிக்கொடுத்துள்ளன. எனினும் அடிக்கடி விபரித்தும் கூறப்படாத இரண்டாவது காரணமும் ஒன்றுள்ளது. தமிழ் சமுதாயத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றத்திற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளினால் வகிக்கப்படும் பங்கேயது. வீரஞ்சார்ந்த சமர்களில் களமாடி சிறீலங்காவின் வடக்குக் கிடக்குப் பகுதிகளின் எண்பது விழுக்காடு நிலப்பரப்பைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ள அதேவேளை, அத்தகைய சாதனை நிகழ்வுகளுக்குக் காரணமாக அமைந்தது அவர்களுடைய முன்னேற்றகரமான உள்ளார்ந்த ஒன்றுபட்ட பங்களிப்பேயாகும். சாதித் தடைகள் நீக்குதல், பெண்கள் விடுதலை, அர்த்தமற்ற இறுக்கமான பழைய பண்பாட்டுக் கலாச்சாரங்களின் ஒழிப்பு போன்ற வேறு சிலவுமே தமிழரது புதிய வரலாற்று மலர்வுக்குத் தேவையான ஒப்பற்ற பங்களிப்பை வழங்குவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு சந்தர்ப்பமளித்தது எனலாம். தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னேற்றகரமான அனைவருக்கும் சம உரிமை என்ற மன நிலையே பல நூறாயிரக்கணக்கான இளம் வயதினரை தமிழீழத்தின் எதிர்காலத்திற்காக அவர்களது உயிர்களை அர்ப்பணிக்கக்கூடிய அளவுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின்பால் ஈர்ப்பும் பேரன்பும் கொள்ள வைத்தது.



> இராணுவ வீரத்தைவிட தமிழ் சமுதாயத்தின் மாற்றத்திற்கான அவர்களுடைய பிரதிநிதித்துவமே அனைவரையும் வெகுவாக ஈர்ந்து இழுத்தது எனலாம்.

இராணுவ வீரத்தைவிட தமிழ் சமுதாயத்தின் மாற்றத்திற்கான அவர்களுடைய பிரதிநிதித்துவமே அனைவரையும் வெகுவாக ஈர்ந்து இழுத்தது எனலாம். சமர்களின் வெற்றிகளும், பிரபாகரனின் இயல்பான தலைமைத்துவமும், தமிழர் தாயகத்திற்கான சுயநலமற்ற நாட்டம் போன்றவற்றை நான் வியந்து புகழ்ந்தாலும், சாதிவெறியால்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அடக்கியாளப்பட்ட தமிழ்ச்சமுதாயத்தை மாற்றி உருவமைப்பதற்கான தேவையைச் செயற்படுத்தும் அவர்களுடைய ஒன்றுபட்ட குழுக்களின் சமூகத்திட்டங்களினால் நான் வெகுவாகக்கவரப்பட்டேன். சாதி, சமூக ஏற்றத்தாழ்வுகள், பால்வேற்றுமை போன்ற சமூகத் தடைகளிலிருந்து மனிதசக்தியை விடுவிக்காமல் வடகிழக்கு இளம் வயதினரை இயங்கச் செய்ய தமிழீழ விடுதலைப்புலிகளினால் முடிந்திருக்குமா என்பது உண்மையிலேயே ஒருவர் வியந்து கேட்க வேண்டிய வினாவேயாகும். இந்த அக-புற பருமன்களே என்னையும் வேறு பலரையும் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் உள்ளார்ந்த நாட்டத்தை ஏற்படுத்தின. அவர்களுடைய தலைவர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைப்பதற்கு முன்னரே தமிழருடைய விடுதலை இயக்கத்தை ஆதரித்தவன் நான். மார்க்ஸிச நோக்கில் தமிழர் தேசியப் பிரச்சினை பற்றி அன்ரன் பாலசிங்கத்தின் தமிழீழத்திற்கான இலட்சியம் ஏன் முன்னேற்றகரமானது என்பதை மிகவும் தெளிவாக விளக்கமளிக்கின்றன. அவருடைய எழுத்துக்கள் மிகக் கூடிய கொள்கை விளக்கத்தையும், வெகுவான நம்பகத்தன்மையையும் கொண்டவை. பிரபாகரனது பேச்சுக்களும் பேட்டிகளும் எம்முள் கிளர்ச்சியைத் தூண்டுபவை. சர்வதேசத் தமிழரின் கூட்டுப்பொறுப்புணர்வின் அடிப்படையில் வற்புறுத்தப்படும் அவரது பகுத்தறிவுக்கு ஒத்த விளக்கம் ஒரு தெளிவு தரும் செய்தியாக-வியப்பூட்டும் செய்தியாக அமைந்திருந்தது. இவை புலம் பெயர்ந்த தமிழருடைய தேசியம் பற்றிய என்னுடைய சொந்த எழுத்துக்களுடன் ஒரே சமயத்தில் வெளியாயின.

1990 களின் ஆரம்பத்திலிருந்தே நான் தமிழரது தாயகத்திற்குப் பயணம் மேற்கொள்ள விரும்பினேன். ஆனால் துரதிஸ்டவசமாகப் போர் அதனைக் கைகூட விடாமல் தடுத்தது. 2002ம் ஆண்டு முற்பகுதியில் போரிடும் இரு சாரார்களுக்குமிடையே ஏற்பட்ட போர் நிறுத்தம் எனக்கு அந்த அரிய சந்தர்ப்பத்தைத் தந்தது. உண்மையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த படையணியினருக்கும் அரசியல் பிரிவினருக்கும் 'சமஷ்டி'பற்றிப் பத்துநாள் தொடர் வகுப்பு எடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டேன். நான் இந்தப் பணியை மிக்க மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். நான் திரும்பி வருவதற்கு ஓரிரு நாட்களுக்கு முன் ஒடுக்கப்பட்ட மக்களின் அரிய பெரும் சொத்தாக வாழ்ந்து கொண்டிருக்கும் வரலாறான, புராண இலக்கியமான வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்திப்பதற்கான அரிய சந்தர்ப்பம் எனக்குக் கிட்டியது.



*பிரபாகரன் போன்ற தலைவர் ஒருவர் இன்னுமோர் ஆயிரம் ஆண்டுகளுக்குத் தோன்றுவார் என்று நான் நினைக்கவில்லை. அவர் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு புராண இலக்கியம்.*

இரவுணவுக்குப் பின்னர், விடைபெறுவதற்கு முன்னர் கீழ்க்கண்ட வார்த்தைகளை அவர் என்னிடஞ் சொன்னார். 'தமிழனுக்கு ஒரு நாடு தேவை.' இச்சொற்கள் சொல்லப்பட்ட விதம் என்னைப்பூரணமாக உணர்ச்சியிலாழ்த்தியது. தமிழரது இலட்சியத்தை அடைவதில் அவர் எப்படி வியக்கத்தக்க முறையில் உறுதி பூண்டுள்ளார் என்று என்னுள் எண்ணி வியக்க முடியாமலிருக்க முடியவில்லை. உண்மையில் எனது தன்னிறைய மைதியை மீளப் பெறுவதற்கு சிறிது நேரம் எடுத்தது. நவீன வரலாற்றின் மிகப்பெரிய தமிழ் நாயகனுடனான சந்திப்பு அத்தகைய தாக்கத்தை என்னுள் ஏற்படுத்தியது. நான் எனது வாழ்நாளில் தலைவர்கள் பலரைச் சந்தித்துள்ளேன். ஆனால் பிரபாகரனுடனான எனது சந்திப்பு வேறுவகையானது.

அவரது உலக அரசியல் பற்றிய அவருடைய ஆழ்ந்த அறிவாற்றல், தமிழீழத்தை அடைவதற்கான அவருடைய பூரண உறுதிப்பாடு, அத்தோடு மிக முக்கியமற்றது எனப் புறந்தள்ள முடியாத தமிழர்களுக்கான கனவை அடைவதில் வரும் வேற்றுமைகளுக்கு ஈடு கொடுத்து எதிர்த்து நிற்கும் அவரது வல்லமை யாவும் என்னை உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கடித்தன. பிரபாகரன் போன்ற தலைவர் ஒருவர் இன்னுமோர் ஆயிரம் ஆண்டுகளுக்குத் தோன்றுவார் என்று நான் நினைக்கவில்லை. அவர் ஒரு வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு புராண இலக்கியம். தமிழரது பெருமைக்கும் கீர்த்திக்குமுரிய சொத்து அவர்.

பிராபாகரனை நான் மீண்டும் 2003ம் ஆண்டு மார்கழி மாதம் எனது மனைவி, இரண்டு மகள்மார் கொண்ட குடும்பத்துடன் சந்தித்தேன். இரவுணவுக்குப் பின்னர் அரசியல் பற்றியும், தமிழீழத்தின் எதிர்காலம் பற்றியும், வெளிநாடுகளில் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எனப்பல விடயங்களைப்

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

பற்றியெல்லாம் சிறிது நேரம் உரையாடிக்கொண்டோம்.

தமிழருக்கான இலட்சியத்திற்குத் தலைமை தாங்கும் அந்த மனிதனின் பெருமை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவே எனது இரண்டாவது சந்திப்பு அமைந்திருந்தது. அவரது துணிச்சலும் ஈடுபாடும், தமிழீழம் அவரது பிடிக்குள்ளேயே இருக்கிறது என்ற நம்பிக்கையை என்னுள் ஏற்படுத்தியது. அது வெறுமனே காலத்தைப் பொறுத்த ஒரு விடயமேயாகும்.

கார்த்திகை மாதம் 11ம் திகதியின் சம்பவத்தால் ஏற்பட்டுள்ள பயங்கரமான பின் விளைவினால் அமெரிக்காவினால் வரக்கூடிய அச்சுறுத்தல் பற்றிக் கேள்விகள் கேட்கப்பட்டபோது, குண்டு போட்டுத் தகர்க்க முன்னர் அது தமிழ்ப்பிரதேசங்களில் பாலங்களையும், கட்டிடங்களையும், பெருந்தெருக்களையும் கட்டவேண்டும் என்றார். அவர் குறிப்பிட்டதைச் சுருக்கமாகக் கூறுவதானால், வன்னியில் குண்டு போட்டுத் தகர்க்க எதுவுமேயில்லை என்பதேயாகும். வல்லரசுகளால் பிரபாகரன் சிறிதளவேனும் அணுகப்படவில்லை. இந்தியப் படைகள் அவமானகரமான முறையில் இலங்கைக் கரைகளை விட்டு நீங்குமுன்னர் தமிழீழ விடுதலைப்புலிகள் அவர்களுடன் போரிட்டனர்.

ஈராக்கிய புதைகுழிக்குள் சிக்கியுள்ள அமெரிக்கா, தமிழீழ விடுதலைப்புலிகளை நசுக்குவதற்கு தனது இராணுவக் கொடுக்குகளை விரிக்கும் நிலையிலில்லை. தமிழரது இலட்சியத்தை பின் தொடர்வதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் உறுதி பூண்டிருக்கும் அதேவேளை அது இயந்திர ரீதியான போருக்கு பழக்கப்பட்டிருக்கவில்லை. அது எப்பொழுதும் பேச்சுவார்த்தை மூலமான இணக்கப்பாட்டிற்கே தயாராக இருக்கிறது. தனி நாட்டிற்கான தனது இலட்சியத்தை அது கைவிடவில்லை. என்றாலும் அது உள்ளக சுய நிர்ணய இலக்குகளுடன் இணங்கிப் போகக் கூடிய ஒரு தீர்வுக்கு சிறீலங்கா அரசுடன் பேசுவதற்குத் தயாராகவே உள்ளது.

*தமிழருக்கான இலட்சியத்திற்குத் தலைமை தாங்கும் அந்த மனிதனின் பெருமை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவே எனது இரண்டாவது சந்திப்பு அமைந்திருந்தது.*

இலங்கைத் தீவின் வடக்குக் கிழக்கில் 80 விழுக்காடு நிலப்பரப்பை தமிழீழ விடுதலைப் புலிகளே தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். அவர்களுடைய சொந்தக் காவற்துறைப்படை, நீதித்துறை, வரிமுறை, சுங்கப்பிரிவு, குடிவரவுப் பிரிவு, நிர்வாகம் போன்றவற்றைக் குறிப்பிடாவிட்டாலும் அவர்களிடம் போர்த்தேர்ச்சி பெற்ற நிலையான ஒரு படையோடு சக்தி வாய்ந்த கடற்படையணியொன்றும் உண்டு.

சட்டப்படி எவ்வாறாயினும் நடப்பின்படி உண்மையான நாடொன்றுள்ள அவர்களிடம் உள்ளபோதிலும், அவர்கள் சிறீலங்கா அரசுடன் இடைக்கால சுய ஆட்சி முன்மொழிவைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான தமது தெரிவை இன்னமும் முயன்று கொண்டிருக்கிறார்கள். இந்தப் பெருந்தனத்தை சர்வதேச சமூகம் பாராட்டுவதாகத் தெரியவில்லை. தன்னிச்சையாகச் சுதந்திரத்தைப் பிரகடனப் படுத்துவது தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு மிகவும் கடினமான காரியமில்லை.




சுவீடனிலிருந்து வெளிவரும் அரசியல் ஏடான "sydasien" என்ற இதழ் தனது முகப்பு அட்டையில் தமிழீழத்தேசியத்தலைவரின் ஒளிப்படத்தை 1988 ஜூன் இதழில் வெளியிட்டிருந்தது.

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamileelam Archive

# நெசவாளி

நெசவும்
ஆடை அணிதலும்
நாகரிக வளர்ச்சியுடன் பின்னியது
ஆள்பாதி ஆடைபாதி எனவாய்.
தேசமும் அப்படித்தான்
நாகரிகத்தின் குறியீடாய்
துணி நெய்யப்படுகின்றது என்றால்
விடுதலையின் குறியீடாய்
தேசம் நெய்யப்படுகின்றது.
தொல் காலத்திருந்தே இவை
நெய்யப்படுகின்றதாயினும்
நெசவென்பது முடிவிலிதான்
தலைமுறைத் தொடர்தான்.

தறிகள் பொறிகள்
விருத்தியுறுவது போலவே
இலைகுழை, பட்டையிலிருந்து
பருத்தி, பட்டு,
கம்பளி, மின்னிழை என
நூல்களும் விருத்தியாகின்றன.
ஊடுபாவாக சாயநூல் இழைய
துணியோ அழகுறும்.
நேசமும் ஈகமும் இழைய
தேசமோ ஒளிரும்.


**கி.பி. அரவிந்தன்**

கவிஞர்,
இலக்கிய
சமூக
செயற்பாட்டாளர்.
பிரான்ஸ்.


இராட்டையில் நூல் நூற்று
கதராடை நெய்தபோது
கட்டியிருந்த கோவணமும்
களவுபோன கதைகளும் உண்டு.
நெசவு நுட்பத்திற்காய்
தேசாந்திரம் சென்று
திரும்பாதார் கதைகளும் உண்டு.
நெசவினில் ஊடுபாவாய்
தன்னல இழை கோர்த்ததனால்
இழிந்துபோனோர் கதைகளும் உண்டு.
செய்நேர்த்தி மிக்க
நெசவாளரும் சிலர்தான்
வியக்க வைக்கும் துணிகளாய்
தேசத்தை நெய்தவரும் சிலர்தான்.

இதோ
ஆழிசூழ் தீவதனில்
கண்ணிமை துஞ்சாது
தேசமொன்றை நெய்கிறான்
நெசவாளி.
ஈகத்திலும் ஓர்மத்திலும்
தோய்த்தெடுத்த இழைகளினால்
கார்த்திகைப்பூ நிறங்களில்
நெய்யப்படுகிறது அத்தேசம்.
கையால் நூல்நூற்ற
விருத்தியுறா தறியின்முன்
சிறுபிள்ளைக் கனவென
நெசவைத் தொடங்கியோனுக்கு
ஐந்து பத்துகளாயிற்றாம்
ஆகட்டும்
விடுதலையின் தரிசனத்திற்கு
ஆண்டுகள் எல்லையிடா.
ஐந்து நூறாண்டின் பின்னும்
அவன் தரிசனத்தில் தெறிக்கும்
நெசவின் நுட்பங்களும் செய்நேர்த்தியும்
தேசம் நெய்யும் நெசவாளர்க்கு
முன்மொழிவுகளாய் அவை இருக்கும்.
அது பிரபாகரனியம் எனவாய்
சிறக்கும்.

26-11-2004

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



# பிரபாகரன் ஒன்றிணைந்த தமிழர் வலிமையின் சின்னம்

**கலையரசன்**

பத்திரிகையாளர்,
ஆசிரியர்,
அரசியல்
விஞ்ஞானம்,
தனியார் உயர் கல்வி
நிறுவனங்கள்.
இலங்கை.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைக்கான போராட்டம் ஆரம்பித்த காலம் முதல் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டிய அவசியம் வலியுறுத்தப்பட்டு வந்தது. ஆனாலும் அவ்வப்போது காலத்துக்காலம் தமிழ் மக்களிடையே தோன்றிய அரசியல் கட்சிகள் அல்லது இயக்கங்களின் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கோட்பாடு ஒன்றுபட்டுச் செயற்படுதல் என்ற தத்துவம் என்பதற்கு அப்பால் சிங்களத் தலைமைத்துவங்களோடு இணைந்து செயற்படுகின்ற அல்லது அவர்கள் கொடுப்பதை வாங்கிக்கொள்ளுகின்ற இயல்பு நிலைக்கு உட்பட்டார்கள். அவ்வாறானவர்களின் இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் மக்களை ஒட்டுமொத்தமாக விலை பேசுகின்ற நிலைக்குத் தள்ளியது. ஆனால் அவ்வாறு விலைபேசுகின்ற ஆபத்தான நிலையில் இருந்து தமிழ் மக்களை தலை நிமிர்ந்து நிற்கக் கூடிய நிலைக்கு இன்று விடுதலைப் புலிகள் கொண்டு வந்திருக்கின்றார்கள்.

தமிழீழ தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஐம்பதாவது வயதை அடையும் இந்த ஆண்டில் தமிழ் மக்களின் ஒற்றுமையின் அவசியமும் அதாவது ஒன்றுபடுதல் அல்லது இணைந்து செயற்படுதல் என்ற வலிமை மிக்க கருத்தை முன்வைப்பது பொருத்தப்பாடென்றே கருதமுடிகின்றது. புலிகளின் அரசியல் இராணுவப்பலம் தலையெடுத்த காலம் முதல் ஜன நாயகம் என்ற பேச்சிற்கு தென்பகுதி சிங்கள அரசியல் தலைமைகளும் அவர்களோடு ஒட்டி உறவாடிய தமிழ் மக்களின் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுகின்ற சிலரும் முக்கியத்துவம் கொடுத்தனர். ஏனெனில் அவ்வாறான

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# அகவை 50

என்பதுதான் முடிவான கொள்கை! அதில் இம்மி குறைந்தாலும் அது தூய நெய்யில் எண்ணையைக் கலப்பதைப் போலச் சிறப்புக் குன்றிப் போகும்! தயிரில் தண்ணீர் கலப்பதைப் போல் நீத்துப் போகும்! கன்னெய்யில் மண்ணெய் கலப்பதைப் போல ஆற்றல் குன்றிப் போகும். பிரபாகரன் மாவீரன்! இப்பொழுதுள்ள நிலையில் தமிழினத்தின் அடிமைத் தனத்தை மீட்டெடுத்துத் தமிழர்களுக்கென்று ஒரு தனி நாட்டை உருவாக்க, பிரபாகரனைப் போன்ற மாவீரனே தேவை.

● பெருஞ்சித்திரனார். 1989

## ஈழத்து எல்லாளன் பிரபாகரன்.

திராவிட அரசியலின் கீழ் தமிழரின் அறிவுத் தலைவனாம் பாவாணரும் தமிழரிடமிருந்து செவ்வனே மறைக்கப்பட்டார். உலகத் தமிழினத்தின் தானைத் தலைவனாம் ஈழத்து எல்லாளன் பிரபாகரன் கழகங்களால் வஞ்சிக்கப்பட்டதுடன், மிக இழிவாகக் கொச்சைப்படுத்தப்பட்டும் வருகின்றார். அகவாழ்க்கையிலும் புறவாழ்க்கையிலும் நல்லொழுக்கத்திற்கு நல்ல சான்றோர்கள் அவர்களாவர். எந்தத் திராவிடத் தலைவராவது அவர்களுக்கு ஈடாகு வாரோ?

அறிவுக்கு இனிப் பாவாணரே தலைமை!, தமிழரின் மறத்திற்கு ஈழத்து எல்லாளனே தனிப்பெரும் தலைவன்! தமிழரின் வீரத்தை உலகத்தில் மீண்டும் அரங்கேற்றிவரும் புதிய புறநானூற்றுத் தலைவனே தமிழரால் போற்றுதற்குரியவன்! இக்காலக் கரந்தடிப் போருக்கு புதிய இலக்கணமானது அவனது தமிழ் மறம்! தமிழ்நாட்டின் விடுதலைக்கு அத்தகைய தலைவனொ

கருத்துக்கள் மூலம் பலரும் ஜனநாயகம் என்ற போர்வைக்குள் நின்று கொண்டு தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை சிதறடிக்க முற்பட்டனர்.

ஆனால் அவை அனைத்திற்கும் மாறாக புலிகள் ஒன்றுபடுதல் அல்லது இணைந்து செயற்படுதல் என்ற கருத்தியல் மூலமாக தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஏதுவான ஜனநாயக வழிமுறைகளுக்கான நெறிமுறைகளை கற்பிக்க ஆரம்பித்தனர். எவ்வாறாயினும் அரசியலாளர்கள் அக்காலத்தில் அரசியல் கோட்பாடுகளையும் சித்தாந்தங்களையும் எந்தெந்த காலகட்டங்களுக்கு ஏற்ப உருவாக்கினார்களோ அதேபோன்று ஒரு புதிய அரசியல் கோட்பாடுகளும் சித்தாந்தங்களும் உருவாகும் நிலை ஏற்பட்டு நிற்கின்றது. பிரதானமாக ஏகபிரதிநிதித்துவம் என்பதன் சாதகமான நிலை தமிழீழ விடுதலைப்போராட்டத்தின் மூலமாகவே இன்று உலகிற்கு உணர்த்தி நிற்கின்றது. (இது பற்றிய விபரமான ஆய்வுகள் செய்யப்படவேண்டும். இந்தக்கட்டுரையில் அந்த விளக்கங்களை முழுமையாக குறிப்பிட முடியாது)

மக்கள் ஆட்சி, ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம் என்றெல்லாம் அரசியல்வாதிகள் நாளொரு மேனி பொழுதொரு வண்ணமாக பொருள் கூறி வருகின்றனர். அது பற்றிய அடிப்படை விளக்கம் ஏதுமின்றி வெறுமனே இந்தச் சொற்களைப் பிரயோகிக்கின்றார்கள். விடுதலைப் புலிகள் ஏகபிரதிநிதிகள் அல்ல என்பதை அடித்துக் கூறுவதற்காக மக்களாட்சி , ஜனநாயகத்தின் பன்முகத்தன்மை என்றெல்லாம் கதை விடுகின்றார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மக்களாட்சி என்றும் இந்த அரசாங்கத்தின் பதவிக்காலத்தில் ஏகபிரதிநிதித்துவம் என்ற கோட்பாட்டிற்கு இடமில்லை என்றும் ஜே.வி.பி அரசியல் தத்துவம் பேசுகின்றது. ஏன் முன்னாள் ஜனாதிபதிகளான அமரர்கள் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, பிரேமதாஸா போன்றவர்களும் தங்கள் அரசாங்கத்தை மக்களாட்சி என்றும் ஜனநாயக அரசு என்றும் வர்ணித்தனர். பொதுவாகக் கூறுவதானால் பிரித்தானியர் காலத்திலிருந்து சுதந்திரமடைந்த பின்னர் பதவிக்கு வந்த அரசாங்கங்கள் எல்லாமே அந்த வாசகங்களை முதன்மைப்படுத்தியிருந்தன. மக்களாட்சி என்பதற்கு பலரும் பலவிதமாய்ப் பொருள் கூறியுள்ளனர். எல்லோராலும் ஒப்புக்கொள்ளக்கூடிய வகையில் எந்தவொரு விளக்கமும் அமையவில்லை.

மக்களாட்சி பற்றிய சில விளக்கங்கள் குறுகிய நோக்கம் உடையதாகவே இருக்கின்றன. "மக்கள்" ஆட்சி மக்களாட்சி. ஆக மக்களுடைய அரசாங்கமே மக்களாட்சி என இலகுவாகக் கூறிவிடலாம். ஆனால் இந்த விளக்கம் திருப்திகரமானதாக இல்லை. ஏனெனில் வரலாற்றில் எந்தவொரு காலகட்டத்திலும் தம்முடைய அரசாங்கத்தைத் தாமே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் உரிமை ஒரு சமுதாயத்தின் அனைத்து மக்களுக்கும் அளிக்கப்பட்டதில்லை. அரசியல் உரிமைகளைப் பெறுவதற்கு எப்பொழுதுமே சில நிபந்தனைகள் விதிக்கப்பட்டுத்தான் இருந்துள்ளன. சில விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் ஒரு சிலருக்கு அரசியல் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. இதற்குச் சில இனக்குழுமங்களும் விதிவிலக்கல்ல.

தமிழீழ ஆவணக்காப்பகம்
TamilEelam Archive

சாதாரணமாக மக்கள் ஆட்சி என்றவுடன் மக்களால் மக்களுக்காக இயங்கும் அரசாங்கம் என்ற ஏபிரகாம் லிங்கனின் விளக்கமே எங்கள் நினைவுக்கு வந்துவிடுகின்றது. இந்த விளக்கத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் மக்களுடைய அரசாங்கம் எனும் பொழுது அதற்கு மக்களுடைய ஆதரவு இருப்பதாகவே பொருள்படும். ஆனால் மக்கள் ஆதரவு இருந்தால் மட்டும் போதாது. வரலாற்றில் எத்தனையோ மன்னர் ஆட்சிகளும் பிரபுக்கள் ஆட்சிகளும் கூட மக்கள் ஆதரவைப் பெற்றிருக்கின்றன. பாகிஸ்தானில் இராணுவத்தளபதி முஷாரப், இராணுவச் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றி விட்டு பின்னர் மக்கள் ஆதரவோடு தொடர்ந்தும் ஜனாதிபதியாக இருக்கின்றார். அதே வேளை முறைகேடான தேர்தல்கள் மூலம் மக்களுடைய ஆதரவின்றி ஆட்சிக்கு வந்துவிட்ட அரசாங்கங்கள், தம்மைத்தாமே அரசாங்கங்கள் என அழைத்துக் கொண்டதற்கும் சான்றுகள் உண்டு. உதாரணமாக சிறீலங்காவின் ஆட்சி முறையைக் கூறலாம். தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தைக் கூட அவ்வாறே கருதமுடியும். இவ்வாறு மக்களாட்சி முறையில்லாத ஆட்சி முறைகள் கூட மக்களுடைய அரசாங்கம் எனப் பெயர் பெறுகின்றன. மக்களின் ஆதரவு இல்லாத ஆட்சிகளும் இப்பெயரால் தம்மை அழைத்துக் கொள்கின்றன.

**ஐரோப்பாவில் அன்று சொல்லப்பட்ட மக்களாட்சிக்கு மாறான மக்கள் ஆட்சி சிறீலங்காவில் இருக்கின்றது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்**

சிறீலங்காவின் காலத்திற்கு காலம் பதவிக்கு வரும் அரசாங்கங்கள் மக்கள் ஆட்சி என்பதற்குக் கொடுக்கும் பொருள் விளக்கம் வேடிக்கையானது. அரசியல் சிந்தாந்தங்கள், கோட்பாடுகள் என்பதற்குள் ஏகபிரதிநிதித்துவம் என்பதற்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய யதார்த்தமான பொருள் விளக்கத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பது, மக்கள் ஆட்சியின் மறுபக்கக் குறைபாடாகும். இக்காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் வேறுமாற்றுக் கருத்துக்கள் இன்றி தமது தேசியம், நாடு என்பவற்றை வென்றெடுப்பதற்காக ஏகப்பிரதிநிதித்துவம் என்பது மக்களால் ஏற்கப்பட்டிருந்தது. அமெரிக்க சுதந்திர போரும், பிரெஞ்சுப் புரட்சியுமே 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் ஒருமித்த மக்களின் குரல் என்ற அடையாளத்தின் ஊடாகப் பிற்காலத்தில் ஜனநாயகம் தனி மனித சுதந்திரம் போன்ற கருத்துக்கள் வளர்வதற்கு வழிவகுத்தன. எழுதப்பட்ட அரசியல் அமைப்புக்கள் ஒப்புக்கொள்ளப்பட்ட மக்கள் இறைமைக் கருத்தைப் பிரதிபலிக்கும் அரசாங்கத்தின் முறைகள் தோன்றவும் வழிவகுத்தன.

அமெரிக்கச் சுதந்திரப் பிரகடனமும், பிரான்சின் மனித மற்றும் குடிமக்களின் உரிமைகள் பிரகடனமும் மனித சமத்துவத்தையும் மக்கள் இறைமையையும் நிலைநாட்டியிருந்தன. தேசிய உணர்வுக்கான ஏகபிரதிநிதித்துவத்தை அடையாளப்படுத்துகின்ற தேசிய உணர்வு, ஐரோப்பாவில் மாத்திரமன்றி ஆபிரிக்கா, ஆசியாவிலும், உலகப் போருக்கு பின்னர் ஏற்பட்டது. இந்திய சுதந்திரப் போருக்கும் காந்தியை தலைமையாகக் கொண்டே தேசிய காங்கிரஸ் முன்னின்று போராடியது இந்தியாவின் பல மாநிலங்களில் சுதந்திரத்திற்காகக் போராடிய ஏனைய அமைப்புக்கள் கட்சிகள், தனிநபர் குழுக்கள் கூட இந்திய தேசியம் என்ற அடிப்படையில் காந்தியின் பின்னால் ஒருங்கிணைந்து சென்



றன. சுதந்திரம் பற்றிய பேச்சுக்கள் கூட காந்தியோடுதான் நடந்தது. இன்று இந்தியா பன்முகப்படுத்தப்பட்ட ஜனநாயகநாடு என்று கூறுவதற்கு அன்றிருந்த காந்திய ஏகாதிபத்தியம் வழிவகுத்தது. வரலாற்று அணுகுமுறைகளை நோக்குமிடத்து தற்போதைய ஐரோப்பிய நாடுகளில் உள்ள நவீன அரசுகள் பின்பற்றுகின்ற மக்களாட்சி, ஜனநாயகம் என்ற கருத்துக்கள் எல்லாமே அன்று ஒருமித்த கருத்தின் அடிப்படையில் மக்கள் குழுமிநின்று பெற்ற சுதந்திரத்தின் பயனாகக் கிடைத்தவை. ஆனால் சிறீலங்காவில் அவ்வாறு இல்லை. தமிழ் சிங்களம் என்ற இருவேறுபட்ட தேசிய அடையாளங்களுடன் முரண்பட்ட நிலையிலேயே சிறீலங்காவிற்கு சுதந்திரம் கிடைத்தது. அதனால்தான் சிங்களப் பேரின

தமிழ் ஆவணக் காப்பகம்
Tamil Eelam Archive

ருவன் இயல்பாகவே தோன்றும்வரை, அந்த எல்லாளனினுடைய வீரமும் துணிவும் கொள்கை கோணாமையுமே தமிழுகத்திற்கு நன்கு வழிகாட்டட்டும்! இந்த ஓர்மை இனமானமிக்க தமிழிளைஞரிடம் வேர் கொண்டுவிட்டால், தமிழர்களுக்கு இனி எந்த இரவல் தலைவனும் போலித் தலைவனும் தேவையில்லை.

● குணா.
(திராவிடத்தால் வீழ்ந்தோம்-1995.)

## மீட்க வந்த பெருவீரன் !

பிரபாகர மாவீரனே! பாசறையில் இருந்தபடியே பகைவர்களின் இதயத்தில் அச்ச நடுக்கத்தைப் பாய்ச்சிய எங்கள் முன்னோரின் வழி வந்த இளையவனே! உன்னை நினைத்துப் பதறுகிற புல்லர் கூட்டத்துக்காக மிக மிக இரக்கப்படுகிறேன். இவர்கள் படுகிற பாட்டைப் பார்க்கிறபோதுதான் பாசறை உளன் என்று மாற்றார்கள் வெருவிய அந்தக் காட்சி எப்படி இருந்திருக்கும் என்று புரிகிறது. சோழன் படையை நினைத்துக் கண்ணுறங்காமல் இரவைக் கழித்த வடபுலத்து அரசுகளின் அவல நிலை எவ்வாறு இருந்திருக்கும் என்பதும் விளங்குகிறது!

வீரத் தமிழ்த் தளபதி பிரபாகரா! என் நெஞ்சிலும், என் போல் தமிழ் மானம் உடையவர்களின் நெஞ்சிலும் எவ்வளவு பெரிய இன்பத்தை ஏற்றி விட்டாய். அப்பனே! 3000 ஆண்டுகளாக முனை மழுங்கிக் கிடந்த தமிழ் வீரத்தை நினைத்து நினைத்துப் புலம்பினேன். மேற்கண்ட புற நானூற்றுப் புகழ் மறவர்களின் நினைவு வரும்போதெல்லாம், தமிழ் வீரத்தின் மீது ஒரு புதிய நம்பிக்கை வரப் பெற்று, 'புதையுண்ட பழமரமும் வயிரமாகும், பொழிந்து உதிர்ந்த கருமேகம் வெள்ளமாகும்!' என்று புத்துயிர்ப்புப் பாடல் பாடி, எனக்கு நானே நம்பிக்கை

வாதம் கூறுகின்ற மக்கள் ஆட்சியில் குறைபாடுகளையே காண முடிகின்றது. சிங்களவர்கள் அல்லாத இனம் அதிகமாக இருக்கும் போது (இதனை சிங்கள அரசியல் வாதிகளின் மொழியில் கூறுவதனால் சிறுபான்மையினர் எண்ணிக்கையில் அதிகமாக இருக்கும் போது) அரசியலில் தமது கீழ்நிலைப்பாங்கோடு என்றுமே திருப்தியுறமாட்டார்கள். சட்டங்களை எளிமையாகவும் நேரான வழிகளிலும் இயற்றுவதற்கு பதிலாக பல்வேறு ஆதிக்கக் குழுக்களின் நலன்களைச் சார்ந்து இயற்றவேண்டியிருக்கின்றது. சிங்களம் அல்லாத இனத்தவர்களைப் பொறுத்தவரை பெரும்பான்மை என்று சொல்லப்படுகின்ற சிங்களவர்களை எதிர்த்து நிற்கும் அபாயம் அவர்கள் கூறும் மக்கள் ஆட்சியில் உள்ளது.

அரசியல் உரிமைகள் முழுமைப்படுத்தப்படாத நிலைமையும் அதிகாரங்கள் இனங்களுக்கிடையே பகிரப்படாத தன்மையும் மக்களாட்சியின் மாபெரும் குறைபாடு என்கிறார் டாக்வெல் என்னும் அறிஞர். (அரசியல் கோட்பாட்டு நெறிகள் - மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்) இதனை நோக்குமிடத்து சிறீலங்காவின் சிங்கள அரசியல் தலைமைகள் கூறுகின்ற மக்களாட்சி எங்ஙனம் என்ற கேள்வி எழுகின்றது. ஒரு குறித்த அதிகார மையத்திலிருந்து அதிகாரம் பரவலாக்கப்படும் போது அதன் வலு குறைவடைகின்றது. அவ்வாறு குறித்த ஒரு மையத்தில் இருந்து கொண்டு ஒரு நாட்டின் தரை, கடல், ஆகாயம் என்ற மூன்று எல்லைகளுக்கும் உட்பட்ட கணிசமான அல்லது மிகப் பெரிய பிரதேசம் ஒன்றை ஆட்சி செய்யும் போது அது மக்களாட்சித் தத்துவத்திற்கு முரணாகின்றது. இந்த இடத்திலேதான் அமெரிக்க அறிஞர் மொண்டஸ் கியூவின் வலுவேறாக்கற் கோட்பாட்டின் பயன்பாடு அவசியமாகின்றது. டாக்வெல் என்ற அறிஞனின் சிந்தனைகளும் மொண்டஸ்கியூவின் கருத்துக்களையே வெளிப்படுத்தி நிற்கின்றன. மக்களாட்சி ஒரு சிறப்பான ஏற்பாடு அல்ல என்பது அவரின் வாதம். டாக்வெல் என்பவரின் கூற்று சிறீலங்காவின் மக்களாட்சிக்குப் பொருத்தப்பாடாக இருக்கின்றது. அதாவது அவரின் கூற்றுப்படி மக்களாட்சிக்கு எதிரானதொரு மாபெரும் குற்றச்சாட்டு என்னவென்றால் அது மக்களை ஓர் அரை குறை நிலைக்கு இட்டுச்செல்கின்றது என்பதாகும். ஒரு பொருள் பரவலாக்கப்படும் பொழுது, அதன் தரம் குறைகின்றது. ஒரு சிலர் மட்டும் கொண்டிருப்பதைப் பலரோடு பகிர்ந்துகொள்ளும் போது ஒவ்வொருவருக்கும் குறைந்தளவே கிட்டும். சிறீலங்காவில் உள்ள மக்களாட்சியில் உட்பொதிந்துள்ள தீங்கு என்னவென்றால் ஒரு சிலர் மட்டுமே ஆட்சியைக் கைப்பற்ற வழிவகுக்கின்றது. ஒரு தேசிய அரசின் பிரதிநிதித்துவ முறையானது மொழி, கலாசாரம், பிரதேசம் என்ற ரீதியில் வேறுபட்டிருக்கும் போது விசேட ஏற்பாட்டுச் சட்டங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என 'டைசி' கூறுகின்றார். (நீதித்துறையும் அதன் பணிகளும் - டாக்டர் சோ. சுப்பிரமணியம் மாநிலக்கல்லூரி - சென்னை) குறித்த ஒரு சமூகத்தின் அபிலாஷைகள் ஒரு தலைவனால் அல்லது ஒரு கருத்தியல் சார்ந்த அமைப்பினால் உறுதிப்படுத்தப்படுகின்ற பொழுதும், பாதுகாப்பிற்கு உத்தரவாதம்

தமிழ் ஆவணகம் Tamil Digital Archive

கிடைக்கின்ற போதும் அந்த தலைவன் அல்லது ஓர் அமைப்பு ஜனநாயகத்தன்மை வாய்ந்தது என லொக் என்ற அறிஞன் கூறுகின்றான். ஆகமொத்தம் ஏக பிரதிநிதித்துவம் என்பது பன்முகத்தன்மை கொண்ட ஜனநாயகத்திற்கு எதிரானதல்ல. ஜனநாயகத்தின் மறுபக்கம் சமூகத்திற்குத் தீங்கிழைக்கும் என்பது உண்மையே.

(தற்போதைய நிலையில் சாதாரண ஜனநாயகம் குறித்து தமிழ் மக்கள் தரப்பில் பேசும் சூழ்நிலை இல்லை. ஏனென்றால் பேரினவாத பிடிக்குள் தமிழ் மக்கள் அமுங்கிப் போயிருக்கும் நிலையில் வைத்தியர்களான விடுதலைப்புலிகள் சொல்வதைக் கேட்பதன் மூலமே அமுங்கிப்போயிருக்கும் அந்த பிடிக்குள் இருந்து மீளமுடியும். ஜனநாயகம் என்ற பதத்தை வைத்துக்கொண்டு எல்லோரும் பேச முற்பட்டால் பேரினவாதத்திற்குள் தமிழ் மக்கள் அப்படியே அமுங்கி விடுவார்கள். அதற்காகத்தான் ஜனநாயகம் என்ற கருத்தை சர்வதேச நாடுகள் மூலமாக சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் ஏதோ புதிதான விடயம் போன்று பரப்ப முற்படுகின்றது. உதாரணம் சொல்வதானால் ஆபத்தான நிலையில் இருக்கும் ஒருவருக்கு சிகிச்சை அளிக்கும் போது அவருக்கு ஊசி ஏற்ற வேண்டும். சில இடங்களில் சத்திரசிகிச்சை செய்ய வேண்டும். இவ்வாறு செய்யும் போது நோயாளிக்கு நோகும் என உறவினர்கள் சத்தமிட்டால் அந்த நோயாளி பிழைத்துவிட முடியாது. அந்த நோயாளி பிழைக்க வேண்டுமானால் ஊசி ஏற்றத்தான் வேண்டும். சத்திர சிகிச்சை செய்யத்தான் வேண்டும். இது தான், இன்றைய தமிழர் நிலை. பிழைத்துக் கொண்டதும் அந்த நோயாளி எதனையும் உண்ண முடியும். எதனையும் செய்ய முடியும்.)

> ஜனநாயகம் என்ற கருத்தை சர்வதேச நாடுகள் மூலமாக சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்கள் மத்தியில் ஏதோ புதிதான விடயம் போன்று பரப்ப முற்படுகின்றது.



ஆனால் நாம், ஜனநாயகத்தின் சரியான பக்கத்தையே எடுத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறே ஏகபிரதிநிதித்துவம் என்பதன் மறுபக்கமும் டைசி, லொக் போன்றோரின் கருத்துப்படி ஜனநாயகத்தன்மை கொணடதுதான். எமக்கு எது தேவையோ எமது சமுதாயத்திற்கு எது பொருத்தக்கூடியதோ அதனை நடைமுறைப்படுத்த வேண்டியது தான் ஒரு தலைவனின் அல்லது ஓர் இயக்கத்தின் கடமையாகின்றது. ஐரோப்பாவில் அன்று சொல்லப்பட்ட மக்களாட்சிக்கு மாறான மக்கள் ஆட்சி சிறீலங்காவில் இருக்கின்றது என்பதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். அதேபோன்று தமிழ் ஈழ பிரதேசத்தில் வரலாற்று ரீதியான அரசியல் அனுபவங்களுடன் அன்றைய அறிஞர்களின் கூற்றுக்கேற்ப மக்கள் பிரதிநிதித்துவம் தழைந்தோங்கி நிற்கின்றது. இலங்கை தமிழரசுக்கட்சியின் வெற்றி அதனை உறுதிப்படுத்திவிட்டது. அதேவேளை தமிழ் மக்களின் நலனுக்காக எதிர்காலத்திற்காக இந்த ஏக பிரதிநிதித்துவம் தேவை என கருதிய இடத்து மக்களுக்கான பொறுப்பு என்ன என்ற கேள்வியும் எழுகின்றது. தற்போதைய நிலையில் எங்கள் தேவைகளை அந்த தலைமைத்துவம் செய்கின்றது எனக் கருதுமிடத்து அதனை தொடர்ந்தும் தக்கவைக்க மக்களும் சில பொறுப்புக்களை ஏற்கவேண்டும். ஆனால் அதனை நாம் செய்கின்றோமா, அனைத்துப் பொறுப்புக்களையும் தலைமையிடம் கொடுத்துவிட்டு நாம் காவல் காத்துக் கொண்டிருப்பது முறையல்ல. பொறுப்புக்களை ஏற்கும் போது நாம் கடைப்பிடிக்க வேண்டிய கோட்பாட்டு முறைகளையும் அவதானித்தல் அல்லது கருத்தில் எடுத்தல் அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

அரசியல் சிந்தனைகள்,
மதுரைக்காமராஜர் பல்கலைக் கழக நூல்.
டைசியின் கருத்தியல் சார்ந்த நீதித்துறையும் சட்டமும்,
சுப்பிரமணியம், தமிழ்நாடு.
சமூக ஒப்பந்தக்கோட்பாடு,
கொப்ஸ், லொக், றூஸோ.
அண்ணாமலை பல்கலைக்கழக நூல்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

**கரும்புலிகள்** ● பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் வாய்ந்த ஆயுதமாகவே கரும் புலிகளை நான் உருவாக்கினேன்.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

களம்புகல் ஓம்புமின் தெவ்வீர் !
எம்மில் உண்டு ஒரு பொருநன்
வைகல் எண்டேர் செய்யும் தச்சன்
திங்கள் வழித்த கால் அன்னோனே.

**"நாள் ஒன்றுக்கு எட்டுத் தேர் செய்யும் தச்சன் ஒரு மாத காலம் முயன்று உழைத்துச் செய்த தேர்ச்சக்ரத்தின் ஆரக்கால் போன்ற போர்வீரன் எம்மிடம் உள்ளான். சண்டைக்கு முண்டியடித்து வராதீர், பகைவரே !"**

பகையரசரின் அகந்தையை அறுத்திட இவ்விதம் உச்சரித்தாள் ஔவை. தமிழ் என்றால் வீரம் என்று பெருமிதம் கொள்ளும் வண்ணம் இத்தகைய இலக்கியச் சான்றுகள் எத்தனை எத்தனை !




## தியாகு

பொதுச்செயலாளர்,
தமிழ் தமிழர்
இயக்கம்.
தமிழகம்.


தமிழ் மக்களின் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - ஔவை சொன்னவாறான ஒரு போர் வீரன் அல்லன். அவ்வாறான பல்லாயிரம் வீரர்களுக்கு தலை வீரன். கொடும் பகை முகம் கொடுத்து விடுதலைக்காக போராடும் தேசியஇனத்தின் தலைவன் வீரனாய், பெருவரனாய், வீரமுதல்வனாய் இருந்தாக வேண்டும். அதற்கு மேலே எண்ணிய எண்ணியாங்கு எய்தும் திண்ணியனாகவும் இருத்தல் வேண்டும். எழுபதுகளின் பிற்பகுதியிலும் எண்பதுகளின் முற்பகுதியிலும் - அப்போது சிறையில் அடைபட்டிருந்த எனக்கும் தோழர்களுக்கும் - பிரபாகரன் அறிமுகமாகி அறியப்பட்டவரானது, வீரனாகவும் புலிப்படையின் வீரத்தலைவனாகவுமே !

தமிழகத்தில் கருவிப் போராட்டவழி புரட்சி நடத்தும் கருத்தில் துணிந்து செயற்பட்டு இளம் வயதில் சிறைப்பட்டிருந்த

# தீரன், திண்ணியன்



## தேசத்தலைவன்


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

## அகவை 50

ஏற்றிக்கொண்டேன்.

அந்த நம்பிக்கையின் வடிவாக வீர உதயம் செய்த என் இளவலே, இற்றைத் தமிழர் இதயம் தோறும் வீற்றிருக்கும் எங்கள் இனத்தின் தளபதியே. தமிழ் வீரமரபை மீட்டுக்கொணர்ந்த நீ தமிழனின் அனைத்துப் பெருமைகளையும் மீட்டுக்கொண்டு வரப்போகிறாய். அதை வரலாறு காணப்போகிறது. விரைவிலேயே காணப்போகிறது!

● சாலை இளந்திரையன்-1990.

### மாவீரன்.

இலங்கை ஒரே நாடு. நீங்கள் இந்நாட்டு மக்கள். நீங்கள் எங்களோடு இருந்துதான் ஆகவேண்டும் என்று கூறிக்கொண்டே அச்சிறுபான்மை மக்களை தரைப்படை, கடற்படை, விமானப்படை முதலியவைகளால் தாக்கி அழித்துக் கொண்டிருக்கும் கொடுமையை இலங்கையில்தான் பார்க்கமுடிகிறது. எல்லா வலிமைகளும் நிறைந்துள்ள ஒரு அரசோடு எவ்வித வலிமையும் இல்லாத ஒரு தனி மனிதன் பிரபாகரன் இரண்டு ஆண்டுகளாகப் போராடிக் கொண்டிருக்கிறான் என்ற செய்தி நம் உள்ளத்தைத் தொடுகிறது. திரு பிரபாகரன் வெற்றி பெறுவானா? தோல்வியடைவானா? என்பது வேறு செய்தி. அவன் அடையப்போவது வாழ்த்தா? வசையா? என்பதும் வேறு செய்தி. அவனது செயல் நல்லதா? கெட்டதா? என்பதில் மாறுபட்ட கருத்தும் இருக்கலாம். ஆனால் தந்தை செல்வாவின் வழிவந்த அவன் ஒரு மாவீரன் என்பதில் மாறுபட்ட கருத்து எவருக்கும் இருக்கமுடியாது.

● கி.ஆ.பெ. விசுவநாதன் -1990.

எங்களுக்கு தமிழீழத்தில் ஒரு இளைஞன் இளந் தலைவன் வெற்றிகரமாக விடுதலைப் போர் தொடுத்து வீரம் விளைத்து வரும் செய்திகள் பெரிதும் ஈர்ப்பாயின. மறுபுறம் தமிழீழ மக்கள், சிங்களப் பேரினவாத அரசு நடத்திய இன ஒடுக்கு முறையும் அடக்கு முறை பற்றிய செய்தி மீது வெளியில் போலவே சிறைக்குள்ளேயும் கொந்தளிப்பு உண்டாக்கின. இந்த கொடிய ஒடுக்கு முறைக்கும், அடக்குமுறைக்கும் எதிரான பிரபாகரன் தலைமையிலான விடுதலைப்புலிகள் நடத்தி வந்த வீரஞ்செறிந்த போராட்டத்தில் நாங்கள் கொண்டுள்ள ஈடுபாடும் வளர்ந்தது.

தமிழீழ போராட்டத்தின் வரலாற்று நியாயத்தை காணவிடாமல் மறைக்க சிவப்புத் திரைகளுக்கும் கூட உரிமையில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

வந்தது யூலை 83, இன அடக்கு முறை, இன அழிப்பாகி, அரச பயங்கரவாதம் கொலைத்தாண்டவம் ஆடிற்று. கறுப்பு யூலையில் வெலிக்கடை சிறையில் நடந்த கொடுவதைகளும் கோரக்கொலைகளும் நாகரீக உலகை அதிரச் செய்தன. தமிழகத்தை கொதிக்கச் செய்தன. கொதிப்பின் உச்ச நிலை சிறைகளிலே தான். இங்கே சிறைத் தமிழர்களைப் பொறுத்த வரை ஆத்திரத்தோடு ஆற்றாமையும் சேர்ந்து கொண்டது. - சட்டத்தால் தளையிடப்பட்டு அடைபட்டுக் கிடக்கிறவனால் சுவர் தாண்டி கடல் கடந்து கை நீட்டி கண்ணீரை துடைக்க முடியுமா? தசையெலும்பு பூட்டி வைக்கலாம். தளும்பும் மனவுணற்சிகளை பூட்டி வைக்க முடியுமா?, மதுரை சிறையில் சிங்கள அரச அதிபருக்குக் கொடும்பாவி கட்டிக் கொழுத்தினார்கள். திருச்சிராப்பள்ளி சிறையில் சிறைப்பட்ட அனைவரும் திரண்டு மவுன ஊர்வலம் நடத்தி மையத்திடலில் பொதுக்கூட்டம் நடத்தினோம். எல்லாச் சிறைகளிலும் ஒரு வேளை உண்ண மறுத்து எதிர்த்துப் போராடினோம். 1983 ஆண்டிறுதியில் தமிழக அளவில் எல்லா மையச் சிறைகளும் சேர்ந்து போராடிய போது, முதல் கோரிக்கையே இலங்கைத் தமிழர்களுக்கு உதவுகின்ற உரிமை வேண்டும் என்பது தான். தமிழீழ விடுதலை குறிக்கோளை ஆதரிப்பவர்களாகவும், புலிப்படையோடு ஒருமைப்பாடு கொண்டவர்களாகவும், தம்பியை நேசிப்பவர்களாகவும் நாங்கள் மாறிப்போனதில் ஒரு முரண்பாடு இருக்கவே செய்தது. - எங்களின் நிலைப்பாடு நாங்கள் சார்ந்திருந்த மார்க்சீயப் பொதுவுடமைக் கட்சிக்கு அடியோடு ஒவ்வாதது இந்தியாவில் தேசிய இன சிக்கல் குறித்தும், தமிழீழ தேசிய இனத்தின் தன் தீர்வுரிமை (சுயநிர்ணய உரிமை) குறித்தும் கட்சித் தலைமையோடு எங்களுக்கு மாறுபாடுகள் இருந்தாலும், தமிழீழ போராட்டம் தான் எங்கள் புரிதலை கூர்மையாக்கி முடிவை விரைவுபடுத்தியது. தமிழீழ போராட்டத்தின் வரலாற்று நியாயத்தை காணவிடாமல் மறைக்க சிவப்புத் திரைகளுக்கும் கூட உரிமையில்லை என்ற முடிவுக்கு வந்தோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்து ஆழ்ந்தகன்ற விவாதங்கள் நடைபெற்றன. எங்களுக்குள்ளே மட்டுமன்றி,

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தமிழீழம் தொடர்பான கோரிக்கைகளுக்காகவும் வேறு கோரிக்கைகளுக்காகவும் அறப்போராட்டம் நடத்தி சிறைக்கு வந்த வேறு பல கட்சித் தலைவர்களோடும் விவாதித்தோம். விடுதலையாகி வெளிவந்த போதும் விவாதித்தோம். இதனால் தமிழீழ விடுதலை நிலைப்பாடு உறுதிப்பட்டதோடு, தம்பி மீதான மதிப்பும் உயர்ந்தது. வீரத்துக்காக வியந்து வணங்கும் நிலை மாறி, விடுதலை அரசியல் பற்றிய தெளிவு வளர்ந்தது.

விடுதலை அரசியலின் நீட்சியே
விடுதலைப்போர்.

விடுதலை அரசியல் என்பது வரலாற்று நோக்கில் விடுதலை தேவைப்படும் நிலையிலுள்ள பொது மக்களை அறிவும் உணர்வும் ஊட்டி அணிதிரட்டி போராடச் செய்வதும், நட்பை சேர்த்துக் கொள்வதும், பகைமையை தனிமைப்படுத்துவதுமான முயற்சிகளைக் குறிக்கும். இம் முயற்சிகளை தொடர கருவியெடுக்கும் கட்டாயம் நேரிடும் போது விடுதலை அரசியல் விடுதலைப் போராக வடிவெடுக்கும்.



வினைவலியும் தன்
வலியும் மாற்றான்
வலியும்
துணைவலியும்
தூக்கிச் செயல்.
(திருக்குறள்)

அரசியலுக்கும் அதே போல் போருக்கும் வழிகாட்டும் படியான இந்த இலக்கணத்துக்கு இலக்கியமாக அன்று முதல் இன்று வரை பிரபாகரனின் வழிநடத்தல் விளங்கி வருகின்றது எனலாம். இந்தத் தலைவன் வெறும் வீரனல்லன் என்பதை 1987 நிகழ்ச்சிகள் மெய்ப்பித்தன. அப்பம் பிரித்த குரங்கின் வேலையை செய்ய முற்பட்டது இந்திய அரசு. இராசீவ் காந்தி - செயவர்த்தனா உடன் படிக்கையின் பேரால் இந்தியப்படை யாழ்ப்பாணத்தில் கனத்த கால் பதித்தது. ஈழ விடுதலைப் போராட்டத்தைச் சூழ்ந்த ஒரு புதிய நெருக்கடி - இந்தியா நண்பனா? - பகைவனா?

தமிழீழப் போராட்டம் தொடர்பான இந்திய அரசின் அணுகுமுறைக்கு இரு பக்கங்கள் உண்டு. இந்திய மக்களின் நலனையும், தமிழ் மக்களின் உணர்வையும் பிரதிபலிப்பதாக இருக்கும் வரை இந்திய அரசு தமிழீழ மக்களின் நண்பனாய் இருக்க முடியும். ஆனால் தேசிய இனங்களை ஒடுக்கும் இந்திய ஆளும் சக்திகளின் நலனையும், தெற்காசியா மீதான மேலாதிக்க நோக்கத்தையும் பிரதிபலிக்கின்ற அளவில் இந்திய அரசு தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கெடுக்கவே முற்படும். அடுத்தும் கெடுக்கலாம், எதிர்த்தும் கெடுக்கலாம்.

காலம் காலமாக இந்தியாவை நண்பனாகவே பார்த்துப் பழகிய தமிழ் மக்கள் இப்போது 1987 இலும் இந்தியப் படைகளின் வருகையை தங்கள் மீட்சிக்குத் துணை என்றே பார்ப்பது போலிருந்தது.

**இது மீட்க வந்த படையா? மிதிக்க வந்த படையா? என்று மக்களை சிந்திக்க வைத்தது.**

இந்திய அரசின் உள்நோக்கத்தை தெளிவாக புரிந்து கொண்ட பிரபாகரனின் தலைமை மக்களின் நாடித் துடிப்பை அறிந்து செயற்பட்டது. சுதுமலை அம்மன் திடலில் பிரபாகரன் ஆற்றிய உரை விடுதலை அரசியலில் அவரது தெளிவான தொலைநோக்கத்தைக் காட்டியது. கருவி மேல் காதலில்லை. மக்களின் பாதுகாப்புக்காகவே கருவி என்பதால் கருவியை பாதுகாப்பதற்கு மக்களை இழக்க வேண்டியதில்லை. கருவியை கையளிக்கின்றோம் என்றால் எமது மக்களின் பாதுகாப்பை கையளிக்கின்றோம் என்று பொருள். முதிர்ச்சியின் முத்திரை தாங்கிய இந்த அணுகுமுறை பழுத்த அரசியல் நோக்கர்களையே வியந்து நோக்கச் செய்தது. சொல்ல வல்லன் சோர்விலன், அஞ்சான் இவனே எனப் போற்றினோம்.

இந்தியப் படையின் செயற்பாடு... இது மீட்க வந்த படையா? மிதிக்க வந்த படையா? என்று மக்களை சிந்திக்க வைத்தது. புலேந்திரன், குமரப்பா உள்ளிட்ட பன்னிருவர் சிங்களப்படையால் சிறைப்பிடிக்கப்பட்டு நஞ்சுண்டு மாண்ட போது இந்தியா வேடிக்கை பார்த்த அவலம் தமிழீழ மக்களை அதிர்ச்சி அடையச் செய்தது. உடன் படிக்கையை செயலாக்குவதில் ஒப்புக்கொண்ட சிற்சிலவற்றைக் கூட நடைமுறைப் படுத்தாமல் இந்திய அரசு இழுத்தடித்ததை அம்பலமாக்கும் வகையில் புலிகள் அழைப்பை ஏற்று தமிழீழ மக்கள் அறப் போராட்டம் நடத்தினார்கள். கொல்ல வந்தவரை கொஞ்ச வந்தவராக பார்க்கும் பனிப்படலம் விரைந்து விலகலாயிற்று. இந்த அறப் போராட்டத்தின் எச்சம் தான் திலீபனின் பட்டினிப் போர். அது இறுதியாகவும் உறுதியாகவும் தில்லிக் கழுகின் புறாச் சிறகைக் கழற்றிப் போட்டது.

Tamileelam Archive

# அகவை 50

## பத்தாண்டின் மாமனிதன்.

எண்பதுகளில் தமிழ்ஈழத்தினதும் சிங்கள தேசத்தினதும் அரசியற் தலைவிதியை ஆட்டிப்படைத்து, தொண்ணூறுடன் முடிவடைந்த ஒரு முதன்மையான பத்தாண்டின் வரலாற்றுத் தலைவராகப் பிரபாகரன் விளங்குகிறார் என்று கூறுகிறார் லங்கா கார்டியன் இதழின் ஆசிரியரும் புகழ்பூத்த அரசியல் ஆய்வாளருமான மேர்வின் டீசில்வா. புயலின் மையமாக நின்று தமிழரின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த வீரன் என்பதற்காக ஒரு பத்தாண்டுகளின் மாமனிதன் எனப் பிரபாகரன் பேற்றப்படுகிறார் என்பது, அவர் லங்கா கார்டியனில் செய்த இன்னொரு கணிப்பு. இந்தக கணிப்புத் தவிர்க்க முடியாத வரலாற்றின் தீர்ப்பு என மனந்திறந்து எழுதியிருக்கிறார் மேர்வின் டீசில்வா.



தொண்ணூறிலிருந்து தொடர்ந்து இப்போது கடைசிமூச்சை விட்டுக்கொண்டிருக்கின்ற அடுத்த பத்தாண்டு, தலைவர் பிரபாகரனை நூற்றாண்டுத் தலைவராக உயர்த்தியிருப்பதை அவர் இன்று உயிரோடு இருப்பின் உணர்ந்து எழுதியிருக்கக்கூடும். அப்படி எழுதவேண்டிய வரலாற்றுத் தீர்ப்பினை, காலத்தின் கட்டளை அவருக்கு நிச்சயம் விதித்திருக்கும்.

● வே. இளங்குமரன்.
(தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர்.)

திலீபனின் ஈகம் உலக வரலாற்றிலே தனித்துவமானது. இந்த தனித்துவமான தியாக மறவனை வளர்த்தெடுத்த தலைமையின் மகத்துவத்தை என்னென்பது! இறந்தும் வென்ற திலீபனின் போராட்டம், இந்தியாவின் அரசியல் தோல்வியைக் குறித்தது. அந்த அரசியல் தோல்வியை இராணுவ தோல்வியாக மாற்றத்தான் ஒன்றரை ஆண்டுகளுக்கு மேல் பிரபாகரன் தலைமையில் புலிப்படை வீரப்போர் புரிந்தது. மண்ணையும் மக்களையும் சார்ந்து நின்று போர் புரிந்தால், எவ்வளவு பெரிய வல்லரசுப்படையையும் முறியடிக்க முடியும் என்ற வரலாற்று படிப்பினையை வியட்நாமுக்கு பிறகு உலகுக்கு உணர்த்தியது தமிழீழம்.

> தமிழீழ விடுதலைப்போர் வரலாறு கண்டெடுத்த தலைசிறந்த கருவி பிரபாகரனே.

திலீபனின் ஈகம் ஏற்படுத்திய தாக்கம் கருதியும், தமிழீழ போராட்டத்தை கொள்கை வழி நின்று ஆதரிக்கும் நோக்கம் கருதியும் 1990 செப்டெம்பரில் என்னை அமைப்பாளராகக் கொண்டு தமிழகத்தில் திலீபன் மன்றம் நிறுவப்பட்டது. அதன் மூன்று நிலைப்பாடுகள்

1. தமிழீழ விடுதலை ஒரு வரலாற்றுத் தேவை
2. இராசீவ் - செயவர்த்தனா உடன்படிக்கை ஈழத் தமிழர் நலனுக்கு பகை.
3. தமிழீழ விடுதலைப் போரில் விடுதலைப் புலிகளை ஆதரிப்போம்!

அரசும் காவல்துறையும் செய்த கெடுபிடிக்கும் நெருக்கடிக்கும் இடையில் திலீபன் மன்றம் தனக்குரிய பங்கினை ஆற்றிவந்தது.

திலீபன் மன்றமும் விடுதலைக் குயில்களும் தமிழ் தமிழர் இயக்கமாக இணைந்த பிறகும் மேற்கூறிய நிலைப்பாடுகளில் எந்த வித மாற்றமும் இல்லை. தடைச்சட்டங்கள், அடக்குமுறை நெருக்கடிகள், அதிகார கெடுபிடிகள் யாவற்றுக்குமிடையே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து நிற்கின்றோம். பிரபாகரனின் தலைமை மீது உறுதியான நம்பிக்கை வைத்துள்ளோம். எந் நிலையிலும் இதில் எமக்கு ஊசலாட்டமில்லை.

இது வெறும் வீரவணக்கமோ நாயக வழிபாடோ அல்ல என்பதை தெளிவுபடுத்தியாக வேண்டும். வரலாற்றை உருவாக்குபவர்கள் பொதுமக்களே. எவ்வளவு பெரிய தலைவனாயினும் வீரனாயினும் வரலாற்றின் கருவியே என்பதில் ஐயமில்லை. தமிழீழ விடுதலைப்போர் வரலாறு கண்டெடுத்த தலைசிறந்த கருவி பிரபாகரனே. வரலாற்றால் கண்டெடுக்கப்பட்டு வரலாற்றை வடிப்பவராக திகழ்வதால் அவரே வரலாற்று நாயகன்.

தேசியத் தலைவர் என்பது அலங்காரப் பட்டமன்று. அது கடினமான பெரும் பொறுப்பு. இந்தப் பொறுப்பை உணர்ந்து இன்னல்களையும் இடர்மிகுந்த திருப்பங்களையும் கடந்து தன் மக்களை வழி நடத்தி வருவது பிரபா

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

கரனின் தனிச்சிறப்பே. தமிழகத்தில் தமிழ் தேசியப் புரட்சிக்காக உழைத்து வரும் எம்மைப் போன்றோர் பிரபாகரனின் போராட்ட வரலாற்றிலிருந்து நிறையக் கற்கவும் கடைப்பிடிக்க வேண்டியதிருப்பதாகக் கருதுகின்றோம். ஒரு சிலவற்றை ஈண்டு குறிப்பிடலாம்.

ஒரு மக்களினத்தை ஒன்றுபடச் செய்து பகைவனுக்கு எதிராக அணிதிரட்ட வேண்டுமானால் அவ்வினதிற்குள்ளான முரண்பாடுகளை பூசிமொழுகுவதன்று விழா. அவற்றுக்கு முறையானதாய் தீர்வு காண வேண்டும். பிரபாகரனின் தலைமை சிங்களப் பேரினவாதத்தையும், அதற்கு துணை வந்த பிறரையும் எதிர்த்து போராடும் போதே தமிழ் மக்களின் ஓர்மையைச் சிதைத்து ஒற்றுமையைக் கெடுக்கும் சாத்தியத்தையும், ஆணாதிக்கத்தையும் எதிர்த்துப் போராடியுள்ளது. இந்தப் போராட்டத்தில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமும் கண்டுள்ளது. தமிழ் மக்களின் வெல்லற்கரிய வலிமைக்கு இந்த புரட்சிகர ஒற்றுமையே அடித்தளமாகும். தமிழீழ தேசியத்துக்கான போராட்டம், சாதியொழிப்பு அல்லது சமூக நீதிக்கான போராட்டம் இவ்விரண்டின் இடையூறையும் புரிந்து உள்வாங்கிக் கொள்ள தமிழீழம் நமக்குதவும்.



பிரபாகரன் மிகச்சிறந்த தளபதி என்பதை மாற்றாரும் மறுக்கமாட்டார். ஆனால் வெறும் படைத் தளபதியல்லர். மக்கள் விடுதலைப் போரின் தலைவர் என்பதை அவரின் பேருத்திகளே காட்டும். ஆள் வலிமை, அறிவியல் - தொழில் நுட்ப வலிமை, ஆயுத வலிமை என அனைத்துவகை வலிமையோடும் அடக்கி ஒடுக்கும் ஆதிக்கத்தை எதிர்த்து மக்கள் ஆதரவில் மட்டும் சார்ந்து போராடுவதற்கான உத்தியாக உலக வரலாற்றில் கெரில்லா போர்முறை வளர்த்தெடுக்கப்பட்டது. நெல்லியடியில் மில்லர் தொடக்கி வைத்த தற்கொடைப் போர்முறை கொரில்லாப் போர் முறையின் உச்சகட்ட வளற்ச்சியாகும்.

ஒரு சிறுபான்மை தேசிய இனம் தன்னந்தனியாக நின்று பேரினவாத அரசையும் அதற்குத் துணையாக வரும் வல்லாதிக்க சக்திகளையும் எதிர்த்துப் போராடுவது. எளிதன்று தன் தரப்புக்கு ஆக்க குறைந்த இழப்போடு பகைத் தரப்பை பெருமளவுக்கு நெருக்கி சிதறடிக்கும் தற்கொடைப் போர்முறையே இந்தக் கடினமான பயணத்தில் திறம் மிகு தடைநீக்கி என்பதை தமிழீழ போராட்ட வரலாறு மெய்ப்பிக்கின்றது. எந்தப் படையாலும் கரும்புலிகளின் உயிராயுதத்துக்கு எதிர்த்து நிற்க முடியாது. இதுவே தற்கொடை போர்முறையை வகுத்து வழி நடத்துவதில் பிரபாகரனின் போர்த் திறன் மட்டுமல்ல, விடுதலை அரசியலின் வித்தக நோக்கும் முன்னிற்கின்றது.

**ஒரு கை அமைதிக்காக! ஒரு கை போருக்காக! எந்தக் கை வேண்டுமென்று பகைவனே முடிவுசெய்யட்டும்.**

விடுதலைப் போராளிகள் அமைதியையே விரும்புகின்றனர் - இது இடு காட்டு அமைதியாய் இருந்துவிடக்கூடாது என்ற எச்சரிக்கையோடு! உரிமையோடு சேர்ந்து வரும் மெய்யமைதிக்காகவே அவர்கள் போராடுகின்றார்கள். விடுதலைப் போராளிகள் தன் இரு கைகளையும் உயர்த்திக் காட்டுகின்றான். ஒரு கை அமைதிக்காக! ஒரு போருக்காக! எந்தக் கை வேண்டுமென்று பகைவனே முடிவுசெய்யட்டும். அமைதி என்றால் அமைதி! போர் என்றால் போர்! எது வேண்டும் சொல் பகையே! இது விடுதலைப் போராளியின் அணுகுமுறை.

பிரபாகரன் சண்டைப் பிரியர், சமாதானத்தின் பகைவர் என்றெல்லாம் பாக்கு நீரிணையின் அப்பக்கமும் இப்பக்கமும் வரட்டுத் தவளைகள் போல் கத்திக்கொண்டிருப்பவர்கள் எங்கே? பிரபாகரனின் அமைதி முயற்சி மெய்யான சண்டைப்பிரியர்களை காட்டிக் கொடுத்து விட்டது.

தமிழீழத்துக்கான போராட்டம் போர் வழி நடந்தது. இப்போது அமைதி வழி தொடர்கிறது. எப்படியும் அது முன்னேறிச் செல்கிறது. வீரனாகவும், அதற்கு மேல் விடுதலைப் போர் வித்தகனாகவும் மக்களை கைப்பிடித்து அழைத்துச் செல்லும் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் வழிகாட்டுதலில் இறுதி வெற்றி உறுதி. அது ஒரு தேசத்தின் வெற்றி. விடுதலை நாடும் அனைவரினதும் வெற்றியும் கூட!

## ஒளிக்கதிர்களுக்கு எல்லைகள் உண்டோ?

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

உலக இராணுவ மேதைகளின்

# புரியாத புதிராய் விரியும்

தேசியத்தலைவர்

# பிரபாகரன்

01 இன்று உலகின் கண்களுக்கு புலப்படாத - புரிபடாத பல விடயங்கள் இப்பரந்த பூமியெங்கும் இறைந்து கிடக்கிறது. அவற்றுள் போரியல் சார்ந்து முக்கியமானதும் முதன்மையானதாகவும் தமிழர் சேனைகளான தமிழீழ விடுதலைப்புலிகளின் வீரம் பார்க்கப் படுகிறது. உலகின் படைத்துறை ஆய்வாளர்கள், இராணுவ மேதைகள், உளவுத்துறையினர், இராணுவ கோட்பாட்டாளர்கள் பலரின் போரியல் சமன்பாடுகளுக்குள் புலிகளை அடக்க முடியவில்லை. அவர்களின் கணிப்பீடுகள், மதிப்பீடுகள் இன்று தமிழீழத்தில் கலைத்துப் போடப்பட்டுள்ளன. உலக இராணுவ மேதை



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

களினதும் படைவரலாற்றாளர்களினதும் சமன்பாடுகளுக்குள் அடங்க முடியாமல் திமிறிக்கொண்டு நிற்கிறது புலிகள் சேனை. புலிகளின் வீரத்தை உணரமுடிகிறதேயொழிய உற்றுப்பார்க்கமுடியவில்லை. காற்றைப்போல் அலையும் மையமாகியிருக்கிறது அவர்கள் போர்த்திறனும் வீரமும். 'இப்படித்தான் இருப்பார்கள்' என்று எல்லோராலும் கணிக்கப்படுகிறபோது புலிகள் அந்த கட்டத்திலிருந்து வேறொரு கட்டத்திற்கு சத்தமின்றி பாய்ந்துவிடுகிறார்கள். முடிவில் மீண்டும் அறுபடமுடியாத புதிராய் புலிகள். புலிகளின் இந்த வீரம் எதிரிகளை கிலி கொள்ளச்செய்கிறது. தமிழனை தலை நிமிரச் செய்கிறது.

தொடரும் இராணுவ வெற்றிகளின் வரிசையில் குடாரப்பு தரையிறக்கம் உலக இராணுவ பயிற்சிக் கல்லூரிகளில் பாடத்திட்டமாகியது. தீச்சுவாலை எதிர் நடவடிக்கை அடுத்த அத்தியாயமாகியது. உலகம் பயந்தது. தமது இராணுவக் கல்லூரிகளின் பாடத்திட்டங்களை தமிழர் சேனையின் இராணுவ நகர்வுகள் நிரப்பப்போகும் அபாயத்தை உணர்ந்தன. முடிவு இலங்கை அரசை சமாதானப் பேச்சுவார்த்தைக்குப் பணித்தது. தமிழர் சேனை தனது அசுர பலத்தின்மூலம் பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்தது. எல்லாம் பலத்தில் தீர்மானிக்கப்பட்டது. எல்லாமுமே...

தமிழர் சேனையின் படை பலம் குறித்த முக்கிய பகுதிகளை நாம் விவாதிக்கும் முன்பு இன்றைய சூழலில் புலிகள் பற்றி பொத்தாம் பொதுவாக உள்ள புரிதலை நாம் உணர்ந்தாக வேண்டும்.

இன்று உலகம் புலிகள் மீதான தமது முன்னைய பார்வையைப் புறந்தள்ளிவிட்டு புதிய கோணத்துடன் புலிகளை அணுகுகின்றது. இதற்கு ஆயிரம் காரணங்கள் சொல்லப்பட்டாலும் (தமிழ் மக்கள் ஒட்டுமொத்தமாக புலிகளை ஏகப் பிரதிநிதித்துவப்படுத்தியமை, புலிகளின் அமைதிப் பேச்சுவார்த்தை - இன்னும் பிற) உண்மை அதுவல்ல. புலிகளின் படைத்துறை வளர்ச்சியும் இராணுவச் சமநிலையுமேயாகும். தமிழ்ச்சேனை தனது அசுர பலத்தின் மூலம் இந்த நிலையை வந்தடைந்திருக்கிறது. இதைத் தக்கவைக்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

## 02

போரில்லாத ஒரு சமுதாயம் சாத்தியமா! எந்தக் கோணத்தில் ஆராய்ந்தாலும் பதில் இல்லை என்பதாகவே இருக்கிறது. இது ஒரு கசப்பான எதார்த்தம். உலகெங்கும் உற்று நோக்கினால் அமைதி சமாதானம் என்ற சொல்லாடல்கள் பேச்சளவிலேயே தங்கிவிடுகின்றன. செயலளவில்




**பரணி**

ஊடகவியலாளர்,
ஆய்வாளர்,
விமர்சகர்.
பிரான்ஸ்.


தனிமனிதன் தொடங்கி நிறுவனங்கள்வரை எந்தக் கணமும் வன்முறையை கட்டவிழ்த்துவிடும் நிலையிலேயே இருக்கின்றன. இது ஒரு விசித்திரமான எதார்த்தம். சாணக்கியரின் சிறிய மீனை பெரிய மீன் விழுங்கும், டார்வினின் தகுதியுள்ளவை உயிர்வாழும் என்ற கதையாடல்களை நேரொத்தவை. இதையே சற்று நாகரீகமான மொழியில் சிக்மன்ட் ப்ராய்ட் சொல்கிறார் `தற்காப்பு என்பது ஓர் இயற்கையான உணர்வு என்பதுடன் நீடித்த வாழ்க்



கைக்கு அது அவசியமுமாகும்'. இந்தக் கோட்பாடுகளை தமிழர்கள் புறக்கணிப்பார்களானால் அவர்களை செப்பேடுகளிலும் நாணயங்களிலும்தான் தேடவேண்டிவரும்.

தமிழர்களின் சுதந்திரமான வாழ்விற்கு தமது படைக் கட்டமைப்பையும் வீரத்தையும் தொடர்ந்து பேணுவது அவசியம். போரைத் துறந்த சமுதாயத்தை வரலாறு கண்டதில்லை என்பதும், வாள்கள் மோதும் ஓசையும், போர் முரசுகளின் ஒலியுமே வரலாற்றின் போக்கில் திருப்பு முனைகளாக இருந்திருக்கின்றன என்பதும் போர் அறிவியல் வரலாறு நமக்குச் சொல்லும் செய்தியாகிறது. இதற்குத் தமிழன் மட்டும் விதிவிலக்காக முடியுமா! தமிழர் மீது போர் கட்டவிழ்ந்ததும் தமிழர் சேனை அதை வெற்றிகரமாக எதிர்கொண்டதும்

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

வரலாற்றின் பக்கங்களில் செறிந்து கிடக்கிறது.

உண்மையான வரலாற்று நிகழ்வுகளுடன் பல கட்டுக்கதைகளும் புனைவுகளும் கலந்திருப்பதாலும் சங்க கால வரலாற்றின் காலவரிசையை அறுதியிட்டுக் கூறமுடியாததாலும் - சில சிறிய சமர்களை புறந்தள்ளிவிட்டுப் பார்த்தால் - தமிழர் சேனை எதிர்கொண்ட முதல் முக்கிய போராக அதியன் மரபினனான எழினியை கோசர்களின் உதவியுடன் தோற்கடித்து துளுநாட்டைக் கைப்பற்றிய மௌரியர்கள் மீது சோழ மன்னன் இளஞ்சேற்சென்னி தொடுத்த போரே முதற்போர் எனலாம். (தனக்குக் கீழிருந்த சேரர், பாண்டியரையும் பிற சிற்றரசர்களையும் சேர்த்து ஒரு கூட்டணியாக போர்தொடுத்தான்.) இப்போரை வரலாற்றறிஞர்கள் செருப்பாழிப்போர் என்று குறிப்பிடுகின்றனர்.

உலக இராணுவ மேதைகளினதும் படைவரலாற்றாளர்களினதும் சமன்பாடுகளுக்குள் அடங்க முடியாமல் திமிறிக்கொண்டு நிற்கிறது புலிகள் சேனை. புலிகளின் வீரத்தை உணரமுடிகிறதேயொழிய உற்றுப்பார்க்கமுடியவில்லை. காற்றைப்போல் அலையும் மையமாகியிருக்கிறது அவர்கள் போர்த்திறனும் வீரமும்.

இவ்வாறாக நீண்டு தொடரும் தமிழர் போரியல் வரலாறு கட்டப்பொம்மன் தூக்கிலிடப்பட்டதுடன் முடிவுக்கு வருகிறது. இது தமிழகப் போரியல் வரலாறு. ஈழத்தில் போரின் ஆரம்பம் சரியாகக் கணிக்கப்படமுடியாவிட்டாலும் எல்லாளன், சங்கிலியன் என்று நீண்டு பண்டாரவன்னியனுடன் ஒரு தற்காலிக முடிவுக்கு வருகிறது. பல புதிய சாத்தியங்களைத் திறப்பதற்காக போரியல் சமன்பாடுகளைக் கலைத்துப் போடுவதற்காக பிரபாகரன் என்ற மனிதனுக்காக வரலாறு வழிவிடுகிறது.

## 03

போர் அச்சுறுத்தல் இல்லாத நாடுகள் கூட தமது இராணுவக் கட்டமைப்பிற்காகவும், பாதுகாப்பிற்காகவும் பெருமளவு நிதியை ஒதுக்குவதை கண்கூடே காண்கின்றோம். ஒருகாலத்தில் உலக அதிகார அரசுகள் தமது இருப்பை உறுதி செய்வதற்காக சிறிய நாடுகள் மீது போர் தொடுத்து காலனித்துவ நாடுகளாக்கின. காலனிய நாடுகளின் வளங்கள் சுரண்டப்பட்டதுடன், அங்கிருந்த வேறுபட்ட சமூகங்களுக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவித்து இனச்சிக்கலையும் தோற்றுவித்தன. காலனிய நாடுகளில் இருந்து வெளியேறும்போது பெரும்பான்மை இனங்களுக்குள் சிறுபான்மை இனங்கள் அடங்கியிருக்கக்கூடியவாறு சட்டங்களை உருவாக்கிவிட்டுப் போயின. இதன் பின்னுள்ள அரசியல் ஆழமானது. இலங்கைத் தீவிலும் ஆங்கிலேய அதிகார வர்க்கத்தால் இத்தகைய ஒரு சூழல் உருவாக்கப்பட்டது வரலாறு. கீழை நாடுகளில் கட்டங்கட்டமாக பரவும் இன மொழி சமய முரண்பாடுகளை மேலைத்தேயம் உருவாக்குகிறது - ஊக்குவிக்கின்றது என்ற கதையாடல் மிகைப்படுத்தப்பட்டதல்ல. அறம் நீதியைப் பேசும் மனித சமுதாயத்தின் குரூரமான முகங்களில் இதுவும் ஒன்று. மனித விழுமியங்கள் உடைந்து சிதறுகின்றன நம் கண்முன்னே.

மற்றவர்களை பலவீனர்களாக வைத்திருப்பதன் மூலம் தம்மை பலமானவர்களாக்கி தமது இருப்பை உறுதிசெய்யும் உத்தி இது. சமகாலத்தில் நம் முன்னே விரியும் உலக அரசியல் நகர்வுகள் இவை. தமது பின்கொல்லையில் அணுஆயுதங்களை அழகாக அடுக்கி வைத்துவிட்டு அணுஆயுத ஒழிப்புப் பற்றி ஒற்றை அறம்பேசும் முரணான மேற்கத்தேய உலகத்திற்கு ஈடுகொடுத்து எமது போராட்டம் முன்னெடுக்கப்படுவது அவ்வளவு இலகுவான விடயமல்ல.

இந்த முரண்பட்ட உலகத்தோடு போட்டிபோட்டு எமது விடுதலைக்கான எத்தனங்களைச் சாத்தியப்படுத்தக்கூடிய ஒரு தலைமை பிரபாகரன் மூலம் எமக்குக் கிடைத்திருக்கிறது. அவரது இராணுவ நகர்வுகளும், அரசியல் தந்திரங்களும் அசாதாரணமானவை. வளையவேண்டிய இடத்தில் வளைந்து நிமிரவேண்டிய இடத்தில் நிமிர்கிறார்.

## 04

பிரபாகரன் காலத்தில் அவர் தலைமையின் கீழ் எமது விடுதலை கிடைக்காவிடின் இனி ஒருபோதும் அது எமக்குக் கிடைக்கப்போவதில்லை.

இது பிரபாகரன் என்ற மனிதன் மீதுள்ள பிரேமையினால் மொழியப்படுகின்ற உணர்ச்சி மிகுந்த கதையாடல் கிடையாது. உண்மை சார்ந்த உரையாடல் இது. தமிழர் வரலாற்றை மட்டுமின்றி இந்த பூமிப் பந்தெங்கும் அதிகார வர்க்கங்களுக்கெதிராகப் போராடும் ஒவ்வொரு இனத்தினதும் தலைவர்களது தோற்றத்தையும், வளர்ச்சியையும் தர்க்க


தமிழ் ஆவணகாப்பகம் Tamileelam Archive

ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் ஆய்வுக்குட் படுத்தும்போது பிரபாகரன் என்ற மனிதனின் தனித்துவம் எமக்கு வெளித்தெரியும். தமிழின விடுதலைவேட்கையின் ஒரு குறியீடாகத் திகழ் கிறார் பிரபாகரன். பிரபாகரன் காலத்தின் கட்டா யம். அவரை ஒரு சட்டகத்துக்குள் அடக்கிவைத்து மதிப்பிடுவது எமது விடுதலையை பின்னடையச் செய்யும். தமிழின விடுதலைக்காக எதையும் செய் யத் தயாராக இருக்கிறார். எதையுமே! உலகத்தின் முத்திரை குத்தலுக்கு அஞ்சவில்லை.

தமிழர் படைக் கட்டமைப்பினை ஒரு சீரான முறையில் வளர்த்தெடுத்திருக்கிறார் பிரபாகரன். நீண்ட காலத்திற்குப் பிறகு இது தற்போது சாத்தி யமாகி இருக்கிறது. இதையொருபோதும் நாம் சிதையவிட அனுமதிக்க முடியாது- கூடாது. நாம் தற்போது வந்தடைந்துள்ள நிலை எமது பலத்தால் வந்து சேர்ந்து என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடல் ஆகாது.

தொடரும் அமைதிச்சூழலிலும் புலிகளின் படைத் துறை கட்டமைப்பு குறித்து சரியாக கணிக்கமுடி யவில்லை. ஒரு விடுதலைப் போராட்ட அமைப்பு எவ்வளவு காலத்திற்கு போரில் ஈடுபடாமல் தமது படைக்கட்டமைப்பைப் பேணமுடியும் என்று கேள்வி எழுப்புகிறார்கள் படைத்துறை ஆய்வாளர்கள். அமைதிச்சூழலில் புலிகளின் போர்முனைப்பும் போர்த்தயார் நிலையும் சிதறடிக்கப்படும் என்றே கணிக்கப்பட்டது. கடந்த வருடம் அதுவும் கருணா விவகாரம்மூலம் பொய்யாகிப்போனது.

பிரபாகரன், சமாதான காலத்திலும் தமிழர் சேனையை மிக இறுக்கமாக கட்டமைத்திருப்பதை அவதானிக்க முடிகிறது. இந்த நிலையிலிருந்து தான் ஈழவிடுதலைப்போராட்டம் மீதான சிறந்த தொரு வாசிப்பை நிகழ்த்த முடியும். ஈழவிடுதலை யின் தரிசனமாய் ஒரு சீரான அலைவரிசையில் தலைவர் பிரபாகரன் கடந்து செல்வதை காண முடிகிறது.

## 05

தமிழர் சேனையிடமிருந்து எத்தனையோ போரி யல் பாடங்களை கற்று பித்தம் தெளிந்த பின்ன ரும், சிங்களமும் சில அந்நியசக்திகளும் சமாதான காலத்தைப் பயன்படுத்தி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சிதைக்க முனைப்புக் காட்டுகின்றன. ‘கெடுகிறேன் பிடி பந்தயம்’ என்ற கணக்காய் தமது அழிவுக்கு வழி கோலுகின்றன.

அமைதிவழியில் தமிழர் பிரச்சினைக்கு தீர்வை தேடுவது அனைவருக்கும் நல்லது. இல்லையேல் தமிழர் சேனையால் போரியல் வரலாற்றில் புதி தாய் சில சமன்பாடுகளும் கோட்பாடுகளும் இலங் கைத்தீவில் எழுதப்படும். இரத்தத்தாலும் கண்ணீ ராலும் எழுதப்பட்ட ஒரு வீரஞ்செறிந்த உரிமைப் போரை எந்த காரணத்துக்காகவும் விட்டுக்கொடுக்க முடியாது.

இன்று ஈழவிடுதலைப்போராட்டம் என்றுமில் லாத ஒரு புதிய நெருக்கடிக்கு முகம் கொடுத்து நிற்கிறது. எதிரிகள் துரோகிகள் அந்நியசக்திகள் இணைந்த ஒரு புதிய வலைப்பின்னல் தமிழர்களுக் கெதிராக இறுக்கமாகப் பின்னப்பட்டுள்ளது. சமாதான காலத்தை தமக்கு சாதகமாக திசை திருப்பியுள் ளது இக் கூட்டணி. கையறுநிலையில் தமிழினம், தலைவனை மட்டும் நம்பியபடி...

பிரெஞ்சு தத்துவமேதை ழான் போத்ரியா நியூயோர்க்கில் நடைபெற்ற செப்டெம்பர் 11 தாக்குதலை முன்னிறுத்தி பின்வருமாறு கூறினார்.



‘அனைத்து சீட்டுக்களையும் தன்னிடம் வைத் துக்கொண்டு அதிகார அரசு நடத்திய விளை யாட்டில் மறுதரப்பு விளையாட்டின் விதிகளை மாற்றவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்பட்டது. அவ் விதிகள் கொடூரமானவை. ஏனெனில் அவை இறுதி யானவை என்பதால்’

இலங்கைத்தீவிலும் சிங்களம் அனைத்து சீட்டுக்களையும் தன்னகத்தே வைத்துக்கொண்டு எம்மை விளையாட்டுக்கு அழைக்கிறது. சீட்டுக் களை சரியான விகிதத்தில் பகிர்ந்தளித்து விளை யாட்டை தொடர்வது சிங்களத்துக்கு நல்லது. தொடர் ந்து மறுத்தால் தமிழர் தரப்பும் ழான் போத்ரியா குறிப்பிட்டது போல் விளையாட்டின் விதிகளை மாற்றவேண்டிய சூழ்நிலைக்கு தள்ளப்படும். அவ் விதிகள் கொடூரமானவை. ஏனெனில் அவை இறுதியா னவை என்பதால். ‘அவலத்தை தந்தவனுக்கே அதை திருப்பி கொடு’ - இது தலைவனின் வரிகள்.

Tamileelam Archive

**பொங்குதமிழ்** ● எமது மாவீரர்களின் சுதந்திர தாகம் சாவுடன் தணிந்து போகவில்லை.
அது எமது இனத்தின் வீர விடுதலைக் குரலாக உலகெங்கும் ஒலித்துக் கொண்டிருக்கிறது.



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive


# விடுதலைக்கான உணர்வு செயல்வடிவில்

மேற்கு நாட்டில் பிறந்து வாழ்பவர் என்ற முறையிலும், இத்தாலி (பாசிச ஆட்சியிலிருந்து விடுதலை பெற்றது), இந்தியா (காலனித்துவ ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்றது), தென் ஆபிரிக்கா (இன வேறுபாட்டிலிருந்து விடுதலை பெற்றது) போன்ற பல தரப்பட்ட நாடுகளுக்கு பிரயாணம் செய்தவர் என்ற முறையிலும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் திரு பிரபாகரன் அவர்களின் 50வது பிறந்த தினத்திற்கு வாழ்த்துச் செய்தி கொடுப்பதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகிறேன்.

எனது இதயத்திலிருந்து சொல்லப்படும் எந்த உண்மைகளையும் நான் மறைக்க விரும்பவில்லை.

இத்தாலிய நாட்டின் நவீன சரித்திரத்தில், சர்வதிகாரி முசோலினியின் ஆட்சி கவிழ்க்கப்பட்டது உள்ளடக்கப்பட்டுள்ளது. இத்தாலிய நாட்டின் பிரபல்யமான கலாச்சாரத்தில், சரித்திரத்துவம் வாய்ந்த விடுதலை பாடல்களாகவும், சித்திரங்களாகவும் காட்டப்பட்டுள்ளது. இந்தியாவில் காலனித்துவ ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போராட்டம் பெரும் விடுதலை அமைப்பினால் உலகம் பூராகவும் கட்டுரைகள், திரைப்படங்கள் மூலம் கொண்டாடப்பெற்றது. இது சாத்வீகப் போராட்டம் என்று கூறப்பட்டபோதும் விடுதலைக்காக இரத்தம் சிந்தப்பட்டது. தென் ஆபிரிக்காவில் வெள்ளையரின் ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போராட்டம் அங்கு நீதி, சமத்துவம், சகலருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் விடுதலை பெற்றது.

திரு பிரபாகரன் அவர்கள் தனது 50வது பிறந்த தினத்தை கொண்டாடும் இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கில் ஓர் வேறுபட்ட நிலைமையை என்னால் காணமுடிந்தது. அங்கு விடுதலைக்கான செயற்பாடுகளை உணரக்கூடியதாக உள்ளது. நிலை நிறுத்தக்கூடிய நன்றாக திட்டமிடப்பட்ட தொழில் நுட்ப வேலைப்பாடுகள், ஏழ்மைநிலை மேன்மைப் படுத்தும் திட்டங்களான குழந்தைகளுக்கும் பெற்றோர்களுக்குமான போசாக்கு திட்டங்கள், போரினால் பாதிக்கப்பட்ட பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கான பல திட்டங்கள், போரினால் மன நிலை பாதிக்கப்பட்ட பெண்களுக்கான திட்டங்கள், நிலக் கண்ணிவெடி அகற்றும் பிரிவுபோன்றவை அடங்கும்.





**டியற்றி மக்கொனல்**

மனித உரிமைச் செயற்பாட்டாளர். பிரித்தானியா.

இருபது வருடகாலம் யுத்தத்தினால் இரத்தக் களரியான இத்தீவுக்கு, நான் நான்கு தடவை மாத்தறையிலிருந்து காங்கேசன்துறை வரையும்- மட்டக்களப்பு, திருகோணமலை, மலைநாடு உட்பட விஜயம் செய்துள்ளேன். அங்கு பல தரப்பட்ட மக்களையும் கண்டு உரையாடியுள்ளேன். நான் அங்கு வடக்கு கிழக்கில் கண்டவற்றை 'அரசாங்க கட்டுப்பாட்டு பகுதி' ஆகியவற்றை ஒத்துப் பார்க்கத் தூண்டியது.

இப்பகுதிகளினிடையே உள்ள பெரும் வித்தியாசங்களை ஒருவர் கவனிக்கக் கூடியதாக உள்ளது. திரு. பிரபாகரன் அவர்களின் வழிகாட்டலில் போரி

தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

னால் பாதிக்கப்பட்ட சிறுவர், பெண்கள், காயப் பட்ட போராளிகள், பொதுமக்கள் ஆகியோர் அர சாங்கத்தின் எந்த உதவியுமின்றி, மிகவும் அவ தானமாக கவனிக்கப்படுகிறார்கள். இதை நான் மட்டுமல்ல என்னைப் போன்று அங்கு விஜயம் செய்த பல மேற்கு நாட்டவர்கள் இவர்களின் வெற்றி கரமான பராமரிப்பு முறைகளைக் கண்டு மிகவும் ஆச்சரியப்படுகிறார்கள்.

திரு. பிரபாகரன் அவர்கள் ஓர் தேசத்தை உரு வாக்குவதில் மிகப்பெரிய நடவடிக்கைகள் கலை, கலாச்சாரம், சித்திரம், சமயம், சம உரிமை, கல்வி, நீதி போன்ற மனித வாழ்வுக்கு வேண்டிய விடயங் களை மனதில் கொண்டு எடுத்துள்ளார் என்பதை நான் அங்கு கண்டவற்றைக்கொண்டு சொல்வதில் எந்தத் தயக்கமும் அடையவில்லை.

அத்துடன் அங்கு ஓர் நல்ல நீதி நிர்வாகம் நடை பெறுகின்றது. பொலிஸ், சுதந்திரமான நீதித்துறை மக்களின் முழு ஆதரவுடனும், பெண்கள் முக்கிய பதவிகள் வகிப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது.

ஐம்பது வருடகால தமிழ் மக்களுக்கு எதிரான பாகுபாடுகள், அடக்குமுறைகள், நீண்டகால சாத்வீக போராட்டங்கள் இரக்கமற்ற முறையில் அடக்க எத்தனித்ததால் உருவான யுத்தம், யாரும் உண்மையை ஏற்றார்களோ இல்லையோ, அங்கு ஓர் தேசம் உருவாகியுள்ளது. மக்களுடைய தேவைகள் ஏற்ற முறையில் நிறைவு செய்யப்படுகிறது. இங்கு உருவாக்கப்பட்டுள்ள தேசம் இம் மக்களின் தேவை களை திருப்தி செய்யும் விதத்தில் உருவாக்கப்பட் டுள்ளது. நிச்சயம் மேற்கு நாடுகளின் எண்ணங் களை பிரதிபலிப்பதற்காக அல்ல.

கொழும்பு பத்திரிகைகள், மேற்கு நாட்டு பத் திரிகைகள், இணையத் தளங்கள் தாம் வேண்டி யதை கூறலாம். ஆனால் வடக்கு கிழக்கில் பல பாகங்களுக்கும் தென்பகுதிக்கு விஜயம் செய்தவர் என்ற முறையில் என்னால் கண்டவற்றை வைத்து திரு பிரபாகரனின் வழிகாட்டலில் நடைபெறுபவை பற்றி கூறியுள்ளேன்.

மீண்டும் உலகின் இந்த வெற்றிகரமான விடு தலைப் போராளிக்கு எனது பிறந்தநாள் வாழ்த் துக்களை கூறுவதில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேன்.

திரு. பிரபாகரன் அவர்கள் சுகநலமாக வெற் றித் திருமகனாக நீண்ட காலம் வாழவேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

ஐக்கிய இராச்சியம்
24 ஐப்பசி 2004

**தமிழீழக் கலை, இலக்கிய கர்த்தாக்களை தலைவர் பிரபாகரன் அவர்கள் 1990 இல் சந்தித்து உரையாடினார். அந்த உரையாடலில் இருந்து...**

'ரஷ்யாவில் அன்றைய போராட்டம் முடிவடைந்து விட்டாலும், அந்தப் போராட்ட உணர்வு இலக் கியங்களினூடாக இன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறது. இன்னும் போராட்ட காலத் திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற உண ர்வு அங்குள்ள மக்களுக்கு ஏற்படும் விதமாக இலக் கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. எமது போராட்ட சூழ்நிலையிலும் பல உணர்ச்சிகரமான சம்பவங் கள் நடைபெற்றுள்ளன, பல தியாகங்கள் நடைபெற் றுள்ளன. அவற்றையெல்லாம் இலக்கியத்தினூடாக மக்களுக்கு புகட்டவேண்டும்.'



'கலை, இலக்கிய வடிவங்கள் ஊடாக மக்கள் மனதில் தொடர்ச்சியான விடுதலை உணர்வை வளர்க்க முடியும், அதை கலை, இலக்கிய கர்த்தாக் களான உங்களால் செய்ய முடியும்'

**தலைவரை நேரடியாக சந்தித்த ஓர் இலக்கிய கர்த்தாவின் உள்ளத்து வெளிப்பாடு...**

ஒரு போராட்ட வீரன், கட்டுப்பாடான ஒரு விடுதலை இயக்கத் தலைவன், துணிச்சல் மிக்க ஓர் விடுதலை இராணுவத்தின் தளபதி என்ற விதத்தில் அவரைக் கற்பனை செய்தபோது ஓர் பயம் கலந்த மரியாதை அவரிடம் எல்லோருக்கும் ஏற்பட்டது. ஒரு சிறந்த வாசகனாக, இலக்கியவாதியாக, விமர்சகனாக, ஆய்வாளனாக எல்லாம் அவரைச் சந்திப்போம் என்று நான் உட்பட, பலரும் கற்பனை செய்துகூடப் பார்க்கவில்லை.

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# A sense of freedom in action

Having been born and brought up as a Western person and having travelled in various countries such as; Italy (once liberated from fascism), India (colonised but later liberated through an independence struggle) and South Africa (liberated from Apartheid by a freedom movement) – I am proud and happy to give a message for the 50th Birthday of Mr. Velupillai ந்த, Leader of the Liberation Tigers of Tamil Eelam.

I do not want to hide the truth, what I say comes from my heart.

In Italy, Modern History includes liberation from, and the overthrowing of, the dictator Mussolini. Popular culture in Italy still reverberates with the sense of that historic liberation, in song and in other art forms. In India the struggle for independence from the colonial power was built on a mass freedom movement, celebrated world-wide in writing, film and popular wisdom. Perceived as non-violent, nevertheless blood was shed for liberation. In South Africa, liberation from white colonialism and its apartheid structures brought signs of freedom based on justice and equality, votes for all regardless of race or colour.

I saw something different in the NorthEast of the island of Sri Lanka, where Mr Prabakaran today celebrates his 50th birthday. A sense of freedom in action. Well-planned technology projects, based on sustainability; projects uplifting the poorest sectors of society, based on nutrition programmes for infants and back to work programmes for their parents; caring and careful planning and implementation of projects for the futures of children whose lives have been devastated by war and who have lost parents; for women who are mentally affected by their traumatic experiences of war; for the land itself as de-mining is organised, freeing more areas.

During my four visits to this island, which has seen twenty years of bloody conflict, I have travelled from Matara to KKS, including Batticaloa, Trincomalee and Upcountry. I have met and had discussions with people from many walks of life, and from different ethnic backgrounds. What I have seen, leads me to compare the areas in the NorthEast called "government-controlled areas" and the LTTE administered areas.

One can see how massive the difference is between them. In the latter, under the guidance of Mr V. Prabakaran, initiatives have been taken to look after the war-affected children, women, differently-abled cadres, and civilians – all with absolutely no help from the government. This has made not only me, but many other Western people who have visited there also, wonder in amazement at the numerous activities and wonderful successful ongoing work of many kinds.

I do not hesitate to say that what one witnesses, is that Mr Prabakaran has taken immense steps in building a nation, respecting culture, the arts, religion, gender equality, education, mental and physical health needs, all aspects of civil life which are precious to people. All of this is held in the context of a well-functioning law and order system. The police and independent judiciary operate with the full cooperation and respect of the people and have many women in senior and other positions.




**Deirdre McConnell**

Human rights activist.
Great Britain


After 50 years of discrimination, persecution and oppression against Tamils, (paralleled by long years of non-violent protest which was mercilessly repressed, organised resistance and finally a long war) whether one accepts the fact or not, a nation is being built. Already, the people's needs are being served in exemplary ways. It has to be said that the nation is being built, not to serve the needs of Western ideologies, but to meet the needs of its own people.

The Colombo media, the Western media and various websites can say what they like – but as a person who has travelled to many corners of the NorthEast, and also to the South. I simply state what I feel about what I have witnessed, expressing how much Hope and Dignity I saw in the nation which is being guided by Mr Prabakaran.

Once again, I am proud and honoured to convey my birthday greetings to one of the most successful freedom fighters in the world.

I wish Mr Prabakaran my sincere good wishes, good health and every success in the coming years and decades.

24th October 2004

தமிழ் ஆவணகம் Tamileelam Archive

அழகினிற்கு ஓவிய நிலவு,
வையகம் முற்றாள வல்லான்!
உளத்தினிற் பரிவு, வான
உச்சியை உரசும் நெடியோன்
பழகிடத் தோன்றும், தலைவன்
தாயகம் நோக்கும் எழுவான்!
நிழலினில் நிற்கும் தமிழர்
நினைத்தவா றடைவான் வெற்றி!

# விதி மாற்றி எழுவான் நாளை

விழிகள் இரண்டிவு மாயிரம்
ஆற்றல்கள் குவியும், அண்ணன்
மொழியும் போதினில் உள்ளம்
காதலால் உருகும், எம்மைப்
புலிகளாய் ஆக்கிய தலைவனால்
பூமியே விடியும், அடடா,
எலிகளாய் எம்மில் ஏறிட
இங்கினி எவரால் முடியும்?

அமைதியை ஆக்கி உலகின்
ஆசிகள் பெற்றாய் கோடி
சமாதானக் காற்றெம் மேனி
தழுவிடச் செய்தாய் வாழி.
இமையுள் ஒளியே, தமிழர்
இருள்களைந் திட்டாய் சோதி
அமைகதாய் நாடே, தர்மம்
ஆசையோ டளிக்கும் நீதி!

வெண்புறா காலம் தன்னை
விரும்பியே அழைத்தான், யாரும்
புண்படா வாறே களத்திலும்
பொறுமைகள் காத்தான் இன்றோ
எண்டிசை உலகும் மெச்சும்
பண்பாளன் தலைவன் ஈழ
மண்விதி மாற்றி நாளை
மணிமுடி தரிப்பான் வாழி.

**வேலணையூர் சுரேஷ்**
கவிஞர்.
தமிழீழம்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive





ச.பொட்டு

புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர்,
தமிழீழ
விடுதலைப் புலிகள்.
தமிழீழம்.

எம் தாயகம் பெற்றெடுத்த எங்கள் தேசியத்தலைவர் அவர்களது காலத்தில் வாழும் பெருமையுடன் பணி தொடர்கின்றோம்.

தலைவரது ஐம்பதாவது பிறந்த நாளுக்கு ஆக்கம் ஒன்று தாருங்கள் என்று கேட்டபோது முதலில் ஏற்பட்ட உணர்வு தலைவரைப் பற்றி நான் எழுதுவதா? என்பது தான்.

# விடுதலையின் வழிகாட்டி

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

தேசியத்தினதும் மற்றும் அக்கறையுடைய அனைவரினதும் பார்வையும் அவர் மீது உன்னிப்பாகப் பதியும் இவ்வேளையில், அவரது பண்புகளைப் பகிர்ந்து கொள்வது தலைவரது விடுதலைக்கான விழுமியங்களை முழுதாய் அறியாதோருக்கு எடுத்துச் சொல்லும் பணியாகவே அமையுமென்ற கருத்து வலுப்பட்டது. அந்தக்கருத்தின் வலுவால் தலைவரைப்பற்றிய பெருமித உணர்வுடன் எழுதுகின்றேன்.

தலைவரைப்பற்றிய பெருமைகளை ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோணத்திற் பார்ப்பர். எந்தவொரு

**விடுதலையின் வழிகாட்டி**

> தன்னை ஒரு தலைவனாக உருவகித்துக் கொள்ளாமல் ஒரு போராளியாகவே அவர் தனது பொதுவாழ்வை ஆரம்பித்தார். ஒரு வழிகாட்டியைத் தேடி அலையும் இளம் போராளியாக அவர் நீண்டகாலத்தைச் செலவு செய்தார்.

பின்புலமுமில்லாத சாதாரண குடும்பத்திற்பிறந்து, சுயமான அரசியல் தெளிவுடன் விடுதலைக்கான அத்திவாரத்தை அமைத்து, களத்தில் முன்னின்ற போராளியாயும் தளபதியாயும் சமகாலத்திற் செயற்பட்டு, அணிதிரட்டல் செய்து, விடுதலை இயக்கத்தை உருவாக்கிக்கொண்டது வரையான அவரது செயற்பாடுகள் அவரது வரலாற்றின் ஆரம்பச் சாதனைகள்.

விடுதலைப் போராட்டத்தின் பின்னே முழு மக்களையும் அணிதிரளக்கூடியபடி களச்செயற்பாடுகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்தியமை அவரது அடுத்த சாதனைக்கான வளர்ச்சிக்கட்டம்.

சந்தித்த ஒவ்வொரு நெருக்கடிகளிலும் விடுதலைப் போராட்டம் ஓய்ந்து விடாதபடி முன்னெடுப்பதன் பின்னே உள்ளமை அவரது ஆற்றலின் வெளிப்பாடு. உலகினது வல்லாதிக்கங்களின் அபிலாசைகளுக்கும் நெருக்குதல்களுக்கும் எமது விடுதலைப்போர் விலையாகிப்போய்விடாதபடியான வழிகாட்டுதலே எமது விடுதலைக்கான அவரது தலைமைத்துவத்தின் மகுடம்.

ஒடுக்கப்பட்டு நசிவுறும் எமது இனத்தின் விடுதலைக்கான வழி 'சுயமாகப் போராடி, சுயமாக வலுவாகிக்கொள்ளுதல்' என்ற தத்துவத்தை உலகின் முன் நிறுவிக்காட்டிய பெருமையினாலேயே எங்கள் தலைவர் உச்சமான பெருமையைப் பெறுகின்றாரென நான் கருதுகின்றேன்.

எம் தலைவரது குணாம்சங்களே அவரது உயர் நிலைக்குக் காரணம் என்பது வெளிப்படை.

அவரிடம் இயல்பாக அமைந்திருந்த நற்பண்புகளும் அவர் தனக்குத்தானே உருவகித்து வளர்த்துக்கொண்ட தலைமைத்துவப் பண்புகளும் இணைந்தே மிகச் சிறந்த அரசியல், இராணுவ ஆற்றலைக்கொண்ட தேசிய நிர்மாணியாக உலகின் முன் அவரை வெளிப்படுத்தியுள்ளது.

தன்னை ஒரு தலைவனாக உருவகித்துக்கொள்ளாமல் ஒரு போராளியாகவே அவர் தனது பொதுவாழ்வை ஆரம்பித்தார். இன்னும் சொல்வதானால் தனது செயலார்வத்திற்கு ஒரு வழிகாட்டியைத் தேடி அலையும் இளம் போராளியாக அவர் நீண்டகாலத்தைச் செலவு செய்தார்.

அக்காலப்பகுதியில் அவர் பெற்ற பக்குவமும் பட்டறிவுமே அவரை இன்றைய உயர்ந்த தலைமை நிலைக்கு உயர்த்தியுள்ளது எனலாம்.

அக்காலத்தைய தலைமை நிலையில் உள்ளவர்களிடம் முறையான செயற்திட்டம் இல்லாமையை அவதானித்தார். அத்துடன் அவர்களிடம் அர்ப்பணிப்புணர்வு இல்லாதிருப்பதையும் அடையாளம் கண்டுகொண்டார். அவை அவருக்குப் பல பாடங்களைக் கற்பித்தன. அந்தப் பாடங்களினாலேயே அவரது தலைமை உருவானது. தலைமை உருவானது என்பதைவிட வரலாற்றின் வாசலின் ஊடாகத் தலைமை நிலைக்கு அவர் அழைத்துவரப்பட்டார்.

ஆம். தனக்குத் தலைவர்களாகக் கருதிச்செயற்பட்ட அக்காலத்தைய மாணவர்பேரவை, இளைஞர்பேரவைத் தலைவர்கள் பேச்சளவிலேயே தலைவர்களாக இருந்தமையைக் கண்டுகொண்டார்.

எதிரியின் முறியடிப்பு முயற்சிக்கு நெஞ்சுரத்துடன் முகம் கொடுக்கத் தவறிய அவர்களது பொறுப்பின்மை அவரை வருத்தியது. அக்காலத்தைய போராட்ட அமைப்பையே சிதறடிக்கும் வகையாக சின்னத்தனத்துடன் அவர்கள் நடந்துகொண்டபோது தனியானதொரு அமைப்பை உருவாக்கும் நிலைக்கு உள்ளானார்.

விடுதலை அமைப்பொன்றை உருவாக்கிச் செயற்படுத்திய போதும் தான் தலைவராகும் எண்ணமின்றி இன்னொருவரைத் தலைவராக்கி தன்னைச் செயற்பாட்டாளராக வைத்துக்கொண்டார். ஒரு விடுதலைப்போராட்டத் தலைமை இயற்கையாக உருவாகவேண்டும் என்பதை அந்தச் செயற்கைத் தலைமை நிரூபித்தது. அவர்களது தனிப் பலவீனங்களுக்காக ஒரு விடுதலை இயக்க மாண்பு குலைக்கப்பட்டு, நெறிமுறைகள் சிதறடிக்கப்பட்டபோது செயற்கைத் தலைமைகள் அடையாளம் காணப்பட்டமையும் அகற்றப்பட்டமையும் நடந்தேறின.

அந்த வேளையில் அவர் விடுதலைக்கு வழிகாட்ட முன்வந்தார்.

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

அதனால் அவர் தலைமை நிலைக்கு அழைத்துவரப்பட்டார்.

தலைமைக்குத் தேவையான தீர்க்கதரிசனப் பார்வைக்கு உதாரணமாக கொள்ளத்தக்கவர் எமது தலைவர் என்பதை நாம் பெருமையுடன் இங்கு கூறிக்கொள்ளலாம்.

இந்திய அரச பிரதிநிதிகளால் எமது தமிழீழ விடுதலைப் போராட்டப் போராளிகளுக்கான ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்ட நேரம் அது.

1983ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் வடமாநில மலைகளாற் சூழப்பட்ட பிரதேசத்தில் நாம் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்தோம். அங்கு பயிற்சி ஆசிரியராக இருந்த இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் எமது பயிற்சி விடயங்களிலும் எமக்குப் பழக்கப்படாத உறைபனி நிலையை எதிர்கொள்வதற்கான தனிப்பட்ட கவனிப்பிலும் அதீத அக்கறை எடுத்துச் செயற்பட்டிருந்தார். பயிற்சி பெறும் அனைவருக்கும் பொறுப்பாக இருந்த பொன்னம்மானுக்கு அடுத்த நிலையில் இருந்த கிட்டண்ணை உட்பட எம்மிற் பலருடன் நெருக்கமான உணர்வு உறவினை குறித்த அதிகாரி ஏற்படுத்தி விட்டிருந்தார்.

விடுதலையின் வழிகாட்டி

**போராளிகளாகிய நாம் எமது விடுதலையை இந்தியா பெற்றுத்தரும் என்ற எண்ணத்துடன் இருப்பது எமது விடுதலைப்போரைப் பலவீனப்படுத்திவிடும்.**

தலைவர் அவர்கள் எமது பயிற்சி முகாமிற்கு வருகைதந்து பயிற்சிகளைப் பார்வையிட்டார். அவ்வேளையில் எம்மிற் பலர், குறித்த அதிகாரி பற்றியும் அவர் எம்மீது கொண்ட கரிசனை பற்றியும் சொன்னதை தலைவர் அமைதியாக கேட்டபடி இருந்தார்.

அன்றிரவு தெரிவு செய்யப்பட்ட பொறுப்பாளர்களுடன் தலைவரின் சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டது. அப்போது அவர் கூறிய கருத்துக்கள் இன்னும் எனக்குப் பசுமையாக நினைவில் உள்ளது.

அதாவது 'இந்தியா தனது சுயநல நோக்கிலேயே செயற்படுகின்றது - உண்மையில் எமது விடுதலைக்காக நாமே சொந்தமாகப் போரிட வேண்டும். போராளிகளாகிய நாம் எமது விடுதலையை இந்தியா பெற்றுத்தரும் என்ற எண்ணத்துடன் இருப்பது எமது விடுதலைப்போரைப் பலவீனப்படுத்திவிடும். எனவே இந்தியாவை நம்பியிருக்காது எமது விடுதலைக்காகப் போராடும் மன உறுதியைப் போராளிகளிடையே ஏற்படுத்துங்கள்' என்பதாகத் தலைவரின் கருத்து அமைந்திருந்தது.

இந்தியா எமது விடுதலையைப் பெற்றுத்தரப்போவதில்லை. எமது விடுதலைக்காக நாமே போரிட வேண்டியிருக்கும் என்று அன்றே கூறிய அவரது தீர்க்கதரிசனமான சிந்தனையே எமது விடுதலைப் போராட்டம் சொந்தக் காலில் நிற்பதற்கும் நெருக்கடியின்போது அழிந்துவிடாமல் நிலைத்து நிற்பதற்கும் அடிப்படை ஆதாரமாக அமைந்ததெனலாம்.

எமது விடுதலைப் போராட்டம் சார்ந்த இந்தியாவின் நிலை சார்ந்து மட்டுமல்லாமல் எமது விடுதலைப் போராட்டத்தின் போக்கு, எமது விடுதலைப் போராட்டத்தின் மீதான சிங்கள அரசியல் வாதிகளின் அணுகுமுறை மற்றும் எமது விடுதலைப் போராட்டத்திற்காக மக்களை எவ்வாறு அணிதிரட்டுவது என அனைத்து நிலைகள் பற்றியும் தெளிவாகச் சிந்தித்து வடிவம் ஒன்றை வகுத்திருந்தார். எதிர்காலக் கட்டமைப்புகள் எவ்வாறு அமையவேண்டும் என்பதனையும் கற்பனையாகத் தன்மனதில் உருப்போட்டு வைத்திருந்தார்.

எம் தலைவர் அவர்கள் அரசியல் ஞானம்மிக்க இராசதந்திரி என்பதில் சந்தேகமே இல்லை. தலைவர் இராணுவ விடயங்களில் விற்பன்னராக உள்ளதைச் சந்தேகத்திற்கிடமின்றி ஏற்றுக் கொள்ளும் சிலர், அரசியல் விடயத்தில் தலைவர் அவர்கள் தேர்ச்சி பெறாதவர் என்ற வகையில் கருதுவதுண்டு. அக்கருத்து மிகவும் தவறு.

இன்று வன்னியில் ஒரு அரசுக்குரிய கம்பீரத்துடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் எமது விடுதலை இயக்க நிர்வாக அலகுகளுடனும் ஆட்களுடனும் தொடர்புபட உலகின் பிரதிநிதிகள் வந்து போகும் சூழல் ஏற்பட்டது - ஏற்படுத்தப்பட்டது. இது ஒரு அரசியல் வெற்றி.

யாழ்ப்பாணத்தில் இருந்து எமது இயக்கம் பின்வாங்கவேண்டி ஏற்பட்ட அந்த இராணுவ நெருக்கடியின் சூடு தணிவதற்கிடையில் நீண்டநெடிய ஜெயசிக்குறு ஆக்கிரமிப்புப்போரை எதிரி தொடர்ந்தான். கடந்த 90களின் பிற்பகுதியில் எமது இயக்கம் சந்தித்த இராணுவப் பின்னடைவு நிலைமையை மாற்றி வெற்றி கொள்ள வைத்தது தலைவர் அவர்களது இராணுவ வெற்றி. அந்த இராணுவ வெற்றியை மேற்சொன்ன அரசியல் வெற்றியாக ஆக்கி எமது விடுதலைப்போரின் மீதான பார்வையைச் சர்வதேச நிலைக்கு நகர்த்தி எடுத்துள்ளமை எமது தலைவரது இராசதந்திர நகர்வின் பெறுபேறே.

எம்மினத்தின் நூற்றாண்டு கால அரசியல் வரலாற்றைத் தெளிவுறப்புரிந்து வைத்திருப்பதிலும் உலகில் நடந்த, நடைபெறுகின்ற

Tamileelam Archive

விடுதலைப் போராட்டங்கள் அனைத்தினது வரலாறுகளையும் அறிந்து வைத்திருப்பதிலும் நாடுகள், இயக்கங்கள் என்பவற்றின் வாழ்வையும் வளர்ச்சிப்போக்கையும் தீர்மானிக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றிய அறிவைக் கொண்டிருப்பதிலும் கூர்ந்து அவதானித்து வருவதிலும் தலைவர் அவர்களது அறிவு மிகமிக அதிகம்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களது காலத்தில் எமது விடுதலைப் போரைத் தமக்குச் சாதகமாகக் கையாண்டு கொள்வதில் இந்தியா கொடுத்த அரசியல் நெருக்குவாரங்கள் மிக அதிகம். இன்றும் இந்தியாவின் அதிகார நாற்காலிகளை அலங்கரித்து வீற்றிருக்கும் மூத்த அரசியல் தலைவர்களும் ராஜீவ்காந்தி அவர்களும் எமது விடுதலைப் போராட்டத்தையும் தலைமையையும் 'சின்னப்பெடியளின் குழப்படியாக' சித்திரித்து கையாள முற்பட்டனர். அந்த அரசியல் நெருக்குவாரங்களில் எமது விடுதலைப் போராட்டம் மூழ்குண்டு போகாதவாறு எதிர்நீச்சலிட்டுத் தக்க வைத்த அரசியல் மேதமையுடன் விடுதலைப்போரை வழிநடத்தினார்.

**விடுதலையின் வழிகாட்டி**

> இராசதந்திரம், கொள்கைப்பற்றுறுதி, சரணாகதி போன்ற பதங்களை அதனதன் சரியான அர்த்தப் பரிமாணங்களுடன் புரிந்துகொள்வார் எமது தலைவர்.

விடுதலைப் போராட்டம் அரசியல் நெருக்குவாரங்களையும் இராணுவ நெருக்கடிகளையும் சந்திக்கும் வேளைகளிற்கூட விட்டுக்கொடுக்க முன்வராத தலைவரின் பண்பையே சிலர் அரசியல் ஞானமின்மையாகச் சிந்திக்கத் தலைப்படுகின்றனர். மறுவளமாகக் கூறுவதானால் தலைவர் அவர்கள் கொண்டுள்ள தேர்ந்த அரசியல் ஞானத்தெளிவின் அடிப்படையிலேயே குறித்த விட்டுக்கொடுப்புகளுக்கு முன்வருவதில்லை.

இராசதந்திரம், கொள்கைப் பற்றுறுதி, சரணாகதி போன்ற பதங்களை அதனதன் சரியான அர்த்தப் பரிமாணங்களுடன் புரிந்து கொள்வார் எமது தலைவர். கொள்கைப்பற்றுறுதி இல்லாது எதிரியிடம் மண்டியிடுபவர்கள் அல்லது இனத்தினது உரிமைகளை விலைபேசிச் சலுகைகளைப் பெற முனையும் கயவர்கள் தம்செயலை நியாயப்படுத்த இராசதந்திரம் என்ற பதத்தின் பின்னே மறைந்து கொள்வதைக் கோபமாகவும் கேலியாகவும் சுட்டிக்காட்டுவார்.

எமது இனத்தினுடைய நலன்களை விட்டுக்கொடுக்க மறுக்கும் தலைவர் அவர்களது கொள்கைப்பற்றுறுதியானது அவரது அரசியல் தெளிவினால் விளைந்த பயனே.

காலத்திற்குக்காலம் எம்மினத்தினிடையே தோன்றிய தலைமைகள் இன விடுதலை சார்ந்த தீர்க்கமான பார்வையைத் தம்மிடையே கொண்டிருக்கவில்லை. அவ்வக்காலத்தைய மக்களினது மன உணர்வுகளைப் பிரதிபலித்தும் மக்களது மன எழுச்சியை ஒருமுகப்படுத்தியும் அத்தலைவர்கள் விளங்கினர் என்பது ஓரளவு உண்மைதான். ஆனாலுங் கூட உண்மையான விடுதலை நோக்கிய பயணத்திற்காக மக்களைத் தயார்படுத்தும் தீர்க்க தரிசனமோ விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் அர்ப்பணிப்புணர்வோ இல்லாதிருந்தனர்.

மாறாக எம்மை அடிமைப்படுத்தி வைத்துள்ளவர்களுடன் ஒத்துப்போவதாகவே இருந்தது அவர்களது அரசியல்.

எமது இனத்தினது விடுதலை உணர்வுகள் பொங்கிப் பிரவாகிக்கும் வேளைகளில் தலைவர்களாக இருந்த மனிதர்களுடன் தனிப்பட்ட முறையிற் சமரசம் செய்து கொள்வதையே ஆக்கிரமிப்பாளர்கள் செய்துகொண்டிருந்தனர்.

ஆக்கிரமிப்பாளர்களது தந்திரோபாயத்திற்குப் பலியாகி இன விடுதலையைக் காவு கொடுக்கும் கயமைக்குப் பெயர் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரம் எமது தலைவருக்குத் தெரியாதுதான்.

குமுறிக் கொண்டிருக்கும் எமது மக்களது விடுதலை உணர்வுகளை மழுங்கடிக்க ஏதாவது ஒரு பெயரிலான அற்ப தீர்வுக்கான பேச்சுவார்த்தையிலோ தேர்தலிலோ பங்குகொண்டு எதிரிக்குத் துணைபோதலுக்குப் பெயர் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரம் எமது தலைவருக்குத் தெரியாதுதான்.

விடுதலைக்கான கொள்கைப் பற்றுறுதியை முதன்மைச் சிந்தனையாக்கி, அந்த இலட்சியத்திற்குப் பங்கமின்றிச் செயற்பட நண்பர்களை நாடுவதன் பெயர் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரத்தில் எமது தலைவர் வல்லவர்.

விடுதலைப் போரியலுக்கும் அதனிடையேயான போரோய்ந்த அரசியல் நகர்வுகளுக்கும் கருத்துலகு பற்றிய பார்வையுடன், காலச் சூழல் பற்றிய கணிப்பீடும் அவசியம். இவ்வுணர்வலை வரிசைகளை உய்த்தறிவதும் கணிப்பிட்டுக் கையாள்வதும் இராசதந்திரம் என்றால் அந்த இராசதந்திரத்தில் எமது தலைவர் ஒரு

தமிழ் ஆவணகாப்பகம் Tamileelam Archive

வித்தகர்.

இந்தியாவில் அமைந்த எமதியக்க ஆரம்பகாலப் பயிற்சித் தளங்கள், தமிழ் நாட்டு முதலமைச்சர் எம.ஜி.ஆர் அவர்களுடனான நட்புறவு, இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு காலத்திற் சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அவர்களுடனான பேச்சுவார்த்தை என்பன தலைவரது இராசதந்திர நகர்வின் சில வெளிப்பாடுகள். அந்த இராசதந்திர நகர்வில் விளைந்த நட்புறவுகள் எமது இனத்தின் உரிமைகளை விலையாகக் கேட்க அனுமதிக்காத அவரது ஆளுமையே இங்கு முதன்மையானது. கொள்கைப் பற்றுறுதிக்கும் இராசதந்திர நகர்விற்கும் இடையே தலைவர் அவர்கள் சுயமாக வகுத்து வைத்திருந்த எல்லைக்கோட்டினைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியும்.

தனக்குத் தனிப்பட்ட முறையில் ஒவ்வாத தன்மைகொண்ட பலருடனுங்கூட அவர் நட்புறவுடன் பழகுவதைக் கண்டிருக்கின்றேன். தனிப்பட்ட நலன் சார்ந்து அமைவதாக அவர்கள் எண்ணிவிட இடம் கொடாமல் நிகழும் மேற்கண்ட பழக்கங்கள்கூட அவரது இராசதந்திர ஆளுமையின் இன்னுமொரு பக்கம்.

இனத்தின் விடுதலை மீது அவர் கொண்ட கொள்கைப்பற்றுறுதியே அவரது அந்த ஆளுமையின் இரகசியம்.

போராட்டப்போக்குகளிற் கடும் நெருக்கடிகள் காலத்திற்குக் காலம் ஏற்படுவதுண்டு. அப்படியான நெருக்கடிகளிலும் அந்த நெருக்கடிகளை எதிர்கொள்வதற்காகவேனும் செய்யப்படும் எந்தப் பணியிலும் நேர்மை தவறுவதை அல்லது வஞ்சகமான செயற்பாடுகளை தலைவர் அவர்கள் அனுமதிப்பதில்லை.

மில்லர் கரும்புலியாகக் களம் செல்வதற்கு முந்திய நிலைமை அது. சிறிய முகாமினைக்கூட இயக்கம் தாக்கியழிக்க ஆரம்பிக்காத 1985 ஆண்டு முற்பகுதியாக இருக்க வேண்டும். அவ்வேளையில் இராணுவ முகாம் ஒன்றைத் தாக்குவதென்பது எமதியக்கத்திற்கு மிகப்பெரிய வெற்றியாக அமைந்திருக்கும்.

களத்தில் நின்ற பொறுப்பாளர்களால் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டிருந்தது. அதாவது, தனியார் வாகனங்கள் சிறு பரிசோதனையுடன் செல்லும் வீதியின் ஓரமாக அமைந்திருந்தது அந்த இராணுவ முகாம். அவ்விராணுவ முகாம் ஊடாக வழமையாகச் சென்றுவரும் பொது ஆள் ஒருவருடைய வாகனமும் பொதுநபரான சாரதியும் வழமையாகச் சோதனை செய்யும் இராணுவத்திற்குப் பழக்கமாய் போய்விட்டதால் சோதனை இல்லாமலே போய்வரக்கூடியதாக அமைந்திருந்தது. அதனை அவதானித்த எம்மவர்கள் வாகனச் சாரதிக்குத் தெரியாமல் வாகனத்தில் வெடிகுண்டை பொருத்திவிட்டு, 'வாகனம் இராணுவ முகாமின் மத்தியிற் செல்லும்போது, தூரக்கட்டுப்பாட்டுக்கருவி மூலமாக' (றிமோட்) குண்டை வெடிக்க வைத்து, முகாமிற்கு பேரிழப்பை ஏற்படுத்திவிட்டு, மேலதிக அணியை உள்ளனுப்பி, முகாமைக் கைப்பற்றுவதாகத் திட்டம் அமைந்திருந்தது.

திட்டம்பற்றி அறிந்தவுடன் தலைவர் அவர்கள் கடும் சினமுற்று திட்டத்தை நிறுத்திவிட்டார். சாரதிக்கே தெரியாமற் குண்டைப் பொருத்தும் யோசனையைக் கடுமையாகக் கண்டித்ததுடன், 'உங்களுக்குள் ஒரு துணிவுள்ளவன் இருந்தால் தன்னை அழிக்கும் மனநிலையுடன் வெடிகுண்டை எடுத்துச் சென்று வெடிக்க வைக்கலாமே தவிர, இவ்வாறு வஞ்சகம் புரிவது கடும் தவறென்று' கண்டித்தார்.

அதன் பின்னர் கொஞ்சக் காலமாக இத்திட்டத்தின் தவறுபற்றி அடிக்கடி பொறுப்பாளர்களுக்கு எடுத்துச் சொல்லி சுலபமாக வெற்றிகள் பெறுவதற்காக நியாயமில்லாத திட்டங்கள் வகுக்கக்கூடாதென கருத்தேற்றம் செய்தவண்ணமே இருந்தார்.

இந்திய இராணுவ ஆக்கிரமிப்பின் போதான நெருக்கடியான காலமது. அர்த்தமற்ற அரைகுறைத் தீர்வுகளைக் கடைபரப்பிய இந்திய வஞ்சகத்தை நன்கு தெரிந்தும் தெரியாததுபோல் துணை நின்றனர் துரோகிகள்.

'ஆண்டவன்தான் இனித்தமிழினத்தைக் காப்பாற்ற வேண்டும்'

விடுதலையின் வழிகாட்டி



தமிழ் ஆவணக்காப்பகம் Tamileelam Archive

என்றுரைத்த தந்தை செல்வாவின் வழிவந்தவர்களாகத் தம்மைக் கூறிக்கொண்டவர்கள் அவர்கள்.

தமிழினத்தின் விடுதலைக்காகக் குருதி சிந்திப் போராடும் இளைய சந்ததிக்குப் பக்கத்துணையாக இருக்கவும் துணியவில்லை. ஆண்டவன் காப்பாற்றட்டும் என்று ஒதுங்கியிருக்கவும் விரும்பவில்லை. மாறாக ஆக்கிரமிப்பாளர்களுக்குத் துணையிருக்கத் துணிந்தனர்.

பதவி மோகத்தில் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுக்கத் துணிந்த துரோகிகளை அகற்றுவது தவிர்க்கமுடியாததானது.

**விடுதலையின் வழிகாட்டி**

**விடுதலைப் போரியலுக்கும் அதனிடையேயான போரோய்ந்த அரசியல் நகர்வுகளுக்கும் கருத்துலகு பற்றிய பார்வையுடன், காலச் சூழல் பற்றிய கணிப்பீடும் அவசியம்**

துரோகிகளை அழித்துவிட வேண்டும் என்பதை மட்டுமே சிந்தனையில் இருத்திய நடவடிக்கையாளர்கள் நெறிதவறிவிட்டனர். நடவடிக்கைக்கு பொருத்தமான வாய்ப்புக் கிடைக்காததால் சந்திப்பு ஒன்றை ஒழுங்கு செய்து அங்கேயே தாக்குதலைச் செய்து விட்டனர்.

தாக்குதல் செய்யப்பட்ட சம்பவத்தைக் கேள்விப்பட்ட தலைவர் அவர்கள் பேரதிர்ச்சியும் துயருமுற்றார். நேர்மையான வீரத்துடன் நடவடிக்கை செய்யப்பட்டிருக்க வேண்டும். மாறாகக் கலந்துரையாடலுக்கான சந்திப்பு ஒழுங்கு செய்யப்பட்டதும் அந்தச் சந்திப்பு தாக்குதலுக்குத் தெரிவு செய்யப்பட்டதும் மிகவும் தவறான அணுகுமுறை. இந்த அணுகுமுறை எமது இயக்கத்திற்குக் களங்கத்தை ஏற்படுத்திவிட்டது. 'எமது போராளிகள் பின்பற்ற வேண்டிய வீரமான அணுகுமுறையாக இது அமையவில்லை. இந்த அணுகுமுறை அனுமதிக்கப்பட்டிருக்கவே கூடாது. எமது விடுதலை இயக்க அறநெறிக்கு மாறாக இவை நடந்துவிட்டன' என்றெல்லாம் திரும்பத் திரும்பச் சொல்லிக் குமுறித் தீர்த்தார்.

வீரம், சுத்தமான வீரம் என்பனபற்றிக் கனல்தெறிக்கும் வார்த்தைகளாலும் உணர்வுகளாலும் அவர் கொடுத்த விளக்கத்தைக் கேட்ட எந்த ஒரு போராளியும் இதுமாதிரியான ஓர் திட்டத்தை தம்மனதால் கூட நினைக்கத் துணியமாட்டார்.

நிகழ்வுகள் நடந்துமுடிந்து பல்லாண்டுகள் கடந்துவிட்டன. இன்னும் வேறேதாவது புதிய தாக்குதல்கள் பற்றியதான உரையாடல்களில் மேற்படி தவறான அணுகுமுறை பற்றிய விடயத்தைச் சுட்டிக்காட்டுவார். நெறிமுறை மீறிய அந்த அணுகுமுறைக்கான அவரது வேதனையுடன் எமது இயக்கம் எப்படியிருக்க வேண்டும் என்ற அவரது எதிர்பார்ப்பும் அவ்வேளையில் வெளிப்படும்.

தலைவர் அவர்களது இந்த நேர்மைப் பண்பே எமது இயக்கத்தின் வளர்ச்சிக்கான ஆத்மபலத்தைக் கொடுத்து நிற்கின்றது எனலாம்.

வேறொரு விதத்திற் சொல்வதானால், தனது மனச்சாட்சியை சிறிதளவேனும் களங்கப்படுத்திக்கொள்ள அனுமதிக்காத அவரது நேர்மையே எமதினத்தின் தலைமைத்துவத்திற்கான ஆளுமையாக வடிவம் பெறுகிறது எனலாம்.

காலத்திற்குகாலம் விடுதலைப் போராட்டத்தின் தேவைகருதி அறிமுகம் செய்யப்படும் கட்டுப்பாடுகளைத் தானே கடைப்பிடிப்பதில் தலைவர் முன்னிற்பவர். குறிப்பாகத் தன்னைச்சொல்லி எவரும் சலுகைகளைப் பெற்றுவிடாதபடி அவர் எடுக்கும் கவனமானது, குறித்த கட்டுப்பாடுகளை செயற்படுத்துவோரிற்கு மனவுந்துதலைப் பெரிதும் தரும்.

தலைவர் அவர்கள் மனம் கலங்கியதை நான் பார்த்த மிக அரிதான சந்தர்ப்பங்களில் ஒன்று நினைவிற்கு வருகின்றது. இது சுமார் பத்து வருடங்களுக்கு முன்னைய சந்தர்ப்பம். எமது இயக்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து வெளியே பயணம் செய்வதற்கான அனுமதிப்பத்திரம் பெறுவதில் தோல்வியடைந்த ஒருவர், தலைவர் அவர்களுக்கு நெருக்கமான ஒருவர் மூலமாக குறுக்குவழி முயற்சி ஒன்றினைச் செய்திருந்தார்.

ஒரு சலுகைமுறைச் சிபாரிசிற்காகக் குறித்த விண்ணப்பம் மிக நெருக்கமான ஆடாகத் தன் கவனத்திற்கு தரப்பட்டபோதும், தலைவர் அதற்காக சிபாரிசு செய்ய மறுத்துவிட்டார். அந்த மறுப்பை பெற்றுக்கொண்டவரது கோபம் அல்லது மனக்கவலையானது தலைவர் அவர்களிற்குங்கூட தனிப்பட்ட முறையில் மனக்கலக்கம் தருவதாய் அமைந்தபோதிலும் அந்த விண்ணப்பத்திற்காகச் சிபாரிசு ஒன்றைச் செய்வதற்கு அவர் சம்மதிக்கவேயில்லை.

பயண அனுமதிக்காகத் தன்னை அணுகுபவர்களின் போராட்டப் பங்களிப்பின் காரணமாகவோ தனது பொதுவான சமுதாயப் பார்வை காரணமாகவோ ஏராளமான சிபாரிசுகளையும் சில வேளைகளில் அவசரமான கட்டளைகளையும் தலைவர் எமக்குத் தருவதுண்டு. ஆனாலும் மேற்குறிப்பிட்ட விடயத்திற் பயண அனுமதிக்கான வேண்டுகோளுக்குரியவர் அதற்குப் பொருத்தமான தன்மையைக் கொண்டிராத கார

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

ணத்தால் அந்த விண்ணப்பத்திற்கு தனது சிபாரிசைச் செய்யத் தலைவர் உறுதியாகவே மறுத்துவிட்டார்.

இதுபோன்ற இறுக்கமான தன்மையைப் பலவேளைகளிலும் கடைப்பிடிப்பதால் தனிப்பட்ட நண்பர்கள் பலருடனும் உறவுகள் இல்லாதுபோகும் சூழலும் தலைவர் அவர்களுக்கு ஏற்பட்டே வந்துள்ளது.

இலட்சியத் தெளிவு மற்றும் தனிப்பட்ட நேர்மையால் விளைந்த பக்கம்சாராத்தன்மை என்பவற்றையே தனது பலமாகக் கருதுபவர். அதனால் இந்த நட்பிழப்புகளுக்காக வருந்தாமல் தனது நேர்மைக்காகவே பெருமைப் பட்டுக் கொள்வார்.

தாயக விடுதலைக்காகப் போராட அல்லது போராட்டத்திற்கு பங்களிக்க முன்வரும் ஒவ்வொருவரையும் தனது உறவுகளாக ஏற்றுப்போற்றும் பண்பினைத் தனதியல்பாகவே வளர்த்துக்கொண்டுள்ளார்.

இன்னும் சொல்வதானால் தனிப்பட்ட நட்பு, உறவு எனும் வட்டத்திற்குள் சிக்கிக்கொள்ளாத தன்மையே, ஒரு இனத்தையே, அவர் பின்னால் அணிதிரள வைத்துள்ளது எனலாம்.

பூமி எங்கும் சூரியனின் ஒளியிற் குளிக்கும். அதே சூரியனை நெருங்கிச் செல்லும்போது ஒளியை மட்டுமின்றி வெம்மையாலும் சுடும். அதேபோல் எங்கள் தலைவரை நெருங்கியிருப்போரும் அவரது குளிர்மையான ஒளியை பெறுவதுடன் மட்டுமல்லாது, வெம்மையான கண்டனத்தை அல்லது கோபத்தைப் பெறவும் தவறுவதில்லை.

குறிப்பாக அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருந்து அதனை நியாயமின்றிப் பிரயோகிப்போர் மீது அவருக்கு வரும் கோபத்தை மாற்றவோ, மறக்கவோ முடியாது.

அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருப்போர் அதனைத் தவறாகப் பயன்படுத்துவதே அநேக பிரச்சனைகளுக்குக் காரணமென்பதும் அணுகுமுறைகளைச் சீராக்கினால் அவற்றுக்குரிய தீர்வுகள் கிடைக்குமென்பதும் தலைவர் தொடர்ந்து வலியுறுத்தும் விடயம்.

பொதுமக்களை அதிகாரத் தொனியுடன் அணுகும் புலனாய்வுத்துறையினர் பற்றிய முறைப்பாடுகளைப் பெறும்வேளையில் தலைவர் அவர்களது கோபத்தைப் பலதடவைகளில் சந்தித்துள்ளேன்.

அப்படியான உணர்வு வெளிப்பாட்டுச் சந்தர்ப்பத்தில்தான், அதிகாரத்தாலும் பணபலத்தாலும் உருவாக்கப்படும் புலனாய்வுக் கட்டமைப்பு காலத்தால் அழிந்துவிடும். அன்பான அணுகுமுறையாலும் விடுதலை உணர்வை தட்டி எழுப்புவதாலும் உருவாக்கப்படும் கட்டமைப்பே காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் எனும் வழிகாட்டும் கருத்து வடிவத்தை முன்வைத்தார்.

எமது தலைவர் அவர்களது அவ்வாறான கோபத்தின் வெளிப்பாடுகளை நாம் விடுதலைக்கான அவரது கோட்பாடுகளின் வெளிப்பாடுகளாகப் பார்க்கலாம்.

எமது இனத்தின் விடுதலை பற்றியே சிந்தித்துக்கொண்டிருக்கும் அல்லது எமதினத்தின் விடுதலைக்கான பணிதவிர வேறொன்றையும் சிந்திக்க மறுக்கும் அவரது எண்ண வெளிப்பாடுகளே எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வெளிப்படும்.

வார்த்தைகளினால் மட்டுமல்லாது வாழ்க்கையினால் வழிகாட்டியாக செயற்படும் எமது தலைவரின் காலத்தில் அவரின் பின்னே அணிதிரள்வோம். எம்தலைவரது வழிகாட்டுகையில் விடுதலை மீதான உறுதிப்பாட்டின் வழித்தடத்தில் அணிதிரள்வதே தமிழ்த்தேசிய உணர்வுடையோரின் கடமையாகும்.

விடுதலையின் வழிகாட்டி



அவரது வழிநடத்தலின்கீழ் இணைந்துள்ள ஒவ்வொருவரும் அவரது எண்ணங்களையும் கருத்துக்களையும் சரிவரப்புரிந்து விடுதலையை விரைவுபடுத்த உழைப்பது பொறுப்பாகும். விடுதலையின் வழிகாட்டியாகத் தன் வாழ்வை அமைத்துக்கொண்ட எங்கள் தலைவரினது ஐம்பதாவது அகவையின் நாளில் பெருமிதத்துடனும், நம்பிக்கையுடனும் வாழ்த்துக்கூறும் தமிழ்த் தேசியத்தின் குரலுடன் நானும் இணைவதிற் பெருமை கொள்கின்றேன்.

'புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்'

தமிழ் ஆவணக்காப்பகம்
Tamil Archive



# கொடி வணக்கப்பாடல்

ஏறுதுபார் கொடி ஏறுதுபார்
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் – இங்கு
ஏறுதுபார் கொடி ஏறுதுபார் – தமிழ்
ஈழத்தின் வேதனை தீர்த்தகொடி
எட்டுத்திக்கிலும் மானத்தை சேர்த்தகொடி
காலத்தை வென்றுமே நின்றகொடி – புலி
காட்டிய பாதையில் சென்றகொடி

செக்க நிறத்திலே வேங்கை நடுவிலே
சீறிடும் கொடியிது – தமிழ்
மக்களைக்காத்த நம்மான மாவீரரை
வாழ்த்திடும் கொடியிது – புலி
வீரத்தின் கொடியிது
மாவீரரின் கொடியிது

எத்தனை எத்தனை வேங்கைகள் ரத்தத்தில்
ஏறிய கொடியிது – பெரும்
சத்திய வேள்வியில் செத்தவர் மீதினில்
சாற்றிய கொடியிது – தமிழ்
ஈழத்தின் கொடியிது – புலி
ஏந்திய கொடியிது

சாதிகள் சண்டைகள் சாய்த்துவிழுத்திய
சாதனைக் கொடியிது – சங்கு
ஊதி முழங்கிட ஊர்மனை யாவிலும்
உலவிய கொடியிது – சம
தர்மத்தின் கொடியிது – எங்கள்
தாயவள் கொடியிது

ஆயிரமாயிரம் பேரென வேங்கைகள்
ஆக்கிய கொடியிது – பிர
பாகரன் என்றிடும் காவியநாயகன்
போற்றிடும் கொடியிது – தமிழ்த்
தேசத்தின் கொடியிது – எங்கள்
தேசியக் கொடியிது



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

*Impr. Sagittaire* - 01 40 30 24 78 - *Septembre 2005*

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive



"

எமது மக்கள்
சுதந்திரமாகவும்,
கௌரவமாகவும்,
பாதுகாப்பாகவும்
வாழ வேண்டும்.
இந்த இலட்சியம்
நிறைவேற வேண்டுமாயின்
நாம் போராடியே
ஆகவேண்டும்.

"

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

50

ஈழமுரசு

# விடுதலைப்பேரொளி
# VIDUTHALAIPPEROLI

தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive